ந்தும் மூன்றும் அல்ல

ஹெலன் மாக் இன்னஸ்

[HER FIVE NOR THREE: *HELEN Mac INNES*

மொழிபெயர்ப்பு:
''[redacted]

ல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்,
249, டாக்டர் தாதாபாய் நௌரோஜி ரோட்,
பம்பாய்–1.
விலை 75 நயே பைசே.

காப்பிரைட் 1951 உரிமை ஹெலன் ஹிசாட்டி

ஆங்கில மூலத்தின் முதலாவது தமிழ் மொழிபெயர்ப்பு, மறுபதிப்புக்குள்ள எல்லா உரிமைகளும் வெளியிடுவோரைச் சேர்ந்தவை.

முதலாவது தமிழ்ப் பதிப்பு: 1960

இந்த நாவலில் தோன்றும் கதாபாத்திரங்கள் முற்றிலும் கற்பனை; ஜீவித்திருக்கும் அல்லது இறந்த எந்த மனிதரையும் அவை குறிப்பிடுவன அல்ல.

பம்பாய்-1, டாக்டர் தாதாபாய் நௌரோஜி ரோட், 249-ஆம் நெம்பரிலிருந்து செயல்புரியும் பெர்ல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்காக ஸ்ரீ. ஜி. எல். மிர்சந்தானியால் வெளியிடப்பட்டது.

அச்சிட்டோர்: திராயல் பிரிண்டிங் ஒர்க்ஸ், சென்னை-2.

முன்னுரை

எண்ணி லிரண்டும் இரண்டும் நாலே
என்றுமே ஐந்தும் மூன்றும் அல்ல
வண்ணமுற இதைக் காணவே மனிதன்
வருந்தினன் பல நாள் வருந்துவன் இனியும்

—ஏ. ஈ. ஹவுஸ்மானின் கடைசிக் கவிதைகள்—35

'ஐந்தும் மூன்றும் அல்ல' என்ற இந்த நாவல் நியூயார்க் நகரத்தைப் பற்றியது. ஆனால் மேல் நாடுகளின் எந்த நகரத்தில் இம்மாதிரி நிலைமை நிலவக்கூடும். தன்னுடன் நடத்தும் காதல் வாழ்க்கையோடு தன் நாட்டைக் காட்டிக் கொடுக்கக் கூடிய வேறு ஒரு ரகசியச் சதிக் கூட்டத்திலும் ஈடுபட்டுப் பணியாற்றுகிறான் தன் காதலன் என்பதைக் காலப்போக்கில் கண்டறிந்த ஒரு கன்னியின் கதை இது.

பால் **ஹேடன்** என்ற ஒரு உன்னதப் பத்திரிகாசிரியர்—ஜெர்மனியில் பல நாள் ராணுவ சேவை செய்துவிட்டு, நல்ல மதிப்பு வாய்ந்த ஒரு மாத வெளியீட்டின் ஆசிரியராக வருகிறார். நல்லதே செய்ய வேண்டுமென்ற மனோவேகங் கொண்ட **ஸ்காட் எட்லீ** என்ற ஒரு பத்திரிகையாளன்; **நிகோலஸ் ஆர்பென்** என்ற சிறந்த எழுத்தாளன்—அமெரிக்காவில் மிகுந்த சக்தி வாய்ந்த அந்நிய ஏஜென்ட்; அத்துடன் **ரோனா மெட்ஃபோர்ட்** என்ற புத்திசாலியான அழகி. இவர்களை முக்கிய பாத்திரங்களாகக் கொண்டு பின்னப்பட்டுள்ளது இக்கதை.

ஸ்காட் எட்லீ மீது கொண்ட அதிதீவிரக் காதலால் முதலில் அவனது அந்தரங்க மாற்று வாழ்க்கையை ரோனா கவனிக்கவில்லை. அவனது நண்பன் ஆர்பென் பற்றியும் அறிந்து கொள்ளவில்லை. பால் ஹேடன் திரும்பவும் அவன் வேலை செய்யும் அதே காரியாலயத்தில் சேர்ந்ததும் ஸ்காட் அவளிடம் காண்பிக்கும் கடுப்பும், அவனைச் சம்பந்தப்படுத்தி பேசும் குத்தல் மொழிகளும் சிறு சச்சரவுகளும் வளர வளர அவ்விருவரையும் ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்பு அவளுக்குக் கிடைக்கிறது. முதலில் எட்லீக்கும் ஆர்பெனுக்கும் வேண்டாத நட்பு இருந்தது என்றதோடு நில்லாமல், எட்லீ மீது ஆர்பெனுக்கு இருந்த தவிர்க்கமுடியாத பயங்கர அதிகாரப்பிடிப்பும் வெளிப்படுகிறது.

இவற்றை அவள் கண்டு கொள்ளத் தொடங்கியது முதல் கனவில் கூட நினைக்க முடியாத விபத்துகளும், பயங்கரங் களும், ஆபத்துக்களும் அவளை எதிர்நோக்கியிருப்பதை உணர்கிருள். அவற்றில் தன்னை யறியாமல் சிக்கிக்கொள்ளு கிருள்; சந்தர்ப்பவசத்தால் சிக்கவைக்கப்படுகிருள். இதெல் லாம் ஒரு பதவிப் போராட்டத்திற்காக என்பதும் தெளிவா கிறது.

இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப் பிறகு அரசியல் காரணத்துக்காக ஒரு தேசத்து இளஞ்சந்ததிகள் எவ்வாறு வேறு தேசத்து ஐந்தாம் படைகளாக மாற்றப்படுகின்ற னர், மாறுகின்றனர் என்பதை அறியும்போது நம்மை யறியா மலே மூக்கின் மேல் கைவைக்க நேருகிறது.

ஹெலன் மாக் இன்னஸ் இப்புத்தகத்தின் ஆசிரியை. இக் கதையை மிகவும் தெளிவான முறையில் அழகாக எழுதியுள் ளார். அவரது சிருஷ்டிகள் எல்லாவற்றிலும் மிக மிகச் சிறந்தது என்று போற்றத்தக்கது. இது தவிர அவரும், அவரது கணவர் **கில்பர்ட் ஹையட்** என்பவரும் ஸ்காட்லாந்தில் பிறந்தவர்களா யினும் **கெயித்** என்ற மகனுடன் நியூயார்க் நகருக்கே வந்து விட் டவர்கள். கில்பர்ட் ஹையட் கொலம்பியா சர்வகலாசாலையில் கிரீக், லத்தீன் பாஷைகளில் பேராசிரியர் என்பதும், சிறந்த புத்தகாசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந் நாவலை மூலத்தின் சுவை குன்ருமல் அழகிய நடையில் தெளிவாக மொழிபெயர்த்து உதவியிருக்கிருர் "**மாயாவி.**" "மாயாவியை' ப் பற்றித் தமிழகத்தில் அறியாதவர்களே கிடை யாது எனலாம். பல சிறந்த கதைகளும், கட்டுரைகளும் எழு தியுள்ளார். பல புத்தகங்களையும் மொழிபெயர்த்துள்ளார்.

—பதிப்பாசிரியர்.

முதல் பாகம் • கொள்கை

அத்தியாயம் 1

குளிர்ச்சியும், தெளிவும் கூடி வானில் இருள் மங்க, பொழுது மெதுவாகப் புலர்ந்தது.

'ஆம், மெதுவாகத்தான் விடிகிறது; ஏனென்றால், நாங்கள் சூரியன் பின்னிட முன்னே பறந்துகொண்டிருக்கிறோம்' என்று நினைத்தான் **பால் ஹேடன்**. பிறகு அவன் தன் கற்பனையை எண்ணிப் புன்முறுவல் பூத்தவாறு கீழே தெரிந்த மேகப் படலத்தை நோக்கினான். உருவமற்ற பிசாசுகளைப் போல் தோற்றமளித்த அவை சூரிய ஒளியில் மின்னி நுரைத்து சுருளும் கடல் அலைகள் போல மாறுவதைக் கவனித்தான். ஆனால், அலைச் சுருள் நுனிகள் அசைவற்று நின்றன. 'இன்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு அப்பால், வானவெளியில் மேற்கு நோக்கி வேகமாகப் பறக்கும் விமானத்தில் செல்லும் ஒருவன், பொழுது இன்னும் மெதுவாக விடிவதைத்தான் காண்பான்; ஆனால், ஐம்பது ஆண்டுகளுக்கு அப்பால் ஒருவன் விமானத்தில்தான் பறப்பான் என்பது என்ன நிச்சயம்?' என்றும் அவன் நினைத்தான். பிறகு தனக்குக் கீழே அலைகடலாகத் தோன்றிய மேகங்கள் இப்பொழுது கடலை மறைக்கவில்லை என்பதையும் சட்டென்று கண்டான்; 'நாங்கள் கீழே இறங்குகிறோம்; கடைசியில் ஒரு வழியாக நிலத்தை நெருங்குகிறோம்; அமெரிக்காவை அணுகுகிறோம்' என்று எண்ணினான். ஆம், கீழே, கீறலுற்ற கருஞ்சாம்பல் இரும்புத் தகட்டைப்போல், அட்லாண்டிக் கடலின் பரப்புத் தெரிந்தது. அவன் நிமிர்ந்து உட்கார்ந்தான்; முதுகையும், கால்களையும் நெரிவிட நீட்டினான்.

அடக்க, அடக்க அவனது பரபரப்பு அருகிலிருந்த **பிரௌன்லீயை** எழுப்பிவிட்டது. விமானத்தில் இருந்த இதரப் பிரயாணிகள்—இரண்டு அமெரிக்கச் சட்டசபை அங்கத்தினர்கள், அவர்களுடைய காரியதரிசிகள், பெர்லினிலிருந்து

அவர்களோடு வந்த பிரிகேடியர் ஜெனரல், ஃபிராங்ஃபர்ட்டில் விமானத்தில் ஏறியது முதல் அமைதியுடன் தமது கவலையைச் சுமந்துகொண்டிருந்த ஸார்ஜெண்ட், ரைன்லாண்டிலிருந்து திரும்பிக்கொண்டிருந்த ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகக் குழுவைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள்—அனைவரும் இன்னும் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தார்கள். தங்கள் தொல்லைகள், நம்பிக்கைகள், தோல்விகள், சாதனைகள் யாவற்றையும் மறந்ததேபோல் அவர்கள் முகங்கள் உணர்ச்சியின்றித் தோற்றமளித்தன.

தூக்கத்தைக் கலைத்துவிட்டதற்காகப் பிரௌன்லீயிடம் மன்னிப்புக் கோருவதேபோல், "இனி அதிக நேரம் ஆகாது" என்றான் பால். அவன் முறுவல் அவனை இளைஞனாகக் காட்டிற்று; எட்டு ஆண்டுகளுக்கு முன், லண்டனில் கண்ட அதே பால் ஹேடனாகவே அவன் காட்சியளித்தான்.

பிரௌன்லீ அசையவில்லை. தூக்கத்தில் சிதறிய எண்ணங்களைக் கோர்வை செய்யும் முயற்சியில் தாமதமாகவே பாலின் முறுவலுக்குப் பதில் அளித்தார். பிறகு கொட்டாவி விட்டவாறு கைகளை நீட்டி மடக்கினார். கழுத்துத் தசைகளைத் தளர்த்தினார்; தோளின் கழுகுச் சின்னத்தின் மீது கன்னத்தை வைத்துத் தூங்கியதால் நின்றுபோயிருந்த உதிர ஓட்டத்தை மறுபடியும் பாயச்செய்தார். பிறகு தமது புன்முறுவல் மலர்ச் சிரிப்பாக விரிய, "வெளியூரில் நெடுங்காலம் தங்கியவர்கள் எவருக்குமே ஊர் திரும்புவதில் ஆர்வம் இருக்கத்தான் செய்யும்; அதிலும் உனக்கு அது சிறிது அதிகமாகவே இருக்கிறது" என்றார்.

"ஆம், நான் அதிக காலம் வெளியே தங்கிவிட்டேன்" என்றான் பால் ஹேடன். பிறகு அவனுடைய பழுப்பு நிறக் கண்கள் நண்பரைக் கூர்மையாக நோக்கின. "ஆமாம், எதனால் இத்தனை வியப்பு?" என்று அவன் கேட்டான்.

"எட்டு ஆண்டுகள் ஒரு மனிதனின் தோற்றத்தில் ஏற்படுத்திவிடும் மாறுதலைக் கண்டுதான்" என்றார் பிரௌன்லீ.

"இதில் வேடிக்கை என்ன?"

"ஆனால் எட்டு ஆண்டுகள் ஒரு மாறுதலையும் ஏற்படுத்தியிராவிட்டால் உனக்குந்தான் திருப்தியிராது" என்று கூறியவாறு பிரௌன்லீ பாலின் முகத்தை ஆராய்ந்தார். பிறகு சொன்னார்:

"1942-இல் நாம் முதல் தடவையாக லண்டனில் சந்தித்தபோது நீ அப்பொழுதுதான் புதிய லெஃப்டினெண்டாகி, ராணுவ உடையில் உற்சாகமிக்க இளம் போர்வீரனாகக் காட்சி தந்தாய்."

"ஆமாம், முன்னணியிலும் நின்றேன்" என்று பால் சேர்த்துக்கொண்டான். தன்னைப் பற்றிய நினைவில் அவன்

தலை அசைத்தான். பிறகு "வாழ்க்கை அவ்வளவு எளிதான தில்லை என்பதையேனும் புரிந்துகொண்டிருக்கிறேனே" என்ருன். அதே சமயம், "இந்த எட்டு ஆண்டுகளில் நான் ஒருவன் தானு மாறியிருக்கிறேன்?" என்று கேட்பதுபோல் அவன் கண்கள் தோற்றமளித்தன. பிரௌன்லீ இளைத்து, கவலை மிக்கவராய்க் காணப்பட்டார். தலை அநேகமாய் நரைத்துப்போய் விட்டது. இவ்வளவுக்கும் யுத்தம் முடிந்த பிறகும் பால் ஹேடனைப்போல் அவர் ஜெர்மனியிலேயே நிறுத்திவைக்கப்பட வில்லை; வாஷிங்டனில்தான் இருந்தார். இரண்டொரு நாட்களுக்கு முன் பால் அவரைப் பெர்லினில் சந்தித்தபோது, அந்தச் சந்திப்பைப் போன்றே பிரௌன்லீயின் வெளித் தோற்றத்தின் மாறுதலும் அவனுக்கு வியப்பூட்டின. [அப்பொழுது பிரௌன்லீ அமெரிக்கச் சட்டசபை அங்கத்தினர்களுக்கு பெர்லினிலுள்ள அகதிகள் முகாமைச் சுற்றிக்காட்ட வந்திருந்தார்.] அது பாலைப் பொறுத்தவரையில் ஓர் அதிருஷ்டகரமான சந்திப்புத்தான். ஆம், பிரௌன்லீயை அவன் சந்தித்திராவிட்டால், ஊர் திரும்ப இவ்வளவு விரைவாகப் பிரயாண வசதிகள் கிடைத்திருக்கமாட்டா. போர் நடந்த காலம் முழுவதும் பிரௌன்லீ பாலுக்குத் தலைமை அதிகாரி. இருந்தாலும் அவனுக்கு அவரைப் பிடித்திருந்தது.

"ஆமாம், எட்டு ஆண்டுகளுக்கு முன் வாழ்க்கை சுலபமாகத்தான் இருந்தது. எவ்வளவோ கஷ்டங்களிலும் எளிதாகவே தோன்றியது. அன்று, அந்தப் பாழாய்ப்போன போரில் வெற்றி பெறுவது ஒன்றே நமது பணியாக இருந்தது. பின் அதிருஷ்டமிருந்தால் சமாதான நிலைக்கு நழுவலாம். அன்று எல்லாமே மிகத் தெளிவாக இருந்தன. அபாயம் எங்கே எங்கே என்பது யாவருக்கும் தெரியும்."

பால் ஹேடன் தலையசைத்தான். தங்களைச் சுற்றி எழுந்த கலகலப்பு அவனுக்கு மகிழ்ச்சி அளித்தது. விமானம் இறங்கப் போவதைப் பற்றிய அறிவிப்பு வந்ததும் இதரப் பிரயாணிகளும் விழித்துக்கொண்டதால் ஏற்பட்ட கலகலப்பு அது. 'இனிமேல் இவரிடம் பேச்சுக்கொடுத்து மாட்டிக்கொள்ளக்கூடாது' என்று அவன் தீர்மானித்தான். உரையாடலைத் தம் திசையில் திருப்பிக்கொள்ளுவதில் பிரௌன்லீ இன்னும் சாமர்த்தியசாலியாகவே இருந்தார் என்பதையும் அவன் கண்டுகொண்டான்.

விமானத்திலிருந்த இதரப் பிரயாணிகளைப் போல் பிரௌன்லீயும் தமது பாதுகாப்புப் 'பெல்ட்'டை மாட்டிக் கொள்ளுவதில் கவனம் செலுத்துபவர் போலவே காணப்பட்டார். இருந்தாலும் அவருடைய மனம் எட்டு ஆண்டுகளுக்கு முன் லண்டனில் சந்தித்த பால் ஹேடனைத்தான் இன்னும் நினைத்தது. அப்பொழுது பாலுக்குச் சுதந்திர ஃபிரெஞ்சு இயக்கவேலை கொடுக்கப்பட்டிருந்தது. பிரட்டனியில் அவன்

தலைமறைவான எதிர்ப்பு வேலையிலும் ஈடுபட்டிருந்தான். இந்த வேலைகளையும், ஜெர்மானியரால் ஆக்ரமிக்கப்பட்டிருந்த ஃபிரான்ஸின் பகுதியில் வேறு சில முக்கியமான வேலைகளையும் அவன் திறம்படச் செய்தான். ஃபிரான்ஸ் எதிரிகளிடமிருந்து விடுதலை பெற்றபிறகு பிரௌன்லீக்கு ஹேடனுடன் தொடர்பு விட்டுப்போயிற்று. இருந்தாலும் அவனுடைய நடவடிக்கைகளைப் பற்றி அவர் அறியாமலில்லை. அவன் ஜெர்மானியக் கைதிகளை விசாரணை செய்யும் ஒற்றர் படைக் காப்டனாகச் சில காலம் பணியாற்றினான். பிறகு ஃபிராங்க்ஃபர்ட்டில் எதிர்ப் பிரசார வேலையில் ஈடுபட்டான். பின்னர் மியூனிக் அகதிகள் முகாம், பெர்லின். நேசம் நிறைந்த பூனைக் கண்களும் களங்கமற்ற புன்சிரிப்பும், ஒட்ட வெட்டப்பட்ட கரிய கிராப்பும், ஒரே மாதிரியாய், குணவிசேஷங்கள் எதையும் காட்டாத உருவப்பாங்குகளும் நிறைந்து, கச்சிதமான ராணுவ உடையில் இருந்த இளைஞன அந்த லெஃப்டினெண்ட், இப்பொழுது சில மங்கிப்போன பரிசுப்பட்டை ரிப்பன்களை மார்பகத்தில் அணிந்துகொண்டு மேஜராகி விட்டான். முன்போல் அவன் லேசாகப் புன்முறுவல் செய்வதில்லை; நெற்றிப் பொட்டில் சிறிது நரை தெரிந்தது; விசேடமற்று ஒரே படித்தான உருவப் பாங்கென்னும் இனிய தன்மை மாறி, இப்பொழுது அது உறுதியும் தீர்மானமும் நிறைந்து தோற்றமளித்தது; இன்னும் அவன் விழிகள் ஆழ்ந்த ஜாக்கிரதை நிறைந்து வாழ்க்கையில் உற்சாகம் குறைந்து, எப்படியும் நன்மை வரும் என்று எதிர்பாராத தன்மையோடு விளங்கின. ஆயினும், 'ஐரோப்பா இன்னும் சிதைந்து விடவில்லை. பார்க்கலாம்' என்கின்ற நன்னம்பிக்கை அவனிடம் இருந்தது.

''ஏன் இத்தனை காலம் வெளிநாட்டிலேயே தங்கிவிட்டாய்?'' என்று பிரௌன்லீ திடீரென்று கேட்டார்.

''பிரயாண வசதி கிடைக்கவில்லை.''

பிரௌன்லீ பல்லை இளித்துக்கொண்டு, ''நீ எப்போதுமே அதிசயிக்கத்தக்க வகையில் கடமையில் கருத்துடையவன்; எனக்கு நினைவிருக்கிறது'' என்றார்.

''அதில் வியப்பென்ன?''

''ஏனென்றால், நீ எதையும் தனிப்பட்ட வகையில் மதித்ததில்லை.''

''நான்தான் அவசரக்காரன் என்று ஒப்புக்கொண்டேனே'' என்று பால் சிரித்தான்.

''ஆமாம், சரியான உணர்ச்சித் துடிப்புடன் இருந்தாய். அதுதான் இப்பொழுதும் வேண்டும்'' என்றார் பிரௌன்லீ. அவருடைய குரல் தணிந்திருந்தது. எனினும் பழுப்பு நிறக் கண்கள் எச்சரிக்கையுடன் காணப்பட்டன. ''அதிருக்கட்டும்; நேற்றுச் சாப்பிடும்போது நான் சொன்ன திட்டத்

தைப் பற்றி ஆலோசித்தாயா?'' என்று அவர் தொடர்ந்து கேட்டார்.

பால் ஹேடன் தயங்கினன். ''அதிகதூரம் சிந்திக்கவில்லை. நீங்களும் திட்டவட்டமாக எதையும் கூறவில்லை யென்று நினைக்கிறேன்'' என்ருன் அவன்.

''ஆமாம், திட்டவட்டமாக எதையும் சொல்வதற்கில்லை. நீயேதான் விஷயங்களைக் கவனித்துத் தெரிந்துகொள்ள வேண்டும், பால். நான் ஆட்களைப் பொறுக்கிக் கொண்டிருப்பவனில்லை; ஆட்கள்தான் என்னிடம் வந்து பணிபுரியவேண்டும் என்பது உனக்குத் தெரியுமே.''

''இதோ பாருங்கள். நான் அம்மாதிரித் தாஞகவே சென்று வேண்டியமட்டும் வேலை செய்துவிட்டேன். என்றைக்கு நான் ராணுவத்தை விட்டேனே அன்று முதல் என் பணியும் முடிந்துவிட்டது. என்னுடைய வருங்காலத்துக்கும் சேர்த்து நான் ராணுவத்துக்குத் தொண்டு செய்தாகி விட்டது.'' பாலின் முகம் மீண்டும் தீர்மானத்தையும் ஜாக்கிரதையையும் காட்டியது. அவன் தலையைத் திருப்பி விமானத்தின் பலகணி வழியே வெளியே பார்த்தான்.

பிரௌன்லீ நிதானமாய்ப் பேசினர். ''இது ராணுவ வேலை இல்லை. உன்னுடைய விடுமுறை முடிந்து, சுற்றவேண்டிய இடமெல்லாம் சுற்றிவிட்டு ஓரிடத்தில் நிலைத்து, வாழ்க்கையின் போக்கை நிச்சயிக்கத் தொடங்கும்போது என்னைச் சந்தித்துப் பேசு. அதற்குள் உனக்கு நான் எதைப்பற்றிப் பேசினேன் என்பது தெரிந்துவிடும்; அல்லது அதைத் தெரிந்துகொள்ள நினைக்கமாட்டாய். அப்பொழுதுதான் உன் முடிவான பதிலையும் நீ எனக்கு அளிக்கமுடியும்.''

''இப்பொழுதே பதில் அளிக்கிறேன். வருந்துகிறேன், ஆனல் நான்......'' அவன் சட்டென்று அப்பேச்சை நிறுத்தி விட்டு ''அதோ, அதோ பாருங்கள், நம் தாய் நாடு! பார்க்க மாட்டீர்களா?'' அந்தக் காட்சியைப் பார்க்க ரோஜர் பிரௌன்லீ தவறக்கூடாதென்று பால் அவருடைய கையைப் பற்றிக் கொண்டான்.

ஆம், அதுதான் நியூயார்க் நகரம். சதுர வடிவில், சிறந்த அமைப்பும், சுத்தமும் கொண்ட கட்டடங்கள், காலைச் சூரியனின் ஒளியில் மிளிரும் கோபுரங்கள், மாடங்கள். அவற்றின் எண்ணிக்கையின்றிப் பளபளத்த பலகணிகளின் கீழே கறுப்பு நூலிழைகள் போல் நேராக ஓடிய அமைதி நிறைந்த தெருக்கள். இவைகளுடன் குளுமையாகவும், அழகாகவும் தூரத்தில் காட்சியளித்தது நியூயார்க்.

''நாம் இப்பொழுது மிகவும் கீழே வந்து கொண்டிருக்கிறோம்'' என்று பிரௌன்லீ, அருகிலிருந்த தமது பிரிகேடியர்

ஜெனரலையும் இதர அமெரிக்கச் சட்டசபை அங்கத்தினர்களை யும் கவலையுடன் நோக்கிக்கொண்டே சொன்னார்.

''எனக்கு இது ஏற்றதே'' என்றான் பால். அவன் விமானத் தின் பலகணியை விட்டுப் பார்வையை அகற்றவும் இல்லை; மேலே எதுவும் பேசவும் இல்லை.

பிரௌன்லீ தமது பையிலிருந்து நோட்டுப் புத்தகத்தை யும் பென்சிலையும் எடுத்து அவசரமாக ஏதோ கிறுக்கினார். பிறகு அந்தக் காகிதத்தை நோட்டிலிருந்து கிழித்துப் பாலிடம் நீட்டி, ''இதை உன் பையில் வைத்துக்கொள். என் டெலி போன் இலக்கம்'' என்றார்.

''பெண்டகனில் நீங்கள் தங்கப்போகும் இடத்தின் இலக் கந்தானே?'' என்று பால் கேட்டான். அதே சமயம் தனது கேள்வி தேவையில்லாதது என்றும் நினைத்துக்கொண்டான்.

''இல்லை, என் அலுவலகத்து இலக்கம். நானும் ராணுவத் தொடர்பற்றவனாகத்தான் மாறிக் கொண்டிருக்கிறேன்.''

பால் ஹேடன் அவரைப் பார்த்து விழித்தான்.

பிரௌன்லீ சட்டசபை அங்கத்தினர்கள் இருந்த பக்கம் பார்த்துத் தலையை அசைத்துக்கொண்டே, ''ஆமாம், இதுதான் ராணுவ உடையில் நான் புரியும் கடைசிப் பணி'' என்றார்.

''ஆனால்......'' என்று பால் ஏதோ பேச ஆரம்பித்தவன் சட்டென்று நிறுத்திக்கொண்டான். ஆம், பிரௌன்லீயிடம் எவரும் கேள்விகள் கேட்பதில்லை.

''ஏனென்றால் இப்பொழுது நான் செய்ய விரும்பும் பணியை சாதாரணப் பிரஜையாக இருந்தால்தான் நன்கு செய்ய முடியும்'' என்றார் பிரௌன்லீ அமைதியுடன்.

''ஆனால் ராணுவ வேலையில் நீங்கள் இத்தனை ஆண்டுகள் உழைத்திருப்பது? அதோடு உங்களுடைய......'' பால் மீண் டும் பேச்சை இடையில் நிறுத்தினான். ரோஜர் பிரௌன்லீ ராணுவத்தை விட்டு விடுவதென்றால் மெய்யாகவே அவர் கவ லையுற்றிருக்கவேண்டும். அவன் பிரௌன்லீயைப் பார்த்துக் கொண்டே அவர் கொடுத்த துண்டுக் காகிதத்தைத் தன் உள் கோட்டுப் பையில் வைத்துக்கொண்டான். பிறகு அங்கிருந்த இதரப் பிரயாணிகளைப்போல் அவனும், இன்னும் ஓரிரு நிமி ஷங்களில் கீழே இறங்க இருந்த விமானத்தின்மீது கவனம் செலுத்தினான்.

பலகணி வழியாக வெளியே பார்த்துக்கொண்டிருந்த பிரௌன்லீ தமது பாதுகாப்புப் பெல்ட்டைக் கழற்றியவாறே ''நிருபர்கள் வந்திருக்கிறார்கள்; இனி நான் என் சட்டசபை அங் கத்தினர்களுடன் கலந்துகொள்ளவேண்டும். நமது பிரதேசத் துக்குள்ளே சரமாரியாக வந்து குவியும் அகதிகளைக் கண்டு

அவர்கள் கவலையடைந்திருக்கிறார்கள். அதை நான் உனக்குச் சொன்னேனோ?'' என்று விசனப் புன்னகையுடன் வினவினார்.

''ஆமாம், அப்படி யாராவது கவலைப்படவேண்டிய சந்தர்ப்பந்தான் இது'' என்று பாலும் விசனத்துடன் கூறினான். பிறகு, மீண்டும் திறமைமிக்க கர்னலாக மாறிவிட்ட பிரௌன்லீயைப் பின்பற்றிச் செல்ல எழுந்தபோது, 'இதையெல்லாம் நான் இனி மறந்துவிடவேண்டும்' என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான். ஆமாம், அவன் வேண்டியமட்டும் அவதியும் அல்லலும் பட்டாயிற்று. இனியேனும் நிம்மதியுடன் வாழ வேண்டும். அவனுக்கு நண்பர்களுடன் தொடர்பு விட்டுப் போய் ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. இருந்தாலும் அவன் நிம்மதி பெறமுடியும். சுற்றுவதற்கு நிறைய இடங்கள் இருந்தன.

அவன் சார்ஜெண்டின் அருகே சிறிது நின்று, ''நீங்கள் நேரே ஆஸ்பத்திரிக்குத்தான் போகிறீர்களா? அப்படியானால் நான் உங்களை அங்கே கொண்டு இறக்கி விடுகிறேன்'' என்றான்.

''கர்னல் என்னைக் கவனித்துக் கொள்ளுவதாகச் சொல்லியிருக்கிறார் ஸார்'' என்றார் சார்ஜெண்ட். சாதாரணமாக அகன்ற வாயுடைய அவருடைய சதுரமான முகத்தைப் பார்த்தால் விளையாட்டுப் போக்கானவர் போலவே தோன்றும். ஆனால் இப்பொழுது தமது மனைவியின் உடல் நிலையைப்பற்றிக் கிடைத்திருந்த தகவலினால் அவர் கவலையும், விசனமும், கடுகடுப்பும் நிறைந்தவராகக் காணப்பட்டார்.

''நிருபர்கள் கர்னலை நிறுத்திக்கொண்டாலும் கொள்ளலாம். நீங்கள் என்னுடன் வாருங்களேன்.''

சார்ஜெண்ட் தமது சாமான்களை எடுத்துக்கொண்டு பாலுடன் புறப்பட்டார். ''அவள் அம்மா எழுதினாள், என் மனைவி என்னைப் பார்க்க முடியுமானால் ஒரு வேளை உயிர் பிழைக்கக் கூடும்'' என்று கவலையே பெரிதாகப் பேச ஆரம்பித்தார்.

''அப்படியானால் சீக்கிரம் போவதுதான் நல்லது.''

''ஆமாம் ஸார்'' என்று கூறிவிட்டு சார்ஜெண்ட் அமைதியுடன் சட்டசபை அங்கத்தினர்களை நோக்கினார். சட்டசபை அங்கத்தினர்கள் பிரிகேடியர் ஜெனரலிடம் தங்களது இறுதிக் கேள்விகளைக் கேட்டனர். அவர்களுடைய காரியதரிசிகள் தங்கள் பிதுங்கிய பெரிய பெட்டிகளைக் கணக்கிட்டனர். பொருளாதாரக் கூட்டுறவு ஸ்தாபனத்தினர் கர்னலுடன் மரியாதையுடனும் அன்புடனும் பேசிக்கொண்டிருந்தனர். அவருக்கு என்ன இருந்தாலும் ராணுவ உள்ளந்தானே! பால் ஹேடன் எப்படியோ பிரௌன்லீயின் பார்வையில் பட்டு, சார்ஜெண்டைத் தான் அழைத்துச் செல்வதை ஜாடை மூலம் தெரிவித்தான். பிரௌன்லீயும் சட்டென்று புரிந்துகொண்டார். ஜெனரலுடன் நிதானமாய்ப் பேசிக்கொண்டிருந்த அவரைப் பார்த்த

வாறே 'ஆம், அவர் அப்படிப்பட்டவரே' என்று பால் நினைத்தான். சில நிமிஷங்களில் விமானம் காலியாகிவிட்டது. தாங்கள் பத்திரிகைகளுக்கு அறிக்கைவிட்டுக் கொண்டிருக்கையில் விமானத்திலிருந்து இறங்கும் ராணுவத் தொடர்பற்ற பொதுமக்கள் படிகளில் நின்று புகைப்படம் எடுத்துக்கொள்ளக்கூடாதென்று சட்டசபை அங்கத்தினர்களால் வற்புறுத்தப்பட்டனர். அவர்கள் கீழே தரையில் குழுமி நின்றார்கள். ஆகையால் பாலுக்கும் சார்ஜெண்டுக்கும் விமானத்திலிருந்து கீழே இறங்க வசதியாக வழி கிடைத்தது.

'ஆமாம், பிரௌன்லீ அம்மாதிரி ஆள்தான்' என்று நினைத்துக்கொண்டே பால் விமானத்திலிருந்து இறங்கினான். அவன் கர்னல் அவர்களுக்குத் தனது கடைசி உத்தியோக பூர்வமான சலாம் ஒன்றை வழங்கிவிட்டு, அதற்குப் பதில் அளிப்பதுபோல் ரோஜர் பிரௌன்லீயின் கண்களில் புன்னகை ததும்புவதையும் பார்த்தான்.

அவன் சார்ஜெண்டுடன் விமானத்திலிருந்து இறங்கி, கும்பல் கும்பலாகப் புகைப்படம் பிடித்துக்கொண்டிருந்த பிரமுகர்களைத் தாண்டி, பளபளக்கும் கண்ணாடிகளுடன், மென்மையான காரைபூசி, நீண்ட வரிசையாக நின்ற கட்டடங்களை நோக்கி நடந்தான். அப்போதும் அவன், முன்னாள் பெர்லினில் பிரௌன்லீ தன்னிடம் கூறியதையே நினைத்தான். இந்தப் பிரௌன்லீ இப்படிச் சட்டென்று திசைமாறிச் செல்வது விசித்திரந்தான்; பாலுக்குத் திடீரென்று, தான் இந்த நினைவுகளோடு இங்கேவர நினைக்கவில்லை என்ற நினைவுவந்தது. விமானத்தைவிட்டு இறங்கி, அமெரிக்க மண்ணை மிதித்ததும், ''போதும், இனி எனக்கு ஐரோப்பாவில் வேலை இல்லை. இங்கேதான் என் வாழ்க்கையை மீண்டும் தொடங்கப்போகிறேன். இங்கேதான் எனக்கு அமைதி கிடைக்கும்'' என்று சொல்ல நினைத்திருந்தவன் பால். ஆனால் பெரும்பாலான நாடகப் பேச்சுக்களைப் போல் இதையும் சொல்ல முடியாமலே போய்விட்டது. அதற்குக் காரணம் இந்தப் பிரௌன்லீதான்.

நிருபர் ஒருவர் அவர்கள் பின்னால் ஓடிவந்து, ''பெர்லின் எல்லாம் எப்படி இருக்கிறது?'' என்று கேட்டார்.

''அதோ, அவர்களைக் கேளுங்கள்'' என்று பல்லை இளித்துக்கொண்டு கூறிய பால் ஹேடன், பின்னால் விமானத்தை நோக்கித் தலையை அசைத்துவிட்டு, ''நாங்கள் சும்மா அதில் தொற்றிக்கொண்டு வந்தவர்கள்'' என்றான்.

'' விசேஷம் ஒன்றும் இல்லையா?'' ஆவலுடன் அவர்களை அணுகிய அந்த நிருபர் ஏமாற்றத்துடன் வெறித்து நோக்கினார். ஒரு சார்ஜெண்டும் மேஜரும் விமானத்திலிருந்து வெளியே வருவதற்கு வழிவிட்டு மிக வேகமாக ஒரு பிரிகேடியர்

ஜெனரல் கீழே இறங்கியபோது சுவைமிக்க செய்தி ஏதாவது கிட்டும் என்று அந்த நிருபர் நம்பியது சகஜந்தானே?

''கையில் கனத்துக் கொண்டிருந்த சாமான்களை மற்ற கைக்கு மாற்றியவாறு, ''ஒன்றும் இல்லை அப்பனே'' என்றார் சார்ஜெண்ட்.

நிருபர் அப்பால் சென்றதும் பால் அவரை நோக்கிய வாறே, ''முண்டியடித்துக்கொண்டு முன்னேறப்பழகும்போது, இவன் தன் வேலையில் மிக நன்றாகப் பிரகாசிப்பான்'' என்றான். பிறகு அவன் குழப்பத்துடன் சார்ஜெண்டைப் பார்த்து, ''பாவம், சிறுவன்தானே! ஏன், நம்மைவிடப் பத்து வயது நிச்சயமாய் இளையவனாக இருப்பான்'' என்றும் சேர்த்துக் கொண்டான். 'ஆம், என் வாழ்வில் இது ஒரு புதுக் கட்டம்' என்ற நினைவு அச்சமயம் அவனிடம் விசனத்துடன் எழுந்தது. கண்ணாடி மற்றும் எஃகுக் கதவுகளைத் துடைத்துக் கொண்டிருந்தவர்களிடமும், இடைகழியிலும், உள்ளே தங்குமிடத்திலும் இருந்த மனிதர்களிடமும், தகவல் இலாகா மேஜைகளின் முன் உட்கார்ந்திருந்தவர்களிடமும் அவன் பார்வை சென்றது. இம்மாதிரிப் புது விஷயங்களில் கவனம் செலுத்தியதால், அவன் அங்கிருந்த பெண்களைக்கூட கவனிக்க மறந்துவிட்டான். ஒருக்கால் முப்பத்து மூன்று வயது என்பது அதிக வயது என்பதன் அடையாளமோ அது?

''ஆளுக்கு ஒரு 'ஸாண்ட்விச்'சும், அசல் அமெரிக்கக் காப்பியும் சாப்பிடலாமா?'' என்று அவன் சார்ஜெண்டைக் கேட்டான். இந்த அதிகாலை நேரத்திலும் கும்பல் நிரம்பி வழிந்த பிரும்மாண்டமான ஹோட்டல் கட்டடத்தைப் பார்த்து தமது கவலைகளைக் கணநேரம் மறந்த சார்ஜெண்ட், முறுவலித்துக் கொண்டே, ''நல்லது என்றுதான் எனக்கும் தோன்றுகிறது'' என்றார்.

பால் தன்னைச் சுற்றிலும் எழுந்த குரல் ஒலியில் ஈடுபட்டவாறு, ''ஆமாம்; எல்லாமே நல்லதாகத்தான் தோன்றுகிறது'' என்றான். அவன் முகத்திலும் ஒரு முறுவல் மலர்ந்தது.

★ ★ ★

ரோஜா மெட்ஃபோர்டு அயர்ந்து தூங்கவில்லை. ஏனென்றால் சீக்கிரம் எழுந்திருந்து தன் அலுவல்களைக் குறித்த நேரத்தில் முடிக்கவேண்டுமென்று முன்னாள் இரவே தீர்மானம் செய்திருந்தாள். மான்ஹாட்டனுக்கு மேலே தாழ்வாகப் பறந்து சென்ற விமானத்தின் பேரிரைச்சல் அவளை முழுவதும் எழுப்பி விட்டு விட்டது. படுக்கைக்கு அருகிலிருந்த சிறிய கடிகாரத்தைப் பார்த்தாள். பார்த்ததும், ''ஆ! என்ன?'' என்றாள் வியப்புடன். ஆம், அப்பொழுது அதிகாலை ஐந்து மணி.

அந்த விமானத்தின் அலறல் அடங்கி, அவளுடைய தூக்கமும் கலைந்து அமைதி ஏற்பட்டதும் கோபத்துடன், ''இப்படி விமானங்கள் மனிதரின் தூக்கத்தைக் கெடுப்பதைத் தடுக்க ஒரு சட்டம் வேண்டும்'' என்று கூறியவள் அப்படி ஒரு சட்டம் இருப்பது நினைவுக்கு வரவே, அந்த விமானியைச் சபித்தாள்.

ஆனால் அவளுடைய எரிச்சல் அதிக நேரம் நீடிக்கவில்லை. மனத்தை அன்றைய திட்டங்கள் நிரப்பின. படுக்கையின் கதகதப்பையும் மிருதுத் தன்மையையும் அநுபவித்தவாறு நீட்டி நிமிர்ந்து படுத்தாள். மூடிக்கொண்டிருந்த போர்வைக்கு வெளியே அந்தச் சிறிய அறை குளிர்ச்சியும் புதுமையும் நிறைந்து விளங்கிற்று. அதற்கு, அதன் வெண்மையான சுவர்களுக்கு ஏற்ற விதத்தில் பச்சை நிறத் திரைச் சீலைகள் தொங்க விடப்பட்டிருந்தது ஒரு காரணம்; மற்றொரு காரணம், ஏப்ரல் மாதத்துக் காலைக் காற்றில் இன்னும் கடுங்குளிர் கலந்திருந்தது. போன வாரத்தில்கூட அங்கே பனி பெய்தது. மெல்ல அசைந்தாடிய திரைச் சீலைகளின் பளிச்சென்ற நிறத்திலிருந்தே அன்றையக் காலைப்பொழுது நல்ல சூரிய ஒளியுடனும், நிர்மலமான ஆகாயத்துடனும் இருக்கப்போகிறது என்பது அவளுக்குத் தெரிந்துவிட்டது. (பயங்கரமான மங்கிய காலைப்பொழுதென்றால் அந்தத் திரைச் சீலைகளின் பச்சை நிறம் உயிரும் உணர்வும் அற்றிருக்கும்.) இது அவளுக்கு உற்சாகத்தை அளித்தது. ஆம், இரவு விருந்துக்கு வரப்போகிறவர்கள் அவளுடைய சிறிய அறையை ரப்பர்மேல் பூட்சுகளாலும், கனத்த மழைக்கோட்டுகளாலும் நிரப்பிவிட மாட்டார்கள்; அவளுடைய சிறிய குளி அறை சொட்டச் சொட்ட வரும் குடைகளால் நிரம்பிவிடாது.

''எல்லாம் நல்லதனமாய் நடக்குமென்று நம்புகிறேன்'' என்று அவள் மேற்கூரையைப் பார்த்தவாறே கூறினாள். பிறகு எழுந்து, கட்டிலில் அமர்ந்தாள். அலங்கார மேஜை மீதிருந்த ஸ்காட்டின் புகைப்படத்தை நோக்கினாள். ''ஆமாம், எல்லாம் நல்லபடியே போகிறது'' என்று அவள் ஒரு முத்தத்தை அவன் படத்தை நோக்கி ஊதிவிட்டு, தலையில் கட்டிக்கொண்டிருந்த பச்சை ரிப்பனை அவிழ்த்தாள். முன்னாள் இரவு நிகழ்ச்சிகளை அவள் புன்னகையுடன் நினைவுபடுத்திக்கொண்டாள். முன்னாள் இரவு உல்லாசமானதாகத்தான் கழிந்தது. அவள் தனது இடது கையையும் அதில் அணிந்திருந்த நிச்சயதார்த்த மோதிரத்தையும் கனிந்துநோக்கினாள். ஆம், அண்மையில் அவளுக்கு ஏற்பட்ட கவலைகளெல்லாம் அர்த்தமற்றவைதாம். முன்னாள் இரவிலிருந்து எல்லாம் ஒழுங்காகிவிட்டன. எல்லாம் மகிழ்ச்சியும் குதூகலமுமாக மாறிவிட்டன. சென்ற மாதத்தில் அவளுக்கு ஏற்பட்ட பீதிகளெல்லாம் வெறும் அசட்டு நினைவுகளே. ஸ்காட் அவளைக் காதலிப்பதாகக் கூறிவிட்டான். அவன் தன்னைப் பார்த்த விதத்திலிருந்து, தன்னிடம் பேசிய விதத்தி

லிருந்து, தன்னோடு சேர்ந்து சிரித்த விதத்திலிருந்து, ஏன், தன்னையே பார்த்துக்கொண்டு அவன் அமைதியாக இருந்தவிதத்திலிருந்துகூட அவள் அவனுடைய காதலை உணர்ந்து கொண்டாள். திரைப்படக் கொட்டகையில் பேசிக்கொண்டிருந்த போது அவன், 'அவளைப் போன்ற இனிமையான பெண் இந்த உலகிலேயே கிடையாது' என்றான்; நடனமாடிக் கொண்டிருந்தபோது, 'அவள் அற்புதமான பெண்' என்றான். பிறகு, 'அவள் தன்னுடையவள்' என்றும் சொன்னான்.

'அவர் என்னைக் காதலிக்கிறார்; நிச்சயமாக என்னைக் காதலிக்கிறார். நியூயார்க்கிலேயே நான் மிகவும் பாக்யசாலி' என்று அவள் திறந்திருந்த தனது தோள்களைக் குலுக்கியவாறே நினைத்தாள். அப் புத்தம் புதுநாளை வரவேற்பதே போல் கட்டிலிலிருந்து எழுந்தோடித் திரைச் சீலைகளை ஒதுக்கினாள். பிறகு தனது கருங்கூந்தலை வாரிக்கொள்ள அலங்கார மேஜைக்குத் திரும்பினாள். 'கூந்தல் மிக நீண்டு விட்டது. ஆனால் ஸ்காட் அதை வெட்டக்கூடாது என்கிறாரே!' என்று அவள் தனக்குத்தானே கூறிக்கொண்டாள். அமைப்பான புருவங்களும், கரிய இமை ரோமங்களும், முழு அழகு படுத்திய அவளது பழுப்பு நிறவிழிகளும் கண்ணாடியில் பிரதிபலித்தன. நேற்றிரவு ஸ்காட் அந்த இமைகளின் வளைவையும், கன்னங்களின் குழைவையும்பற்றி என்ன சொன்னார்? 'போதும், போதும்; இப்படியெல்லாம் நினைத்துக் கொண்டே போனால் இறுதியில் நீயும் ஒரு ஃபிரஞ்சு அழகிரிக்காமி என்ற முடிவுக்கு வந்துவிடுவாய்!' என்று அவள் தன்னைத்தானே எச்சரித்துக்கொண்டாள். எவ்வளவு இனிமையான அர்த்தமற்ற மொழிகளை ஸ்காட் கூறுகிறார். பிறகு கூர்மையாகத் தன்னைக் கண்ணாடியில் கவனித்தபோது தனது மெல்லிய இடையினின்றும் உயர்ந்து வளைந்து பொங்கும் மார்பகத்தையும் பின்புறத்தையும் கண்டு பெருமிதமுற்றாள், அவள் மீண்டும் சிரித்தவாறு புகைப் படத்தை முத்தமிட்டாள்.

அலாரம் அடித்தது. 'போதும், போதும்' என்று சொல்லியவாறே அவள் கவுனை மாட்டியபடி, காஃபி தயாரிக்கச் சமையலறைக்கு ஓடினாள். அவசரக் குளிப்பு மேலும் அவளை உலக விவகாரத்துக்குத் திருப்பியது. பிறகு உடையணிந்துகொண்டே நினைத்தாள்: 'இன்று சீக்கிரமாகவே அலுவலகத்துக்குச் செல்வேன். வேலைகள் அனைத்தையும் விரைவில் முடிப்பேன். முடிந்தால் மாலையில் சீக்கிரமே அலுவலகத்தைவிட்டுச் செல்ல பர்னெட் எனக்கு அநுமதி அளிப்பார். ஐந்து மணிக்கெல்லாம் இங்கே திரும்பிவிட முடியும். விருந்தாளிகள் ஆறு மணிக்குத்தான் வருவார்கள். ஆனால் ஸ்காட் முன்னமே வந்துவிடுவார். ஆம், அவர்தானே இன்று விருந்

தளிப்பவர்.' பின்னர் ரோனு கடைசி முறையாக ஒரு தடவை ஸ்காட்டின் புகைப்படத்தை நோக்கினுள். புகைப்பட முகம் அவரது உண்மை முகத்திற்குப் பொருத்தமாயில்லை. அவர் அவ்வளவு உணர்ச்சியற்றவரல்ல; தீவிரம் உடையவருமல்ல; புகைப் படத்தில் காணப்படுவதைவிட அவர் முகம் மென்மையானது. உண்மையில் ''இனியவர்'' என்ற அடைமொழியைத் தான் பெண்கள் அவருக்கு அளிக்கிருர்கள். அவருடைய உயரம், அழகிய கேசம், நீலநிற விழிகள், புன்னகைக் கவர்ச்சி இவைகளின் கலவையே அவரைப் பயங்கரமான பரவசம் உடையவராகக் காட்டியது. ஆனல் இவை எல்லாவற்றையும்விட நான் அதிகமாக அவரிடம் விரும்புவது மற்ற எவரையும் அவர் லட்சியம் செய்யாதிருப்பதே என்று கட்டிலிலிருந்த போர்வையை மடித்தபடி ரோனு நினைத்துக்கொண்டாள். ஆரம்பத்தில் ரோனு, ஸ்காட்டை முதல் தடவையாகச் சந்தித்தபோது அவளிடங்கூட அவன் அதிக அக்கறை காட்டவில்லை. ஆனுல் பிறகு காட்டத்தான் செய்தான். இதை நினைத்துக்கொண்டு அவள் புன்னகை பூத்தவாறு, குமுறி இரைந்த கெட்டிலை அடுப்பிலிருந்து இறக்குவதற்காகச் சமையலறைக்குச் சென்ருள்.

காலை உணவுக்குப் பிறகு ரோனு, ''என் விடுதி'' என்று பெருமையுடன் சொல்லிக்கொள்ளும் தனது இரண்டு சிறிய அறைகளையும் வழக்கம்போல் ஒழுங்குபடுத்தலானுள். (அந்த அறைகளை மூன்று மணிநேரம் துலக்கும் வேலையைச் செய்பவள் **திருமதி காஸ்ப்ரோவிக்ஸ்.** அவளுக்கு மணி ஒன்றுக்கு ஒரு டாலர் கூலி. ஆதலால் வாரத்திற்கு இரண்டு தடவைகள் மட்டுமே ரோனுவால் அவளை வேலைக்கு அழைக்க முடிந்தது). அது ஓர் எளிய விடுதியே. பழுப்பு நிற செங்கற்களால் கட்டப்பட்ட அந்த வீட்டின் மாடியைப் பல குடியிருப்பு விடுதிகளாக மாற்றி அமைத்திருந்தார்கள். ஆனுல் அதில் இருந்த பொருள்கள் அனைத்தும் ரோனுவுடையவை; அவளுடைய கைத்திறன்; அவளுடைய கருத்துக்கள். அங்கிருந்து 'வாழ்க்கை அறை'யைப் பார்த்தவாறு, 'ஆம், இந்த விடுதி நானே உருவாக்கியது' என்று நினைத்தாள். பிறகு, தினந்தோறும் குறைந்தது ஒரு தடவையாவது நினைத்துக் கொள்வதுபோல், ஸ்காட்டும் தானும் எப்படி, எப்பொழுது, எங்கே வாழ்வைத் தொடங்கப் போகிருேமோ என நினைத்து வியந்தாள். ஒருக்கால் இந்தக் கோடை காலத்துக்குள் அவர் தேவையான அளவு பணம் சேர்த்துவிடலாம். 'முன்னுள் இரவு அவருடைய திட்டங்களுக்கு ஏற்றதாக அமையவில்லை' என்பதை அவள் விசனத்துடன் நினைவுபடுத்திக்கொண்டாள். ஆனுல் அதற்கு அவள் தான் என்ன செய்ய முடியும்? இதமாக எதிர்ப்பைத் தெரிவித்திருக்கவேண்டுமா? தெரிவித்திருந்தால் ஸ்காட்டுக்குக் கோபம் ஏற்பட்டிருக்கும்; இரவின் இன்பம் பறிபோயிருக்கும். தொண

தொணக்கும் பெண்களை அவருக்குப் பிடிக்கவே பிடிக்காது. எந்தவிதமான குறுக்கீட்டையும் அவர் விரும்பமாட்டார். எவ்வளவு செலவானாலும் சரி, தமது விருப்பப்படிக் காரியங்கள் செய்வதுதான் அவருக்குப் பிடிக்கும்.

ரோஜு மறுபடியும் கவலைப்பட ஆரம்பித்துவிட்டாள். எனவே அவள் தன் கவலைக்கு வேறு வேலை கொடுப்பதற்காக, அன்றைய விருந்துக்கு வாங்கவேண்டிய சாமான்களுக்குப் பட்டியல் தயாரிக்கப் பென்சிலையும், காகிதத்தையும் எடுத்துக்கொண்டு உட்கார்ந்தாள். பாலாடைக் கட்டி, கடினரக பிஸ்கோத்துகள், மலர்கள், சுட்ட ஸால்மன் மீன்கள், ஆலிவ், எலுமிச்சை ரசங்கள், கொட்டை தினுசுகள், மூன்றுவது தெருவிலுள்ள டெலிகெடிஸன் கடையிலிருந்து ஈரல், சோடாப் பானம், ஸ்காட்டின் அப்பாவுக்கு ஸ்காச் பானம், ஏன், ஒரு வேளை இன்னும் சிலரும் அதை விரும்பலாம்; அப்புறம் மற்றவர்களுக்கு மார்ட்டினிப் பானம்.... அப்புறம்.... ஆம், சிகரெட்டுக்கள்—ஓ! அதை அவள் மறந்தே போய்விட்டாளே! அப்புறம், வேறு என்ன?

விருந்தின்போது அணிந்துகொள்ளவேண்டிய கால் ஜோடுகளைச் செருப்புத் தைப்பவனிடம் எடுத்துப்போய் குதிகால் பட்டியைச் சரிசெய்ய வேண்டும். சலவை செய்பவனிடம் தனது ஸில்க் உடைகளை ஐந்தரை மணிக்குள் கொடுக்கும்படி நினைவூட்ட வேண்டும். இன்னும் என்ன? இன்னும் என்ன? ஆமாம்! திருமதி காஸ்ப்ரோவிக்ஸுக்குத் துடைத்து மெருகு போடவேண்டிய கண்ணாடிகளைப்பற்றி எழுத்துப் பிழையின்றி ஒரு குறிப்பு எழுதிவைக்கவேண்டும். ஓ! ஐஸ்.... ஆமாம், அதிகப்படியாக ஐஸ் கொண்டுவரச் சொல்லவேண்டுமே!

பிறகு அவள் தன்னைச்சுற்றி அவசரத்துடன் கடைசிமுறையாக ஒரு பார்வை பார்த்துவிட்டு, சிறு கூடத்துக்கு வந்தாள். கதவுக்கு அருகில், டெலிபோன் கருவி வைக்கப்பட்டிருந்த மேஜைமீது திருமதி காஸ்ப்ரோவிக்ஸுக்குக் குறிப்பு எழுதிவைத்தாள். மேஜைக்கு மேலே தொங்கிய கண்ணாடியில் தன் உருவத்தை ஒரு முறை பார்த்துத் தனது சுத்த வெள்ளை நிற மாலுமித் தொப்பியைச் சரிசெய்தாள். முகத்தோடு ஒட்டியிருந்த முகத்திரைப் பின்னலின் ஒரு பகுதியை இழுத்துவிட்டாள். தான் அணிந்திருந்த சாம்பல் நிறக் கம்பளி உடைக்கும் வெள்ளை உள்கோட்டுக்கும் பொருந்தும்வண்ணம் சலவை செய்யப்பட்டுப் புதிதாக விளங்கிய வெள்ளைக் கையுறைகளை மாட்டிக்கொண்டாள். பிறகு காலுறைகளின் விளிம்பைச் சரிபார்த்துக்கொண்டு கதவைத் திறந்தாள். எட்டு மணிக்குக் காலைச் சிற்றுண்டி அருந்தும்போது படிப்பதற்குத் தயாராக அன்றையக் காலைத் தினசரி வாயிற்படியில் கிடந்தது. அவள் அதை எடுத்தாள். ஆனால் தன்னுடன் கொண்டு செல்ல விரும்ப

வில்லை. வெறுமனே அதன் தலைப்புகள் மீது மட்டும் பார்வையை ஓட்டினாள். பால்டிக்கில் காணாமற்போன கடற்படை விமானத்தைப்பற்றி இன்னும் எவ்விதத் தகவலும் இல்லை. அதில் இருந்த பத்து இளைஞர்கள் தங்கள் குடும்பத்தவர்களைக் காணப்போவதில்லை.. நியூயார்க் நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் இன்னும் குறைந்தே இருக்கிறது... வாஷிங்டனில் மேற்கொண்டு புலன் விசாரணை....டாக்டர் பக்ஸின் வழக்கு முடிந்தும் நீளுகிறது.. சிலி நாட்டு ஜனாதிபதிக்கு எதிராக நியூயார்க்கில் கம்யூனிஸ்டுகள் நடத்திய ஆர்ப்பாட்டம்.. ஹாம்பர்க்கில் மீண்டும் நாஜிகளின் தொல்லை... சமாதிகள் அசுத்தப்படுத்தப்படுகின்றன.

ரோனா முகத்தைச் சுளித்தவாறு செய்தித்தாளை மேஜை மீது வைத்தாள். டெலிபோன் மணி அடித்தது. 'அலுவலகத்துக்குத் தாமதமாகிவிடும்' என்று எச்சரித்துக்கொண்டே பேசும் கருவியைக் கையில் எடுத்தாள். தன் சகோதரி **பெக்கி** குழந்தைக்கு உடல்நிலை சரியாக இல்லை; அல்லது குழந்தையை வைத்துக்கொள்ள ஒருவரும் கிடைக்கவில்லை; ஆதலால் தானும் **ஜானும்** விருந்துக்கு வர இயலாது என்று ஏதாவது சொல்லப் போகிறாளென்று ரோனா எதிர்பார்த்தாள். ஆனால் டெலிபோனில் பேசியது ஸ்காட். ''ஹலோ டார்லிங்!'' என்று பேச ஆரம்பித்தானோ இல்லையோ, ரோனாவின் அந்தரங்க, பகிரங்கக் கவலைகள் யாவும் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டன.

* * *

ஸ்காட் எட்லீகூட ஐந்து மணிக்கே எழுந்துவிட்டான். ரோனாவின் வீட்டிலிருந்து சில கட்டடங்களுக்கு அப்பால்தான் இருந்தது அவன் விடுதி. தவிர அது விமானம் வரும் வழிக்கு நேராகக் கீழே இருந்தது. ஏதேனும் இயந்திரக் கோளாறோ என்று அவன் அதன் பேரோசையை உற்றுக்கேட்டான். இல்லை அப்படி ஒன்றும் இல்லை. பல வாரங்களுக்குப் பிறகு தனக்கு ஏற்பட்டுள்ள தாங்கமுடியாத தலைவலியுடன், படுக்கையிலே, இந்த விமானத்தால் சாகடிக்கப்படமாட்டோம் என்பது உறுதியானபிறகு, அவன் தனது பிளக்கும் தலைவலி இடம் அளித்தவரையில், அந்த விமானத்தை ஓட்டிச் சென்றவனைத் திட்டினான். பிறகு சிறிது சிரமத்துடன் தனது கைக்கடிகாரத்திலிருந்து மணியைத் தெரிந்துகொண்டான். அட கடவுளே!.. ஸ்காட் சினம் பொங்க தாறுமாறான அந்த இருண்ட அறையை உறுத்து நோக்கினான். சிதறிக் கிடக்கும் துணிகள், இடம் மாறிப் போன புத்தகங்கள், முன்னாள் இரவு-இல்லை, இன்று காலையில் தான் தரையில் சட்டையின் அருகே அவன் கழற்றி எறிந்த திண்டினுடைய உறை ஆகியவற்றை அவன் கண்கள் கண்டன.

நீர்நிரம்பி வழிந்த சாம்பல் கிண்ணத்தை அவன் நாற்றம் எட்டாத தூரத்துக்குத் தள்ளினன். பிறகு ஒரு மணமாகாத இளைஞன் தனது இருப்பிடத்தில் பெறும் எல்லாக் களிப்புக்களையும் உதறி எறிபவன்போல் போர்வையை இழுத்துத் தலைவரையில் மூடிக்கொண்டான்.

'உறக்கத்திடை விழிப்பது நரகமே. இல்லையேல் எனக்குத் தான் வயதாகிவிட்டதோ? ஆம், இருபத்தொன்பது வயது தான். ஆயினும், இரவுக் கிளப்பின் சூழ்நிலையும் அதன் பெரிய உட்புறக் களியாட்டங்களும் எனக்கு ஒத்துக்கொள்ளவில்லை. இருபத்தொன்பது வயதுதான்; அதற்குள், ஓர் ஏழை அனுபவிக்கக்கூடிய சாதாரண இன்பங்களைக்கூட நான் ஒவ்வொன்ருகக் கைவிட்டு வருகிறேன். நாற்பது டாலர்கள்! அற்ப இன்பங்களுக்கும் இப்போது அத்தனை செலவாகிறதே. நாற்பது டாலர்கள்! எனினும் ரோனு நேற்றைக் களியாட்டத்தை நன்கு ரசித்தாள். சென்ற வாரம் எங்களிடையே ஏற்பட்ட பிணக்கை அது ஈடுசெய்துவிட்டது. அந்தப் பிணக்குக்குக் காரணம் நான்தான். ரோனு அப்படிச் சொல்லவில்லை; ஆயினும் சொன்னல் வியப்படைவதற்கில்லை. ஆமாம், அது என்னுடைய மடத்தனமான தவற்ருல் ஏற்பட்டதுதான் என்பது எனக்கே தெரிகிறது. அது சரி, அதையெல்லாம் இப்பொழுது நான் ஏன் ஒப்புக்கொள்கிறேன்? தொல்லை பிடித்த இந்த அதிகாலை ஐந்து மணிக்கு, தூக்கம் முழுவதும் போன நிலையில், சுழலில் அகப்பட்ட படகுபோல் சுற்றும் இந்தத் தலையுடன்? இத்தொல்லைகளின் இடையே சிறிது உல்லாசம் பெறவா?' இவ்வாறெல்லாம் அவன் பரிதாபத்துடன் முனகிவிட்டுக் கண்களை மூடியபடி படுத்திருந்தான். 'இனிமேல் தூக்கம் ஏது?' என்று அவன் நிச்சயமாக நினைத்ததால்தானே என்னவோ, அந்தத் தூக்கம் அவனை மெல்ல ஆட்கொண்டது.

அலாரம் அடித்தபோது நேரம் எட்டடிக்கப் பத்து நிமிஷங்கள். தலைவேதனை சிறிது குறைந்திருந்தது. 'இருந்தாலும் விழித்து எழுவது என்பது நரகவேதனைதான்!' என்று அவன் மீண்டும் தனக்குள்ளே கூறிக்கொண்டான். மெதுவாக எழுந்து, கட்டிலின் விளிம்பில் அமர்ந்தபடி, கசங்கிய சராயுடன்கூடிய தன் கால்களைப் பார்த்தான். தடுமாறியபடி கால்ஜோடுகளைத் தேடினன். அவை அகப்படவில்லை. குளிப்பறைக்கு வெறுங் காலுடனே நடந்து சென்ருன். கண்ணுடியில் தன் உருவம் தெரிந்தபோது அவன் மனம் இன்னும் தளர்ச்சியடைந்தது. ஆனல் குளிர்ந்த நீரில் குளித்ததும் அவனுக்குத் தெம்பு வந்தது. அப்போதுதான் ரோனுவுக்கு டெலிபோன் செய்யவேண்டும் என்பது அவனுக்கு நினைவு வந்தது.

''ஹலோ டார்லிங்!'' என்று ஆரம்பித்த ஸ்காட், ரோனுவின் குரலைச் செவிமடுத்தவாறே முன்னள் இரவில் அவள்

இருந்த நிலையைச் சிந்தித்தான். "ஓ, நீ எப்படி ரசித்தாய்?... எனக்கா? என்னைப் பொறுத்தவரையில் நெடுநாட்களுக்குப் பிறகு நமக்குக் கிட்டிய அருமையான சந்தர்ப்பம் அது. அம் மாதிரி இன்னும் பல ஏற்படுத்திக்கொள்வோம். செலவு கிடக் கிறது ரோனு. பணம் நமக்காகவா? அல்லது பணத்துக்காக நாமா?" அவன் அவளுடைய சிரிப்பைக் கேட்டான். அம்மாதிரி தானும் இந்த அதிகாலையில் சிரிக்கமுடிந்தால்...... பிறகு, "அன்பே! ஒரு விஷயம். இன்று சிற்றுண்டி நேரத்தில் உன்னைச் சந்திக்க முடியாதென்று நினைக்கிறேன். விசனிக்கிறேன், நக ருக்கு வெளியே கொஞ்சம் போய்வரவேண்டும்.... இல்லே, இல்லே. இரவு விருந்துக்கு வந்து விடுவேன். கவலைப்படாதே. நடுப்பகல் சிற்றுண்டிக்கு நாம் சந்திக்கமுடியாதது தான் வருத்தமாக இருக்கிறது. நேற்றிரவே அதைச் சொல்ல நினைத் தேன். ஆனுல் கேளிக்கைகளில் என்னையே மறந்துவிட்டேன். மன்னித்துக்கொள் டார்லிங். என்ன?"

ஸ்காட் பேசும் கருவியை அதன் இடத்தில் வைத்தான்; புன்னகை பூத்தான். 'ரோனு உண்மையிலேயே வியக்கத்தக்க பெண்தான். 'ஆண்களை வீழ்த்தும் பொறிகள்' என்று ஆர்பென் பெண்களைப்பற்றிக் கிண்டல் செய்தாலும் ரோனு வியக்கத்தக்கவளே' என்று அவன் நினைத்துக்கொண்டான். ஆனுல், நிக்கோலாஸ் ஆர்பென், ரோனு, தன் தந்தை, மற்றும் தன் வாழ்விலிருந்த பல்வேறு சிக்கல்கள், இவற்றை நினைத்த போது ஸ்காட் எட்லீயின் முகத்திலிருந்த புன்னகை மறைந்து விட்டது. டெலிபோனில் ரோனுவின் சிரிப்பைக் கேட்டதும் ஏற்பட்ட கணநேர மலர்ச்சியை விரட்டி, அவனை மீண்டும் கவலையில் ஆழ்த்த இவைகளே போதுமானவைகளாக இருந் தன. ரோனுவைப்பற்றி ஆர்பென் கொண்ட கருத்துத் தவறுனது. அவள் இங்கிதம் தெரிந்தவள்; இணங்கிவரக் கூடியவள். மணவாழ்வை மகிழ்வுடன் அனுபவிக்க ஒரேவழி இதுதான்; அதாவது நமக்குப் பிடித்த பெண்ணை, நாம் வளைக் கும்விதம் வளையக்கூடிய காலத்திலேயே மணந்து, என்றும் நம்முடையவளாகவே இருக்குமாறு உருச்செய்துகொள்ள வேண்டும். ஆர்பென் பல விஷயங்களில் சரியான கருத் துடையவன்தான்; ஆனுல் ரோனுவைப்பற்றி அவன் கொண்ட கருத்துத் தவறுனது.

எட்லீ க்ஷவரம் செய்துகொண்டான்; கருஞ் சாம்பல்நிறக் கம்பிளி ஸூட்டும், புதிய வெள்ளைச் சொக்காயும், நீல சில்க் டையும் தேர்ந்தெடுத்துக் கவனமாக அணிந்துகொண்டான். 'பழைய பாணி உடை' என்று அவன் பல்விளித்தவாறு கூறிக் கொண்டான். பிறகு தனது வேகத்தையும் திறமையையும் மெச்சியவாறு ஒன்பது மணிக்கு முன்பே விடுதியிலிருந்து கிளம் பினுன். (ஆம், ஒரு காஃபி பருகக்கூட அவனுக்கு நேரம் இருந்

தது. ஏன்? அலுவலகத்துக்கு நடந்தேகூடப் போகமுடியும்.) விடுதிக் கதவை மூடி இரட்டைப் பூட்டிட்டான். நேற்றைய சொக்காய், கசங்கிய ஸ்டாக்கிங்ஸ், படுக்கைவிரிப்பு ஆகியவை தரையில் கேட்பாரற்றுக் கிடக்கும் நிலையில் அறையை விட்டுவிட்டு வெளியேறினன். இப்படி அவன் கேட்பாரற்றுப் போட்டுவிட்டுப்போகும் ஆடைகளை எடுத்துச் சுத்தம் செய்துவைக்கும் **மரிஜா** அவன் திரும்பிவரும்போது எல்லாவற்றையும் சீராக்கி வைத்திருப்பாள். அவள் சாதுவான எஸ்தோனியப்பெண். தனது பிரஜா உரிமையைப் பெறும் அளவுக்குக்கூட ஆங்கிலம் கற்றுக்கொள்ளாதவள். ஆனால் அவள் நம்பிக்கைக்கு உகந்தவள். ஆர்பென்தான் அவளைச் சிபாரிசு செய்தான். அவனுக்கு அவள் கணவனைத் தெரியுமாம்.

தெருவை அடைந்ததும், 'இன்றிரவு ஆர்பெனைக் கட்டாயம் பார்க்கவேண்டும்' என்று ஸ்காட் எட்லீ எண்ணிக் கொண்டான். காலைப்பொழுது குளிர்ச்சியும் புதுமைப் பொலிவும் கொண்டிருந்தது. நடைபாதையில் வரிசையாக நடப்பட்டிருந்த சிறிய மரங்கள் தளிர்விட்டிருந்தன. அவற்றின் கருமையான மெல்லிய கிளைகளில் பச்சை நிறம் பரவியிருந்தது. ஒரு காலிச் சாம்பல் டப்பா, இரண்டொரு பால் சீசாக்கள், தோல்வாரில் கட்டுண்டு இழுத்துக்கொண்டிருந்த நாய் ஒன்று, ஆகியவைகளுக்கு ஒதுங்கி அவன் நடந்தான். 'இன்று அவசியம் ஆர்பெனைப் பார்த்தே தீர வேண்டும். இம்மாதிரிக் காத்திருப்பதும் வியந்துகொண்டிருப்பதும் என்னைத் தளர்த்திக்கொண்டிருக்கின்றன. இன்றிரவு அவனை நிச்சயம் பார்ப்பேன்' என்று எட்லீ எண்ணிக்கொண்டான்.

பிறகு அவனுக்கு ரோனுவின் விருந்து நினைவுக்கு வந்தது. அதன் பிறகு, அவன் தந்தை அவனையும் ரோனுவையும் சாப்பாட்டுக்கு வருமாறு அவசியம் வற்புறுத்துவார். ரோனுவின் சகோதரியும், சகோதரியின் கணவருங்கூட அழைக்கப்படலாம். பிறகு அது குடும்பத்தினர் ஒன்றுகூடும் இரவாகி விடும். அப்பொழுது கடமைதான் தனது தரித்திரம் பிடித்த தலையைத் தூக்கிக்கொண்டு நிற்கும். திருமண விஷயத்தைப் பற்றித் தன் தந்தை சாதுரியமாகக் குறிப்பிடும் ஒவ்வொரு தடவையும் ரோனு சங்கடப்படாதவள்போல் காட்டிக் கொள்ள முயலுவாள். ஆயினும் அப்பொழுது அவள் கன்னங்கள் சிவந்துவிடும்; கண்கள் அறையின் மறுபக்கத்தில் எதையோ சுவையுடன் நோக்குவதுபோல் பார்க்கும். ஆனல் திருமணம் செய்துகொள்வது என்பது அத்தனை சுலபமா? அதிலும் இந்தச் சமயத்தில்? ஒருக்கால் வந்தனம் தெரிவிக்கும் தினத்தின்போதோ, அதற்குள்ளாகவோ வேண்டுமானல் பார்க்கலாம். ரோனு மற்றோர் ஆறுமாத காலம் காத்திருப்பாள். அவள் அவனுடையவள். அவனை நம்புகிறவள். ஒரு

நாள் எட்லீ அவளுக்கு எல்லாவற்றையும் விவரமாகக் கூறு வான். அப்பொழுது அவளுக்கு எல்லாம் தெளிவாகும், புரிந்துகொள்ளுவாள். ஆர்பென் ஏதேதோ சொல்லியிருந் தாலும், அவர்கள் மகிழ்ச்சியுடன் இணைந்து வாழமுடியும்.

ஸ்காட் மூலையிலிருந்த பத்திரிகைக் கடையில் சிறிது நின்று, காலைப் பத்திரிகையில் வெளியாகியிருந்த செய்தித் தலைப்புகளைப் படித்தான். ஒரு பத்திரிகை வாங்கும் தொல்லை யைக்கூட வைத்துக்கொள்ளவில்லை. ஆமாம், பழங்குப்பை களை மீண்டும் மீண்டும் கிளறிக்கொடுக்கிறார்கள். பிறகு அவன் ஷ்ராஃப்ட்ஸ் ஹோட்டலுக்குச் சென்று கல்லா மேஜைக்கு அருகிலே அமர்ந்து சூடான கடுங்காஃபி ஒரு கப் குடித்தான். கொதித்துக்கொண்டிருந்த காஃபிப் பாத்திரங்களுக்குப் பின்னால் தொங்கிய கண்ணாடியில் தன்னைப் பார்த்துக்கொண் டான்—நல்ல கேசம், நல்ல ஊட்டம், நல்ல உடை ஆகிய வற்றுடன் செழிப்பைப் பிரதிபலிக்கும் தனது உருவத்தைச் சிறிது நேரம் கண்டு ரசித்துவிட்டு, சட்டென்று முகத்தைக் கண்ணாடியிலிருந்து திருப்பி, குமாஸ்தாவிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு வெளியேறினான்.

அத்தியாயம் 2

மாலை நாலரை மணிக்கெல்லாம் ரோனா மெட்ஃபோர்டு ஆபீசை விட்டுப் புறப்பட்டுவிட்டாள். வரிசையாக மேஜைகள் மீதிருந்த பதினைந்து டைப்ரைட்டர்களையும் தாண்டி, அவள் அப்பெரிய அறையின் திறந்த கதவைக் கடப்பதைக் கண்ட புது டைப்பிஸ்ட், "அவள் எங்கே போகிறாள்?" என்று வின வினாள்.

தலைவி திருமதி ஹர்ஷி முகச்சுளிப்புடன் நிமிர்ந்து நோக் கினாள். கட்டிடக்கலை இலாகாவின் டைப் வேலைகள் யாவை யுமே செய்யும் ரோனாவுக்குப் பரிந்து பேசவேண்டுமென்று அவள் விரும்பினாள். அத்துடன் ரோனாவை அவளுக்கு மிகவும் பிடிக்கும்; வேலையில் சேர்ந்த மூன்று வாரங்களுக்குள்ளாகவே தம்மால்தான் பத்திரிகையே நடப்பதாக நினைக்கும் புதுப் பெண்களை அவளுக்குக் கட்டோடு பிடிக்காது. எனவே, "உனக்கும் ஒன்பது வருஷ சர்வீஸ் முடிந்து, இந்த இலா காவின் உதவி ஆசிரியைப் பதவி கிட்டி, உன் வேலையையும் நாலரை மணிக்குள் முடிக்கக் கற்றுக்கொண்டால், உன்னையும்

கூடத்தான் மிஸ்டர் பர்னெட்நீ விருந்தளிக்கும்போதெல்லாம் ஆபீஸ் முடியு முன்பே செல்ல அநுமதிப்பார்'' என்றாள்.

''ஒன்பது வருஷங்களா? அம்மாடீ! ஆனால் இன்னமும் அவளுக்குக் கல்யாணம்கூட ஆகவில்லையே'' என்று அரு வருப்பு மேலிட மொழிந்தாள் புது டைப்பிஸ்ட்.

ஃபைலிங் அலமாரிக்குள் தலையை நுழைத்திருந்த குமாரி கட்மென் நிமிர்ந்து நோக்கினாள். ''நாங்கள் எல்லாம் பல்லைக்காட்டும் முதல் ஆண்பிள்ளையையே மணந்துகொள்வ தில்லை'' என்ற அவள் திருமதி ஹார்ஷியைப் பார்த்துப் புன்னகை பூத்தாள். இப்படிக் குமாரி பர்ட்டை மட்டம் தட்டியதோடு பேச்சு முடிந்துவிடவில்லை.

குமாரி கட்மென் மேஜையண்டை வந்து, ''இன்று நான் யாரைத் தெருவிலே கண்டேன், தெரியுமா?'' என்று தாழ்ந்த குரலில் வினவினாள்.

திருமதி ஹார்ஷிக்குப் பதில் சொல்ல முடியவில்லை.

''பால் ஹேடன்! அவன் என்னைப் பார்க்கவில்லை... கடை ஜன்னலில் நிரம்பியிருந்த 'டை'களை ஆராய்வதில் முனைந் திருந்தான்.''

திருமதி ஹார்ஷிக்கு வேலையைக்கூட நிறுத்தும் அளவு ஆர்வம் மிகுந்தது. ''பால் ஹேடன்! நியூயார்க்கிலா?''

''ஆமாம்... நம் பத்திரிகை மீண்டும் அவனை அழைப்ப தாக வதந்தி.''

''வதந்திகள் ஆயிரமிருக்கும்; ஆனால் அவன் வருவானா?''

குமாரி கட்மென் தன் மென் தோள்களைக் குலுக்கினாள்.

''அவனை ராணுவ உடையில் பார்த்தேன். ஜெனர லாகவோ என்னவோ?''

''அவனுக்கு இங்கே சிரமமாக இருக்கும்; ரோனாவும் மற்ற விஷயங்களும் தெரிந்திருக்க நேருமே'' என்றாள் திருமதி ஹார்ஷி.

''அவன் யாவற்றையும் அன்றே மறந்துவிட்டான். முறிந்த காதலை நினைத்து மறுகும் பேர்வழியல்ல அவன். அதனால்தான் அவர்கள் காதல் முறிந்ததோ? எது எப்படி யாயினும், அந்த ஐரோப்பியப் பெண்கள்!''

''ஓ! கேட்பதையெல்லாம் நாம் நம்ப முடியாது. அதோடு, மற்றப் பெண்கள் அவனை விரும்பினால் அவன்தான் என்ன செய்வான்?'' என்று தலையை அசைத்த திருமதி ஹார்ஷி தன் பழுப்பான கேசச் சுருள் ஒன்றைச் சரி செய்தாள். அவ ளுடைய உப்பி வெளிறிய முகத்தில் வருத்தத்தின் ரேகைகள் தெளிந்தன. உண்மையிலேயே பால் ஹேடனும் ரோனாவும் தமது காதலை முறித்துக்கொண்டபோது அவள் மிகவும் விசனித்ததுண்டு. இதே ஆபீசில் ஆதி முதலே அவர்களுடைய காதல் வளர்ச்சியைக் கண்டவள் அவள். வாழ்வை ஒளிரச்

செய்வதில் காதலின் ஸ்பரிசத்திற்கு ஈடு இணை கிடையாது; அவர்கள் இருவருக்கும் இடையே சரியான பொருத்தம் இருந்தது. அது என்றுமே திருமதி ஹர்ஷியை ஏமாற்றத்தில் ஆழ்த்தாது என்றே தோற்றியது.

''அவனும் மற்ற ஆண்களைப் போலத்தான்!'' என்றாள் குமாரி கட்மென் தீனமாக; அவள் பார்வை தாழ்ந்து, உயர்தரக் கறுப்பு உடையிலிருந்த தன் தூய வடிவையும், ஜாக்கிரதையுடன் பேணிவரும் கைகளின் எழிலையும் கண்டு ரசித்தது. அக் கைகள் சுருக்கங்கள் ஏதுமின்றி அழகாக இருப்பதாகவே அவள் நினைத்தாள். உடனே திடீரென்று, ''வெள்ளை நிறத்தில் நானும் ஒரு உள்சட்டை தைக்கப் போகிறேன். ரோனா இன்று அணிந்து செல்லும் சட்டையை எங்கே வாங்கினாளோ? இந்த வசந்த காலத்துக்கு வெள்ளைதான் புதுமையானது!'' என்று அறிவித்தாள்.

''வெள்ளை யென்றால் சலவைச் செலவு கொள்ளைதான்'' என்றாள் திருமதி ஹர்ஷி. பிறகு திடீரென்று அவளுக்குத் தன் பேரனின் நினைவு வந்துவிட்டது. இன்றிரவு அவனை அவள் பார்த்துக்கொள்ள வேண்டும்; இப்படிப் பேசிப் பொழுதைக் கழிக்கலாமா? ''என் பிள்ளையும் மருமகளும் 'தெற்குப் பஸிபிக்' திரைப்படம் பார்க்கப் போகிறார்கள்,'' என்று கூறியவாறு அவள் கண்களைக் கடிகாரத்தின்மீது திருப்பினாள். தேர்ந்த அவள் விரல்கள் மின்சார டைப்ரைட்டரில் வேகமாக ஓடத் தொடங்கின.

''நானுங்கூட இன்றிரவு 'காக்டெயில் பார்ட்டி' நாடகத்துக்குப் போகவேண்டும். அது நன்றாயிருப்பதாகச் சொல்லுகிறார்கள்'' என்ற குமாரி கட்மெனும் திடீரென்று பொழுது ஓடுவதை உணர்ந்த மாதிரி டைப் செய்ய ஆரம்பித்தாள்.

'இரண்டும் கிழப் பசுக்கள்' என்று தனக்குள் நினைத்துக்கொண்டாள் புது டைப்பிஸ்ட். ஆனால் அவளுக்கு உள்ளூர ஒரு வேதனை. தான் காரியதரிசியாகப் போவதாய்ச் சிநேகிதிகளிடம் எல்லாம் ஜம்பம் அடித்தபோது நினைத்தபடியில்லாமல் இங்கே கடந்த மூன்று வாரங்களாகச் செய்துவரும் சுருக்கெழுத்து டைப்பிங் வேலைகளில் முதுகு ஒடிவதைக் கண்டாளே தவிர பெருமை தரும் கவர்ச்சி எதையும் அவள் காணவில்லை. முக்கியமற்ற, அபத்தமான கடிதங்களைத் தன்னிடம் தள்ளும் திருமதி ஹர்ஷியை அவள் உறுத்து நோக்கினாள்; அவளும் தன் மேஜையைக் கண்காணிப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தாள்.

ஆனால் அப்பொழுது திருமதி ஹர்ஷியோ, ஒன்பது ஆண்டுகளுக்கு முன் ஒருநாள் காலையில் கருங்கூந்தலும், அகன்ற பழுப்பு விழிகளும் கொண்ட ஒரு பெண்ணை இதே மேஜையில் அமர்த்தியதை நினைத்தாள். ''என் பெயர் ரோனா மெட்-

ஃபோர்டு!'' என்றுள் அப்பெண் பயத்துடன். அப்போது அவளுக்கு வயது பதினேழு; பள்ளிப் படிப்பு முடிந்ததும் நேராக வந்தாள். இந்நாட்களில் பத்திரிகைக்கு வேலை செய்ய வரும் காலேஜ் பட்டதாரிகளைவிட, வேலையைக் கற்றுக் கொள்வதில் அதிக சிரத்தை இருந்தது அவளுக்கு. திருமதி ஹார்ஷி புதிய டைப்பிஸ்ட்டைக் கூர்ந்து நோக்கினுள் (தன் குறைகளைப் பிறர் மேல் சுமத்தும் வேலை தெரியாத இந்த சோம்பேறிப் பெண் இங்கே நிலைக்க முடியாது. நாங்களெல்லாம் இடைஞ்சல்களுக்கிடையேயும் வேலை செய்யவில்லையா? பாவம், இதை ஏனோ காலேஜில் அவர்கள் சொல்லித் தரவில்லை!)

பிறகு, அவள் அடிக்கவேண்டிய கடைசிக் கடிதத்தின் மீது கவனத்தைத் திருப்பினுள்; இடையில் 'கார்பன் பேப்பர்' வைத்த இரு காகிதங்களை மெஷினில் நுழைத்து, ''ட்ரெண்ட்: வாழ்விற்கொரு பத்திரிகை'' என்ற தலைப்புக்குக் கீழே சரியாக நட்ட நடுவில் தேதியை டைப் செய்தாள். பத்திரிகையில் கடந்த பதினைந்து ஆண்டுகளாகப் பணியாற்றியும் திருமதி ஹார்ஷிக்கு ட்ரெண்ட் பத்திரிகையின் உண்மையான அர்த்தம் புரியவில்லை. அதைப் புரிந்துகொள்ளத்தான் அத்தனைபேர் பத்திரிகையை வாங்குகிறுர்களோ என்னவோ?

''அக்கறையில்லை; நான் ஊடாக நெய்த ஒரு வெள்ளை உட்சட்டையை வாங்கத்தான் போகிறேன்!'' என்றுள் குமாரி கட்மென், திடீரென்று செந்நிறம் பூசிய தலையைத் திருமதி ஹார்ஷியின் பக்கம் திருப்பியபடி.

சரியென்பதுபோல் தலையை ஆட்டிய திருமதி ஹார்ஷி, தடையான ஒரு வார்த்தையைக் குறித்து முகம் சுளித்த பின், மேலே டைப் செய்யலானுள்.

* * *

குமாரி கட்மெனின் பொறாமையைத் தூண்டிய வெள்ளை உட்சட்டைக்குரிய ரோனு மெட்ஃபோர்டு முற்றத்தில் விரைந்து செல்லும் ஆண்களிடையே வேறு வகையான வேட்கைகளைத் தூண்டியவாறே மின்சார லிஃப்டிலிருந்து வெளிப்பட்டாள். 'லிஃப்டு'க்காரன் ஜோ திங்களன்று ஜமெய்க்காவில் நடந்த குதிரைப் பந்தயத்தைப்பற்றி இருபத்து மூன்றுவது மாடியில் ஆரம்பித்த கதையை முடித்துக்கொண்டிருந்தான்; ''ஒன்றுக்கு ஐம்பது அடித்தேன்; வெற்றி எனக்குத்தான்!''

''அப்படியானுல் வீட்டு வாடகைப் பணம் கொடுத்தாய் என்று சொல்லு!'' என்று முறுவலிடையே ரோனு கேட்டாள்.

''பின்னே? இந்த வாரம் வாடகையைக் கட்டிவிட்டேன்'' என்று இளித்தான் அவன்..

''குட்நைட் ஜோ!'' என்ற ரோஜா, வாழ்க்கையில் தனக்கு அடுத்தடுத்து வரும் மேடுபள்ளங்களைப் பற்றி வழக்கமாகப் பாடும் பல்லவியை அவன் ஆரம்பிப்பதற்குள் லிஃப்டுகளின் வரிசையைத் தாண்டி வாசலை நோக்கி விரைந்தாள்.

''குட் நைட் மிஸ் மெட்ஃபோர்டு!'' என்ற ஜோவின் குரலில் ஏமாற்றம் எதிரொலித்தது. ஆனால் இன்னும் அரை மணிக்குள் மேல்மாடிகளிலிருந்துவரும் எத்தனையோ பேருடன் அவன் பேச்சு வியாபாரம் செய்வான். அவர்களையெல்லாம் ஜோவுக்கு நன்கு தெரியும். எல்லாரும் கடந்த இருபத்தோரு வருஷங்களாக இதே கட்டடத்தில்தான் வேலை செய்கிறார்கள் என்று சொல்ல முடியாது. குமாரி மெட்ஃபோர்டு கூடச் சீக்கிரமே விலகப் போவதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். நீலக் கண்களும், செம்மட்டை மயிரும் உடைய அந்த அழகிய வாலிபனை மணக்கப் போவதாகவும் கூறுகிறார்கள். ஆனால் இன்று அவன் அவளுக்காக வெளி வராந்தாவில் காத்திருக்கக் காணோம். அவளும் அவனை எதிர்பார்த்ததாகத் தெரியவில்லை. ஏனெனில் வழக்கமாக அவர்கள் சந்திக்கும் காஃபி ஹோட்டலைத் தாண்டி அவள் வேகமாக விரைந்து பெரிய வாசல் வழியே ஐந்தாவது அவென்யூவிற்குள் நுழைந்தாள்.

கிழக்கே, மாடிஸன் அவென்யூப் பக்கம் திரும்பி வலப்பக்கத்து நடைபாதை வழியே ரோஜா வேகமாக நடந்தது, அவள் இப்போது ஒரு பழகிய நியூயார்க் வாசியாகி விட்டாள் என்பதை நிரூபிப்பது போலிருந்தது. தெருவின் சிறு கடைகளிலே காட்சி தந்த தொப்பிகள், 'டை'கள், சட்டைகள், புத்தகங்கள் கண்ணாடிச் சாமான்கள் முதலியவற்றை அவள் இன்று திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. ஐந்தாவது தெருவைவிட நெருக்கம் குறைந்து, ஆனால் நேர்த்தியாக இருந்த மாடிஸன் தெருவில் மட்டும் அவள் சிறிது நேரம் பச்சைக் [redacted] காட்டி விளக்குக்காக நிற்க நேரிட்டது. அப்போது அந்தத் தெருவில் ஒளியும் நிழலும் கலந்த கட்டடங்களையும், மேலே விரிந்திருந்த வசந்தகால வானத்தையும், அதைத் தொட்டு நிற்கும் உயர்ந்த கட்டடங்களுக்கு ஏற்பச் சீராக மிதந்த வெண் பஞ்சு முகில்களையும் காண்கையில், ரோஜாவுக்குத் தனது நகரத்தின் மீது மீண்டும் ஒரு புது மோகம் பிறந்தது.

பிரதி மாலையிலும் மாடிஸன், ஐம்பத்து நான்காவது கீழ் அவென்யூ ஆகிய இடங்களில் நின்று அவள் நீலவானை நிமிர்ந்து நோக்குவதுண்டு. பிறகு அவள் பார்வை அங்குள்ள கட்டடங்கள் மீதும், டிராம்கள், பஸ்ஸுகள், திரளாக நகரும் கூட்டங்கள் முதலியவை மீதும் தாவும். அப்போது பிற்பகலில் அவளிடம் தோன்றிய எந்தவிதக் களைப்பும், உற்சாகமின்மையும் கூடப் பறந்து போய்விடும்; ஒரு புத்துணர்வு பிறக்கும். இன்று அவளுக்கிருந்த மனக் களிப்பிலும் உற்சாகத்திலும் பாட்டுக்

கூட வரும் போலிருந்தது. ஒரு கீதத்தை மெதுவாக முனகிக் கொண்டே, குதூகலத்துடன் அந்த அவென்யூவைத் தாண்டி ஓடும் தன் தோற்றத்தை நினைத்துக்கொண்ட அவள் தானே குறுநகை புரிந்து கொண்டாள். அவளருகே வெண்ணீல உடைகளில், ரோஸ் பவுடர் மிகுந்த முகத்தில் உணர்ச்சியே இல்லாது வந்துகொண்டிருந்த ஒரு மாது ரோஞவை ஒரு கணம் ஆர்வத்துடன் நோக்கினுள். இவர்களிருவரையுமே கவனித்துக் கொண்டிருந்த ஒருவன் தன் சிந்தனைகளைத் தானே விழுங்கிக் கொண்டிருந்தான். அதற்குள் கைகாட்டி விளக்கு பச்சையாக மாறிவிட்டது. பஸ்களும், டிராம்களும் வரிசையாக நிற்கையில் இம்மூவரும் தம் தம் காரியமே கருத்தாய் வேகமாக நடந்து மாடிஸன் தெருவைத் தாண்டினுர்கள்.

இரண்டு மூன்று கட்டடங்களைக் கடந்த ரோஞ சற்றே நின்று அங்கே எழுந்து கொண்டிருந்த புதிய கட்டடம் எந்த நிலையில் இருக்கிறதென்பதைக் கவனித்தாள். நகரத்தில் சில வருஷங்கள் வாழ்ந்து விட்ட மற்ற எல்லோரையும் போலவே ரோஞவுக்கும் இடிக்கப்படும் பழைய கட்டடங்களின் மீதும், அங்கே புதிதாக உயருபவைகளின் மீதும் அர்த்தமற்ற ஓர் அக்கறை பிறந்தது. சில மாதங்களுக்கு முன்புதான், இடிந்த இக் கட்டடத்தின் இடிபாடுகளைப் பெரிய 'ஃபுல்டோஸர்' கள் அப்புறப்படுத்திக் கொண்டிருந்தன. பிறகு அஸ்திவாரத்திற்காக ஆழமாகப் பூமியைக் குடைந்தனர். அதில் இரும்புத் தூண்களை நிற்க வைத்து, காங்கிரீட் வேலை ஆரம்பமாயிற்று. இப்போது அக்கட்டடம் வானத்தையே எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறது. அவ்வளவும் இரும்பாலும் சிமிட்டியாலும் சமைந்த வடிவம்; முன்பு 'ஃபுல்டோஸர்கள்' வேலை செய்த திறந்த வெளி இப்போது விசாலமான கீழ்த் தளமாக இருக்கிறது, அங்கே சிறு மின்ஒளிக்குக் கீழே தாறுமாருகக் கிடக்கும் சாமான்கள் எப்படித்தான் அந்தச் சிப்பந்திகளின் கண்களுக்கு மட்டும் ஒழுங்காகப் புலப்படுகின்றனவோ ! இன்னும் இரண்டொரு மாதங்களில் இவை யாவும் அறவே மறைந்துவிடும், அப்போது இக்கீழ்த்தளத்தில் விலையுயர்ந்த உடைகளோ, பீங்கான்களோ, நகை வகைகளோ அல்லது தொப்பிகளோ, அழகான கம்பள விரிப்பும், பளபளக்கும் கண்ணுடிகளும் கொண்ட வெளுத்த வண்ணப் பின்னணியில் காட்சியாக வைக்கப்பட்டிருக்கும். இவை எல்லாம் ஒரு புதுமையான மந்திரவாதந்தானென்றும் எண்ணினுள் ரோஞ. கரடு முரடான வாசற்படியண்டை நின்ற அவள் பூர்த்தியாகாத தூண் ஒன்றில் ஈயக் குழாயை வைத்து அதில் மின்சாரத் தொழிலாளி ஒருவன் வேலை செய்வதைக் கவனித்தாள். அப்போது கையில் குச்சியுடன் வந்த கிழவியைக் கண்டு நடுங்கிய ஸிந்தர்லாவைப் போல் அச்சமாக இருந்தது அவளுக்கு.

இனியும் ஒரு நிமிஷத்திற்கு மேல் அவள் தாமதிக்கக் கூடாது. ஆனாலும் அதற்குள் நன்றாகப் பார்த்துவிடவேண்டு மென்ற நினைவில், லாரிகளில் சாமான்களை வாரி அப்புறப் படுத்தும் ஆட்கள் கூட்டத்தைக் கடந்து, அங்கே காம்பௌண்டுச் சுவரிலிருந்த சதுரமான இடைவெளி வழியே உள்ளே நோக்கினாள். அவளுக்குப் பின்னால் நின்ற ஒரு சிறுவன் மூன்றடி உயரத்திற்குப் பெரிதாக இருந்த மற்றொரு துவாரத்தின் வழியே பார்த்துக் கொண்டிருந்தான். அவனைப் பிடித்து இழுத்த அவன் தாய், ''பில்லி, எத்தனை தடவைகள்தான் நீ பார்க்கப்போகிறாய்? ஆட்கள் எல்லாம் கூடப் போய்க் கொண்டிருக்கிறார்கள்'' என்றாள். அது உண்மைதான். ஆனால் இச் சிறுவன் மட்டும் அதை நம்ப விரும்பவில்லை. அல்லது இன்னும் அறைகளாகத் தடுக்கப்படாத அந்த விசாலமான கீழ்த் தளம் அவனைக் கவர்ந்து விட்டதோ என்னவோ? தவிர அங்கு 'ஓவர் டைம்' செய்யும் ஒரு சில ஆட்களே இருந்ததால் அத்தளத்தின் தனிமை அதிகமாகி, அது இன்னமும் பெரிதாகத் தோன்றியது. ''இதே மாதிரி நான் ஒரு வீடு கட்டப் போகிறேன்!'' என்ற அச்சிறுவன் அங்கிருந்து வீட்டை நோக்கிப் புறப்படத் தீர்மானித்தான். அவன் தாய் பின்னாலேயே ஓடினாள்.

தனக்கும் இளம்ப நேரமாகி விட்டதை உணர்ந்த ரோனா திரும்பினாள். அவளுக்கு வழி விடுவதற்காக எதிரில் வந்த உயரமான ஓர் இளைஞன் பக்கவாட்டில் ஒதுங்கிக்கொண்டான். ஆனால் அவள் நகரும்போதே அவளது முழங்கையைப் பிடித்து இழுத்தான். அதிர்ச்சியுடன் அவள் திரும்பியதும் கருத்த சிகையும், அடர்ந்த புருவங்களும் உள்ள ஒரு மனிதனைக் கண்டாள். அவன் முகம் நல்ல தோற்றத்திற்கும் மீறிய அழகுடன் பொலிந்தது. முகத்திலே முறுவல் தவழத் தன் பழுப்புக் கண்களில் ஒளிர்ந்த அதிசயத்தை அவிழ்த்து விட்டவாறு, ''ரோனா......ரோனா...!'' என்றான் அவன்.

அவனைக் கூர்ந்து நோக்கியபடி நின்ற அவள் மெல்லத் தன் இதழ்களைக் கூட்டினாள், பிறகு, ''பால் ஹேடன்!'' என்று கூவுகையில் அவள் குரல் அலைந்தது.

நடைபாதையை மறித்துக்கொண்டு அவர்கள் நின்றனர். பிறகு, தான் பற்றிய அவள் மென்கரத்தை அவன் நழுவ விட்டான். ''இதோ பார் ரோனா, பாதையைத் தடுக்கும் குற்றத்திற்காகக் கைதாகுமுன் நாம் இங்கிருந்து நகரவேண்டும்!'' என்றான் இளம் முறுவலுடன். அதற்கு ஒரு நிமிஷம் ஆயிற்று. ஆனால் அந்த ஒரு நிமிஷம் அதிர்ச்சியால் தாக்கப்பட்ட அவர்களிருவரையுமே பழைய நிலைக்குக் கொண்டு வர உதவியது. அதே நிமிஷம் அவர்களுடைய குரல்களின் இயற்கையான தன்மையையும் பறித்து, திடீரென்று அவர்களைச் சுய உணர்வுக்கும் கொணர்ந்தது.

''கட்டடத்தின் நல்ல வேலைப்பாட்டைக் கண்டு ரசிக்கும் இப்பெண் யாரென்று நான் வியந்தேன்'' என்று ஆரம்பித்த அவனை ரோனு விழிகளால் விழுங்கினாள். அவன் சிறிதளவும் மாறவில்லை. முறுவலிக்கும் சமயங்களில் தவிரத் தோற்றம் மட்டும் புதிதாகக் காண்கிறதோ என்னவோ? ஆனால் இந்தப் பெண் யாரென்று வியக்கக்கூடிய அவன் பழைய பால்தான்! இப்படி எண்ணங்களை நெளியவிட்ட ரோனு அவனுடைய சாதாரணப் பேச்சைக் கவனிக்கையில் தன்னைப்பற்றியே வெட்கிக் கொண்டாள். இம்மாதிரியான ஒரு சந்திப்பைப் பற்றி அவள் கற்பனை செய்து பார்த்ததுண்டு. அவள் அஞ்சியதும் உண்டு. இப்போது அது நிகழ்ந்துவிட்டது. இனியும் பயப்படுவதில் அர்த்தமில்லை. முதலில் என்னவோ அது எதிர்பாராத அதிசயமாகவே பட்டது. ஆனால் இப்போது.—'நாம் நண்பர்களாகவே இருப்போம்' என்ற தீர்மானத்துடன் அவர்கள் பிரிந்ததை ரோனு நினைத்துக் கொண்டாள். 'அப்போது நிகழ்ந்ததெல்லாம் பழங்கதை; இப்போது நாங்கள் வெறும் சிநேகிதர்கள்.'

அவள் அவனைப் பார்த்து அன்போடு முறுவலித்தவாறு ''உங்களைக் காண மிகவும் மகிழ்ச்சி, பால்! நீங்கள் நன்றாக, எடுப்பாகத்தான் இருக்கிறீர்கள்!'' என்றாள்.

''ஓ! இதுவா?'' என்று தன் ராணுவ உடைகளைப் பார்த்துக் கொண்டான் அவன். ''எனது பழைய உடைகள் ஒன்றுவது சரியாக இல்லை. புது ஸூட்டுகளுக்கோ அங்கங்கே அளவை மாற்ற வேண்டியிருக்கிறது. இன்னும் சில நாட்களில் நான் எடுப்புக் குறைந்துதான் போவேன்!''

''ராணுவத்திலிருந்து விடுபடப் போகிறீர்களா?' 'என்று திடீரென்று வினவினாள் ரோனு.

''அங்கேயே நிரந்தரமாக இருப்பேனென்று நீ எதிர்பார்க்கவில்லை, அல்லவா?''

''அது மாதிரித்தான் தோன்றிற்று'' என்றாள் அவள். அவன் பார்வை தெருவின் மறுபுறத்திலிருந்த சிறிய ஹோட்டலின் மீது விழுந்தது. ''வா .....போய் ஏதாவது சாப்பிடலாம்; அப்படியே நீ எனக்குச் சேதிகளையெல்லாம் கூறு. எனக்கு யாருடனும் தொடர்பே இல்லை.''

''மன்னிக்கவேண்டும், பால். நான் வருவதற்கில்லை. எனக்கு நேரமாகிவிட்டதால் உடனே சென்றாகவேண்டும்!''

''இன்னமும் அவளோடு தானே வசிக்கிறாய்—அவள் பெயரென்ன?''

''மோலி ஆண்டர்ஸைச் சொல்கிறீர்களா? இல்லை ... இல்லை அவள் கல்யாணம் செய்து கொண்டு விட்டாள்'' என்ற ரோனுவுக்கு ஒரு கணம் தவிப்பாக இருந்தது. ஆனால் பால் ஹேடன் அதைக் கவனித்ததாகத் தெரியவில்லை. ஆம்... அவன் அவளைப் பழைய சிநேகிதியாகத்தான் நினைக்கிறான்.

கடைசியாக அவள் அவனைப் பார்த்தபிறகு, அவனுக்கு வேறு பெண்கள் பலரின் தொடர்பு கிட்டியிருக்கலாம். அதனால் அவளைப் பற்றிய நினைவு பழங்கதையாகத் தேய்ந்து போயிருக்கக் கூடும். ஆனாலும் இந்த மாதிரியான எண்ணங்கள் ஏனோ அவளுக்குப் பிடிக்காததால் ரோனா தன்னை நினைத்தே நகைத்துக் கொண்டாள். அவள் தன் கைகளை நீட்டி, ''குட் பை, பால்! நான் வருகிறேன்'' என்றாள்.

அவன் அவளுடைய கையைப் பற்றிக் கொண்டே பேசினான்; ''கொஞ்சம் இரக்கம் காட்டு, ரோனா! இன்று முழுவதும் நான் நியூயார்க்கைச் சுற்றியே அலைந்திருக்கிறேன். நான் இன்று பேசியதெல்லாம் தையற்காரனுடனும், ஓரிரு குமாஸ்தாக்களுடனும், ஹோட்டல் சிப்பந்திகள், டாக்ஸி டிரைவர்கள் முதலியவர்களுடனுந்தான். உன்னால் இன்று சிறிது தாமதித்துச் செல்ல முடியாதா?'' அவன் அவளுடைய தளிர்க் கரங்களை நழுவ விட்டான். பிறகு, ''சரி... நானாவது உன் பின்னோடு வீடுவரைக்கும் வரலாமல்லவா?'' என்றான்.

''நிச்சயமாக. இங்கிருந்து ஒரு சில கட்டடங்களைத் தாண்டியதுமே என் வீடு இருக்கிறது.'' அவள் வேகமாக நடக்க ஆரம்பித்தாள். அவனும் பின் தொடர்கையில், ''என்னைக் காணச் சிலர் வர இருக்கிறார்கள்; அதனால்தான் சடுதியில் சென்று எல்லாம் தயார் செய்ய வேண்டியிருக்கிறது'' என்று விவரித்தாள் ரோனா. அப்போது அவனையும் வீட்டுக்கு அழைத்தால் என்ன என்று ஒரு கணம் யோசித்தாள் அவள். அங்கு வரப்போகிறவர்கள் எல்லோரையும் அநேகமாக இவருக்குத் தெரியும். ஆனால் மறு விநாடி அந்த யோசனையைக் கைவிட்ட அவள், ''பழைய நண்பர்கள் யாரையாவது சந்தித்தீர்களா?'' என்றாள்.

''இன்று காலையில்தான் நான் இங்கே வந்தேன்.''

''அப்படியானால் நியூயார்க்குக்கு வந்து இன்றுதான் முதல் நாளா? எத்தனை நாட்களுக்குப் பிறகு?''

''1945-க்குப் பிறகு இப்போதுதான் வந்திருக்கிறேன்'' என்று ஒப்புக்கொண்டான் அவன். ''அப்போதுகூட லீவில் வந்திருந்த நான் பெரும்பாலான நாட்களை கொலராடோவிலேயே கழித்துவிட்டேன். எனவே, உண்மையில் 1952-க்குப் பிறகு நான் இங்கே வரவில்லை யென்றே கொள்ளலாம். எனக்கே இந்த உணர்வை நம்ப முடியவில்லை. என்னுடைய பழைய விடுதியைக் காண்பதற்காக இன்று வாஷிங்டன் சதுக்கத்துக்குப் போயிருந்தேன். அங்கே எல்லாம் போய்விட்டது- தரைமட்டமான இடத்தில் 'புல்டோஸர்'கள்தாம் வேலை செய்துகொண்டிருந்தன. ஆமாம்...இப்போது நீ பார்த்துக் கொண்டிருந்தாயே, அங்கே முன்பு என்ன இருந்தது? நீ என்

லேக் கடந்து சென்றபோது அதைப்பற்றி நினைவுபடுத்திக் கொள்ளத்தான் முயன்று கொண்டிருந்தேன்!''

''அங்கே ஒரு பொருட் காட்சி இருந்தது—கலைப்பொருள் கள் முதலியன. உங்களுக்கு நினைவில்லை?''

''அது இப்போது எங்கே போய்விட்டது?''

''நகரத்தின் வெளிப் பக்கம். நகரமே இப்போது வெளி யேதான் விரிந்துகொண்டிருக்கிறது.''

''அதுதானே பார்த்தேன்? ஐம்பத்து ஒன்பதாவது அவென்யூவில் டிராம்களையே காணோம். பார்க் அவென்யூவில் வர்த்தக ஸ்தாபனங்களும், கிழக்கு நதியண்டை உயர்ந்த ஐக்ய நாடுகள் சபையின் கட்டடமும் தென்பட்டன, ரேடியோ நகரம் இன்னமும் அருகே வந்துவிட்டது!''

''அது உங்களுக்குப் பிடிக்கவில்லை, அல்லவா?''

''ஆமாம்...நான் வெளியே சென்றிருக்கையில், எல்லாம் அப்படியப்படியே நிலைத்திருக்கும் என்றல்லவா நினைத்துக் கொண்டு வந்திருக்கிறேன்? உண்மையில் இவை உன்னதமான உணர்வைத்தான் எழுப்புகின்றன. மக்கள் நிர்மாண வேலை களில் ஈடுபட்டிருப்பதைக் காண்பது நல்லது; அவர்கள் தன் னம்பிக்கையுடன் முன்னேறுவதைக் காண்பது இன்னமும் நல்லது.''

''நானும் அப்படித்தான் எண்ணி வருகிறேன். ஆனல் சிலர் நாடே, குண்டு, வெடிகள், ஒற்றர்கள் ஆகியவற்றின் பிடியில் சிக்கித் தவிப்பதாகச் சொல்லிக்கொண்டு திரிகிறார் களே! அவர்கள் கண்களைத் திறந்து தம்மைச் சுற்றிலும் ஒரு முறை பார்த்துக்கொண்டால், எப்படி இதையெல்லாம நம்ப முடியும் என்றே என்னல் கருத முடிவதில்லை. நாம் எல்லோ ருமே உள்ளூரக் கவலைகளில் ஆழ்ந்திருக்கலாம்: ஆனல் இம் மாதிரி கிலி பிடித்து அலைவதில்லை, இல்லையா?''

சென்டிரல் பார்க்கின் மிருகக் காட்சி சாலையிலிருந்து திரும்பும் குழந்தை வண்டிகளின் அணி வகுப்பையும், பலூன் களைப் பறக்கவிட்டுக் கொண்டு வரும் மூன்று சக்கர சைக்கிள் களையும் தாண்டி, அகலமான பார்க் அவென்யூ வழியே அவன் அவளைப் பத்திரமாக இட்டுச் சென்றான். பிறகு லெக்ஸிங்டன் பாதரச விளக்குகளை நோக்கி அமைதியான ஒரு குறுக்குச் சந்து வழியே அவர்கள் சென்றார்கள். ''நீ இப்போதெல்லாம் அடக்கமாகிவிட்டாய்!'' என்று முறுவலித்த அவன், அவளது முகத்தைக் கவனித்தான்.

''முழுவதும் அப்படி இல்லையென்று நினைக்கிறேன்'' என்ற அவளுடைய இதழ்களிலும் ஒரு குறுநகை அரும்பியது. ''என்ன இருந்தாலும் நீங்கள் கடைசியாகச் சந்தித்த நாட்களில் எனக்கு வயசு பதினெட்டுத்தானே? அது ஒன்றும் அடக்கமாக, தீவிரமாக இருக்கக்கூடிய வயசு இல்லையே!''

"உனக்குத் தெரிய வேண்டுமென்றால் சொல்கிறேன். நீ என்னவோ பழைய மாதிரியே தானிருக்கிறாய். நீ மட்டும் இந்தத் தொப்பியை அணியவில்லை என்றால் நான் உடனேயே உன்னைக் கண்டு கொண்டிருப்பேன். அதை நீ இப்போதெல்லாம் பின்பக்கம் சாய்த்து அணிவதில்லையா? இந்த மூட்டமெல்லாம் எதற்காக ரோனு?" அவன் பேச்சிலே ஒரு புகழ்ச்சி தொனித்தது. அது ஏனோ அவளுக்கு எதிர்பாராத விருப்பமாகவும் இருந்தது. இன்னமும் குறுநகை பூத்தபடியே அவனைப் பார்த்தாள்; ஆனால் ஒன்றும் சொல்லவில்லை. அவன் முன்பைவிட, ஏன் வயசுக்கு மீறியேகூட நன்கு முதிர்ந்து காணப்பட்டான். ஆனால் அதை அவள் அவனிடம் சொல்ல முடியவில்லை. அவன் எதையும் ஒரே பார்வையில் கவனித்துக் கொள்கிறான்—அழகான பெண்களை மட்டுமின்றி, வீதியில் செல்லும் ஒவ்வொருவரையும்கூட! அவனை எப்படி வர்ணிப்பதென்று அவளுக்குத் தெரியவில்லை. ஒருவேளை சாமர்த்தியக்காரன் என்றால் பொருத்தமாயிருக்கும். சாமர்த்தியக்காரரும் நம்பிக்கையானவருங்கூட. அவளுக்குச் சிரிப்பே வந்துவிட்டது. இவருடைய ராணுவ உடைதான் இப்படி நினைவை எழுப்புகிறதோ என்று அவள் எண்ணினாள். அந்த நாளில் பால் ஹேடன் அழகுக்குப் பேர்போனவன். ஆனால் நம்பத்தக்கவனு? புத்திசாலி, காலில் சக்கரமுள்ளவன் என்று அவனைப்பற்றி யாவரும் சொன்னார்கள். வாழ்க்கை அவனுக்கு எளிதாக வந்தது. ஒருவேளை இப்போதும் அப்படித்தானோ என்னவோ?

களிப்படைந்த அவனது பழுப்புக் கண்கள் அவளையே கவனித்துக் கொண்டிருந்தன. "உன் முடிவென்ன?" என்று கேட்டான்.

அவள் வதனம் சிறிதே சிவந்தது. "நீங்கள் மாறியிருக்கிறீர்கள்!" என்றாள் மொட்டையாக.

"அது நன்மைக்கா? தீமைக்கா?"

அவள் முகம் பின்னும் சிவக்கையில் வெளிப்படையாகவே சிரித்தாள். "அது எனக்குத் தெரியாது."

"இல்லை" என்றான் அவன். தொடர்ந்து ஒரு மௌனம். பிறகு திடீரென்று, "உனக்குக் கல்யாணமாகிவிட்டதாக 1945-இல் கேள்விப்பட்டேன்; யாரோ கடற்படை இளைஞனை மணந்து கொண்டாயாமே?" என்றான்.

"வெறும் வதந்தி, பால்! ஆனால் இப்போது நான் மணந்துகொள்ள இருக்கிறேன்" என்ற அவள், தனது இடது கை உறையைக் கழற்றினாள். தொடர்ந்து, "இதோ பாருங்கள்!" என்று கையைக் காட்டினாள்.

"அழகாக இருக்கிறது" என்றான் அவன் அவளுடைய கையிலிருந்து மோதிரத்தைப் பார்த்தவாறு. பிறகு அவளை

லெக்ஸிங்டனில் ஜன நெருக்கத்தினிடையே இட்டுச் செல்கையில், '' இது அவனுடையதுதானா?'' என்றான்.

'' பின்னே ?''

''அவன் நல்லவனாகத் தானிருக்க வேண்டும் !''

'' ஏன் ?''

''அவனைப் பற்றிப் பேசுகையிலேயே இப்படி உன் முகத்தில் ஒளிவீசச் செய்கிறானே!''

'' ஆமாம்...அவர் உன்னதமானவர்தாம் ! '' என்றாள் அவள் மெதுவாக.

பால் ஹேடனின் பார்வை எதிரேயிருந்த சலவைச் சாலையில் லயித்தது. '' எனக்கு மிகவும் சந்தோஷம், ரோனா!'' என்றான்.

எவ்வளவு சாதாரணமாக ஸ்காட்டின் கணையாழியைக் காட்டினாளோ அந்தமாதிரி, ''உங்கள் மகிழ்ச்சியைக் கேட்க எனக்கும் ஆறுதலாக இருக்கிறது, பால்'' என்றாள் ரோனா. அத்துடன் தங்களுடைய பழைய நாட்களையும் அவள் ஆழப் புதைத்துவிட்டாள்.

''உனது 'ட்ரெண்டு' வேலை எப்படி இருக்கிறது? நீதான் அநேகமாகக் கட்டடக் கலை இலாகாவை நடத்துவதாக அல்லவா கேள்விப்பட்டேன்? அது உனக்கு நல்லது.'' என்றான் பால் ஹேடன் திடீரென்று.

''அதுவும் வம்புப் பேச்சுதான். நான் மிஸ்டர் பர்னெட்டுக்கு வெறுமே உதவிக் கொண்டிருக்கிறேன். அவர் ஓர் அறையின் வடிவத்தைத் தீர்மானித்ததும், அதற்குள் என்னென்ன இருக்க வேண்டுமென்பதை நான் கற்பனை செய்கிறேன். எனக்கு இன்னமும் வேண்டிய தகுதி வரவில்லை, இல்லையா?''

''கட்டடக் கலை நிபுணியாகவா ?'' என்ற அவன் பதிலில் ஆச்சரியம் மிதந்தது. ''இன்னமும் அதே எண்ணத்தில் தானிருக்கிறாயா ? அப்படியானால் அதற்கான காலேஜ் பட்டம் பெற்றுவிட்டாயா ?''

''பெற்றுவிட்டேன்; இரவு வகுப்புக்களில் படித்தேன்.''

''அது அவ்வளவு எளிதாக இருந்திருக்க முடியாதே?''

''இல்லைதான், இருந்தாலும் வேறு வழி?''

அவள் முகத்தில் ஒரு குறுநகை அரும்பியது. பிறகு அவள் தன் முன்னே காணப்பட்ட அமைதியான பழுப்பு நிறக் கட்டடத்தின் முன்னே நின்றாள். அங்கிருந்து மேல் மாடியில் தெரிந்த பச்சை நிற ஜன்னல்களைக் காட்டி, ''அதுதான் என் அறை. இப்போது நான் அவசரமாகச் சென்று அசுர வேகத்தில் எல்லாம் தயார் செய்ய வேண்டும்'' என்றாள்.

''உன்னைத் தாமதப்படுத்தி விட்டதற்கு வருந்துகிறேன். ஆனால் மீண்டும் உன்னைச் சந்தித்ததில் எனக்கு அளவற்ற

திருப்தி.'' அவன் கையை நீட்டி அவளது மென் கரத்தை இறுகப் பற்றினான்.

''இப்படி எதிர்பாராத சந்திப்புக்களைத் தோற்றுவிப்பது இந் நகரத்து அதிசயங்களில் ஒன்று.''

''உண்மை... இப்போதுதான் நான் நிஜமாகவே நியூ யார்க்கில் இருப்பதை உணருகிறேன்.''

பழகிப்போன அத்தெருவை ரோனு உற்று நோக்கினாள். அது அவனுடைய கண்களுக்கு எப்படித் தோன்றுமோ அப்படியே இருப்பதை உணர்ந்தாள். இறுக்கமான சுவர்கள், வீடுகளுக்கு விரையும் புதுப்புது மனிதர்களால் நிரம்பி வழியும் இந்த நேரத்திலும் ஒரு தனிமை. உடனே தன்னையறியாமல் கேட்டாள்: ''பால், நீங்களும் ஏன் என்னுடைய 'பார்ட்டி'க்கு வரக் கூடாது? ஜான் டைஸன் கூட வருவார்.''

''ஜானா?'' அப்பெயரைக் கேட்கவே அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ''அவன் இப்போது எப்படியிருக்கிறான்?''

''என் சகோதரி பெக்கியை அவர் மணந்து கொண்டது உங்களுக்கு நினைவில்லையா? அவர் கொலம்பியா சர்வகலாசாலையில் சரித்திரம் போதிக்கிறார். ஆமாம்.. அவர்களுக்கு இரண்டு குழந்தைகள். உங்களுக்குத் தெரியாது?''

''கடிதங்கள் எழுதுவதில் நான் படு மோசம்!'' என்று அவன் ஞாபகப்படுத்தினான். அத்துடன் 'எனக்கு நினைவிலுள்ளவைகளையெல்லாம் அடியோடு அறுத்துவிட வேண்டுமென்றல்லவா நான் விரும்புகிறேன்?'' என்று தனக்குள் எண்ணமிட்டான்.

''வரப் போகும் மற்ற விருந்தாளிகள் பலரைக் கூட உங்களுக்குத் தெரிந்திருக்கும். அவர்கள் உங்களை மிகவும் விரும்பி வரவேற்பார்கள். வருகிறீர்களா? அடுத்து வரும் நாட்களில் அநேகருக்கு டெலிபோன் செய்வதையும் இது மிச்சப்படுத்தும்'' என்றாள் ரோனு.

பால் ஹேடன் தயங்கினான். அவன் பார்வை தனிமையான தெருவிலே படர்ந்தது. ''நல்ல ஏற்பாடு! அவர்களையெல்லாம் [redacted] நான் துடிக்கிறேன்'' என்றான்.

''ஆறு மணிக்கு அவர்களை வரச் சொல்லியிருக்கிறேன்'' என்ற அவள் தன் கடிகாரத்தைப் பார்த்தாள். பிறகு கையை ஆட்டி விட்டுச் செங்குத்தான மாடிப் படிகளின் மீது ஏறி, முன்பெல்லாம் போல் அதே ஒயிலுடன் ஓடினாள். பால் ஹேடனும் வந்தனம் செய்து விட்டுத் திரும்பினான். அவனுக்குப் பின்னால் மூன்றாவது அவென்யூவில் ஒரு மின்சார வண்டி 'கணகண'த்தது. தட்டுத் தடுமாறியபடி பனி உருளைகள் மீது சென்ற இரு குழந்தைகளையும், தோல் வாரை இழுத்துக்

கொண்டு நடைபாதைக்கு அப்பாலுள்ள தண்ணீர்க் குழாயை நோக்கி ஓட முயன்ற ஒரு நாயையும் ஒதுக்கிக் கொண்டு அவன் நடந்தான்.

லெக்ஸிங்டன் அவென்யூவில் முதலில் தென்பட்ட ஹோட்டலுக்குள் நுழைந்தான். வாசலில் பாதரச விளக்கு விளம்பரங்களுடன், உள்ளே நீண்டிருந்த அச்சிறிய விடுதியில், உணவு அறைகளும், வரவேற்பு அறைகளும் இருந்தன. சீதோஷ்ண சமனம் செய்யப்பட்ட அச் சீதள அறைகளில் சங்கீதமும் ஒலித்துக் கொண்டிருந்தது. முன்னதாகவே வந்து விட்ட வாடிக்கைக்காரர்கள் வாசற்படியண்டை குழுமியிருந்தனர். திறந்த 'டுவீட்' கோட்டுகளையும், யாரையும் அடித்து வீழ்த்தக் கூடிய அளவுக்கு வலுவான 'டை'களையும் எங்கும் கண்டான் பால். அங்கே சில பெண்டிரும் இருந்தார்கள். அழகிய கால்களும், கூர்மையான மார்பகங்களும் கொண்ட இளம் பெண் ஒருத்தி அவனைக் குறும்பாக உறுத்து நோக்கினாள். பத்திரிகைகளில் வரும் புது மோஸ்தர்களைக் காண நேரம் கிட்டியிராத அவன், ஓர் அழகிய மங்கையின் கேசம் இப்படி எலி கடித்த மாதிரி வெட்டப் பட்டிருக்கிறதே என்று பரிதாபப்பட்டான். தவிர ராணுவத்தினருக்கெல்லாம் அதிக மரியாதை இருக்காது எனவும் எண்ணிய அவன், விடுதியின் கோடியில் ஒரு மூலையிலே போய் அமர்ந்தான். அப்போது அவனது ராணுவ உடை அப்பெண்ணுக்கு அருவருப்பை உண்டாக்காதல்லவா?

குழுமியிருந்த மனிதர்களின் மீது அவன் கண்கள் லயித்தன. 'பசை'யுள்ள, ஊட்டமான, சுமுகம் நிறைந்த கூட்டமாகவே அவர்கள் தோன்றினார்கள். அவர்களுடைய வாதப் பிரதிவாதங்களும் நன்முறையிலேயே நடந்தன. உரத்த குரல்கள் கூடக் கடுமையின் முனைக்கு எட்ட வில்லை. இங்குள்ளவர்களில் பெரும்பாலோர் யுத்தத்தில் ஈடுபடத்தக்க வயதினர் தாம் என்பதை எந்த வேற்று மனிதனும் எளிதில் மறந்து விட முடியும். ராணுவத்தை விட்டு வெளியே வருகிறவர்கள் உண்மையிலேயே அதை உதறி விடுகிறார்கள் என்று நினைத்தான் அவன். ஒருவிதத்தில், இருபத்து நான்கு மணி நேரத்துக்கு முன்பு கூட அவன் பார்த்த பெர்லினையும், தமது சிறிய மூட்டை முடிச்சுக்களையும் புதுமையான அச்சத்தையும் சுமந்து வரும் புதிய யுத்த அகதிகளையும் நினைக்கையில் அவனுக்கு வேதனையாகத்தான் இருந்தது. மறுபுறத்தில் அவன் உற்சாகத்துடனேயே இருந்தான். முதல் தரச் சிப்பாய்களாக இருந்தவர்கள் இவ்வளவு சீக்கிரம் தமது ராணுவத் தன்மைகளை உதறி விட்டதைக் காண்பது நல்லதல்லவா? ஐந்து வருஷங்களுக்கு முன்பு சிலர் எதிர்பார்த்த பயங்கரமான எதிர்காலம் இப்

போது அர்த்தமற்றுப் போய் விட்டது. நாள் முழுவதும் வேலை செய்தபின் ஒரு தம்ளர் பீரைக் குடிப்பதும், அன்றைய அந்திநேரத்தின் ஓய்வுக்காகத் தோராயமான திட்டங்களைப் போடுவதுந்தான் இன்றையப் பிரச்னைகள்.

பாலின் கையிலிருந்த கிளாஸை நிரப்பிய பணியாள் அவனது ராணுவ ரிப்பன்களையும், பிறகு முகத்தையும் ஒரு முறை பார்த்து விட்டு, ''இப்போது தான் திரும்பினீர்களா?'' என்று வினவினான். கூடவே, ''புதுச் சூழ்நிலை சீக்கிரமே ஒத்துவிடும்'' என்ற அவன் பாலின் மார்பிலிருந்த ரிப்பன்களைப் பார்த்துத் தலையை ஆட்டினான், இறுதியில். ''உங்கள் வீட்டுக் கிழவி தன் மண உடைகளோடு சேர்த்து உங்கள் 'ஸிவில்' உடைகளையும் அட்டத்தில் போட்டு விட்டாள் போலிருக்கிறது'' என்றான். பிறகு கருத்துப் பருத்திருந்த தன் முகத்தைத் திருப்பி, கண்ணாடித் தம்ளர்களைப் பளிங்கு மாதிரி 'பாலிஷ்' செய்வதில் முனைந்தான். அவனுடைய வலுவான அகன்ற கைகள் பளிச்சிடும் கண்ணாடிக்கு முன்னே அவைகளைக் கோபுரம் மாதிரி அழகாகவும் அடுக்கின. பஞ்சம், பால்டிக்கில் காணாமற் போன விமானம், 'காக்டெயில் பார்ட்டி' என்ற புது நாடகம், முதலிய பல விஷயங்களைப் பற்றி அங்கே எழுந்த பேச்சுக்களிலும் அவன் இடையிடையே கலந்துகொண்டு, தன் தலையை தோளுக்கு மேலாகத் திருப்பி ஏதாவது ஒரு வார்த்தை பேசினான்.

அண்மையிலிருந்த அந்த அழகிய பெண் தன்னைப் போலவே கவர்ச்சியாகவும், குறும்பாகவும் எலி வெட்டிய மாதிரி கிராப்பும் கொண்ட ஓர் இளைஞனைச் சந்தித்தாள். (இந்த எலி வெட்டிய தலைதான் புது பாஷனோ என்னவோ என்று வியந்தான் பால்.) கிடங்கு போன்ற வீடுகளைப் பற்றிய அவர்களுடைய சூடான விவாதத்தின் மூலம் அவர்கள் தமது எடுப்பான தன்மையைச் சிறிதே இழந்து கொண்டிருந்தார்கள். கண்களைக் கிளாஸின் மீது பதித்திருந்த பால் ஹேடன், அது எப்பேர்ப்பட்ட வீடாக இருந்தாலும் நிச்சயம் அதன் பெயரைப் போல் குரூபமாக ஒன்றும் இருக்காது என்றே நினைத்தான். அல்லது அவனே கூட அதற்கு ஒரு நல்ல பெயரைச் சொல்லியிருக்கலாமோ? பால் தன் சிரிப்பை அடக்கிக் கொண்டான். இல்லையெனில், அந்த அழகான உணவைக் கேலி செய்வதாக ஹோட்டல்காரன் நினைத்துக் கொண்டு விடமாட்டானா? 'ஆமாம்... யாரும் பழைய நிலையுடன் சீக்கிரம் ஒன்றி விடுகிறார்கள்' என்று ஓடியது பாலின் நினைவு. அவன் மீண்டும் ஆசிரியராவதற்கான பாதையில் பாதி வழி வந்து விட்டான். ஆனாலும் அடைமொழிச் சொற்களைப் பெயர்ச் சொற்களாக உபயோகிப்பதுதான் அவனுக்குப் பிடிப்பதில்லை. சாப்பிட்டதற்குப் பணத்தைக் கொடுத்தபின் வசதியான அந்த

விடுதியை விட்டு, அந்த அழகு ராணியின் அலட்சியப் பார்வையைக் கவனிக்காமல் வெளியேறினான் பால் ஹேடன். அங்கே பரபரப்பான நடைபாதைக்கு வந்ததும் அவன் தயங்கினான். ரோனுவின் அழைப்பை ஏற்றுக் கொள்வதா, இல்லையா என்று இன்னமும் அவன் தீர்மானிக்கவில்லை. ஆனால் இன்னமும் மணி ஆறடிக்கவில்லையே!

பால் ஹேடன் தனக்குள் விவாதித்துக் கொண்டான்: இந்த அழைப்பு மூலம் ரோனு ஒன்றைத் தெளிவுபடுத்தி விட்டாள்; அவர்கள் வெறும் நண்பர்கள்; அதற்கு மேல் ஒன்றுமில்லை. அவள் அவனைச் சந்தித்தபோது வேறு உணர்வு ஏதாவது அவளிடம் எழுந்திருக்குமானால், ரோனு இந்த விருந்துக்கு அவனை அழைத்திருக்கமாட்டாள். நிச்சயம், இது பற்றி ஒரு முடிவுக்கு வருவது நல்லதுதான். அதுவும் அவன் மீண்டும் ''ட்ரெண்டி''ல் சேருவதானால் மிகமிக நன்மையாகவே இருக்கும். (இப்பத்திரிகையின் பிடிக்காத அப்பெயரை மாற்றினால் தேவலையென்று அவன் எண்ணினான்; முன்பு உயர்வாகத் தோன்றிய அது இப்போது அவனுக்குக் கேலியாகக் காட்சியளித்தது. புத்தகத்தின் ஓரங்களில் எப்போதோ எழுதிய ஒரு விமர்சனக் குறிப்பைப் பல வருஷங்களுக்குப் பிறகு அறிவு முதிர்ந்த நிலையில் காண்பது போல் அவனுக்குச் சிலிர்த்தது.) ஆனால் ஒரு வேளை அவன் அதே 'அம்சங்கள்' இலாகாவில் உதவி ஆசிரியராக இல்லாமல் போகக்கூடும். வேறு இலாகாவுக்கு மாற்றமும் ஏற்படலாம். ஆனால், ஏன் அவன் 'ட்ரெண்டு'க்குத் திரும்ப வேண்டுமென்று இப்படிக் காலம் கடந்து அழைப்பு வந்திருக்கிறது? கடந்த ஒரு மாதமாகவே அவன் வியந்து வருவது போல் இன்றும் அதிசயப்பட்டான். தன் பதவியில் முன்பு இருந்த ஆளுக்கு யுத்தம் முடியும் தருவாயில் என்ன நேர்ந்து விட்டது? 1941இல் அவன் வெளிச் சென்றபோது, அவன் திரும்பும் வரை அப்பதவி காத்திருக்கும் என்று கூறியிருந்தார்கள். 1945இல் 'ட்ரெண்டு' சிறிது உயர்ந்தபோது, அவன் தன் பதவியை ஏற்க விழையவில்லை. இது பற்றிச் சிறிது கடுமையாகவே அவர்கள் நினைவுபடுத்தினார்கள். இருந்தும், சில வாரங்களுக்கு முன்பு அவன் நியூயார்க்கில் ஒரு வேலைக்கு சிபாரிசு கோரி, தயக்கத்துடனேயே அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினான். பதில் பிரளயம் போல் வந்தது! (உடனே சீக்கிரமாக வீடு திரும்பு. உன் மீது எங்களுக்கு அன்பு உண்டு. யுத்த சேவை செய்த வருஷங்களுக்குச் சம்பளமும், அடுத்த வருஷம் க்ரோம்வெல் ரிடையர் ஆனதும் அம்ச இலாகா ஆசிரியர் பதவியும் கூடக் கிடைக்கும். வீடு திரும்பு; வீடு திரும்பு. மே மாதத்திற்குள் பழைய வேலையைத் தொடங்கு.) புகழ்ச்சி மட்டுமல்ல, நம்பிக்கையும் லாபமும் கூட.

அளித்தது இப்பதில். ஆனால் பாவம், இதுவரை அவன் இடத்தில் இருந்தவன் கதி என்ன ஆகும்? அவன் சீட்டைக் கிழிக்கப் போகிறார்களா? ஏன்? நிச்சயம் அவனுக்குப் பெண்டு பிள்ளைகள் இருக்கும். அவர்கள் இப்படி அதிர்ஷ்டக் கட்டைகளாக இருப்பது என்ன பரிதாபம்!

பாலுக்கு இது பிடிக்கவில்லை. நிச்சயம் இந்தப் பத்திரிகைச் சேவகம் சிரமமானதுதான்; இன்று வாழ்பவன் நாளை தோற்று விடுவான். ஆனால், 'ட்ரெண்டி'ல் மட்டும் அந்த விசித்திரமான பெயர் இருந்தும்கூட, நியாயஸ்தர்கள் இருக்கிறார்கள். அதன் அந்தஸ்து வலுவானது. 'ஆனால், எனக்காகக் குழந்தைகளும் மனைவியும் உடைய ஒருவனைத் தெருவில் நிறுத்துவது எனக்குப் பிடிக்காது' என்று எண்ணினான் பால்.

அவன் பார்வை பழுப்பு நிறக் கட்டடத்தின் மேல் மாடியிலிருந்த அந்தப் பச்சைப் பலகணிகளின் மீது விழுந்தது. [illegible] வேளை 'ட்ரெண்டி'ல் ஏற்படும் மாறுதல்கள் ரோனாவுக்குத் தெரிந்திருக்கும்; அவள் ஒரு வேளை அவற்றையெல்லாம் சொல்லக்கூடும்.

'இந்த ஒரு காரணத்திற்காகத்தானா நீ இப் படிகள் மீது ஏறுகிறாய்?' என்று அவன் தன்னையே திடீரென்று கேட்டுக் கொண்டான். ஆனால் அதற்கு விடையளிப்பதற்குள் அவன் ரோனாவின் வீட்டுக் கண்ணாடிக் கதவண்டை வந்துவிட்டான். அவன் விரல்கள், 'மெட்ஃபோர்டு' என்ற வெண்மையான பெயர்ப் பலகைக்குப் பக்கத்தில் இருந்த பித்தானை அமுக்கிக் கொண்டிருந்தன.

அத்தியாயம் 3

பால் ஹேடன் மறுபடியும் மணியை அழுத்தினான். பின்னால் நடைபாதையில், இன்னமும் பனி உருளைகளில் குழந்தைகள் உருண்டு கொண்டிருந்தன. மேலும் சில நாய்கள் தண்ணீர்க் குழாயை நோக்கித் தோல் வாரை இழுத்துக் கொண்டிருந்தன. வீடு திரும்பும் ஜனங்கள் எதிரே வருபவர்களை நிமிர்ந்து நோக்கவில்லை. மின்சார வண்டி ஒன்று மூன்றாவது அவென்யூவில் 'கணகண'த்துக் கொண்டிருந்தது.

மேல் மாடியிலிருந்து ரோனா வெளிக் கதவுத் தாழ்ப்பாளை விடுவிக்கையில் கதவு ஓலமிட்டது. பால் வெளிப்பக்கப் பிடி

யைத் தள்ளுவதில் தாமதம் செய்துவிட்டதால், தாழ்ப்பாள் மறுபடியும் போட்டுக் கொண்டு விட்டது. அவன் தலையை அசைத்தபடி முறுவலித்துக் கொண்டான். அவன் இன்னும் எவ்வளவோ கற்றுக்கொள்ள வேண்டும். மறுபடியும் அவன் மணியை அடித்தான். இத்தடவை அவன் உஷாராக இருந்து உள்ளே நுழைந்து விட்டான். மற்ற விடுதிகளைத் தாண்டிக் குறுகிய படிகளினூடே மேலே சென்ற அவன் முகம் இன்ன மும் முறுவலித்துக் கொண்டே இருந்தது. அப்போது ரோனு வின் இன்குரல் கேட்டது.

அவள் தன் விடுதியின் கதவண்டை காத்திருந்தாள்; அவன் அவள் பார்வையில் பட்டதும், ''ஓ!'' என்று கூறினள்; அவள் மனம் தடுமாறுவது போலிருந்தது.

''ரொம்பவும் முன்னமேயே வந்து விட்டேனு என்ன?'' என்ற அவன் திடுக்கிட்டுக் கடிகாரத்தைப் பார்த்தான். அப் போது ஆறடித்து ஒரு நிமிஷம்தான்; அவன் ஓர் அடி பின் வாங்கினுன்.

''இல்லே,'' என்று அவள் கதவைத் திறந்தபடி நகைத் தாள். ''ஐஸ் கட்டிகளை வெட்ட எனக்கு உதவி தேவையாக இருக்கிறது. உள்ளே வாருங்கள், பால்.''

''வருந்துகிறேன், ரோனு. ராணுவ வழக்கங்களை உதறித் தள்ள எனக்குச் சிறிது அவகாசம் கொடு'' என்ற அவன், தன் னைச் சபித்துக்கொண்டே முன்னுலிருந்த சிறிய கூடத்திற்குள் நுழைந்தான். நியூயார்க்கில் ஆறு மணிக்குப் 'பார்ட்டி' யென் ருல், அது ஆறரைக்குக் கிடைத்தாலே அதிருஷ்டம் என்பது அவனுக்கு மறந்து போய்விட்டது. தன் தொப்பியை வைப் பதற்கு இடம் தேடிச் சுற்றுமுற்றும் பார்த்தான். கடைசியில் அதைச் சிறிய டெலிபோன் மேஜை மீது போட்டான். ஆனல் அது அங்கே கிடப்பது மிகவும் எடுப்பாகத் தெரிந்ததால், மீண் டும் அதை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு திகைத்து நின்ருன்.

ரோனு அதை வாங்கிப் படுக்கை அறையினுள் கிடந்த ஒரு நாற்காலியில் நழுவவிட்டாள். ''இன்றிரவு இது உடை களை நிரப்பும் அறை'' என்று விவரித்தாள். தொடர்ந்து, ''உணவைப் பற்றித்தான் இன்று எனக்குள்ளே விவாதம். ஸாலமன்களுக்குப் பதிலாக 'ஷ்ரிம்ப்ஸ்' மீன்களையே சமைத் திருப்பது எனக்குப் பிடித்திருக்கிறது'' என்ற ரோனு அவனை சமையலறைக்கு இட்டுச் சென்ருள். ரோஜாப்பூப் போட்ட ஆர்கண்டி 'முன் துணியை'த் தனது அழகான கறுப்பு உடை யின் மீது இடுப்பைச் சுற்றிக் கட்டிக்கொண்டாள். பால் அவ ளைப் பார்த்தான்; பிறகு சுத்தமாக இருந்த அந்த வெள்ளைச்

சமையலறையையும், கவனத்துடன் அவள் எடுத்து வைக்கும் உணவுத் தட்டுக்களையும் நோக்கினான்.

''இவைகள் இன்று கெட்டியாகப் பிடித்துக்கொண்டு விட்டன. அதற்கென்று அவசரமாக எடுத்தால் துண்டுகளாக விண்டுபோய் விடும்'' என்ற அவள் சமையற் பாத்திரத்திலே வெந்திருந்த மீன்களை மெதுவாக எடுப்பதில் முனைந்தாள்.

அவள் பேசுகையில், பால் சுற்றிலும் பார்த்துக்கொண்டேயிருந்தான். முன்னாலேயே வந்துவிட்டதற்காக அவன் சிரமப்படுவதைவிட அவளுக்கும் தவிப்புத்தான். இருந்தாலும், அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாமென்று சொல்வதற்கு அவள் பெரிதும் முயன்றாள். ''ஐஸ் கட்டிகளை நீ இங்கேதான் வைத்திருக்கிறாயா?'' என்று வினவினான் பால். அவனுடைய குரல் அவளுடையதைப் போலவே சாதாரணமாக ஒலித்தது. நடக்கவிருக்கும் 'பார்ட்டி'யைக் குறித்த மகிழ்ச்சி அவளுடைய முகத்தில் செம்மையாக ஒளிர்ந்தது. அவன் அவளைப் பிரிந்து சென்ற பிறகு கண்ட எந்தப் பெண்ணையும் விட எழில் மிக்கவளாகத் தோன்றினாள் ரோனா. ஆனால் அதை அவன் அவளிடம் கூறவில்லை.

''ஆமாம்...ரிஃப்ரிஜிரேடரின் கதவு ஜாக்கிரதை, பால், அது திறப்பவர் மீதே துள்ளி அடிக்கும்'' என்று ரோனா தலை நிமிர்ந்தபோது, பால் தன்னைப் பார்த்து முறுவலித்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். அவள் புருவங்கள் உயர்ந்தன.

''இந்த முன் துணியைத்தான் இப்போதெல்லாம் நன்றாக உடையணிந்து கொள்பவர்கள் உபயோகிக்கிறார்களா?'' என்று விவரித்தான் பால்.

அவள் ஒரு புன்னகையை உதிர்த்துவிட்டு, ஐஸ் கட்டிகளை வைப்பதற்கு ஒரு பாத்திரத்தை அவனிடம் கொடுத்தாள். ''முன் அறையில் தட்டுக்கள் இருக்கின்றன; நேராகப் போனால் தெரியும்'' என்றாள் அவள்.

அவன் அச்சிறிய சமையலறைக்குத் திரும்பியபோது, அவள் தயாரித்து வைத்திருந்த மீன் உணவைக் கவனித்துக் கொண்டிருந்தாள். ''கொஞ்சம் சாப்பிட்டுப் பார்த்து நன்றாக இருக்கிறதா என்று சொல்கிறீர்களா பால்? எல்லாவற்றையும் ருசி பார்த்துப் பார்த்து எனக்கு ஒன்றுமே தெரியவில்லை.''

அவள் ஆவலுடன் அவனைக் கவனித்தாள். மிகவும் நன்றாயிருக்கிறதென்று அவன் உறுதி கூறினான். ''இந்த எலுமிச்சை மார்டினியையும் பாருங்கள்'' என்றாள் அவள் மீண்டும்.

''இன்னும் ஏதாவது நான் செய்யட்டுமா?''

''பானங்கள் உள்ள தட்டு சரியாக இருக்கிறதா?''

"ஓ! எல்லாம் கச்சிதமாகவே இருக்கிறது."

"அப்படியானல் ஒரு கிளாஸ் எடுத்துக் குடித்துக் கொண்டே, நீங்கள் இதுவரை என்ன செய்து கொண்டிருந்தீர்கள் என்று சொல்லக் கூடாதா?"

"ஓ! நான் இப்படியே பல சீதோஷ்ணங்களை உணர்ந்து கொண்டு சுற்றிக் கொண்டிருந்தேன்" என்று அவன் நகைத்தான். "கைகாட்டி விளக்குகளைப் பற்றி எனக்கு மறந்தே போய்விட்டது. 'லிஃப்டு' களின் சப்தம் எங்கேயோ கேட்கையிலேயே நான் இன்னமும் குதிக்கிறேன்."

"லண்டனை விட்டுச் சென்ற பிறகு என்ன செய்தீர்கள்?" என்று கேட்டேன்.

"ஒரு வேலையிலிருந்து மற்றொன்றுக்குத் தாவிக்கொண்டிருந்தேன்" என்றான் அவன் தீவிரமற்ற குரலில்.

"சரிதான்......ஆனல் இவைகளை யெல்லாம் நீங்கள் எங்கே சேர்த்தீர்கள்?" என்ற ரோனு அவனுடைய ரிப்பன்களைச் சுட்டிக் காட்டினுள்.

"இதற்கென்ன, ஒவ்வொரு மாசத்திற்கு ஒன்று கிடைக்கும்!"

அவள் சிரித்தாள். "நீங்கள் ஸ்காட்டைப் போலவே தானிருக்கிறீர்கள். அவரும் யுத்தத்தைப் பற்றிப் பேசவே மாட்டார். அவர்கூட இத்தாலியில் இருந்திருக்கிருர், தெரியுமா?"

"பேசுவதற்கு யுத்தத்தைவிட இனிய விஷயங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அது சரி, ரோனு, நமது 'ட்ரெண்டு' இப்போது எப்படியிருக்கிறது? உன் அலங்கார விஷயங்களைத் தவிர்த்துக் கேட்கிறேன்..." என்றான் பால்.

"இந்த மாதம் வெர்ஜீனிய மோஸ்தர். மார்ச் மாதம் டெக்ஸாஸ் தினுசு. மே மாதத்தில் போஸ்டன், ஹவத் யாத் பாணியில் இருக்கும்" என்ற அவள் தன் கைக் குத்தியிலிருந்து கழன்று விழுந்த எலுமிச்சைத் தோலைக் கண்டு வியந்தாள். பிறகு, "எனக்கு உலர்ந்த மார்டினிதான் பிடிக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்" என்றாள்.

"இன்னமும் அது உனக்கு மருந்து மாதிரித்தானு?"

"பின்னே? இன்னமும் நான் இளம் கிராமப் பெண்ணின் உள்ளம் படைத்தவள்தான். ஆனல் நீங்கள் ஏன் 'ட்ரெண்டை'ப் பற்றி இவ்வளவு தீவிரமாக விசாரிக்கிறீர்கள்? திரும்பியும் அங்கே வேலைக்கு வரப்போவது நிஜந்தானு? அப்படி வதந்திகள் இருக்கின்றன—." திடீரென்று அவளிடமும் அதே மாதிரியான தீவிரம் காணப்பட்டது. அத்துடன் சிறிது கலக்கமும் தோன்றியது.

" உனக்கு அது பிடிக்கவில்லையா ?" அவன் குரல் கடுமையாகவே ஒலித்தது.

" அப்படியில்லை, பால்" என்று அவசரமாகக் குறுக்கிட்ட அவள் அவனை நோக்கினாள். "நாம் நமது பழைய நாட்களைப் பற்றி மீண்டும் அசை போடக்கூடாது. நீங்கள் விரும்பிய விடுதலை உங்களுக்குக் கிடைத்து விட்டது. நானும் என் வாழ்வை ஒருவிதமாக முடிவு செய்து விட்டேன். இப்போது எனக்கு எல்லையற்ற சந்தோஷம். எல்லாம் நன்றாக முடிந்து விட்டது, இல்லையா ?"

"ஆமாம்...எல்லாம் நன்றாகவே இருக்கின்றன" என்ற அவன் ஜன்னலுக்கு வெளியே திருஷ்டியைத் திருப்பினான். அங்கே தெரிந்த காட்சியைக் கவனித்தான். கூரைகள், புகைப் போக்கிகள், தண்ணீர் டாங்குகள், நேராகக் கீழே, புல்வெளிச் சதுக்கங்கள், உறுதியான மரங்கள், இவைகளையெல்லாம் சிறு தோட்டமாகத் தன்னுள் அடக்கிக்கொள்ளும் செங்கற் சுவர்கள். " நீ ஏன் இவ்வளவு கலக்கத்துடன் அங்கே பார்க்கிறாய் ?" என்றான் அவன் திடீரென்று.

" நீங்கள் ராணுவத்திலிருந்தபோது உங்கள் வேலையைச் செய்துவந்த பிளாக்வொர்த்தைப் பற்றி எண்ணிக்கொண்டிருந்தேன்."

" அவரை உனக்குப் பிடிக்குமா ?"

" ஆமாம் ; அவரை எல்லோருக்குமே பிடிக்கும். அதனால் தான் இது பரிதாபகரமான விஷயமாகிவிட்டது. எல்லாம் என் தவறுதான்—நிச்சயமாக என் தவறுதான். என்னால்தான் அவருக்கு வேலை போயிற்று; நீங்கள் 'ட்ரெண்ட்' பத்திரிகையில் திரும்பிச் சேர்ந்தாலும் சேராவிட்டாலும், அவருக்கு வேலை என்னவோ நிச்சயம் போய்விடத்தான் போகிறது !"

பால் அதிர்ந்து போனான். " உன் தவறு...?"

" பால் !" அவள் நிச்சயமற்ற மனத்துடன் அவனை நோக்கினாள். " இதைப் பற்றி எல்லோரிடமும் நான் பேச முடியாது. ஸ்காட், பெக்கி, ஜான் இவர்களிடம் மட்டும் தான் சொன்னேன். பால், விஷயத்தை ஆரம்பிப்பதே கஷ்டமாக இருக்கிறது. நாங்கள் எல்லாம் பித்துக்குளிகள் என்று நீங்கள் நினைத்தாலும் அதிசயமில்லை. இருந்தாலும்..."

வெளியே மணி ஒலித்தது.

" ஸ்காட் வந்துவிட்டார் ! பான வகைகளைத் தயார் செய்து வைக்க அவர் சற்று முன்னதாகவே வர இருந்தார்" என்று மொழிந்த அவள், கையிலிருந்த பாத்திரத்தைப் பாலிடம் கொடுத்து விரைந்தோடி, கீழ்வாசற் கதவின் தாழ்ப்பாளை விடுவிக்கும் பித்தானை அழுத்தினாள்.

'' அந்த பிளாக்வொர்த்துக்கு என்ன நேர்ந்தது?'' என்று பால் வினவினன்.

'' அந்தக் கதையை நீங்கள் நமது மேலதிகாரியைப் பார்த்த பிறகு சொல்கிறேன். ஆனல் அவரே அநேகமாக எல்லாவற்றையும் சொல்லிவிடுவார் என்று எதிர்பார்க்கிறேன் ''

'' எல்லாம் மர்மமாய் இருக்கிறது.''

பாலின் மனத்தை ஊடுருவுபவள் மாதிரி ரோனு அவனைப் பார்த்தாள். '' அப்படியேதான் '' என்று பதிலும் அளித்தாள். பிறகு அவனை மெதுவாக வெளி அறைக்குத் தள்ளிச் சென்றபின், தனது விடுதியின் கதவைத் திறக்க ஓடினுள்.

அப்போது வந்தது ஸ்காட் அன்று. பெக்கியும், ஜானும் தான். படிகளேறியதால் மூச்சிழைய உள்ளே நுழைந்தார்கள்.

'' குழந்தையைப் பார்த்துக் கொள்பவன் ஏழரை மணிக்கெல்லாம் போகவேண்டுமென்ருன்; அதனுல் நாங்களும் சீக்கிரமே வந்துவிட்டோம்'' என்று விளக்கியவாறே நடு அறைக்கு வந்தாள் பெக்கி. பிறகு அவள் நின்று பால் ஹேடனை வெறித்து நோக்கினுள். பெக்கி ரோனுவைவிடச் சிறிது உயரமாக இருந்தாள். ரோனுவின் கருங் கூந்தலையும் கண்களையும்விட, இவளுடையவை வெளிறி இருந்தன. ஆனல் அதே எடுப்பான நாசி, அதே அகன்ற புருவம், வளைந்த முகவாய், இதமான புன்னகை! தன் அதிசயத்தை நன்கு மறைத்துக் கொண்டு நீட்டிய கைகளுடன் முகம் மலர அவள் இப்போது முன்னே வந்து கொண்டிருந்தாள். அவளுக்கு எப்போதுமே பாலைப் பிடிக்கும். பால் மூலமாகத்தானே அவள் ஜானையே தெரிந்து கொண்டாள்?

'' வீடு திரும்பிய முதல் நாளன்று நான் தெருவில் அலைந்து கொண்டிருந்ததை ரோனு கண்டாள்; பச்சாத்தாபமும் கொண்டாள்'' என்று சீக்கிரமே நிலைமையை விளக்கினன் பால் ஹேடன். ஆனல் பெக்கிக்கும் சரி, ஜானுக்கும் சரி, இந்த விளக்கமெல்லாம் தேவையில்லை. ரோனு செய்யும் எதுவும் அவர்களுக்கு வியப்பளிப்பதில்லை.

ஜான் மெதுவாக முன்னே வந்தான். முன்னைவிட அவன் இளைத்திருந்தான். அவனுடைய அழகான சிகை, சுருள்களை இழந்து சிறிது உதிர்ந்தும் போயிருந்தது. கவர்ச்சியான அவனது நீண்ட முகத்தில் மட்டும் வெட்கம் கலந்த குறுநகை தவழ்ந்தது. பெக்கியின் உடையைப் புகழ்ந்த ரோனு, ''1946-இல் வாங்கிய அந்தப் பழைய கவுனைத்தான் இப்படி மாற்றியிருக்கிருய் என்று என்னுல் நம்ப முடியவே இல்லை'' என்ருள். அதே சமயம் ஆண்கள் இருவரும் ஒருவரையொருவர்

கவனமாக ஆராய்ந்தபடி கை குலுக்கினார்கள். அவர்களிருவரும் பழைய காலேஜ் நண்பர்கள்; பிறகு அவர்கள் நியூயார்க்கில் மீண்டும் சந்தித்தனர். அப்பொழுதும் அவர்கள் நண்பர்களாகவே இருந்தார்கள். இறுதியில் ஓரிரு கடிதங்களைத் தவிர யுத்த காலத்தில் இருவருக்குமே தொடர்பு விட்டுப் போய் விட்டது.

"வாழ்த்துக்கள்!" என்ற பால், பெக்கியின் பக்கம் திரும்பினான். "குழந்தைகள்கூட இருப்பதாகக் கேள்விப்பட்டேன்."

"ஆமாம்" என்ற ஜான், ரோனாவைப் பார்த்தான். அவளுடைய ஒரே ஆண் உறவினனான அவன் ரோனாவின் நல்வாழ்க்கை பற்றிய தன் பொறுப்பை உணர்ந்தான். யாராவது திரும்பி வந்து அவளுடைய சந்தோஷத்தைக் குலைப்பதை அவன் பொறுக்க முடியாது—பால் ஹேடனைப்போல் அவன் ஒரு காலத்தில் மிகவும் விரும்பிய நபராக இருந்தாலும் சரி!

"நீங்கள் சந்தோஷமாக வாழ்வில் நிலைத்துவிட்டதைக் காண மகிழ்ச்சி" என்ற பால் நேராக ஜானைப் பார்த்தான். அப்பார்வையில் புலப்பட்ட வெகுளித்தன்மையை ஒப்புக்கொண்ட ஜான் சகஜமாக அமர்ந்து கொண்டான், அவனது புன்னகை எளிதாக மலர்ந்தது. ஜெர்மனியைப் பற்றிச் சில கேள்விகள் கேட்க ஆரம்பித்தான் அவன். தானுங்கூட கடற்படையில் பஸிபிக் கடலிலே இருந்த நாட்களைப் பற்றிச் சிறிது பேசினான். பிறகு கொலம்பியா சர்வகலாசாலையில் தனது நிகழ்கால வேலைபற்றியும் கூறினான்.

கதவு மணி அடிக்கத்தொடங்கியதும் வருபவர்களை எதிர்கொண்டழைக்க ரோனா ஓடினாள். அப்பொழுது, "நீங்கள் இருவரும் 'பார்ட்டி' என்றால் மிகவும் உற்சாகமாக இருக்கிறீர்கள்" என்று கூறினாள் பெக்கி. "பால் நாங்கள் நதிப் பக்கம் 103-வது தெருவில் வசிக்கிறோம். அப்பக்கம் வரும்போது எங்களைக் காண மறக்காதே. பிறகு நீயும் ஜானும் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு தீவிரமாக இருக்கலாம்; என்னை அனுமதித்தால் நானுங் கூடச் சேர்ந்து கொள்கிறேன். வெள்ளிக்கிழமைகள் நல்லது—சனிக்கிழமை காலையில் இவ்வருஷம் ஜானுக்கு வகுப்புகள் கிடையாது. எப்போதுமே எங்களைக் காணச் சில மாணவர்கள் வந்து கொண்டிருப்பார்கள்—ஏகப்பட்ட விவாதங்கள் நடக்கும்; பீரும், ஸாண்டுவிச்சும் நிறையக் காலியாகும். அது சரி, ஸ்காட்டை ஏன் இன்னும் காணோம்?" பெக்கியின் இந்தக் கடைசிக் கேள்விக்குக் காரணம், அவள் பார்வை எதிரே திறந்த கதவண்டை விழுந்ததுதான். அங்கே அவர்கள் எதிர்பார்த்த ஸ்காட்டுக்குப் பதில் யாரோ இரு ஆண்களும், மூன்று பெண்களும் வந்துகொண்டிருந்தார்கள்.

ரோஜ ஏதோ ஜாடை காட்டியதும் ஜான் பானங்களைக் கலக்க ஆரம்பித்தான். பெக்கி பான தம்ளர்களையும் பளிச் சென்று ஒரு குறுநகையையும் விநியோகித்தாள். பால் கைகளைக் குலுக்கிக் கொண்டிருந்தான். மேலும் சிலர் வந்து கொண்டிருந்தார்கள். சிலரை அவனுக்கு நன்ருக நினைவிருந்தது; சிலரைப் பற்றிய நினைவு இலேசாக வந்தாலும், யாரென்று நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனல் மெள்ள மெள்ளச் சிந்திக்கையில், அடையாளங்கள் கண்டுகொள்ளுவது எளிதாகி வந்தது. முக்கியமாகப் பெண்களை அடையாளம் கண்டு கொள்ளுவது சிரமமாக இருந்ததை நினைக்கையில் அவனுக்கு அதிசயமாக இருந்தது; அதிலும் இளம் பெண்கள், லெக்ஸிங்டன் கிளப்பில் அவன் பார்த்த அழகி மாதிரி கர்வம் பிடித்த முகத் தோற்றத்தைப் பிரதிபலித்தார்கள். பல்வேறு நண்பர் குழுக்களிடையே தான் சிக்கித்தவிப்பதை உணர்ந்தான் பால். ஒவ்வொருவருடனும் பலவிதமான வார்த்தைகள் பரிவர்த்தனையாயின: 'ஹலோ...!' ...'இதோ பார், யாரென்று?'... 'ஓ! நமது ராணுவ நிபுணர், பால், எப்படியிருக்கிருய்?'—இம் மாதிரிப் பேச்சுக்கள். அதற்குப் பிறகு ஏதோ ஒரேஒரு வாரம் மட்டும் அவன் நியூயார்க்குக்கு வெளியே சென்று விட்டுத் திரும்பியிருக்கிற மாதிரி உரையாடல் நடக்கும். ஏதோ காலை உணவுக்கு உத்தரவு கொடுக்கும் அளவு எளிய தோரணையில் தான் அவர்கள் பால் ஹேடன் திரும்பி வந்ததைப் பற்றியும் பேசினுர்கள். ஆனலும் அவர்களது குரல்களில் இதம் இருந்தது. அவர்களுடைய கைக்குலுக்கல்களில் 'டானிக்' மாதிரி ஒரு வரவேற்பும் இருந்தது. அவன் ஒய்வுடன் சாய்ந்து கொண்டு களிப்படைந்தான்.

சற்றைக்கெல்லாம் அறையின் ஒரு மூலையிலே முன்பின் தெரியாத ஒரு கூட்டத்திற்கு மத்தியிலே தானிருப்பதை உணர்ந்தான் பால். அவன் இருந்த பக்கமாக அழகான இரு பெண்களை ரோஜ நகர்த்தியதைக் கண்ட அவனுக்கு ஓரளவுக்கு மட்டுமே குதூகலமாக இருந்தது. ரோஜவும்கூட இப்போது மகிழ்ச்சியே உருவாகத் தென்பட்டாள். ஸ்காட் வந்து விட்டானே? அவன் யார் என்று வியந்தான் பால்......அதோ பழுப்பு நிற 'ஸூட்'டில் இருக்கும் அழகஜ, அல்லது நீல நிற உடையில் நட்புப் பார்வையும், மிதமான முறுவலும் கொண்டு விளங்குகிருனே, அவஜ? அவன் ஸ்காட்டாக இருக்கலாம். ரோஜ அவன் முகத்தை நோக்கியபடி சிரித்துக்கொண்டிருந்தாள். அவன்தான் ஸ்காட்டாக இருக்கும். பால் அவனை ஆராய்ந்தான். பார்த்த உடனேயே நம்பிக்கை ஊட்டும் தோற்றம், அழகான வாய், கவர்ச்சியான ஜோடிக் கண்கள். ஆம்.....அவன் ரோஜவுக்கு ஏற்றவன்தான்.

பிறகு மெலிந்த, ஆர்வமுள்ள, செம்பட்டைத் தலைப் பெண்மணி ஒருத்தி அவனைப் பிடித்துச் சூழ்ந்திருந்த கூட்டத்திற்கு இழுத்தாள். ஜெர்மனியை ஏன் பிரித்து வைத்திருக்கிறார்கள் என்று அவள் அறிய விரும்பினாள். மற்றொரு பெண்—முன்னவளைவிட இளமையும் அழகும் பெற்றவள்—சோகமாக அவனது ராணுவ உடையை நோக்கிவிட்டுத் தான் சமாதானத்தையே விரும்புபவள் என்று அறிவித்தாள்.

அவளுக்குப் பின்னால இருந்த வட்டமான முகத்தை உடைய தடித்த மனிதன் ஒருவன், அமெரிக்கா இப்போது புரட்சிக்காரர்கள், யுத்த வெறியர்கள் போன்றோர்களின் கைகளில் இருக்கிறது; அதனால்தான் எல்லா இன்னல்களும் என்று பனிச்சென்ற முறுவலுடன் பாலிடம் கூறினான். அந்த செம்பட்டைக் கூந்தழலகி, விடாது தொடர்ந்து, ''நீங்கள் மெட்ரோபோலிடனில் உள்ள ஹாப்ஸ்பர்க் தொகுப்புகளைப் பார்க்கவேண்டும்; அவை இவ்வுலகத்திற்கு அப்பாற்பட்டவை'' என்றாள். அடக்கமாக இருந்த செந்தலைக்காரி ஒருத்தி, (செம்பட்டைத் தலைக்கும் செந்தலைக்கும் வேறுபாடு உண்டோ என்னவோ?), 'காக்டெயில் பார்ட்டி'யைப் பால் பார்த்துவிட்டாரா என்று வினவினாள். வட்டமுகத்தவன் மற்றொரு பனிச்சென்ற புன்சிரிப்புடன், ''அமெரிக்கா என்றுமே ஆயுத ஒழிப்புச் செய்ததில்லை; அதனால்தான் எல்லா இன்னல்களும்'' என்றான். செம்பட்டைக் கூந்தழலகி, செந்தலைக்காரியைத் தள்ளிக்கொண்டு. அவன் கிளாஸ்டர்ஸையும் காண வேண்டுமென்றும், அங்குள்ள அலங்காரத் துணிகள் நேர்த்தியாக இருப்பதாகவும், தவிர, அங்குள்ள முரட்டு செர்ரி, பிளம் முதலிய மரங்கள் சீக்கிரமே வெளிப்பட்டுவிடும் என்றும் கூறினாள். ''ஹட்சன் நதி மீதுள்ள ஜார்ஜ் வாஷிங்டன் வாராவதியை அங்கிருந்து தோட்டச் சுவர்களுக்கு மேலாகக் காணும் காட்சி அவனுக்கு நினைவிருக்கிறதா?'' என்றும் அவள் கேட்டாள். மெலிந்த, ஆவலுள்ள பெண்மணி 'காக்டெயில் பார்ட்டி'யை ஆராயத் தொடங்கினாள். சிலருக்கு 'தி கான்சல்' என்ற நாடகந்தான் பிடித்தது. ''மடத்தனம், மெனோட்டி அரசியல் நோக்கில் மிகவும் சாதாரணமானவன்தான்'' என்று குறுக்கிட்டான் வட்டமுகத் தடியன் மீண்டும் பனிச்சென்ற முறுவலுடன். பின்னாலிருந்து கேட்டுக்கொண்டிருந்த ஓர் இளவல், ''எல்லாம் குப்பை! அது கம்யூனிஸ்டுகளின் புதுத் தந்திரம். ஏமாந்து விடாதே, மர்ரே.'' என்றான். அந்தத் தீவிரமான பெண் மர்ரேயுடன் சேர்ந்துகொண்டு இளவலைப் பார்த்துச் சிரித்தாள். ''நடத்தைத் தாக்குதல் இது; ஆனால் அறிவில் நாங்கள் தேர்ந்துகொண்டுதான் வருகிறோம்'' என்றான் அந்த இளைஞன் விட்டுக் கொடுக்காமல். மர்ரே என்ற அந்த வட்டமுகத்தான், ''நீ புத்திசாலியாகி வருகிறாயா?

பிரமை தான்'' என்று ஆரம்பித்து உணர்ச்சியுடன் வாதத்தில் இறங்கி விட்டான்.

பால் ஒரு நீள் மூச்சை வெளியேற்றிவிட்டு மெல்ல அங்கிருந்து நகர முயன்ருன்.

ஆனுல் அந்தச் செந்தலை அழகி, பாலைத் தனது நீண்டு கருத்த விழி வீச்சின் வழியே கவனித்தபடி, அவன் ஆகாயத்தில் பறப்பதைக் களித்திருக்கிருனு என்று அறிய விரும்பினுள். பெர்லின் நிலைமை பற்றி எல்லாவற்றையும் பாலுக்குக் கூற விழைந்த அந்த மெலிந்த பெண்ணின் மூலமாகத்தான் அவனுடன் பேசினுள் அச்செந்தலைக்காரி. ஆனுல் இப்போது அவளே தன் முகவாயை நிமிர்த்திக்கொண்டு, இந்தக் குளிர் காலம் சகிக்க முடியவில்லையென்றும், மலைச் சாரல்களில் பனியே இல்லையெனவும் மொழிந்தாள். அதற்குள் தன் பேச்சை முடித்த மர்ரே, பால் ஏன் ஆயுதங்களை ஃபிரான்சுக்கு அனுப்பிக் கொண்டிருந்தான் என்று வினவினுன்.

வெளியே நழுவ முயன்றதை இரு பெண்களும் தடுத்துவிட்டதால் நடப்பதைக் கேட்டுக்கொண்டும், கவனித்துக் கொண்டுமிருந்தான் பால். அவனுக்குப் பேசவே அவசியமிருக்கவில்லை. எந்த விருந்திலும் இப்படியொரு பைத்தியக்காரக் கூட்டம் இருக்கத்தான் இருக்கிறது என்று எண்ணினுன் பால். ஆனுல் இச் சிறு கூட்டத்தை ரோனு உலகத்தின் எந்த மூலையிலிருந்து பிடித்தாள்?

* * *

ஸ்காட் எட்லி இரண்டாவதாக வந்த ஒரு பெரிய கூட்டத்தைப் பின்தொடர்ந்து வந்தான்.

''வருந்துகிறேன், அன்பே,'' என்ருன் அவன் ரோனுவை முத்தமிட்டபடி. அவளை இன்னும் முத்தமிடுவதற்காகக் கூடத்திலேயே இருத்திக்கொண்டு, ''இழவு ஆபீஸ் . . . . எப்போதுமே அதை நான் நினைத்தபோது விட்டுவர முடிவதில்லை'' என்ருன். பிறகு அவளைத் தன் கைகளில் தாங்கியபடி, ''இந்த அறையில் ஒரு கூட்டமே இருக்கிறது போலிருக்கிறதே; அப்பா வந்து விட்டாரா?'' என்று வினவினுன்.

''வந்துவிட்டார். பெக்கி அவருடன் பேசிக்கொண்டிருக்கிருள். அவர் களிப்புடனேயே இருக்கிருர், கவலை வேண்டாம்'' என்ருள் ரோனு.

''தாமதமாக வநவது பற்றி அவர் எனக்கு ஒரு பிரசங்கமே செய்துவிடுவார்'' என்று கேலியாகக் கூறினுன் ஸ்காட். ஆனுல் ரோனு அந்தக் கேலியை ரசிக்கும் நிலையில் இல்லை. அவன் அப்பா எப்போதும் போலில்லாமல் நடந்து கொண்டாரென்று ஏன் பாசாங்கு செய்யவேண்டும்?

''நம்மோடு உபரியாக ஒரு விருந்தாளி இருக்கிறார், ஸ்காட்'' என்றாள் அவள். ஆனால் 'நம்மோடு பலர் இருக்கிறார்கள்; ஆயினும் அந்த ஒருவரைப் பற்றி மட்டுமே நான் கவலை கொள்ள ஆரம்பித்திருக்கிறேன்' என்று எண்ணியது அவள் மனம். பிறகு அவள் பால் ஹேடனைப் பற்றி அவனிடம் கூறினாள்.

ஸ்காட் அவளை உறுத்து நோக்கினான். ''பால் ஹேடனா? அவனை ஏன் அழைத்தாய்?'' அவன் கோபமடைந்துவிட்டான்.

''வேண்டாம், அன்பே. அவரை அழைத்தது சரியென்று உங்களுக்குத் தெரியும்'' என்று அவள் அவனை முத்தமிட்டாள். ''அவரிடம் மரியாதையாக நடந்துகொள்ளுங்கள், வீண் வம்புப் பேச்சை நிறுத்த அதுதான் சரியான வழி, இல்லையா? அவர் என்னவோ நியூயார்க்கில்தான் இருக்கப் போகிறார்; நாம் அவரைச் சந்தித்துக் கொண்டிருப்போம்.''

ஸ்காட் ஆறுதல் அடைந்தமாதிரிக் காணப்பட்டான். ''அதனால்தான் நீ அவனை அழைத்தாயா?'' என்றான். அது ஒன்றும் அப்படித் தவறான யோசனை அல்ல. ஹேடனை இயற்கையாக நடத்தினால், அவதூறாகப் பேச நினைக்கும் யாரும் ஏமாந்துதான் போவார்கள். வம்புப்பேச்சை, அது கிளம்பு முன்னமேயே அடக்கிவிட்டாள் ரோனா. அவன் அவளை மீண்டும் தன் அணைப்புக்குள் இழுத்து வேகமாகவும், முரட்டுத்தனமாகவும் முத்தமிட்டான். ''நான் பெருமைப்படுவதில் உனக்கு மகிழ்ச்சிதானே?''

''எல்லையற்று'' என்றாள் ரோனா. ஆனால் அவனுடைய உணர்ச்சிவெள்ளத்தைக் கண்டு அவனைப்போலவே அதிசயப்பட்டாள். அவன் கையைப் பற்றி அந்த அறையை நோக்கி இழுத்துச் செல்கையில், ''ராணுவ உடையில் இருப்பதுதான் பால் ஹேடன்'' என்றாள் தாழ்ந்த குரலில்.

''நான் முதலில் சிறிது பானம் அருந்த வேண்டும்'' என்று கூறியவாறு அவன், செந்தலைக்காரி மேரி:பைன்ஸின் அருகில் இருந்த ராணுவ உடை அணிந்த பாலைக் கவனித்தான். பிறகு ''நான் அப்பாவையும் பார்த்து 'ஹலோ' சொல்லவேண்டும்'' என்று அவன் தன் திருஷ்டியை ராணுவ உடை மீதிருந்து திருப்பினான். இம்மாதிரி உடையில், தனது ரிப்பன்களைக் கர்வத்துடன் அணிந்துகொண்டுவருவது சரியா என்று அப்பொழுது அவன் நினைத்தான். தொடர்ந்து, ''ரோனா! இன்று பகல் உணவுக்கு வரமுடியாததற்கு வருந்துகிறேன். நம் வாழ்வு நம்முடையதில்லை என்று நினைக்கும் அளவுக்கு வேலைப் பளுவில் நசுங்கும் நாட்களில் ஒன்றாகிவிட்டது இன்று'' என்று ஸ்காட் அவளுடைய மென்மையான கூந்தல் சுருள் ஒன்றைக் காதண்டை ஒதுக்கிவிட்டு, அதன் அழகை ரசித்தான்.

''நேற்றிரவே நீங்கள் ஏன் அதை என்னிடம் கூறவில்லை?'' என்று வினவினாள் ரோனு அரைக் குழப்பத்துடன்.

''சொல்லத்தான் விரும்பினேன். ஆனால் மறந்துவிட்டேன். சுவையற்ற விஷயங்களை நான் எப்போதுமே மறந்து விடுகிறேன்.'' அவன் அவள் கைகளை அழுத்தி, அவளுக்கு மகிழ்ச்சிதரும் ஒரு முறுவலையும் உதிர்த்துவிட்டு, எதிர்ப்பட்ட நண்பர்களுக்கு முகமன் கூறிக்கொண்டே பானங்கள் வைத்திருந்த இடத்தை நோக்கி நகர்ந்தான். அவன் அப்பா அங்கே சாளரத்தண்டை பெக்கி டைஸனுடன் பேசிக்கொண்டிருந்ததையும் அவன் கவனித்துக் கொண்டான். ஸ்காட் கைகளை அசைத்துச் சிரித்து விட்டுத் தனக்காக ஒரு கிளாஸில் பானத்தை ஊற்றிக் கொண்டான். ரோனு இப்போது நீல நிற 'ஸூட்டு' அணிந்திருந்த கருத்த ரோமமுள்ள ஒருவனுடன் பேசிக் கொண்டிருந்தாள். அவன் டெலிவிஷனில் இருப்பதாக ஸ்காட்டுக்கு ஞாபகம். அவன் அவளுடைய 'பழைய நண்பர்'களில் ஒருவன்; ஆனால் பால் ஹேடனைப் போல் அவ்வளவு அபாயகரமானவன் இல்லை. ரோனு, ஹேடனைச் சந்தித்தபோது கவர்ச்சி தரும் பருவத்தினள்; அதற்குப் பிறகு அவளைச் சுற்றிக்கொண்டு பலர் இருந்திருக்கிறார்கள். ஆனால் ஸ்காட் அவளைக் காணும்வரை அவள் மனம் எவர் மீதும் நாட்டம் கொள்ளவில்லை. ஹேடனுடன் கைகுலுக்குமுன் இன்னுமொரு கிளாஸ் குடிக்கவேண்டும் என்றும், இல்லையெனில், ஒரு வேளை அவன் பல்லை உடைக்க நேரிட்டாலும் நேர்ந்து விடுமென்றும் தனக்குள் சொல்லிக்கொண்டான் ஸ்காட்.

* * *

''தொலைவில் சாளரத்தண்டை இருந்த பெக்கி டைஸன், வில்லியம் எட்லியிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்: ''பால் ஹேடனுக்கு ஆறுதல் தேவையென்றே நான் நினைக்கிறேன். வலைக்குள் வீழ்த்தப்பட்டபோது ஜான் வெளிப்படுத்தியதைப் போன்ற அந்த மங்கலான பார்வையை அவனும் வெளிப்படுத்த ஆரம்பித்திருக்கிறான்.''

ஆனால், அங்கே கதவருகில் நின்று பேசிக்கொண்டிருந்த ரோனுவையும், ஸ்காட்டையும் இன்னமும் கவனித்துக் கொண்டிருந்த வில்லியம் எட்லி, ''அவர்களிருவரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள். அவள் ஏன் இன்னும் தங்கள் திருமணத்துக்கு நாள் நிர்ணயிக்கவில்லை என்று எனக்குப் புரியவில்லை. ரோனு என்னை இந்த விருந்துக்கு அழைத்தபோது, அவர்கள் தங்களுடைய மண நாளை அறிவிக்க இக்கூட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ளுவார்கள் என்றே நம்பியிருந்தேன்'' என்றார்.

பெக்கியின் கவனம் வில்லியம் எட்லீயின் மீது மீண்டும் திரும்பியதும், அவருடைய முகம் அமைதியைப் பிரதிபலிப்பதையே அவள் கண்டாள். வட்டமான கண்ணாடிகளுக்குள்ளிருந்த அவரது அமைதியான கண்களில் சிறிது கலக்கமும் தோய்ந்திருந்தது. அவருக்குச் சுமார் அறுபது வயதிருக்கும். குட்டையான, ஆனால் சக்தியுள்ள உடல்; வெளிறிய முகத்தைப் போலவே தலை முழுவதும் நரைத்திருந்தது. அவர் சட்டென்று சிரித்தார்; அவரது குரல் ஆழமாகவும், தீர்மானமும் சுமுகமும் நிறைந்திருந்ததாகவும் இருந்தது. அவரை முதல் முதலாகச் சந்தித்தவர்களில் பெரும்பாலோர், இந்தச் சாத்விக மனிதரா வில்லியம் எட்லீ என்று வியந்தார்கள். 'அந்த வில்லியம் எட்லீயாக இருக்க முடியாது; கிழக்குக் கடற்கரையிலேயே மிகவும் நம்பத்தகுந்த, எல்லா விஷயங்களையும் தரும் 'க்ளாரியன்' பத்திரிகையை உன்னத நிலைக்குக் கொணர்ந்த அந்த வில்லியம் எட்லீயா? 'க்ளாரியன்' என்னவோ சிறிய பிராந்தியப் பத்திரிகை என்பது உண்மைதான்; ஆனால் அதற்குச் செல்வாக்கும், நன் மதிப்பும் இருந்தன. தமது மனச் சாட்சி கூறியபடி ரூஸ்வெல்டுக்கு வாக்குகளை அளித்த ரீபப்ளிக்காரர் எட்லி. நகரத்து அரசியல் பூசல்களை விட்டில் எதிர்த்தவர் அவர். கட்டாயப்படுத்தும் குழுக்களை அவருக்குப் பிடிக்காது. வெளிநாடுகளில் சமநிலைக் கொள்கையின் தேவையில் நம்பிக்கை உள்ளவர், அவருடைய தலையங்கங்களை யாரும் நம்பலாம். தற்போதைக்கு அவருடன் கருத்து வேற்றுமை கொள்பவர்கள்கூட, சில மாதங்களுக்குப் பிறகு, அவசரப்பட்டு ஒரு பொய்யான முடிவுக்கு வராத அவருடைய சாமர்த்தியத்தை எண்ணி வியப்பார்கள்.

பெக்கி சொன்னாள்: ''பால் ஹேடனை இங்கே அழைக்கட்டுமா? ஜெர்மனியில் எதிர்ப் பிரசாரமோ என்னவோ செய்து கொண்டிருந்தான் அவன்.''

'ஆம். அவனைச் சந்திக்க விரும்புகிறேன்'' என்ற வில்லியம் எட்லீயின் கண்கள் அவள் முகத்தைத் துருவின. ''பெக்கி, ரோனா ஏன் ஸ்காட்டை இன்னமும் மணந்து கொள்ளவில்லை?'' என்று அவர் தொடர்ந்து கேட்டார்.

''அதான் இப்போது செய்து கொள்ளப் போகிறாளே! அவளால் மட்டும் அதைச் சமாளிக்க முடியுமென்றால், அவள் நாளைக்கே மணந்து கொண்டு விடுவாள்!'' என்று பதிலளித்த பெக்கி ஆச்சர்யத்துடன் அவரை நோக்கினாள்.

''ஸ்காட்டுடன் போனவாரம் சாப்பிடச் சென்றேன். அப்போது எனக்குத் தோன்றியதிலிருந்து...'' வில்லியம் எட்லி பேச்சை முடிக்காமல், கலக்கத்துடன் அறை முழுவதிலும் பார்வையைச் சுழற்றினார். ரோனா ஆபீசில் நல்ல பதவி

யில் இருப்பவள் என்றும், அந்த நல்ல வேலையை விட்டுவிட்டுத் தன் வருமானத்திலேயே சமாளிக்கும்படி அவளை எப்படிக் கேட்பது என்றும் ஸ்காட் அவரிடம் சொல்லியிருந்தான். எனவே, ''எப்படியிருந்தாலும் அவர்கள் மணந்து கொண்டு விடுவதில் என்ன தடை?'' என்றார் வில்லியம் அருவருப்புடன்.

''அதுதான் எனக்கும் தெரியவேண்டும்'' என்றாள் பெக்கி. பிறகு ரோனாவின் மீதுள்ள தன் பாசத்தை நினைத்துக் கொண்ட அவள் தனது சொந்த வெறுப்பை அடக்கிக் கொண்டு, ''ஆனால் ரோனாவே தேதியைக் குறிப்பிட முடியாது, மிஸ்டர் எட்லீ. அதை மாப்பிள்ளைதான் தீர்மானிக்க வேண்டும், இல்லையா?'' என்றாள். கூடவே, 'எனக்கு மட்டும் வில்லியம் எட்லீயைப் பிடிக்காமலிருந்தால் எனக்கு அவருடைய அருமை மகன் மீது அவரைவிடக் கோபம் என்று கூறிவிடுவேன்' என்று நினைத்தாள் அவள்.

''அப்படியானால் ஸ்காட்டுக்கு என்ன சங்கடம்? அவனுக்கு அவள் மீது காதல் இருப்பதை, நானறிவேன்'' என்ற அவர், வருந்துபவர்போல் தலையை அசைத்தார். தொடர்ந்து, ''எந்த விஷயத்திலும் அவனை என்னால் சரிவரப் புரிந்து கொள்ள முடியவில்லை என்று தோன்றுகிறது'' என்றார்.

பெக்கி மௌனமாக இருந்தாள். ஆனால் தனக்குள்ளே ஸ்காட்டைக் குற்றம் சாட்டுவதில் என்ன பயன்? ஸ்காட்டின் மீதுள்ள அருவருப்பை அவள் கட்டுப்படுத்திக் கொள்ளாவிட்டால், ரோனாவின் அன்பையே இழக்கநேரும். அவள் தன்னையறியாமல் சொன்னாள், ''கவலை வேண்டாம், மிஸ்டர் எட்லீ. ஸ்காட்டும் தனக்கென்று சில திட்டங்கள் வகுத்துக் கொண்டிருப்பான் என்பது நீங்கள் அறியாததா? ஆனாலும் சீக்கிரமே ரோனாவும் அவனும் மணந்து கொள்ளத்தான் போகிறார்கள். உங்கள் பத்திரிகையில் சேருவதுபற்றி அவன் தன் அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டாலும் நான் அதிசயப்பட மாட்டேன். அவன் தனது சுதந்திரத்தை நிலைநாட்டிக்கொண்டு விட்டதாக உணரும்போது, நிச்சயம் ஒரு நாள் வந்துஉங்கள் பத்திரிகையிலே சேருவான்.''

சிறிது கர்வத்துடனேயே எட்லீ சட்டென்று பதிலளித்தார்: ''சுயேச்சை உணர்வு என்பது எனக்கும் பிடிக்கும். அவன் தானாகவே முன்னுக்கு வரவேண்டுமென்று விரும்புவதை நான் வரவேற்கிறேன். 'கிளாரிய'னில் உழைத்து அநுபவம் பெறுவதற்குப் பதில் நியூயார்க்கில் ஒரு பத்திரிகையில் சேர அவன் விரும்பினால், அதை நான் புரிந்துகொள்ளுவேன். அவனுடைய வாழ்வை அவனுக்காக நான் நடத்த முயலவில்லை. ஒன்று நிச்சயம்; அவன் முழுவதும் சந்தோஷமாக இல்லை என்றே எனக்குப் படுகிறது. ரோனாவுடன் குதூகலமாகத்

தானிருக்கிறன். ஆனால் அவனுடைய உத்தியோகத்தில்? எனது ஒரே மகன் லாபகரமான சந்தோஷ வாழ்க்கையை அநுபவிக்க வேண்டுமென்று நான் ஆசைப்படுவது தவறில்லை, இல்லையா?'' திடீரென்று தன் அபிலாஷைகளை வெளியிட்ட அவர் ஒரு புன்னகை பூத்தார்.

''தவறில்லை'' என்றாள் பெக்கி மெதுவாக. ''அதைக் காணத்தான் நாம் எல்லோருமே விரும்புகிறோம்.'' அப்போது அவளுக்குத் தனது ஐந்து வயசுப் பிள்ளை பாப்பியின் நினைவு வந்தது. நாளைக்கு அவனுக்கும் இருபத்தைந்து வயதாகுமானால், அவன் அவளுடைய யோசனைகளையும், உதவியையும் புறக்கணித்து விடுவானா? ஒருவேளை புறக்கணிக்கலாம். 'ஏன், நானே அப்படிச் செய்தேனே' என்று குற்றமுள்ள அவள் நெஞ்சு நினைத்தது. ஸ்காட்டுக்குக் கல்யாணமாகி, கவலைப்படுவதற்குச் சில குழந்தைகளும் பிறந்துவிட்டால், பிறகு அவன் தன் தந்தையைச் சிறப்பாகப் புரிந்துகொள்ள ஆரம்பித்துவிடுவான். அவள் வில்லியம் எட்லியைப் பார்த்தாள். அவர் இப்போது வாயை மூடிக்கொண்டு மௌனமாக இருந்தார். ''நான் போய் பால் ஹேடனை விடுவித்து வருகிறேன்'' என்ற அவள் நெருக்கமான சிறு கூட்டத்தினிடையே புகுந்து விரைந்தாள்.

மேரிஃபைனிடமிருந்தும், அவள் கூறிக்கொண்டிருந்த பனிச்சறுக்கல் கதையிலிருந்தும் பால் ஹேடனின் கவனத்தை இழுத்தவாறு, ''பால், இந்தச் செந்தலையுடன்தான் நீ தங்க விரும்புகிறாயா?'' என்று கேட்ட பெக்கி, தொடர்ந்து சிரித்துக்கொண்டே அவனை ஜன்னலை நோக்கித் தள்ளிக்கொண்டு வந்தாள். பிறகு, ''சாதுரியமில்லாமல் பேசிவிட்டேன். ஆனால் நீ கவலைப்படாதே. அவள் இங்கேதானிருப்பாள். ஆராயமுடியாத முகமுள்ள வலுவான ஆண்பிள்ளைகளை அவளுக்குப் பிடிக்கும்'' என்றாள்.

''பெண்களின் கண்களுக்கு என்ன நேர்ந்து வருகிறது?'' என்று கேட்டான் பால்.

''கறுப்புப் பென்ஸிலால் கீழ்நாட்டுப் பெண்கள் மாதிரி கோடிட்டுக் கொள்ளுவதைச் சொல்கிறாயா? அது அவர்களை ஜ்வலிக்கச் செய்வதாகப் பத்திரிகைகள் கூறுகின்றன. என்னைப் பொறுத்தவரையில், அவர்கள் பாட்டி வேஷத்தில் வந்த ஓநாயைப்போல் தோன்றுகிறார்கள்... இருந்தாலும் உன்னைப் பார்க்கையில் பரவாயில்லை.''

''எனக்கு இவர்களைப் பார்க்கையில் ஸர்க்கஸ் ஞாபகம் வருகிறது. இவர்கள் முகத்தில் வெள்ளை அடித்துக்கொள்ளாதது தான் குறை.''

''நீ பத்தாம் பசலியாகிவிட்டாய், பால். ஏன், நீயே ஒரு சமயம்...''

''உண்மைதான்; ஆனால் அந்த 'ஒரு சமயம்' பலநாட்களுக்குமுன் அல்லவா வந்தது?''

''ஆமாம்'' என்ற அவள், யோசனையுடன் அவனை உற்று நோக்கினாள். பிறகு, ''நான் உன்னை வில்லியம் எட்லீயிடம் அழைத்துப்போகிறேன். உனக்குக் 'கிளாரியன்' நினைவிருக்கிறதல்லவா?'' என்றாள்.

''நன்றாக நினைவிருக்கிறது, ஏன்?'' என்ற அவன் குரலில் திடீரென்று ஒரு மகிழ்ச்சி பிரதிபலித்தது.

''இன்னமும் அவர் உண்மையான பழங்கால அமெரிக்க மிதவாதியாகத்தான் இருக்கிறாரா?'' அவன் அதிகத் திருப்தியுடனும், உணர்ச்சிமிகுந்தும் இருந்தான். வில்லியம் எட்லீயும் இந்த இளைஞனைக் (அவர் அநுமானத்தில் பால் ஹேடன் ஓர் இளைஞன்தான்) காணப் பார்வையைத் திருப்பினார். அவனிடமிருந்து ஒரு நல்லுறவு நோக்கி வருவதை உணர்ந்த அவர் மெதுவாக, அறிவு ததும்பப் பேச ஆரம்பித்தார். ஜான் டைஸனைப்போல் எப்படிக் கேள்விகள் கேட்கவேண்டுமென்று அவருக்குத் தெரியும். பால் நேரிடையாகப் பதில்களைச் சொன்னான். உண்மையில் ஜெர்மானியப் பகுதியில் ஒன்றையோ, அல்லது ராணுவ அரசாங்கத்தின் பிரச்னை ஒன்றையோபற்றி அவனுக்குத் தெரியாதபோது, அவன் அதை ஒப்புக் கொண்டான். அவன் பதிலளித்த தோரணையை வில்லியம் எட்லீ விரும்பினார். அதனால் அவரது கேள்விகள் குறிப்பாக வெளிவந்தன. மரியாதைக்கு மட்டுமின்றி, உண்மையிலேயே அவருடைய சிரத்தை அதிகமாயிற்று.

சில நிமிஷங்கள் காத்திருந்த பெக்கி டைஸன் மெதுவாக நழுவினாள். இத்தடவை அவள் ஜானை விடுவிக்கவேண்டும். அலுப்புத்தட்டும் பேச்சுக்காரர்களிடையே, அதிலும் கவர்ச்சியற்ற பெண்களிடையே சிக்கித் தவிப்பது ஜானுக்கு சகஜம் என்றே தோன்றியது. அவர்களது பிடியில் சிக்கிவிட்டானானால், அதிலே அவன் நிலைத்துவிடுவான். மற்றவர்களைப்போல் நழுவி ஓட அவன் தாட்சண்யப்படுவான். அதனால் 'பார்ட்டி'களை அவன் வெறுப்பதில் அதிசயமில்லை. இப்போது பெக்கி தன்னை விடுவிக்க வருவதைக் கண்டபோது அவன் பார்வை இதயபூர்வமான வந்தனத்தைத் தெரிவித்தது. ''பால், உங்களைத் தேடிக்கொண்டிருக்கிறான், அன்பே!'' என்ற அவள், அவனுக்குப் பக்கத்தில் ஆடம்பரமான உடையில் இருந்த பெண்மணியை நோக்கி ஒரு குறுநகையை உதித்தாள். 'வோக்' பத்திரிகையின் கடந்த ஆறு அட்டைப் படங்களை எடுத்து, ஒன்றுக்கினால் நல்ல உடை எப்படி இருக்கவேண்டு

மென்ற இப்பெண்ணின் கருத்தை, அப்படம் பிரதிபலிக்கும் என்று அவளுடைய உடையைப் பார்த்ததும் எண்ணினாள் பெக்கி. நீண்ட காது வளையங்கள், அடர்த்தியாகப் பென்ஸில் தீட்டப்பட்ட விழிகள்; கழுத்தைச் சுற்றி வைர ஊசிப்பொத் தானால் முடியப்பட்ட ஒரு வெல்வெட் பட்டை; இறுகக் கட்டப்பட்ட, ஆனால் முட்டிக்கொண்டுவரும் இடுப்பு; ஒவ் வொரு அசைவின்போதும் 'சலசல'க்கும் விறைப்பான 'டபெட்டா' பட்டுக் கவுன். இத்தகைய ஆடை அலங்காரங் களுடன் விளங்கினாள் அப்பெண்.

ஆனால் அப்பெண்மணி அவ்வளவு எளிதாக ஜானைப் போக விடவில்லை. முகத்தை இன்னமும் நீளமாகக் காட்டும் வகையில் காதுகளண்டை விரிந்திருந்த அவள் தொப்பி ஏமாற்றத்துடன் அசைந்தது. ''நானும் கொலம்பியா கலாசாலையில் சேர்ந்துதான் உன் கணவரின் பிரசங்கங்களைக் கேட்கவேண்டும் போலிருக்கிறது'' என்றாள் அவள், தன்னை ஓர் இளம் பெண்ணாகக் கருதிக்கொண்டு. தொடர்ந்து, ''அவர் அவ்வளவு வேடிக்கையாக இருக்கிறார், திருமதி டைஸன்! நான் பள்ளியில் படிக்கையில் சரித்திரத்தைப்பற்றிக் கவலையே பட்டதில்லை. ஆனால், நிச்சயமாக இவர் எனக்கு எதையும் போதித்து விடுவார்.''

''சந்தேகமில்லை'' என்று முணுமுணுத்த பெக்கி தீர்மா னத்துடன் வெளியேறினாள்.

அவர்களை விட்டு அப்பால் சென்றதும், ஜான் உணர்ச்சி யுடன், ''அப்பப்பா! ரோனா இவளை எங்கேதான் கண்டு பிடித்தாள்?'' என்று கேட்டான்.

''நீங்களும் நல்ல அழகியாகப் பார்த்துத்தான் பொறுக்கி யிருக்கிறீர்கள், ஜான். இந்த அறையிலுள்ள அவ்வளவு பேர் களையும் விட்டு, அவளைப் போய்த் தேர்ந்தெடுத்தீர்களே!''

''நான் தேர்ந்தெடுக்கவில்லை; அவள் எப்படியோ வந்து சேர்ந்துவிட்டாள்'' என்றான் ஜான். தான் எழுத்தாளர்கள் சிலரிடம் பேசிக்கொண்டிருந்தபோது, அவளுடைய முதிர்ந்த கரம் தன் தோளைப்பற்றி, 'ஓ, டாக்டர் டைஸன், உங்களைச் சந்திக்க நான் எவ்வளவு நாட்களாகக் காத்துக்கொண்டிருக் கிறேன்!...' என்று கூவியது அவனுக்கு அப்பொழுது நினை விற்கு வந்தது. கோர்கனே நேரில் வந்துவிட்டமாதிரி, அவளைக் கண்ட டைஸன் அப்படியே கல்லாக மாறிவிட்டான். மற்றவர் ஒருவரும் அவன் உதவிக்கு வரவில்லை; எப்போது ஒதுங்கி நிற்க வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும் போலும். காலேஜ் புரொஃபஸர்களுக்கெல்லாம் வம்புப்

பேச்சைக் கேட்கப் பிடிக்கும் என்று ஜனங்கள் எப்படி நினைக்கத் துணிகிறார்கள்?

''விசித்திரமான தொப்பி! அதன் சரிவிலுள்ள திராட்சைகள் உங்களை மயக்குகின்றனவா?'' என்று கேட்டாள் பெக்கி.

''ஆமாம், அது மட்டும் தொப்பியாக இல்லாமல் மரத்தொட்டியாக இருந்தால் அதில் நமது பூட்ஸுகளையும், கால் உறைகளையும் கழற்றிப் போட்டிருக்கலாம்'' என்று அவன் விசனத்துடன் கூறினான். பிறகு முறுவலித்தவாறு, ''வா என் அன்பே, நாம் வீட்டுக்குப் போகலாம்'' என்றான்.

''இன்னும் ஒருவரும் வீட்டுக்குக் கிளம்பவில்லையே'' என்றாள் பெக்கி மெதுவாக. அவளுடைய ஏமாற்றத்தைக் கண்டு மனம் கசிந்த அவன் தன் ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டான். பாப், பார்பரா இவர்களுக்கு முறையே ஐந்து வயதும், இரண்டு வயதும்தான் ஆகின்றன. எனவே அவர்களுடன் இப்போதெல்லாம் எந்த விருந்துக்கும் செல்ல முடிவதில்லை.

''ஒரு மாறுதலுக்கு உண்மையான அழகுள்ள மற்றொரு பெண்ணைப் பேச அனுப்பட்டுமா?'' என்று மேரிஃபைனின் செங்கூந்தலைப் பார்த்தபடி வினவினாள் பெக்கி.

'' அவளோடு நான் பேசியாகிவிட்டது'' என்று மெதுவாகப் பதிலளித்தான் ஜான்.

பெக்கி மெய்யாகவே முகம் மலர்ந்தாள்; அவளுடைய கண்கள் சிரித்தன.

ரோனாவின் குரல் கேட்டது: ''ஒரு கணவனும் மனைவியும் பகிரங்கமாகச் காதல் விளையாட்டு விளையாடுவது சட்ட விரோதம். ஆனால் என்னைப்பற்றிக் கவலைப்படாதே. எனக்கு அது பிடிக்கும்...'' பிறகு அவள் குரல் தீவிரமாகித் தொடர்ந்தது: ''பாவம் ஜான்...தெல்மா உன்னைப் பிடித்துக்கொண்டு விட்டாளா? நான் வந்து விடுவிக்க வேண்டுமென்றிருந்தேன். ஆனால் பெக்கி அந்த வேலையைக் கவனித்ததைக் கண்டேன். என்ன, என்னை அப்படிப் பார்க்கிறாய்?..அவளிடம் ஒரு கவர்ச்சியும் இல்லை. . அவள் வெறும்—''

'' அழையாத விருந்தாளியா?'' ஜான் கேட்டான்.

''ஆமாம் . . அப்படித்தான் சொல்லவேண்டும். மர்ரேயுடன்கூட வந்து சேர்ந்தாள். அதோ மூலையில் வட்ட முகத்துடன் உட்கார்ந்திருக்கிறானே, அரசியலைப் பற்றிப் பேசிக்கொண்டு, அவனுடன்.''

' பெக்கி சொன்னாள்; ''அவன் டெலிவிஷனில் நகைச்சுவையின் முக்கியத்துவம் பற்றி என்னிடம் சொல்லித் தீர்த்து

விட்டான். பாப்பி அதைக் கேட்கும்வரை நீ பொறு.ஆமாம் நீ என்ன இம்மாதிரி விசித்திரமான நண்பர்களில் சிலரை அழைத்திருக்கிறாய், ரோனு?''

''ஓ! அவன் ஸ்காட்டின் நண்பர்களில் ஒருவன்'' என்றாள் அவள். பிறகு அவள் குரலில் கவலை தட்டியது ''ஸ்காட் இன்னமும் பால் ஹேடனைக் கவனிக்கவில்லை போலிருக்கிறதே!'' என்றாள்.

''அப்படியா?'' என்று முறுவலித்தான் ஜான்.

''இதோ, அப்பக்கமாக அவர் போகிறார்'' என்றாள் ரோனு திருப்தியுடன், சாவதானமாகத் தன் தந்தையையும், பால் ஹேடனையும் நோக்கிச் சென்ற ஸ்காட்டைக் கவனித்தபடி. ஆனால், 'பாலை இங்கே அழைக்கும்படி என்னை எது தூண்டியது?'—தனக்குள்ளேயே கேட்டுக்கொண்டாள் அவள்.

''வேதனைப்படாதே; சிறிதளவு போட்டி ஸ்காட்டை ஒன்றும் செய்துவிடாது. அவன் உன்னை முற்றிலும் தன்னுடையவளாகவே கருதுகிறான்'' என்றாள் பெக்கி. அச் சிறிய உண்மையை உதிர்த்த பிறகு, அவள் அந்த டெலிவிஷன் மனிதனுடன் பேசச் சென்றாள். ஜான் மீண்டும் மேரிஃபைனிடம் அகப்பட்டுக்கொண்டான். இப்போதெல்லாம் அவன் நிறையப் பனிச்சறுக்கல் செய்வதுண்டா என்பதை அறியத் துடித்தாள் அவள்.

ரோனு இன்னமும் ஸ்காட்டையே கவலையுடன் கவனித்துக்கொண்டிருந்தாள். ஸ்காட் அருகில் வந்த அதேசமயத்தில் மிஸ்டர் எட்லீ பாலைவிட்டு நகர்ந்ததை அவள் கண்டாள். ஸ்காட் பின்புறமாக வந்ததால் மிஸ்டர் எட்லீ அவனைக் கவனிக்கவில்லை. ஆனால் அதை ஸ்காட் ஒருபோதும் நம்பமாட்டார் என்றே அவள் நினைத்தாள். தமது புரட்சித்தனத்தைத் தந்தை மன்னிக்கவே இல்லை என்பது அவர் எண்ணம். அந்த நினைவை ஒருபோதும் மாற்றமுடியாது. அதைப்பற்றிக் கவலைப்படாதவர் மாதிரிப் பாசாங்கு செய்தாலும், உள்ளூர அவருக்கு வேதனை இருந்தது. இக்குற்ற மனப்பான்மையை அவர் ஒப்புக் கொள்ளவே மாட்டார். இதனால் அவருடன் பழகுவது சிரமமாகிவிடுகிறது என்று நினைத்தாள் ரோனு—பிறகு அவள், அது தான் நினைக்கிற அளவு சிரமமில்லையெனவும், சில சமயங்களில்தான் அவரைக் கட்டுப்படுத்த முடிவதில்லை என்றும் தன்னைத்தானே சமாதானம் செய்துகொண்டாள்.

தன் தந்தை வேறு யாருடனோ பேசச் சென்றபோது கல்லாகிப்போன ஸ்காட், பால் ஹேடனை நெருங்கியதும் தயங்கினான். அதைக் கவனித்த ரோனு, அவனுடைய மனவேதனையை

எல்லாம் தானே உணர்ந்தாள். 'சாப்பாட்டு நேரத்தில் உற்சாகமிருக்கப் போவதில்லை; பிறகு அவர் தந்தை சென்றதும் நான்தான் தனியாக இந்த ஏமாற்றங்களைச் சமாளிக்க வேண்டும்' என்று துயரத்துடன் எண்ணினாள் அவள். 'என்னதான் நான் காதல் வயப்பட்டிருந்தாலும், எனது மகிழ்ச்சிக்கெல்லாம் சமமாக ஏதாவது துன்பமும் இருக்கிறதே. பெக்கியும் ஜானும் மட்டும் தங்களது களிப்பைக் குந்தகமின்றிப் பாதுகாக்கிறார்கள் போலும்; அவர்கள் தமக்கென ஒரு புது உலகில் வாழ்கிறார்கள். ஆனால், நான் எப்படி அம்மாதிரியான புது உலகைக் காண்பேன்?'

யாரோ ஒரு விருந்தாளியைக் கண்டு 'பளிச்' சென்று ஒரு குறுநகையை உதிர்த்துவிட்டு ரோனா, பேசினாள்: "நான் உங்களுக்குப் புதிதாகப் பானம் கொண்டு வருகிறேன். 'பாலட்ருஸ்ஸி' நடனத்தை நான் பார்க்கவில்லை. இத்தடவை அது எப்படியிருக்கிறது?.."

* * *

பால் ஹேடனை விட்டுச் சென்ற தன் தந்தையைக் கவனித்தான் ஸ்காட் எட்லீ. எனவே பாலின் அருகில் நெருங்கியதற்கு மன்னிப்புக் கோர இருந்ததை விட்டுவிட்டான். அவனுடைய தயக்கத்தைக் கண்ட பால் ஹேடன், "ஒரு சிகரெட் வேண்டுமா?" என்று வினவினான்.

"வேண்டாம், வந்தனம்."

"என் பெயர் ஹேடன்."

"தெரிந்து கொண்டேன். என் பெயர் எட்லீ."

"ஓ!" என்ற பால் பழுப்பு நிற 'ஸூட்டு'ம் நீல 'டை'யும் அணிந்திருந்த அந்த இளைஞனிடமிருந்து பார்வையை வில்லியம் எட்லீயின் பக்கம் திருப்பினான்.

"ஆமாம்...'கிளாரியன்' பத்திரிகையை நடத்திவரும் அவருடைய மகன்தான் நான்; ஆனால் அதில் நான் பணி புரியவில்லை" என்று ஸ்காட் ஓர் அசட்டுச் சிரிப்பை உதிர்த்தான்.

"அப்படியா?" ஸ்காட்டின் இந்தச் சுருக்கமான பேச்சில் மிதந்த அலட்சியம் பால் ஹேடனை அதிசயத்தில் ஆழ்த்தியது.

"ஆமாம்" என்று ஸ்காட் பால் ஹேடனைக் கவனத்துடன் பார்த்தான். கேரி கிராண்டு மாதிரியல்லவா இருக்கிறான் என்று தனக்குள் எண்ணினான்.

"கர்வம் கொள்ளக்கூடிய ஒரு பத்திரிகை கிளாரியன்" என்றான் பால். இப்போது அவன் இளைஞனை எட்லீயின்

முகத்தை ஆராய்ந்து கொண்டிருந்தான். அவனுடைய எரிச்சலுக்கு காரணமென்ன என்று அவன் வியந்தான்.

எட்லீ அதைப் பொருட்படுத்தவில்லை. ''நீங்கள் மறுபடியும் 'ட்ரெண்டி'ல் சேரப் போவதாகக் கேள்விப்பட்டேனே...''

பால் ஹேடன் பதில் கூறாமல் தனது சிகரெட்டைக் கவனமாகப் பற்ற வைத்தான்.

''...ப்ளாக்வொர்த்தின் வேலையில்.''

''அப்படியா அது தோன்றுகிறது?'' பால் ஹேடன் எட்லீயின் கூர்மையான நீலக் கண்களைக் கவனித்தான். அவனுடைய கன்னத்தில் 'பளீ' ரென்று ஒன்று கொடுத்து அக் கண்களைக் கறுப்பாக்கினால் நன்றாக இருக்கும். ''அது எளிதுங்கூட. ஏனென்றால் இன்று ரோனுவின் பார்ட்டி; என் பார்ட்டி இல்லை'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

''ஆமாம்.'' ஸ்காட்டின் பார்வை அருகில் வந்த தெல்மாவின் மீது விழுந்தது. தெல்மாவின் துடியான விழிகளிலும் சிரத்தை காணப்பட்டது. அவன் ஒரு முறுவலை வலிய வரவழைத்துக்கொண்டு தொடர்ந்தான்: ''ப்ளாக்வொர்த்தைப் பற்றி எனக்கு எதுவுமே தெரியாது. ஆனால் அவன் வேலையிலிருந்து விலக்கப்படுவதை நான் விரும்பவில்லை. உண்மையாகச் சொல்கிறேன்; இது, அவனுக்கு இழைக்கும் கொடுமை என்றே நான் கருதுகிறேன். நீங்கள் வேண்டுமானால் மர்ரேயைக் கேட்டுப் பாருங்களேன். அவன் 'ட்ரெண்டி'ல் கடந்த நான்கு வருஷங்களாக இருந்து கொண்டிருக்கிறான்.'' ஸ்காட் அறையின் மூலையைப் பார்த்துத் தலையை ஆட்டினான். அங்கே அந்த வட்ட முகத்தையுடைய தடித்த மனிதன் இன்னமும் ஏதோ பிரசங்கம் செய்துகொண்டிருந்தான்.

''அமெரிக்கா என்றாலே பிடிக்காத அவனைத்தானே சொல்கிறீர்கள்?'' என்று வினவினான் பால்.

ஸ்காட் கோபமும் குழப்பமும் மேலிட நோக்கினான். ''ராணுவ உடையை உடுத்துபவனுக்குத்தான் நாட்டுப்பற்று உண்டு என்று பொருளில்லை.''

''உண்மையே, அதற்காக அமெரிக்காவை எப்போதும் தூற்றிக்கொண்டு திரியவேண்டுமா?''

''மர்ரே தன் வேலையைக் காட்டியிருக்கிறான். பிறரை அதிர்ச்சிகொள்ளச் செய்வதென்றால் அவனுக்குப் பிடிக்கும். அதுவும் இன்றிரவு அவன் மிகவும் துடியாகத்தானிருக்கிறான்'' என்று ஸ்காட் முறுவலுடன் பால் ஹேடனைப் பார்த்தான்.

பால் ஹேடன் மெதுவாகச் சொன்னான்: ''நிச்சயம் நான் எனது நகைச்சுவை உணர்வை இழந்து விட்டிருக்கிறேன்.

அதனால்தான் மார்ரேயின் பேச்சைத் தவறாகப்புரிந்து கொண்டு விட்டேனே, என்னவோ ?''

இன்னமும் புன்முறுவலுடனேயே ஸ்காட் தொடர்ந்தான். ''ஆனால் நான் உண்மையில் உங்களிடம் சொல்லவந்த விஷயம் இதுதான்: 'ட்ரெண்டி'ல் நீங்கள் ப்ளாக்வொர்த்தின் வேலையை எடுத்துக் கொள்ளும்போது, ரோனாவை விட்டு சற்று விலகியே இருங்கள், என்ன?'' அவனுடைய கடைசி வார்த்தைகளில் அளவற்ற கசப்பு வழிந்தது; அவனுடைய மெதுவான குரல்தான் அக்கசப்பை அவ்வளவு அதிகமாகக் காட்டியது.

பால் ஹேற்டன் வெறித்து நோக்கினான். ''ஒருவேளை உங்களுடைய முதல் பெயர் ஸ்காட் இல்லையோ?'' என்று வாய் விரியச் சிரித்துத் தளர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

''அதை நீங்கள் முதலிலேயே சொல்லியிருக்கலாம்; அது எல்லாவற்றையும் தெளிவாக விளக்கியிருக்கும்.''

ஸ்காட் எட்லீ ஒன்றும் கூறவில்லை. உதட்டில் முறுவலும் கண்களில் கோபமும் உறுதியும் தெறிக்க அவன் நின்று கொண்டிருந்தான்.

''கவலை வேண்டாம்'' என்றான் பால், மீண்டும் ஒரு தடவை குரலை மாற்றிக் கொண்டு. ''நான் ஒருபோதும் பிறர் சொத்தைத் திருடியதில்லை. குட் பை!'' அவன் தன் கையிலிருந்த கிளாஸைக் கீழே வைத்து விட்டுச் 'சடக்'கென்று திரும்பிச் சென்றான். பிறகு ஒரு பத்திரிகை ஆசிரியரையும், விமர்சகரையும் சந்தித்து அவர்களிடமும் விடைபெற்றுக் கொண்டான். இவ்வாரம் ஒரு நாள் அவர்களோடு உணவுக்குச் செல்ல ஒப்புக் கொண்டான் பால். மேலும் ஓரிரு நண்பர்களைப் பார்த்துத் தலையை ஆட்டி, மறுதினம் அவர்களைச் சந்திப்பதாகக் கூறிச் சென்றான். பிறகு மார்ரேயின் கேலிக் கூட்டத்தைப் பொருட்படுத்தாது தாண்டி, தன் தொப்பியை எடுத்துக்கொண்டு ரோனாவைத் தேடினான். கூடத்தில் அவள் பெக்கிக்கும், ஜானுக்கும் விடை கொடுத்துக் கொண்டிருந்தாள்.

''நீங்களும் போகிறீர்களா ?'' மென்மையான அவள் கேள்வியில் எதையோ பற்றிய ஆவலும் கலந்திருந்தது.

''ஆமாம்...நான் போகவேண்டும். பார்ட்டி மிகவும் பலமாகவே இருந்தது. நன்றி, ரோனா !''

''எங்களோடு வீட்டுக்கு வாருங்களேன். ஏதாவது சாப்பிடுவோம்'' என்றாள் பெக்கி திடீரென்று உதித்த யோசனையுடன். ''நாங்கள் பாப்பியை எழுப்புகிறோம்; அவன் உயிரோடு உள்ள ஓர் உண்மையான மேஜரைப் பார்க்க மகிழ்ச்சியடைவான்.''

"கூடவே வா" என்று ஜானும் அழைத்தான். "பார்ட்டியில் நாம் பேசுவதற்கு அதிக நேரம் கிடைக்கவில்லை" என்று கூறிய அவன், தனக்குள் 'பையன்களின் பேப்பர்களைத் திருத்த எப்போது அவகாசம் கிடைக்கப் போகிறது?' என்று நினைத்துக் கொண்டான். பிறகு பெக்கியைப் பார்த்து அவன் முறுவலித்தவாறு 'அவளுக்கு ஒரு சாம்ராஜ்யத்தைப் போலப் பெரிய இருதயம்' என்று எண்ணினான்.

"ரொம்பவும் வந்தனம். ஆனால் இன்றிரவு வருவதற்கில்லை. நீண்ட பிரயாணம் செய்தவனாதலால் சீக்கிரம் நான் படுக்கப் போகிறேன்."

"வீடு திரும்பிய முதல் இரவிலா?" என்று தாழ்ந்த குரலில் கேட்டுக் கொண்டே கூடத்திற்கு வந்தாள் மேரிஃபைன். அவள் அவன் கைகளைப் பற்றிக் கொண்டு சிரித்தபடியே, "ஓ! பால்!" என்றாள்.

"எனக்குப் பதவி உயர்வு போலிருக்கிறது" என்று எண்ணமிட்டான் அவன். புதுமையான இளமுறுவலுடன் ரோனா அவனைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

"எனக்கு மிகவும் களைப்பாக இருக்கிறது" என்றான் பால் சங்கடத்துடன்.

"நல்ல இறைச்சித் துண்டும், ஒரு பாட்டில் மதுவும் உங்களைச் 'சரி' செய்துவிடும். மேரியின் செங்கூந்தல் கூடத்து விளக்கின் சிற்றொளியில் பளபளத்தது. அவளது அகன்ற மை தீட்டிய கண்கள் பக்கவாட்டில் அவனைப் பார்த்தன. "நான் இறைச்சியை நன்றாகச் சமைப்பேன். நீங்கள் என்னுடன் வருவதாகத்தான் ஒத்துக் கொண்டீர்களே!...குட் நைட் ரோனா. எங்களுக்கு நன்றாகப் பொழுது போயிற்று."

பால் உறுத்துப் பார்த்தான். பிறகு அடக்கமாக இருக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான். ஜான் அவனை அநுதாபம் நிறைந்த இளநகையுடன் கவனித்துக் கொண்டிருந்தான்.

"குட் நைட் பால்!" என்றாள் ரோனா. அவளுடைய கேலிக் குறுநகை விரிந்தது.

'ரோனா கேலி செய்கிறாள்; அப்படியே இருக்கட்டும்' என்று கோபமாக நினைத்தான் அவன். உடனே மேரியின் கையை இறுகப் பற்றிக் கொண்டான். பிறகு, "குட் நைட்" என்று பால் பதிலிறுத்ததும், அவர்கள் படிகளில் இறங்கினார்கள்.

மேரிஃபைனின் எழில் வதனம் வலியால் சுளித்தது. "ஓ! வலிக்கிறது" என்றாள் மெதுவாக.

அவன் பிடியைத் தளரவிட்டான்.

''உங்கள் பலம் உங்களுக்குத் தெரியவில்லை, பால்!'' என்று அவனை ஓரக் கண்களால் பார்த்தாள். பிறகு முகத்தில் முறுவல் மின்ன அவன் தோளின்மீது சாய்ந்தாள்.

வெளியே, அவள் கையை விட்டு விட்டு உறுதியுடன் நின்றான் பால். அவனது சினம் நழுவிக் கொண்டிருந்தது. ஒரு கணம், அவள் தனது பட்டுக் கூந்தலை அவனுடைய தோள்மீது சாய்த்துக் கொண்டிருந்தாள். பிறகு அவனை நிமிர்ந்து நோக்கி, கண்களில் விரிந்த வெகுளித்தனத்துடன் சொன்னாள்: நிஜமாகவே ஐஸ் பெட்டியில் சிறிது இறைச்சி வைத்திருக்கிறேன். ஒரு பாட்டில் 'ஒயின்' கூட இருக்கிறது. என் அறையும் சிதளமானது...'' மூன்றாவது அவென்யூவின் கோடியில் ஒரு டாக்ஸி நின்றது. அவள் கையைத் தூக்கி ஜாடை காட்டினாள். அது அவர்கள் பக்கமாகத் திரும்பி வந்தது.

'' இதோ பார்—'' அவன் ஆரம்பித்தான்.

'' ஆமாம், இதோ பாருங்கள்!'' என்றாள் அவளும் நகைத்துக் கொண்டே. வீதி விளக்கின் ஒளியில் அவள் கூந்தல் மின்னியது; திறந்திருந்த அவளுடைய கோட்டு தாழ்ந்து இறங்கி, கறுப்பு உடைக்கு மேலே கழுத்தை வெண்மையாகக் காட்டியது. அவள் அவனுடைய கையை விளையாட்டாகப் பிடித்து, மேலே உதடுகள் வரை தூக்கி, அழுத்தமாகக் கடித்தாள்.

'' என்ன இது?'' அவன் கோபத்துடன் கேட்டான். அவள் மீண்டும் சிரித்தபடி, அவனை டாக்ஸிக்குள் இழுத்தாள். அவன் மேலே ஒரு கணம் நிமிர்ந்து, விளக்கொளியுடன் திகழ்ந்த பச்சைப் பலகணிகளைப் பார்த்தான். பிறகு பற்கள் இறுக அவன் டாக்ஸிக்குள் அமர்ந்தான்.

'' ஏனென்றால், உங்களுக்குக் கோபம் வருவதைப் பார்க்க எனக்கு ஆசை'' என்ற மேரி மெதுவாக அவன் கையை எடுத்துப் பார்த்தாள். பிறகு தன் ஓரக் கண் பார்வையை அவன்மீது திருப்பும் போது, அவள் முறுவல் பெரிய சிரிப்பாக மாறியது. '' மிகவும் கோபம் கொள்ளும் மனிதர்களை எனக்குப் பிடிக்கும்'' என்றாள்.

முதல் திருப்பத்திலேயே அவன் டிரைவர் பக்கம் குனிந்து சொன்னான்: '' இங்கே நிறுத்து, ஜோ.'' பிறகு கதவைத் திறந்து கொண்டே அவன் கையில் ஒரு டாலரைக் கொடுத்து விட்டுக் கீழே குதித்தான்.

'' ஏன்...?'' என்றாள் அவள் தன் குரலை உயர்த்தி.

'' ஏனென்றால் நீ கோபப்படுவதைக் காண நான் விரும்புகிறேன். ஆமாம், நீ மிகவும் கோபம் கொள்வதை!'' என்றான் அவன். பிறகு அங்கிருந்து கிளம்பி வேகமாக நடந்தான். அவள் கூப்பிட்டாள்; ஆனால் அவன் திரும்பிப் பார்க்கவில்லை.

மேலே லெக்ஸிங்டன் வரை சென்ற அவன் ஒரு சிறிய பானக் கடையினுள் நுழைந்தான். அதன் கதவில், 'பென்னீஸ்' என்று பாதரச விளக்குக் குறியிருப்பதை அவன் கண்டான்.

கடைச் சிப்பந்தி இன்னமும் கண்ணாடி தம்ளர்களைப் 'பாலிஷ்' செய்து கொண்டிருந்தான். புதுத் தோற்றமுள்ள அந்த அழகி இன்னமும் தன் நண்பனுடன் அங்கே அமர்ந்திருந்தாள். அவர்கள் அவனைப் பார்த்தார்கள். இத்தடவை அவர்கள் ஒரு முறுவலையும் நெளிய விட்டனர்.

"பழைய வழக்கம் திரும்புகிறதாக்கும்" என்று அக் கடைச் சிப்பந்தி மெதுவாகத் தலையை ஆட்டினான். "அவன் குறிப்பிடுவது என்ன?"

அத்தியாயம் 4

'பார்ட்டி' முடிந்து விட்டது. அச் சிறு கூடமெங்கும் விடை பெற்றுக் கொள்ளும் சொற்றொடர்கள் தெறித்து, மேலே மாடிப்படிகளின் மீது மோதி எதிரொலித்தன. பொழுது மிக அழகாகப் போய் விட்டது; இன்பமாகவும் போய் விட்டது. காலியாக இருந்ததால், இப்பொழுது மிகவும் பெரிதாகத் தெரிந்த தன் அறைக்குள்ளே மெதுவாகத் திரும்பி வந்தாள் ரோனு. மேஜைத் துணிமேல் சிந்திக்கிடந்த மீன் கறியைப் பொறுக்கினாள்; முற்றிலும் நிரம்பி வழிந்த சாம்பல் கிண்ணத்தை அப்புறப்படுத்தினாள்; சிறிய விளக்கு 'ஸ்டாண்டி'ன் மீது பாதி குடித்துவிட்டு வைக்கப்பட்டிருந்த 'கிளாஸ்'களை எடுத்தாள். கணப்பு முழுவதும் அரைகுறையான சிகரெட்டுகள், நெருப்புக்குச்சிகள், சாம்பல் முதலியவற்றால் நிரம்பி வழிந்து ஆழ்ந்த பச்சைச் சுவர்கள் மட்டுமே தூய்மையாக இருப்பதாக நினைத்தாள் ரோனு; ஆம், அந்தச் சுவர்களும், வெண்மையான படத்தின் சட்டங்களும்! இப்போது இரு பலகணிக் கதவுகளையும் ஸ்காட் திறந்ததால் காற்றில் படபடக்கும் திரைச்சீலைகளும் சுத்தமாகத்தான் தோன்றின. கணப்பின் வலப்பக்கத்திலிருந்த சிவப்பான நாற்காலி மீது அவள் அமர்ந்தாள். அவள் கையிலே அழுக்கடைந்த இரு தம்ளர்கள் இருந்தன; அவற்றை எங்கே வைப்பதென்று தீர்மானிக்கக் கூட அவளுக்குத் திராணியில்லை. ஸ்காட் அவளருகே வரவோ, அவளைத் தாங்கிக் கொள்ளவோ அல்லது முத்தமிடவோ எந்த முயற்சியும் செய்ய

வில்லை. திறந்த சாளரத்தண்டை அவன் இன்னமும் நின்று கொண்டிருந்தான்.

தெருவிலிருந்து மகிழ்ச்சிகரமான இறுதி வார்த்தைகள் ஒலித்தன. ''டாக்ஸி! டாக்ஸி!'' என்று மர்ரேயின் குரல் கேட்டது. ஒரு பெண்மணி 'கலகல' வென்று நகைத்தாள்.

''அவன் ஏன் தெல்மாவை அழைத்து வந்தான்?'' என்று தீனமாக வினவினாள் ரோனு. ''அவள் வயதில் முற்றிய ஒரு குடிகாரி!'' பெருமூச்சு விட்ட அவள் கிளாஸுகளைக் கணப் பண்டை வைத்தாள்.

''தான் செல்லும் பார்ட்டிகள் பலவற்றிற்குத் தெல்மா மர்ரேயை அழைத்துப்போகிறாள்'' என்றான் ஸ்காட்.

''அதை அவன் நம் செலவில்தான் திருப்பி அளிக்க வேண்டுமா? ஜானையும் மற்றவர்களையும் அவள் மிகவும் நோக அடித்துவிட்டாள். அவளை இங்கே சொணர்ந்த மர்ரே ஏன் அவளைக் கவனித்துக்கொள்ளவில்லை? எல்லாவற்றையும் விட அவனையே நாம் ஏன் அழைத்தோம்?... ஓ! மன்னித்து விடுங்கள், ஸ்காட்! நான் வெறுமே ஏதோ சொல்லிவிட்டேன்.''

இன்னமும் நிமிர்ந்து நோக்காமல், ஸ்காட் மெதுவாகச் சொன்னான்; ''மர்ரேயின் பெருந் தவறை இப்போதுதான் நான் உணர ஆரம்பிக்கிறேன்.''

''அவன் வழிகள் பத்தாம் பசலியானவை. இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்பு அவை சரியாக இருந்திருக்கும். ஆனால் இப்போதில்லை.''

''நீ என்ன சொல்கிறாய்?'' ஸ்காட் அறையை நோக்கித் தன் பார்வையைத் திருப்பினான்.

''அவன் நினைத்துக் கொண்டிருப்பது போல் அப்படியொன்றும் நல்ல பேச்சாளன் இல்லை என்றுதான் சொல்லுகிறேன். நமது விருந்தாளிகள் பலரை நோக அடிப்பதில் மட்டுமே அவன் வெற்றி கண்டான்'' என்றாள் ரோனு.

''அவர்களுக்கு எதிரான எண்ணங்கள் அவனுக்கு இருப்பதைத் தவறென்று சொல்லலாமா? நாமெல்லோரும் ஒரேவிதமாகப் பேச வேண்டும், ஒரே விதமாகச் சிந்திக்க வேண்டும் என்பதா உன் எண்ணம்?''

''இல்லை, என் அன்பே!'' அவள் எழுந்து அவனருகில் வந்தாள். ''நாமிருவரும் இந்த அறையில் நின்று தர்க்கம் செய்வதை நான் விரும்பவில்லை. ஆனாலும் நல்லதை நல்லதென்றும், தீமையைத் தீமையென்றும் நாம் புரிந்து கொள்ள வேண்டாமா?''

''எது நன்மை, எது தீமை என்பது அவரவர் மனோதர்மத்தைப் பொறுத்தது'' என்றான் ஸ்காட்.

''நான் அப்படி நினைக்கவில்லை. வாழ்வின் சிறு விஷயங்களைப் பற்றி வேண்டுமானால் அப்படி நினைக்கலாம். அவைகள் நீங்கள் சொல்வது போலவும் இருக்கலாம். ஆனால் பெரிய விஷயங்களில், எது நல்லது எது கெட்டது என்பதை நாம் தீர்மானித்துத்தானாகவேண்டும். இல்லையெனில் நல்ல தீர்ப்பே அற்று விடும், மர்ரேயைப் போல. அவன் ஒரு கிளிப்பிள்ளை மாதிரித்தான்!'' என்று ரோனா கவலையுடனும், துன்பத்துடனும் ஸ்காட்டை நோக்கினாள். அவள் அங்கிருப்பதையே மறந்துவிட்டவன் மாதிரி இருந்தான் அவன்.

இறுதியில் அவன் கடுமையாகக் கூறினான்: ''மர்ரே உனக்குத் தொந்தரவு அளித்திருந்தால், அதற்காக நான் வருந்துகிறேன். இனிமேல் அவனை நான் அழைக்கவே மாட்டேன்.''

''அவன் உங்கள் அப்பாவைக் குதித்தெழச் செய்து விட்டான்.''

''அப்பாவையா?'' அவன் குரல் இறுகியது.

அது தான் விஷயம் என்று நினைத்தாள் ரோனா. அவளுடைய கவலை கலைந்தது. ஆனாலும், ஸ்காட்டின் பக்கலில் நின்றுகொண்டு, எதிரே தெரிந்த ஒளி சிந்தும் பலகணிகளையும், தட்டையான கூரைகளிலிருந்து புகை கக்கும் துவாரங்களையும் கவனித்துக்கொண்டிருந்த அவள் இன்னமும் துயரத்துடனேயே இருந்தாள். ஸ்காட் இன்றைய இன்னல்களையெல்லாம் மறந்து, தன்னைக் கைகளால் அணைத்து முத்தமிட வேண்டுமென்று அவள் காத்துக்கொண்டிருந்தாள். எனவே சமாதான தோரணையில், ''இன்று நகரத்தில் தங்க முடியவில்லையே என்று உங்கள் அப்பாவுக்கு மிகவும் ஏமாற்றம். அதனால் அடுத்த வாரம் நம்மை அவரோடு சாப்பிட அழைத்தார்'' என்றாள்.

''ஆமாம்.''

''ஸ்காட், இன்றிரவு அவர் ஸ்டாண்டனில் இருந்தாக வேண்டும். முடிந்திருந்தால் அவர் நிச்சயம் நம்முடன் தங்கியிருப்பார்.''

''அப்படித்தான் நினைக்கிறேன்.'' ஸ்காட் எழுதும் மேஜையிலிருந்து ஏதோ ஒன்றை எடுத்துப் பார்த்து விட்டு, அதைத் தூக்கி எறிந்தான். இன்றிரவு நடக்க விருந்த குடும்ப விருந்தின்போது, மறைந்து கிடக்கும் புகைச்சல்களைப் போக்குவதற்காகவும், 'பொடி' வைத்துப் பேசப்படும் சிறிய பேச்சுக்களைச் 'சரி' செய்வதற்காகவும் அவன் நாள் முழுவதும் திட்டமிட்டுக் கொண்டிருந்தான். அதற்குப் பதில், அவன் தந்தை ஸ்டாண்டனுக்குத் திரும்பி விட்டார்! அவன் கோபத்துடன் நாற்காலியை மேஜையண்டை தள்ளினான்.

''ஸ்காட்!'' ரோனாவின் குரல் நடுங்கியது.

அவன் திரும்பும்போது அவள் பலவீனமுற்றிருப்பதைக் கவனித்தான். ''அன்பே! நான் மிகவும் வருந்துகிறேன். இன்றைய மாலை எனக்குக் கசப்பாகப் போய்விட்டது. அவ்வளவு தான்'' என்று மென்மையான குரலில் கூறிய அவன், அவளை அணைத்துக் கொண்டான்.

''நீங்கள் பார்ட்டியை ரசிக்கவே இல்லையா?'' அவள் அழுதே விட்டாள்.

''ஏன்... பார்ட்டி நன்றாகவே இருந்தது'' என்ற அவன், அவள் கண்களையும் வாயையும் முத்தமிட்டான்.

''நானும் வருந்துகிறேன், ஸ்காட், பாலை அழைத்ததற்காக!''

''அவன் சந்தோஷமாக இருந்தானே!''

அவள் தலையை அசைத்தபடி இளநகை பூத்தாள். ''அதே பழைய பால்! வழக்கப்படி அழகு மிக்க பெண்ணோடு போய் விட்டான்.'' பிறகு அவள் அறையைச் சுற்றிலும் நோட்டம் விட்டாள். எல்லாம் என்ன அலங்கோலம்!

ஸ்காட் மறுபடியும் அவளை முத்தமிட்டான். அவனுடைய முகச் சுளிப்பு மறைந்து முறுவல் திரும்பியது. ''அதை மறந்து விடு. நாம் வெளியே போய் தனித்து இரவு உணவை உண்போம். பிறகு சீக்கிரமாகவே உன்னை வீட்டுக்குக் கொண்டு வந்து விடுகிறேன்.''

''நான் அவ்வளவு களைப்புற்றவளாய்க் காண்கிறேனா?''

''இல்லை. நீ உன்னதமாக இருக்கிறாய். நீ பால் ஹேடனைப் பற்றிச் சொன்னது தவறு. நான்தான் இந்தப் பார்ட்டியிலிருந்து எழில் மிகுந்த பெண் ஒருத்தியுடன் போகிறேன். தொப்பியை எடுத்து மாட்டிக்கொள்ளேன்; இரண்டு ரோஜாப் பூக்கள் மட்டுமே உள்ள தொப்பியை!''

''அப்படியே'' என்றபோது அவள் விழிகள் சிரித்தன. ''ஆனால் தெல்மாவின் தொப்பியைப் பார்த்த பிறகு, தொப்பி என்றாலே எனக்குச் சிறிது பயமாக இருக்கிறது.''

''நீ தெல்மா இல்லை.''

ரோனா அனுதாபத்துடன் வினவினாள். ''அவள் மிகவும் வருத்தத்துடன் இருக்கிறாளே; தெல்மாவைப் போன்ற பெண்களிடம் என்ன குறை?''

அவன் பதில் கூறாமல் அறை முழுவதும் பார்வையை ஓட்டினான். ''நாளைக்குத் திருமதி காஸ்ப்ரோவிக்ஸை இங்கே வரச் சொல்லு. இப்போதைக்கு எல்லாம் அப்படியே கிடக்கட்டும். நிச்சயம் தானே?''

'சரி' என்று ஒப்புக்கொள்ளவோ, அவளுடைய இந்த வாரச் செலவு, வரவை மீறிவிட்டதை மறக்கவோகூடச் சிரமப்

படும்படி அவள் களைப்புற்றிருந்தாள். இந்நாட்களில் பார்ட்டிகள் என்றால் ஏகச் செலவு. அவள் சொன்னாள்: ''பெக்கியும் ஜானும் எப்படிச் சமாளிக்கிறார்களோ தெரியவில்லை. இருந்தாலும் அவர்கள் சமாளித்துக் கொள்கிறார்கள். இன்றைக்குக் கூடப் பார்த்தீர்களே—எல்லோரையும் போல அவர்கள் உயர்ந்த உடைகளில் தானிருந்தார்கள்! உங்களுக்குத் தெரியுமா, ஜானுக்கு என்னைவிடக் குறைந்த வருமானம் என்று எண்ணும்போதெல்லாம் நான் ஏதோ குற்றம் செய்வது போலவே உணருகிறேன்: உங்களால் அதைக் கற்பனை செய்ய முடிகிறதோ, என்னவோ? அவருக்கு நிறையப் பட்டங்களும் படிப்பும் உண்டு. ஒரு வருமானமும் இல்லாமலேயே நிறைய வருஷங்கள் படித்து அவர் அநுபவமும் பெற்றிருக்கிறார். இருந்தும் அவர் சம்பாதிப்பதென்ன? உதவிப் பேராசிரியராக, வருஷத்துக்கு நாலாயிரம் டாலர்கள் தாம்!''

ஸ்காட் அவளைப் போகவிட்டான்; பிறகு, ''ஆமாம்,'' என்று அறையைச் சுற்றித் தவிப்புடன் அலைய ஆரம்பித்தான். ''இது நியாயமில்லை தான். ஆனால் ஜனாதிபதியைவிட அதிகப் பணத்தைத் திரைப்பட நடிகர்களே சம்பாதிக்கும் இந்த நாட்டில் வேறென்னதான் எதிர்பார்க்க முடியும்?''

''ஸ்காட், அந்த முறையில் நான் சொல்லவில்லை. நான் சொன்னதெல்லாம் ஜானையும், பெக்கியையும் பாராட்டத் தான். அதனால் அவர்கள் கவலை கொண்டாலும், கசந்துகொள்வதில்லை. அவர்கள் கசப்படைவதானால் இவ்வளவு சந்தோஷமாக இருக்க முடியுமா?''

''தங்கள் நலம் எங்கிருக்கிறதென்றுகூட அவர்களுக்குத் தெரியாது'' என்றான் ஸ்காட். நல்லவர்களாக இருந்தாலும் முட்டாள்களைப் பார்த்து நாம் ஏன் பொறுமைப்படவேண்டும்? அவன் திடீரென்று நின்று ரோனாவைக் காணத் திரும்பினான். ''ஆமாம்...அவர்களைப்பற்றி ஏன் பேசினாய்?'' திருமணம்...ஒரு பெண்ணுக்கு அவ்வளவு முக்கியமா? ரோனாவும் அவனும் ஒருவரையொருவர் விரும்புகிறார்கள். இருவரும் உண்மையான காதலுடனும் இருக்கிறார்கள். அது போதாதா? இருவரும் சேர்ந்து காத்திருக்க முடியுமானால், அப்படிப் பொறுத்திருப்பதில் என்ன தடை? இருந்தாலும், ஜானையும் பெக்கியையும் அநுதாபத்தோடு பார்த்துப் பொறுமை கொள்வதை நினைக்கும்போது, அவனுடைய கேள்விகளுக்கு அவனாலேயே உண்மையான பதில்களைக் காண முடியவில்லை; மேல்வாரியாக அவனால் வாதம் புரியமுடியும். ஆனால் ரோனாவுடன் அவன் இப்படி மேல்வாரியாக வாதம் புரியமுடியாது. ஆர்ஃபென் அதைத்தான் சொல்லியிருக்கிறான்! 'இன்றிரவு நான் ஆர்ஃபெனைப் பார்க்கப் போகிறேன்; ரோனாவை இங்கே

திருப்பிக் கொண்டு வந்து விட்டபிறகு நான் அவனைக் காண்பேன்' என்று தீர்மானித்துக்கொண்டான் ஸ்காட். பிறகுதான் இன்றிரவு ஆர்ஃபென் எங்கேயோ 'மீட்டிங்'கில் இருப்பான் என்பது அவன் நினைவிற்கு வந்தது. அப்படியானால் நிச்சயம் வெள்ளியன்று அவனைச் சந்தித்து, இதைக் கூறவேண்டும்.

ரோனா தனக்குள், ''அவர்களைப்பற்றி நான் ஏன் பேசினேன்?'' என்று கேட்டுக்கொண்டு, பதில் தெரியாமல் தத்தளித்தாள். பிறகு, ''எனக்கே தெரியவில்லை'' என்று மெதுவாக விடை இறுத்தாள். ''ஒருவேளை பெக்கியும் ஜானும் மட்டுமே இன்றிரவு இந்த அறையிலிருந்த யாவரையும்விட முழுமையான வாழ்வை அநுபவிக்கிறார்கள் என்று நினைத்து விட்டேனோ என்னவோ? முழுமையும், பசையுள்ளதுமான வாழ்வு அவர்களுடையது; அது சிறந்ததும் இல்லையா? ஆனாலும், சம்பாதிக்கும் சக்தி என்று பேசும்போது, நம்மில் பலர் அவர்களை வாங்கி, விற்று விடலாம். அவ்வளவுதான்!''

ஸ்காட் கூறினான்: ''இன்றிரவு நான் ஒரு முடிவுக்குவந்து கொண்டிருக்கிறேன். நாம் கல்யாணம் செய்துகொள்ளப்போகிறோம்; இந்தக் கோடையில் ஒரு நாளைக் குறிப்பிட்டு விடுவோம். நாம் அதிக நாட்கள் காத்திருந்தாகிவிட்டது.'' அவன் முறுவலிக்கும்போது அவள் முகத்திலிருந்த கவலையும், சங்கடமும் மறைந்தன. தொடர்ந்து, ''என்னுடைய சம்பாதிக்கும் திறமையை நம்பித்தான் நீ இறங்கவேண்டும்'' என்றான்.

''ஓ, ஸ்காட்!'' என்று கூவிய அவள் தன் கைகளால் அவனைக் கட்டிக் கொண்டாள். அவள் இப்பொழுது களைத்தோ, துயர்கொண்டோ இருக்கவில்லை. அவர்களுடைய முறுவல் இப்பொழுது நிச்சயமற்றதாக இல்லை. அவன் அவளைப் பிடித்து, நெருக்கமாக அணைத்து, அவளுடைய பட்டுக் கூந்தலிலே முத்தமிட்டான்.

''நாம் சமாளித்துவிடுவோம். நாம் நன்றாகவும் வாழ்வோம், ரோனா. என்னை நம்பு.'' அவனுடைய பிடி அவளைச் சுற்றிலும் இறுகியது.

★ ★ ★

மகிழ்ச்சியுடன் நினைத்துப் பார்க்கக்கூடிய மற்றொரு மாலை அது—நீண்ட விருந்தும், இன்பப் பேச்சும், நல்ல நகைச்சுவையும் நிறைந்தது. ஸ்காட்டின் சோர்வு அறவே நீங்கிவிட்டது. இப்போது அநேகமாகக் காலியாகிவிட்ட அந்தச் சிறிய ஹோட்டலில் காப்பி தம்ளர்களுக்கு எதிரே அவர்கள் அமர்ந்திருந்தார்கள். ஃபிரெஞ்சுக்காரர் ஒருவருடைய ஹோட்டல் அது. அமெரிக்கர்கள் நிதானமாக அமர்ந்து, சுவையான உணவை

உண்பதைக் காண அந்த ஹோட்டல்காரருக்கு மிகவும் பிடிக்கும். சென்ற கோடையில் தாங்கள் மெக்ஸிகோவுக்கு சென்று வந்ததை ரோஜுவுக்கு நினைவுபடுத்திஞன் ஸ்காட். ''இந்தக் கோடைக்கு, ஆகஸ்டில் கனடாவுக்குச் சென்று மீன்கள் பிடிப்போம்'' என்ருன் அவன். அல்லது, அவர்கள் செப்டம்பரில் சென்ருல், அது 'ஹனிமூன்' பயணமாகவும் அமையும்.

''வேட்டையாடிக் கழிக்கவா?'' என்ருள் ரோஜு நிச்சயமில்லாமல். அழகான திறந்த உடைகளை அணிய வேட்டை முகாம் ஒன்றும் நல்ல இடமில்லை. அது 'கம்பளி உடை ஹனிமூன்' ஆகிவிடும்—ஜரிகையும், ஷிபான் பட்டும் அணியமுடியாது. செப்டம்பர், வேட்டைக் காலத்திற்கு முந்திய மாதம் இல்லையா? இருந்தும் கடந்த கோடைகளில் ஸ்காட் வேட்டையாடக் கனடாவுக்குச் சென்றது அவள் நினைவிற்கு வந்தது. எனவே பருவங்களைப் பற்றிய அவள் எண்ணங்கள் எல்லாம் தவருனது.

''வேண்டுமாஞல் அதை நாம் இன்ெஞரு சமயத்தில் வைத்துக் கொள்வோம்'' என்ருன் ஸ்காட். ''இந்த வருஷம் நாம் சிறிது சிக்கனம் பிடிக்கவேண்டும். உனக்கு ஆட்சேபமிருக்காதல்லவா?'' அவன் சிரித்தான்.

அவள் தலையை அசைத்தாள். பணத்தின் மதிப்பு மூலந்தான் அவள் எதையும் தீர்மானிப்பாள் என்று அவன் ஏன் எப்போதும் ஊகிக்கிருன்? மறு கணம், தனது சொந்த மதிப்பைப் பற்றிக் குறைவாகவே நினைக்கும் ஒருவனைக் கணவஞக அடைவது எவ்வளவு நல்லது என்று நினைத்த அவள், சற்றுமுன் வேறு விதமாக எண்ணியதற்கு வெட்கிஞள். ''கோடையை நாம் சுறுசுறுப்பாகக் கழிப்போம்'' என்ற அவள் தொடர்ந்து, ''ஏற்பாடுகள் செய்ய எவ்வளவோ இருக்கிறது.....ஓ, ஸ்காட், உங்கள் அப்பா, பெக்கி, ஜான் மூவரும் ரொம்பவும் குதூகலம் அடைவார்கள்.''

அவன் சிரித்தான். ''அவர்களுடைய மகிழ்ச்சிக்காகவா நாம் திருமணத் தேதியைக் குறிப்பிட்டிருக்கிருேம்?''

''இல்லை. ஆஞல் அவர்கள் எல்லோரும் நாம் நன்ருக இருக்கவேண்டுமென்று விரும்புகிறவர்கள். தவிர, உங்கள் அப்பாவுக்கு என்னைப் பிடித்திருக்கிறதை அறிய எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. அது எல்லாவற்றையும் எளிதாக்குகிறது.''

சரிதான், ஆஞல் என்னைக் 'கிளாரியனி'ல் அமர்த்துவதற்காகத் திட்டங்கள் மட்டும் போட்டுவிடாதே'' என்று அவன் அவளைக் கேலி செய்தான்.

''நான் போடவில்லை'' என்று அவள் தன் கண்டனத்தைத் தெரிவித்தாள். ''அதைப்பற்றி நீங்கள் ஒரு முடிவுக்கு வந்து விட்டதை நானறிவேன்.''

''அறிவாளியல்லவா?'' என்ற அவன் தன் முழங் கைகளை அழுத்தி முன்னால் சாய்ந்துகொண்டு, அவளுடைய அகன்ற கரு விழிகளைக் கவனித்துக்கொண்டே கேட்டான்: ''நியூ யார்க்கில் வேலை பார்க்கவேண்டுமென்ற என் முடிவைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?''

''நான் பாராட்டுகிறேன். இருந்தாலும் எனக்கு அது ஒருவிதத்தில் வருத்தமே'' என்றாள் உண்மையாக.

''அப்பாவை உத்தேசித்தா?''

''இல்லை அன்பே!'' அவள் புன்னகை பூத்தாள். ''எப்போதும் நான் உங்களையே நினைத்துக் கொண்டிருக்கிறேன்.''

'''மார்னிங் ஸ்டார்' பத்திரிகைக்கு என்ன வந்தது? அங்கே நான் வேலை பார்ப்பது உனக்குப் பிடிக்கவில்லையா?''

''நீங்களே குறிப்பாக 'ஸ்டாரை' விரும்பவில்லையென்று நான் நினைத்தேன்.''

''எப்படியாவது நான் பணம் சம்பாதித்தாக வேண்டுமே.''

அவள் தயங்கினாள். பிறகு, சில மாதங்காளாகவே அவள் மனத்தைக் குழப்பிக் கொண்டிருந்ததைக் கடைசியில் வார்த்தைகளாக்கினாள். ''உங்களுக்கு செய்திப் பத்திரிகை வேலை பிடிக்கவில்லையென்றால், அதை விட்டு விடுங்களேன்!''

அவன் ஒரு கணம் பதில் கூறவில்லை. பிறகு, ''நான் போர் முடிந்து திரும்பியபோது அப்படி முயன்று பார்க்கலாமென்று தான் நினைத்திருந்தேன்'' என்றான் சங்கடத்துடன். அவளுடைய முகத்தையும் அவன் ஆராய்ந்தான். ''தவிர, நீ நினைப்பது தவறு. நான் பத்திர்கை வேலையை விரும்பாமலில்லை. இதைவிட மோசமான வேலைகளுங்கூட இருக்கின்றன. ஆரம்ப காலத்தில் அது மிகவும் சங்கடமான வேலையாகத்தான் உள்ளது. போலீஸ் கோர்ட்டுகள், தீ பற்றிய விவரங்கள், முதலிய நடைமுறை விஷயங்கள்.''

''ஒரு வேளை சீக்கிரமே அவர்கள் உங்களை இவற்றிலிருந்து பிரித்து, வேறு முக்கியமான வேலைகளைக் கொடுக்கலாமல்லவா?'' வெளிநாட்டுச் செய்திகள் தாம் ஸ்காட்டுக்கு உவப்பானவையாக இருக்கும். அதைத்தான் அவர் விரும்புகிறாரென்று அவள் அறிவாள்.

''ஒருவேளை அப்படி நடக்கலாம்'' என்றான் அவன் யோசனையுடன். ''ஓ! இப்படி இருப்பதே கூடத் தேவலை: நான் 'இளாரியனில்' இருந்தால், என் அப்பாதான் எனக்குப்

பதவி உயர்வுகளைத் தருவதாக ஒவ்வொருவரும் சொல்வார்கள். அவர் சுலபமான வாழ்வைப் பெற்றவர். நிறையப் பணம். தம் தந்தையிடமிருந்த பத்திரிகைக்கு வாரிசு ஆனார். எங்கள் குடும்பத்தில் நான் ஒருவனாவது பிறர் ஆதரவின்றிச் சுயமாக நிற்கிறேன் என்பதை நிரூபிக்கும் நேரம் வந்துவிட்டது.''

''ஆனால் உங்கள் அப்பா இல்லையா? சுயமாக முன்னுக்கு வராவிட்டால், அவர் இந்த நிலைக்கு இன்று உயர்ந்திருக்க முடியுமா? அதைத்தான் நீங்களும் செய்யவேண்டுமென்கிறார் அவர். அடியிலிருந்து ஆரம்பித்து, அவரைப் போல் மேலே வரவேண்டுமென்கிறார். நீங்கள் மட்டும் இணங்கியிருந்தால் உங்களால் என்ன செய்யமுடியும் என்பதை நிரூபிக்க ஒரு நல்ல வாய்ப்புக் கிட்டியிருக்கும். நீங்கள் அவரது மகன் என்பதற்காக, உங்களுக்கு அந்த வாய்ப்பை அளிக்கக் கூடாது என்பது அர்த்தமற்ற பேச்சு. அவருடைய பத்திரிகையின் மற்ற எந்த நிருபரையும் போல், நீங்களும் அதே வாய்ப்பைப் பெற்றிருக்கலாம்.''

''அவர் அடியிலிருந்து ஆரம்பித்தார் என்று நீ சொல்கிறாய்; நானோ, அவர் அப்போதும் பத்திரிகை ஆசிரியரின் மகனாகத் தான் இருந்தார் என்கிறேன்.''

''சரி விடுங்கள், அன்பே!'' என்றாள் ரோனா சமாதான முறையில். ''அவர் ஆசிரியரின் மகனாக ஆரம்பித்ததாகவே இருக்கட்டும்.'' ஆனால் தன் தந்தையைவிட அவர் சிறந்த ஆசிரியர் என்று அவள் நினைவு ஓடியது. உள்ளூர்ப் பத்திரிகையாக இருந்த 'கிளாரிய'னை வெளிநாட்டுச் செய்திகளை நன்றாய் வெளியிடும் பத்திரிகையாக்கி, யாவரும் படிக்கும்படியும் செய்தார். ஆனால் அதை அவள் சொல்ல முடியாது—அதுவும், சங்கடமான முகச் சுளிப்புடன் ஸ்காட் மௌனியாக உள்ள இந்த நிலையிலா? ஸ்காட் ஏன் பத்திரிகை நிருபர் பதவியை ஏற்றான் என்று மீண்டும் அவள் அதிசயித்தாள். அவன் நல்லதொரு பொருளாதார மாணவன். ஏன் வர்த்தகத்தில் ஈடுபடவில்லை? முற்றிலும் வேறான துறையில் புகுந்திருந்தால், அது அவனுக்கு எளிதாக இருந்திருக்கும். அவனுக்கு மட்டுமின்றி, அவன் தந்தைக்கும் எளிதாகியிருக்கும். ஜான் டைஸன்கூட அப்படித்தான் சொன்னார். எந்த விஷயத்தையும் தெளிவாக ஆராய்ந்து முடிவு சொல்வதுதான் ஜானின் வழக்கம்.

''ஜானிடமும், பெக்கியினிடமும் வெள்ளிக்கிழமையன்று சொல்லுவோம்'' என்றாள் ரோனா.

ஸ்காட் அவள் பேச்சுப் புரியாமல் நோக்கினான்.

''கல்யாணத்தைப் பற்றி'' என்று அவள் விளக்கினாள்.

''வெள்ளிக்கிழமை; இந்த வெள்ளியா?''

''அன்று அவர்கள் நம்மை எதிர்பார்க்கிறார்கள். நீங்கள் வரமுடியாதென்று சொல்லிவிடாதீர்கள்'' என்ற ரோஜா அவனை வியப்புடன் நோக்கினாள். ஆனால் அவனுடைய முகக் குறிப்பு அவளுக்குப் பதில் தந்தது. அவள் சொன்னாள்: ''இந்த வாரம் நீங்கள் அதிகமாக வேலை செய்தது உண்மையானால். இந்த வெள்ளிக்கிழமை விடுமுறையையும் நீங்கள் தியாகம் செய்ய வேண்டியதில்லை.''

''நீ போய் ஜானையும், பெக்கியையும் பார். அந்திப் பொழுதில் வந்து உன்னைத் திருப்பி அழைத்து வருகிறேன்.''

''சரி'' என்று அவள் முறுவலிக்க முயன்றாள். ''உண்மையில் நியூயார்க்கிலேயே அதிகமாக உழைக்கும் நிருபர் நீங்கள் தான். சென்ற வாரம் ஐந்து இரவுகள் தாமதித்து வந்தீர்கள். அதற்கு முந்திய வாரம் நான்கு. அவர்கள் உங்களை இரவு 'ட்யூட்டி'யிலேயே கூடப் போட்டு விடலாம்.''

''வெள்ளிக்கிழமையன்று ஆபீஸ் வேலை இருக்கும் என்று நான் சொல்லவில்லையே. பெக்கி கூப்பிட்டபோது, முன்னமேயே நான் நிகோலஸ் ஆர்பெனுடன் அவனது பார்ட்டி ஒன்றுக்கு வருவதாகச் சொல்லியிருந்ததை மறந்து விட்டேன்: ஆனாலும் பரவாயில்லை. நான் சற்று முன்னதாகவே நழுவி வந்து விடுகிறேன். உன்னையும் அழைத்துப் போகலாம், ஆனால்—''

''வழக்கப்படி அப்பார்ட்டி ஆண்களுக்கு மட்டும், இல்லையா?'' என்றாள் ரோஜா சுருக்கமாக. பிறகு அவள் புறப்படத் தயார் செய்து கொள்ளலானாள். தன் [redacted] உறைகளைத் தேடினாள். 'டம்பப் பை'யிலிருந்து ஒரு சிறிய கண்ணாடியை எடுத்துத் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டு, தலையிலிருந்த இரண்டு ரோஜாப் பூக்களையும் கூந்தலிடையே சரியாக வைத்துக்கொண்டாள்.

''உனக்குப் பொறாமையா?'' என்றான் அவன் கேலியாக.

''இருக்கலாம்; ஆனால் நிகோலஸ் ஆர்பென் ஏன் பெண்களை அவ்வளவு ஒதுக்குகிறார்?'' என்று வினவினாள் அவள் ஒரு புன்னகையுடன். அவள் ஏன் தன்னை 'நிக்' என்று அழைப்பதை ஒப்பக்கூடாதென்றும் அவள் எண்ணினாள்.

''ஒரு வேளை பெண்களைக் கண்டு அவன் பயப்படலாம்'' என்றான் ஸ்காட், குத்தலாக.

''நான் அவரைப் பார்த்தபோது, அவர் யாரைக் கண்டுமே பயப்பட்டதாகத் தெரியவில்லையே.''

ஸ்காட்டுக்கு வேடிக்கையாக இருந்தது. ''அவன் சந்தோசமுள்ளவன். நீ அவனைப் பத்து நிமிஷங்களுக்கோ என்னவோ தானே ஒரு தடவை பார்த்தாய்?''

அது போதும் என்று எண்ணினாள் அவள்.

''உங்களுக்கு அவரை ரொம்பவும் பிடித்திருக்கிறது, இல்லையா?''

''அவன் நல்ல மனசு உடையவன். சங்கீதத்தில் நல்ல ஈடுபாடு உடையவன்.''

கையில் மாட்டிக் கொண்டிருந்த உறையைப் பார்த்துக் கொண்டே ரோஜா மெதுவாகச் சொன்னாள். ''அவர் இளைஞர்களால் சூழ்ந்திருப்பதைத்தான் விரும்புகிறார்.''

''அவனுக்குச் சங்கீதம், பீர், புகை பிடித்தல் முதலியவற்றில் பழக்கமுள்ள இளைஞர்களைப் பிடிக்கும். காலேஜ் நாட்களைத் திருப்பி அநுபவிப்பதற்காகத்தான்.'' ஸ்காட் இப்போது தானே நகைத்துக் கொண்டான். அவன் குரல் பிறகு தீவிரமாகியது. ''ஆர்பென் ஒரு சமயம் உண்மையிலேயே புரொஃபஸராகவும் இருந்தவன், தெரியுமா?''

''அவர் போதகராய் இருந்ததாக எனக்கு நினைப்பு. அவர் ஏன் மன்ரோ காலேஜை விட்டார்?''

''எனக்குத் தெரிந்தவரை—அப்போது நான் சிறுவன்—கல்லூரித் தலைவருக்கும் அவனுக்கும் ஒத்துவரவில்லை. அவர் தான் சுயநியமனம் பெற்ற சர்வாதிகாரி என்பது உனக்குத் தெரியுமே!''

''ஆனால் வேறெங்கேயாவது காலேஜிலேயே சேருவது தானே?''

''தலைவர் அவனை மடக்கியதிலிருந்து அவனுக்கு வேறு வாய்ப்புக் கிடைக்கவில்லை. எழுதுவதுதான் இப்போது அவனுக்குத் தொழில். வாழ்விலிருந்து அவன் அதிகமாக எதையும் எதிர்பார்ப்பதும் இல்லை.''

''அவருக்கு வாழ்வு கசந்து போய் விடவில்லையே?''

ஸ்காட் சிரித்தான். ''ஓ! இல்லை! அதைப்பற்றி அவன் ஒருபோதும் பேசுவதேயில்லை. அவன் அமைதியாக வாழ்கிறான். எப்போதாவது நண்பர்களைச் சந்திக்கிறான்.''

'அவர்கள் எல்லோரும் ஆண்களே' என்று ரோஜா நினைத்தாள். அவளுக்கு இந்த உணர்ச்சியே பிடிக்கவில்லை. ஸ்காட்டின் முகத்தை—அந்த நீலக் கண்களை, குறிப்பான அழகை, நேர்த்தியான தலையின் உருவை, இயற்கையாகச் சுருண்டு புருவங்கள் வரை விழும் தலைமயிரை நோக்கினாள். பிறகு, அவள் தனது கையிலிருந்த பாக்கெட் புத்தகத்தைச் சினத்துடன் மூடினாள். தன் மீதே அவளுக்குக் கோபம். காரணம், பொறுமை

தான் என்று அவள் நினைத்தாள். அன்றொருநாள் மூன்றாவது அவென்யூவில் ஸ்காட்டுடன் நடந்துகொண்டிருந்தபோது ஒரு தடவை அவள் சந்தித்த அந்தச் சங்கோசப் பிராணியான சிறிய மனிதரிடம் பொறுமை! அப்போது நட்பு முறையில் ஸ்காட்டின் கையைப் பற்றிக் கொண்டு பேசிய அவர், அதை அவள் கவனிப்பதைப் பார்த்ததும் கையை விட்டுவிட்டார். அவள் பேசியபோது சற்றே முறுவலித்த அவர், உடனேயே எதிரில் அவள் இல்லாத மாதிரி வேறெங்கேயோ பார்த்தார். தனக்குப் பிடிக்காத பழைய சிநேகிதியைப் போல அவளை நடத்தினார். இது புதுமையானது, வெறுக்கத்தக்கது. ரோனா மேஜையிலிருந்து எழுந்தாள்.

ஸ்காட் அவள் சிந்தனையைப் படித்துவிட்டமாதிரி தோற்றினான். ''ரோனா, ஆர்பென் எப்போதாவது கொடுக்கும் பார்ட்டிகளுக்குக் கூட நான் போவதைத் தவிர்க்கவேண்டுமென்று நீ விரும்பினால் —''

''நான் அப்படிச் சொல்லமாட்டேன் என்று நீங்கள் அறிவீர்கள்!'' என்று ரோனா சட்டென்று பதிலளித்தாள். பிறர் கொடுத்துவிடுவார்கள் என்று தெரிந்த பிறகு, ஒருவன் தன் 'செக்'கை நீட்டினால் நாமெல்லோரும் எப்படிக் கோபம் கொள்ளுவோமோ, அப்படி அவள் வெறுப்படைந்திருந்தாள். பாசாங்கான ஈகைகள் எப்போதுமே அவளை வெடிக்க வைத்தன. காலி மேஜைகளுக்கிடையே அவள் துரிதமாக நடந்தாள்.

''குட்நைட்'' என்று முறுவலித்த அந்த ஹோட்டல்காரர் தாமதமாக வந்த இந்த இரண்டு விருந்தாளிகளையும் வழியனுப்பினார்.

''குட்நைட்!'' என்று சிப்பந்தியும் சிறிது குறைந்த உற்சாகத்துடன் எதிரொலித்தான். ஆனால் இப்போது மணி பதினொன்றரை ஆகிவிடவில்லையா? சட்டைப் பையிலிருந்த இனாம் பெற்ற பணத்தைப் போலவே அவன் கால்களும் கனத்தன.

''ரோனா, ஆர்பெனைப் பற்றிச் சங்கடப்படுவதை விட்டுவிடு'' என்றான் ஸ்காட், ஹோட்டல் வாசலில் அவளைப் பற்றிக்கொண்டு. ''அல்லது, என்னைப் பெண்கள் மட்டுமே உள்ள 'பார்ட்டி'களுக்குப் போகச் சொல்கிறாயா?''

அவள் தலையை அசைத்தபடி தன் கையால் அவனுடைய கையைப் பின்னிக்கொண்டாள். லெக்ஸிங்டன் அவென்யூவை நோக்கி இருண்டதொரு குறுக்குத் தெரு வழியே அவர்கள் செல்லும்போது, 'நான் அதிருஷ்டசாலி' என்று அவள் நினைத்துக்கொண்டாள். ஸ்காட் வேறு எந்தப் பெண்ணிடமும் கவனம் செலுத்துவதில்லை என்பது நிச்சயம். சில சமயங்களில் அவள் கவலையுடனோ, மகிழ்ச்சி இன்றியோ இருக்கிறாள் என்றால், அதற்குக் காரணம், கடந்த மூன்று வருஷங்களாகப் பரஸ்பரம்

காதலித்து, நிச்சயதார்த்தம் செய்துகொண்டு ஒரு வருஷமாகியும் அவர்கள் கல்யாணம் செய்துகொள்ளாததுதான். இப்படிப் பொறுத்திருப்பது சில சமயங்களில் சோதனையாகவே தோற்றியது. சில சமயங்களில் ஸ்காட் கல்யாணத்தைப் பற்றித் தீர்மானம் செய்யாமலிருப்பதற்குத் தக்க காரணம் இல்லையென்று நினைக்கும்போது அவள் பொறுமை பறந்துவிடும். 'நான் மட்டும் காதலுள்ள ஆண்மகனாக இருந்தால், ஒரு நிச்சயதார்த்த மோதிரத்திற்காகக் கூடக் கவலைப்பட மாட்டேன். காதலியை மணந்து கொண்டு, ஒரே அறையுள்ள விடுதியில் கூட அவசியமானால் வாழ்க்கையைத் தொடங்கிவிடுவேன். ஆனால் அது காதல் வேகத்தில் பிறந்த செய்கையாக இருக்கலாமே ஒழிய, அறிவு நிறைந்த செயலாக இல்லாமலிருக்கலாம். ஸ்காட் புத்திசாலி. தாம் எங்கே போகிறோம் என்பதை அவர் நன்கு அறிந்திருக்கிறார். இருந்தாலும் அவர் தமது காதல் வேகத்தைக் கொஞ்சமாவது காட்டியிருக்கலாம்.' அவள் முகம் புன்னகையால் மலர்ந்தது.

''ஏன் இந்தப் புன்சிரிப்பு?'' என்று அவன் கேட்டான்.

''உங்களை நினைத்துத்தான்; மெக்ஸிகோவில் நாம் சேர்ந்து கழித்த நாட்களை நினைத்து'' என்றாள் அவள்.

அவன் அவள் கைகளை அழுத்தினான். லெக்ஸிங்டனுக்குள் திரும்பும்போது அவர்களுடைய நடை தளர்ந்தது. ஹோட்டல்கள், பானக் கடைகள் இவற்றின் மீது இருந்த பாதரச விளம்பரங்கள், கிறிஸ்துமஸ் மரத்தின் மீதுள்ள வண்ணங்களைப் போல் 'பளி'ச்சென்று ஜ்வலித்தன. நடைபாதைகளில் இன்னும் நடமாட்டம் இருந்தது. சினிமாவிலிருந்தும், தாமதமாகக் காரியாலயத்திலிருந்தும், நண்பர்களைப் பார்த்துவிட்டும் வரும் ஜனங்கள் வீடுகளை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தார்கள். பாதாளப் பாதையில் ஒரு ரெயில் வண்டி 'கண கண'த்தது. அவென்யூவின் கீழ்க்கோடியிலே இருந்த 'ஜெனரல் எலெக்டிரிக்' கட்டடத்தின் மீது மாறும் விளக்குகள் மணிமுடிபோல் பிரகாசித்தன. கம்பீரமாக உயர்ந்து நின்ற 'க்ரைஸ்லர்' கட்டடம் ஆழ்ந்த செவ்வானத்தைச் சுட்டிக் கொண்டிருந்தது.

''ஒரு தடவை 'ப்ளு ஏஞ்சலு'க்குப் போய் வருவோமா? சார்லஸ் ட்ரென்ட் அங்கே பாடுகிறான்'' என்று திடீரெனக் கேட்டான் ஸ்காட், அவர்கள் ஐம்பத்தைந்தாவது தெருவை நெருங்கியதும். ரோனாவுக்கு ட்ரென்டின் பாட்டு என்றால் பிடிக்கும், அவை அவளை மகிழ்ச்சியில் ஆழ்த்தி, ஆர்பெனைப் பற்றிய எண்ணத்திலிருந்து விடுதலையளிக்கும். அவனுடைய பெயரை அவன் ஏன் சொல்லித் தொலைத்தான்?

''ஏன் உனக்கு மிகவும் களைப்பாக இருக்கிறதா?'' என்று கேட்டான் ஸ்காட்.

''கொஞ்சம்'' என்று அவள் ஒப்புக்கொண்டாள்.

''அந்தப் பழைய சோர்வு உணர்ச்சி சிறிதே வந்திருக்கிறது.''

''நாம் நாளை இரவு போவோம். இல்லை....நாளைக்கு முடியாது'' என்றான் அவன்.

ஸ்காட் நாளைய தினம் அதிக நேரம் வேலை செய்வார் என்பது அவள் நினைவிற்கு வந்தது. இந்த வாரம் முழுவதுமே அவர் ஓய்வின்றித்தான் இருந்திருக்கிறார். ஒருவிதத்தில், அவள் கொலம்பியா சர்வகலாசாலையில் இரவு வகுப்புகளில் படிப்பது அதிருஷ்டந்தான்—அதனால், அவள் தன்னைச் சுறுசுறுப்பாக வைத்துக்கொள்ள முடிகிறது; செய்வதற்கு எவ்வளவோ வேலைகள் இருக்கின்றன.

''அடுத்த வாரம் ஒரு நாள் போவோம்'' என்றான் அவன். அவள் தலையை ஆட்டினாள்.

''இப்போது வெள்ளி இரவன்று நடக்க இருக்கும் ஆர்பெனின் பார்ட்டியைப் பற்றி வேதனை கொள்ளாதே. நான் சீக்கிரமே திரும்பி பெக்கியின் வீட்டில் உன்னோடு சேர்ந்துகொள்கிறேன். நிச்சயம் பதினொரு மணிக்குள் திரும்பிவிடுகிறேன்.''

அவள் மீண்டும் தலையை ஆட்டினாள்.

''நீ மிகவும் களைத்திருக்கிறாய்'' என்றான் அவன் ஆதுரத்துடன்.

'ஆமாம்' என்று அவள் நினைத்தாள். திடீரென்று அவள் களைத்துவிட்டிருக்கிறாள். மந்தமாகவும் ஆகியிருக்கிறாள். அவள் உடனே படுக்கப் போவது நலம். அலங்கோலமாக இருக்கும் அறைகளை அப்படியேதான் விட்டுவைக்கவேண்டும். காலையில் சீக்கிரம் எழுந்தால் எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்திவிடலாம். ஒரு புது நாளை ஆரம்பிக்க அது ஒரு நல்ல முறையில்லைதான். வேலை பார்க்கும் ஒரு பெண்ணின் களிப்பு இதுதானோ என்று அவள் சோர்வுடன் நினைத்தாள்.

வீட்டை அடைந்ததும் அவன் தன் கையால் அவளுடைய இடுப்பை வளைத்தான். ''நீ வீட்டுக்கு வந்துவிட்டாய், அன்பே. விழித்துக்கொள். படுக்கையில் படுக்கும் முன்பே நீ தூங்க முடியாது. நானும் வந்து திருடன் யாராவது இருக்கிறானா என்று தேடட்டுமா?''

தானும் முறுவலிப்பதை அவள் உணர்ந்தாள். அது ஸ்காட்டின் மிகப் பழைய ஹாஸ்யம். ''இன்றிரவு வேண்டாம், அன்பே. சீக்கிரம் உங்களைப் பார்க்கிறேன்'' என்ற ரோனு அவனை முத்தமிட்டாள். பிறகு வேகமாகப் படிகளின் மீது ஏறினாள்.

அப்பொழுது அவன், ''சரி, நாளைக்கு உன்னைச் சந்திக்கிறேன்'' என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

அத்தியாயம் 5

வெள்ளிக்கிழமை காலை பதினேரு மணிக்குச் சற்று முன்பாக, ஐந்தாவது அவென்யூவில் 'ட்ரெண்டு' அலுவலகம் இருந்தகட்டடத்திற்குள் நுழைந்தான் பால் ஹேடன். 'லிஃப்டி' லிருந்து வெளியேறி மேஜை ஒன்றின் பின்னே கவர்ச்சியாக அமர்ந்திருந்த வரவேற்பளிக்கும் பெண்ணின் முன் வந்து நின்றான் அவன். முன்பெல்லாம் இங்கு வருபவர்களை வரவேற்க அழகிய பெண் யாரும் கிடையாது. எனவே பால் ஹேடனுக்கு இன்று வியப்பாகவே இருந்தது.

''என்ன வேண்டும்?'' என்று அவனுக்கு இப்படி ஒரு வியப்பை ஊட்டிவிட்ட பெருமையுடன் வினவினுள் அவள்.

''என் பெயர் பால் ஹேடன். 'அம்ச' இலாகா ஆசிரியர் மிஸ்டர் க்ரோவெல்லைக் காண வேண்டும்.''

''ஒரு நிமிஷம்; உட்காருங்கள்!'' அவள் மெதுவாக டெலிபோனைக் கையிலெடுத்தாள்.

பால், முட்டி வந்த முறுவலை அடக்கிக் கொண்டான். வெள்ளைத் தோல் மெத்தையோடு கூடிய ஒரு நாற்காலியில் அமர்ந்த அவன் கண்கள் கீழேயிருந்த சாம்பல் நிறக் கம்பளத்தின் மீதும், பிறகு ஊதாச் சுவரிலே சிவப்புச் சட்டங்களுடன் தொங்கிய படங்களின் மீதும் பதிந்தன.

''மிஸ்டர் க்ரோவெல் இன்று உள்ளே இல்லை. ஆனல் மிஸ்டர் வெயிட்லர் உங்களைக் காண விரும்புவதாக அவருடைய காரியதரிசி சொல்கிறுள்'' என்றுள் அவள்.

பாலின் புருவங்கள் வியப்பால் உயர்ந்தன.

''மிஸ்டர் க்ரோவெல்லின் காரியதரிசி உங்களை அழைத்து—''

''சிரமம் வேண்டாம். எனக்கு வழி தெரியுமென்று சொல்லி விடுங்கள். நேராகச் சென்று இடது பக்கம் திரும்ப வேண்டுமில்லையா?'' என்று அவன் எழுந்து கதவை நோக்கி நடந்தான். அவள் பதில் சொல்லவில்லை. ஆனல் இத்தடவை இன்னும் அவசரமாக டெலிபோன் செய்தாள். அத்துடன் அவனைக் கலக்கத்துடனும் பார்த்தாள். மனிதப் பண்புடன் இருக்கையில் அவள் மேலும் எழிலுடன் விளங்குகிறுள் என்று நினைத்தான் பால்.

இருபுறமும் ஆபீசுகள் உள்ள நீண்ட நடைபாதையினுள் அவன் நுழைந்தான். சில அறைகள் மூடப்பட்டிருந்தன: ஆலோசனைக் கூட்டங்கள் நடக்கக்கூடும். திறந்திருந்த மற்ற அறைகளின் உட்புறங்களில் சுறுசுறுப்பாக அலுவல்கள் நடந்து

கொண்டிருந்தன. காத்திருப்பதற்கான அறையில் காணப்பட்ட டாம்பீகம், இங்கே திறமையாக மாறியிருந்தது. அவனுக்குச் சிறிது திருப்தி; 'ட்ரெண்டு' நல்ல பத்திரிகை; வேலை செய்ய ஏற்ற இடம்; அதன் பெயரையும், அமரும் அறையையும் தவிர!

இரண்டு மூன்று மனிதர்கள் துரிதமாக ஏறிட்டு நோக்கிய படி அவனைக் கடந்து போனார்கள். அந்த விசாலமான ஆபீசிலிருந்து நரைத்த கூந்தலும், இனிய முகமும் உடைய பெண்மணி ஒருத்தி அவசரமாக வெளியே வந்து, ''யாரு? என் கண்கள்—'' என்று இழுத்தாள்.

''உண்மைதான் சொல்கின்றன!'' அவன் அவளுடைய கைகளைப் பற்றி உற்சாகத்துடன் குலுக்கினன். திருமதி ஹர்ஷியை அவனுக்கு எப்போதுமே பிடிக்கும். முன்பே தெரிந்த ஒருவரை இங்கே காண்பதில் எனக்கு மகிழ்ச்சி.''

''நீங்கள் திரும்பி வருகிறீர்களா?'' என்று அவள் ஆவலுடன் கேட்டாள். அதே சமயம், 'முன்பைவிட பால் இன்னமும் நன்ருக அல்லவா இருக்கிருர்? சற்றுத் தீவிரமாகத் தோன்றினுலும், எவ்வளவு வேகமாகவும் உண்மையுடனும் கைகுலுக்கினுர்?' என்று எண்ணமிட்டாள் அவள்.

''எனக்கே இன்னமும் தெரியாது. ஆனல் ஒரு சிலருக்கு நான் திரும்புவது பிடிக்கவில்லையென்று கேள்விப்படுகிறேன்!''

''ஏன்..? அது வெறும் குரோதம்தான்!'' என்ற அவள் சட்டென்று எதிர்ப்பட்ட இளம் காரியதரிசி ஒருத்தியைச் சுட்டிக் காட்டி, ''மிஸ். கட்மென்!'' என்ருள்.

''மிஸ்டர் ஹேடன்! மீண்டும் உங்களைப் பார்க்க மகிழ்ச்சி!'' என்ருள், கண்ணைப்பறிக்கும் வெள்ளைக் கோட்டில் இருந்த மிஸ் கட்மென்.

''ஹலோ, ஆன்னி!'' என்ருன் ஹேடன்.

ஆஸ் கட்மெனின் பவுடர் முகங்கூட இன்பத்தால் சிவந்தது. அவள் ஆபீசில் 'ஆன்னி' யென்று அழைக்கப்பட்டு வெகு நாட்களாயிற்று. எனவே 'கலகல'வென்று சிரித்த அவள், ''அப்படியானல் நீங்கள் எங்களை எல்லாம் மறந்து விடவில்லை!'' என்ருள்.

''நீங்களிருவரும் இல்லையெனில் இந்த ஆபீஸ் திறமையுடன் இயங்கும் என்று என்னல் கற்பனை கூடச் செய்ய முடியாது'' என்ருன் அவன். அது ஒருவிதத்தில் உண்மையே; தொடர்ந்து, ''உங்களைப் பிறகு சந்திக்கிறேன்; இப்போது நான்—'' என்று இழுத்த அவன் எசமானரது அறையை நோக்கித் தலையை ஆட்டினன்;

அவன் நடந்து செல்வதை மிஸ் கட்மென் கவனித்தாள். பிறகு, தான் அவனைப் பற்றித் தவறாக எண்ணியதை நினைத்துக் கொண்டாள். ''நேற்று நான் பத்து டாலர்கள் கொடுத்துக் கூந்தலைச் சுருட்டிக் கொண்டேன். ஆனால் அவர்கள் என் தலையைப் பாழாக்கி விட்டார்கள்! அவர்கள்மீது நான் வழக்குக் கூடத் தொடுக்கலாம்!'' என்று அவள் தனது இறுக்கமான கேசச் சுருளைத் தொட்டுக் கொண்டே சினத்தோடு கூறினாள்.

''பரவாயில்லை, அன்பே. அதற்கு ஈடாக உன் வெள்ளைக் கோட்டு அழகாக இருக்கிறது'' என்று முறுவலித்தாள் திருமதி ஹார்ஷி.

★ ★ ★

மிஸ்டர் வெயிட்லரின் காரியதரிசி அவனுக்காகக் காத்திருந்தாள்.

''மிஸ்டர் ஹேடனா?'' அந்த இள நங்கையும் புதிய பெண்தான். இவர்களையெல்லாம் காண்கையில், தான் முதுமையின் முனையில் நிற்பவன் மாதிரி உணர்ந்தான் பால். அவன் சீக்கிரமே 'அந்த நாட்களில்' என்று பேச ஆரம்பித்து விடுவான். வெண்மையான மெத்தைகளுள்ள நாற்காலிகளும், சிவப்புச் சட்டங்களுள்ள படங்களும் இருந்த ஒரு சிறிய அறை வழியே அவனை அழைத்துச் சென்றாள் அவள். ஆனால் உள்ளேயிருந்த ஆபீஸ் மட்டும் பழைய முறையிலேயே இருந்தது. காகிதங்களால் நிரம்பியிருந்த தன் மேஜையை விட்டு எழுந்திருக்கு முன்னமேயே, வெயிட்லர் கைகளைக் குலுக்கி, எதிர்பாராத விதத்தில் வசதியுடனிருந்த ஒரு பழுப்பு நாற்காலியில் அவனை அமரச் செய்தார். இவ்வளவு சீக்கிரம் 'ட்ரெண்டு' ஆபீசுக்குள் வரத் தீர்மானித்ததை நினைத்து மகிழ்ந்து கொண்டான் பால்.

வெயிட்லர் தோற்றத்தில் அதிகமாக மாறாமல் இருந்ததைக் கண்டு அவன் சந்தோஷப்பட்டான். குட்டையான பருத்த மனிதர் அவர். சதுர வடிவமான சிவந்த முகம்; புரண்டு ஆடும் நரைத்த சிகை; அறிவு ததும்பும் கண்கள்; தயாராக நிற்கும் புன்முறுவல்! எதிலும் நல்ல முடிவையே எதிர்பார்க்கும் மகிழ்ச்சி மிக்க மனிதர் அவர். எதிர்காலத்தைப் பற்றி எல்லோரும் கலங்கியிருந்த நாட்களில், தமது முப்பதாவது வயதில் அவர் 'ட்ரெண்டை' ஆரம்பித்தார். இலக்கியம், ஓவியம், இசை முதலிய இலாகாக்களுடன், 'கலைகளுக்காகவே அர்ப்பணிக்கப்பட்ட' சிறிய பத்திரிகையாக ஆரம்பித்து, மெள்ள மெள்ள அதை 'வாழ்விற்கு ஒரு பத்திரிகை' யாக விஸ்தரித்தார். பிறகு இலாகாக்களும் அதிகமாயின.

ஆனால் முக்கியத்துவம் என்னவோ பொதுவாகக் கலைகளுக்குத் தான். அரசியல், தனிப்பட்ட பெரிய மனிதர்கள், தலையங்க விமர்சனம் முதலியவற்றிற்கு அதில் இடமில்லை.

இப்போது வெயிட்லர் பாலுக்கு ஒரு சிகரெட்டை அளித்துவிட்டு, பலகணிக்கு வெளியே பார்ப்பதற்காக நாற்காலியைத் திருப்பிக் கொண்டார். அறிவுத் தாகம் கொண்ட மக்களின் ஆசையை நிறைவேற்றி, அதன் மூலம் பத்திரிகையின் விற்பனையை அதிகரித்தது போலவே, மக்களின் தொடர்பைப் பற்றிய தமது சொந்தக் கருத்துக்களின் மீதே பத்திரிகையை நிறுவினார் அவர். நல்ல நபர்களாகத் தேர்ந்து வேலையில் அமர்த்தி, அவர்களை நன்றாக நடத்தியதுடன், அவர்கள் தம்மைச் சகஜமாக அணுகும் முறையிலும் இருந்து வந்தார். 'கடவுளுக்கும் மேல் உயர்ந்தவன்' என்ற இறுமாப்பெல்லாம் அவரிடமில்லை. இந்நாட்களில், எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு, தம் கீழ் பணிபுரிபவர்களையும் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் கஷ்டந்தான். சண்டைக்குப் பிறகு, இசை, ஓவியம், கட்டடக் கலை இவற்றில் சிரத்தை அதிகமாகிவிட்டிருந்ததால், அவருடைய பணியாட்களும் இரு மடங்காகியிருந்தனர். அவர் உன்னிப்பாகப் பாலை பார்த்துவிட்டு, ஒரு சிகரெட்டைக் கொளுத்திக்கொண்டே தம் காலை சாளரக் கட்டையின் மீது தூக்கி வைத்துக் கொண்டார்.

"நல்லது பால், இவ்வளவு சீக்கிரம் நீ எங்களைக் காண வந்ததில் மகிழ்ச்சி."

"உண்மையில் நான் நினைத்ததற்கும் சீக்கிரமாகத்தான் வந்திருக்கிறேன்" என்றான் பால். அவன் வந்தது என்னவோ தனது பழைய இலாகாவைச் சேர்ந்த க்ரோவெல்லைப் பார்ப்பதற்கும், ஆபீசின் நிலையைப்பற்றி அறிந்துகொள்ளுவதற்குந் தான்.

"ஓய்வுகூட அலுத்துப் போய்விட்டது, இல்லையா? ஆனால், நீ இங்கே உடனே வேலையில் அமருவது எங்களுக்கு நல்லது."

இம்மாதிரியான வரவேற்பு பால் ஹேடனை அயரவைத்தது. நிச்சயமான நாட்களைக் குறிக்கக்கூட அவன் இன்னமும் தயாராகவில்லை. தனது எதிர்காலத்தைக் கவனமாக வகுத்துக் கொள்ள அவனுக்கு அவகாசம் தேவையாக இருந்தது. வாழ்க்கையில் இது இரண்டாவது ஆரம்பம் மாதிரி. இந்த விஷயத்தில் அவசரப்படலாமா? "இந்த வேலை விஷயத்தில் எனது நிலை எப்படியிருக்கிறது என்று அறியமட்டுமே நான் வந்தேன்" என்ற அவன் அச்சிறிய அறையைச் சுற்றிலும் கண்களை ஓட்டினான். அங்கே அவருடைய மனைவியின் சிரித்த முகத்தையும், இரண்டு உருண்டைக்காரப் பையன்களின்

உருவங்களேயும் கண்டான். அத்துடன் படகு வலித்துப் பரிசு பெற்ற வெள்ளிக்கோப்பையும், பிரநேசியின் ஓவியங்கள் பலவும் அங்கே இருந்தன. ''இந்த அறை அப்படியே இருப்பதைக் காண எனக்கு மகிழ்ச்சி. முதலில் இந்த ஆபீசுக்குள் நுழைந்ததும் நான் பயந்துவிட்டேன். பாரிஸின் நூதனங்களே யெல்லாம் நீங்கள் இங்கே கொண்டுவந்துவிட்ட மாதிரி இருந்தது.''

வெயிட்லரின் தெளிந்த இன்முகம் அகன்ற முறுவலால் மலர்ந்தது. ''ஓ! இந்தப் பெண்மையின் கைவண்ணத்தைக் குறிப்பிடுகிருயா? அதைப்பற்றிக் கவலே வேண்டாம். கவரப் படவேண்டும் என விரும்பும் மக்களேக் கவர அந்த ஏற்பாடுகள். ஆனுல் உண்மையான அமைப்பு அப்படியே இருக்கிறது. நாங்கள் இன்னமும் இங்கு வேலே செய்வதற்கு ஏற்றவர்களேத் தேடிக்கொண்டுதானிருக்கிருேம்.'' முறுவலுக்கிடையிலும் அவர் முகத்தில் பனி படர்ந்தது. பால் ஹேடனே அவர் ஜாக்கிரதையுடன் கவனித்தார்.

''உண்மையில் உன்னேத் திரும்பவும் வேலேக்கு எடுத்துக் கொள்ள நாங்கள் விரும்புகிருேம். உனக்கு எங்கள் கொள்கைகளும், நிலவரமும் தெரியும். க்ரோவெல்லுக்கு உடல் நலமில்லே. கடந்த மூன்று வருஷங்களாக அடிக்கடி நோய்வாய்ப் பட்டு விடுகிருன். வரும் செப்டம்பரில் வேலேயை விட்டுவிட விரும்புகிருன். எனவே, உன்னே இப்போது அவனுடைய உதவி ஆசிரியனுக வரச்சொன்னுலும், சில மாதங்களிலேயே நீ 'அம்ச' இலாகாவின் ஆசிரியனுகிவிடுவாய். அது ஒரு முக்கியமான பதவி.''

பால் தலேயை அசைத்தான். அவனுக்கு இவை எல்லாம் பிடித்தே இருந்தன. ''புரிகிறது. ஆனுல் இந்த வாய்ப்பை எனக்கு ஏன் நீங்கள் அளிக்கவேண்டும்? ப்ளாக்வொர்த் என்று ஒருவர் உதவி ஆசிரியர் பதவியில் நிரந்தரமாய் இருப்பதாகக் கேள்விப்பட்டேனே?'' என்ருன் பால் மெதுவாக.

வெயிட்லரின் முகம் அப்படியே மாறிவிட்டது. முகத்தில் தெரிந்த அகத்தின் மகிழ்ச்சியெல்லாம் மறைந்து, ஒரு கசப்பின், துயரத்தின் ரேகை படர்ந்துவிட்டது. ''ப்ளாக்வொர்த் ஏற்ற மனிதனில்லே'' என்ருர் அவர் சுருக்கமாக.

''ஆனுல் அவரை நான்கைந்து வருஷங்களாக இங்கே வைத்திருக்கிறீர்களே; திறமையற்றவர்கள் நான்கு மாதங்களுக்குமேல் 'ட்ரெண்டி'ல் தங்கமுடியாதே! ஆனுல் நான் கேள்விப்பட்ட கதை......'' மெதுவாக இழுத்தான் பால்.

வெயிட்லர் கல்லாகச் சமைந்து அமர்ந்திருந்தார்.

''ப்ளாக்வொர்த்தை வெளியேற்ற நான் சதிசெய்வ தாகக் கதை பரவியுள்ளது. எனக்கு அது அறவே பிடிக்க வில்லை'' என்று தொடர்ந்தான் பால்.

''அது பொய்யென்று உனக்குத் தெரியும்'' என்றார் வெயிட்லர் அவனைத் தூண்டும் முறையில்.

''நிச்சயம். என்னைப்பற்றி விபரீதமாகக் கூறப்பட்ட வம்புப் பேச்சுக்களை நான் வாழ்வில் நிறைய அனுபவித்திருக் கிறேன். ஆனால் இந்த அவதூறை நான் ஏற்கப்போவதில்லை. அதனால்தான், நீங்கள் ப்ளாக்வொர்த்தை ஏன் வீட்டிற்கு அனுப்புகிறீர்கள் என்று அறிந்துபோக வந்திருக்கிறேன். அதற்கு நல்ல காரணம் இருக்கவேண்டும். ஆனால் அதை யாரும் எனக்குக் கூறவில்லை.''

''நீ ப்ளாக்வொர்த்தின் வேலையைத் திருடுவதாக மட்டும் கூறுகிறார்கள் இல்லையா?'' என்ற வெயிட்லர் 'சட்'டென்று எழுந்து, உணர்ச்சியுடன் தன் மேஜையைச் சுற்றி நடந்த படியே கூவினார். ''நிச்சயம், அவர்களுக்கு அதுதான் தேவை! நீ இந்த வேலையை ஏற்றுக்கொள்வதைத் தடுக்கவே அவர்கள் விரும்புகிறார்கள்! ஆமாம்... இந்தக் கதையை நீ எங்கே கேட்டாய்...?''

''உண்மையில், நான் சென்ற இடங்களில் எல்லாம் கேட்டேன். உங்களுக்குத் தெரியாதா, சிறு கிராமத்தில் வாழ்பவர்களைப்போல் ஒருவரைப்பற்றி மற்றவர் நன்கு அறிந் துள்ள சின்னஞ்சிறு குழுக்கள் நியூயார்க்கில் நிறைய இருப்பது? எனது வட்டாரம் பத்திரிகையாளர்களும், ஏஜெண்டுகளும், விமர்சகர்களும் நிறைந்தது. ப்ளாக்வொர்த் தைப் பற்றிய வம்பில் எள்ளளவும் உண்மையில்லையென்று என் நண்பர்கள் கூறுகிறார்கள். ஆனாலும் அவர்களை அந்த வதந்தி வேதனை செய்யத்தான் செய்கிறது. எனக்கு நண்ப ரல்லாதவர்கள் என்னிடம் நேராகவே இதுபற்றிச் சவால் விடுகிறார்கள். இந்த விஷயமே எனக்குப் பிடிக்கவில்லை, ஸார்!'' பால் ஹேடன் எழுந்து கடியாரத்தைப் பார்த்தான். பிறகு, ''உங்கள் வேலை தடைபடுகிறதென்று நினைக்கிறேன்'' என்றான்.

''உட்காரு, பால்... இதற்கு வேண்டிய அவகாசம் எனக் கிருக்கிறது... நீ எனக்குத் தேவைப்படும் இச்சமயத்தில், இந்த வேலையை நிராகரிக்க எண்ணுகிறாய். இங்கும் சரி, ராணுவத்திலும் சரி, உன் தகுதியை நானறிவேன். அங்கே மனத்தத்துவப் போர்முறையில் நீ பெற்ற அனுபவம் இங்கே உன்னை இவ்வேலைக்கு ஏற்றவனாகச் செய்திருக்கிறது. நீ எதிர்ப்பிரசார வேலையில் இருந்தாயல்லவா? இரண்டும்

இரண்டும் நான்கு என்று நீ அறிவாய். அதனுல்தான் நீ இங்கே இருப்பதை அவர்கள் விரும்பவில்லை.''

''அவர்கள் என்ருல், எவர்கள்?''

வெயிட்லர் திரும்பவும் தம் நாற்காலியில் அமர்ந்தார். இத்தடவை சாயாமல் நிமிர்ந்து உட்கார்ந்து கைகளைக் கோத்துக்கொண்டார். அவருடைய முழங்கைகள் நாற்காலியில் அழுந்தியிருந்தன. கண்கள் ஹேடனின்மீது பதிந்திருந்தன. அவருடைய ரோமமே கோபத்தால் குத்திட்டுவிட்டதுபோல் தோன்றியது.

''அதைப்பற்றி நினைக்க ஆரம்பித்தாலே எனக்கு வெறி எழுகிறது. இருந்தாலும் கோபத்தை விழுங்கிக்கொண்டு உனக்கு எல்லாவற்றையும் சொல்கிறேன். ஆறு வாரங்களுக்கு முன்வரை எனக்கு ஒன்றுமே தெரியாது. தெரிந்தபிறகும் நான் ஏன் முழுக்கதையையும் ஒருவரிடமும் சொல்லவில்லை, தெரியுமா? நமது ஸ்தாபனத்தில் பொது உடைமைக்காரர்கள் புகுந்திருக்கிருர்கள் என்று ஒரு வதந்தி கிளம்பக்கூடாதே என்றுதான்! அப்படி ஒரு முயற்சி நடந்தது என்னவோ உண்மையே. அதை நான் ஆறு வாரங்களுக்கு முன் தெரிந்து கொண்டேன். அதன் பலனுக ப்ளாக்வொர்த் போய்விட்டான். நான் இந்த விஷமத்தைத் தடுத்துவிட்டேன். என் கண்கள் இன்னமும் ஒருவனைக்கூடக் கவனித்துக்கொண்டிருக்கின்றன. அந்த வாயாடி ஒரு முட்டாள்; அவ்வளவுதான். விளம்பர இலாகாவில் இருக்கும் அவன் அங்கே எந்த நாசத்தையும் விளைவிக்க முடியாதென்றே எண்ணுகிறேன்'' என்ருர் வெயிட்லர்.

''அவன் பெயர் என்ன, மர்ரேயா? வீடு திரும்பிய முதல் நாள் இரவன்று அவனை ஒரு 'பார்ட்டி'யில் நான் சந்தித்தேன். அப்போதே அவன் நன்ருக நடந்துகொள்ளவில்லை.''

''ஆனுல் அவனைப்பற்றி நிச்சயமாக எதுவும் தெரியாத வரையில் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. ஏதோ வாயால் பேசினுன் என்பதற்காக ஒருவனை வீட்டுக்கு அனுப்பலாமா?''

''ஒருவன் குழந்தைகளிடம் உடல் உறவு கொள்வதாகச் சொல்லிக்கொண்டு போனுல், உடனேயே அவனுக்கு நீங்கள் சீட்டுக் கொடுத்துவிடுவீர்கள்.''

''ஆனுல் அரசியலும், நன்னடத்தையும் வெவ்வேருனவை. ஒரு கம்யூனிஸ்ட் அநுதாபியையும், குழந்தைகளைக் கெடுப்பவனையும் நீ ஒன்ருக நினைக்கமுடியுமா, பால்?''

''ஒருவன் என்ன சொல்கிருனே அதற்காகக்கூட அவனை வீட்டுக்கனுப்பலாம் என்றுதான் நான் கூறுகிறேன்.''

வெயிட்லர் பதில் பேசவில்லை.

பால் அவரைப் பார்த்தான். அவருக்கு என்ன வந்தது என்று அவன் வியந்தான். அவர் தமது பழைய 'சவால்' விடும் குணத்தை இழந்துவிட்டாரா? பசுவாக மாறிவிட்டிருக்கிறரே! பால் சொன்னன்: "உங்கள் கதை சுவையாக இருக்கிறது. அதாவது, ப்ளாக்வொர்த் ஒரு கம்யூனிஸ்ட்!"

"இல்லை என்கிறன் அவன். சத்தியமும் செய்தான்; எனக்கும் ஒன்றும் புரியவில்லை."

"சத்தியம் செய்தானு? கம்யூனிஸ்டுக் கட்சியின்மீதுள்ள பற்றின்மேல் ஆணையாகவா?" என்று கேட்டான் பால் புன்னகையுடன். "இருந்தாலும் ப்ளாக்வொர்த் செய்ததுதான் என்ன? நிச்சயம் அவன் பேச்சோடுமட்டுமின்றி செயலிலும் ஏதாவது செய்திருக்க வேண்டும். இல்லையெனில் நீங்கள் அவனை அனுப்பியிருக்கமாட்டீர்கள்." அவன் குரலில் கசப்பு வழிந்தது. மேலும் அவன் தொடர்ந்தான்: "வருந்துகிறேன், பில்! ஐரோப்பாவிலிருந்து நான் திரும்பி ஒரு வாரம் தானுகிறது. அங்கே நமது பகுதியைஅடையும் முயற்சியில் முகத்தில் அச்சம் நெளிய, பட்டினியுடன் மைல்கள் கணக்கில் நடந்தே வந்த அந்த ஜனங்களை இன்னமும் நான் கண்முன்னே காண்கிறேன். காவல்களையெல்லாம் தாண்டித் தப்பி வந்த அவர்கள், எந்த நிமிஷத்திலும் முதுகில் குண்டு பாயக்கூடும் என்ற நினைவுடன் காடுகளிலும், அசுத்தக் குழிகளிலும் ஒளிந்து வந்திருக்கிறர்கள். அவர்களது இடுப்பில் ஒரே கந்தல்தான். அவர்களிடம் இருப்பதெல்லாம், கம்யூனிஸ்டு அரசாங்கத்தை அமைக்க வழி செய்த ப்ளாக்வொர்த்தைப் போன்றவர்கள் மீதுள்ள வெறுப்பு ஒன்றுதான். நீங்கள் அவர்களுடைய கண்களையும், எலும்புகளையும், ரத்தம் சொட்டும் பாதங்களையும் பார்க்கவேண்டும். அராஜகத்திலிருந்து தப்பி வரும் அகதிகள் விமானத்தில் வருவதில்லை தெரியுமா?"

அத்துடன் நிறுத்த விரும்பியவன் மாதிரி அவன் மௌனமானன். ஆனல் வெயிட்லர், தொடரும்படி ஜாடை காட்டினர்.

அவன் மேலே சொன்னன்: "சென்ற வருஷம் முழுவதும் நான் அரசியல் அகதிகளினிடையேதான் வேலை செய்துகொண்டிருந்தேன். அவர்களெல்லாரும் உண்மையான அகதிகள்தாமா என்று நாங்கள் கண்டுபிடித்துக் கொண்டிருந்தோம். ஓ! அங்கேகூட அகதிகள் மாதிரி கம்யூனிஸ்டுகள் புக முயன்றர்கள்! அம்மாதிரிப் பல பேர்களை நாங்கள் பிடித்தோம். ஆனல் பெரும்பான்மையானவர்கள் சுதந்தரத்தைத் தேடி வந்த அகதிகள் தாம்." மீண்டும் அவன் நிறுத்தினன். பிறகு அவன் பேச ஆரம்பித்தபோது அவன் குரலில்

தொனித்த உண்மையும், கசப்பும் வெயிட்லரை அயர வைத்தன.

அவன் தொடர்ந்தான்: ''எப்படித் தன் கணவன் மாய மாய் மறைந்தான், எப்படிப் பிறகு அவளுடைய மூத்த மகன் விசாரணையோ அல்லது பார்க்க அநுமதியோ இல்லாமல், பெயர்கூடத் தெரியாத ஒரு சிறையில் தள்ளப்பட்டான் என் பதைக் கூறும் ஒரு பெண்ணின் முகத்தைக் காணும்போதும். அவளுடைய இளைய மகனின் மெலிந்த உருவையும், குழி விழுந்த கண்களையும் பார்க்கும்போதும், எப்படி அவள் இப் பிள்ளையைப் பகலெல்லாம் ஒளித்திருந்து, இரவில் நடந்து, அமெரிக்கப் பகுதிக்குக் கொணர்ந்தாள் என்பதைக் கேட்கும் போதும், அவர்களுடைய தற்போதைய ஒரே உடைமையான கந்தல்களையும், அத்துடன் யாராலும் அழிக்க முடியாத சுதந் திரத் தாகத்தையும் காணும்போதுந்தான், நம்மால் அரசியல் கொடுமை என்றால் என்னவென்று புரிந்துகொள்ள முடிகிறது. சிறியதொரு செக்கோஸ்லேவேக்கியக் கிராமத்தின் பள்ளி ஆசி ரியர் ஒருவரது மனைவி அவள். அவர்களுக்குச் சிறு வீடு ஒன்று இருந்தது; அதை அவர்கள் சுத்தமாக வைத்திருந்தார்கள். அவர்கள் ஜெர்மானியப் படையெடுப்புக்குப் பிறகும் உயி ரோடு வாழ்ந்தவர்கள். அவளுடைய கணவன் ஆறு வருஷங் கள் கைதிகள் முகாமில் இருந்துவிட்டுத் திரும்பியிருந்தான். அவனை இப்போது ஏன் தூக்கிச் சென்றுவிட்டார்கள்? கார ணம், சென்ற தேர்தலில் அவன் கம்யூனிஸ்டுகளுக்கு ஓட்டு 'இல்லை' என்று சொல்லிவிட்டான்! அவ்வளவுதான். ஆம், அவன் ஓட்டு 'இல்லை' என்றதுதான். அவன் பிரசங்கம் எது வும் செய்யவில்லை. கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக எந்தக் கட்சி யிலும் சேரவில்லை. மௌனமாகத் தானிருந்தான். ஒரு தடவை கைதிகள் முகாமில் இருந்தது இந்த ஜன்மத்திற்குப் போதும் என்றுதான் அவன் சொன்னான். ஆனால் 'ஓட்டு'க் கொடுக்க வந்தபோது தன் மனச்சாட்சி கூறியபடி நடந்து கொண்டான். அவன் ஓட்டுப் போடுவதைக் கவனிக்க ஒற்றர் கள் இருந்தார்கள். அவ்வளவுதான்.''

பால் ஹேடன் சற்றே நிறுத்திவிட்டுத் தொடர்ந்தான்: ''அவளையும், அவள் மகனையும்போல இன்னும் எத்தனையோ ஆயிரம் பேர்கள். இவற்றைக் கண்டு திரும்பிய நான் இங்கே சிலர் அமெரிக்காவின் தவறுகளையும், அதன் 'அரசியல் தியாகி'களையும் பற்றி வாய் கிழியப் பேசுவதைக் காண் கிறேன். உண்மையாகச் சொல்கிறேன், இந்த விசித்திரப் பிராணிகளை யெல்லாம் அங்கே அழைத்துப்போய், அமெரிக் கப் பகுதிக்கு வரப் போராடும் அந்த மக்களைக் காட்டவேண் டும்; தங்கள் பேச்சினால் துரோகமிழைக்கப்பட்ட அந்த மனி

தப் பிறவிகளைக் காணச் செய்யவேண்டும். அப்போது அவர்கள் உண்மையான 'தியாகி'களைக் காண்பார்கள்!'' பிறகு அவன் தாழ்ந்த குரலில் கேட்டான்: ''பில், அமெரிக்காவில் உள்ள ஜனங்களுக்கு எது பேராபத்தில் இருக்கிறது என்பது தெரியாதா?''

''நமக்குத் தெரியுமென்றே நினைக்கிறேன். நம்மில் பெரும்பான்மையோருக்கு! நமக்கெதிராகவரும் பொதுவான வியூகத்தை எல்லாருமே உணர்கிறார்கள். நாம் எப்போதுமே தந்திரங்கள் புரிந்ததில்லை. ஆனால், அவற்றையும் இப்போது கற்றுக்கொண்டு வருகிறோம். ப்ளாக்வொர்த்தின் முழுக்கதையையும் கேட்க நீ சரியான ஆள் என்றே நான் நினைக்கிறேன். ஏனெனில், நீ என்னைச் 'சூன்யக்காரர்களை வேட்டையாடுபவன்' என்று கூறமாட்டாய். ஆனால் இது விசித்திரக் கதை'' என்று எச்சரிக்கை செய்தார் வெயிட்லர்.

வேகமாகவும் தெளிவாகவும் பேசியபடி வெயிட்லர் அந்தக் கதையைச் சொல்ல ஆரம்பித்தார்: ''கடந்த மூன்று ஆண்டுகளில் க்ரோவெல் அடிக்கடி நோய்வாய்ப்பட்டான். அதனால் அவன், உதவி ஆசிரியரான ப்ளாக்வொர்த்தையே வேலைகளுக்கு அதிகமாக நம்ப வேண்டியிருந்தது. சென்ற பத்து மாதங்களில் அவனது வேலைகள் எல்லாவற்றையும் ப்ளாக்வொர்த்தே கவனித்துக் கொண்டான். அது எந்த மட்டும் போயிற்று என்பதை அண்மையில்தான் நான் தெரிந்துகொண்டேன். எனக்கு க்ரோவெல்லை மிகவும் பிடிக்குமாதலால் அவனைப் பலவந்தமாக நான் ஓய்வுபெறச் செய்ய விரும்பவில்லை. அவனே வந்து தன்னால் முடியாதென்று ஒப்புக்கொள்ளட்டும் என்று காத்திருந்தேன். எப்படியிருந்தாலும் 'அம்ச' இலாகா ஆசிரியர் பதவிக்கு அடுத்த தகுதியாளன் ப்ளாக்வொர்த்துதான்.'' அவர் தம் தலையையும், மூக்கையும் தடவிக் கொண்டார். இக்கதை அவருக்கே சங்கடத்தை அளித்தது, அவர் ஒரு முறை கனைத்து, நீள்மூச்சு ஒன்றை நெக்கி வெளியேற்றினார்.

''ப்ளாக்வொர்த் நல்ல எழுத்தாளன்: ஆசிரியன்; கஷ்டப்பட்டு உழைக்கக் கூடிய கெட்டிக்கார இளைஞன் என்றெல்லாம் நாங்கள் அறிவோம். இங்கே வருவதற்கு முன்புகூட அவன் ஒரு பிரசுராலயத்திலும், யுத்த காலத்தில் இரு வருஷங்கள் வாஷிங்டனிலும் வேலை செய்தவன். கடந்த பத்து மாதங்களில் நமது 'அம்ச'க் கட்டுரைகளின் குரல் மாறி வந்ததை நான் கவனிக்கவில்லை. அவை என்னைச் சோர்வடையச் செய்தன. ஆனால் உண்மைகள் உண்மைகள்தாம். அமெரிக்காவைப்பற்றிய உண்மைகளைக் கூறும் கட்டுரைகள் அவற்

றில் இருந்தன. அடிப்படைத் தவறுகளும், அநியாயங்களும், நிவர்த்தி செய்ய முடியாத லஞ்ச ஊழல்களும் நிறைந்த நிலையில் நாடு இருப்பதாக நான் நினைக்க ஆரம்பித்தேன். வாசகர்களிடமிருந்து வரும் சில கடிதங்கள் என் உணர்வையே பிரதிபலித்தன. ஆனல் மற்றும் பலர், "எங்கள்பழைய 'ட்ரெண்டு' பத்திரிகை எங்களுக்கு உண்மையான உண்மைகளைப் பற்றி அதிகம் தெரிவிக்கட்டும்!" என்று எழுதினர்கள்.

"பிறகு, ஆறு வாரங்களுக்கு முன்பு ஒரு நாள் எனக்குத் தெரிந்த எழுத்தாளர் ஒருவர் என்னிடம் வந்து, இப்போதெல்லாம் அவருடைய கட்டுரைகளை ஏன் வெளியிடுவதில்லையென்று கேட்டார்; அவற்றில் என்ன தவறுகள் இருந்தன என்றும் வினவினர். அவர் வேடிக்கையாகக் கேட்பதுபோல் பாவனை செய்தாலும், இதனல் மிகவும் மனம் உடைந்திருக்கிறர் என்று தெளிவாகத் தெரிந்தது. நான் அவரைச் சமாதானப்படுத்தி, நிராகரிக்கப்பட்ட அவரது கட்டுரைகளின் ஜாபிதா ஒன்றைக் கேட்டேன்.

"நான் அதை அப்படியே விட்டிருப்பேன். ஆனல் நமது கட்டடக் கலைப் பகுதியின் முதன்மையாளனை பர்னெட்டே என்னிடம் வந்தான். வீடு கட்டுவது பற்றி ஒரு கட்டுரைகள் வரிசையை வெளியிட்டுக் கொண்டிருந்தான் ப்ளாக்வொர்த். அவற்றில் பர்னெட்டும் அவனது இலாகாவும் கவனம் காட்டியது இயற்கையே. ரோனு மெட்ஃபோர்டை நினைவிருக்கிறதா? யுத்தத்துக்குப் பிறகு கட்டப்படும் வீடுகள் பற்றிக் கொலம்பியா கலாசாலையில் விசேஷப் படிப்பை மேற்கொண்டுள்ள அவள், ப்ளாக்வொர்த் வெளியிடும் கட்டுரைகள் கூறுவதெல்லாம் பொய் என்று சாதித்தாள். முதல் கட்டுரையைப் படித்ததுமே அதைப் பற்றி அவள் ப்ளாக்வொர்த்திடம் தன் கருத்தைச் சொல்லியிருக்கிறள். ஆனல் யாதொரு நடவடிக்கையும் எடுக்கப்படாதது மட்டுமின்றி, தொடர்ந்து இன்னும் இரு கட்டுரைகளும் பிரசுரமாயின. அதனல் வேதனையடைந்த பர்னெட் கடைசியாக வெளிவந்த மூன்று 'ட்ரெண்டு'ப் பிரதிகளை என்னிடம் கொண்டு வந்தான். அவற்றில் வெளியாகியிருந்த கூட்டிக் குறைத்த—உண்மைக்குப் புறம்பான—விஷயங்களை ரோனு கீழ்க் கோடிட்டிருந்தாள். இக் கட்டுரைகள் தவறானவை என்பதுதான் பர்னெட்டின் சொந்தக் கருத்தும்.

"உண்மைகளை அறிய விரும்பிய நான் ரோனுவை அழைத்தேன். அவள் ஒரு ஜாபிதா தயாரித்துக் கொடுத்தாள். யுத்த காலத்துக்குப் பிந்திய வீடுகளில் தவறுகள் இருக்கின்றன என்றும், ஆனல் 'ட்ரெண்டு' கூறியபடி அவை அவ்வளவு மோசமானவை அல்லவென்றும் அவள் அறிவித்தாள். அந்த மூன்று

கட்டுரைகளும், அமெரிக்கா மோசடிக்காரர்களால் நடத்தப் படுகிறது என்பதைத்தான் வாசகர்களின் மனத்தில் மறைமுக மாகப் படியும்படிச் செய்யுமென்றும் அவள் சுட்டிக் காட்டினுள்.

"இதைப் பற்றி வாயைத் திறக்க வேண்டாமென்று கூறி அவளை அனுப்பி விட்டேன். ஆனால் அவள் கொடுத்த விவரங் களை நானே ஆராய்ந்ததோடு, ஓரிரு கட்டடக் கலைஞர்களையும், வீட்டு நிபுணர்களையும் அழைத்து ஆராயச் செய்தேன். ரோஜு வின் முடிவை அவர்கள் 'சரி' யென்று சொன்னதும் எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போலிருந்தது.

"பிறகு, சமீபகாலத்தில் வெளிவந்த கட்டுரைகளை எழு திய புதிய எழுத்தாளர்களைப் பற்றிப் பரிசீலனை செய்தேன். அவர்களில் சிலர் முன்பே எழுதியவர்கள்தாம். ஆனால் அவர் களுடைய எழுத்துக்கள் க்ரோவெல் நோயுற்றிருந்தபோது ப்ளாக்வொர்த் தலைமையாக இருந்த நாட்களில் ஏற்றுக்கொள் ளப்பட்டவை. கடந்த ஆறு மாதங்களில் வெளியான பல கட்டுரைகள் நாம் முற்றிலும் அறியாத சிலர் எழுதியவை, அவர்களுடைய பெயர்களை நிபுணர்களைக் கொண்டு பரிசீலனை செய்தேன். புனைப் பெயரில் எழுதிய ஒருவன், தான் கம்யூ னிஸ்டுக் கட்சி உறுப்பினன் என்று வெளிப்படையாக ஒப்புக் கொண்டவன். கட்டுரை எழுதியவர்களைப் பற்றி நாம் சிறு குறிப்புக்கள் கொடுக்கிறோமல்லவா? அதில் இவன் பெயர்: 'வில்லியம் ஸ்லேட், எழுத்தாளர், பிரசங்கி, பழைய நாணயங் களைச் சேகரிப்பவர்' என்று எழுதியிருந்தது... அவனுடைய மெய்ப் பெயர் நிகோலஸ் ஆர்பென். நீ கேள்விப்பட்டிருக் கிறாயா?"

"புதிதாக இருக்கிறது" என்று தலையை ஆட்டினுன் பால்.

"எனக்கு அவனைப் பற்றி நன்கு தெரியும். அவனுடைய கட்டுரைகள் சாமர்த்தியமாக எழுதப்பட்டவை. அமெரிக்க இலக்கியம் தேய்ந்து போனதற்கான காரணங்களை ஆராய்வ தாகக் கூறப்படும் அவற்றைப் படித்தால், நம்முடையதைப் போன்ற வழிமுறை தேய்மானத்தில்தான் வந்து முடியும் என்ற முடிவுக்கே எவரையும் வரச் செய்யும். இப்படியே விஷயம் எவ்வளவு தூரம் சென்றிருக்கிறதென்று எனக்குத் தெரியாது; தவிர, ப்ளாக்வொர்த்தை அப்புறப்படுத்துவது எப்படி என் றும் எனக்குப் புரியவில்லை. அது அவ்வளவு எளிய காரியமும் இல்லை. 'ட்ரெண்டு'ப் பத்திரிகையின் புகழை நாசம் செய்ய எனக்கு விருப்பமில்லை; நமது வாசகர்களை நம்மிடமிருந்து வெளியே அனுப்பவும் கூடாது, இல்லையா?"

பால் தலையை ஆட்டினுன்.

''இறுதியில், எஃப்.பி. ஐ. (மத்திய அரசாங்க போலிஸ்) ஸ்தாபனத்திலிருந்து ஒருவரை ஆலோசனைக்கு வரவழைத்தேன். மக்களின் செயல்கள் பற்றிய விஷயத்தில்தான் அந்த ஸ்தாபனம் ஈடுபடுமே தவிர, அரசியல் கருத்துக்கள் பற்றியவைகளில் அது ஈடுபடாது என்று அவர் கூறிவிட்டார். மக்கள் தமது சொந்த விருப்பு, வெறுப்புக்களையும், கருத்துக்களையும் கொள்ள அநுமதிக்கப்படுகிருர்கள். எனவே நான் நேரிடையான போராட்டத்தில் இறங்கிஞல், பிளாக்வொர்த் என்ன சொல்லுவான் தெரியுமா? தான் வாசகர்களை எதையும் நம்பும்படி பலவந்தப்படுத்தவில்லை யென்றும், தனக்கு நல்லது என்று பட்ட எழுத்துக்களைப் பிரசுரித்ததாகவும் சவால் விடுவான்.''

''பின் அவனை எப்படித்தான் அனுப்பினீர்கள்?''

''புதிய எழுத்தாளர்களைப் பற்றிக் கேட்டதன் மூலம்! அவன் அவர்களைச் சந்தித்தாஞ? ஆமாம்...அதற்காகக் கணக்கில் செலவுகூடக் காட்டியிருந்தான். பிறகு அவன், அடக்கமாகக் குறிப்பிடப்பட்டிருந்த 'அந்த எழுந்தாளர், பிரசங்கி, நாணயத் தொகுப்பாளர்' யாரென்று நான் வினவினேன். அவன் நல்ல மனிதனென்றும், அழகாக எழுதக்கூடிய அவன் எழுத்துக்களைத் தொடர்ந்து வாங்கலாமென்றும் சொன்ஞன் ப்ளாக்வொர்த். உடனே நான், 'நீ அவனைப் பார்த்திருந்தால் அடையாளம் தெரிந்து கொண்டிருக்க வேண்டுமே; பதினைந்து வருஷங்களுக்கு முன்பு மன்ரோ காலேஜில் உனக்குப் போதித்தவனல்லவா அவன்? அங்கே 1941-இல் ஏற்பட்ட அபவாதங்கூட உனக்குத் தெரிந்திருக்க வேண்டுமே என்றேன்.''

பால் பதில் சொன்ஞன்: ''அது அபவாதம் இல்லை, அரசியல் சூழ்ச்சி என்று ப்ளாக்வொர்த் எதிர்த்திருப்பான். மேலும் ஆர்பென் இப்பொழுது கம்யூனிஸ்ட் இல்லையென்றும், வாழ வேண்டிய அவனுடைய ஜீவாதாரமான வருமானத்தை நாம் பறிக்கக் கூடாது என்றும் கூட அவன் சொல்லியிருப்பான்... இல்லையா?''

வெயிட்லர் பாலை நிமிர்ந்து பார்த்தார். ''கிட்டத்தட்ட அப்படித்தான் சொன்ஞன். பால், உனக்கு இது எப்படித் தெரியும்?''

''அவர்கள் ஒரே மாதிரியான பதில்களைத்தாம் திரும்பித் திரும்பிச் சொல்கிருர்கள். ஜெர்மானியப் பத்திரிகைகளுக்குள் நுழைய முற்பட்ட நாஜிகளிடமிருந்தும், கம்யூனிஸ்டுகளிடமிருந்தும் எனக்கு இதே மாதிரியான பிரதிவாதந்தான் கிடைத்தது. சர்வாதிகாரத்தை எதிர்க்கும் எழுத்தாளர்களையெல்லாம் சாக்கடையில் தள்ளும் அவர்கள், பிறரிடம் மட்டும் மனிதப் பண்பு, மனச்சாட்சி என்றெல்லாம் பேசுவார்கள். பிறருடைய வாழ்வைக் கெடுக்கும்போது அவர்களை மனச்சாட்சி வருத்துவதில்லை. பிறகு நீங்கள் என்ன செய்தீர்கள்?''

"நான் பொறுமையை இழந்தேன். ரோனு மெட்ஃபோர்டின் புள்ளி விவரங்களை அவனுக்குக் காட்டினேன். அவன் நம்மை விட்டுப் போய்விடுவது நல்லது என்றேன். அதற்கென்ன உண்மைக் காரணம் என்று வினவினான். ஆனால் நான் மீண்டும் பொறுமையை வரவழைத்துக் கொண்டு, 'காரணம் உனக்கும் எங்களுக்கும் ஒத்து வராததுதான்' என்றேன். அவன் என்மீது தொழில் வழக்கு ஒன்றும் தொடரவில்லை."

பால் கேட்டான்: "பிறகு அவன், பிரசுரகர்த்தர்கள் சர்வாதிகாரியாக இருக்கக் கூடாதென்றும், எல்லாவிதக் கருத்துக்களுக்கும் பேச்சுச் சுதந்திரம் கொடுக்கப்பட வேண்டுமென்றும் சொல்லவில்லையா?"

"ஆனால் அதற்கு என்னிடம் பதில் இருந்தது. கட்டுரையாளர்களைப் பொறுக்கும் சுதந்திரம் அவனுக்கு இருக்கவேண்டுமென்றால், நிச்சயம் யார் என் ஆபீசில் வேலை செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் சுதந்திரம் எனக்கும் உண்டு இல்லையா? அவன் தனக்குப் பிடித்த மாதிரி நடந்து கொண்டான். நானும் அப்படித்தான் செய்தேன் என்னைப் பொறுத்தவரையில்."

அங்கே ஒரு நீண்ட மௌனம் நிலவியது.

பிறகு வெயிட்லர் மறுபடியும் பேசினார்: "நான் செய்தது சரிதானே, பால்?" தனது தீர்மானத்தைப் பற்றி அவருக்கே சந்தேகமாக இருந்தது.

பால் ஹேடன் தலையை ஆட்டினான். அவனுக்குத் தனது விமானப் பிரயாணம் நினைவிற்கு வந்தது. ரோஜர் பிரௌன்லீ பக்கலில் அமர்ந்து கொண்டு ஏதோ நம்பத்தகாத விஷயங்களில் அவன் கவனத்தை இழுத்துக் கொண்டிருந்தார். ஆனால் பிரௌன்லீயின் பொதுவான பேச்சு இப்போது புரியும் வகையில் உருப்பெற்று வந்ததை அவன் கண்டான். வெயிட்லர், தான் மட்டும் இந்தத் துரோகத்திற்கு ஆளாக்கப்பட்டதாக நினைக்கையில், அந்தத் துரோகவலை உதவியின்றியுள்ள எல்லா மக்கள் மீதும் விரிக்கப்படுவதைப் பிரௌன்லீ கண்டார்.

"முன்பு கர்னலாக இருந்த ஒருவரை எனக்குத் தெரியும். பிரசாரத்தைப்பற்றி அவர் நன்கு அறிந்தவர். 1940இல் ஃபிரான்சின் வீழ்ச்சியைப் பற்றி விசேஷமாக ஆராய்ந்தார் அவர். ஜெர்மானியரது ராணுவம் ஃபிரான்சின் எல்லையை அடையு முன்னமேயே அந்நாடு தோற்று விட்டதாக அவர் நம்புகிறார். அவர் சிறிது மிகைப்படுத்துவதாக நான் எண்ணுவதுண்டு' ஆனால்—நான் தவருகத்தான் அப்படி நினைத்திருக்கிறேன்" என்றான் பால்.

''அதில் அர்த்தமிருக்கிறது: அந்த எண்ணத்தைத் தொடர்ந்து ஆராய்வது நல்லது'' என்ருர் வெயிட்லர்.

''அதைத் தான் அவர் செய்கிருர். கடந்த சில வருஷங்களாகவே மக்களுக்கு அநேக எண்ண 'மூட்டை'கள்-உள்ளே என்ன இருக்கிறதென்று சொல்லாமலேயே-அளிக்கப்படுகின்றது என்று சொல்லுகிருர் அவர். ஃபிரான்ஸ் தேச மக்களுக்கு, 'ஏகாதிபத்ய யுத்தம்', 'நாட்டுப் பற்று பணக்காரர்களுக்குத் தான்', 'ஃபிரான்ஸ் அழிய வேண்டுமென்பது ஹிட்லரின் திட்டமல்ல,' 'இங்கிலாந்துக்காக ஏன் சண்டையிட வேண்டும்' என்பன போன்ற எண்ணங்களையெல்லாம் விற்றது மாதிரி. ஆனல் 1940 இறுதியில், தாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டதை ஃபிரான்சின் மக்கள் உணர்ந்து விட்டார்கள். நாட்டுப்பற்று ஃபிரான்சின் பிரஜையாக இருக்க விரும்பிய ஒவ்வொரு மனிதனுக்கும் இருந்தது. அவர்கள் தங்களுடைய சுதந்திரத்துக்காக அன்றி, வேறு எதற்காகவும் போர் புரியவில்லை.''

''நாம் மட்டும் அரசியலைப் பற்றியும் 'ட்ரெண்டி'ல் எழுதுவதானல், இதைப் பற்றித் தொடர் கட்டுரைகளை வெளியிடுவதை விரும்புவேன்'' என்ருர் வெயிட்லர்.

''ப்ளாக்வொர்த் மட்டும் என்ன செய்து கொண்டிருந்தான்? உருவமற்ற கலையின் அழகு, பிரயாணத்திஞல் விளையும் இன்பம், இவைகளைப் பற்றியா எழுத முனைந்திருந்தான்?''

வெயிட்லர் பால் ஹேடனைக் கோபத்துடன் பார்த்தார். ''பட்டவர்த்தனமாய்ப் பேசுபவனுக நீ திரும்பி வந்திருக்கிருய்'' என்ருர் அவர். ஆனல், ஹேடன் கூறியவற்றைப் பற்றித்தான் அப்பொழுது அவர் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

''ஆமாம்... நான் மேலும் சொல்லப் போகிறேன். 'ட்ரெண்டு'க்குள் நுழைய முற்பட இன்னும் சில ப்ளாக்வொர்த்கள் கூட இருப்பார்கள். இப்போது அவனைக் கண்டு பிடித்ததோடு நீங்கள் நிம்மதியாக இருந்து விட முடியாது. அடுத்த பத்து இருபது வருஷங்களுக்கு இப்படியொரு பதவிப் போராட்டம் இருக்கப் போகிறது. இன்னமுங் கூட அது நீடிக்கலாம். பல நூற்ருண்டுகளுக்கு நீடிக்கும் பதவிப் போராட்டங்களும் இருக்கலாம்'' என்முன் பால் ஹேடன்.

வெயிட்லர் சொன்னர்: ''பால், 'ட்ரெண்டி'ல் இந்த வேலையை நீ எடுத்துக் கொள்வாயல்லவா?''

பால் தயங்கினன். பிறகு, ''முன்பைவிட இப்போது அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற விருப்பம் அதிகமாகியிருக்கிறது. ஆனல் சிந்தித்துப் பார்க்க எனக்குச் சில நாட்கள் வேண்டும். நிலைமை எனக்குத் தெளிவாகியிருக்

கிறது. ஆனால், மிஸ்டர் வெயிட்லர், நீங்கள் எனக்குச் சொன்ன கதையை ஏன் அப்படியே பிரசுரிக்கக் கூடாது? உங்கள் வாசகர்களும் அறிந்துகொள்ளட்டுமே. என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதைப் பொது மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டாமா?''

வெயிட்லரின் முகச் சுளிப்பு திரும்பியது. ''அப்போது என்ன நடக்கும் தெரியுமா? நமக்கு எதிராக ஒரு பிரசாரம் துவங்கும். நாமெல்லாம் 'ஃபாஸிஸ்டுகள்,' 'யுத்த வெறியர்கள்,' 'அமெரிக்க ஏகாதிபத்யவாதிகள்,' 'சூன்யக்கார வேட்டையாளர்கள்' என்றெல்லாம் அழைக்கப்படுவோம்!''

''பீதியைக் கிளப்புபவர்கள் என்பதைச் சேர்க்க நீங்கள் மறந்து விட்டீர்கள். சிறிது நாட்களாக அவர்கள் இச் சொற்களையும் உபயோகித்து வருகிறார்கள். தவிர, நம் வாயை மூடுவதற்காக அவர்கள் ஏதாவது ஈடான இன்னல்களையும் விளைவிக்கலாம். அது அவர்கள் தந்திரம். நாம் ஒன்றாகச் சேர்ந்து, நமது கூட்டு அநுபவங்களைப் பயன்படுத்திக்கொள்ளுவது கூடாது என்பார்கள். நாமெல்லாம் உள்ளூர வேதனைப்பட்டுக் கொண்டு, எதையும் வெளியே விடாமல் தவிக்க நேரும். கொள்ளைக்காரர்களின் பிடியில் சிக்குண்டவர்கள் விஷயத்தை வெளியிட அஞ்சுவது போல!''

வெயிட்லர் மெதுவாகக் கூறினார், ''கர்னல் என்றாயே, அந்த உன் நண்பருடன் நான் பேச விரும்புகிறேன்.''

''இப்போது அவர் கர்னல் இல்லை. தம் பதவியை அவர் விட்டு விட்டார். இவ்விஷயத்தில் ராணுவத்தில் இல்லாத ஒருவராகவே அவர் செயல்பட விரும்புகிறார்.''

''அவருடன் நான் பேச வேண்டும்'' என்று வெயிட்லர் திரும்பவும் கூறினார்.

''அதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன். ஒரு வேளை அது உங்களுக்குத் தெம்பை ஊட்டலாம். ஏனெனில் நீங்கள் மட்டும் இப்போராட்டத்தில் தனித்து நிற்கவில்லை என்பதைப் புரிந்துகொள்ளுவீர்கள்!''

வியந்தவர் மாதிரி தோற்றிய வெயிட்லர் ஒரு புன்முறுவலை நெளிய விட்டார். ''தெம்பு எனக்கு இப்பொழுது எவ்வளவு அவசியம் என்பது கடவுளுக்குத்தான் தெரியும்.''

''எப்போதும் நாம் ஒன்றாக நிற்கவேண்டும் என்பதே நமது கொள்கை.'' என்று ஓர் இளநகையுடன் கூறிய பால் எழுந்து புறப்படத் தயாரானான்.

நடைபாதை வழியே செல்லும்போது, 'இந்த அக்கப் போர் எதையும் நான் விரும்பவில்லையே' என்று தனக்குள் நினைத்துக் கொண்டான் பால். பெர்லினில் ரோஜர் பிரௌன்லீ கூறியதைக் கேட்க அவனுக்குப் பொறுமை இருந்ததில்லை; விமானத்தில் வீடு திரும்புகையில் அவனுக்கு அவர் மீது கோபமே வந்து விட்டது. ஆனாலும் கடந்த அரை மணி நேரமாக அவன் பிரௌன்லீயின் வேதனைகளையும், சிந்தனைகளையுந் தான் எதிரொலித்துக் கொண்டிருந்தான். இப்போது வெயிட்லருக்காக அவன் சீக்கிரமே பிரௌன்லீயுடன் தொடர்பும் கொள்ளப் போகிறான். இவற்றிலெல்லாம் தலையிட அவன் விரும்பவில்லை தான். ஆனால் வேறு வழி என்ன இருக்கிறது? நடந்து கொண்டிருந்த யுத்தத்தையும், சொந்த நாட்டை ஆக்ரமிக்க முயலும் போராட்டத்தையும் காணாமல் கண்களை மூடிக்கொள்ள முடியுமா? பிறகு காலம் கடந்து— ஒன்றும் செய்ய முடியாத நிலையில்— ஐம்பமாகக் கண்களை மூடிக் கொண்டதற்காகவும், பயந்து மக்காக இருந்து விட்டதற்காகவும் அலறி அழுவதால் என்ன பலன்?

''வேறு வழியே இல்லை. அவர்கள் உள்ளே நுழைவதையும், பிரசார வசதிகளைத் தம் ஆதிக்கத்தில் கொண்டு வருவதையும் ஆயுதங்களாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய உண்மை உருவை நாம் அறிந்து கொள்ள வேண்டும். இல்லையெனில் சரித்திரத்திலே நாம் பெரிய ஏமாளிகளாகி விடுவோம். பால், கண்களெதிரே காண்பதை அறிந்து நடக்க வேண்டியது நம் கடமையாகும். பொய்களை அறிந்து, அவற்றிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும், அவற்றை நாம் அம்பலப்படுத்த வேண்டும்,'' என்றார் பிரௌன்லீ.

கூட்டமாக இருந்த 'லிஃப்டி'ல் நடுப்பகல் உணவுக்குச் செல்பவர்களின் 'கல கல' வென்ற பேச்சு காதைத் துளைத்தது. அக் கூட்டத்திலிருந்து பிரிந்து வந்த பால் ஹேடன் வேகமாகக் கதவுகளுக்கு வெளியே சென்றான். அவனை வெறித்துப் பார்த்த லிஃப்டுக்கார ஜோ, தபால் குமாஸ்தாவிடம், ''டோனி, அவருக்கு அந்த வேலை கிடைக்காமல் போய்விட்டாற் போலிருக்கிறது. அவரது முகத்தைப் பார்த்தாயா?'' என்றான்.

டோனி அதைக் கேட்காதவன் போல், ''லிஃப்டை மேலே கொண்டு போ. இப்போது உணவு நேரமில்லையா? அவர்களைக் காக்க வைத்தால் பசியெடுத்த சிங்கங்கள் மாதிரி கர்ஜிக்க ஆரம்பித்து விடுவார்கள்'' என்றான்.

கூட்டமாக இருந்த அவென்யூவில் தன்னைச் சுற்றியிருந்த முகங்களைக் கவனித்தான் பால் ஹேடன். நான் ஏன் பித்தான்

துவாரங்களை உற்பத்தி செய்யும் ஒரு வியாபாரியாக இல்லை? அப்போது என் கவலையெல்லாம் பித்தான்களின் அளவுகள் என்ன வென்று அறிவதோடு நின்று விடுமே. நான் ஏன் காலாட் படையில் நிலைத்து இராமல், மனோதத்துவ யுத்த முறைகளுடன் தொடர்பு கொண்டேன்? நான் கற்ற விஷயங் களையெல்லாம் நான் ஏன் கற்றேன்? பிரௌன்லீயையோ, அல்லது வெயிட்லரையோ கூட நான் ஏன் தெரிந்து கொண் டேன்? ஏன் நான் எனது காதுகளை மூடிக்கொண்டு களிப்புடன் இருக்கக் கூடாது?

அவன் பிளாஸாவை நோக்கி நடக்கலானான். தன் கவலை களை மறக்க வேண்டுமானால், அவன் அவற்றை வசதியாக அங்கே மறந்து விட முடியும்.

அத்தியாயம் 6

வெள்ளிக்கிழமை மாலை சற்று முன்னதாகவே டைஸன் தம்பதிகளின் விடுதிக்கு வந்து விட்டாள் ரோனா. மங்கிய ஒளியோடிருந்த நீண்ட கூடத்திற்கு அவள் வந்ததும், தன் சகோதரியை வரவேற்கச் சமையலறையிலிருந்து ஒரு கணம் வெளியே வந்தாள் பெக்கி. அழகிய நீல உடையிலிருந்த அவள் தலை சற்றே கலைந்திருந்தது. கன்னங்கள் சிவக்க, இடுப்பில் ஒரு 'முன் துணி'யுடன் காட்சி தந்தாள் அவள். ரோனா தனது புதிய வெள்ளைக் கோட்டைக் கழற்ற ஜான் உதவி செய்தான்.

''அருமையான கோட்டு!'' என்றாள் பெக்கி அதை வியப் புடன் பார்த்தபடி. ஆனால் ரோனாவின் சலவைச் செலவை நினைக்கையில் அவள் குன்றிப் போனாள். பிறகு அவள் குரலைத் தாழ்த்திக் கொண்டு கூடத்தை எச்சரிக்கையுடன் நோக்கி னாள். ''பாப்பியைப் படுக்கையில் போட்டு இப்போதுதான் தூங்கச் செய்தேன். ஸாண்டுவிச்சுகளைச் சீராக்குவதில் சிறிது உதவி செய்யுங்கள். தவிர உங்களுடைய கைப்பிரதிகளையெல் லாம் அப்புறப்படுத்தினால்தான், பீர் பாட்டில்களை வைக்கக் கொஞ்சம் இடம் கிடைக்கும்'' என்றாள் பெக்கி ஜானைப் பார்த்து.

''நான் முதலில் குழந்தைகளைப் பார்க்க வேண்டும்'' என்ற ரோனா, தன் கையிலிருந்த இரு பொட்டலங்களை

யும் கூடியவரை சகோதரியின் பார்வையிலிருந்து மறைக்க முயன்றாள்.

''ரோஜு, இப்போது நீ அவர்களை—''

''எழுப்பி விடமாட்டேன்,'' என்றாள் ரோஜு இளமுறுவலுடன். பிறகு பெக்கி சமையலறைக்குத் திரும்பினாள்.

குழந்தைகளின் அறையை அடைந்ததும், ''பாப்பியின் ரெயில் இருக்கிறது, ஜாக்கிரதை. எங்கே பார்த்தாலும் ஒரே தண்டவாளங்களாக வேறு இருந்தன,'' என்றான் ஜான். இருவரும் நின்று கவனித்தார்கள். ஜான் மெதுவாகக் கதவைத் திறந்துவிட்டு, ''எல்லாம் அயர்ந்து தூங்குகின்றன,'' என்றான்.

ரோஜு மட்டும் உள்ளே அடியெடுத்து வைத்து, இருட்டான அந்த அறையை விழிகளால் துழாவினாள். தன்னுடைய சிறிய மெத்தையில் பாப்பி அசைவற்றுப் படுத்துக் கிடந்தான். அந்தச் சிவப்பான குழந்தை பார்பரா கால்களைத் தலையணையில் போட்டுக் கொண்டு உறங்கிக் கொண்டிருந்தாள். அவளது அழகான கூந்தல் தலையோடு அமுங்கியிருந்தது. மெத்தை உறை கசங்கி, ஒரு பக்கமாகக் குவிந்து இருந்தது. போர்வை எங்கேயோ விலகிவிட்டது. தட்டித் தட்டி உருக்குலைந்து விட்ட ஒரு பழுப்புக் கரடி நிழல் பதிந்த கூரையை உறுத்து நோக்கிக் கொண்டிருந்தது.

மெதுவாக பார்பராவை வலப் பக்கம் மேலாக நகர்த்திய ரோஜு, தலையணையை நிமிர்த்தி, உறையையும் போர்வையையும் சரியாக இழுத்து விட்டாள். பார்பரா உடலை விறைப்பாக நீட்டி, தடித்த மூக்கைத் திருகிக் கொண்டாள். பிறகு இமைகளை இறுக்கிக் கொண்ட அவள் மீண்டும் உறக்கத்தில் ஆழ்ந்து போனாள். பொட்டலங்களில் ஒன்றை ரோஜு கட்டில் ஓரத்தில் வைத்தாள். பொழுது விடிந்ததும், பார்பராவின் பிஞ்சு விரல்கள் எளிதில் அதைத் திறந்துவிட முடியும்.

பிறகு அந்த அறையைத் தாண்டி பாப்பியை நெருங்கினாள். மற்றொரு பொட்டலத்தைப் பல முடிச்சுக்கள் போட்டுக் கட்டிய பின் அங்கே வைத்தாள். ஏனெனில் அவற்றை அவிழ்ப்பதில் உள்ள மர்மத்தைக் கண்டு அவன் களிப்பான். அவனைப் பார்த்துக் கொண்டே சிறிது நின்றாள் ரோஜு. பாதி திறந்திருந்த கதவு வழியே வந்த மங்கிய ஒளியில் அவனுடைய மென்மையான சிறு முகம் கோடுகளாகத் தெரிந்தது. அவனது தலை மயிர் ஜானுடையதைப் போல் சுருட்டையாக இருந்தது. (பார்பராவுக்குச் சுருட்டையில்லை.) வெளுத்த கன்னங்களுக்கு மேலே அவனது கண்ணிமைகள் அழகாகப் பதிந்து கிடந்தன. மெலிந்து இருந்தாலும், எப்படியோ அவனிடம் ஒரு கவர்ச்சி இருந்தது.

பாப்பி ஒரு கண்ணைத் திறந்து அவளைப் பரிதாபமாகப் பார்த்தபடி, "எனக்குத் தூக்கம் வருகிறது," என்று முணு முணுத்தான்.

"தெரிகிறது" என்றாள் ரோனு.

அவன் உடனே போர்வைக்குள் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை உருவினான். "நான் காவல் காத்துக் கொண்டி ருக்கிறேன்" என்று தனது மற்றொரு கண்ணையும் திறந்தான். பிறகு துப்பாக்கியைத் தாழ்த்திவிட்டு, "ஆனால் நீயல்லவா இங்கே இருக்கிறாய்!" என்றான்.

"யாரை நீ எதிர்பார்த்துக் கொண்டிருந்தாய்?"

"கொள்ளைக்கார டிக் இப்பிராந்தியங்களில் மிகுந்த தொல்லையைக் கொடுக்கிறான்."

"என்ன, மறுபடியுமா?" கொள்ளைக்கார டிக் ரோனு வின் ஒரு கற்பனை நாயகன்.

பாப்பி தலையை ஆட்டியபடி, "ஆனால் அவன் இப்போது தூங்கப் போய்விட்டான் போலிருக்கிறது. ஆமாம்... நீ எனக்கு என்ன கொண்டு வந்திருக்கிறாய்?" என்றான்.

ரோனு 'கிளுக்' கினாள். "ஆனால் நீ இக்கேள்வியைக் கேட் கக் கூடாதே!"

"அம்மாவின் முன்னேதான் கேட்கக் கூடாது. அது என்ன? பார்க்கலாமா?"

"உஷ்... நீ இரைந்து பேசாதே," என்ற ரோனு பார்சலை எடுத்து, "நானே திறக்கட்டுமா? முடிச்சுக்களைப் பார்க்க முடியாமல் இங்கே ஒரே இருட்டு" என்றாள்.

"இத்தடவை எந்த மாதிரி முடிச்சுக்கள்?"

"எல்லாம் 'பாட்டி முடிச்சு'க்கள். அதையெல்லாம் எனக்கு நீ மறுபடியும் கற்றுத் தரவேண்டும்" என்று அவள் பொட்டலத்தைப் பிரித்தாள்.

"ஆனால் உனக்குத்தான் முன்பே சொல்லிக் கொடுத் தேனே, சித்தி? நீ ஒரு மக்கு!" என்று அவன் அவளை அன் போடு நோக்கினான்.

"ஆமாம். அதற்கு நீ என்ன செய்யப் போகிறாய்?"

அவன் உடனே முறுவலித்தான். "ஓ! நீ ஒன்றும் அவ்வ ளவு மக்கு இல்லை," என்ற அவன் தன் பரிசைப்பெறக் கைகளை நீட்டினான். மறுகணம், "ஆ! பெல்ட்! வெள்ளைப் பெல்ட்! இவையெல்லாம் என்ன?" என்று கூவினான், பெல்டில் பதித் திருந்த கற்களைக் காட்டி.

"வைரங்களும் முத்துக்களும். ஷெரீப்புக்களுடைய பெல் டுகளில் இவையெல்லாம் பதிந்திருக்கும்!"

''ஓ! எனக்குச் சரியாகவும் இருக்கிறதே. ஷெரீப்புக்கள் பெல்டோடு தான் தூங்குவார்கள்,'' என்ற பாப்பி, பெல்டை அணிந்து கொண்டு, அதில் துப்பாக்கியையும் தொங்கவிட்டுக் கொண்டான். பிறகு மீண்டும் படுத்துப் போர்வையை இழுத்து மூடிக்கொண்டான்.

''ஆனால் அவர்கள் தூங்கும்போது துப்பாக்கியை எடுத்து விடுவார்களாக்கும். இல்லாவிட்டால், அது துருப்பிடித்து விடுமோ, என்னவோ?''

''ஓ! வியர்வையினாலா?'' என்று வினவிய அவன் யோசித்தான். பிறகு துப்பாக்கியை எடுத்து அவளிடம் கொடுத்து விட்டான்.

''நான் அதைத் தலையணைக்குக் கீழே வைக்கிறேன். ஆனால் நீ தொடக் கூடாது. துப்பாக்கி துருப்பிடித்தால், அவ்வளவுதான். ஒன்றுக்கும் பயன்படாது.''

அவன் தலையை ஆட்டினான். போலி வைரங்கள் பதித்த வெள்ளைப் பெல்டின் உருவத்தைக் கற்பனையில் கண்டு கொண்டே அவன் கண்கள் மூடிக்கொண்டன. ''இது அழகாக இருக்கிறது, சித்தி. ரொம்பவும் வந்தனம்'' என்றான் அவன் தூக்கக் கலக்கத்துடன். பிறகு புன்முறுவலுடன் தலையணையில் வசதியாகத் தலையை வைத்துக் கொண்டான்.

குனிந்து அவனை மெதுவாக முத்தமிட்ட ரோனா, அவனுடைய முன் தலைமயிரை ஒதுக்கிவிட்டாள். கதவைச் சிறிது திறந்த மாதிரியே வைத்து விட்டு அடுக்களைக்கு ஓடினாள்.

பெக்கி அதற்குள் ரொட்டித் துண்டுகளுக்கு வெண்ணெய் தடவி முடித்துவிட்டு, இப்போது முட்டைகளை வேக வைத்துக் கொண்டிருந்தாள். ரோனாவுக்கும் ஒரு முன் துணியைக் கொடுத்த அவள், ''நான் இந்த முட்டைகளைச் 'சரி' செய்து விட்டேன். நீ அவற்றை உடைத்து, எலுமிச்சைச் சாற்றைப் பிழி. அவைகள் எல்லாம் தூங்கி விட்டனவா? இன்று மாலை அவைகள் செய்த விஷமம் கணக்கில்லை. வெள்ளிக்கிழமை என்றாலே அவர்களுக்குத் தெரியும் போலிருக்கிறது'' என்றாள்.

ரோனா புன்னகை பூத்தாள். பெக்கி சுறுசுறுப்பாக இருக்கையில், அவள் பேச்சும் வேகமாக வரும். ''ஜான் புத்தகம் எழுதும் விஷயம் எந்த மட்டிலிருக்கிறது?'' என்று வினவினாள் ரோனா.

''வருகிற கோடையில் முடித்து விடுவாரென்று நம்புகிறேன். காலேஜ் உள்ள நாட்களில் அவருக்கெங்கே நேரம் கிடைக்கிறது?''

''அப்படியானுல், கோடை வகுப்புக்களில் ஜான் போதிக்கப் போவதில்லையா?''

பெக்கி தலையை அசைத்தாள். கோடை வகுப்புக்களுக்குப் போகாவிட்டால் உபரியாகக் கிடைக்கும் எண்ணூறு டாலர்கள் போய்விடும். இருந்தாலும் புத்தகத்தை சீக்கிரமே முடித்தாகவேண்டும். மாடிசனைப் பற்றிய இப் புதுப் புத்தகம் வேறு யாரும் வெளியிடுவதற்குமுன் வந்தாக வேண்டும். ''ஜான் இப்போதுதான் 1812ஆம் வருஷ யுத்தத்தைப்பற்றி எழுதிக்கொண்டிருக்கிருர். இன்னமும் எவ்வளவோ எழுதியாக வேண்டும்'' என்றுள் பெக்கி.

''நீ ஜாகையை நியூ ஜெர்ஸியிலுள்ள பங்களாவுக்கு மாற்றிக்கொள்வது என்ன ஆயிற்று?

''யோசனையில் இருக்கிறது. அதன் சொந்தக்காரர் நாகரிகமானவர். பள்ளி ஆசிரியரான அவர் இந்தக் கோடையில் 'கொலம்பியா' வில் வகுப்புக்களை நடத்த விரும்புகிருர். எனவே எல்லாம் சரியாக முடியக்கூடும். அப்பங்களா சிறியது தான்; ஆனல் நல்ல தோற்றமும், ஒரு பூங்காவும் உடையது; போய் வருவதற்கும் எளிதானது. குழந்தைகளுக்கு மிகவும் பிடித்தமாக இருக்கும். முரட்டுத்தனத்தில் முன்னேறிவரும் பாப், நாள் முழுவதும் அலைந்தவண்ணம் இருக்க ஏற்ற இடம்.''

''அவன் பாவம் இளைத்திருக்கிருன்; ஆனல் வளர்ச்சி சிறிது தெரிகிறது, இல்லையா?''

''அவன் உடைகளெல்லாம் சிறிதாகிவிட்டன. இருந்தாலும் அவன் ஏன் அவ்வளவு மெலிந்திருக்கிருன் என்று புரியவில்லை. அவனுக்கு நல்ல உணவுதான் கொடுக்கிறேன்.'' நிமிர்ந்த பெக்கியின் முகத்தில் கவலை தோய்ந்திருந்தது.

ரோனு 'சட்'டென்று சொன்னுள். ''பார்பரா வாளிப்பாக இருக்கிருள்; அழகான வளர்ச்சி.''

திறந்த சாளரத்தண்டை உலர்த்தியிருந்த கால் உறைகள், பனியன்கள் முதலியவற்றின் நினைவு வந்தது பெக்கிக்கு; உடனே அவற்றைத் திருப்பிப் போடுவதற்காகக் கைப் பாத்திரத்தைக் கீழே வைத்துவிட்டுப் போனுள்.

தலையை வியப்புடன் ஆட்டிய ரோனு, ''இவை யாவற்றையும் நீ எப்படிச் செய்கிருய்?'' என்று வினவினுள்.

பெக்கிக்குச் சிரிப்பு வந்துவிட்டது. ''நம்மில் பெரும்பாலானேர் இவற்றைச் செய்து தானுகவேண்டும். சென்ற வருஷம் நமது நாட்டில் அறுபது லட்சம் குழந்தைகள் பிறந்தனவாம். ஒரு நல்ல விஷயம்—ஜான் சொன்னுர்—அவருக்கும், மற்ற உபாத்தியாயர்களுக்கும் எப்போதும் வேலை இருந்து கொண்டேயிருக்கும்.''

''உனக்காக நான் அநுதாபப்படவில்லை, பெக்கி. உண்மையில் நான் பொறுமைப்படுகிறேன். நீ மகிழ்ச்சியில் திளைக்கிறாய், இல்லையா?'' என்றாள் ரோனா.

பெக்கி அவளை உறுத்து நோக்கினாள். உடனே, ''ஏன்? நீ மகிழ்ச்சியுடன் இல்லையா?'' என்று கேட்டாள்.

''அதற்குக் குறைவில்லை!'' என்ற அவள் பேச்சில் வேகம் குறைந்தது. பிறகு வெட்கத்துடன் தொடர்ந்தாள்; ''இன்றிரவு இங்கே வரமுடியாததற்காக ஸ்காட்டுக்கு மிகுந்த வருத்தம். ஏனெனில் நாங்கள் முகூர்த்தத் தேதியை நிச்சயித்து விட்டோம்.''

''ஓ, ரோனா!'' பெக்கி கைக் கலயத்தை அப்படியே நழுவ விட்டாள். ''இது மகிழ்ச்சி தரும் செய்தி. எப்போது அது? கோடைக்கு நாங்கள் நியூஜெர்ஸிக்குப் போகுமுன் இருக்குமல்லவா?''

ரோனாவின் கன்னங்கள் சிவந்தன. ''செப்டம்பர்?''

''செப்டம்பர் வரை ஏன் காக்க வேண்டும்?''

''செப்டம்பர் மாதத் துவக்கத்திலேயே இருக்கும்.''

''எப்போது?''

''ஓ, இவ்வருஷம் ஸ்காட்டுக்கு எப்போது லீவு கிடைக்குமென்று நிச்சயமாகத் தெரியவில்லை—செப்டம்பர் மாதத் துவக்கத்தில் ஏதாவது ஒரு தேதியாக இருக்கும்.'' ரோனா ரொட்டித் துண்டுகளின்மீது முட்டைப் பாகைத் தடவிக்கொண்டிருந்தாள். ''அடுத்த வாரம் எங்களுக்காக ஒரு வீடும் பார்க்கப் போகிறோம். அவருடைய ஸ்டூடியோ மிகவும் சிறியது—ஒரே ஓர் அறையும், துணிமணிகள் வைத்துக்கொள்ள ஒரே இடமும் தானுள்ளது; அது போதாது'' என்றாள்.

''உன்னுடைய விடுதிக்கு என்ன வந்தது?''

''ஸ்காட்டுக்கு என்னவோ அங்கே வந்து வசிக்கப் பிடிக்கவில்லை.''

''ஆனால் வாடகையை அவன் கொடுத்துக்கொண்டிருக்க வேண்டியிருக்குமே!'' என்றாள் பெக்கி. ரோனா இன்னமும் சங்கடப்படுவதைக் கவனித்த அவள் வேகமாகத் தொடர்ந்தாள்: ''ஆனால் இப்போதெல்லாம் ஒரு வீட்டைப் பிடிப்பது எளிதென்மற கேள்விப்படுகிறேன். வாடகைதான் கொஞ்சம் அதிகமாக இருக்கும். ஆனாலும் மாதம் எண்பது, தொண்ணூறு டாலர்களுக்கு இரண்டு அல்லது மூன்று அறைகள் உனக்குக் கிடைக்கும்.'' இதைச் சொன்னவுடன் ரோனாவின் விடுதிக்கு வாடகை இன்னும் அதிகம் என்பது நினைவிற்கு வந்தது. ஸ்காட் அங்கே வசிக்க வராததற்கு அதுதான் காரணமோ?

அவன் தன்னுடைய பணத்தையெல்லாம் என்ன செய்கிறுன்? அப்படி அவனுக்குச் சம்பளமும் குறைவில்லே; நல்ல எதிர்காலமும் இருக்கிறது. ஆனுல் அவனுல் எதையும் சேமிக்க முடிவதாகத் தெரியவில்லேயே!

கதவு மணி ஒலித்தது. பெக்கி பயத்துடன் கடிகாரத்தையும், பாதி முடிந்திருந்த ஸாண்டுவிச்சுகளேயும் பார்த்தாள். மணி சரியாக எட்டு. அவள் தன் முன்துணியை எடுத்துவிட்டுச் சமையலறையிலிருந்து வெளியே சென்ருள். ரோனுவுக்குத் தட்டிக் கழிக்கும் பதில் எதையும் கூறவேண்டிய அவசியமிருக்கவில்லே. கூடத்திலிருந்து ஜானின் குரல் கேட்டது; கூடவே பால் ஹேடனின் பேச்சு. பெக்கி திரும்பியபோது அடுக்களேயின் மூடிய கதவை உறுத்து நோக்கிக் கொண்டிருந்தாள் ரோனு.

''ஆமாம்....பால் தான் வந்திருக்கிறுன். ஜானுடன் கூடத்து அறைக்குள் இருக்கிறுன். இது என் தவறுதான். எங்களே வீட்டில் சந்திக்க வெள்ளிக்கிழமை மாலே நல்லசமயம் என்று கூறியிருந்தேன். மற்றவர்கள் வருவதற்கு முன் ஜானுடன் பேசுவதற்காக முன்னுடியே வந்திருக்கிறுன்'' என்ருள் பெக்கி.

''ஏன் அவர் ஜானேக் காண வரக்கூடாது? யுத்தத்திற்கு முன் அவர்கள் அதிகமாகச் சேர்ந்து பழகியவர்கள்.'' தன் வியப்பு மறைந்ததும் ரோனு புன்முறுவல் பூத்தாள். ''இதோ பார் பெக்கி. பாலின் புகழ் பெற்ற வசீகரத்தைப்பற்றி நான் நன்கு அறிந்தவள். அவர் எல்லாரையும் போல எனக்குத் தெரிந்த மற்ெருரு நல்ல இளேஞர். அவ்வளவுதான்!''

பெக்கி ஸாண்டுவிச்சுகளே அடுக்கிக்கொண்டே கேட்டாள்: ''அவனேடு நடந்த நிச்சயதார்த்தத்தை ஏன் நீ முறித்துக்கொண்டாய்? உண்மைக் காரணத்தை என்னிடம் சொல்லவேயில்லேயே. நானும் அது விஷயத்தில் தலேயிடவேண்டாமென்றே இருந்துவிட்டேன். ஆனுல் அச்சமயம் நீ மிகவும் சின்னவள். பால்கூட அதை நன்கு உணர்ந்திருந்தான், இல்லேயா? அவன் உன்னேவிட ஏழு வயசு பெரியவன்!''

''ஆமாம்...அப்போது நான் ரொம்பவும் சின்னவளாகத் தானிருந்தேன். அதற்கு ஏற்றபடி குறுகிய நோக்கும், அதிகமான கர்வமுந்தான் என்னிடம் மிஞ்சியிருந்தன. தவிர வயதில் சிறியவளாதலால் எதையும் தீவிரமாக எடுத்துக் கொண்டேன். அப்போது லண்டனில் இருந்த பாலுக்கு நான் எழுதிய கடைசிக் கடிதத்தின் கடுமையான தொனியை நினேத்தால், இப்போதுகூட எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. என் வார்த்தைகளே அப்படியே நம்பி, அவர் மனம் உடைந்துபோய் விட்டார், பாவம்! ஆனுல் முடிவில் என்னுடைய பொறியில்

விழவிருந்த தாம் தப்பித்துக்கொண்டதை எண்ணி மகிழ்ச்சி தான் அடைந்திருப்பார்!'' என்று சிரித்தாள் ரோஜு.

''உண்மை. அதோடு வாழ்வைப்பற்றி உனக்கு இருந்த கருத்துக்கள் மட்டுமே சரியானவை யென்றும் நீ நினைத்திருந்தாய்.''

ரோஜு புன்சிரிப்பு ஒன்றை உதிர்த்துவிட்டு, ''அது இன்னமும் மோசம் இல்லையா?'' என்று கேட்டாள்.

பெக்கி அவசரமாகக் குறுக்கிட்டாள்: ''பின்னே? எல்லா வற்றிற்கும் காரணம், வாழ்வில் உனக்கு அநுபவமே இல்லாதிருந்ததுதான்.''

ரோஜு சிரிக்க ஆரம்பித்தாள்.

பெக்கி இன்னும் அவசரமாகப் பேசினுள். ''அதற்கு நேர் மாருக, பால் ஹேடன் மிகுந்த அநுபவசாலியாக இருந்தான். என்னைத் தவருக எண்ணுதே ரோஜு. எனக்கு என்னவோ பாலை மிகவும் பிடித்திருக்கிறது. அதோடு—''

''அவரைப் பற்றி உலவி வந்த கதைகளெல்லாம் வெறும் அவதூறுகள்தாம், இல்லையா? அது எனக்கு இப்போதுதான் தெரிகிறது. இக்கட்டான விஷயங்களில் வீணுக்குச் சிக்கித் தவிக்கும் ரகத்தைச் சேர்ந்தவர் பால் ஹேடன்.''

''உனது பார்ட்டிக்கு வந்திருந்த மேரி ஃபைனைப் போல்; இல்லையா?'' என்று குத்தலாக வினவினுள் பெக்கி.

''அவளைப் போலத்தான், நாம்கூட பாலை அவளுடன் தள்ளவில்லையா?''

''நாம் என்ன செய்தோம்?''

''நாமிருவரும் கலக்கத்துடன் அவரைப் பார்த்துக் கொண்டு நின்றோம். ''பாலை நம்பு; அழகான பெண்ணைகப் பார்த்துக் கொத்திக்கொண்டு போகும் அவரை நம்பு'' என்று நான் எனக்குள் சொல்லிக் கொண்டிருந்ததைப் பார்த்த அவர் கோபத்துடன் போய்விட்டார், மேரி ஃபைனுடன்!''

''ஜான் அப்படித்தான் சொன்னுர். ஆமாம்.. பாலுக்காக அவர் பரிந்து பேசினுர். அநேகமாக அன்று மாலை முழுவதும் அதைப்பற்றித்தான் விவாதித்துக் கொண்டிருந்தோம்.''

''நீங்கள் விவாதித்தீர்களா?'' ரோஜு வியப்புடன் வினவினுள்.

''ஏன், ஒரு சண்டையே போட்டுவிட்டோம்'' என்ருள் பெக்கி குதூகலத்துடன். ''ஆனுல் தாம்பத்யக் கலகம் என்ருல் என்ன தெரியுமா? சாதாரணமாக ஞாயிற்றுக்கிழமைகளில் ஏற்படுவதைவிட, 'காக்டெயில் பார்ட்டி'களுக்குப் பிறகு அதிகமான தாம்பத்யச் சச்சரவுகள் ஏற்படுகின்றன

என்றே நான் நினைக்கிறேன். மேரி ஃபைன் எம்மாதிரியான பெண்ணென்று ஜான் சொல்லிக் கொண்டிருந்தார். அதை நிருபிப்பதற்காக, அவள் அவரிடம் சொல்லியதையெல்லாம் என்னிடம் கூறினர். அதற்குப் பிறகு அப்படியே நான் கூடத்திலேயே தூங்கிவிட்டேன். சுமார் அரைமணி நேரம் அவள் ஜானைத்தான் தொந்தரவு செய்துகொண்டிருந்தாள். அது என் தவறுங்கூட. நான்தான் ஒரு மாறுதலுக்கு அவளிடம் போய்க் களிப்படையுமாறு அவரை அனுப்பினேன்.'' பெக்கி நகைக்க ஆரம்பித்தாள்.

''சரி...என் பார்ட்டியின் காரணமாக நீ கூடத்தில் படுத்துக்கொள்ளவில்லை என்றறிய மகிழ்ச்சி'' என்று ரோனு மெதுவாகச் சொன்னள்.

பெக்கி அவளைக் கேலியுடன் கவனித்துக் கொண்டிருந்தாள்; இன்னமும் ரோனு காதல் உணர்ச்சியுள்ள சிறு பெண் தான் என்று வாஞ்சையுடன் நினைத்துக்கொண்டாள். ஜானும் பெக்கியும் கருத்து வேற்றுமை கொள்வதே இல்லையென்று அவள் நினைக்கிருள்? ''நான் கூடத்தில் படுத்தது ஜானுக்குப் பொறுக்கவில்லை. அவர் என்னைத் தமது பழைய—கோபமான—தோரணையில் படுக்கைக்கு இழுத்துச் சென்றுர். ஒரே கட்டில் மற்றொருவருடன் இருக்கும்போது கோபம் கொள்வது சாத்தியமா?''

'' இல்லைதான். அப்படியானல் விவாகரத்துக்களைக் குறைக்க, இரட்டைப் படுக்கைகளும், மார்ட்டினிகளை ஒழிப்பதும் உதவும் போலிருக்கிறதே!'' என்றுள் ரோனு குமிழ்ச் சிரிப்புடன்.

''ஒரு விஷயம், ரோனு. அடுத்த தடவை நீ பார்ட்டி கொடுக்கும்போது, மேரி ஃபைனைத் தவிர்த்துவிடு.''

'' அப்பிடித்தான் செய்யப் போகிறேன்.''

'' அவள் ஒன்றும் உன் சிநேகிதி இல்லையல்லவா?'' பெக்கி இப்போது உண்மையான சகோதரியாக இருந்தாள்.

''இல்லை, அவள் சூழ்நிலைகளினல் பாழானவள் என்று ஸ்காட் சொல்கிருர்'' என்றுள் ரோனு.

''நல்ல மனிதர்களை விவரிக்கும்போது நாம் இப்படியெல்லாம் சொல்வதில்லை. ஒருவேளை தனக்குப் பிடிக்காதவர்களையெல்லாம் அழைப்பதென்பது ஸ்காட்டின் கொள்கையோ? அதிசயம்தான்'' என்ற பெக்கி, ரோனுவின் முகத்தைக் கண்களால் துருவினுள். மேரி ஃபைன் பார்ட்டிக்கு அழைக்கப்பட வேண்டுமென்பது ஸ்காட்டின் தீர்மானம் என்று தெரிந்ததும் அவளுக்குக் கேலியாக இருந்தது.

''உன் பெண் பார்பரா தூங்குமுன் தண்ணீர் கேட்டாள். நான் போகிறேன். நீ ஸாண்டுவிச்சுகளை முடித்துவிடு'' என்று ரோனு புறப்பட்டாள்.

''அவளுக்கு மறுபடியும் தண்ணீர் வேண்டுமென்றால் தண்ணீரின் பற்றாக் குறையைப்பற்றி நினைவுபடுத்து'' என்றாள் பெக்கி. பிறகு அவள் சமையல் வேலைகளை முடித்துவிட்டுப் பாத்திரங்களையும் கத்திகளையும் கழுவினாள்.

திரும்பி வந்த ரோனு, ''அவளுக்கு மறுபடியும் தண்ணீர் வேண்டுமாம்'' என்றாள்.

''அதிகமாகக் கொடுக்கக் கூடாது'' என்றாள் பெக்கி.

''ஒரு வாய்தான்'' என்று உறுதி கூறினாள் ரோனு.

''நல்லது, பார்பராவின் கட்டிலுக்குக் காலை ஐந்து மணியிலிருந்து சென்று சென்று அலுத்துவிட்டது எனக்கு. இப்போது ஜான் கவனித்துக்கொள்வார்'' என்ற பெக்கி பார்பராவின் சாய்ந்த நாற்காலியை நிமிர்த்தினாள். பாப்பி அதன் மேல் செய்திருந்த கீறல்களை மறைப்பதற்காக ஏதோ சிவப்புச் சாயமும் அடித்தாள். பிறகு பலகணியை நோக்கித் தலையை ஆட்டியபடி, ''நான் புதுத் திரைச் சீலைகள் தைக்க வேண்டும். ப்ளாஸ்டிக் சீலைகளை வாங்கலாமென்றிருக்கிறேன். அதன் விலையும் குறைவு'' என்றாள் பெக்கி.

இப்போது கேலியாகச் சிரித்தாள் ரோனு.

''என்ன வேடிக்கை உனக்கு?'' என்றாள் பெக்கி.

''நீதான் எனக்கு வேடிக்கை. சில வருஷங்களுக்கு முன்பு உனக்குத் தெரிந்ததெல்லாம், **மார்ஷல் ப்ரௌஸ்டைப்பற்றி** எப்படி பி. எச். டி.க்குக் கட்டுரை எழுதுவதென்பதுதான் என்றால் யார் நம்புவார்கள்?''

''அவளுக்குப் பதில் கண்டுபிடிப்பதற்காக நான் எவ்வளவு தூரம் மண்டையை உடைத்துக்கொண்டேன்! ஆனால் அவள் விரும்பியதென்னவோ மீண்டும் அம்மாவின் இடுப்பில் ஏற வேண்டுமென்றுதான். இருந்தாலும் அக்கட்டுரை எப்படி ஒரு பிள்ளையை வளர்க்கக்கூடாது என்று எனக்குப் போதித்துவிட்டது'' என்றாள் பெக்கி.

தலையை வாரி, கைகளைக் கழுவிக் கொள்ளுவதற்காக அவர்கள் குறுகிய கூடத்தின் வழியே படுக்கை அறைக்குச் சென்றார்கள். பெக்கி மௌனமாக இருந்தாள். அதற்குப் பாதிக் காரணம், பக்கத்து அறையில் குழந்தைகள் கண் வளர்ந்து கொண்டிருந்தார்கள்; மறு பாதிக் காரணம், அவள் எதையோ புதுக் கோணத்தில் கண்டு கொண்டிருந்தாள். தன்னைவிட அதிகமாக எதையும் வாங்க முடிகிறதே என்று நினைத்து ரோனு வருந்துவது விந்தைதான் என்று நினைத்தாள் அவள். 'நானும் அப்பா இறக்கு முன்னமேயே காலேஜ்

படிப்பை முடித்துக் கொண்டதற்கு வருந்துகிறேன்: பாவம், ரோனு தானே ஆபீசில் உழைத்தல்லவா இரவு வகுப்புகளில் படித்துப் பட்டம் பெற நேர்ந்துவிட்டது? ஒருவேளை, இவற்ருல்தானே என்னவோ நாங்கள் நல்ல சிநேகத்துடன் இருக்கிறேம்: ஒருவர் மற்றெருவரிடம் சிறிது மரியாதையும் வைத்திருக்கிறேம். இப்போது எனக்கு ஜான் அமைந்த மாதிரி, ஸ்காட்டும் ரோனுவுக்குத் தக்க கணவனுக இருந்துவிட்டால், எல்லாம் சரியாகிவிடும். பாப்பி சொல்வதுபோல எல்லாம் சிறந்ததாகிவிடும்!'

மெதுவாகச் சிரித்த அவள், பாப்பி புதுசாகக் கற்றுக்கொண்டுள்ள வார்த்தைகளைப்பற்றி ரோனுவிடம் சொல்ல ஆரம்பித்தாள்.

★ ★ ★

பால் ஹேடனும், ஜான் டைஸனும் சீக்கிரமாகவே ஒருவருக்கொருவர் மீண்டும் ஒட்டிவிட்டார்கள். ஆனல், அவர்கள் சிரித்துக்கொண்டும் பேசிக்கொண்டும் இருந்தபோதெல்லாம், ஜானைக் கவனித்துக்கொண்டே யிருந்தான் பால்; ஜானும் தனது அடக்கமான முறையில் அதை உணராமலில்லை.

''நான் என்ன அவ்வளவு மாறிப்போய்விட்டேனு?'' என்ருன் அவன் திடீரென்று.

''அப்படி நான் நினைக்கவில்லை'' என்ருன் பால். கவலையுற்ற நேரங்களில் செய்துகொள்வதுபோல அவன் தன் தலையைச் சொறிந்துகொண்டான்.

''உன்னை எது வருத்துகிறது?''

பால் சொன்னன்: ''எனக்கு உன் யோசனை தேவை; தவிர, இது ஒருவிதத்தில் ரோனுவையும் குறித்த விஷயம். எனவேதான் இதை நீ தெரிந்துகொள்ள வேண்டுமென்று நினைக்கிறேன்.''

ரோனு என்றதுமே, ஜானின் முகம் மாறியது.

''இது 'ட்ரெண்டை'ப் பற்றிய விஷயம்'' என்ருன் பால் அவசரமாக.

ஜான் நிம்மதியடைந்த மாதிரி, ''ஓ, 'ட்ரெண்டை'ப் பற்றியா?'' என்று இழுத்தான்.

''ப்ளாக்வொர்த் பற்றிய நிகழ்ச்சியை உன்னிடம் தெரிவித்திருப்பதாக ரோனு சொன்னள்.''

''ஆமாம் . .'' என்ற ஜான் வியப்புற்ருன். ''ப்ளாக்வொர்த் புதுமையான வீடுகள்பற்றி யாரோ எழுதிய கட்டுரைகளை வெளியிட்டதில் தவறு செய்துவிட்டான் என்ருன்.

அதற்காக அவனை வீட்டிற்கு அனுப்பியது ஒரு கொடுஞ்செயல். வெயிட்லரிடமிருந்து நான் அதை எதிர்பார்க்கவில்லை.''

''அவ்வளவுதான் ரோஜுவுக்குத் தெரியுமா?''

ஜான் தலையை அசைத்தான். ''கதை இன்னும் கூட இருக்கிறதா?''

''ஆமாம் ..., இன்று காலை நான் வெயிட்லரைப் பார்த்தேன்.''

''பார்த்தாயா? அப்படியானல் சீக்கிரமே வேலையில் சேரத் தீர்மானித்து விட்டாயாக்கும்.''

பால் சொன்னன்: ''அதிக நேரத்தை வீணக்க முடியாதென்றே தோன்றுகிறது. இன்னமும் உனக்கு நான் முழுக்கதையையும் கூறமுடியாது. வெயிட்லர் இதை ரகசியமாக வைத்திருக்க விரும்புகிருர். ஆனல் நான் உனக்கு ஒரு குறிப்புக் காட்ட விரும்புகிறேன்—கூரையின் கீழுள்ள செத்த எலியின் நாற்றத்தை எல்லோரையும் போல நீயும் உடனே புரிந்துகொள்வாய். நான் பொதுவாகச் சில வழிகளைச்சொல்கிறேன். நீயே அவற்றைப் பின்பற்றி உண்மைகளைத் தெரிந்துகொள். ஏனெனில் ரோஜுவுக்கு நீயும் பெக்கியுந்தான் உறவினர்கள்.''

''அப்படியானல் விஷயம் முக்கியமானது போலும்.'' ஜான் உஷாரானன்.

பால் தலையை அசைத்தான். கம்பளத்தின் மேல் தெரிந்த தேய்ந்த ரோஜாப்பூக்களின் மீது கண்களைப் பதித்த அவன் எப்படி ஆரம்பிப்பது என்று யோசித்தான். ''நீ கல்வித் துறையைச் சேர்ந்தவன், ஜான். பிரசாரம் ஒரு சக்திவாய்ந்த கருவி என்று நீ நம்புகிருயா? அது அபாயகரமானதாக இருக்க முடியுமா? இந்நாட்டின் விரோதி தன் அநுதாபிகளை அங்கே புகவைத்தால் என்ன நடக்கும்? இந்தப் பிரசாரவாதிகள், ரேடியோ, பத்திரிகைகள், சினிமாப்படங்கள், பள்ளிக்கூடங்கள், கலாசாலைகள், நாடக மேடைகள், புத்தக வெளியீட்டகங்கள் இவற்றிற்குள் புக முயற்சி செய்தால் என்ன ஆகும்?''

''மடத்தனமான கேள்விகள்! அது எவ்வளவு அபாயகரமானது என்ரு கேட்கிருய்?'' என்ருன் ஜான் முட்டிவந்த வெஞ்சினத்துடன். பிறகு பாலை நம்பிக்கையில்லாமல் பார்த்தான். ஆனல் பால் மௌனமாகவே இருந்தான். பிறகு ஜான் தொடர்ந்தான்: ''இது இருபதாம் நூற்ருண்டு. அஞ்சல் வசதிகள் என்றும் இருந்ததைவிட அதிகச் சக்தியுடனும், எளிதாகவும் விளங்குகின்றன. அதிக நாசத்தை விளைவிக்கும் வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து விட்டால் நமக்கு அபாயமில்லையென்று நினைப்பவர்கள் இன்னமும் பத்தொன்பதாம்

நூற்றுண்டு சமாதானத்தைக் கடைப்பிடிப்பவர்கள் என்றே சொல்வேன். பெரிய நாசங்களை விளைவிக்கும் முறையைத் தவிர்த்து, யுத்தம் என்பது மாறவில்லை. ஆனால் இந்த நூற்றுண்டில் நாம் காணப்போகும் சமாதானம் முற்றிலும் வேறுனது. பல புதிய அபாயங்கள் நம்முடன் நிரந்தரமாகத் தங்கப்போகின்றன. ஏனெனில், வாழ்க்கையை எளிதாக்குவதற்காக நாம் பலவிதச் சமாதானகால வசதிகளைக் கண்டு பிடித்து வைத்திருக்கிறோம். இன்றையதினம் நாம் ராணுவத்திற்கு மட்டும் பயப்படவில்லை; நாம் பயப்படப்போவது வார்த்தைகள்; திரித்து, தூற்றி, வஞ்சகமாகக் கூறப்படும் வார்த்தைகள்!''

இப்போதும் பால் ஒன்றும் பேசவில்லை.

ஜான் பொறுமையுடன் தொடர்ந்தான்: ''நூறு ஆண்டுகளுக்கு முன் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் சிலரே. சர்வதேச நிலைமைபற்றி வாதிக்க முடியுமென்று கருதியவர்களும் சிலர்தாம். அதோடு அக்காலத்தில் பிரசாரமும் மெதுவாகவும், குறைவாகவுந்தான் பரவியது. ஆனால் இன்று பத்திரிகைகளைப் படித்து, புத்தகங்களையும் கட்டுரைகளையும் பற்றி விவாதிப்பவர்களும், நாடகங்களையும் படங்களையும் பார்ப்பவர்களும், ரேடியோ கேட்பவர்களும், டெலிவிஷனைக் கவனிப்பவர்களும், தமது குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கும் கலாசாலைகளுக்கும் அனுப்புகிறவர்களும் கணக்கில் அடங்கமாட்டார்கள்.

பால் இடைமறித்தான். ''இதே ஜனங்களுக்குத் தாம் படிப்பதையும், கேட்பதையும் ஆராய்வதைவிடத் தமது சொந்த வாழ்வுக்காக கவனிக்கப்படவேண்டிய அலுவல்கள் எவ்வளவோ உள்ளன. எனவே எழுதுபவர்கள், பேசுபவர்கள் முதலியவரது நேர்மையை அவர்கள் நம்பத்தான் வேண்டியிருக்கிறது. ஒரு ரிஃப்ரிஜிரேட்டரோ, மோட்டாரோ, அல்லது உடைகளோ வாங்கும்போது, பத்திரிகையாளர்களும், சினிமா டைரக்டர்களும், போதிக்கும் ஆசிரியர்களும் வர்த்தகர்களின் நேர்மையை நம்பவில்லையா, அது மாதிரி! என்ன, நான் சொல்லுவது?''

ஜான் அவனைக் கூர்ந்து நோக்கியபடி முறுவலித்தான். ''என்னதான் நீ ஜெர்மனியில் அதிக அநுபவம் பெற்று வந்திருந்தாலும்—உனக்கு இவைகளைப்பற்றி மனதில் படியும்படிச் சொல்லவேண்டும் என்று நினைத்தேன்.''

''ஆனால் இந்த நாட்களில் யாருக்கு இந்தப் போதனை தேவை என்று சொல்லமுடிவதில்லை'' என்றான் பால் மெதுவாக.

அங்கே சிறு மௌனம் நிலேத்தது. முழங்கால்களின்மீது விரித்து வைத்திருந்த தன் கைகளே ஆராய்ந்துகொண்டிருந்த ஜான் திடீரென்று நிமிர்ந்து நோக்கினுன். ''தரைக்குக் கீழே செத்துக்கிடக்கும் எலியின் நாற்றம் எனக்குப் புரிய ஆரம்பித்துவிட்டதென்றே நினேக்கிறேன். தொழிலாளர்களும், வியாபாரிகளும் நம்பவேண்டிய மனிதர்களுள் ப்ளாக்வொர்த் ஒருவன். அவன் அந்த நம்பிக்கைக்குத் துரோகம் செய்துவிட்டான், இல்லேயா?''

''இன்னமுங்கூட நான் உனக்கு முழுக்கதையையும் சொல்லமுடியாது, ஜான்'' என்ருன் பால்.

ஜான் எழுந்து, பழைய 'ட்ரெண்டு' பிரதிகள் வைக்கப்பட்டிருந்த அலமாரியண்டைச் சென்ருன். ''ரோஞ மாதா மாதம் எனக்கு 'ட்ரெண்டு' பிரதிகளே அனுப்பத் தவறுவதில்லே. பெக்கி அவற்றைப் படித்து வருகிருள். எனக்குச் சிறிது நாட்களாக ஒழிவதில்லே. ஆனுல் பார்க்கிறேன்—'' அவன் கைதேர்ந்த அறிஞனேப்போல் பொருளடக்கக் குறிப்பைப் பார்த்தான். பிறகு, ''ப்ளாக்வொர்த் சமீபகாலங்களில் என்ன வெளியிட்டுக்கொண்டிருந்தான்?'' என்று வினவினுன்.

பால் அருகே வந்து ஜானின் தோளுக்கு மேலாகத் தானும் கவனித்தான். ''இந்தப் பிரதியைப் பார். உனக்கு வில்லியம் ஸ்லேடைத் தெரியுமா?'' என்று அவன் அப்பெயரைச் சுட்டிக் காண்பித்தான்.

''நான் அவனேப்பற்றிக் கேட்டதே யில்லே.''

''சரி...நிகோலஸ் ஆர்பென் என்ற பெயரையாவது கேள்விப்பட்டிருக்கிருயா?''

''கேட்டிருக்கிறேன், யுத்தத்திற்கு முன், அவன்கூடச் சர்வகலாசாலேயில் ஒரு பெரிய அமளியை உண்டுபண்ணவில்லேயா? அவன் ஒரு கம்யூனிஸ்ட். அதை அச்சமயம் அவன் ஒப்புக்கொண்டான்.''

அந்த நிகோலஸ் ஆர்பென்தான் இந்த வில்லியம் ஸ்லேட். நீ இக்கட்டுரையைப் படித்தால், அவன் இன்னமும் கம்யூனிஸ்ட்தான் என்பதை அறிந்துகொள்வாய்.''

ஜான், பாலே ஒரு சூனியப்பார்வை பார்த்தான். பிறகு அவன் சூட்சுமமாக 'ட்ரெண்டை'க் கவனித்தான்.

''ட்ரெண்டைக் குற்றம் சொல்லாதே'' என்று நினேவுபடுத்தினுன் பால்.

''அப்படியானுல் ப்ளாக்வொர்த்தை வீட்டிற்கு அனுப்பியதற்கு இதுதான் காரணமா...? இதையெல்லாம் வெளிப்படுத்தியது ரோஞ! உன் அநுமதி கிடைக்கும்வரை இவற்றை

யெல்லாம் எனக்குள்ளேயே ரகசியமாக வைத்திருக்கிறேன்.. இப்படி ஒரு குறிப்புக் காட்டியதற்கு நன்றி, பால்!''

''ரோனுவுக்கு எதிரான முதல் அவதூறை இன்று நான் கேட்டேன். காலையில் வெயிட்லரைப் பார்த்துவிட்டுத் திரும்பும்போது 'ப்ளாஸா'வில் ஒரு கிளாஸ் பானம் குடிப்பதற்காகச் சென்றேன். அங்கே எனக்குத் தெரிந்த ஒருவனைச் சந்தித்தேன். நாங்களிருவரும் சேர்ந்து சாப்பிட்டோம். பேச்சின் நடுவில் அவன் ரோனுவின் பெயரைக் கொணர்ந்தான். அதற்கு முதல்நாள் இரவில் ஒரு பார்ட்டியில் அந்த மடத்தனமான கதையைக் கேட்டதாகச் சொன்னான். அக்கதையை மேலும் பரவவிடாமல் நான் தடுக்கவேண்டுமென்றான். ரோனு ப்ளாக்வொர்த்தின்மீது காதல் வலையை வீசினளாம். அதை அவன் நிராகரித்து விட்டதால், இப்படியொரு கதையைத் திரித்து அவனை வீட்டிற்கு அனுப்ப ஏற்பாடு செய்துவிட்டாளாம்—அதுவும் நான் திரும்பும் சமயமாகப் பார்த்து!''

ஜான் சொன்னன்: ''இல்லை.. இப்படியொரு குப்பைக் கதையை யாருமே கற்பனை செய்ய முடியாது.''

''யாரோ ஒருவன் செய்திருக்கிறன். நான் ரோனுவின் பார்ட்டியில் சந்தித்த மர்ரே என்பவனின் செயல் இது என்று நினைக்க இடமிருக்கிறது. 'நான் திரும்பும் சமயமாகப் பார்த்து' என்ற பகுதியை அவன்தான் சேர்த்திருக்க முடியும்!'' என்றான் பால்.

''அவனை அடித்து நொறுக்கி—'' ஜான் தன்னைச் சமாளித்துக்கொண்டான்.

''நானும் அதே மாதிரித்தான் உணர்ந்தேன். ஆனால் இப்போராட்டத்திற்கு அது தகுந்த வழியல்ல.''

''எனக்கும் புரிகிறது. ஆனல் நாம் என்னதான் செய்வது?'' என்று வெறியுடன் வினவினன் ஜான்.

பால் தன் தலையை மீண்டும் தடவிக் கொண்டான். ''அமெரிக்காவுக்குத் திரும்பி விட்டால் இக் காயங்களையெல்லாம் விட்டுவிடலாமென்று நினைத்துக்கொண்டு வந்தேன். நான் அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடந்தபோது பத்தொன்பதாம் நூற்றாண்டின் மன நிலையிலேயே இருந்திருப்பதை இப்போது உணர்கிறேன்.''

''ஆனல் இது கீழ்த்தரமான கதையாக இருக்கிறதே. இதுதான் ரோனுவைத் திருப்பி அடிக்கக் கையாளப்படும் கம்யூனிஸ்டுகளின் வழியா?'' ஜான் கவலையுடன் வினவினன்.

''ஆமாம்...இதை அவர்கள் 'நடத்தைக் கொலை' என்று சொல்கிறார்கள். இவை எப்போதுமே அற்பமான கதைகளாகத்

தான் இருக்கும். ஒரு மனிதனுக்கு எதிராக வேறொன்றும் கிடைக்காவிட்டால், இப்படி அவர்கள் ஏதாவது திரிப்பார்கள். வீடு திரும்பிய இந்த ஒரு வாரத்திற்குள் நான் கேட்டவற்றில் சில நம்பமுடியாத விதத்தில் கீழ்த்தரமாக உள்ளன. அவைகள் மட்டும் பெரிய மாதிரியில் வரவில்லையெனில், நீயும் நானும் கேட்டவுடன் சிரிக்கத்தான் சிரிப்போம். நாம் ஜாக்கிரதையாக இருக்காவிட்டால் இவைகள் கோரமான முறையில் வளர்ந்து விடும்.''

ஜான் பேசினான்: ''இப்போது அவர்கள் தூற்றிக்கொண்டு போகலாம். ஆனால் முடிவில் அவற்றின் சுய உருவை மக்கள் உணர்ந்து கொண்டு விடுவார்கள். எல்லோரையும், எக்காலத்திலுமே ஏமாற்றிவிட முடியாது.''

''பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு இது புத்திசாலித்தனமான கோட்பாடுதான். ஆனால் இந்த யதேச்சாதிகாரப் பிரசாரத்தை நமது லிங்கன் இப்படித் தெளிவாகக் கண்டிருந்தால், அப்படிக் கூறியிருக்கமாட்டான். ஓர் ''ஆமாம் பூசாரி''யாகவோ, ஓர் அகதியாகவோ, அல்லது கைதிகள் முகாமில் அடைபட்டவனாகவோ இருப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலை வந்தபிறகு, நாம் ஏமாற்றப்பட்டு விட்டோமே என்பதை உணர்ந்து அழுவதால் என்ன பயன்?''

''போரிடுவது!''

''இருபதாம் நூற்றாண்டில் ஏமாந்து போவது பரிதாபம். அது ரத்தம் சிந்தவேண்டிய உள் நாட்டுக் கலகத்தில் முடியும். ராஜ்யங்களுக்குள் சண்டைகள் மூளும். பத்துப் பதினைந்து வருஷங்களாக நடந்துவரும் பிரசாரம் கற்பனையான குறைகளைக் கொந்தளிக்க வைக்கும். அதனால் வகுப்புவாதங்கள், வேற்றுமைக் குழுக்கள் முதலியவை தோன்றும். எந்தக் கம்யூனிஸ்டு ராணுவமும் ஐக்கிய அமெரிக்காவுக்குள் பலாத்காரத்துடன் பண்டையெடுக்கத் தேவையில்லை. பிரசாரகர்கள் தமது வேலையைச் செய்த பிறகு அவர்கள் சாதாரணமாக உள்ளே நுழையலாம்'' என்றான் பால்.

''கம்யூனிஸ்ட் பிரசாரத்திற்காக வேலை செய்பவர்கள், தாம் என்ன செய்கிறோம் என்பதை உணருகிறார்களோ?''

''சிலர் அதன் விளைவுகள் எல்லாவற்றையும் பற்றிச் சிந்திக்கவில்லை என்பது தெளிவு. அவர்கள் பகற்கனவு காண்கிறார்கள். ஆனால் பதவி மோகம் பிடித்த பலர் தாம் என்ன செய்கிறோம் என்பதை அறிந்தவர்களே. தாம் பெரிய பதவியில் இருக்கும் வரை அவர்கள் பிறருக்கு என்ன நேருகிறது என்பதைப் பற்றிக் கவலையே கொள்ளுவதில்லை.''

''ஆனால் கனவு காண்பவர்களும், பதவி வேட்டைக்காரர்களைப் போலவே குற்றவாளிகள்தாம். ஏனெனில், இருவரது செயல்களுக்கும் விளைவு ஒன்றேயல்லவா?'' என்றான் ஜான்.

''அப்படியானால் நிகோலஸ் ஆர்பென் ஒரு பதவி வேட்டைக்காரனா அல்லது கனவு காண்பவனா?'' என்று வினவினான் பால் திடீரென்று.

''ஆர்பென்...?''

''என் கவனம் அவன்மேல் திரும்புகிறது. எனக்குத் தெரிந்தவர்கள் ஒருவரும் அவனைப்பற்றிச் சொல்லவில்லை. வெயிட்லருக்கு அவனைப்பற்றிய நினைவு மட்டுமே உள்ளது. உனக்குங்கூடத்தான். ஆக, எனக்கு அவனைப்பற்றித் தெரிந்தது இவ்வளவே. மற்றவர்கள் அவனை அறவே மறந்து விட்டார்கள். இதைத்தான் அவன் விரும்பினானா? பத்திரிகைக் கட்டுகளில் இன்று தேடிப்பார்த்தேன். அவனுடைய புகைப் படங் கூட ஒன்று கிடைக்கவில்லை. 'ட்ரெண்டி'ல் வந்த அவனுடைய கட்டுரையைப் படித்தபடியேதான் இன்று நான் சாப்பிட்டேன். அவன் புத்திசாலி—ப்ளாக்வொர்த் வெளியிட்ட கட்டுரைகளுக்குள் அவனுடையதுதான் மிகவும் மறைமுகமான பிரசாரத்தை உள்ளடக்கியிருந்தது. அவனைப்பற்றி உனக்கென்ன தெரியும், ஜான்?''

''எனக்கு நினைவுள்ள வரையில்—''

''என்ன சொல்லப் போகிறீர்கள்?'' என்ற கேள்வியுடன் ரோனாவையும் அழைத்துக்கொண்டு உள்ளே வந்தாள் பெக்கி.

ரோனா புன்முறுவலுடன் வினவினாள்: ''ஹலோ பால், என்ன நீங்களிருவரும் அவ்வளவு தீவிரமாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?''

''ஜான் யாரோ ஆர்பென் என்பவனைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான்.''

ரோனாவின் புன்னகை மறைந்தது. ''யாரு? நிகோலஸ் ஆர்பெனா?'' என்றாள் மெதுவாக.

''உனக்கு அவனைத் தெரியுமா?''

''வெகு நாட்களுக்கு முன்பு அவனை நான் ஒரு தடவை சந்தித்தேன். ஆனால் அடிக்கடி நான் அவனைப்பற்றி அதிசயப்படுவதுண்டு.''

பால் அவளை ஒரு கணம் நோக்கினான். பிறகு, ''அவனைப் பற்றி உனக்குத் தெரிந்ததை நாங்கள் கேட்கலாமா?'' என்றான்.

''முதலில் நாம் கொஞ்சம் பீர் அருந்துவோம், பால்'' என்றான் ஜான்.

''அது நல்லதுதான். எனக்கு இந்த அறை மிகவும் பிடித்திருக்கிறது, பெக்கி'' என்ற பால், இரு பெண்களிடமும்

சகஜமாகப் பேச ஆரம்பித்தான். அதற்குள் ஜான் அடுக்களைக்குச் சென்ருன். பெக்கிக்கு இப் பாராட்டு மகிழ்வை அளித்தது. அவளுக்கும் இந்த அறையைப் பிடித்திருந்தது. தாங்கள் இங்கே வந்தபோது இந்த அறை மிகவும் எளிமையாகத் தானிருந்தது என்று பெருமையுடன் சொன்ஞள் பெக்கி. ''ஆனல் மரவேலைகளுக்கெல்லாம் வர்ணம்பூச ரோஞ உதவி செய்தாள். புத்தக அலமாரிகளை ஜான் ஒழுங்காக அமைத்தார். மற்றப்படி வீட்டுச் சாமான்கள் உயர்ந்தவையாக இல்லாவிட்டாலும், உப்புக் காகிதத்தால் தேய்த்து, 'வார்னிஷ்' அடித்ததால் அவைகள் புது எழிலைப் பெற்றுவிட்டன.

''குழந்தைகளுக்கெல்லாம் வயது வந்து விட்டதானல், எங்களுக்குத் தேவையான விதத்தில் அறைகளை எடுத்துக் கொள்ளலாம். ஆனல் இப்போது? குப்பைக் கூடையண்டை ஒரு மூன்றுச் சக்கர சைக்கிள், சோபாவின் மீது தூங்க வைக்கப்பட்டுள்ள துணிப் பொம்மை, அல்லது காஃபி மேஜைக்கடியில் ஒரு செங்கல் மாளிகை முதலியவற்றைத்தான் காணமுடிகின்றது. இதையெல்லாம் எம்மாதிரியான உள்ளழகு என்று அழைக்கலாம் என ரோஞவிடம் கேட்டேன். அவளுக்குத் தெரியவில்லை'' என்ற பெக்கி அவனையும் பேச்சில் இழுக்க முயன்ருள். ஆனல் அது வெற்றி தரவில்லை. ''ஏன் பால், இன்னமும் நீ ஹோட்டலிலா தங்கியிருக்கிருய்?'' என்று அவள் தொடர்ந்து கேட்டாள்; ஆனல் அவள் மனம் ஏனிந்த ரோஞ இப்படி மௌனமாகி விட்டாள் என்றுதான் கலங்கிக் கொண்டிருந்தது.

தற்போதைக்கு ஹோட்டலில் இருப்பதாகவும், ஆனல் சீக்கிரமே தன் நண்பனது விடுதி ஒன்றை வாடகைக்கு எடுத்துக் கொள்ளப் போவதாகவும் கூறினன் பால். ஆனல், எல்லாம் தான் வேலையில் சேரப்போகும் இடத்தைப் பொறுத்தது என்ருன்.

''நீ நியூயார்க்கை விட்டுப் போகப் போவதில்லையே?'' என்று வியப்புடன் வினவினள் பெக்கி. அதேசமயம் அவள் கண்கள் ரோஞவையும் ஆராய்ந்தன. ஆனல் ரோஞ என்னவோ இவை எதையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. பெக்கியின் சங்கடத்தைத் தீர்ப்பது போல் கதவு மணி ஒலித்தது. புதிதாக வருபவர்களை வரவேற்கப் பெக்கி ஓடினள்.

ரோஞ ஆர்பெனைப் பற்றி நினைத்துக்கொண்டிருந்தாள். பால் ஹேடனையும் ஜானையும் எது அப்படித் தீவிரமாக ஆக்கியது? திடீரென்று அவளுக்குக் குளிர்கூட வந்தது. எழுந்து சாளரத்தின் கதவை மூடப்போனள். பால் அவளுக்கு உதவச் சென்ருன். ஒரு கணம் இருவரும் அருகருகே நின்றனர். ''பால்—'' என்று ஆரம்பித்த அவள், பிறகு நிறுத்திவிட்டாள்;

தொடர்ந்து தான் அப்போது சொல்ல வந்ததை மறப்பவள் மாதிரி, ஒரு முறுவலை உதிர்த்துக் கொண்டே தலையை ஆட்டினாள். தன் கவலைகளை யெல்லாம் தானே மிகைப்படுத்திக் கொள்ளுவதாக அவளுக்குத் தோன்றியது. அதை திருத்திக் கொள், ரோனு. நீ பாவிடம் யோசனை கேட்டுக்கொள்ள முடியாது. அவள் வேகமாக பலகணியை விட்டகன்று, அறையின் கதவுப் பக்கம் சென்றாள். மற்ற விருந்தினர்கள் உள்ளே வந்து கொண்டிருந்தார்கள். அறிமுகம், இலேசான உரையாடல்கள், புன்னகைகள், சிரிப்பு...

அப்படி ஆர்பெனைப்பற்றி என்ன முக்கியமாக இருக்கப் போகிறதென்று ரோனு எண்ணினாள்; அப்போது அவளது விழிகள் சிறந்த உபசாரகனாக இருந்த ஜானையும், உதவி தரும் விருந்தாளியாக இருந்த பாலையும் கவனித்துக் கொண்டே இருந்தன. ஆனால், பாலும், ஜானும் உலகத்தில் எதைப்பற்றியுமே கவலைப்படாதவர்கள் மாதிரித் தோன்றினார்கள்.

அத்தியாயம் 7

விருந்தினர்கள் நிறைந்திருந்த டைஸன் தம்பதிகளின் அறையில் இப்போது ஒரு பெரிய கூட்டமே குடி கொண்டது போல் தோற்றியது. ஆனால் மொத்தம் வந்திருந்தவர்கள் என்னவோ பத்துப் பேர்கள்தாம். **ராபர்ட் கேஷ், மில்டன் லெயிட்னர், ஜோஸப் லோகாஸ்ட்ரோ** முதலியவர்கள் மூன்றாவது வருட மாணவர்கள். சிறிய சிகையோடு இருந்த கேஷ் கண்ணாடி அணிந்திருந்தான். மெல்லிய வெண்மையான வடிவம், உறுதியான வாய். மில்டன் லெயிட்னரின் தலையில் நல்ல கருத்த மயிர். அடர்ந்த புருவங்கள். எடுப்பான நாசி. அழகிய கண்கள். உயரத்தை மீறிய அகன்ற தோள்கள். கவனமான பேச்சு. ஜோசப் லொகாஸ்ட்ரோவுக்கும் கருத்த சிகைதான்; ஆனால் மெலிந்த மூக்கு. அகன்றபுன்னகை. நீளமான கால்கள். தரையில் உட்காரும்போது அவை அவனுக்குச் சிறிதுதொந்தரவாகக் கூட இருந்தன. தன் முழங்கால்கள் மேலே இடிக்க, ஒரு காஃபி மேஜையண்டை அவன் அமர்ந்தான். ஏனெனில், அவனுடைய சிநேகிதி **எடித்** அவனருகில் கீழே தரையில் அமர்ந்திருந்தாள். அவள் வார இறுதியைக் கழிக்க, வாஸாரிலிருந்து நியூயார்க்கிற்கு வந்திருந்தாள். முக்கியமாக பெக்கி

டைஸனைச் சந்திக்க வேண்டுமென்பதற்காகவே அவனை அழைத்து வந்திருந்தான் அவன்.

இதைக் கேட்ட பெக்கிக்கு ஒரே மகிழ்ச்சி. எடித் பேசுவதைக் கேட்கும்போது, அவளுடைய செம்மைக் கூந்தலையும், எழில் மிக்க சருமத்தையும் கண்டு வியந்தாள். தனது கணவருடைய மாணவன் யாராவது அழகும், குணமும், புத்திக் கூர்மையும் உள்ள பெண்ணைக் காதலித்தால் பெக்கி எப்போதுமே சந்தோஷப்படுவாள். ஜோவினுடைய காதலி, எங்கே காலில் ரோமமுள்ள பிராணியாக, மோசமாக இருந்து விடுவாளோ என்று அவள் கவலைப்பட்டதுண்டு. எனவே எடித்தும், ஜோவும் காஃபி மேஜையண்டை அமர்ந்து குதூகலமாகப் பேசுவதைக் கண்டு அவள் பெருமை அடைந்தாள்.

மற்ற இரு விருந்தாளிகள் பர்லே தம்பதிகளாவர். மிஸ்டர் பர்லே ஆங்கில இலாகாவைச் சேர்ந்த இளம் போதகர். தன் பெயரைப் போலவே வாளிப்பாக இருந்த ஃப்ராங்க் பர்லே, கைகளுள்ள நாற்காலியொன்றில் அமர்ந்திருந்தான். அவனுக்கு முன்னால் தலையை ஆவலுடன் நீட்டிக் கொண்டிருந்த ராபர்ட் கேஷ், காஃப்கா என்பவனைப் பற்றித் தனது இயற்கையான தீவிர முறையில் கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தான். நீண்ட அக்கேள்விகளுக்கு விடைகாண முயலுபவை போல் பர்லேயின் கண்கள் மூடியிருந்தன. காஃப்கா என்பவன் பர்லே எழுதிவரும் அதே பெயருள்ள நாவலின் கதாநாயகன்.

"காஃப்காவில், அவனுடைய சூழ்நிலையை நீ மறக்கக் கூடாது. அவன் தனிப்பட்ட கோஷ்டியைச் சேர்ந்தவன். வேறு யாரும் அவன் மாதிரி நடந்து கொள்ள வேண்டுமென்று நான் எண்ணவில்லை. ஏனெனில் அது போலியாகத்தானிருக்கும்" என்றான் பர்லே. தானும் ஒரு நாவல் எழுதவேண்டுமென்ற எண்ணத்திலிருந்த ராபர்ட் கேஷினால் இதை நம்ப முடியவில்லை. பர்லே எங்கெங்கே தவறு செய்திருக்கிறான் என்பதை அவன் கூற ஆரம்பித்தான்.

பால் ஹேடனும், மில்டன் லெயிட்னரும் ஜானோடு ஜெர்மனியைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். அதனால் மொய்ரா பர்லேக்கு அருகில் அமர ரோனாவுக்கு வாய்ப்புக் கிடைத்தது. மலர்ந்த முகம் படைத்த இளம் மங்கை மொய்ரா. ஆனால் ஒரு ஜோடி—இரட்டைக் குழந்தைகளுக்குத் தாய். கலகலப்பான சுபாவமுள்ள அவள், தன் கணவர் 'கொலம்பியா'வில் ஆங்கிலம் போதிப்பதாகவும், தற்போது நாவல் ஒன்று எழுதுவதாகவும், அதில் ரோனாவைப் போன்ற ஜேன் என்ற பெண் கதாநாயகியென்றும் ஒரே பேச்சில் சொல்லி முடித்

தாள். பிறகு திடீரென்று, ''ஆமாம்..ஸ்காட் எட்லீ எப்படியிருக்கிறான்? சொல்லு—'' என்றாள்.

''ஸ்காட் எட்லீ?'' ரோனாவுக்கு மற்ற பேச்சுக்களில் இருந்த கவனமெல்லாம் போய்விட்டது.

''இன்றிரவு அவர் இங்கே வரமுடியாமல் போய்விட்டதற்கு நான் வருந்துகிறேன்.''

''பல வருஷங்களுக்குப் பிறகு அவனை இங்கே பார்க்கலாமென்று ஆவலோடு இருந்தேன். அவன் மிகவும் மாறிப் போய் விட்டதாகக் கேள்விப்பட்டேன். அது எனக்கு மகிழ்ச்சிதான். உண்மையில் அவன் பெரிய் வாயாடி'' என்றாள் திருமதி பர்லே.

''ஸ்காட்டை உனக்குத் தெரியுமா?'' என்றாள் ரோனா.

''ஏன், நன்றாகத் தெரியும். நாங்கள் ஒன்றாக வளர்ந்தவர்கள். என் அப்பா மன்ரோ காலேஜின் தலைவராக இருந்தார். அது ஸ்டான்டனுக்கு அடுத்தாற்போல்தான். அதெல்லாம் உனக்குத் தெரியாது?''

''தெரியும், மிஸ்டர் எட்லீயைப் பார்க்க அங்கே சென்றிருந்தேன். ஸ்காட்டுகூட அப்போது அங்கேயிருந்து 'மன்ரோ'வுக்குப் போனார்.

''மன்ரோ கல்லூரியைப் பற்றி உனக்குத் தெரியுமா? அப்பெயர் 'மன்ரோ கொள்கை'யை ஒட்டி வந்ததில்லை. ஒபேடய்யா மன்ரோ என்ற அதன் ஸ்தாபகரை ஒட்டிய பெயர் அது. கிழக்கு இந்தியத் தீவுகளில் ஈட்டிய பணத்தைக்கொண்டு அவர் அக்கல்லூரியை நிறுவினார்.''

இவ்விஷயங்கள் கேட்கச் சுவையாய் இருப்பதாகக் கூறினாள் ரோனா. பிறகு சிறிது நேரம் மௌனம். திருமதி பர்லே தொடர்ந்தாள்: ''அப்படியானால் நீ ஸ்காட் எட்லீயை மணந்து கொள்ளப்போகிறாயாக்கும். நம்பிக்கையுள்ள ஒரு பெண்ணை அவன் அடைவதில் எனக்கு மகிழ்ச்சி.''

இது ஒரு பாராட்டுத்தான் என்ற நம்பிக்கையில் புன்முறுவல் பூத்தாள் ரோனா.

''அவன் சிறியவனாக இருந்தபோது ரொம்பவும் சிரமப்பட்டு விட்டான்'' என்று தொடர்ந்தாள் திருமதி பர்லே.

''ஸ்காட்டா?'' வியப்புடன் வினவினாள் ரோனா. அவளுக்கு எட்லீயின் வசதியான வீடும், தோட்டமும் நினைவுக்கு வந்தன.

''ஆமாம்...அவன் அவ்வளவு முரடனாக இருந்தான். அவனுடைய வீட்டுக்குப் போகும்படி இருந்தால், நாங்கள் உடம்பு சரியில்லையென்று பின்தங்கிவிடுவோம்! ஆனால் இதெல்லாம் அவனுடைய அம்மாவின் தவறு. எதிலும் சிறந்தவற்றையே அவள் தன் மகனுக்கு அளிப்பாள். அவன் பொம்மைகளை நாங்கள் எல்லாம் தொடக்கூடக் கூடாதென்பான். அதனால் எங்களுக்குள் சண்டை வந்துவிடும். பள்ளிக்கூடத்திலும் மற்றப்

பையன்களுடன் சண்டையிட்டு வாரம் ஒரு தடவையாவது கண்ணைக் கறுப்பாக்கிக் கொண்டு வருவான். சில சமயம் அவனுக்காக நான் அநுதாபப்படுவேன். பிறகு அவன் ஏதாவது எனக்குத் தீங்கு செய்யும்போது, அவனுடைய இரு கண்களிலும் அடிபட்டிருக்கக்கூடாதா என்று நான் எண்ணுவேன்.'' 'கலகல'வென்று நகைத்தவாறு அவள் ரோனுவைப் பார்த்தாள். ரோனுவும் இந்த வேடிக்கையில் கலந்து கொள்வாள் என்பது அவள் எண்ணம். இன்று ஸ்காட் இங்கு வராமலிருப்பதன் நன்மையை நினைத்து ஆறுதல் அடைந்து கொண்டிருந்த ரோனு, இக்கேலியில் பங்கு கொள்ளவில்லை.

அப்போது ஸாண்டுவிச்சுகளை எல்லோருக்கும் பரிமாறிக் கொண்டிருந்த ஜானைப் பார்த்து, ''நான் உதவட்டுமா ?'' என்று கேட்டாள் ரோனு.

''வேண்டாம், ரோனு. மில்டன் உதவி செய்கிறுன்'' என்று கூறிவிட்டான் ஜான்.

எனவே சோபாவில் உட்கார்ந்திருப்பதைத் தவிர அவளுக்கு வேறு அலுவல் இருக்கவில்லை. அவளுக்குப் பிடிக்கவில்லையென்றாலும், மொய்ரா பர்லேயின் குரலுக்குச் செவிசாய்க்காமல் எப்படியிருக்க முடியும் ?

மொய்ரா சொன்னாள் : ''பிறகு பள்ளிக்கூட ஹாஸ்டலுக்கு நான் அனுப்பப்பட்டேன். அதனால் பிற்பாடு கிறிஸ்துமஸ் பார்ட்டிகளின்போது தவிர ஸ்காட்டை நான் அதிகமாகக் காணவில்லை. ஒருவிதத்தில் அவன் நல்ல அழகன்; சுய கர்வம் உள்ளவன். அவனுக்கு நன்றாக நடனம் ஆடத் தெரியாது. ஆனால், எங்களிடம் கற்றுக்கொள்ளவும் மாட்டான். அதற்குப் பதில் கதவண்டை நின்றுகொண்டு எங்களைச் சோர்வுடன் கவனித்துக் கொண்டிருப்பான். தானும் சிறிது நொண்டியாக இருக்கவேண்டும்; பைரன் பிரபுவைப் போல் பாசாங்கு செய்ய வேண்டும் என்பதுகூட அவனுக்கு எண்ணமென்று சொல்வேன்.''

''நம் எல்லோருக்குமே ஏதாவது சில வேண்டாத நடைமுறைகள் இருக்கத்தான் செய்கின்றன'' என்றாள் ரோனு ன் கோபத்தை அடக்கிக்கொண்டு, சிரிக்க முயன்றபடி. ாவம் ஸ்காட், திருமதி பர்லேயைப் போன்ற பெண்களின் மத்தியில் சிக்கிக் கொண்டல்லவா திணறியிருக்கிறார்! பிறகு ''காலேஜில் ஸ்காட் மிகவும் நன்றாகத்தான் படித்தார்'' என்றாள் ரோனு.

''அதுமட்டுமில்லை ; காலேஜ் வாழ்க்கையில் சந்தோஷமாகவும் இருந்தான். அவன் முற்றிலும் மாறிவிட்டதாக நான்கூடச் சொன்னேன், இல்லையா?'' என்றாள் திருமதி பர்லே குதூகலத்துடன்.

இத்தடவை ரோனு பதிலுக்கு முறுவலித்தாள்.

''ஆமாம்... நான் ஸ்காட்டின் தாயைத்தான் குற்றம் சொல்வேன். அவனது அப்பா ஒன்றும் தன்பிள்ளை மற்றவர்களையெல்லாம்விட உயர்ந்தவன் என்று எண்ணமாட்டார். திருமதி எட்லீ இறந்ததும், அவன் தந்தை ஸ்காட்டைக் கவனிக்க ஆரம்பித்தார். ஆனால்...'' என்று இழுத்த அவள் தன் தோள்களைக் குலுக்கினாள். அவனை என்னவோ முன்னமேயே பாழ்படுத்தியாகிவிட்டது என்று அவள் சொல்வது போலிருந்தது.

''ஆனால் என்ன? உன் பேச்சு விசித்திரமாக இருக்கிறது மொய்ரா'' என்றாள் அப்போது அங்கே வந்த பெக்கி.

''நான் உன் தங்கையிடம் சொல்லிக்கொண்டிருந்தேன்.''

''பெற்ற அன்னை எப்படித் தன் மகனுக்கு நாசம் விளைவிக்கக்கூடுமென்று'' என்றாள் ரோனு குறுக்கிட்டு.

''அன்பின் காரணமாகத் தான்'' என்ற மொய்ரா ரோனுவை நோக்கினாள்.

''மார்ஷல் ப்ரௌஸ்டைப் போலவா?'' அகன்றதோர் முறுவலுடன் ஜோ லொகாஸ்ட்ரோ வினவினான். ''புரொஃபசர் டைஸன், ப்ரௌஸ்டைப் பற்றி உங்கள் மனைவி நன்கு அறிந்தவர் என்று எனக்குத் தெரியாது.''

''அப்படியொன்றும் இல்லை'' என்றாள் பெக்கி, உள்ளூரச் சந்தோஷத்துடன்.

ராபர்ட் கேஷ், டாக்டர் பர்லேயை விட்டு எழுந்து சென்றான். மற்றவர்களும் வெவ்வேறிடத்திற்கு நகர்ந்தார்கள். ஜோ லொகாஸ்ட்ரோவும், எடித்தும் சேர்ந்து அமர்ந்திருந்தார்கள். அவன் அவளுடைய மென்கரத்தை இறுகப்பற்றியிருந்தான்.

இதுதான் சமயமென்று நழுவிய ரோனு, மில்டன் லெய்ட்னர் இருந்த பக்கம் சென்றாள். ஸ்காட் எட்லியைப் பற்றி விசாரித்த அவனுடன் அவள் பேசலானாள்.

பால் ஹேடனுடன் வார்த்தையாடிக் கொண்டிருந்த திருமதி பர்லே, ''தொட்டிலை ஆட்டும் கரம்தான் உலகத்தையே ஆள்கிறது. எங்கேயாவது சமூகத்திற்கு விரோதமாக ஒரு மனிதன் நடந்துகொண்டானென்றால், அவனை அவன் தாய் நன்கு வளர்க்கவில்லையென்று தீர்மானித்துக் கொள்ளலாம். நம் அநுதாபத்திற்கு உரிய சீர்கெட்ட குழந்தைகள் அப்படியிருப்பதற்குக் காரணம், அவர்களுடைய தாய்மார்களே!'' என்றாள்.

''கேட்டாயா பெக்கி, தந்தைகளே முக்கியமில்லை என்கிறாள் மொய்ரா. எனவே வாழ்வில் நான் ஒரு பொருட்டல்ல; உனக்குத்தான் பெரிய பொறுப்பு இருக்கிறது'' என்றான் ஜான்.

ஃப்ராங்க் பர்லே குறுக்கிட்டார் : ''எல்லாக் குழந்தைகளுமே பாவிகளாய்ப் பிறப்பதாக மகான் அகஸ்டைன் தீர்மானமாக எழுதியிருக்கிறார். ஒருவேளை சில குழந்தைகள் அப்படியே நிலைத்து விடுகின்றனவோ, என்னவோ ?''

''ஓ....இல்லை!'' என்றார்கள் எடித், ரோனு இருவரும் ஒரே குரலில். பிறகு நடந்த விவாதத்தில் யாவருமே கலந்து கொண்டனர். அத்துடன் அரசியலும், ரஷ்யர்களின் பிரச்னையும் அடிபட்டது. மில்டன் லெயிட்னர் கதவண்டை திரும்பியதும், ''ஹே...பாப்பி!'' என்றான். மற்றவர்கள் பார்வையும் மௌனமாக அங்கே திரும்பின.

அங்கே வெளிச்சத்தில் விழித்துக்கொண்டு நின்றான் பாப்பி. அவனது பைஜாமா மெல்லிடையை விட்டு நழுவி யிருந்தது. அதை ஒரு கையினால் பிடித்துக்கொண்டிருந்தான் அவன்.

''என்ன பாப்பி?—'' என்ற கேள்வியுடன் அருகில் சென்றாள் பெக்கி.

''நான் குளியறைக்குப் போகவேண்டும். என்னுடைய பெல்டை யாரோ கழற்றிவிட்டார்கள்'' என்ற அவன் ரோனுவையும், பெக்கியையும் நோக்கினான்.

''அட....அது நல்ல பெல்டு ஆயிற்றே!'' என்றான் ஜோ.

''இந்தா ஒரு ஸாண்டுவிச்சு சாப்பிடு; பெல்டும், நீயுமாக ஒரு திருடன் போலல்லவா இருப்பாய்'' என்றான் கேஷ்.

''நான் திருடனில்லை, ஷெரீப். யாரோ என் பெல்டைக் கழற்றி விட்டார்கள்'' என்று முதலில் ரோனுவையும், பிறகு தன் அம்மாவையும் நோக்கினான். பெக்கி ஜோவின் கால்களைத் தாண்டிக் கொண்டு குழந்தையிடம் சென்றாள். அங்கே கட்டிலில் தொங்கிய புது 'பெல்டை'ப் பார்த்த அவள் ரோனுவைத் திரும்பி நோக்கியபடி, ''அம்மாக்களைப்போலவே சித்திகளும் வேண்டிய கஷ்டங்களைத் தோற்றுவிக்க முடியும் போல் இருக்கிறது'' என்றாள்.

ரோனு முந்திக்கொண்டு பாப்பியை அணுகினாள். அவன் முன்னே மண்டியிட்டவாறு, ''நான்தான் கழற்றி வைத்தேன் பாப்பி. ஏனென்றால் எனக்குச் 'சட்'டென்று நினைவு வந்தது...'' என்ற அவள் பால் ஹேடன் தன்னைக் கவனிப்பதைப் பார்த்ததும் நிறுத்திக்கொண்டாள்.

''உனக்கு என்ன ஞாபகம் வந்தது?'' என்றான் பாப்பி. இன்னமும் குற்றம் சாட்டும் மாதிரியில்.

''ஷெரீப்புக்கள் தமது பெல்டுகளைப் போர்வைக்குள் மறைத்துக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் அதைப் படுக்கைக்கு மேலேதான் தொங்கவிடுவார்கள். அப்போதுதான்

அதைப் பார்ப்பவர்கள், தூங்குவது ஷெரீப்தான் என்றுபுரிந்து கொள்வார்கள்.''

பாப்பி யோசித்துப் பார்த்தான்.

''நீ தூங்கிக் கொண்டிருந்ததால் இதை நான் உன்னிடம் சொல்ல முடியவில்லை'' என்றாள் ரோஸ். பாப்பியின் முகச் சுளிப்பு மறைந்து, ஒரு முறுவல் மலர்ந்தது.

''சரிதான்......ஆனால் எனக்கு ஒரே கோபம் வந்து விட்டது'' என்றான் பாப்பி. தந்தையைப் போலவே பேசிய அவன் பேச்சைக் கேட்ட ஜோ லொகாஸ்ட்ரோ சிரிப்பை அடக்கிக் கொள்ள முயன்றான். ஆனால் இருமலாக வெடித்தது.

''ஷெரீப் ஒரு ஸாண்டுவிச்சு சாப்பிடலாமே'' என்றான் மில்டன், லொகாஸ்ட்ரோவைப் பார்த்து முறுவலித்தபடி.

''எனக்கு முட்டைதான் வேணும்.''

''முட்டைகளையெல்லாம் நாங்கள் சாப்பிட்டு ஒழித்து விட்டோம், பாப்பி'' என்றான் ஜான்.

''ஓ!'' என்றான் பாப்பி, இதை எதிர்பார்த்தமாதிரி.

''நாளைச் சாப்பாட்டுக்கு முட்டைகள் தருகிறேன்'' என்றாள் பெக்கி.

''நிச்சயமாகவா?'' என்று கேட்டான் பாப்பி, அவசரத்துடன்.

''நிச்சயம், நாளைக்குப் பெரிய விருந்துதான். வா...எல்லோருக்கும் 'குட் நைட்' சொல்லு'' என்றான் ஜான்.

''நான் இன்னமும் 'ஹலோ'வே சொல்லவில்லையே.''

''இப்போது இரண்டையும் சேர்த்துச் சொன்னால் போகிறது'' என்ற ஜான் அவனைக் கைகளில் தூக்கிக்கொண்டான்.

எல்லோரும் புறப்படுவதைக் கவனித்தாள் பெக்கி. ஜோ, எடித் இருவரும் பெக்கியை நோக்கினார்கள். எடித்தின் கைகளை ஜோ அழுத்திப் பிடித்தான். ஜூன் மாசத்தில் திருமணத்தை எப்படியாவது முடித்துவிட வேண்டுமென்று அவன் எண்ணம் ஓடியது.

பால் ஹேடன் ரோஸிடம் மெதுவாகக் கூறினான்: ''நாங்களும் நகரத்துப் பக்கந்தான் போகிறோம். நீ போக விரும்பும் போது சொல்லு.''

''நன்றி பால். ஆனால் என்னை அழைத்துப் போக ஸ்காட் வருவார். இல்லாவிடினும் நான் இங்கே சிறிது தங்கப் போகிறேன். உண்மையைக் கூறவேண்டுமானால் நான் நிகோலஸ் ஆர்பெனைப் பற்றி அறிய விரும்புகிறேன்.''

''நிகோலஸ் ஆர்பெனா? அந்தக் கம்யூனிஸ்ட்? அவனைச் சுவற்றோடு நிற்கவைத்தல்லவா சுடவேண்டும்?'' என்று கூவினாள் அருகிலிருந்த திருமதி பர்லே.

பால், ரோனு, மில்டன் லெயிட்னர் ஆகிய மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். பாப் கேஷ் வாயை இறுக்கிக் கொண்டான்.

திருமதி பர்லே தொடர்ந்தாள்: ''அவன் என் அப்பாவைக் கொன்றவன். எல்லாவற்றிற்கும் சில மாதங்கள்தாம் ஆயின. அப்பா கவலைப்பட்டே கல்லறைக்குப் போய்ச் சேர்ந்தார்.''

''மொய்ரா?'' என்றான் அவளுடைய கணவன் மெதுவாக.

''எனக்கு என்ன நடந்ததென்று தெரியும்! பெற்றோர்கள் பலர் குற்றம் கூறியதால் அவனை 'மன்ரோ' கல்லூரியிலிருந்து விலக்கினார்கள். அப்போது அவன், தான் கம்யூனிஸ்ட் இல்லையென்றான்! ஆனால் ஒருமாதம் சென்றதுமே, தன்னைத் 'தியாகி' யென அழைத்துக்கொள்ள விரும்பிய அவன், தான் கம்யூனிஸ்டுதான் என்று பகிரங்கமாக ஒப்புக்கொண்டான்'' என்றாள் அவள் கோபத்துடன்.

பர்லே தம்பதிகளைத் தவிர மற்றவர்களுக்கு இது விசித்திரமாக இருந்தது. ஆனால் பர்லே தம்பதிகளுக்கு மட்டும் இதில் அர்த்தமிருப்பதாகவே தோற்றியது.

''பெற்றோர்கள் அவன்மீது குற்றம் சாட்டினார்களா?'' என்றான் ரோனு தேய்ந்த குரலில். அவளுடைய பயமெல்லாம் திரும்பிக் கொண்டிருந்தது. பால் அவளைக் கவலையுடன் நோக்கினான்.

''ஆமாம்.... மக்கள் தமது பையன்களின் கல்விக்காகப் பணம் கொடுப்பதால்தான் ஆசிரியர்களுக்கு வேலைகிடைக்கின்றது என்பதை ஆர்பென் உணர்ந்ததாகத் தெரியவில்லை. தமது பையன்கள் கலாசாலையில் ஆர்பெனின் வகுப்புக்களிலிருந்து சிறு கம்யூனிஸ்டுகளாகத் திரும்பி வருவதைக் கண்டால் யார்தான் பொறுப்பார்கள்? அவர்களுக்குப் போதிப்பதற்குத்தானே ஆர்பெனுக்குப் பணம் கொடுக்கிறார்கள்?''

''மொய்ரா, இதுபற்றிய பேச்சு எதற்கு? இதனால் உன் மனசு வேதனைப்படும் என்பது நீ அறியாததா?'' என்றான் அவள் கணவன்.

''அந்த ஆர்பெனை நான் ஒரு நாள் சந்திக்க விரும்புகிறேன், கையில் கோடாலியுடன்!'' என்றாள் திருமதி பர்லே போகும்போது.

''ஓ! அவளுக்குப் பைத்தியந்தான்'' என்றாள் எடித்.

ஒரு கணம் அங்கே அமைதி நிலவியது. திருமதி பர்லேயின் முரட்டு உணர்வு எல்லோரையும் சங்கடத்தில் ஆழ்த்தியிருந்தது.

''இப்படிப் பேசுவது தவறானது'' என்றான் மில்டன்.

''ஆமாம்...'' என்றான் பால்.

''இதன் மூலம் அவள் கம்யூனிஸ்டுகளுக்குத்தான் உதவி செய்கிறாள் என்றேன்'' என மில்டன் தொடர்ந்து சொன்னான்.

''அப்படித்தான் நானும் நினைக்கிறேன்'' என்று ஒப்புக் கொண்டான் பால்.

''அவள் மிகைப்படுத்திப் பேசுபவள் போலிருக்கிறது. அவள் எண்ணங்களும் அர்த்தமற்றவை'' என்றாள் ரோனா கடுமையாக.

''இப்படியெல்லாம் நேர்ந்ததற்கு வருந்துகிறேன். மொய்ரா இப்படி உணர்ச்சி வசப்பட்டதை நான் கண்டதேயில்லை. என்னதான் நடந்தது?'' என்றாள் பெக்கி.

''நான் நிகோலஸ் ஆர்பெனின் பெயரைச் சொன்னேன். அவ்வளவுதான்.''

''ஓ! நிகோலஸ் ஆர்பென்'' என்றான் ஜான்.

''மொய்ராவுக்கு வீண் கோபம் என்றே நான் நம்புகிறேன்'' என்றாள் பெக்கி.

''அது தவறு. இப்போது அமெரிக்காவில் தோன்றியிருப்பதைப் போன்றது அவளுடைய புரட்சி மனப்பான்மை'' என்றான் ராபர்ட் கேஷ் அநுதாபமின்றி.

''ஆனால் எந்தப் புரட்சிக்கும் காரணமாக ஒரு செயல் இருக்கும் இல்லையா? பாப், நீ என் தலைமீது அடித்தால் நான் அதை மறந்துவிடுவேனா?'' என்ற பெக்கி, சிகரெட் சாம்பல் நிறைந்த டப்பாக்களைக் காலி செய்துகொண்டே தொடர்ந்தாள்: ''ஆமாம்... இந்த ஆண்டில் யாங்கிகளுக்கு எதிராக யார் ஆடப்போகிறார்கள்? ஜான், இந்த வசந்தத்தில் நீங்கள் என்னை அவர்களது விளையாட்டுக்களில் ஒன்றுக்கு அழைத்துப் போகிறீர்களா? எனக்கு ஒரு தடவை யோகி பெர்ரா விளையாடுவதைக் காண வேண்டும்.''

பேச்சு வேறு கதியில் திரும்பியதும், எல்லாம் சரியாகி, மும்முரமான வாதப் பிரதிவாதங்களும் முடிந்துவிட்டன. அரசியல் பேச்சுக்களில் அபத்தமானது எது எனில், பேசப்படும் விஷயங்கள் பெரும்பாலும் மக்களின் கருத்துக்களையும், ஊகத்தையும் சார்ந்திருப்பதுதான். உணர்ச்சி வசப்படுவதைக் கவனிப்பது கேலித்தரமானது. இப்படிப் பேசி அஜீரணத்தையும், தூக்கமின்மையையும் தருவித்துக்கொள்ளத்தான் வேண்டுமென்றால், அவர்கள் புள்ளி விவரங்களுடன் உண்மையான விஷயங்களைப் பற்றிப் பேசட்டும் இதுதான் ஜானின் வழி. பெக்கி மரியாதையும் காதலும் கலந்த பார்வையுடன் கணவனை நோக்கினாள்.

ஜான் என்னவோ இப்பேச்சுக்களின் இறுதியில் மௌன மாகவே இருந்தான். மில்டன் லெயிட்னர்கூட அதைக் கவனித்தான். அவனுக்கு இப்பேச்சில் ஆவல் இருந்தது. அத்துடன் நிகோலஸ் ஆர்பெனைப் பற்றி ஜான் அதிகமாக ஏதாவது சொல்லியிருக்க முடியுமென்றும் அவன் கருதியதால், இப்பேச்சை அத்துடன் அறுத்துவிட அவன் விரும்பவில்லை. ஓர் இளைஞனின் சாதுர்யத்துடன் அவன் கேட்டான்: ''புரொஃபசர் டைஸன் நிகோலஸ் ஆர்பெனைப்பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?''

''ஏன்...?'' என்றான் ஜான் வியப்புடன்.

''நான் அவனைச் சந்தித்திருக்கிறேன். அதனால் கேட்டேன்.''

ராபர்ட் கேஷ் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். ''நான் போகவேண்டும்; இன்றிரவு சிறிது எழுத வேண்டியிருக்கிறது.''

ஜோ லொகாஸ்ட்ரோவும் எழுந்து எடித்தை அண்மையில் இழுத்துக்கொண்டான். ''எங்களுக்கும் நேரமாகிவிட்டது. தொலைவில் நகரிலே தன் சிநேகிதிகளுடன் தங்கியிருக்கிறாள் எடித். எங்களுக்கு வழி தெரியும். திருமதி டைஸன்! நாங்கள் வெளியே போய்க்கொள்கிறோம். சீக்கிரமே மீண்டும் சந்திப்போம்.''

அவர்கள் விடைபெற்றுச் செல்வதைப் புன்முறுவலுடன் பார்த்துக் கொண்டிருந்தான் மில்டன். ''ஜோ நல்ல பையன். இப்போது அவன் கவனமெல்லாம் சீக்கிரமே மணம் செய்து கொள்ளவேண்டுமென்பதில் தான்'' என்றான் அவன்.

''நிகோலஸ் ஆர்பெனைப் பற்றிய பேச்சைவிட முக்கியமான விஷயங்கள் அவர்களுக்குப் பேச இருக்கின்றன. ஆனால், பாப் ஏன் சீக்கிரமே போய்விட்டான்? அவன் ஒரு மணிவரைத் தங்குவதுண்டு. ஏன், பிறகுங்கூட, 'லிஃப்டை' அடையும் வரை ஏதாவது வாதம் புரிவானே?'' என்றாள் பெக்கி.

பாப்பின் நெருங்கிய நண்பனான மில்டன் இப்போது ஒன்றும் பேசவில்லை. டைஸன் தன்னைக் கவனிப்பதை உணர்ந்து கொண்டே, அவன் தன் காலடியில் இருந்த கம்பளத்தை உறுத்து நோக்கினான். பிறகு, திடீரென்று தலையை உயர்த்தி, ''நான் நிகோலஸ் ஆர்பெனைப் பற்றி அறிய விரும்புகிறேன்'' என்றான்.

பாலும், ரோனாவும் கூடத்தான் அதற்காகக் காத்திருந்தார்கள். ஜான் சொன்னான்: ''உண்மையில் எனக்கு எல்லா விவரங்களும் தெரியாது. மொய்ரா பர்லே இன்று கூறியவை

களைக்கூட நான கேட்டதில்லை. ஆனால் இதோ சில உண்மைகள்: 1940இல் வாதப் பிரதிவாதங்கள் சில நடந்தது உங்களுக்குத் தெரியும். நடக்கும் சண்டை ஏகாதிபத்ய யுத்தந்தான் என்ற பரபரப்புக் கல்லூரிகளிலும் சர்வகலாசாலைகளிலும் உண்டாயிற்று. யுத்த வெறியர்களையும், புரட்சிக்காரர்களையும் கண்டிக்கும் துண்டுப் பிரசுரங்கள் மாணவர்களுக்கெல்லாம் வழங்கப்பட்டன. எங்களையெல்லாம் யுத்தத்தில் சேரக் கூடாதென்று வற்புறுத்தி, காலேஜின் காம்பவுண்டுக்குள்ளேயே பல பிரசங்கிகள் பேசினார்கள்.

''மன்ரோ காலேஜில் தலைவராக இருந்த திருமதி பர்லேயின் தந்தைக்கு அது சங்கடமான காலமாக இருந்தது. 'எப்படி அமெரிக்காவைச் சிறந்த நாடாக்கவேண்டும்' என்ற இளைஞர்களின் யோசனைகளுக்கு அநுதாபம் காட்டும் புதுமுறை மனிதர் அவர். ஆனால் அவர் இந்த யுத்தத்தை அறப்போராகவே கருதினார். மற்ற ஆசிரியர்களில் பலரும் இதை ஒப்புக்கொண்டனர். ஆனால், என்ன செய்யவேண்டும் என்பதில் மட்டும் வழக்கமான கருத்து வேற்றுமைகள் சில இருந்தன. ஒரே ஒரு சிறிய கூட்டம் மட்டும் இதை ஏகாதிபத்திய யுத்தம் என்றே அடித்துச் சொல்லிக்கொண்டிருந்தது. அக்கூட்டம் காலேஜ் தலைவரைக் கடுமையாகக் கண்டித்தும் வந்தது. அக் கூட்டத்தின் முதல்வன்தான் நிகோலஸ் ஆர்பென்

''1941ஆம் ஆண்டின் தொடக்கத்தில், மன்ரோ காலேஜுக்குள்ளேயே ஒருவித போர் நிலைமை இருந்தது. அதை மூடி மறைத்துவிட தலைவர் முயன்றார்—அது அவர் செய்த பெரிய தவறென்பது என் எண்ணம். ஏனெனில் எவ்வளவுக்கெவ்வளவு அவர் மூடிவைத்தாரோ, அவ்வளவுக்குத் தவறான ஊகங்கள் கிளம்பலாயின. இறுதியில் அவர் தன் பொறுமையை இழந்தார்.

''ஈஸ்டர் சமயத்தில் என்று நினைக்கிறேன். பத்திரிகைகளில் தலையங்கங்கள் வெளிவந்தன: 'காலேஜ் புரொஃபசர் ராஜிநாமாச் செய்யும்படி பலவந்தப்படுத்தப்படுகிறார்; பேச்சுச் சுதந்திரம் பறிபோகிறது!' இம்மாதிரியான பிரசாரம். அப்போது நான் 'கொலம்பியா'வில் டாக்டர் பட்டத்துக்குப் படித்துக்கொண்டிருந்தேன், போதிக்கும் வேலையுங்கூட இருந்தது. நாங்கள் எல்லாம் அப்போது கலவரம் அடைந்துபோனோம். பேச்சுச் சுதந்திரத்தைப் பறிப்பது எங்களுக்குப் பிடிக்கவில்லை. எனவே மன்ரோவின் தலைவருக்கு எதிரான கண்டனங்களில் நாங்களும் சேர்ந்துகொண்டோம். மற்றக் கலாசாலைகளுக்கெல்லாங் கூடப் பரவக்கூடிய அபாயமென்றே அதை நாங்கள் கருதினோம். ஆர்பெனுங்கூட நல்ல பிரசாரம் செய்தான்.

திடீரென்று அவன், தன்னையொரு கம்யூனிஸ்ட் எனக் கூறிக்கொண்டு, இப்பிரச்னையைத் தீவிரமாக விவாதித்தான். அவனை ஒரு 'தியாகி' யென்று போற்றினார்கள். கம்யூனிஸ்ட் அல்லாதவர்கள் கூட இதைப் பெரிய குற்றம் என்றே நினைத்தனர். நாட்டிலுள்ள ஒவ்வொரு கல்லூரியிலும், சர்வகலாசாலையிலும் இதே விவாதந்தான்!

''அடுத்த இரண்டு மாதங்களுக்கெல்லாம் ரஷ்யாவை ஜெர்மனி எதிர்த்தது. ஒரே இரவில் கோஷங்கள் எல்லாம் மறைந்துவிட்டன. இரண்டு மாதங்களுக்குத் 'தியாகி' யாக்கப்பட்ட நிகோலஸ் ஆர்பெனைத் திடீரென்று யாவரும் அலட்சியம் செய்து, மறந்தும் போனார்கள். அவனை நினைத்திருந்தவர்கள்கூட, டிசம்பரில் பேர்ல் துறைமுகத்தை ஜப்பானியர்கள் தாக்கியபோது, அவனை மற்றொரு 'பொய்ச் சாமி' யென்று சபித்தார்கள்.

''அவனுடைய கம்யூனிஸ்ட் தோழர்கள் என்ன ஆனார்கள்? அவர்களும் அவனைக் கைவிட்டு விட்டார்களா?'' என்று கேட்டாள் பெக்கி.

பால் ஹேடன் குறுக்கிட்டான்: 'அவர்கள் ஏன் கைவிட வேண்டும்? அவர்களும் கூடத்தான் அடிபெயர்ந்து சிக்கிக்கொண்டார்கள். தான் ஒரு கம்யூனிஸ்ட் என்று பகிரங்கமாக ஒப்புக்கொண்டபோது, அவன் மேலேயிருந்து வந்த உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிந்துதான் அப்படிச் செய்திருப்பான். ஏகாதிபத்ய யுத்தம் புனிதப் போராக மாறிவிட்ட பிறகு, அவன் மறைந்துகிடப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? கம்யூனிஸ்ட் அல்லாதவர்கள் அவனுடைய பேச்சுக்களை மறந்து போகும்வரை அவன் அப்படித்தான் ஒளிந்து வாழ்வான். எல்லோர் முன்னிலையிலும் சென்று, தனது ஏகாதிபத்ய யுத்த சேவையை அவன் நினைவுபடுத்திக்கொண்டிருக்க முடியாது, அல்லவா?''

''ஆனால் மக்கள் அவ்வளவு எளிதில் எதையும் மறந்துவிடமாட்டார்கள்'' என்றாள் ரோனா கவலை மேலிட. ஸ்காட்டை எச்சரிக்க வேண்டும் என்று அவள் எண்ணிக்கொண்டாள். ஆர்பென் ஒரு நண்பனே இல்லை. அவனைப் போன்ற மனிதர்களுக்குத் தங்களது லட்சியத்தைத் தவிர, வேறு எவரிடமும் விசுவாசம் இருக்கமுடியாது. ஆனால் அவள் எப்படி ஸ்காட்டை எச்சரிக்க முடியும்? ஆர்பென் செய்த தவறுகள் வெகு நாட்களுக்குமுன் நிகழ்ந்தவை என்று அவன் நம்புகிறான். அவனுக்குப் பொறுமையும், விசுவாசமும் இருக்கின்றன...

பால் அவளிடம் ஒரு கேள்வியை விடுத்தான்: ''அவர்கள் மறக்க மாட்டார்களா?''

''நாம் அதிகமாகத்தான் மறந்து போகிறோம். ஜெர்மனியிலுள்ள மாஜி நாஜிகளைப் பார். அவர்கள் நமது அநுதாபங்களைக் கோருகிறார்கள். அவர்கள் என் தாத்தாவை வாயு அறையில் போட்டுக் கொன்றார்கள்; என் மாமாக்களைக் குடும்பத்தோடு அழித்தார்கள். நான் அவற்றை மறக்க மாட்டேன்'' என்றான் மில்டன் கசப்புடன்.

''பாப் இருந்து இதையெல்லாம் கேட்டிருக்கவேண்டும். செயல்களையும், அதன் விளைவுகளையும் பற்றிப் பேசும் என் பேச்சிற்கு இவை சிறிது பொருள் தந்துவிட்டன. டெமொக்ராட்டுகள், ரிபப்ளிகர்கள், அல்லது சோஷலிஸ்டுகள் இவர்களுடைய அரசியல் கட்சிகளைப்போலவே கம்யூனிஸ்டுகளும் தங்களுடைய கட்சியை நடத்தினால், அவர்களது பெயர் தேர்தல் காலத்தில் அடிபடுவதைத் தவிர வேறொன்றும் அவர்களுக்குக் கிட்டாது. ஆனால் அவர்களது ரகசியங்கள் சில அம்பலமாகும். ஒவ்வொரு சமயத்திலும், அவர்கள் மிக மிக அதிகமாக வெறுக்கப்படுகிறார்கள். 'வீட்டு அப்பம் ஓட்டைச் சுடும்' என்பதை அவர்கள் ஏன் அறிந்துகொள்ளவில்லை?'' என்றாள் பெக்கி.

ஜானின் முகத்தில் முறுவல் நெளிந்தது. படித்தவர்கள் கூட இப்படி கண்மூடிகளாக இருக்கமுடியுமா என்று அவன் கேட்பதுபோல் தோன்றியது. பெக்கி சிரத்தையுள்ளவள்; நேர்மையானவள். படித்தவர்களிடையே இவ்வுலகத்தில் வேறுமாதிரியான நடத்தைகூட உண்டு என்பதைக் கற்பனை செய்ய அவளுக்குச் சிரமமாக இருந்தது. இது கண்மூடித்தனமில்லை; நமக்காகப் பிறரைச் சிந்தனை செய்ய விடும் ஒரு பணிவு!

டெலிபோன் மணி ஒலித்தது. அதற்குப் பதில் அளிக்க பெக்கி ஓடினாள். பிறகு கூடத்திலிருந்து அவள் மெதுவாக ரோனாவை அழைத்தாள். "ஒரும்வலி, ஸ்காட்டாக இருக்கும்" என்று வேதனையுடன் கூறிக்கொண்டே எழுந்தாள் ரோனா. அவர் தாமதமாக வரப்போகிறாரோ என்னவோ? அவள் கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டே அறையை விட்டுச் சென்றாள்.

மில்டன் லெயிட்னர் வேகமாகச் சொன்னான்: ''நான் எப்படி ஆர்பெனைச் சந்தித்தேன் என்று நீங்கள் கேட்கவில்லையே!''

ஜான் விருப்போ, வெறுப்போ இல்லாமலிருந்தான். ஆனால் பால் ஹேடன் தன் கையில் எடுத்த புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டான்.

தூரத்தே ரோனு கூடத்தில் டெலிபோன் செய்வதை ஒருமுறை பார்த்து முறுவலித்தபடி லெயிட்னர் கூறினுன்: ''எல்லாம் இங்கு. இதே அறையில் தான் ஆரம்பமாயிற்று!''

''என்னது...?'' ஜான் நிமிர்ந்து அமர்ந்தான்.

''பாப் கேஷும் நானும் ஸ்காட் எட்லீயை இங்கே சந்தித்தோம் இல்லையா?''

''என்ன இது? ஸ்காட் எட்லீயா?'' என்று வினவினுன் ஜான் வேதனையும் கசப்பும் கலந்த குரலில்.

''ஓ! அவனுக்கு உண்மை தெரியாது. அவன் நல்ல பையன்தான். ஆனுல் சில நண்பர்கள் அவனை உபயோகித்துக் கொள்ள விரும்புகிருர்கள். அவ்வளவே.''

''எப்படி?'' என்ருன் பால் ஹேடன் சுருக்கமாக.

''ஒரு வெள்ளிக்கிழமை இரவு இங்கே நாங்கள் ஸ்காட் எட்லீயைச் சந்தித்தோம். எங்களுக்கு அவனைப் பிடித்தது. அவன் எங்களைத் தன்னைச் சந்திக்க வரச்சொன்னுன். நானும், பாப்பும் எட்லீயின் ஸ்டுடியோவுக்குச் சென்ருேம். அங்கே பொழுது நன்ருக போயிற்று. மர்ரே என்பவனை நான் அவ்விடத்தில் சந்தித்தேன். அவன் என்னைப் புகழ்ந்து பேசி, என்னிடம் சிரத்தை காட்டினுன். ஒரு வாரத்திற்குப் பிறகு பாப்பையும் என்னையும் பார்க் அவென்யூவில் நடக்கும் பார்ட்டி ஒன்றுக்கு வரும்படி டெலிபோன் மூலம் அழைத்தான். நாங்கள் சென்ருேம். நல்ல விடுதி அது; உணவுக்கும் பானத்திற்கும் பஞ்சமில்லை. நல்ல கூட்டமுங்கூட—ஓரிரு பெயர்பெற்ற மனிதர்களும் இருந்தார்கள். சங்கீதம் இருந்தது; பேச்சும் வாதப்பிரதிவாதங்களும் நிகழ்ந்தன.''

''பார்ட்டி கொடுத்தது யார்?'' என்ருன் பால்.

''விசித்திரமான ஒரு முதிர்ந்த பெண்; தலையிலே பட்டுப் பூச்சிகளைச் சொருகியிருந்தாள். கேலியில்லை!''

''அவள் முதற் பெயர் தெல்மாவா!''

''ஆமாம்... அவளுடைய இரண்டாவது பெயரை யாருமே அங்குக் குறிப்பிடவில்லை. வெறுமே தெல்மா என்றே யாவரும் அவளை அழைத்தனர்.''

பெக்கி அறைக்குத் திரும்பி வந்தாள். ''நாங்களும் கேட்கலாமல்லவா?'' என்ருள் ஆவலுடன்.

''அப்படியானுல் அது ஒரு நல்ல பார்ட்டி இல்லையா?'' என்ருன் பால்.

''ஆமாம்...பாப் அதை முதல்தரம் என்ருன்.''

''உன் கருத்து என்ன?''

''எனது புதிய நண்பன் மர்ரேக்கு எல்லோருமே அதிதமான உபசாரத்தை விரும்பமாட்டார்கள் என்பது

தெரியாதென்றே ஊகிக்கிறேன். ஹிட்லர் சொன்னதுபோல் யூதர்கள் ஒரு தனி இனத்தவர் என்ற தோரணையில், அவர்களைப் பாராட்டி என்னிடம் அடிக்கடி பேசினான். பிறகு, மூன்று மனிதர்களும் ஓரிரு அழகிய பெண்களும் சேர்ந்த ஒரு சிறிய குழு என்னைச் சூழ்ந்துகொண்டது. அவர்கள், என்னைப் போன்ற சிறந்த நகைச்சுவைப் பேச்சாளனைப் பார்த்ததே இல்லையென்று புகழ்ந்து பேசினார்கள். உண்மையில் நான் ஒன்றும் அப்படியில்லை.''

''பாப் கேஷ் என்ன ஆனான்?'' என்றான் பால். இறுகிய உதடுகளுடன் மௌனமாக இருந்தான் ஜான்

''மற்றொரு சிறிய குழு அவனையும் இம்மாதிரி மகிழ வைத்துக்கொண்டிருந்தது. நம்முடைய தைப்போன்ற பொருளாதார அமைப்பிலே ஒருவன் கலைஞனாக இருப்பதில் உள்ள சிரமங்களை அவன் விளக்கினான். அவர்கள் அதை ஒப்புக்கொண்டார்கள்.''

''பிறகு?''

''அடுத்த வாரமே எங்களது புது நண்பர்கள் சிலர் கொடுத்த மற்றொரு பார்ட்டிக்கு அழைப்பு வந்தது. எனக்குப் போக விருப்பந்தானா என்பது எனக்கே தெரியாது. ஆனால் பாப் போக விரும்பியதால் நானும் அவனுடன் சென்றேன். தன்னுடைய மதத்தைப்பற்றிய உணர்வு பாப்புக்கு அதிகமாக இருந்திருந்தால், அவன் ஜாக்கிரதையாக இருந்திருப்பான். தவிர, அவன் ஒரு கிறிஸ்தவன்; சிலேடையான ஏமாற்றுப் பேச்சுக்களை அவன் ஏன் கேட்டுக்கொண்டிருக்கவேண்டும்?''

பெக்கிக்கு என்னவோ மாதிரி இருந்தது. ''மில்டன், ஒருவன் நல்ல மனிதனாக நடந்துகொள்ளும்போது அவன் எந்த மதத்தைச் சேர்ந்தவனாக இருந்தால்தானென்ன?''

''அது உங்களுக்கும், எனக்கும் தெரிகிறது. ஆனால் சிலர் அதை அறியமாட்டார்கள். ஏன், அது என் சொந்தக் குடும்பத்துக்கே பொருந்தும். இப்போது கூட நான் வீட்டில் போராடிக் கொண்டுதானிருக்கிறேன். அவர்கள் எங்களை மாறான வழியில் திரும்பச் சொல்கிறார்கள். 'அதெல்லாம் முடியாது, நாமெல்லாம் அமெரிக்கர்கள்' என்று நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். நம்மைச் சுற்றி ஒரு சுவரை எழுப்பிக் கொள்ளக்கூடாது; வேற்றுமை உணர்வுகளை அதிகமாக்கக் கூடாது என்றுதான் நான் அவர்களிடம் சொல்ல முயன்று கொண்டிருக்கிறேன். அவர்கள் என்னை ஒருவித துரோகி என்றே மதிக்கிறார்கள். இருந்தாலும், நான் சுவர் ஒன்றும் எழுப்பிக்கொள்ள மாட்டேன்; யாரும் என்னைப் பலவந்தப் படுத்த முடியாது!'' என்று அடித்துக் கூறிய மில்டன், ஜான் டைஸனை நோக்கினான்.

அப்போது ரோஜு அந்த அறைக்குள் நுழைந்தாள். அவள் முகம் வெளுத்து மகிழ்ச்சி குன்றியிருந்தது. மெதுவாக அமர்ந்து ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டாள் அவள்.

''ஆர்பெனைப் பற்றிய விஷயம் அதுதான்'' என்று மில்டன் லெயிட்னர் தொடர்ந்தான். ரோஜு வேகமாக அவனை நிமிர்ந்து நோக்கினுள். அவள் இரண்டாவது தடவையாக ஒரு நெருப்புக் குச்சியைக் கொளுத்த வேண்டியிருந்தது.

''இத்தடவை ஆர்பென் வீட்டில் பார்ட்டி நடந்ததா?'' என்று கேட்டான் பால்.

''ஆமாம்......வழக்கம்போல் பாட்டும், பேச்சும். ஆனுல் என்மீது அதிகமான அநுதாபம் காட்டப்பட்டது இன்றிரவையே எடுத்துக்கொள்ளுங்கள். நான் ஒரு யூதன் என்பதை உணரும்படி நீங்கள் செய்கிறீர்களா? அதற்காக நான் வருத்தப்பட வேண்டும் என்றும், பாரபட்சக் கொள்கையுடைய அமைப்பு முறையில் நாங்கள் வாழ்கிறோம் என்றும் நீங்கள் அறிவுறுத்துகிறீர்களா? இல்லை. ஆனுல், இம்மாதிரியான போக்கில்தான் அவர்கள் என்னை வளைத்தார்கள். நான் சீக்கிரமே கிளம்பிவிட்டேன். பிறகு, அம்மாதிரியான பார்ட்டிகள் ஒன்றுக்கும் நான் போகவே இல்லை.''

''உன்னை அழைத்தார்களா?''

''நிச்சயமாக. மார்ரேயும் மற்ற ஓரிரு நண்பர்களும் அழைத்துக்கொண்டே இருந்தார்கள். அக்கூட்டந்தான் பார்ட்டிகள் கொடுத்த வண்ணம் இருக்கின்றதே! அவைகளை ஆலோசனைக் குழு என்று அழைக்கிறுர்கள். பாப் மட்டும் தவருமல் போய்க்கொண்டிருக்கிறுன். அவனுக்கு அவர்களை மிகவும் பிடிக்கிறது; எழுத்தாளர்களையும், அவனுடைய நாவலைப் பற்றி யோசனை சொல்லக்கூடிய மனிதர்களையும் அவன் அங்குச் சந்திக்கிறுன். அவன் தன்னை மறந்து பேசுவதை அவர்கள் மரியாதையோடு கேட்கிறுர்கள். தானும் அறிவாளிகளில் ஒருவனுகி விட்டதாக அவனுக்கு எண்ணம்.''

புகைக்காத சிகரெட்டை அணைத்துவிட்டு ரோஜு கேட்டாள்: ''நீ அவனுடன் பேசும்போது அவன் எப்படி இருந்தான்?''

''ஓ! அவன் சிறு வயதுதான்! ஆகையால், அதிகம் பேசாமல் எப்போதும் பின்னணியில் இருக்கிறுன். அப்படித்தான் அவனைக் காணும்போது எனக்குத் தோன்றிற்று. அழுது வடியும் தெருவொன்றில் குரூபமான ஒரு வீட்டில் அவன் வசிக்கிறுன். ஆனுல் அவனுடைய அறையை நாகரிகமாக வைத்திருக்கிறுன்.''

'அப்படியானால் எல்லாம் இங்கேதான் ஆரம்பித்திருக்கிறது; அதுவும் என் அறையிலேயே' என்று கசப்புடன் எண்ணினான் ஜான். நானும் ஸ்காட்டும் எவ்வளவு முட்டாள்களாக இருந்திருக்கிறோம்......அவனுக்கு நான் ஒரு குறிப்புக் காட்ட வேண்டும். மர்ரே, தெல்மா . . . பட்டுப் பூச்சிகளும், திராட்சைக் குலைகளும், கடவுளே! பிறகு, தனது மாணவர்களில் வேறு யாராவது அந்தத் திக்கில் திரும்பியிருப்பார்களோ என்று எண்ண ஆரம்பித்தான் ஜான். ஸ்காட் அப்படிச் செய்திருக்கமாட்டான். ஸ்காட்டுக்கு லெயிட்னரைப் பிடிக்கும்; ராபர்ட் கேஷ் வழக்கம்போல மில்டனோடு சேர்ந்திருப்பான். தனது பார்ட்டிகளில் மர்ரேயைப் போன்ற ஒருவனைச் சேர்த்துக் கொண்டதுதான் ஸ்காட்டின் தவறு. அவ்வளவுதான். அவனுக்கு நான் குறிப்புக் காண்பிக்கிறேன்.

''நாகரிகமாகவா?'' என்றாள் பெக்கி கசப்புடன். ராபர்ட் கேஷுக்கு என்ன நேருமோ என்பதுபற்றி அவள் நினைவு ஓடியது. 'ஒரு வேளை ஏதாவது முன்னமேயே நேர்ந்துவிட்டதோ என்னவோ? மரியாதையற்ற குரலில் யாரோ ஆர்பெனைப் பற்றிப் பேசியதால்தான், அவன் எழுந்து, தன் கோபத்தை மறைத்துக்கொண்டு முன்னதாகவே சென்றுவிட்டானோ?' என்ற கவலையுடன் அவள் ஜானை நோக்கினாள். அவன் எதுவுமே பேசாமல் யோசனையில் ஆழ்ந்திருப்பதைக் கண்டதும், அது ஒரு கெட்ட குறிப்பு என்று உணர்ந்தாள்.

''நான் போகவேண்டும்'' என்று திடீரென்று கூறிய ரோனா எழுந்தாள்.

''ஆனால் ஸ்காட்?''

''அவருக்கு வரமுடியவில்லை. அவரை நிறுத்திவிட்டார்கள். யாரோ தலைமறைவாக இருந்து சண்டை போடும் ஃபிரஞ்சுப் பத்திரிகையாளர் ஒருவருடன் பேசுவதில் ஆழ்ந்துவிட்டாராம்...நானும் அவரை இவ்வளவு தூரம் வரவேண்டாமென்று சொல்லிவிட்டேன்'' என்று முறுவலித்தாள் ரோனா.

''என்ன வெட்கம், ரோனா!''

''நான் பத்திரமாக ரோனாவை வீட்டில் சேர்த்துவிடுகிறேன்'' என்றான் பால்.

''நீங்கள் சிரமப்பட வேண்டாம், பால்.''

''நடு இரவாகிவிட்டது; நீ துணையுடன் போவதுதான் நல்லது'' என்றாள் பெக்கி.

''ரோனா சிரித்தாள். ''சரி...'' என்று பயப்படுவது போல் கூறிவிட்டு, அவள் கையில் கோட்டை எடுத்துக்கொண்டாள். பிறகு கூடத்தில் அவளுக்காகப் பால் காத்திருந்ததைக் கண்டபோது மீண்டும் அவள் 'துணை வேண்டாம்' என்று கூறவில்லை.

ஜானையும் மில்டனையும் பேச விட்டுவிட்டு உள்ளே படுக்கச் சென்றாள் பெக்கி. ஜான் மில்டனை அனுப்பிவிட்டு வருவதற்குள் அவள் நன்கு தூங்கிவிட்டாள். அவளை அவன் படுக்கையின் ஓரத்திற்கு நகர்த்தி விட்டபோதும் விழித்துக் கொள்ளவில்லை. ஆனால் அவன் அவளை முத்தமிட்டுவிட்டுப் போர்வையை இழுத்து விடுகையில் அவள் மெதுவாக அசைந்து தூக்கக் கலக்கத்திலேயே முறுவலித்தாள். பிறகு தன் உடலை அவனோடு ஒட்டிக்கொண்டாள். ஜான் தன் கைகளை அவளது இடுப்பில் போட்டபடி படுத்திருந்தான். ஆனால் அவனுக்கு உறக்கம் வரவில்லை. அவன் பார்வை நிழல் படிந்த பலகணிகளைத் துருவியது; மனது தான் கேட்டவைகளையெல்லாம் திரும்பத் திரும்ப அசைபோட்டது......

ரோனுவின் வீட்டுத் தலைவாசற்படியில் பால் கைகுலுக்கினான். ரோனு இயற்கையாக சிநேகிதிபோல் நடந்துகொண்டாள். ஒருவிதத்தில் அது எளிதாக இருந்தது; ஆனால் ஒருவிதத்தில், தனக்கு அவள் ஏற்படுத்திவிட்ட நஷ்டத்தை நினைவுபடுத்தியது. அவளைப் பார்க்கும் ஒவ்வொரு தடவையும் அது அவனுக்கு அதிகமான கசப்பைத் தந்தது. அவளைப் பார்ப்பதைத் தவிர்ப்பதுகூட நல்லது என்று அவன் எண்ணினான். அவளுடைய முழு வாழ்வும் இப்போது ஸ்காட்டுடன் இணைந்துவிட்டது.

''நீ மேலே சென்று உன் விடுதியின் கதவைத் திறக்கும் வரை நான் காத்திருக்கிறேன்'' என்றான் பால்.

''நீங்கள் பெக்கியைவிட மோசம். இங்கே திருடர்கள் ஒருவரும் வரமாட்டார்கள்'' என்று அவள் சிரித்தபடியே கைகுலுக்கிவிட்டுப் படிகளின்மீது ஏறினாள். முதல் படி ஏறியதும் கையை ஆட்டுவதற்காகத் திரும்பினாள். ''குட்நைட் பால்'' என்றாள் மெதுவாக. பிறகு பார்வைக்கு அப்பால் மறைந்துவிட்டாள்.

அவளுடைய காலடி ஓசையைக் கேட்டுக்கொண்டு அவன் நின்றான். பிறகு ஒரு மென்குரல் கேட்டது: ''பத்திரமாக மேலே வந்துவிட்டேன்!'' அத்துடன் ஒரு கதவு மூடிக்கொண்டது.

அவன் தெருவில் இறங்கி பார்க் அவென்யூவை நோக்கி நடந்தான். தன்னுடைய காலரவத்தை மட்டுமே கேட்ட அவன் இன்னும் தனிமையாகிவிட்டதுபோல் உணர்ந்தான். இது இரவின் வேண்டாத நேரம்; நாம் தனியாக இருக்கிறோம் என்பதை உணரவைக்கும் நேரம்.

அத்தியாயம் 8

அன்றிரவு ஜான் டைஸனைப் போலவே பால் ஹேடனும் சிறிது தான் கண்ணயர்ந்தான். காலை ஆறு மணிக்கெல்லாம் எழுந்து, ஜன்னலை மறைத்திருந்த கனமான திரைச் சீலைகளை விலக்கினான். அறையின் உள்ளே இருந்ததைப் போலவே வெளியிலும் இருளடைந்துதானிருந்தது. இவ்வாண்டில் வசந்தம் காலம் கடந்து வந்து கொண்டிருந்தது.

முக க்ஷவரத்தை முடித்துக் கொண்டதும், குளித்துவிட்டு உடைகளை மாற்றிக் கொண்டான் பால். பிறகு தன் அறையை மீண்டும் ஒருமுறை பார்த்துவிட்டுப் புறப்பட்டான். இந்த நேரத்தில் வெளித் தாழ்வாரங்களும். 'லிஃப்டு'களும் சந்தடியின்றி இருந்தன. ஆனால் கீழேயுள்ள ஹோட்டல் கலகலப்பாக இருந்தது. முன்னதாகவே வந்தவர்களும் போவோர்களுமாகச் சிறு சிறு கூட்டங்கள். வளைந்து செல்லும் சலவைக் கல் படிகளுக்குக் கீழே, கம்பளம் விரித்த பெரிய சாப்பாட்டு அறை ஒன்று இருந்தது. நாற்காலிகளை மேஜைக்கு அடியே தள்ளி, அந்த அறையையே மூடி வைத்திருந்தனர். அறையைச் சுத்தம் செய்யும் மின்யந்திரம் ஒலியெழுப்பிக் கொண்டிருந்தது. ஆனால் கீழே தலை வாசற்படியண்டை இருந்த காஃபிக் கடை திறந்து விட்டிருந்தது. பக்கத்திலிருந்த சிகரெட் கடையில் ஒரு செய்தித் தாளையும், இரண்டு பத்திரிகைகளையும் வாங்கிக் கொண்டு காஃபிக் கடையினுள் நுழைந்தான் பால் ஹேடன். காலை உணவு முடிந்ததும் 'கிராப்' வெட்டிக் கொள்ளவேண்டும். எதிர்த்தாற்போலவே முடிவெட்டிக் கொள்ளும் கடை இருக்கிறது. பிறகு பூட்ஸ்களுக்குப் பாலிஷ் போட்டுக் கொள்ளவேண்டும். இங்கிருந்தே பிரௌன்லீக்கு டெலிபோனும் செய்ய விரும்பினான் அவன்.

நிம்மதியுடன் படிப்பதற்காக ஓரத்திலிருந்த மேஜையண்டை அமர்ந்தான் பால். முட்டைகளும், ஆரஞ்சுச் சாறும், பன்றி இறைச்சியும், சிறிது அதிகமாகவே காஃபியும் சாப்பிட திட்டமிட்டான். இது டாம்பீகந்தானென்று அவனுக்குத் தோன்றியது. அடுத்த மேஜையில் அமர்ந்திருந்த ஊர் சுற்றும் விற்பனையாளனை அணுகி, 'டாம்பீகம்!' என்று கூவினால், அவன் என்ன சொல்வான் என்று பால் எண்ணினான். திகைப்புற்று நோக்கியபின் ஒரு புன்முறுவலுடன், ''ஆமாம்... உண்மைதான்!'' என்று தான் அவன் கூறுவான். பிறகு தன் தினசரியைப் படிப்பதுபோல் சிறிது நேரம் பாசாங்கு செய்வான்.

ஆனால் ஓரிரு நிமிஷங்களுக்குப் பிறகு மீண்டும் தலையைத் தூக்கி, ''நீங்கள் இந்த ஊருக்குப் புதுசா?'' என்று கேட்பான். 'புதுசு' என்றால் வெளிநாட்டுக்காரன் என்ற பொருளில் அப்படி வினவுவான். ஏன், அவனே பக்கத்து நகரம் ஒன்றிலிருந்துதான் வந்திருப்பான்; ஆனால் அவன் நியூயார்க்குக்குப் புதியவனில்லை. இங்கே என்ன எதிர்பார்க்க வேண்டுமென்பது அவனுக்குத் தெரியும். அது அவனுக்குக் கிடைக்காவிட்டால், அவன் கூட 'அமெரிக்க யாத்ரிகர்கள் அதிகமாகக் குற்றம் கூறுவதாக வெளிநாடுகளில் சொல்கிறார்கள்!' என்று சொல்லுவான்.

ஹோட்டல் பணிப் பெண் தன் கேள்வியை மீண்டும் கேட்டாள். ''மன்னிக்க வேண்டும், எங்கேயோ நினைவு!'' என்றான் பால்.

''வெண்ணெய் தடவிய சூடான ரொட்டி, மர்மலேடு, ஸ்ட்ராபெர்ரி, காஃபி எல்லாம் இருக்கின்றன. இவையெல்லாம் ஒரு டாலர் பத்து சதம் காலை உணவுகள். என்ன வேண்டும்?'' என்று அவள் பட்டியல் ஒன்றை மேஜைமீது வைத்தாள்.

''எனக்கு ஒன்றும் புரியவில்லை. நீயே ஏதாவது கொண்டு வா'' என்றான் பால், முறுவலுடன்.

அவள் அவனை அதிசயத்துடன் பார்த்தாள்.

''சரி... உனக்குத் தோன்றியதையெல்லாம் கொண்டுவா. முட்டைகள் மட்டும் இரு மடங்கு!'' பால் செய்தித் தாளைப் படிக்க ஆரம்பித்தான். அதன் ஐம்பத்து நான்கு பக்கங்களை ஜாக்கிரதையாகத் திருப்பினான். டாம்பீகம், என்று அவன் மீண்டும் எண்ணினான். பிறகு, இதெல்லாம் டாம்பீகமானது என்பதை மறக்கத் தனக்கு எவ்வளவு நாட்களாகும் என்று நினைத்தான்—மூன்று வாரங்களா? மூன்று மாதங்களா? இவற்றையெல்லாம் அவன் சாதாரணமாக, வியப்புக் கொள்ளாமல் சீக்கிரமே ஏற்றுக் கொண்டு விடுவான், அந்த ஊர் சுற்றும் விற்பனையாளனைப் போல்!

கையில் பழ ரசத்துடன் வந்த பணிப் பெண், ''இன்றைப் பேப்பரில் ஏதாவது விசித்திரமான செய்தி வந்திருக்கிறதா, என்ன?'' என்றாள், பாலின் புன்முறுவலைப் பார்த்ததும். பிறகு அவள் வேகமாகப் பக்கத்து மேஜைக்கு நழுவினாள். கையில் கிடைத்த 'இனாம்' பணத்தை மெதுவாகத் தனது பச்சைக் கவுனிலிருந்த பையில் போட்டுக் கொண்டு கவனமாக அந்த மேஜையைத் துடைத்தாள். மீண்டும் அடுத்தவர் சாப்பிடச் சுத்தமான வெள்ளித் தட்டு முதலியவற்றை வைத்தாள்.

ஒன்பது மணிவரை காத்திருந்தபின் ரோஜர் பிரௌனுக்கு டெலிபோன் செய்தான் பால் ஹேடன். அவர் வந்து பதில் சொல்லும் வரை காத்திருக்கும்போது, தனக்கு ஆவல்

அதிகமாயிருப்பதை அவன் உணர்ந்தான். பிரௌன்லீ ஊரில் இல்லாதிருந்தாலோ, அல்லது சனிக்கிழமை காலையில் ஆபீசில் இல்லாவிட்டாலோதான் என்ன?

ஆனால் பிரௌன்லீ பதில் கொடுத்தார். பால் ஹேடனின் குரலைக் கேட்ட அவர் வியப்படைந்ததாகத் தோன்றவில்லை. அவருக்கு மகிழ்ச்சிதான்; ஆனால் அதிசயமில்லை.

''உங்களைப் பார்க்க வேண்டிய தருணம் வந்து விட்டதாக நினைத்தேன்'' என்றான் பால்.

''நல்லது. பன்னிரெண்டரைக்கு சென்ட்ரல் பார்க்கின் மிருகக் காட்சி சாலையில் சந்திப்போமா? அங்கே திறந்த மாடியில் பகல் உணவும் சாப்பிடலாம். என்ன? அங்கே பார்க்கிறேன்.''

அவ்வளவுதான் பேச்சு. பால் ஹேடன் தன்னையறியாமல் முறுவலித்துக் கொண்டான். கர்னலாக இருந்தபோதும் சரி, இப்போதும் சரி, அவர் அதே பழைய ரோஜர்தான்!

ஹோட்டலை விட்டுப் புறப்பட்ட அவனுக்கு அடுத்த மூன்று மணி நேரத்திற்கு அநேக அலுவல்கள். நேற்று அவன் போவெரிக்குச் சென்றான். அதற்கு முதல் நாள் மேல் கிழக்குப் பகுதிகள்—ஹேர்லம், ரிவர்ஸைட், பாட்டரி, வாஷிங்டன் குன்று, க்ரீன்விச், பிராட்வே, யார்க்வில்லி—கடந்த வாரத்தில் அநேகமாக எல்லாப் பகுதிகளையும் நடந்தே சென்று பார்த்துவிட்டான். 'அலையும் செய்தி நிருபர்' என்று தன்னைப் பற்றி நினைத்தவாறு தெருவில் இறங்கினான் பால்.

ஆண்களும் பெண்களும் வேலைக்கு விரைந்து கொண்டிருந்தார்கள். லாரிகள் நடைபாதைகளுக்கு எதிராகப் பின்னே திரும்பிக் கொண்டிருந்தன. பஸ்ஸுகளில் கூட்டம் நெரிந்தது. கார்கள் வரிசை வரிசையாக நின்றன. பொறுமை போய்விட்ட மாதிரி டாக்ஸிகள் 'ஹார்ன்' செய்து கொண்டிருந்தன. இன்னும் ஒருநாள், இன்னுமொரு டாலர்.

மிருகக் காட்சிசாலையின் திறந்த மேல் மாடியிலிருந்த உணவுக் கடையில் பால் ஹேடன் 12-20க்கு அடியெடுத்து வைத்தபோது, அங்கே முன்பாகவே கூட்டம் சேர்ந்து விட்டிருந்தது. இன்னும் குளிராக இருந்துங்கூடக் குழந்தைகள் முழு மூச்சுடன் கும்மாளமடித்துக் கொண்டிருந்தார்கள். சனிக்கிழமைகளில் சீதோஷ்ண நிலை எப்படியிருந்தாலும் சரி, அவர்கள் மிருகக் காட்சி சாலைக்குச் சென்றே தீருவார்கள். அகன்ற திறந்த மாடியில் சிறிய பச்சை நிற மேஜைகளுக்குப் பெரிய குடைகள் நிழல் தந்து கொண்டிருந்தன. பெற்றோர்கள் தட்டுக்கள் நிறைய வேண்டிய உணவுகளை வாங்கிக் கொண்டு மேஜைகளை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். அது

வரைத் தனித்து விடப்பட்ட குழந்தைகள் மேஜையண்டை கும்மாளமடித்தனர். எல்லாம் ஒரே களேபரமான இன்பம்.

இருவர் அமரக்கூடிய ஒரு சிறிய மேஜையைக் கண்டதும் பால் அங்கே விரைந்தான். பூத்தொட்டிகளைத் தாங்கி நின்ற சிறு சுவரை ஒட்டி ஓரமாக இருந்தது அந்த மேஜை. அங்கு அமர்ந்தபடியே, வெளியே தெரிந்த பச்சைப் புல் வெளிகளை யும், பழ மரங்களையும் அவன் காணமுடிந்தது. புதிய புற்கள் 'பளிச்'சென்று பசுமையுடன் விளங்கின. பழ மரங்களின் வளைந்த கறுப்புக் கிளைகளின் மீது செந்தூரம்போல் தூசி படிந் திருந்தது. இறுதியில் கதிரவன் மெல்ல வெளி வந்து கொண் டிருந்ததால், வானம் மீண்டும் நீலமாகி விடும். வெள்ளை நிற வண்டிகளில் வண்ண வண்ண 'பலூன்'கள் விற்கப்பட்டன. பல்வேறு நிற உடைகளில் சிறுவர்கள் எங்கும் சிதறிக் கிடந் தனர். திறந்த மாடியில் பாலைச் சுற்றிலும் பலவிதமான குரல்களில் பேச்சுக்கள். ஆனால் அவை இன்ப ஒலியாகவே எழுந்தன—தட்டுக்கள் உராயும் சப்தம், வாதப் பிரதிவாதங் கள், புத்திமதிகள், குற்றச்சாட்டுக்கள், எல்லாம்! ஆனால், பாலுக்கு அடுத்தாற் போலிருந்த மேஜையண்டை இருந்த நான்கு குழந்தைகள்மட்டும் மௌனமாகவே இருந்தனர். காலையில்தான் அவர்களுடைய மெலிந்த, மலிவான உடை களைச் சுத்தம் செய்திருக்க வேண்டும் என்று தோன்றியது. இப்போது அவைகள் அழுக்கடைந்து கிழிந்திருந்தன. அவர் களில் மிகச் சின்னவள் மூன்று வயசுப் பெண்; மற்றவர்கள் ஆண் பிள்ளைகள். மூத்தவனுக்கு ஒன்பது பிராயமிருக்கும். தூரத்திலுள்ள கிழக்குப் பகுதிகளிலிருந்து, இந்த ஒரு நாளை பார்க்கில் கழிக்க நடந்து வந்தவர்கள் மாதிரித் தோற்றியது. ஐந்து தட்டுகளில் உணவும், ஐந்து பாட்டில்கள் பாலும் வாங் கிக்கொண்டு மூத்தவன் திரும்பும்வரை அவர்கள் அமைதி யாக இருந்தார்கள். இப்போது பெரியவன், தலைக்கு ஒரு தட் டாகக் கொடுத்தான். முதலில் கடைக்குட்டிப் பெண்ணி லிருந்து ஆரம்பித்தான்.

''ஹலோ!'' என்ற குரலுடன் வந்த ரோஜர் பிரௌன்லீ ஓர் இரும்பு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு பாலுக்கு எதிரே அமர்ந்தார். கறுத்த 'பிளானல் ஸூட்'டில் இருந்த அவர் மிகவும் மெலிந்திருந்தார்; அவரது நரைத்த தலையின்மீதிருந்த தொப்பி பின்பக்கம் சாய்ந்திருந்தது. ''எல் லாம் எப்படியிருக்கிறது?'' என்று வினவிய அவர் புன்முறுவ லுடன் அண்மையிலிருந்த குழந்தைகளைப் பார்த்துவிட்டுப் பிறகு பாலை நோக்கினார்.

''எனக்கு நிறைய அலுவல்கள் இருந்தன'' என்றான் பால், தனது குரலையும் பிரௌன்லீயினுடையதைப் போலவே தாழ்த் திக்கொண்டு.

''ஓ?''

''ஒவ்வொருவராகப் பார்த்துக் கொண்டிருந்தேன்.''

''நிறைய பார்ட்டிகள் இருந்திருக்குமே? நகரில் சில இரவுகள் தங்கியும் இருப்பாய்.''

பால் சிரித்தான். ''அம்மாதிரியில்லை. எப்படியோ திட்டமிட்டபடி எல்லாம் நடக்கவில்லை.''

''இப்படியே சுற்றியதைத் தவிர வேறு என்னதான் செய்தாய்?''

''படித்தேன். பல்வேறு கருத்துக்களையும், குரல்களையும் கேட்டேன். பல முகங்களைப் பார்த்தேன் . . .''

''உன்னுடையதென்று ஏதாவது கருத்துக்களை உருவாக்கிக்கொண்டாயா?''

''ஆமாம் . . .''

பிரௌன்லீயின் மெல்லிய முகம் தளர்ந்தது. ''நீ என்னை அழைத்தபோது நான் மகிழ்ச்சியுற்றேன்.''

''ஒரு விஷயம்பற்றி எனக்கு உங்களுடைய கருத்துத் தேவை.''

''ஓ!'' பிரௌன்லீ ஏமாற்றத்தை மறைத்துக்கொண்டார். அவ்வளவுதானு? பிறகு ஹேடனின் முகத்தைப்பார்த்த அவருக்கு இன்னும் அவன் ஏதாவது சொல்வானென்றே தோன்றியது. ''வீண் வேதனைப்படாதே. நாம் இப்போது மிருகக் காட்சி சாலையில் களித்துக் கொண்டிருக்கிறோம், இல்லையா? எனக்கு இந்த இடம் எப்போதும் பிடிக்கும். இது எனக்கு மகிழ்வைக் கொடுக்கிறது; மனித இனம் சாதாரணமாகவும் இருக்கக் கூடும் என்று என்னை உணரும்படிச் செய்கிறது. ஆமாம் ... நீ என்ன கேட்கப் போகிறாய்?'' என்றார் பிரௌன்லீ, சுற்றிலுமிருந்த குழந்தைகளையும், பெற்றோர்களையும் கவனித்தபடி.

''நீங்கள் முன்பு என்னோடு பேசியபோது—''

''ஆமாம், எனக்கு நினைவிருக்கிறது.''

''—பல விஷயங்களைப் பற்றிச் சொன்னீர்கள். எனக்குத் தெளிவாக இல்லை.''

''தெளிவாகக் கூறியதாக நான் நினைத்தேன்.''

''பொதுவான முறையில் தெளிவுதான். ஆனால் நீங்கள் பேசிய விஷயங்களைப்பற்றி, குறிப்பிட்ட உதாரணங்கள் எதுவும் கொடுக்கவில்லை. ஏன் கொடுக்கவில்லை என்று எனக்கு இப்போது தெரிகிறது. அவற்றை நானே பார்த்துக்கொள்ளட்டுமென்று விரும்பியிருக்கிறீர்கள். நான் பார்ப்பேன் என்று எப்படி நீங்கள் எண்ணினீர்கள்?'' என்று கேட்டான் பால்.

''நியூயார்க் ஒரு விசித்திரமான இடம். சிறு நகரங்கள் பல ஒன்று சேர்ந்த மாதிரி. இங்கே எல்லாவிதமான குழுக்களும் உள்ளன; எல்லாவிதக் கருத்துக்களும் நிலவுகின்றன.''

''அதோடு பிரசுரத் துறையில் ஏராளமான நண்பர்களையுடைய நான் எல்லாவற்றையும் எளிதில் கண்டுகொள்வேன் என்றும் நினைத்தீர்கள், இல்லையா?''

''அப்படித்தான். அவர்களுடைய பிரச்னைகள் சிலவற்றை நீ கண்டே தீருவாய். தவிர அவற்றைச் சீக்கிரமே பார்த்து விடுவதற்கான பயிற்சி உனக்கு இருக்கிறது. கடந்த சில வருஷங்களில் நீ அவற்றைத்தானே கற்றுக்கொண்டாய்?''

''நான் 'ட்ரெண்டி'ன் ஆசிரியர் வெயிட்லரைக் காணச் சென்றிருந்தேன். எனது பழைய வேலையை அவர் எனக்கு அளிப்பதாகக் கூறினார். எதிர்காலத்தில் பதவி உயர்வுகளும் தருவதாக உறுதி கூறினார்.''

''நானே அதிசயப்பட்டேன், எவ்வளவு காலத்திற்கு ப்ளாக்வொர்த் அங்கே உதவி ஆசிரியராகக் காலம் தள்ள முடியுமென்று.''

பால் சட்டென்று பிரௌன்லீயை நோக்கினான். ''வெயிட்லர் உங்களைச் சந்திக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். நிலைமையை அவர் நன்கு சமாளித்துவிட்டார். ஆனால் அடுத்து வரப்போவதை அவர் அறிந்திருக்கிறாரென்று நான் எண்ணவில்லை. அவர் எல்லாவற்றையும் ரகசியமாக வைத்திருக்கிறார். எதிர்காலச் சங்கடங்களைத் தவிர்க்க அதுதான் வழியென்று நினைக்கிறார்.''

''நீ வேலையை ஒப்புக்கொள்ளப்போகிறாயா? அதுதானே உன் பிரச்னை?''

''பாதி மட்டும்''

''மற்றொரு பாதி?''

''அதை ஒட்டியது. எனக்கு மிகவும் தெரிந்த பெண் ஒருத்தி இருக்கிறாள். பெயர் ரோனா மெட்ஃபோர்டு. அவள் ஒரு சங்கடத்தில் சிக்கியிருக்கிறாள் என்று நான் நினைக்கிறேன். அவளுக்கு அது தெரியாது. அவள் தலைக்குமேலே புயல் முகில் ஒன்று அலைந்து கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. அவளுக்கு ஸ்காட் எட்லீயுடன் நிச்சயதார்த்தம் ஆகியிருக்கிறது. அவனை உங்களுக்குத் தெரியுமா?''

''அவனுடைய அப்பாவின் பெயரின் மூலம் கேட்டிருக்கிறேன். நல்ல இளைஞன் என்று சொல்வார்கள். ஆனாலும் அவனுடைய தந்தையைப்போல அவன் ஆகமுடியுமா என்பது பற்றி எனக்குச் சந்தேகந்தான்.''

பால் ஹேடன் சொன்னான்: ''நீங்கள் இப்படிச் சொல்வதை அவன் கேட்டுவிடாமலிருக்கட்டும். உண்மையென்ன

வெனில் எனக்கு ஸ்காட்டைப் பிடிக்கவே இல்லை. ஆனால் அவன் ரோனுவை மணக்க இருக்கிறான். அதுதான் வேதனையை அளிக்கிறது.''

இத்தடவை பேச்சு சிறிது நேரம் நின்றுவிட்டதும் தனது காஃபிக்குச் சர்க்கரை போட்டுக் கொள்வதில் மூழ்ந்திருந்தார் பிரௌன்லீ. கடைசியில், ''உன்னுடைய பிரச்னை எனக்கு நன்ருகப் புரியவில்லை, இதில் நான் தீர்த்து வைக்கக் கூடியது என்ன இருக்கிறது?'' என்று அவர் தலையை ஆட்டியபடி முறுவலித்தார்.

''சரி . . . நிகோலஸ் ஆர்பெல் என்பவனைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?''

அது பிரௌன்லீயின் முகமலர்ச்சியை மாற்றிவிட்டது. ''உன் பிரச்னையில் அவனும் இடம் பெறுகிறானு என்ன? வா... காஃபியை முடித்துவிட்டுச் சிறிது உலாவுவோம்'' என்ருர் பிரௌன்லீ.

பால் ஹேடன் தன்னைத் தளர்த்திக் கொண்டான். பிரௌன்லீக்கு ஆர்பெலைப் பற்றித் தெரியும் என்றே தோன்றியது. அவனுக்கு மட்டும் முழு விஷயமும் தெரிந்துவிட்டால், ரோனுவின் நிலை நன்கு புரிந்துவிடும்.

அடுத்திருந்த மேஜையை நோக்கிக்கொண்டு பிரௌன்லீ சொன்ஞர்: ''நான் சிறுவனுயிருந்தபோது, சனிக்கிழமை தோறும் சென்டிரல் பார்க்குக்கு என் தம்பியையும் அழைத்துக்கொண்டு வருவேன். சுமார் பதினைந்து 'ப்ளாக்'குகளைத் தாண்டி வரவேண்டியிருக்கும்.''

''பிறகு திரும்பிப் போகும்போதும் அப்படித்தானே?''

''ஆமாம் . . . கால்கள் கடுக்கப் பதினைந்து ப்ளாக்குகளைக் கடந்து வீடு திரும்புவோம்'' என்ற பிரௌன்லீ அடுத்த மேஜையண்டையிருந்த குழந்தைகளைப் பார்த்தபடி முறுவலித்தார்.

பிறகு அவர்கள் எழுந்தார்கள். திறந்த மாடியில் உணவைப் பொறுக்கிக் கொண்டிருந்த புறுக்களைச் சிதற அடித்துக் கொண்டு, மாடிப்படிகளை நோக்கி பால் முன்னே நடந்தான். ''நாம் எங்கே நடக்கலாம்? சரடிகளைத் தாண்டி பொதுப் பாதையில் சிறிது நடப்போமா?'' என்று கேட்டான் அவன்.

மிருகக் காட்சி சாலையின் வடக்குப் பக்கத்திலிருந்த கூண்டுகளை அவர்கள் அடைந்ததும், ''இங்கேயே நன்ருக இருக்கிறது'' என்ருர் பிரௌன்லீ. ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் அங்கே கூட்டமாக நின்று, சிங்கங்களையும், சிறுத்தைகளையும் கவனித்துக் கொண்டிருந்தார்கள். மற்றவர்கள் கூடு ஒன்றில் கோபத்துடன் குறுக்கும் நெடுக்குமாக நடந்த புலியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

புது விதமான பிராணி ஒன்றன் கூட்டுக்கெதிரே நின்ற பிரௌன்லீ, ''இன்று நாம் இங்கே சில புதிய பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம். இதோ பாதி புலியாகவும், பாதி சிங்கமாகவும் உள்ள இப்பிராணி, அந்தத் துயரத்தால்தான் தனது வாலையே கடித்துக் கொள்வதாகக் கூறுவார்கள். நாமெல்லாம் கூட முடிந்தவரை பிளவுபட்டுப் போகக் கூடாதென்பதற்கு இது நல்ல எச்சரிக்கை'' என்றார்.

அவர்கள் மேலே நடந்தனர். பிரௌன்லீ தொடர்ந்தார்: ''இதோ பார், மூன்று மனிதக் குரங்குகள்! சமமான சூழ்நிலைகள் சமமான விளைவையே அளிக்கும் என்ற கொள்கையை இவை பொய்ப்பிக்கின்றன. குரூபமான ஒன்றை மற்ற இரண்டிலிருந்தும் பிரித்து வைத்திருக்கிறார்கள். மற்றவை இரண்டும் ஒரே கூட்டில் சகஜமாக இருக்கின்றன.''

''நீங்கள் ஜாக்கிரதையாகப் பேசுங்கள். அதன் கண்கள் உங்கள் மீது பதிந்திருக்கின்றன.''

பிரௌன்லீயும் பாலும் கூட்டத்திற்கு அப்பால் சென்றார்கள். ''கூடுகளுக்குள் இருக்கும் மிருகங்களுக்காக நான் எப்போதுமே வருந்துகிறேன். அவைகளைச் சுத்தமாக வைத்து, வேண்டிய உணவையும் கொடுக்கிறார்கள். கைதிகள் முகாம் உள்ள நாடுகளில் துன்புறுபவர்களை விட இவைகள் பாடு சற்றுத் தேவலைதான். ஆனால்—'' என்ற பிரௌன்லீ தோள்களைக் குலுக்கினார்.

அவர்கள் மிருகக் காட்சி சாலையை விட்டு, பார்க்கின் வடக்குப் பக்கமாக நடந்தார்கள். அது அறுபத்தேழாவது தெருவிலிருக்கும் குழந்தைகளுக்கான விளையாட்டு மைதானத்துக்கு இட்டுச் சென்றது. அங்கே, பெட்டிக்கடை ஒன்றிலிருந்து இரு பொட்டலங்கள் பட்டாணிக் கடலைகளை வாங்கி, ஒன்றைப் பாலிடம் கொடுத்தார் பிரௌன்லீ. ''நாம் போய் அணில்களுக்கு இதைப் போடுவோம்'' என்றார் புன்முறுவலுடன்.

பிறகு அவர்கள் நடைபாதையையும், அங்கிருந்த கூட்டம் நெரிந்த பெஞ்சுகளையும், குழந்தைகள் வண்டிகளையும், செஸ் விளையாட்டுக்களையும், பனி உருவைகளையும், மூன்று சக்கரச் சைக்கிள்களையும் தாண்டி, புல்தரைகள், மரங்கள் இவற்றின் வழியே மேலே ஏறி, உயர்ந்த பாறைகளை நோக்கிச் சென்றார்கள். ஆர்பெனைப் பற்றித் தான் முதலில் பேச ஆரம்பிக்கக் கூடாதென்று இருந்தான் அவன். ஆனால் அவனுக்குப் பொறுமை இல்லை. அவன் கையிலிருந்த பொட்டலத்தைக் கிழித்தான். சில பட்டாணிகள் கீழே சிதறின.

''மெதுவாகச் செய்; இன்னும் ஒரு மணி நேரத்திற்கு இப்பொட்டலம் பயன்பட வேண்டும்'' என்றார் பிரௌன்லீ;

முறுவலிக்க முயன்ற பால் கேட்டான்: ''இப்பாறை நன்ருக இருக்கிறது; உட்காருவோமா?''

பிரௌன்லீ சுற்றுமுற்றும் பார்த்தார். சற்றுத் தூரத்தில் பையன்கள் சிலர் விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஓர் எலுமிச்சை மரத்தடியில் இளம் தம்பதிகள் இருவர் அமர்ந்திருந்தனர். ஆயா ஒருவள் ஒரு குழந்தையைப் புல் தரையின் மீது நடை பழக்கிக் கொண்டிருந்தாள். அங்கிருந்த மரங்களுக்குப் பின்னல் தூரத்தில் தெரிந்த பாதையில் கூட்டம் இன்னும் அதிகமாகிக் கொண்டு தானிருந்தது. பெஞ்சுகள் ஜனங்களால் நிரம்பி வழிந்தன அது சனிக்கிழமை பிற்பகல்; தவிர சூரியனும் தலையைக் காட்டிக் கொண்டிருந்தான். எனவே கோட்டுகள் கழற்றப் பட்டன; முகங்கள் முதற் கதிரொளியை நோக்கித் திரும்பின. ''இந்த இடம் பரவாயில்லை. ஒரு மூலையாகப் பார்த்து அமருவோம். இங்கே இடம் காய்ந்தாவது இருக்கிறது'' என்ற அவர் மீண்டும் மரத்தடியிலிருந்த இளம் காதலர்களை நோக்கினர். இப்போது அந்த யுவன் முதுகைச் சாய்த்துத் தன் தலையை அப்பெண்ணின் மடி மீது வைத்துக் கொண்டிருந்தான். ''இருபது வயசுக்காரர்களுக்கு வாதப் பிடிப்பு வராது இல்லையா?'' என்று மேலும் சொன்ஞர் பிரௌன்லீ. தொடர்ந்து, கையிலிருந்த பொட்டலத்தைப் பிரித்து, ஒரு பட்டாணியை எடுத்து எதிரே ஆவலுடன், ஆனல் தயங்கி நின்ற அணிலை நோக்கி வீசினர். அது முன்னல் வந்து, பிறகு பின்னல் போயிற்று. மறுபடியும் அது சற்று முன்னல் வந்தது.

''நீ ஆர்பெனைப் பற்றிக் கேட்டாய். அந்த இளைஞனைப் பற்றி நான் நன்கு அறிவேன். உனக்கு என்ன தெரிய வேண்டும்?'' என்ருர் அவர் மெதுவாக.

''உங்களுக்குத் தெரிந்தது எதையும் சொல்லலாம்.''

நேற்றிரவு ஜான் சொன்ன மாதிரியே இருந்தது, நிகோலஸ் ஆர்பெனைப் பற்றி பிரௌன்லீ கூறிய கதையும். ஆனல் பிரௌன்லீக்கு அக்கதையை மேலும் அதிகமாக நீட்ட முடிந்தது. 'தியாகி'யாக ஜ்வலிக்க முயன்ற ஆர்பெனின் நடிப்பு தோற்றுப் போனதும், பெர்ல் துறைமுகத் தாக்குதல் வரை அவன் சமத்காரமாக மௌனமாயிருந்தான். ஆனல் அதற்குப் பிறகு அவன் சுயேச்சையாக எழுத ஆரம்பித்தான். அவனுக்கு அடிக்கடி பிரசுரமும் கிடைத்தது. ஏனெனில் அவன் நன்ருக எழுதினன்: தவிர கம்யூனிஸ்டுகள் செஞ்சேனையின் புகழைப் பாடிக் களித்துக் கொண்டுமிருந்தார்கள். அவன் எப்போதும் ஒரே விஷயத்தைப் பற்றி எழுதினன்— இங்கிலீஷ் கால்வாயைத் தாண்டிப் போதுமான தளவாடங்களையும் துருப்புக்களையும் கொண்டு வருவதற்கான சாதனங்கள் இல்லாத சமயத்தில், 'இரண்டாவது முனை' ஒன்றைத் தொடங்கவேண்டு

மென்று தீவிரமாக எழுதினன். திரும்பத் திரும்ப ஒன்றையே எழுதுவதாகப் பிறர் நினைக்காமலிருப்பதற்காக அவன் பல புனை பெயர்களை உபயோகித்தான். அச்சமயத்தில் மேற்கத்திய நேச நாடுகளின் திறமையை அறிந்திருந்த பொறுப்பான மனிதர்கள், இப்படி மேலே நாடுகள் இரண்டாவது முனையை ஆரம்பித்துத் தோற்ருல், செஞ்சேனையின் பெருமை அதிகமாகும் என்பதற்காகத்தான் ஆர்பென் இப்படி எழுதுகிருனே என்று வியக்க ஆரம்பித்தனர்.

பிரௌன்லீ புன்முறுவலுடன் சொன்னர்: ''உண்மையில், எங்களில் சிலர் அவனை 'மாஸ்கோவின் குரல்' என்று அழைப்பது வழக்கம். ஆர்பென் அத்தனை முக்கியமானவன். அவனுக்கு நம்பிக்கையும் இருந்தது. அடுத்தாற்போல், உலகத்து நாடுகளுக்குள் நெருங்கிய உறவை வளர்க்க விரும்பிய ஒருவள்ளலின் பண உதவியுடன் நடந்து வந்த நல்லெண்ண இயக்கம் ஒன்றில் அவன் இருந்ததாகத் தெரிந்தது. யுத்த முடிவுக்குள், அந்த ஸ்தாபனத்தின் முக்கியஸ்தர்களில் ஒருவனுக அவன் ஐரோப்பா சென்ருன். யதேச்சாதிகாரத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்யும் அகதிகளை மௌனமாக இருக்கச் செய்ய உதவினன் அவன். தனது நீண்ட பிரயாணங்களை முடித்து விட்டுத் திரும்பியபோது, அச்சிடுவதற்குத் தயாராகப் பல கட்டுரைகள் அவனிடமிருந்தன. நான் முன்பே கூறியபடி அவன் நன்ருக எழுதினன். பிறரது எண்ணங்களை தன் வழிக்குக் கொணருவதில் சமர்த்தன். அவனுடைய எழுதும் முறை? 'நான் அங்கே இருந்தேன், எல்லாவற்றையும் நேரில் கண்டேன்,' 'மனிதவர்க்கத்திற்காக நான் கூறுகிறேன்' என்றெல்லாம் எழுதினன். அவனுக்கு நல்ல விளம்பரமும் கிடைத்தது. கிரேக்கக் கம்யூனிஸ்டுகள் எல்லாம் கம்யூனிஸ்டுகள் அல்ல என்று அவன் நிருபித்தான்; அவர்கள் எல்லாம் வெறும் கிரேக்க விவசாயச் சீர்திருத்தவாதிகள் என்ருன். போலந்து மக்கள் மாஸ்கோவிலிருந்து லப்ளின் வழியாக வரும் அரசாங்கத்தை வரவேற்கத் தயாராய் இருப்பதாகக் கூறினன்; இங்கிலாந்து, ஃப்ரான்ஸ் தேசச் சண்டைகளில் சேர்ந்த மற்ற போலந்து வீரர்கள் யாவரும் வெறும் ஃபாஸிஸ்டுகள் என்ருன். ருமேனியா, பல்கேரியா ஆகிய நாடுகளில் நடந்த தேர்தல்கள் நேர்மையானவை என்று அவன் காட்டினன்; கிழக்கு ஐரோப்பாவில் உண்மையான ஜனநாயகம் நிலைத்து விட்டால், அமெரிக்காவின் வர்த்தகம் பெருகும் என்று எழுதினன். கம்யூனிஸ்டுகள் அதிகாரத்துக்கு வந்தபின் இருப்பதைப் போல் செக்கோஸ்லோவேக்கிய மக்கள் எப்போதுமே சந்தோஷமாக இருந்ததில்லை என்ருன் அவன். இதெல்லாம் நல்ல பூர்வாங்க வேலை தான். இங்குள்ள மக்களில் அநேகர் அவற்றை நம்பி, திரும்பத் திரும்ப மற்ற

வர்களிடமும் கூறினர்கள். அவர்களெல்லாம் அவனுக்கு உதவும் அநுதாபிகள்.''

சிறிது நிறுத்தி, பாறையைச் சுற்றிலுமிருந்த அணில்களைக் கவனித்தார் பிரௌன்லீ. தங்கள் சிறிய உடல்களை நேராக நிமிர்த்தி அமர்ந்த அவைகள் முன் கால்களை மென்மையான வயிற்றை ஒட்டி மடித்து வைத்துக் கொண்டிருந்தன. இன்னும் அதிகமான உணவு வேண்டுமென்று பிச்சை கேட்பது போலிருந்தது இத்தோற்றம்.

பிரௌன்லீ தொடர்ந்தார்: ''மசார்கியின் மர்மமான மறைவுக்குப் பிறகு, ஆர்ஸெனின் முக்கியத்துவம் குறைந்தது. அப்புறம் சில மாதங்களுக்கு அவன் மௌனமாக இருந்தான். இப்போது மீண்டும் அவன், புனைப் பெயர்களில் எழுத ஆரம்பித்திருக்கிருன். ஆனல், வெளிநாட்டு அரசியல்களைத் தற்போதைக்குத் தீண்டவில்லை. இதெல்லாம் எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை பால். அவன் இன்னமும் பூர்வாங்க வேலைகளைத்தான் செய்கிறன்; ஆனல் இப்போது அவன் செய்வது அமெரிக்காவுக்கு எதிராக. அவனுடைய கடந்த காலச் செயல்களைக் கவனித்தால், அவன் கைதேர்ந்த பிரசாரகன் என்பது புலப்படும்.''

''அவனுடைய தற்போதைய வழிமுறை என்ன?''

''மாஸ்கோவின் குரலாக இருப்பதுதான். குறிப்பாக அமெரிக்கப் பத்திரிகைகளின் ஊழல்கள், நமது சுதந்திரத்துக்கு இடையூறு விளைவிக்கும் எஃப். பி. ஐ. ஸ்தாபனம், ஒற்றர்களை வேட்டையாடும் வெறி, யுத்த வெறி துளும்பும் நமது சட்டங்கள் ஆகியவற்றை அவன் கண்டித்துக் கொண்டிருக்கிருன். பொதுவாக, ஏதேனும் சிறு குறைபாடிருந்தால்கூட, அதை மிகப் பெரிதாக்குவது அவன் வேலை. அமெரிக்காவைப் பற்றிய நல்ல விஷயம் ஏதுமிருப்பின், அதை அவன் ஒரு போதும் குறிப்பிடுவதில்லை. எந்த அமெரிக்கப் பிரச்னையைப் பற்றியாவது இரு கருத்துக்கள் இருப்பின், அவற்றில் மோசமானதையே அவன் குறிப்பிடுவான். தாழ்த்தப்பட்டவர்களுக்காகவும், சுரண்டப்படுபவர்களுக்காகவும் தான் போராடுவதாகச் சொல்லிக் கொள்கிருன் அவன்; ஆனல் ரஷ்யாவில் உள்ள அடிமைத் தொழிலாளர்களைப் பற்றி அவன் எழுதுவதில்லை. ஒற்றர்களை நாம் வேட்டையாடுவதாக எழுதுகிருன்; ஆனல் கிழக்கு ஐரோப்பாவில் வேண்டாதவர்களை ஒழித்துக் கட்டுவதை அவன் குறிப்பிடுவதில்லை. பொறுமையின்மையைப் பற்றிக் கசப்புடன் பேசும் அவன், கம்யூனிஸத்தின் 'நம்பு; கீழ்ப்படி' என்ற சட்டங்களைக் கண்டிப்பதில்லை. சமாதானத்தைப் பற்றிச் சக்கரவட்டமாகக் கூறும் அவன், மேலை நாடுகளைவிட மிக அதிகமான படைகளையும், ஆயுதங்களையும்

ரஷ்யா வைத்திருப்பதைக் குறிப்பிடுவதில்லை. ஆமாம், அவன் சமாதானத்தைப் பற்றிப் பேசிக் கொண்டே ரகசியமாக ஒரு சண்டையை நடத்திக் கொண்டுதானிருக்கிறான். அவனோடுகூட சில நூறு மனிதர்களும் இருக்கிறார்கள்.''

ரோஜர் பிரௌன்லீயின் பார்வை நெருக்கமாக இருந்த நடைபாதையை ஒட்டிய புல் தரையில் பதிந்தது. அங்கே பெஞ்சுகளில் அமர்ந்திருந்தவர்களையும் புல் தரையில் உலாவி வந்தவர்களையும் அவர் சுட்டிக்காட்டி, ''அவன் இந்த மக்களுக்கு எதிராகப் போரிடுகிறான். இவர்கள் 'ஓட்டு'ச் செய்யும் முறையை தோழர் ஆர்பென் நம்பவில்லை. இவர்களுடைய அபிப்பிராயங்களுக்கு அவன் மரியாதை கொடுப்பதில்லை. அவனும், மற்ற எழுபதினாயிரம் தோழர்களும், இந்த ஐந்து கோடி மக்களை முட்டாள்கள் என்றே கருதுகிறார்கள்— ஆர்பென்கள் மட்டுமே நியாயம் தெரிந்தவர்களாம்!''

''ஆமாம்...'' என்றான் பால் மெதுவாக. ''அவனுக்கு மற்றவர்களிடம் அலட்சியம்! ஆர்பெனுக்கும் அவனுடைய நண்பர்களுக்கும் எதிராக, உங்களுடைய எதிர்த் தாக்குதலில் நான் சேர வேண்டுமானால், இதுவே போதிய காரணமாகும்.''

பிரௌன்லீ மேலும் சில அணில்களுக்கு உணவளித்தார். தான்தோன்றியாக முன்னால் வந்து நின்ற அணில்களால் பின்னால் தள்ளப்பட்ட பலவீனமான, சிறிய அணில்களாகப் பார்த்து அவர் உணவை அளித்தார். இறுதியில் ''அப்படியானால் உன்னைத் தடுப்பது எது பால்?'' என்று வினவினார்.

''நான் எதில் இறங்கிக் கொண்டிருக்கிறேன் என்ற உண்மையை அறிய விரும்புகிறேன்.''

திடீரென்று பிரௌன்லீ அவனைக் கூர்ந்து நோக்கினார். ''நாமெல்லாம் கற்றுக் குட்டி ஒற்றர்களாகி விடுவோமென்று அஞ்சுகிறாயா? இந்த நாட்டில் இவற்றை எதிர்த்துப் போராட ஒரு ஸ்தாபனமுமில்லை. எனவே, அதை நாம் செய்யப் போகிறோம். நாம் சாதாரணமாகத் தொண்டர் குழுவைச் சேர்ந்தவர்கள்—செய்தித் தாள்கள், ரேடியோ, பத்திரிகைகள், சினிமாப் படங்கள் இவற்றில் வயிற்றுப் பிழைப்புக்காகப் பணி புரிபவர்கள். நாம் செய்வதெல்லாம் ஒரு லட்சியத்திற்கு விரோதமாக மற்றொரு லட்சியத்துடன் போரிடுவதே. வேறு விதமாய்ச் சொல்ல வேண்டுமானால், எதிர்ப் பிரசாரம் எனலாம்.''

''எனக்கு எந்த ஸ்தாபனத்திலும் சேர விருப்பமில்லை. நமது சிந்தனைக்கு அணை போடும் ஸ்தாபனங்களில் சேர்ந்தால்

முடிவில் நமக்கும் ஆர்பென்களுக்கும் வித்தியாசமே இல்லா மல் போய்விடும்'' என்றான் பால்.

''நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் தொண்டர்களாக வேலை செய்பவர்கள் நம்மைப்போல் பல பேர்கள் இருக்கிறார் கள். நாமெல்லாம் நாட்டின் பல பாகங்களிலிருந்து வந்த வர்கள். அரசியல் கொள்கைகளிலும் நாம் வேறுபட்டவர் களே—டெமோக்ராட்டுகள், மிதவாதிகள், நார்மன் தாமஸின் சோஷலிஸ்டுகள், இப்படியே. மதத்தைப் பொறுத்த வரை யில், கதோலிக்குகள், யூதர்கள், மார்மோன்கள், கிறிஸ் தவ விஞ்ஞானிகள், ப்ராடெஸ்டெண்டுகள் ஆகிய பல பிரிவினர்களை நீ இதில் காணலாம். இவ்வளவு வேறுபாடு களை உடையவர்களிடையே இத்தனை அடக்கத்தை உண்டாக்கு வது எளிதில்லை. நம்மிடையே உள்ள ஒரே ஒற்றுமை, நமது நாட்டின் மீதுள்ள விசுவாசந்தான். நமக்கு இது மிகவும் பிடிக்கிறது, கடந்த சில வருடங்களாகவே ஆர்பெனையும் அவனது தோழர்களையும்பற்றி நம்மில் பலர் கவலை கொள்ள ஆரம்பித்திருக்கின்றனர். கவலையால் சந்தேகப்படும் ஒரு தனி மனிதனால் எதுவும் செய்ய முடியாதாகையால், நமக்கு வேண்டியது ஒரு சிறிய ஸ்தாபனம்'' என்றார் பிரௌன்லீ.

பால் தலையை அசைத்தபடி மெதுவாகப் பேசினான்: ''வெயிட்லர் நீங்கள் சொல்வதை ஆமோதிப்பார். நான் நேற்று அவரைக் கண்டபோது, தான் நிழல்களோடு போரா டிக்கொண்டிருப்பதுபோல் உணர்வதாக என்னிடம் கூறினார். உண்மையில் ஆர்பெனின் பெயர் என்னிடம் முதலில் தெரி வித்தவர் அவர்தான். ப்ளாக்வொர்த், ஆர்பெனின் சிறந்த மாணவர்களில் ஒருவன் என்றே தோன்றுகிறது. மெதுவாக அவன் கம்யூனிஸ்டுகளுக்கு விரோதமான எழுத்தாளர்களை ஒதுக்கிவிட்டு, ஆர்பெனைப் போன்றவர்களது எழுத்துக்களை வெளியிட்டுக்கொண்டிருந்தான். இதை நீங்கள் அறிவீர்களா?''

''நாங்கள் அப்படி ஊகித்தோம்.''

''மடத்தனமாக வெயிட்லர் இதையெல்லாம் மூடி மறைக் கிறார்.''

''அதை அவ்வளவு மடத்தனம் என்று சொல்ல முடி யாது'' என்றார் பிரௌன்லீ.

''ஆனால் அவருடைய மௌனம், அவரை அவர்களது கைகளிலேயே சிக்கவைத்து விடுகிறதே!''

''இல்லை. நடந்ததை அப்படியே வெளியிட்டால்தான் அம்மாதிரி நடக்கும். ப்ளாக்வொர்த் எதிர்த்து வாதம் புரி வான். அவனுடைய கம்யூனிஸ்டுக் கட்சிச் சார்பை வெளிப் படுத்தினாலொழிய அவன் இதில் ஜெயித்தும் விடுவான். அதை வெளிப்படுத்துவதோ முடியாத காரியம். தவிர, ப்ளாக்

வொர்த் ஏதாவது சட்ட விரோதமாக நடந்து கொள்வதாகக் கண்டுபிடித்தால் ஒழிய, எஃப். பி. ஐ.யினாலும் எதுவும் செய்யமுடியாது.''

பால் மௌனமாக இருந்தான்.

ப்ரௌன்லி தொடர்ந்தார்: ''ப்ளாக்வொர்த்தைப் போன்றவர்கள் வெறும் கோழைகள். அவர்கள் வந்தது வரட்டுமென்று எதிலும் இறங்க மாட்டார்கள். அதனால் அவர்களைக் கைது செய்து, வழக்காடுவதும் முடியாது. அவர்கள் நல்ல உத்தியோகங்களில் அமர்ந்து, பணக்காரர்களின் பணத்தைச் சாப்பிடுவார்கள்; பக்கத்தில் பணக்காரர்கள் யாரும் இல்லாதபோது, தனி உடைமைக்காரர்களைப் பற்றித் தைரியமாக எதிர்த்துப் பேசுவார்கள். நாம் செய்யக் கூடியதெல்லாம், அவர்களுடைய மறைமுகமான பிரசாரத்தை அம்பலமாக்குவதுதான். அதாவது நாம் அவர்களுடைய பற்களைப் பிடுங்கி விடலாம். அவர்கள் ஏதாவது எழுதினாலோ, கட்டுரைகளை வெளியிட்டாலோ, அல்லது பிரசங்கம் புரிந்தாலோ அச்சமயம் பார்த்து நாம் செயலில் இறங்க வேண்டும்; அதே விஷயங்கள் பற்றிய உண்மை விவரங்களை நாம் எழுதி, தாங்கள் சாதாரண மிதவாதிகள் என்று பாசாங்கு செய்யும் அவர்களது உள் தன்மையை அம்பலமாக்க வேண்டும். இவ்வேலையை நாம் செய்தால், அவர்களுடைய பொய்ப் பேச்சுக்களையும், திரித்துக் கூறும் தன்மைகளையும் வெளிக் கொணர்ந்து விடலாம்.''

''மற்றும் ஒரு வேலைகூட நமக்கு இருக்கிறது'' என்றான் பால்.

''நமக்கா?'' என்ற பிரௌன்லீயின் கவலை தோய்ந்த முகத்தில், மகிழ்ச்சி நிறைந்த ஒரு புன்னகை நெளிந்தது.

''ஆமாம்... நானும் இதில் சேர்ந்து விட்டேன்'' என்றான் பால்.

''சரி... அதென்ன வேலை?''

''ப்ளாக்வொர்த்தைப் போல், மற்றவர்களுடைய பிழைப்பில் மண்ணை அள்ளிப் போடக்கூடிய நிலையில் உள்ளவன் வேறு யாராவது இருக்கிறானா என்று கண்டுபிடிக்கவேண்டும். அவனிடம் கம்யூனிஸத்துக்கு விரோதமான எழுத்தாளர்களின் பட்டியல் ஒன்றிருக்கும். அவர்களை ஒதுக்கி, நசுக்கி வந்தால், அவர்களால் முன்னுக்கே வரமுடியாதல்லவா?''

''ஆமாம்... அதுதான் பிரச்னை. இதற்கு வெயிட்லரைப் போன்றவர்களின் உதவி அவசியம். அவர்கள்தாம் தம் பத்திரிகைகளில் நடப்பதை அறிந்திருப்பார்கள். இப்போதிலிருந்து வெயிட்லர் ஜாக்கிரதையாக இருப்பார்.''

''ஆனல் அவர் விஷயத்தை இப்படி ரகசியமாக வைத்திருப்பதால், எளிதில் தப்பித்து வேறு ஓர் உத்தியோகத்தில் அமர்ந்து விடுவான் ப்ளாக்வொர்த். ஆனல் அவனல் ஒதுக்கப்பட்ட எழுத்தாளர்கள் இதுவரை மிகவும் சிரமப்பட்டிருப்பார்கள். தவிர, எழுதியவற்றையெல்லாம் திரும்பப் பெற்ற எழுத்தாளனின் தன்னம்பிக்கை என்ன ஆகியிருக்கும்? அவனுடைய தன்னம்பிக்கை, எதிர்காலம் எல்லாம் அல்லவா பறிக்கப்பட்டுள்ளன? இதைத்தான் ப்ளாக்வொர்த்கள் விரும்புகிறர்கள் என்று நினைக்கிறேன்...சரி, இப்போது நான் என்ன செய்யவேண்டும்?'' என்றன் பால் ஹேடன் எழுச்சியுடன்.

''திங்களன்று நான் உனக்கு முதல் 'வீட்டு வேலையை' அனுப்புகிறேன்.''

''அதென்னவோ?''

''சில பத்திரிகைகள் உனக்குக் கொடுக்கப்படும். அவற்றை நீ கவனமாகப்படி. அவற்றில் எதற்காவது பதில் தரவேண்டுமென்றல் உடனே எனக்குத் தெரிவி. உடனடியாக நாம் ஒரு பதிலை, முடிந்தால் அந்தப் பத்திரிகையிலேயே வெளியிட வேண்டும்.''

''அப்படி முடியாமல் செய்யப்பட்டு விட்டால்?''

ப்ரௌன்லீ சிரித்தார்: ''அது அருமையாகத்தான் நேரும். அமெரிக்கர்களில் பெரும்பாலோர் வெயிட்லர் மாதிரித்தான்; பசுத்தோலில் உள்ள கம்யூனிஸ்டுகளால் ஏமாற்றப்படுவதை அவர்கள் விரும்பமாட்டார்கள் ஆனல், இதை விரும்புபவர்கள் யாராவது இருப்பின், அதுவும் சுவராஸ்யமான விஷயம்தான்... இக்காரியங்களுக்கெல்லாம் நமக்கு ஊதியம் ஒன்றும் கிடையாது, பால். அதனல்தான் நாம் வேறு வேலைகளில் இருக்கிறேம். எனவே, வெயிட்லர் அளிக்கும் வேலையை ஏற்றுக்கொள். அத்துடன், கம்யூனிஸ்டு அல்லாத எழுத்தாளர்கள் மீண்டும் தமது வருமானத்தை அடைய நீ உதவி செய்ய ஆரம்பிக்கலாம். ஆர்பென்கூட 'அம்ச இலாகா' ஆசிரியர் என்ற முறையில் உன்னை சுவாரஸ்யமான பிராணியாகக் கருதக்கூடும். உனக்குத் தெரிந்து, அவனுக்கு 'ட்ரெண்டி'ல் வேறு யாரிடமாவது தொடர்பிருக்கிறதா?''

''மர்ரே என்று ஒருவனிருக்கிறன். அவனைக்கூட நான் ஒரு 'பார்ட்டி'யில் சந்தித்தேன்.''

''ஓ! நீ அவனேடு பேசினயா?''

''இல்லை.''

''அது உன் அதிர்ஷ்டமே. மர்ரேயுடன் நீ எது விஷயமாகவும் வாதம் புரியாதே.''

''பூ! இதெல்லாந்தான் என் வேலைகளா?''

''இல்லை. நிகோலஸ் ஆர்பெனைப் பற்றி அதிகம் அறிய எனக்கு ஆவல். அவன் வெறும் பிரசாரகன் மட்டுமல்ல என்றே எனக்குத் தோன்றுகிறது. அவன் வசதியாக வாழ்கிறான்; பிரயாணம் செய்கிறான். இதெல்லாம் யார் பணத்தில்? அதிகமாக ஊதியம் தரும் பத்திரிகைகளில்கூட அவன் எழுதுவதில்லை; அவனுக்கென்று சொந்த வருமானமும் கிடையாது. எனவே, அவன் எங்கேயிருந்து பணம் பெறுகிறான்? எதற்காக?''

குறுக்கான பாதை வழியே அவர்கள் நடக்க ஆரம்பித்தனர். நேற்றிரவு மில்டன் லெயிட்னர் சொன்ன கதை பாலுக்கு நினைவு வந்தது. ''மர்ரே என்னை ஆர்பெனுடன் தொடர்பு கொள்ளச் செய்வான் என்றே நினைக்கிறேன். ஆனால் எனக்கு என்னம்மா மர்ரேயைப் பிடிக்கவில்லை'' என்றான் பால்.

''உன்னோடு நட்புக்கொள்ள வேண்டுமென்று அவனுக்கு உத்தரவு வந்தால், அவன் அப்படியே செய்வான். சில எழுத்தாளர்களின் கட்டுரைகள் பிரசுரிக்கத் தக்கவையென்று உன்னிடம் சிபாரிசு செய்வதற்கு அது உபயோகமாக இருக்குமல்லவா? எனவே மற்றவர்களைப் பார்ட்டி கொடுத்து முட்டாள்களாக்குவது போல் உன்னையும் முகஸ்துதி செய்ய மர்ரே முயலக்கூடும். அவர்களுடைய புகழ்மாலையைக் கண்டு மயங்கி விடாதே.''

பனிச்சறுக்கல் உருளைகளின் மீது வந்த இரு பையன்களை ஒதுக்கிக்கொண்டு ப்ரௌன்லீ நடந்தார். பிறகு, திடீரென்று, ''என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளாதே, பால். அமெரிக்காவில் வேறு ஏதாவது ஒரு கூட்டம் கிளம்பி இந்தக் கம்யூனிஸ்டுத் தந்திரங்களை அனுஷ்டித்தால், அவர்களையுந்தான் நாம் எதிர்ப்போம். யாராவது தமது கொள்கைகளைப் பரப்ப எண்ணினால், பகிரங்கமாக அதைச் செய்யட்டும்; மறைமுகமாகச் செய்வதை நாம் அநுமதிக்க மாட்டோம்'' என்றார்.

ப்ரௌன்லீயின் முகத்தில் தோன்றிய தீர்மானத்தைக் கண்ட பால் ஹேடன், ''நீங்கள் ஒரு யுத்தமே ஆரம்பித்து விட்டிருக்கிறீர்களே!'' என்றான்.

''இல்லை. நம் மீதுதான் போர் தொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சவாலை நான் ஏற்றுக்கொள்கிறேன், அவ்வளவுதான். நான் மட்டுமென்ன? நீயும், நம்மில் மற்றும் அநேகருந்தான்'' என்று அவர் ஒரு புன்னகை பூத்தார்.

அறுபத்து ஏழாவது தெருவின் தொடக்கத்தில் அவர்கள் விடை பெற்றுக் கொண்டனர். ப்ரௌன்லீ மெட்ரோபோலிடன் மியூஸியத்தை நோக்கி மேலே நடந்தார். அங்குக் காட்சியில் இருந்த ஹாப்ஸ்பர்க்கின் தொகுப்புக்களை, அவை நியூயார்க்கை விட்டுப் போகுமுன் அவர் காண விரும்பினார்.

பால், தெற்கே திரும்பி பார்க்கின் பக்கமாக நடந்தான். அவனுடைய வேதனைகள் எல்லாம் அகன்று விட்டன போல் தெம்பாக நடந்தான். அவனுடைய தீர்மானங்கள் நன்ருக உருவாகி விட்டன. தென்கிழக்கில் ஓய்வுக்குப் போகவேண்டுமென்று பெர்லினில் இருக்கையில் அவன் செய்த தீர்மானம் ஒத்திப்போடப் படவேண்டும். கூடிய விரைவில் அவன் 'ட்ரெண்டி'ல் வேலையைத் தொடங்க வேண்டும்.

ஐந்தாவது அவென்யூவின் கிழக்குப் பக்கத்திலிருந்த புதுக் கட்டடங்களை அவன் நோக்கினுன். சில நன்ருக இருந்தன; சில அவனுக்குப் பிடிக்கவில்லை. கட்டடக் கலையிலிருந்து அவன் மனம் நழுவி ரோனுவை நினைத்தது இயல்புதான். அவன் 'ட்ரெண்டுக்'குத் திரும்பினுல், அவளை விட்டு ஒதுங்கியே இருக்கவேண்டும். அது சிரமமாகவும் இராது; இப்போது ஆபீசில் அதிக ஆட்கள், பரவலாக இருக்கிறுர்கள். அவன் அவளை ஒதுக்கிவிடுவான். இந்தத் தீர்மானத்துடன், 'ட்ரெண்டி'ல் சேருவது பற்றிய தன் தயக்கத்தையெல்லாம் ஆழப் புதைத்து விட்டான் பால்.

இப்போது அவன் சென்டிரல் பார்க்கின் தென்கோடிக்கு வந்து விட்டான். அவனுக்கு எதிரே ஐந்தாவது அவென்யூ. அங்குள்ள கட்டடங்களின் பல்வேறு வண்ணங்கள் மாலைக் கதிரொளியில் 'பளிச்' சிட்டு மின்னின. வானத்திரை நீலமாகி விட்டிருந்தது. காலையிலிருந்து அங்கே கூடியிருந்த கருமுகில்கள் கடலை நோக்கி நழுவி விட்டிருந்தன; வரிசையாக இருந்த ஜன்னல்கள் 'பளிச்'சென்று ஒளிர்ந்தன. நடைபாதைகளில் நெரிந்த தலைகளுக்கு மேலே கொடிகள் சோம்பேறித்தனத்துடன் மெதுவாக அசைந்தன; ஆற்று வெள்ளம்போல், பஸ்களும், டாக்ஸிகளும் மெதுவாக ஓடிக்கொண்டிருந்தன. சதுக்கத்தை அடைந்த பால் சற்றே தயங்கினுன். கறுப்புக் குதிரையின் மீது இருந்த **ஜெனரல் ஷெர்மனி**ன் சிலை பிளாஸாவை நோக்கிக் கொண்டிருந்தது. அச்சிலை காட்டிய வழியிலேயே சென்ற பால் பிளாஸாவைத் தாண்டினுன். அங்கிருந்த நீர் ஊற்று வேலை செய்யவில்லை. அதன் மீது நின்ற நிர்வாணச் சிலை, சுற்றிலும் நீர் வற்றியிருப்பதைக் கண்டு அதிசயப்படுவது மாதிரித் தோற்றியது. ஆனுல், அங்கு குழுமியிருந்த வெண்புருக் கூட்டங்களும், வண்ண வண்ண உடைகளில் கும்மாளமடிக்கும் குழந்தைகளும், இன்று விடுமுறை நாள் என்பதை அறிவுறுத்தின. இப்போது சனிக்கிழமை பிற்பகல், மணி மூன்று.

ஆனுல் நான் என்ன செய்யப் போகிறேன்? பால் ஹேடன் வியந்தான். விளையாடச் செல்வதற்கு நேரமாகிவிட்டது. நண்

பர்களைப் பார்க்கப் போவதற்கும் இது நேரமில்லை. அவர்கள் படுகைப் பிரதேசங்களுக்குப் பறந்து விட்டிருப்பார்கள்.

ஐம்பத்து எட்டாவது தெருவைத் தாண்டியதும் புதிய சினிமாக் கொட்டகை ஒன்றைக் கண்டான் பால். அதில் ஜீன் கேபின் நடித்த படம் ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. அங்கிருந்த வண்டிகளையும் குதிரைகளையும் தாண்டி அவன் கொட்டகையை நோக்கி நடந்தான். பிறகு, டிக்கெட் வாங்கப் பணத்தை எடுத்துக்கொண்டே, திரும்பி பிளாஸாவைப் பார்த்தான் பால். அப்போது, இனி சனிக்கிழமை மாலைகளில் இங்கே வந்து, தனக்கு மறந்துவிட்ட ஃபிரஞ்சு மொழி எவ்வளவு என்று அறிந்து கொள்ளலாமே என்று ஓடியது அவன் எண்ணம்.

இரண்டாம் பாகம் ▪ எதிர்க்கொள்கை

அத்தியாயம் 9

அன்று ஏப்ரல் மாத இறுதி ஞாயிற்றுக்கிழமை. குளிர்ந்த மழை நாளாக இருந்ததால் மாதா கோயிலுக்குச் செல்பவர்கள்கூட கனமான கோட்டுக்களுடனும், கைகளில் குடைகளுடனுந்தான் சென்றார்கள். ஸ்காட் எட்லி பதினொரு மணிக்கு ரோனாவின் விடுதிக்கு வந்தான். அங்கே கூடத்தில் தன் மழைக் கோட்டைக் கழற்றி மாட்டிக் கொண்டே, ''இந்த மழையில் எப்படி வீடு தேடப் போவது, ரோனா ?'' என்று கேட்டான்.

'' ஒரு வேளை மழை நின்றாலும் நிற்கலாம்.'' வெளியே மழை பெய்தாலும் ரோனா மகிழ்ச்சிகரமாகவே காணப்பட்டாள். அவள் கூடத்து அறையைச் சுட்டிக் காட்டினாள். அது துப்புரவாக இருந்தது. காலை உணவு உண்பதற்காக, ஜன்னலை ஒட்டியிருந்த சிறு மேஜைமீது கட்டம் போட்ட துணி ஒன்றை விரித்திருந்தாள். ஈஸ்டருக்காக ஸ்காட் அனுப்பியிருந்த குரோடன்ஸ் செடிகள் பலகணிமீது ஒரு தொட்டியில் இடம் பெற்றிருந்தன. அவற்றில் இன்னமும் பூக்கள் மலர்ந்திருந்தன.

'' இதோ பாருங்கள், எல்லாம் தயாராகி விட்டன. காஃபியும், ரொட்டி வறுவலும் தயார் செய்திருக்கிறேன். ஏதாவது சாப்பிட்டு விட்டீர்களானால் உங்களுக்கும் உற்சாகம் வந்துவிடும்'' என்றாள் ரோனா.

'' நான் காலையில் ஒன்றும் சாப்பிடவில்லையென்று எப்படி நீ நினைத்தாய் ?'' என்று புன்முறுவலிடையே வினவியவாறு, அடுக்களைக்குச் சென்ற ரோனாவைத் தொடர்ந்தான் ஸ்காட்.

'' நீங்கள் வேளா வேளைக்குச் சாப்பிட்டு, உங்களைக் [illegible]னித்துக் கொள்வதில்லையென்று எனக்குத் தெரியாதா ?''

அவன் அவளைத் தன் கைகளில் தாங்கிக் கொண்டு முத்தமிட்டான். ''அன்பே, உன்னைக் கண்டாலே என் உள்ளம் துள்ளுகிறது. இந்த மழை நாள்கூடப் புதுமையாக இருக்கிறது.''

"வேடிக்கைதான்...." என்ற ரோஹ, முட்டைகளைச் சமைக்க அடுப்பில் ஒரு பாத்திரத்தை வைப்பதில் முனைந்தாள்.

"எது வேடிக்கை?"

"நாம் ஒன்று சேர்ந்து விட்டால் எல்லாமே நன்றாகி விடுவது வேடிக்கைதானே? இப்படியே நாம் தனித்து விடப்படக் கூடாதா என்றுகூட எனக்கு ஆசை. நமக்குள் எல்லாம் சரியாகி விடுகிறது, இல்லையா?"

அவன் தலையை அசைத்து விட்டுப் புன்னகையுடன் கேட்டான்: "யார் நம்மைத் தனித்து விடவேண்டும்?"

"குறிப்பாக யாருமில்லை. வாழ்க்கையையேதான் சொன்னேன்." அவள் முட்டைகளை உடைத்து, அவற்றுடன் தண்ணீர், உப்பு, மிளகு முதலியவற்றைக் கலந்தாள். பிறகு பாத்திரத்தில் கொதிக்கும் வெண்ணெயில் அதை ஊற்றினாள். இறுதியில், திடீரென்று அவனை நெருங்கி, கன்னத்தில் முத்தமிட்டபடி, "உற்சாகப் படுத்திக் கொள்ளுங்கள், அன்பே!" என்றாள்.

"நேற்றிரவு உன்னைப் பார்க்க முடியாமல் போய்விட்டதற்கு மிகவும் வருந்துகிறேன். சென்ற வாரம் முழுவதுமே எனக்கு ஒழியவில்லை" என்றான் ஸ்காட். பிறகு தனக்குள், 'ரோஹ சொன்னது சரிதான். எங்களை மட்டும் தனியே விட்டால் எவ்வளவு இன்பம்! வாழ்வில் வேலைத் தொல்லைகளும் மற்றவர்களது தலையீடுந்தான் அதிகமாக இருக்கின்றன' என்று ஓடியது அவன் எண்ணம்.

"ஓ, ஸ்காட்.... நான் குறைபட்டுக் கொள்வதாக நினைக்காதீர்கள்..." என்ற ரோஹ 'சட்'டென்று நிறுத்திக்கொண்டாள். ஆனால் அவள் விழிகளிலிருந்த சிரிப்பு மறைந்துவிட்டது.

"நீ குறைபட்டுக் கொள்ளவில்லைதான்; ஆனால் சில விஷயங்களில் நமக்குள் சிறிய ஏமாற்றங்கள் ஏற்படுவதையும் நீ விரும்ப முடியாது. எனக்குந்தான் அது பிடிக்கவில்லை."

"அதை நான் அறிவேன்."

"நேற்றிரவு நீ என்ன செய்தாய்?"

"கொஞ்சம் துணிகளை வெளுத்தேன். பிறகு கட்டடக் கலைப் பரீட்சைக்காகப் படித்துக் கொண்டிருந்தேன்." ரோஹ தன் குரலை மலர்ச்சியுடன் ஒலிக்கச் செய்ய முயன்றாள்.

"பட்டம் பெறுவதில் இன்னமும் அக்கறையுடன்தானிருக்கிறாயா?" என்று வினவினான் அவன்.

"ஏன் அக்கறையுடன் இருக்கக் கூடாது? தவிர, படிப்பைப் பாதியில் நிறுத்தலாமா? ஒருவேளை, குடும்பத்தில் ஒரு கட்டடக் கலை நிபுணர் இருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையானால் சொல்லிவிடுங்கள்."

"அப்படியிருப்பதும் நல்ல உதவிதான்!" என்று சிரித்துவிட்டு, உணவுத் தட்டுக்களைக் கூடத்திற்கு எடுத்துச் சென்றான்

ஸ்காட். ரோஞ தன் முன் துணியை எடுத்துவிட்டு, காஃபியையும் ரொட்டியையும் சுமந்து வந்தாள்.

" ஒரு நாள் நமது சொந்த வீட்டிற்கு நானே நகல் தயார் செய்வேன். அதற்குப் பிறகு நாம் வீடு தேடி அலைய வேண்டியதில்லை. உங்களை அயர்த்தி வீழ்த்தும்படி உங்களுக்கு ஓர் ஆபீஸ் அறையைத் திட்டம் போட்டுக் கொடுப்பேன் !"

அவர்கள் சாப்பிட அமர்ந்தார்கள்.

"அது இருக்கட்டும். இப்போது என்ன வாடகையில் எந்த மாளிகையைப் பார்த்திருக்கிருய்?" என்று வினவினன் ஸ்காட்.

"முதலில் காஃபியைக் குடித்து முடிப்போம். பிறகு பேசிக்கொள்ளலாம்" என்று மகிழ்ச்சி துளும்பும் குரலில் கூறிய ரோஞ, முன்னுள் ஐந்தாவது அவென்யூவில் நடந்த அணிவகுப்பைப் பற்றிப் பேச ஆரம்பித்தாள். எனினும் தான் முயற்சி செய்த ஒரு சில விடுதிகள் கிட்டிவராது போய்விடும்போலிருக்கிறதே என்று அவள் தனக்குள் நினைத்துக் கொண்டிருந்தாள். ஒரு வேளை நகரின் படுகைப் பிரதேசத்தில்தான் வசிக்க வேண்டி நேருமோ என்னவோ? ஆனல், மான்ஹாட்டனிலிருந்து வெகு தொலைவில் வசித்தால், வீட்டை விட்டு அதிக நேரம் வெளியே இருக்க நேரிடுமென்று முன்பே ஸ்காட் சொல்லியிருந்தான். அவனுக்கிருக்கும் வேலையில், ஒவ்வொரு வாரமும் பல இரவுகள்கூட நகரிலேயே தங்கவேண்டியிருக்குமென்றும் கூறியிருந்தான். அதனல் ரோஞ படுகைகளில் வீடு வேண்டாமென்று ஒப்புக்கொண்டாள்.

" ஆமாம், 'ட்ரெண்டு' எப்படியிருக்கிறது?" என்று திடீரென்று வினவினன் ஸ்காட்.

" நன்ருகவே ஓடுகிறது. அங்கே பெரிய சேதி என்னவென்ருல், மிஸ். கட்மெனுக்கு நிச்சயதார்த்தம் ஆகியிருக்கிறது. செயின்ட் லூயிஸ்ஸில் வசிக்கிருள் அவள்."

" ஹேடன் திரும்பி வந்து விட்டான் என்று கேள்விப்படுகிறேனே !" என்ருன் ஸ்காட் சாதாரணமாக.

" ஆமாம்....சுமார் இரண்டு வாரங்களாகின்றன" என்ருள் ரோஞ, அவனைப் போலவே சாதாரணமாக.

" உனக்கு ஏதாவது தொல்லை கொடுக்கிருஞ அவன் ?"

ரோஞ திடுக்கிட்டவளாய் அவனை நிமிர்ந்து நோக்கினுள்; பிறகு சிரிப்பிற்கிடையில், " ஓ....ஸ்காட் ! அவரை நான் அநேகமாகப் பார்க்கவேயில்லை. ஒரே ஒரு தடவை 'லிஃப்டி'ல் சந்தித்தேன். அவருடைய ஆபீஸ் வேறு மாடியில் இருப்பது உங்களுக்குத் தெரியுமே !" என்ருள்.

ஸ்காட் இன்னமும் கலக்கத்துடனேயே காணப்பட்டான்;

ரோஞ சொன்னுள்: "உண்மையைக் கூற வேண்டுமானல்,

அவர் என்னை ஒதுக்க முயல்வதாகவே தெரிகிறது. உங்களுக்கு அது கேலியாகக்கூடத் தோன்றும்.''

''அப்படி யொன்றுமில்லை. ஆனால் அவன் ஏன் இங்கே திரும்பி வந்திருக்கிறான்?''

''ஸ்காட், ஜெர்மனியில் அவர் தன் பங்குக்குச் சேவை செய்துவிட்டார். ஆதலால் ராணுவத்தில் நிரந்தரமாகவே இருந்திருக்க வேண்டுமென்று எதிர்பார்க்க முடியுமா?''

''ராணுவந்தான் அவனுக்கு ஏற்ற இடம். எனினும் அவன் ஏன் மீண்டும் 'ட்ரெண்டி'ல் சேரவேண்டும்?'' கோபத்துடன் வினவினான் ஸ்காட்.

''நான் இன்னும் ஐந்து மாதங்களுக்கு அங்கே இருக்கப் போகிறேன் என்பதற்காக, அவர் தமது பழைய வேலைக்குத் திரும்பக்கூடாதா? உங்கள் பேச்சு அர்த்தமற்றது.''

''அவனுடைய துணிச்சல் எனக்குப் பிடிக்கவே இல்லை. அவன்மீது எனக்குத் துளிக்கூட நம்பிக்கையில்லை'' என்று ஸ்காட் கசப்புடன் கூறினான்.

ரோனு சிரித்துக்கொண்டே சொன்னாள்: ''இது எனக்குப் புகழ்ச்சிதான். ஆனாலும் நீங்கள் வீண் வேதனைப்படவேண்டாம். அவர் இப்போது முன்போல் இல்லை. ஒரு சிறந்த உதவி ஆசிரியர்.''

''பிளாக்வொர்த்தை விடவா?''

''நிச்சயமாக, அவரைப் போலவே சிறந்தவர்தான்!'' என்றாள் ரோனு. அவரைவிடப் பால் சிறந்தவர் என்ற உண்மையைக் கூறுவது நல்லதில்லை என்று அவளுக்குத் தோன்றியது. அவர் வேலைக்குத் திரும்பவேண்டுமென்று எத்தனை எழுத்தாளர்கள் ஆசைப்பட்டார்கள்! ரோனு தொடர்ந்தாள்: ''பால் அநுதாபம் மிக்க ஆசிரியர் என்றுதான் ஆபீஸ் முழுவதிலும் பேசிக்கொள்ளுகிறார்கள்.''

''அவன் தன் முன்னேற்றத்திற்காக வேகமாக வேலை செய்து வருகிறான்'' என்றான் ஸ்காட் வெறுப்புடன்.

''அவருக்கு வேலை தெரியும். பிரசுரத் தொழிலிலே எப்போதுமே அவருக்குப் பல நண்பர்கள் உண்டு. உண்மையில் அவருக்குத் தன் கடமைகளைச் செய்வதில் ஒரு களிப்பு உண்டு. ஒருவேளை அதனால்தான் அவர் தமது வேலையில் சிறந்து விளங்குகிறாரோ என்னவோ?''

ஸ்காட் வாயை இறுக மூடிக்கொண்டு மௌனமானான்.

ரோனுவுக்கு, எங்கே சாதுரியமில்லாமல் பேசிவிட்டோமோ என்ற உணர்வு மேலிட்டது. ஆனால் ஸ்காட்டுக்கு செய்திப் பத்திரிகை வேலையில் உற்சாகமில்லாததை மட்டும் அவள் ஏனோ நினைக்கவில்லை: அவள் சொன்னாள்: ''இதோ கடைசியாக ஒரு 'கப்' காஃபி, அன்பே! ஆமாம்.....வீடு விஷ

யம் பற்றி இந்த வாரத்தில் ஏதாவது முயற்சி செய்தீர்களா?'' ஸ்காட்டை வேதனையில் ஆழ்த்திவிட்டதற்காக வருந்தும் போதெல்லாம், அவளுக்குத் தன் மீதே கோபம் வந்துவிடுகிறது. அதை அடக்கிக்கொள்ள முயன்றாள் ரோனு. தொட்டால் சுருங்கியாக உணர்வோடு இருப்பது நல்லதுதான். ஸ்காட்டைப்போல் அவளும் உணர்ச்சி வசப்பட்டு விடுகிறாள். ஆனால் அதற்கென்று எங்கே தவருகப் பேசிவிடுவோமோ என்று அஞ்சிக்கொண்டே இருந்தால் அவர்கள் வாழ்வு எப்படி இனிக்கும்? அவள் வேண்டுமென்றே ஸ்காட்டை நோக அடிப்பதில்லை என்று அவனுக்கும் தெரியும். அப்படியிருந்தும் ஏன் அவன் அவளது பேச்சுக்களை அப்படியே விட்டுவிடுவதில்லை? ரோனுவின் பார்வை மேஜைத் துணியின் மீது பதிந்தது. திடீரென்று தன் கண்களில் சுடர் விடும் நீர்முத்துக்களை அவன் பார்த்துவிடக்கூடாது என்று அவள் விரும்பினாள்.

ஸ்காட் வீட்டு வேட்டையைப் பற்றிப் பேசலானான். அவளைப் போலவே அவனும் மிகவும் சோர்ந்து காணப்பட்டான்.

கடைசியில் ரோனு எழுந்து, தட்டுக்களை எடுத்துவைத்துக்கொண்டே சொன்னாள்: ''இதற்காக நாம் கவலைப்பட வேண்டாம். வீடு தேடுவது என்பது ஒரு பெரிய வீரச்செயல் மாதிரித்தான். மோசமான வீடுகளைக் காண நேரும்போது நாம் சிரிக்கலாம்; நமது சக்திக்கு மீறிய அழகான வீடுகளைக் கண்டால், என்றைக்காவது ஒரு நாள் நாம் அதைப்போன்ற வீட்டில் வசிக்க வேண்டுமென்று திட்டங்கள் போட்டுக்கொள்ளலாம்.''

''ஏன் நமக்கு இப்போதே ஒரு நல்ல வீடு நியாயமான வாடகையில் கிடைக்கவில்லை?'' என்று கேட்டான் ஸ்காட்.

அவள் தன் அறையைச் சுற்றி விழிகளை ஓடவிட்டாள். ''எந்த விடுதியையும் நாம் நல்லதாகச் செய்துவிட முடியுமென்றே நினைக்கிறேன். கொஞ்சம் சிந்தித்து வேலை செய்தால் போதும்.''

''கொஞ்சம் பணமும் கூடத் தேவை'' என்றான் ஸ்காட்.

''நீங்கள் நினைப்பதைவிடக் குறைந்த பணமே போதும், ஸ்காட். நான் முதன் முதலில் இந்த விடுதியை எடுத்துக்கொண்டபோது, அது இருந்த நிலைதான் உங்களுக்குத் தெரியுமே! உண்மை இதுதான்: எவ்வளவுக்கெவ்வளவு அதிக யோசனையுடன் செயல்படுகிறோமோ, அவ்வளவிற்குச் செலவு குறைவு.''

''அது சரிதான். நீ சொல்வதை நான் ஒப்புக்கொள்கிறேன். மெய்யாகவே நீ இந்த விடுதியை அழகாகத்தான் செய்திருக்கிறாய்'' என்று கூறி முறுவலித்த ஸ்காட், அவளது இடுப்பைக் கையினால் சுற்றி அணைத்துக்கொண்டு, பின் கழுத்திலே

முத்தமிட்டான். மறுகணம், அவள் தலையைத் திருப்பி, ''ரோஜு, நீ தலைமயிரை வெட்டிக்கொண்டிருக்கிறாய் போலிருக்கிறதே!'' என்றான்.

''கொஞ்சம் வெட்டிக்கொண்டேன். உங்களுக்குப் பிடித்திருக்கிறதல்லவா?''

''ஓ! நன்றாக இருக்கிறது. ஆனால் வெட்டிக்கொள்ளப் போவதாக என்னிடம் நீ கூறவில்லையே?''

''இது அத்தனை முக்கியமான விஷயமா, என்ன?'' என்று ரோஜு அவனை முத்தமிட்டாள். பிறகு திடீரென்று அடுக்களைப் பலகணியைச் சுட்டிக் காட்டி, ''இதோ பாருங்கள், மழை நின்றிருக்கிறது. அதிருஷ்டந்தான். நான் தயார் செய்து கொண்டு வருகிறேன். வெளியே போவோம். ஆனால் முதலில் எங்கே போவது?'' என்று வினவினாள்.

அவன் மூன்று முகவரிகள் இருந்த ஒரு ஜாபிதாவை வெளியே எடுத்தான். ''நான் காரைக் கொண்டு வந்திருக்கிறேன். எனவே சீக்கிரம் போய்வரலாம்.''

''என்னிடங்கூட ஒரு ஜாபிதா இருக்கிறது'' என்று கூறிவிட்டு படுக்கையறைக்குள் நுழைந்தாள் ரோஜு. அங்கிருந்து புதிதாகச் சலவைச் செய்யப்பட்டிருந்த கையுறைகளையும், கைக்குட்டையையும் எடுத்துக்கொண்டுவந்தாள். பிறகு கடைசியாக ஒரு முறை கண்ணாடியில் தன்னைப் பார்த்துக்கொண்டு, ''வாருங்கள் போவோம்'' என்றாள். ஸ்காட்டும் மலர்ந்த புன்முறுவலுடன் அவளைத் தொடர்ந்து ஹாலுக்குள் நுழைந்தான். அங்கே டெலிபோன் மேஜையண்டை இருந்த கண்ணாடி முன் நின்ற ரோஜு அவனையும் தன் பக்கத்தில் இழுத்துக் கொண்டு, ''பாருங்கள்!'' என்றாள்.

அவன் அவள் கன்னத்தில் முத்தமிட்டான். ''நாம் இருவரும் சேர்ந்து அழகாகத்தானிருக்கிறோம்.''

அவள் அவனைக் கட்டிக் குலுக்கினாள். ''நாம் அநேகமாகக் கல்யாணம் செய்துகொண்ட தம்பதி மாதிரித்தான். எனவே, இனிமேல் எதிலும் தீவிரமாகவும், சிக்கனமாகவும் இருக்க முயலவேண்டும். ஓ, ஸ்காட், இன்று நாம் மிகவும் வேடிக்கையாகப் பொழுதைக் கழிக்க வேண்டும்.''

அவன் தலையை அசைத்தான். ரோஜுவின் பக்கத்தில் இருந்துகொண்டு, மற்றவைகளையெல்லாம் மறந்திருக்கும் இந்த ஒரு சமயத்தில்தான் தனக்கு மகிழ்ச்சி கிட்டுவதாக அவன் நினைத்தான். ஆனால் ரோஜு மட்டுமே அவனுடைய வாழ்வில்லை. வாழ்க்கை யென்பது கனவு காணக்கூடியதில்லை; எதிர்நோக்கிச் சமாளிக்கப்படவேண்டியது அது. அவன் சுளித்த முகத்துடன் ரோஜுவுடன் மௌனமாக மாடிப் படிகளில் இறங்கினான்.

அவர்கள் தெருவை அடைந்ததும், என்ன தவறு நேர்ந்து விட்டது என்ற வியப்புடன் ரோனு அவனை ஒரு தடவை பார்த்தாள். அவனுடைய உள்ளத்து மகிழ்வெல்லாம் எங்கோ பறந்து போய்விட்டது.

சுமார் ஐந்து மணிக்கு, லெக்ஸிங்டன் அவென்யூவிற்கும், க்ராமர்ஸி பார்க்குக்கும் அருகில் இருந்த ஒரு தெருவில் அவர்கள் காரை நிறுத்தினார்கள். 'டைம்ஸ்' பத்திரிகையின் விளம்பரங்களை மீண்டும் ஒரு தடவை பார்த்த ஸ்காட், ''காலியுள்ள இடங்கள் இவ்வளவுதான் போலிருக்கிறது. நாம் இன்று இந்த நகரம் முழுவதையுமே சுற்றிவிட்டோம்'' என்றான்.

''எண்பதாவது மேற்குத் தெருவில் பார்த்த இடம் அவ்வளவு மோசமில்லை. உண்மையில் அதை நாம் நன்றாகத் தோன்றும்படி மாற்றிவிடலாம்'' என்றாள் ரோனு.

''ஆனால் இப்போது அது நரகம் மாதிரியே இருக்கிறது. இன்று நாம் கடைசியாகப் பார்த்த விடுதிதான் சுமாராக இருக்கிறது. ஆனால் அதற்கு வாடகை மாதம் நூற்று அறுபத்தைந்து டாலர்கள்!'' என்ற அவன், கையிலிருந்த பத்திரிகையைக் காருக்குள் தூக்கி எறிந்தான்.

ரோனு மௌனமாக இருந்தாள்.

''நம்மால் எண்பது டாலர்களுக்கு மேல் கொடுக்க முடியாது. எனவே அந்த விடுதியை மறந்துவிடலாம்.''

''அப்படியானால் மான்ஹாட்டனுக்கு வெளியே ஓர் இடத்தைப் பார்க்க வேண்டியதுதான்'' என்றாள் ரோனு.

அவன் காரைக் கிளப்பினான். மேலே வாதம்புரிய இயலாமல் களைத்துப் போயிருந்தாள் ரோனு. ஸ்காட் மட்டும், தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று இல்லாமல் இருந்தால்......

நகரத்தின் நடுப்பகுதி வழியே அவர்கள் மௌனமாகக் காரில் சென்றார்கள். பிறகு பார்க் அவென்யூவிற்குள் காரைச் செலுத்தினான் ஸ்காட்.

''என் சம்பளம் முழுவதையுமே வாடகையாகக் கொடுத்தால், இங்கே நமக்கு இடம் கிடைக்கலாம்'' என்றான் ஸ்காட் மனக்கசப்புடன்.

தம்மால் முடியாத காரியத்தைப்பற்றி ஏன் பேசவேண்டும் என்று நினைத்தாள் ரோனு. தவிர, கல்யாணம் ஆனதும் இங்கே குடித்தனம் போடுபவர்கள் ஒரு சிலர்தாமே!

ஸ்காட் தொடர்ந்தான்: ''இன்னும் இருபது வருஷங்களுக்கு நான் வேலை பார்த்தால்கூட, இங்குள்ள மாதிரி ஓர் இடத்தில் வசிக்க எனக்குச் சக்தி இருக்காது.''

''இந்த இடம் யாருக்கு வேண்டும், ஸ்காட்? எனக்கு அப்படியெல்லாம் ஆசையில்லை.'' ஆனால் 'ஸ்காட் ஏன் இப்படிப் பேசுகிறார்? வாழ்வு முழுவதும் அவர் இந்த சம்பளத்தில்தான் இருக்கப் போகிறாரா? எதற்காக அவர் இப்படிப் பேசித் தன்னை நோக அடிக்கிறார்?' என்று நினைத்துக்கொண்ட போது ரோனாவுக்குத் தன்மீதே கோபம் வந்தது; ஸ்காட்டின்மீதும், இந்தப் பார்க் அவென்யூவின் மீதுங்கூடக் கோபம் வந்தது.

''எனக்கும் அப்படி ஆசையில்லை'' என்ற அவன், தெருவில் நெரியும் ஞாயிற்றுக்கிழமைக் கூட்டத்தை நோக்கித் தலையை ஆட்டினான். ''இதோ அவர்களைப் பார்! அதிகமான உடைகள் அணிந்து, அதிகமாகப் பருத்த பார்க் அவென்யூ வாசிகளைப் பார்!—''

''ஸ்காட்!'' என்று கூவிய ரோனாவும் சிரிக்க முயன்றாள். ஒருவேளை ஏழ்மையான உடைகளை அணிந்த அரைப் பட்டினிக்காரர்களைக் காணத்தான் ஸ்காட்டுக்குப் பிடிக்குமோ? ''இவர்கள் எல்லாம் இங்கே வசிப்பவர்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்? இதோ அந்தக் காரைப் பாருங்கள்! அதில் நியூ ஜெர்ஸி என்று பெயர்ப் பலகை இருக்கிறது. நியூயார்க்கின் இத்தனித்த தன்மை எனக்குப் பிடிக்கிறது. இங்கே தெருவில் பார்க்கும் ஜனங்களை, அவர்களுடைய உடைகளிலிருந்து எங்கே வசிக்கிறார்கள் என்றோ, என்ன சம்பாதிக்கிறார்கள் என்றோ கூறிவிட முடியாது.''

தெருக் கூட்டத்தைக் கவனித்துக் கொண்டிருந்த ஸ்காட் பதில் கூறவில்லை.

''அந்த நியூ-ஜெர்ஸிக்காரர்கள் இந்த அழகிய சின்னக் காரில் நாம் அமர்ந்திருப்பதைப் பார்த்துவிட்டு நம்மைப்பற்றியும் ஏதாவது ஊகிக்கலாம் அல்லவா? நம்மைப் பணக்காரர்கள் என்று அவர்கள் வெறுத்தால் நமக்கு அது வேடிக்கையாக இருக்கும், இல்லையா?''

ஸ்காட் பதிலொன்றும் கூறாமல் கைகாட்டி விளக்கு பச்சையாக மாறுவதற்காகக் காத்திருந்தான்.

ரோனா திடீரென்று சற்றுக் கடுமையான குரலிலேயே ''உற்சாகமாக இருங்கள் ஸ்காட்! நமக்கு அழகான ஒரு கார் இருக்கத்தான் இருக்கிறது; அதற்குச் சமமாக நல்ல விடுதி இல்லாவிட்டால் பரவாயில்லை'' என்றாள்.

அவளுடைய பேச்சின் கூர்மை ஸ்காட்டின் மௌனத்தை வெட்டியது. ''ரோனா!'' என்று அவன் கூவினான். எல்லாப் பெண்களையும்போல் அவளும் பேச்சில் புதுக் காரைப்பற்றிப் புகுத்துவதாக அவன் எண்ணினான். அவனுக்கு இந்தக்கார்

தேவையாக இருக்கிறது. இது வீண் செலவில்லை. அவர்கள் இருவரும் இதை உபயோகித்து மகிழப் போகிறார்கள். அதை ஏன் அவன் உணரவில்லை?

ரோஜு வருத்தத்துடன் வினவினாள்: ''ஸ்காட், பணத்தைப்பற்றி உங்களுக்குக் கவலையாக இருந்தால், நமது கல்யாணத்திற்குப் பிறகும் சிறிது காலம் நான் வேலை பார்ப்பதை ஏன் நீங்கள் அநுமதிக்கக்கூடாது?''

''நான் ஒன்றும் பணத்தைப் பற்றிக் கவலைப்படுபவன் இல்லை.''

''நீங்கள் கவலைப்படுகிறீர்கள். ஆனால் அதை மறைக்கிறீர்கள். இந்த வேதனையால் நீங்கள் உள்ளூரக் கசந்துகொண்டு எல்லாவற்றையும் பாழ்படுத்தி விடுகிறீர்கள். வாழ்க்கையை இப்போது நாம் அநுபவித்தால்தான் உண்டு; அதைப் பாழ் படுத்திக் கொள்ளக்கூடாது'' என்று சொன்ன ரோஜுவுக்கு அழுகையே வந்துவிட்டது.

''ஒன்றும் இப்போது பாழாகிவிடவில்லை.'' அவன் அழுத்தமாகக் கூறினான்.

அவள் அவனை வெறித்து நோக்கினாள். தான் அடிக்கடி செய்யும் கண்டனங்கள் அவனைப் பாதிக்கின்றன என்பதை அவன் உணருவதாகத் தெரியவில்லையே? முன்பெல்லாம் அவன் கூறுவதைக் கவனத்துடன் அவள் கேட்டதுண்டு. எல்லாவற்றையும் அவன் தெளிவாய்க் காண்பதாக அவளுக்கு ஒரு நினைப்பு. ஆனால் போகப் போகத்தான் அவனுடைய கருத்துக்கள் ஒருபட்சமாக இருப்பது தெரிகிறது. ''எல்லா விஷயங்களையும்பற்றி நீங்கள் இப்படிப் பொதுவாக விமரிசனம் செய்வதை நிறுத்திக்கொள்ள வேண்டும், ஸ்காட். சில சமயம் உங்கள் பேச்சு, யாரோ வெளிநாட்டு மனிதன் ஒருவன் திடீரென்று அமெரிக்காவைப் பற்றிய தவறான முடிவுக்கு வந்து விடுவதுபோல் இருக்கிறது. நிதானமாக எல்லாவற்றையும் ஆராய்ந்து பாருங்கள்.''

அவன் அவளைப் பார்த்தான். ''நீ மிகவும் களைப்புற்றிருக்கிறாய். ஏதாவது பானம் அருந்திவிட்டுச் சாப்பிடுவோம். பிறகு பிராட்வேயில் ஒரு சினிமாவுக்குப் போவோம். அல்லது ஏதாவது காட்சி ஒன்றுக்குச் செல்வோம். என்ன?'' அவன் குரல் தணிவாக இருந்தது. சமாதானப்படுத்துவதற்கு அவன் கையாளும் வழி இது.

திடீரென்று அவர்கள் ஐம்பத்து ஒன்பதாவது தெருவைக் கடந்துவிட்டதை உணர்ந்த ரோஜு, ''என்னுடைய தெருவைத் தாண்டிவிட்டோமே, ஏன்?'' என்று வினவினாள்.

''உன்னை நான் ஒரு பார்ட்டிக்கு அழைத்துச் செல்கிறேன். நம்மை உற்சாகப்படுத்திக் கொள்ள அது உதவும்.''

''ஆனால் 'பார்ட்டி'க்கு ஏற்றபடி நான் உடையணிந்து வரவில்லை.''

''நீ இந்த உடையிலேயே அழகாகத் தானிருக்கிறாய். தெல்மா இன்று பெரிய பார்ட்டி ஒன்று கொடுக்கிறாள். உன்னையும் அழைத்து வரவேண்டுமென்று கடந்த ஒரு வாரமாக என்னை டெலிபோனில் அரித்துக்கொண்டிருந்தாள்.''

''தெல்மா......தலையில் திராட்சைக் குலைகளை வைத்திருந்தவள்தானே?''

ஸ்காட் சிரித்துக்கொண்டே ''நீ அசல் பெண்ணாகவே பேசுகிறாய்!'' என்றான் அன்பு ததும்ப.

''ஆனால் அவளை எனக்குத் தெரியாதே? மர்ரே அவளை நமது பார்ட்டிக்கு அழைத்து வந்தபோது ஒரே ஒரு தடவை தான் பார்த்திருக்கிறேன்'' என்றாள் ரோனா. 'எனக்கு மர்ரேயையும் பிடிக்கவில்லை' என்று தனக்குள் நினைத்துக்கொண்டாள்.

''அவள் ஒரு மாதிரியானவள். ஆனால் அவள் எப்படியோ தன் பார்ட்டிகளுக்குப் பிரபலமானவர்களையெல்லாம் கொண்டு வந்து விடுவாள் என்று கேட்டிருக்கிறேன். அங்கே போனால் வேடிக்கையாக இருக்கும்.''

''அங்கே மர்ரேயும் இருப்பானோ?''

''எல்லோரும் அங்கேயிருப்பார்கள்.''

''மர்ரே உங்களுடைய நண்பனா?''

''அவனை எனக்குத் தெரியும், அவ்வளவுதான்.''

''அவன் நிகோலஸ் ஆர்பெனின் நண்பனில்லையா?''

''அப்படியா? இருக்கலாம். எனக்குத் தெரியாது. சரி இந்த வீடுதான், காரை நிறுத்தக்கூட இடம் இருக்கிறது'' என்றபடி ஸ்காட் காரை ஓரமாக நிறுத்தினான்.

நிமிர்ந்து அக்கட்டடத்தைப் பார்த்த ரோனா பதில் சொல்லக்கூட முடியாதபடி அயர்ந்து போனாள். அதாவது பார்க் அவென்யூவிலேயே வசிக்கிறாள் தெல்மா. அப்படியானால், இங்கே வசிப்பவர்களைப் பற்றியெல்லாம் வெறுப்புடன் பேசிய ஸ்காட் தெல்மாவின் பார்ட்டிக்கு மட்டும் ஏன் செல்கிறான்? ரோனா அசைவற்று அமர்ந்தாள். ''இந்த நேரத்தில் பார்ட்டிக்குச் செல்ல எனக்கு ஆசையே இல்லை. உண்மையைச் சொல்ல வேண்டுமானால்—''

''அன்பே, நீ அழகே வடிவாக இருக்கிறாய். இந்தப் பார்ட்டியில் நீதான் சிறந்த அழகியாக விளங்கப் போகிறாய்!''

''அதற்காக நான் சொல்லவில்லை.''

''சும்மா வா, ரோனா! சிறிது நேரம் வேடிக்கையாக இருப்போம்.'' ஸ்காட் முறுவலுடன், அவளை மெதுவாகப் பற்றி இழுத்தான்.

அவள் காரிலிருந்து இறங்கினாள். கைகோத்தபடியே அவர்கள் தெல்மாவின் விடுதியை நோக்கி நடந்தார்கள்.

''மர்ரேயையும் ஆர்பெனையும் பற்றி நீ எங்கே கேள்விப் பட்டாய்? ஆபீஸ் வம்பு தானே?'' என்று வினவினான் ஸ்காட் அவசரமாக.

''உண்மையில், பெக்கியின் வீட்டில்தான் நான் கேட்டேன். அன்றைக்கு என்னை அழைத்துப் போக நீங்கள் வராதது நினைவில்லையா? அன்றிரவு அங்கே யாவரும் பேசிக்கொண்டிருந்தார்கள். நான் உங்களுடன் டெலிபோனில் பேசிவிட்டுத் திரும்பியபோது அப்பேச்சுக்களின் கடைசிப் பகுதியைத்தான் கேட்க முடிந்தது. மர்ரேக்கும் ஆர்பெனுக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறினார்கள். ஸ்காட், ஆர்பென் ஒரு கம்யூனிஸ்ட் என்று உங்களுக்குத் தெரியாதா?''

''ஒரு சமயம் அவன் கம்யூனிஸ்டாக இருந்தான். ஆனால் இப்போது அவனுக்கும் அரசியலுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்று நான் திட்டமாகக் கூற முடியும்.''

''ஸ்காட், இதைப் பற்றி உங்களிடம் நான் சொல்ல முடியாமல் வேதனைப் பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால்—'' ரோனு தயங்கினாள். பிறகு அவள் கண்ணாடிக் கதவுகளண்டை நின்ற 'லிஃப்டு'க்காரனைக் கண்டதும் மௌனமாகி விட்டாள்.

''ஊரில் 'லிஃப்டு'க்காரர்களின் வேலை நிறுத்தம் நடக்கிறதே நீ சேரவில்லையா?'' என்று அவனைக் கேட்டான் ஸ்காட்.

''இந்த வீட்டுக்கார்கள் தகராறைத் தீர்த்து விட்டார்கள்'' என்றான் அவன்.

ஸ்காட் ரோனுவைப் பார்த்து முறுவலித்தான். ''நல்ல வேளை. நாம் படிகள் ஏறச் சிரமப்பட வேண்டாம்.'' சாம்பல் நிற விரிப்போடு கூடிய அகன்ற தாழ்வாரத்தின் வழியே ரோனுவை அழைத்துச் சென்றான் அவன். உள்ளே முற்றத்தை நோக்கியிருந்த சாளரங்களில் சிவப்பு ரோஜாப் பூக்களோடு கூடிய 'ஸாட்டின்' திரைச் சீலைகள் படபடத்துக் கொண்டிருந்தன. சிவப்பு நாற்காலிகளும், பச்சை நிறச் சோபாக்களும் வரிசையாகக் கிடந்தன. கறுப்பான மேஜை ஒன்றின் மீது பெரிய பூத்தொட்டி ஒன்று இருந்தது.

''எதைப் பற்றிச் சொல்ல முடியாமல் நீ வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாய்?'' என்று, நீண்ட கூடத்தின் வழியே செல்லும்போது ஸ்காட் வினவினான்.

''ஆர்பெனைப் பற்றி. அவனுக்கு எதிராக நான் எவ்வளவோ கேள்விப்பட்டிருக்கிறேன்.''

''இதைப் பற்றி முன்பே நீ ஏன் சொல்லவில்லை?''

''உண்மையில், எப்படிச் சொல்வதென்று புரியாமல்தான் தவித்துக் கொண்டிருந்தேன். உங்களுக்கு அவனைப் பிடிக்கிறது இல்லையா?''

''அவளைப் பற்றி யார் பேசினார்கள்?'' என்று வினவிய ஸ்காட் அவள் முழங்கையைப் பிடித்து, அருகிலிருந்த 'லிஃப்டு' ஒன்றை நோக்கி அழைத்துச் சென்றான்.

''திருமதி பர்லே, மன்ரோ காலேஜின் தலைவர்—ஆர்பென் அங்கிருந்து வெளியேறிய பின் இறந்து போனாரே—அவருடைய மகள்.''

''மொய்ரா பர்லே தானே? நல்ல வேளை, அன்றிரவு நான் அவளைக் காண நேரவில்லை'' என்ற ஸ்காட், லிஃப்டுக்காரன் பக்கம் திரும்பி, ''பதினான்காவது மாடி'' என்றான்.

''எனக்கும் அவளைக் குறிப்பாகப் பிடிக்கவில்லை'' என்று ஒப்புக் கொண்டாள் ரோனா.

''என் வாழ்வைப் பல வருஷங்கள் பாழ்படுத்தியவள் அவள். மொய்ரா வருவதைக் கண்டாலே மற்றக் குழந்தைகள் காத தூரம் ஓடிவிடுவார்கள். அவள் இன்னமும் அப்படியே தானிருக்கிறாளா? அன்பே, உனக்கு ஒரு புத்திமதி சொல்கிறேன்: அவள் கூறுவதில் பாதிக்கு மேல் நம்பாதே. அவள் ஒரு விசித்திரமான பிறவி. கடைசியாக அவளை நான் ஒரு கிறிஸ்துமஸ் பார்ட்டியில் பார்த்தேன். சொத்தைப் பல்லும், சிவப்பு 'சாட்டின்' செருப்புக்களுமாக இருந்தாள்.''

ரோனாவுக்குச் சிரிப்பு வந்தது. ''இதெல்லாம் உங்களுக்கு எப்படி நினைவிருக்கிறது?''

''அவளுடைய பாதங்களின் அளவை நீ கவனித்தாயா?''

''ஏன், நீங்கள் அவளுடன் நடனமாடுவதுண்டா?''

''அவளுடனா? ஊஹூம். அவள் என்னை நோக்கி வந்தால் தப்பி ஓடுவதற்குச் சௌகரியமாக நான் கதவின் பக்கத்தில் தான் நிற்பேன். குழந்தைப் பருவத்திலிருந்தே எங்களுக்குள் தகராறுதான். அவளிடமும், அவளுடைய குடும்பத்தினரிடமும் மரியாதையாக நடந்து கொள்ளும்படி என் அம்மா சொல்லி வருவாள். இதைப்பற்றி அவள் நிச்சயம் உன்னிடம் கூறியிருப்பாளே?'' முகத்தில் அசட்டுச் சிரிப்புடன் அவன் ரோனாவைக் கவனித்தான்.

''அவள் பெக்கியின் வீட்டுக்கு அண்மையில் வசிக்கிறாள்'' என்றாள் ரோனா, அவர்கள் 'லிஃப்டை' விட்டு வெளியே வரும் போது.

எதிரேயிருந்த கதவு மணியை அடித்துக் கொண்டே, ''பாவம், பெக்கி. அவளை நீ எச்சரித்து வை. ஆமாம்... ஜானும் பெக்கியும் எப்படி இருக்கிறார்கள்? ஜான் கூட ஓரிரு தடவைகள் எனக்குப் போன் செய்தாராம். ஆனால் நான்தான் எப்போதும் வெளியே சென்று விடுகிறேனே. சீக்கிரம் அவருக்கு நானே போன் செய்கிறேன்'' என்றான் ஸ்காட்.

அப் பெரிய கதவு திறந்தது. பணியாள் ஒருவன் அவர்களை உள்ளே நுழைய விட்டான். மீண்டும் ஓர் அகன்ற, ஆனால் ஒளி குன்றிய கூடம். அது வழியே சென்றதும் வளைவான வாசற்படியை உடைய ஓர் அறை. அங்கே பெரிய கூட்டம், சிறு சிறு குழுக்களாக நின்று கொண்டும், நிலையற்ற அலை மாதிரி அலைந்தவண்ணமும் இருந்தது. பக்கத்து அறைகளுக்குள்ளிருந்தும் பேச்சுக் குரல்களும், சிரிப்பொலியும் வந்த வண்ணமிருந்தன.

''நல்ல கூட்டந்தான்'' என்றான் ஸ்காட். அங்கிருந்த சைனாக் கம்பளங்களையும், ஸ்பானிஷ் மரச்சாமான்களையும், இத்தாலிய நாற்காலிகளையும் கண்ட ரோஜா, முட்டி வந்த முறுவலை மறைத்துக் கொண்டு, ஸ்காட்டின் கையை இறுகப் பற்றிக்கொண்டாள்.

''எல்லாம் வேடிக்கையாக இருக்குமென்று நான் சொன்னேனல்லவா? வா... தெல்மாவைப் பார்ப்போம். அவள் புத்தக அறையிலாவது, சங்கீதக் கூடத்திலாவது இருப்பாள்'' என்று தன் பார்வையை அக்கூட்டத்தின் மீது சுழற்றினான் ஸ்காட்.

அதே சமயம், முகத்தில் அகன்ற முறுவலுடன் கைகளை நீட்டி வரவேற்றபடி எதிரே வந்தாள் தெல்மா. தனது கருங் கூந்தலில் ஜரிகை ரிப்பன்களை அணிந்திருந்தாள் அவள்; நீளக் குறைவான கவுனின் மீது தங்க நிற பெல்ட் ஒன்று இறுகியிருந்தது. கால்களிலே பொன்னிறச் செருப்புக்கள்; அவளது பெரிய கால் கட்டை விரலில் நகம் பெயர்ந்து போயிருந்தது.

''உங்கள் இருவரையும் காண எனக்கு ஒரே மகிழ்ச்சி. என்ன அதிசயம்!'' என்று கூவியபடி அவர்களை வரவேற்றாள் தெல்மா.

அத்தியாயம் 10

தெல்மாவின் பார்ட்டிக்கு எல்லோருமே வந்திருப்பார்கள் என்று ஸ்காட் கூறியது உண்மைதான். பிரபலமான முகங்கள் சில அங்கங்கே தென்பட்டன — இரண்டு நடிகைகள், ஒரு கவிஞர், ஒரு சாகித்யகர்த்தா, இரண்டு நாவலாசிரியர்கள், ஒரு நாடகாசிரியர், மிகப் பிரபலமான ஒரு பத்திரிகையாளர். (ஆனால் அவர்கள் அதிக நேரம் தங்கவில்லையென்பதைக் கவனித்தாள் ரோஜா.) அங்கு வந்தோமென்பதைக்

காட்ட வேண்டுமென்பதற்காகவே வந்திருந்த அவர்கள், அது முடிந்ததும் புறப்பட்டுவிட்டார்கள். இவர்களைத் தவிர, பெயரைக் கேட்டதுமே புரிந்துகொள்ளக்கூடிய இரண்டாவது குழுவினர் சிலரும் அங்கே இருந்தனர். (அவர்கள் முன்னவர்களை விடச் சிறிது அதிகமாகத் தங்கினார்கள்.) சாப்பாட்டுக்காகக் காத்திருந்த மூன்றாவது குழுவினர் மட்டும் கேட்டறியாத புது நபர்கள். ஆனால் அவர்கள் ஒருவிதத்தில் மட்டும் ஒரே மாதிரி இருந்தார்கள். அதாவது ஸ்காட் வெறுத்துப் பேசிய அவென்யூ வாசிகளைப் போல அவர்கள் நல்ல உடைகளுடனும் ஊட்டமாகவும் காணப்பட்டனர்.

ரோனாவின் சோர்வைப் போக்க இப்பார்ட்டி உதவவில்லை. அவளுக்கு எல்லோர் மீதுமே, ஸ்காட்டையும் தன்னையும் உள்பட—அருவருப்பு. தனக்குப் பிடிக்காதவர்களின் பார்ட்டிகளுக்கு அவள் போவதே இல்லை. அந்த வழக்கத்தை மீறி இன்று வந்ததன் பலனை அவள் அநுபவித்துக்கொண்டிருந்தாள். ஸ்காட் இப்படிச் செய்தது நியாயமா? ஏன், அவளே கூடத் தான் அதிகம் மறுக்காமல் ஏதோ ஓர் ஆவலுடன் வந்திருக்கிறாள்! இங்கு மர்ரே இருப்பானேயாகில், நிகோலஸ் ஆர்பெனும்கூட இநக்கக்கூடும். அவன் இருக்கிறானென்று விடாது கவனித்து வந்தாள் ரோனா. ஆனால் அவனைக் காணவில்லை.

இந்த விடுதியில் எல்லாமே விசித்திரமாக இருந்தன. கொடூரமான சங்கீதம், பழங்கால மரச்சாமான்கள்; வெல்வெட் திரைச்சீலைகள், கீழ்நாட்டுக் கம்பள விரிப்புக்கள், முதலியவை பணத்தின் கொழிப்பைப் பொருத்தமற்ற முறையில் பறைசாற்றிக் கொண்டிருந்தன. இப்போது ரோனா ஒரு வழுக்கைத் தலைக்காரருடன் பேசிக்கொண்டிருந்தாள். இந்த அறையிலே இநப்பவர்களுக்குள் தான் ஒருவன்தான் வர்த்தகத்தில் ஈடுபட்டவன் என்று அவன் பெருமையுடன் சொல்லிக்கொண்டான். (தன்னை ஓர் எழுத்தாளன் என்றோ, நடிகன் என்றோ நினைத்து விடக்கூடாதே என்று அவன் கவலைப்படுவதாகத் தெரிந்தது) அவன் மட்டுமின்றி, யாவருமே மிக்க மரியாதையுடன்தான் நடந்துகொண்டார்கள். பெயர் தெரியாத அப் புது மனிதர்கள் யாவரும் ரோனாவின் பக்கமாக வந்த வண்ணமிருந்தனர். அவள் யாரென்பதை அவர்கள் முன்பே அறிந்திருக்கிறார்கள் என்றே தோன்றியது. அத்துடன் அதிகமான பேச்சு வார்த்தைகளும் நிகழ்ந்துகொண்டிருந்தன.

இது என்னவோ ரோனாவுக்குப் பிடிக்கவில்லை. ஏனெனில் அவர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிடுவதற்காகவே பேசுவது போல் தோன்றியது. ஒருவிதத்தில், ஏதோ வேலைக்காகப் பேட்டி காணப்படுபவளைப் போல்தான் அவள் உணர்ந்தாள்.

அங்கிருப்பவர்களுக்குப் பிடித்தமான முறையில் பதில் கூறும் போது அவர்களுடைய முகங்கள் மலர்ந்து முறுவலித்தன; எதற்காவது அவர்களுடைய கருத்துக்களுக்கு மாருனபடி பதில் சொன்னல், கேட்பவர்களின் முகங்கள் வெளுத்துச் சூன்யமாயின. ஒரு விசித்திரம் என்னவெனில், அங்கிருந்தவர்களுக்கெல்லாம் எதிலும் ஒரே மாதிரியான கருத்துக்கள். ஸ்காட்டை தெல்மா ஓர் ஓரமாக அழைத்துக்கொண்டு போய்விட்டதால், இவற்றையெல்லாம் ரோஞ தனிமையில் கேட்க நேர்ந்தது. அவர்கள் இப்படி யாவற்றையும் ஒரே கருத்துடன் கண்டது மட்டுமின்றி, எதையும் அரசியல் கோணத்திலேயேதான் நோக்கினர்கள். இவர்களைக் காண்பதற்குப் பதில் நான் ரஷ்யாவின் 'பிராவ்டா' பத்திரிகையைப் படிக்கலாமே' என்று நினைத்தான் ரோஞ.

பார்ட்டி வேடிக்கையாக இருக்கும் என்று ஸ்காட் சொல்லியிருந்தான். ஆனல் அவனுக்கு எல்லாம் கேலிக்கூத்தாகத் தான் இருந்தது. தெல்மா அழைத்து விருந்தளிக்கும் இவர்களெல்லாம் யார் என்று வியந்தான் ரோஞ.

இப்போது அந்த வழுக்கைத்தலை வியாபாரி மீண்டும் பேசினன். ஆசிரியர்களின் அரசியல் ஈடுபாடுகளைப் பற்றி நடக்கும் விசாரணையினல் கலாசாலைகளின் சுதந்திரத்துக்கு ஆபத்து வந்துவிட்டதாக அவன் வருத்தத்துடன் கூறினன். இதைக் கேட்டுக்கொண்டே சுற்றியிருந்தவர்களின் முகங்களையும், உடைகளையும் ஆராய்ந்தான் அவன். இவர்கள் எல்லாரும் கம்யூனிஸ்டுகளா? இல்லை, கம்யூனிஸ்ட் அநுதாபிகளா? [illegible]லும் அவர்களிடம் முதலாளித்துவத்தின் பிரதிபலிப்பு தென்படத்தான் பட்டது. அவர்கள் எல்லாருமே நல்ல ஊட்டமாக இருந்தார்கள். நல்ல உடைகளை அணிந்திருந்தார்கள். பிறகு, அவன் ஸ்காட்டைத்தேடி விழிகளைச் சுழற்றினன். அவன் கதவினருகே ஒரு கூட்டத்திலிருந்தான். கூட இருந்தவர்களுடைய முகக் குறிகளிலிருந்து, அவன் கருத்துவேற்றுமை எதுவும் இன்றிப் பேசுவதாகவே தெரிந்தது. ஆனல், தன் சொந்தப் பார்ட்டிகளின் போதும், பெக்கி நடத்திய பார்ட்டிகளின் போதும் கூட அவன் கவனித்திருக்கிருன்: ஸ்காட்டின் அரசியல் கருத்துக்கள் பெரும்பாலும் அவனுடைய கருத்துக்களோடு ஒத்துக் கொள்வதுண்டு. அப்படியானல் இன்று அவன் எப்படி இவர்களுடன் ஒத்துப்போகிருன்? 'அதெல்லாம் ஒன்றுமில்லை. இன்று எனக்குத்தான் பைத்தியம் பிடித்திருக்கிறது' என்று ஓடியது அவன் எண்ணம்.

''என்ன நான் சொல்வது சரிதானே?'' என்ருன் அந்த வழுக்கைத் தலை வியாபாரி.

''சரியா...?'' என்றாள் அவள் சங்கடத்துடன்.

''கலாசாலைகளில் உண்மையான தைரியத்துடன் முன் நின்று தங்கள் அரசியல் ஈடுபாடுகளை வெளியிட விரும்புகிறவர்களை நாம் ஆதரித்தால், பிறகு நமது சுதந்திரங்களைக் காப்பாற்றிக் கொள்ள ஒரு வாய்ப்புக் கிடைக்கும், இல்லையா?''

''ஆனால் ஓர் ஆசிரியர் தனது அரசியல் ஈடுபாடுகளை ஏன் மறைக்கவேண்டும்? நான் ஒரு டெமொக்ராட். இதை யார் தெரிந்துகொண்டாலும் எனக்குக் கவலையில்லை.''

''ஆனால் அதிலுள்ள அபாயங்கள்? இவையெல்லாம் நமது சொந்த அந்தரங்கங்களுக்கு விரோதம்!''

''சென்ற வாரம் ஜனசங்கியை எடுப்பவன் என்னிடம் கேள்விகள் கேட்டபோது, நான் டெமொக்ராட் என்பதற்கும் மேலாகப் பல விஷயங்களைச் சொன்னேன். அதே மாதிரி போன தடவை மெக்ஸிகோவிலிருந்து வந்தபோது, நான் அங்கிருந்து வாங்கி வந்த பொருள்களின் ஜாபிதாவைச் சுங்க அதிகாரியிடம் கொடுத்தேன். ஒருவிதத்தில் இதுவும் சொந்த அந்தரங்கத்துக்கு எதிரானதுதான்; ஆனால், ரௌடிகளிடமிருந்து நம்மைக் காத்துக்கொள்ள வேண்டுமானால் இவற்றைத் தவிர்க்க முடியுமா?''

அந்த மனிதன் முகத்தில் அசடு வழிந்தது. அவன் ஒரு சூன்யமான புன்னகை பூத்தான். பிறகு நகரத்தின் குடிநீர் பற்றாக்குறையைப் பற்றிச் சுருக்கமாகப் பேசிவிட்டு நகர்ந்தான்.

தனித்துவிடப்பட்ட ரோஜாவிடம், ''உன்னை யாராவது இங்கே அழைத்துவந்துவிட்டார்களோ?'' என்ற கேள்வியுடன் வந்தாள் நடுத்தர வயதுள்ள ஒரு மாது.

''ஆமாம்.. நண்பர் ஒருவர் அழைத்து வந்தார்'' என்றாள் ரோஜா வியப்புடன்.

''எனக்கும் அப்படித்தான் நேர்ந்துவிட்டது. ஆனால் நான் போகிறேன். நீயும் வருகிறாயா?''

''நான் இப்போது வருவதற்கில்லை'' என்றாள் ரோஜா.

''உனக்கும் எனக்கும் இங்கே நல்ல நண்பர்கள்தாம் கிடைத்தார்கள்!'' என்று கசப்புடன் கூறிவிட்டு அவள் நகர்ந்தாள்.

ரோஜா முகம் சிவக்க, உறுதியுடன் அறையை விட்டு வெளியே செல்லும் அப் பெண்மணியை உறுத்து நோக்கினாள்.

''அவளுக்குள்ள தைரியம் நமக்கில்லை'' என்ற மெல்லிய குரல் பின்னாலிருந்து கேட்டது. ரோஜா திரும்பினாள். ''ஒரு சிகரெட் வேண்டுமா?'' என்ற கேள்வியுடன் ஒருவன் எதிரே நின்றான். அவளைவிடச் சற்று குட்டையான உருவம்; வெளுத்த முகம்; செம்பட்டை மயிர்; கண்களிலே கண்ணாடி. கடந்த

அரைமணி நேரமாகவே, அவன் யாருடனும் பேசாமல், தான் பேசுவதையே கேட்டுக்கொண்டு நின்றிருந்தது ரோனுவுக்கு நினைவு வந்தது.

''சிகரெட் வேண்டாம். நன்றி. நான் ...'' என்று இழுத்தாள் ரோனு.

'' ஸ்காட்டைத் தேடிக்கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? வீட்டுக்கு அழைத்துச் செல்லச் சொல்வதற்கு!'' அவன் குரல் மிகவும் தணிந்து வந்தது. ''வியப்படையாதீர்கள். நீங்கள் ரோனு மெட்ஃபோர்டுதானே? உங்களைப்பற்றி நாங்கள் எல்லோரும் அறிவோம். உங்களுடைய படிப்பெல்லாம் எம்மட்டில் இருக்கிறது?''

ரோனு அவனை வெறித்து நோக்கினுள். அவள் முகம் இன்னமும் முறுவலால் மலர்ந்துதானிருந்தது. ஆனுல் அவள் விழிகளில் களிப்பில்லை.

அவன் கேட்டான்: ''இப் பார்ட்டியைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?''

ரோனு பதில் கூறவில்லை.

'' நாங்கள் இவ்வளவு முயன்றும், நீங்கள் இதை நன்கு அநுபவிக்கவில்லை. நீங்கள் பேசியதை நான் கேட்டுக்கொண்டு தானிருந்தேன்.''

ரோனு, ஸ்காட் வருகிருனு என்று பார்த்தாள். அவன் வருவதாகத் தோன்றவில்லை.

'' சற்று உட்காருவோமே? நான் உங்களுடன் பேச விரும்புகிறேன்.'' அவன் குரலில் இருந்த சிரத்தை அவளை நாற்காலியில் உட்காரவைத்தது. அவன் மறுபடியும் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டான்.

'' நீங்கள் இந்தக் கூட்டத்துடன் கலந்திருக்கவேண்டிய தில்லை. இது உங்களுக்கு ஏற்ற இடமுமில்லை'' என்ற அவன், அந்த அறை முழுவதையும் கண்களை ஓட்டித் தலையை ஆட்டினுன்.

''உங்களுக்கு?'' என்று கேட்டாள் ரோனு.

'' நான் இவர்களைச் சேர்ந்தவனுகக் கருதப்படுகிறேன். ஆனுல் நான் வெளியே போய்விடுவதுண்டு. போன தடவை நான் டெக்ஸாஸ்வரைச் சென்றேன். எனக்குள் ஒரு முடிவுக்கு வர நான் முயன்றுகொண்டிருக்கிறேன். போதிய துணிவு வந்துவிட்டதாகத் தோன்றும்போது நான் திரும்பிவருகிறேன்; எல்லாம் மாறிவிட்டிருக்கும் என்ற நம்பிக்கையுடன்தான் திரும்புகிறேன். ஆனுல் என்னிடமோ, அல்லது தெல்மா விடமோ எந்த மாறுதலையும் காண்பதில்லை. அதை நான் சொல்லவும் முடிவதில்லை. எனவே மீண்டும் நான் வெளியே

செல்கிறேன்.'' அவன் ஒரு கிளாஸ் பானம் குடித்தான். அவன் என்ன சொல்கிறுன் என்று புரியாமல் வியப்புடன் ரோஞ அவனைக் கவனித்தாள். அவன் தொடர்ந்தான்: ''சற்றுமுன் சென்றுளே அவளைப்போலவும், உங்களைப் போலவும் உள்ளவர்களை நான் தேடிக்கொண்டிருக்கிறேன். ஆனல், அவள் போய்விட்டாள் இல்லையா? நீங்களும் சென்று விடுவீர்கள். ஆமாம்..அவர்களெல்லாம் போய்விடுகிறுர்கள்.''

ரோஞ கேட்டாள்: ''எதற்காக அவர்களைத் தேடுகிறீர்கள்?''

''எனக்குச் சிறிது தெம்பை அளிக்க!'' என்ற அவன் அந்த அறையிலிருந்தவர்களை ஒரு முறை பார்த்தான். பிறகு, ''இவர்கள் எல்லாம் அவ்வளவு கொடூரமாகத் தோன்றவில்லை. அல்லவா? என்று கேட்டான்.

''அப்படியா?'' ரோஞ தன் முகத்தைத் தீவிரமாக வைத்துக்கொள்ள முயன்ருள்.

''நீங்கள் என்னை நம்பமாட்டீர்கள். ஆனல் அவர்களுடைய நோக்கத்தைத் தெரிந்துகொண்டால் உங்களுக்கு உண்மை புரியும்!''

''நீங்கள் என்ன பேசுகிறீர்கள்? எனக்குப் புரியவில்லை.''

''நிஜமாகவா? அல்லது மனத்தில் எழுவதை வெளியே சொல்ல அஞ்சுகிறீர்களா?''

''சரி...இவர்கள் எல்லாம் யார்? கம்யூனிஸ்டுகளா?'' என்று வினவினள் ரோஞ.

''அப்படி ஒப்புக்கொள்பவர்களில் மூன்றே பேரைத்தான் நான் இங்கே அறிவேன். மற்றவர்கள் அப்படியில்லையென்று சொல்லிக்கொள்ளுகிறுர்கள். அவர்கள் கம்யூனிஸ்ட் அல்லாத கம்யூனிஸ்டுகள்!''

''எல்லோருமேயா?'' என்ற ரோஞ கவலையுடன் பார்வையைக் கதவின் பக்கம் திருப்பினள். ஆனல் அங்கே ஸ்காட் இல்லை.

''எல்லோரும் அப்படியில்லை. சற்றுமுன் சென்றவள், நீங்கள், அதோ பழுப்பு உடையில் மௌனமாக நிற்கிறுனே அவன், அந்தக் கவலை துளும்பும் இளைஞன்...மற்றும் சிலர் அப்படியில்லைதான். ஒன்று, அவர்கள் சற்றுமுன் சென்ற பெண்மணியைப்போல் வெளியேறி விடுவார்கள்; அல்லது, தங்களுக்குக் கிடைக்கும் புகழுரையில் மயங்கித் திரும்பி வருவார்கள்.''

''புகழுரையா? இன்று என்னை அப்படி ஒருவரும் புகழவில்லையே!''

''என்னது? சிறந்த அறிவு படைத்தவர் என்று யாரும் உங்களைக் கூறினல், ஏற்கமாட்டீர்களா?''

''எனக்கு அப்படியொன்றும் எண்ணமில்லை.''

''அது உண்மையானால், உங்களுக்கு ஆபத்தில்லை. உங்களுக்குத் துணிச்சலும் இருக்குமானால், கவலையில்லை.''

ரோனு அவனை நோக்கினாள். அவனுக்குத் துணிச்சல் என்ற வார்த்தையின் மீது எவ்வளவு காதல்!

''மனத்துணிவு வேண்டும்! வாருங்கள், ஒரு பானக் கடைக்குச் செல்வோம்.''

''ஆனால்—''

''இன்னமும் சர்க்கஸ் ஆரம்பமாகவில்லை. நீங்கள் தங்கியிருந்து, அரசியல் போதனையில் முதல் பாடத்தைக் கற்றாக வேண்டும்.''

''சார்லஸ், மறுபடியும் குடிப்போதை ஏறிவிடும் உனக்கு'' என்று குரல் கொடுத்தபடி அருகில் வந்தாள் தெல்மா. தெல்மாவிடம் உணர்ச்சியை எழுப்பாத முதல் மனிதன் இவன்தான் என்று நினைத்தாள் ரோனு. சார்லஸ் நன்றாக எழுந்து நின்று தெல்மாவைப்பார்த்தான். அவன் பார்வையில் வெறுப்பு இல்லை; வெட்கந்தானிருந்தது.

''போதை கொள்வது எனக்குப் பிடிக்கிறது'' என்று கூறிவிட்டு அவன் தெல்மாவை வெறித்துப் பார்த்தபடி இருந்தான். சிரித்துக்கொண்டே தெல்மா திரும்பினாள். ஆனால் அவள் முகத்தில் ஒரு கோபக்கோடு ஒளிர்ந்தது.

''நான் போகவேண்டும்'' என்ற ரோனு, மௌனமாக இருந்த சார்லஸை நோக்கினாள். அவன் உணர்ச்சியற்று நின்று கொண்டிருந்தான். கையில் இறுக்கிப்பிடித்த காலியான தம்ளருடன். திடீரென்று அந்தக் கண்ணாடித் தம்ளர் நொறுங்கியது. அவன் அதைக் கணப்புக்குள் தூக்கி எறிந்தபோது ரோனு வியந்துபோனாள். ஆனால் மற்றவர் எவரும் பரபரப்படைந்ததாகத் தெரியவில்லை. யாரோ ஒருவன் மட்டும் சிரித்தான்.

''உங்கள் கை!'' என்று கூறிய ரோனு தன் கைக்குட்டையைத் தேடினாள்.

அவன் அவளைத் துயரத்துடன் பார்த்தான். பிறகு முதலில் எப்படித் திடீரென்று அவளுடன் பேசினானோ, அதே மாதிரித் திடீரென்று அங்கிருந்து சென்றுவிட்டான். அவன் கையிலிருந்து வடிந்த ரத்தத் துளிகள் கீழேயிருந்த நீல விரிப்பின்மீது கதவுவரைச் சொட்டி அடையாளமிட்டன.

அவன் செல்வதைக் கவனித்தாள் ரோனு. இந்தப் பார்ட்டி ஒரு சர்க்கஸ் என்றால், சார்லஸ் அதில் ஒரு 'பஃபூன்' மாதிரி என்று எண்ணினாள் அவள். பிறகு மெதுவாக அவள் சார்லஸை மறந்துபோனாள். கதவண்டை பால் ஹேடன் நின்றுகொண்டிருந்தான். அறை முழுவதையும் கண்ணோட்டம்

விட்ட அவன் சற்றுத் தயங்கினான். பிறகு நேராக ரோனு விடம் வந்தான்,

''ஹலோ ரோனு! நீ என்ன கிலிபிடித்த மாதிரி இருக் கிறாய்?'' என்று கேட்டான் பால் ஹேடன்.

'' நான் ஸ்காட்டைத் தேடிக்கொண்டிருக்கிறேன்; நீங்கள் இங்கே எப்படி வந்து சேர்ந்தீர்கள்?''

''உனக்குச் சிறிது தெம்பூட்ட வேண்டுமென்று தோன் றியது'' என்றான் அவன் சாதாரணமாக. உண்மையில் அவன் ரோனுவை ஒதுக்கத்தான் எண்ணியிருந்தான். ஆனால் அறைக் குள் நுழைந்ததுமே அவளுடைய முகத்தில் ஒளிர்ந்த அச்சத்தைக் கண்டதும், தன் தீர்மானத்தை மாற்றிக்கொண்டு விட்டான்.

''எனக்குத் தெம்பு தேவைதான் போலிருக்கிறது புதிதான சூழ்நிலையில் நான் சிக்கிக்கொண்டுவிட்டேன். ஆனால் நீங்கள் எப்படி இங்கே வந்தீர்கள்?'' நேற்று ஜான் டைலன் வீட்டில் நடந்த சம்பாஷணைகளில் பால் பேசிய பேச்சுக்கும் இப்போது அவன் இங்கே இருப்பதற்கும் முரண்பாடு இருப்ப தாக அவள் நினைத்தாள்.

''உனக்கு இது பிடிக்கவில்லை, அல்லவா?''

''உண்மையில் அப்படித்தான்.''

அவன் சிரித்தான். ''என்னை இங்கே மர்ரே அழைத்து வந்துவிட்டான்.''

''மர்ரேயா?'' ரோனு அதிர்ச்சியுடன், நம்பிக்கையில் லாமல் வினவினாள்.

''சிறிது காலமாக அவன் என்னிடம் மரியாதையுடன் நடந்து கொள்கிறான்.''

''அவனை விட்டு நான் எப்போதும் 'ட்ரெண்டில்' ஒதுங் கியே இருக்கிறேன்'' என்றாள் ரோனு குறிப்பாக.

''என்னால் அது முடியவில்லை.''

அவர்கள் ஒருவரையொருவர் கணநேரம் பார்த்துக் கொண்டனர்.

அப்போது யாரோ 'ஸ்பைனட்' இசைக் கருவியில் வாசிக் கும் ஒலி கேட்டது. உடனேயே அறையெங்கும் ஒரு மௌனம் நிலவியது.

''நமக்கு யாரோ இசை விருந்தளிக்கப் போகிறார்கள் போலிருக்கிறது. நீயும் ஒரு நாற்காலியில் அமர்ந்துகொள். வசதியாகக் கேட்போம்'' என்று பால் ஹேடன் ஒரு நாற்கா லியை இழுத்துப்போட்டான்.

கூடத்திலிருந்து பலர் அறைக்குள் நுழைந்தார்கள். நாற் காலிகள் இழுபட்டன; அழகிய வடிவுள்ள ஒரு பொன் கூந்

தல்காரி 'ஸ்பைனட்' வாத்தியத்தின் மேல் சாய்ந்தபடி இருந்தாள். கறுப்பான ஸ்வெட்டரும், காதுகளில் பொன்னணிகளும், கழுத்திலே மணிவடங்களும் அணிந்திருந்தாள் அவள். ''பாடு அன்னு'' என்று ஒரு குரல் கேட்டது. தெளிவான இன்குரலில் அவள் பாட ஆரம்பித்தாள். ஒவ்வொரு பாட்டு முடிந்ததும் கரகோஷம் உண்மையாக வெடித்தது.

ஆரம்பத்தில் ரோனு இயற்கையாகக் கேட்டுக்கொண்டிருந்தாள். அவளுக்கு இசையென்றால் விருப்பம் உண்டு. பாடும் பெண்ணின் குரலும் அவளுக்கு இனிமையாக இருந்தது. கோஷ்டி கானங்களில் மற்றவர்கள் சேர்ந்து கொண்ட விதமுங்கூட அவளுக்கு உவப்பாகவே இருந்தது. எனினும் சிறிது நேரத்திலேயே தனக்குப் பாட்டில் இருந்த உற்சாகம் குறைந்து வருவதை உணர்ந்தாள். காரணம், அங்கிருந்த பல முகங்களில் தேவைக்கு அதிகமான உணர்ச்சி மேலிட்டிருந்தது. தவிர அவர்கள் கூட்டாகப் பாடும்போது, தங்களுக்குள் ஏதோ ரகசியத்தைப் பகிர்ந்து கொள்வதுபோல் ஒருவரையொருவர் பார்த்துப் புன்முறுவல் பூத்துக்கொண்டார்கள். அன்னுவைப் பார்ப்பதை நிறுத்திக்கொண்ட ரோனு, அங்கே சூழ்ந்திருந்த முகங்களை ஆராய ஆரம்பித்தாள். அப்போது, அவளைப் போலவே அங்கங்கே ஒரு சிலர் உணர்ந்து தவிப்பது புலப்பட்டது. ஆனால் மற்றவர்கள் யாவரும் ஒரு தனி உலகத்தைச் சேர்ந்தவர்கள் மாதிரி உற்சாகத்துடன் காணப்பட்டார்கள்.

''மறுபடியும் ஒரு தடவை 'குவாதலஜரா' என்ற பாட்டைப் பாடு, அன்னு!'' என்றது ஒரு குரல்.

அப்பாட்டு மூன்றாவது தடவையாக மறுபடியும் உணர்ச்சியுடன் பாடப்பட்டது.

''இது நல்ல பாட்டு'' என்றான் பால், ரோனுவைக் கவனித்தபடி.

''ஆமாம், எப்போதுமே எனக்கு இந்தப் பாட்டைப் பிடிக்கும்'' என்றாள் அவள் தயங்கிய, தாழ்ந்த குரலில். மெக்ஸிகோவில் இப்பாட்டை அவள் பல தடவைகள் கேட்டிருக்கிறாள். ஆனால் இங்கே அதற்குத் தனிமையான அர்த்தம் அல்லவா கொடுக்கப்படுகிறது!

''ஆனால் . . .?''

''இதைப்பற்றி இவர்கள் அவ்வளவு உணர்ச்சி வசப்பட அவசியமில்லை'' என்றாள் ரோனு கோபத்துடன் மெல்லிய குரலில்.

பால் ஹேடன் பதில் கூறவில்லை. அவர்களுக்கு முன்னால் அமர்ந்திருந்த ஒருவன், அவர்களது பேச்சை விரும்பாதவன் போல் திரும்பிப் பார்த்தான்.

''பால், நான் வீண் கற்பனை செய்து கொள்ளுகிறேனா என்ன? இவர்கள் எல்லாம் உணர்ச்சி வசமாக ஒன்றுபட்டு இருக்கிறதைப் பாருங்கள். இவர்கள் தமக்குள்ளே ஏதோ ரகசியமான ஒருமைப்பாட்டுடன் தான் இருக்கிறார்கள், இல்லையா?''

''நீ உன் உணர்ச்சிகளை மறைத்துக் கொள்ளக் கற்றுக் கொள்ளவேண்டும். இல்லையெனில், அவர்கள் நம்மை வெளியே அனுப்பிவிடுவார்கள்'' என்று முறுவலித்தான் பால்.

''ஆனால் இக்கூட்டமே விசித்திரமாக இருப்பதை நீங்கள் உணரவில்லையா ?'' என்றாள் அவள் மிக மெதுவாக. அதே சமயம் அவர்களுக்கு முன்னாலிருந்தவன், இத்தடவை அதிகமான முகச்சுளிப்புடன் திரும்பி நோக்கியதால், அவள் மேலே பேசுவதை நிறுத்திக் கொண்டாள்.

இறுதியில் அறைக் கதவண்டை ஸ்காட் இருப்பதைக் கண்டாள் ரோனா. அவன் தெல்மாவுடன் நின்று கொண்டிருந்தான். ஸ்காட் மிகவும் அலுத்துப் போனவன் மாதிரி சோர்வுடன் காணப்பட்டான். ரோனா அவனை நோக்கிக் கையை ஆட்டினாள். அவன் இப்போது முறுவலித்தான். உடனேயே அவன் பார்வை பால் ஹேடனின் மீது விழுந்தது. அவனுடைய புன்சிரிப்பும் மறைந்து விட்டது. கூட்டத்திற் கிடையிலே புகுந்து, மெதுவாக அவன் ரோனாவை நோக்கி வரலானான். அதற்குள், ''என் குரல் சரியாக இல்லை. இன்னும் ஒரு பாட்டுடன் முடித்துக்கொள்கிறேன்'' என்று பாடகி அறிவித்ததால், வழியில் நின்றுவிட்டான் ஸ்காட். பல குரல்கள் பலவிதமான பாட்டுக்களைப் பாடும்படி கோரின. ''கடைசிப் பாட்டு! என்ன பாடவேண்டும்?'' என்று கேட்டாள் அப்பாடகி மீண்டும்.

ரோனா குரல் கொடுத்தாள்; 'மாண்டேஸுமாவின் கூடத்திலிருந்து' என்ற பாட்டு!''

உடனேயே எல்லோருக்கும் ஓர் அதிர்ச்சி.

ரோனா தனக்கு முன்னாலிருந்தவனைப் பார்த்துமுறுவலித்தபடி, ''இந்தப் பாட்டிலும் கூட போர்க் கீதத்தின் சந்தம் இருக்கிறது'' என்றாள்.

தன் சிரிப்பை மறைத்துக் கொள்வதற்காகப் பால் ஹேடன் கீழே குனிந்துகொண்டான். ''உனக்குத் துடுக்குத்தனம் அதிகம், ரோனா!'' என்று கூறிய அவன் முட்டி வரும் பெருஞ் சிரிப்புடன் போராடினான். இன்னும் சிலர்கூட இக் கேலியை ரசித்துச் சிரித்தார்கள்.

அப்போது வேறு யாரோ ஒருவன் திடீரென்று பலமாகச் சிரித்ததால் பியானோ நின்றது. எல்லோருடைய பார்வைகளும்

திரும்பின. அங்கே சார்லஸ்தான் பியானோவின் அருகிலிருந்த பெஞ்சி மீது ஏறி நின்ருன். அவனுடைய செம்பட்டைத் தலை கலைந்து கிடந்தது. அவனுடைய வெளுத்த முகம் உணர்ச்சி வசப்பட்டிருந்தது. அவனுடைய கையிலே ஒரு கட்டு. உயரத்தில், கையில் ஒரு பானக் கிளாஸுடன் நின்ற அவன், ''இப்போது எல்லோரும் பானம் அருந்த நேரமாகி விட்டது!'' என்று கூவினன்.

''அவனை யாராவது அப்பால் இழுத்துச் செல்லுங்கள்!'' என்று கூறிய தெல்மா, அவனை நோக்கிச் செல்ல முயன்ருள்.

சார்லஸ் அவளைப் பார்த்து முறுவலித்து விட்டுப் பேசினன்: ''பெரியோர்களே, தாய்மார்களே! இப்போது நான் உங்களுக்கு, அறிவாளிகளின் அமுதமான கார்ல் மார்க்ஸின் கொள்கைகளைச் சொல்லப் போகிறேன்.'' தொடர்ந்து கையிலிருந்த கிளாஸை அவன் உயர்த்தும்போது, கால் தடுக்கித் 'தொப்' பென்று பியானோவின் மீதே விழுந்து விட்டான்! அறை முழுவதும் ஒரே கூச்சல். சார்லஸின் கைக் கட்டு பியோனாவின் கம்பிகளில் சிக்கிக்கொண்டு விட்டது. இருந்தும் அவன் மெள்ள எழுந்திருந்தான்.

''அவன் மறுபடியும் குடி போதையில் இருக்கிருன்'' என்ருன் ரோனுவுக்கு முன்னல் இருந்தவன்.

''பாவம் தெல்மா! அவள் அவனை வேறெங்கேயாவது இருத்தி வைக்க வேண்டும்'' என்றது மற்றொரு குரல்.

ரோனு, பாலின் பக்கம் திரும்பி, ''சார்லஸ் யார்?'' என்று வினவினுள்.

மேலும் பானம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்த அந்தச் செம்பட்டைத் தலையுடைய சார்லஸைக் கவனித்தபடி, ''உனக்குத் தெரியாது? அவன் தெல்மாவின் மகன்'' என்ருன் பால் ஹேடன்.

''ஓ!'' என்ற ரோனு மேலே பேசவில்லை. சார்லஸ் தன்னைப் பிடித்தவர்களுடைய கையை உதறித் தள்ளிக்கொண்டிருந்தான். அவன் எல்லோரையும் சாப்பாட்டு அறைக்கு வந்து உணவு கொள்ளுமாறு அழைத்துக் கொண்டும் இருந்தான். ''ம் ம்...எழுந்திருங்கள்...! பட்டினிக் கைதிகளே, எழுந்திருங்கள்!'' என்றும் கூவினுன்.

இதே சமயத்தில் ஸ்காட் அவர்களிடம் வந்து சேர்ந்தான்.

''போவதற்கு நேரமாகிவிட்டது'' என்று கோபத்துடன் கூறிய அவன், பால் ஹேடனைக் கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தான்.

அறையை விட்டுச் செல்லுமாறு வற்புறுத்தப்படும் சார்லஸையே இன்னமும் கவனித்துக் கொண்டிருந்த ரோனு

வெறுமே தலையை அசைத்தாள். 'ஸ்பைனட்'டின் தந்தி மீட்டப்பட்டது. பாடகி, தன் குழற்கற்றைகளை ஒதுக்கி விட்டுக் கொண்டு ஒரு புன்முறுவலை உதிர்த்தாள். பிறகு பாட ஆரம்பித்தாள். 'மாண்டேஸுமாவின் கூடத்திலிருந்து' என்ற பாட்டு இல்லை அது. நான்காவது தடவையாக மீண்டும் 'குவாதலஜரா' என்ற பாட்டுத்தான்!

ரோனு எழுந்து, பாலை நோக்கி முறுவலித்துவிட்டுப் புறப்பட ஆரம்பித்தாள். ஒரு கணம் தயங்கிய ஸ்காட் அவளைப் பின்தொடர்ந்தான். சங்கீதப் பிரியர்கள் அவர்களைக் கோபத்துடன் பார்த்து, இப்பாட்டு முடிந்ததும் போகும்படி ஜாடை காட்டினார்கள். ஆனால் ஸ்காட் பின்தொடர ரோனு ஹாலை அடைந்து விட்டாள். வழியில் இருந்த மற்ற அறைகளெல்லாம் இப்போது காலியாக இருந்தன.

ஸ்காட் ரோனுவின் கரத்தைப் பற்றிக்கொண்டு முறுவலிடையே சொன்னான்: ''வருந்துகிறேன் ரோனு. அமர்க்களமெல்லாம் நடந்துவிட்டது இல்லையா? வா... நாம் வெளியே சென்று நிம்மதியான ஓர் இடத்தில் உணவு கொள்ளுவோம்.'' அவன் சோர்ந்து கவலையுடன் காணப்பட்டான். ஆனாலும் தன் குரலில் மிதந்த கோபத்தை அவனால் மறைத்துக்கொள்ள முடியவில்லை. வெளியே தெருவுக்கு வரும் வரை அவன் ரோனுவின் கையை இறுகப் பற்றிக்கொண்டு வந்தான். ஆனால் அவர்கள் பேசவேயில்லை.

அதிகமான மென்மையுடன் அவளைக் காரில் அமர்த்தினான் ஸ்காட். அப்போதுதான் அவனுக்கு எவ்வளவு கோபமென்று ரோனுவுக்குப் புரிந்தது. கார் சிறிது நகர்ந்ததும் ஸ்காட் வெடித்தான்: ''பால் ஹேடன் ஏன் நீ செல்லும் இடங்களுக்கெல்லாம் தொடர்ந்து வருகிறான்?'' சிறிது நேரம் மௌனம். பிறகு தன் கையை நீட்டி அவளுடைய கையைப் பற்றி ''நீ ஏன் இப்படிச் செய்கிறாய், ரோனு?'' என்று வினவினான்.

அவனுடைய கோபத்திற்குக் காரணம் தெரிந்ததும் ரோனு சிறிது நிம்மதிபெற்றாள். ஆனால், சாப்பிடும்போது இதைப்பற்றிப் பட்டவர்த்தனமாகப் பேசிவிட வேண்டும் என்று எண்ணிக்கொண்டாள். ''பல மாதங்களாக என் மனத்தில் பல கேள்விகள் கொதித்துக் கொண்டிருக்கின்றன. இன்றிரவு அவைகளுக்கெல்லாம் ஸ்காட் பதில் கூறுவார். பிறகு எல்லாம் தெளிவாகிய பின், எங்கள் உறவில் புதுச் சகாப்தம் ஆரம்பிக்கும். சென்ற கோடையில் அநுபவித்த மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கைக்கு நாங்கள் மீண்டும் திரும்புவோம்.''

அவள் கண்களில் நீர் துளிர்த்து விட்டது. உடனே வேகமாகக் குனிந்து அவன் கன்னத்தில் முத்தமிட்டாள். ''நான் வருந்துகிறேன். அன்பே! ஆனால் அந்த மோசமான இடத்திற்கு

நாம் ஏன் சென்றோம்? தெல்மாவைப் போன்றவர்களுக்கு எந்த ரசனையும் இருக்காது என்பதை நாம் ஏன் அறியவில்லை?''

அவன் காரை அவென்யூவிற்குள் திருப்பினான். கவலைப் படாதே ரோனா, இனிமேல் உன்னை நான் அங்கே அழைத்துப் போகவில்லை.''

''தெல்மாவையும், மர்ரேயையும் நாம் முற்றிலும் ஒதுக்கி விடுவோம்'' என்றாள் அவள் ஆவலுடன்.

''சார்லஸைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?'' என்று வினவினான் அவன்.

''அவனுக்காக நான் மிகவும் வருந்தினேன்.''

''அந்தக் குடிகாரனுக்காகவா?''

''ஆனால் அவனை யார் அப்படிச் செய்தார்கள்?'' என்று வினவினாள் ரோனா, தெல்மாவை நினைத்தபடி.

''அப்படிச் செய்தார்களா...?''

''ஆமாம். உங்களுடைய அம்மா, வீட்டிலே இம்மாதிரியான ஜனங்களைக் கூட்டி வந்து நிரப்பினால் நீங்கள் என்ன செய்வீர்கள்? இருந்தும் அவன் அம்மாவுடன் அன்போடு இருப்பது விசித்திரந்தான்!''

''அவன் தெல்மாவிடம் அன்பு காட்டுவதாகவா நீ சொல்கிறாய்?''

''நேராகப் போலீசாரிடம் சென்று தனக்குத் தெரிந்ததையெல்லாம் சொல்லாமல் இருக்கும் அளவுக்காவது அவன் அன்பு காட்டவில்லையா?''

''தெல்மாவைப் போலீஸ் என்ன செய்ய முடியும்?''

''எனக்கு அதையெல்லாம் பற்றித் தெரியாது, ஸ்காட். ஆனால், சார்லஸ் இருக்கும் நிலையில் யாரிடமாவது இவற்றைச் சொல்லாமலிருக்க முடியாதென்றே நான் எண்ணுகிறேன். இருந்தும் அவன் ஒன்றும் செய்யவில்லை அல்லவா?''

''ரோனா, வாஷிங்டன் 'சூனிய வேட்டையாளர்'களைப் பற்றி நீ அதிகமாகப் படித்து விட்டாய் போலிருக்கிறது'' என்று சிரித்தான் ஸ்காட்.

பிறகு அவன் மௌனமானான். சார்லஸின் அமர்க்களம் பற்றி அவன் என்ன நினைத்திருப்பான் என்று ரோனா வியந்தாள். அதற்கெல்லாம் காரணம் ரோனாதான். அது அவளுக்குத் தெரிந்தது. ரோனா குறிப்பிட்ட பாட்டைப் பாடச் சொன்னபோது சார்லஸ் சிரித்தான். இதனால் கிடைத்த தைரியத்தில்தான் அவன் பியானோ பெஞ்சின்மீது ஏறியிருக்கிறான்.

பாவம் சார்லஸ், அவனுடைய சிறிய எதிர்ப்புக்கூடப் பலன் இன்றிப் போய்விட்டதே! எல்லோரும் அவனுக்குக் குடி போதை என்றார்கள். அவனுக்கா போதை? அவன் குரல் தெளிவாகத்தானிருந்தது.

''நாம் கார்லோ ஹோட்டலில் சாப்பிடுவோம். உனக்குப் பசிக்கிறது, இல்லையா?'' என்று வினவினுன் ஸ்காட்.

''ஆமாம்'' என்ருள் ரோனு. காலை உணவு உண்டு வெகு நேரமாகிவிட்டது. வீடு தேடும் படலத்தில் சாப்பிட எங்கே நேரமிருந்தது?''

★ ★ ★

சாப்பிடும்போது அவர்கள் நிறையப் பேசினுர்கள். ஸ்காட் பொறுமையுடன் பல விஷயங்களைத் தெளிவாக்கினுன்; தெல்மா ஒரு மடத்தனமான பெண் எனவும், மர்ரே ஒரு முட்டாளென்றும் அவன் ஒப்புக்கொண்டான். மற்றவர்கள்?

''சாதாரண மனிதர்களைப் போல் இருந்தால், அக்கூட்டத்தில் பலரை நான் விரும்பியிருப்பேன். ஆனுல் அவர்கள் அப்படியில்லை. அவர்களைக் கண்டதும் எனக்குக் கேலியாகவும், பயமாகவும்கூட இருந்தது. நான் ஒன்றும் கற்பனை செய்து கூறவில்லை, ஸ்காட். இன்று அவர்களை நான் வெறுமேதான் கவனித்துக் கொண்டிருந்தேன்'' என்ருள் ரோனு.

ஸ்காட் முறுவலித்துவிட்டுச் சொன்னுன்: ''ரோனு, இம்மாதிரி பேசிக்கொண்டு அலையாதே. ஜனங்கள் உன்னைப் பார்த்துச் சிரிப்பார்கள்.''

''ஆனுல் நான் மட்டுமே இப்படி உணரவில்லை. மற்ருெரு பெண்மணி கூடக் கோபத்துடன் போய்விட்டாள். சிவப்புத் தொப்பியில் வெள்ளை வளைவுகளுடன் வந்திருந்தாளே அவள்.''

''அவளா? நான் கூடக் கேள்விப்பட்டேன். ஆனுல் அதற்குக் காரணம் வேறு. அவள் காதலித்த இளைஞன் அவளை விட்டு விட்டு, இன்று பாடினுளே அப்பெண்ணைச் சுற்ற ஆரம்பித்து விட்டான். அந்த எரிச்சல் அவளுக்கு'' என்று கேலியாக நகைத்தான் ஸ்காட்.

''அத்துடன், பால் ஹேடனும் அப்படியேதான் உணர்ந்தார்.''

''ஹேடனு?''

ரோனு உதட்டைக் கடித்துக்கொண்டாள். ''உண்மையில் அவர் அப்படித்தான் உணர்ந்தார்; ஏன் நீங்களும் கூடத்தான்.''

''ஒருவேளை உன் எண்ணம் சரியாக இருக்கலாம். அக்கூட்டமே கம்யூனிஸ்டுகள் கூட்டமாகவும் இருக்கக்கூடும். எனக்குச் சீக்கிரமாக எதையும் தெரிந்துகொள்ள முடியவில்லை.''

''உண்மையாகவா?''

''ஏன்?''

''நான் நம்பவில்லை.''

ஸ்காட்டுக்குத் தூக்கி வாரிப் போட்டது. பிறகு அவன் சிரிக்க ஆரம்பித்தான்.

''நிஜமாகத்தான் சொல்கிறேன், ஸ்காட். உங்களை மற்றவர்கள் ஏமாற்றுவதை நீங்கள் அறிந்து கொள்வதில்லை.''

''யார் என்னை ஏமாற்றுகிறார்கள்?''

அவள் தயங்கினாள். பிறகு, ''நிகோலஸ் ஆர்பென்'' என்றாள் மெதுவாக.

''ரோனா!'' என்றான் ஸ்காட் கடுமையாக. ''நிகோலஸ் ஆர்பென் என் நண்பன். காலேஜில் எனக்குப் போதகராக இருந்த நாட்களிலிருந்து பல ஆண்டுகளாக நான் அவனை அறிவேன். ஒரு மோசடிக்காரனோ, கயவனோ அல்லன். மனிதவர்க்கத்தின் நன்மையில் நாட்டமுள்ள ஒரு லட்சியவாதி அவன். வாழ்வில் பல இன்னல்களை அநுபவித்தவன். மற்றவர்கள் எல்லாம் அவனுக்கு எதிராக இருக்கிறார்கள் என்பதற்காக, அவனது பழைய நண்பர்களும் அவனைக் கைவிடக்கூடாது. என்னுடைய நண்பர்கள் பலருடைய மதத்தைப் பற்றிய கருத்துக்களை நான் ஒத்துக்கொள்வதில்லை; அதைப் போலவே ஆர்பெனின் அரசியல் கருத்துக்களும் எனக்குப் பிடிப்பதில்லை. அதற்காக நான் அவனை ஒதுக்கலாமா? அவன் குற்றவாளி ஒன்றுமில்லை. தவிர, அவன் எப்போதோ ஒரு தடவை தன்னை கம்யூனிஸ்ட் என்று சொல்லிக்கொண்டது உண்மையென்றாலும், இப்போது அவன் அக்கட்சியின் உறுப்பினனல்லன். அவனுடன் இவைகளையெல்லாம் பற்றி நான் பேசுவதில்லை. ஆனால் அவன் கட்சி விவகாரங்களில் அக்கறை காட்டுவதை நிறுத்திப் பல வருஷங்கள் ஆகிவிட்டன என்பதை நானறிவேன். இந்த நிலையில் நீ ஏன் கவலைப்படுகிறாய்? ஏதாவது அபவாதம் வந்துவிடுமோ என்று அஞ்சுகிறாயா?''

''அபவாதத்துக்காக நான் அஞ்சவில்லை. நான் ப்ளாக்வொர்த்தைப் பற்றி நினைத்துக் கொண்டேன்'' என்றாள் ரோனா.

''யார்?''

''ப்ளாக்வொர்த்—'ட்ரெண்டி'ல் உதவி ஆசிரியராக இருந்து, பால் ஹேடன் வருவதற்கு முன்னால் விலக்கப்பட்டானே, அவன். ப்ளாக்வொர்த் ''ட்ரெண்டி''ல் வெளியிட்ட கட்டுரைகளையெல்லாம் நான் படித்தேன். அவற்றை நான் விரும்பவில்லை. ஸ்காட், ப்ளாக்வொர்த்தால் ஆதரிக்கப்பட்ட

எழுத்தாளர்களது கருத்துக்களை ஒப்புக்கொண்ட, அல்லது ஒப்புக்கொள்ளாத விஷயம் மட்டுமே அல்ல இது. அதற்கும் மேலான ஊழலான விஷயம்; எண்ணங்கள் கெடுதலானால் நடத்தை வரம்பும் கெடுதலாகிவிடுகிறது. அதைக் கண்டுதான் நான் அஞ்சுகிறேன்; அபவாதத்தைப்பற்றி இல்லை.''

''ஓ, ரோனு! வா... நாமெல்லாம் சுமாரான அறிவாவது படைத்தவர்கள். நல்லது கெட்டதை உணர முடிந்தவர்கள். நாமெல்லாம் அவ்வளவு எளிதில் ஊழலில் இறங்கிவிட மாட்டோம்.''

''ப்ளாக்வொர்த்தின் மனம் கெடுதலானதுதான். ஏனென்றால் அவன் வெயிட்லருக்குத் துரோகம் இழைத்துவிட்டான். இதோ பாருங்கள் ஸ்காட், ஓர் ஆசிரியர் தமது உதவியாளர்களை நம்பவேண்டியிருக்கிறது. அதிகமான அதிகாரங்களை அவர் உதவியாளர்களுக்கு அளிக்கிறார். தன்னிடம் சம்பளம் வாங்குபவர்களை அவர் நம்புகிறார். அந்த நம்பிக்கைக்குத் துரோக மிழைத்துவிட்டான் ப்ளாக்வொர்த். அது கொடுமை அல்லவா? ப்ளாக்வொர்த் மட்டும் நேர்மையானவனாக இருந்தால், தனது 'ட்ரெண்டு' வேலையை ராஜிநாமாச் செய்துவிட்டு, ஒரு கம்யூனிஸ்டுப் பத்திரிகையில் சேர்ந்திருக்க வேண்டும்.''

ஸ்காட் மேலஜையைவிட்டு எழுந்தான். 'பில்'லுக்காக ஹோட்டல்காரனை அழைத்துவிட்டு, ''நமக்கு நேரமாகிவிட்டது; நாம் சுற்றிச் சுற்றிப் பேச ஆரம்பித்துவிட்டோம்'' என்றான்.

''நானில்லை; நான் இப்போதுதான் நேரிடையான விஷயத்துக்கு வந்திருக்கிறேன்'' என்றாள் ரோனு.

''நல்லது. இன்னோர் இரவு இதைப்பற்றித் தொடர்ந்து பேசுவோம். ஒரே சமயத்தில் கேட்கக்கூடியதைவிட அதிகமான அரசியல் வாதம் இருக்கிறது உன் பேச்சில்'' என்று சுளிப்போடு கூறிய அவன், சில்லறையை எண்ணி ஹோட்டல் சிப்பந்தியிடம் கொடுத்தான்.

''ஆமாம், ஸ்காட்,'' என்று ரோனுவும் சோர்வுடன் எழுந்து முன்னால் ஹோட்டலை விட்டு வெளியே வந்து ஸ்காட்டுக்காக நடைபாதையில் காத்திருந்தாள்.

கடைசியில் ஸ்காட் வந்து, ''இன்னமும் தீவிரமான யோசனையில் தானிருக்கிறாயா?'' என்று வினவினான்.

''மிஸ்டர் ஹல்லுக்குக் கோபம் வரக் காரணம், முத்துத் துறைமுகத்தின் மீது விழுந்த வெடி குண்டுகளா, அல்லது ஜப்பானியர்கள் 'சமாதானத்'தைப் பற்றிப் பேசிக்கொண்டு அவ

ரது ஆபீசுக்கு வெளியே காத்திருந்த உண்மையா என்று வியந்து கொண்டிருந்தேன்.''

''இப்போது மிஸ்டர் ஹலின் நினைவு எப்படி வந்தது?'' என்ற ஸ்காட் அவள் கையைப் பற்றிக்கொண்டான். இருவரும் காரை நோக்கி நடந்தார்கள்.

''இன்று நடந்த தெல்மாவின் பார்ட்டி மூலம்.''

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. ''எனக்கு உன் பேச்சுப் புதிராக இருக்கிறது. ஆனால் இன்னமும் நீ தெல்மாவின் விடுதியில் கண்ட ஜனங்களைப்பற்றியே நினைத்துக் கொண்டிருந்தால், அவர்களை மறந்துவிடு. அவர்கள் முக்கியமானவர்கள் அல்லர்.''

''அவர்கள் என்னவோ, தாங்கள் தாம் முக்கியமானவர்கள் என்று எண்ணுகிறார்கள். அப்படியில்லையெனில், நான் வேதனைப்படமாட்டேன்.''

''அவர்கள் வெறும் கேலிக் கூத்துக்காரர்கள். ரோனு, நேரமாகிவிட்டது'' என்று ஸ்காட் கடிகாரத்தைப் பார்த்தான்.

''அப்படியானால் சினிமாவுக்குப் போக முடியாதா?''

அவன் நிமிர்ந்து நோக்கினான். சினிமாவுக்குப் போகலாம் என்று அழைத்ததையே அவன் மறந்துவிட்டிருந்ததை அவள் கண்டாள். அவள் சிரமப்பட்டுக் கொண்டு, ''ரொம்பவும் நேரமாகிவிட்டது, ரோனு'' என்றான்.

''சரி... நீங்கள் மேலே என் விடுதிக்கு வந்து சிறிது பானம் அருந்திவிட்டுச் செல்லுங்கள். அதற்கு அதிக நேரமாகாது'' என்றாள் ரோனு.

ஸ்காட் தயங்கினான்.

''இல்லை, வேறெங்கேயாவது உங்களுக்கு வேலை இருக்கிறதா?'' கடந்த சில மாதங்களாக நான் உங்களுடைய அலுவல்களுக்கு இடையூறாக இருக்கிறேன், இல்லையா?''

''இன்றிரவு நீ அர்த்தமில்லாமல் பேசுகிறாய், ரோனு: இன்று நாம் மிகவும் அலைந்திருக்கிறோம். அதைத்தான் நான் சொன்னேன்'' என்ற ஸ்காட், அவளை அருகில் இழுத்து அணைத்துக்கொண்டு நடந்தான். பிறகு, திடீரென்று அவன் குரல் மாறியது. ''ரோனு, இவ்வளவுக்கும் காரணம் பால் ஹேடன்தான். அவன் திரும்பியதிலிருந்து நீ வேதனையில் உழன்று வருகிறாய்.''

''ஸ்காட்—'' என்ற அவள், அவனைவிட்டு நகர்ந்து நின்று, நேருக்கு நேராக அவனை நோக்கினாள்.

''ஆமாம், சமீப காலத்திய நமது தகராறுகளுக்கெல்லாம் காரணம் அவன்தான். உனக்கு என்ன வந்துவிட்டது, ரோனு? அவனைவிட நான் எந்த விதத்தில் குறைந்துவிட்டேன்?''

''ஸ்காட் நீங்கள்—''

''நீ மாறிப்போய்விட்டாய். முன்பெல்லாம் என்னிடம் அன்பு காட்டிய மாதிரி, இப்போது நீ என்னைக் காதலிக்க வில்லை.''

''நான் மாறிப்போய் விட்டேனா? இல்லை, ஸ்காட்; நான் மாறவில்லை.''

''அப்படியென்றால் நான்தான் மாறிவிட்டிருக்கிறேன் என்கிறாயா?'' அவன் அவள் கையை அழுத்தினான்.

''நீங்கள் முன் மாதிரி இல்லை'' என்றாள் அவள் மெதுவாக, வருத்தத்துடன்.

''நான் உன்னைக் காதலிக்கவில்லையா, ரோனா?''

''உண்டு, இல்லை என்று இரண்டு விதமாகவுந்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஓ..ஸ்காட், நமக்கு என்ன நேர்ந்தது? நம்மிடையே ஏதோ ஒன்று முளைத்துவிட்டது.''

''பால் ஹேடன்.''

''அவர் இல்லை!'' அவளுடைய கோபம் அளவைக் கடந்தது. இத் தருணத்தில் எவ்வளவுக்கு அவனை நேசித்தாளோ அதே அளவுக்கு அவனை வெறுத்தாள் ரோனா. உடனே அவள் கையை உதறித் தள்ளிவிட்டுத் திரும்பி ஓடினாள்.

போகும் அவளை வியப்புடன் நோக்கினான் ஸ்காட். பிறகு ''ரோனா...ரோனா!'' என்று அழைத்தவாறு அவனும் பின்னால் ஓடினான். ஆனால் அவன் அவளைப் பிடிப்பதற்குள், தெரு மூலையிலே மாடிஸன் பஸ் ஒன்று வந்து நின்றது; ரோனா அதற்குள் ஏறிவிட்டாள். ஸ்காட் பஸ்ஸை அடைவதற்குள் அது நகர்ந்து விட்டது. தானும் ஏறுவதற்காகப் பக்கவாட்டில் ஒதுங்கினான் அவன். ஆனால் பஸ் வேகமாகப் போய்விட்டது. டிரைவரைத் திட்டிக்கொண்டு ஓடும் பஸ்ஸைப் பார்த்தவண்ணம் நின்றான்.

பிறகு அவன் திரும்பி தனது காரை நோக்கி நடக்கலானான். அவனுடைய முகம் சிவந்து, வாய் இறுகிவிட்டிருந்தது. அவன் மீண்டும் அந்த பஸ் டிரைவரைத் திட்டினான். தன்னையே கூட நொந்துகொண்டான்.

காருக்குள் அமர்ந்த பிறகும் சில நிமிஷங்கள் அசையாமலிருந்தான் ஸ்காட். அவன் மனது ரோனாவையே நினைத்துக் கொண்டிருந்தது. ''அவளை நான் இழந்துவிட்டேன்...'' என்று எண்ணினான் ஒரு கணம். பிறகு மன எழுச்சியுடன், ''இல்லை.. நான் அவளை இழக்கவில்லை; இழக்கவும் மாட்டேன். எதைத் துறந்தாலும் துறப்பேன், அவளைமட்டும் இழந்துவிட மாட்டேன்'' என்று உரக்கவே சொல்லிக்கொண்டான்.

அவன் காரை நகர்த்தி, மெதுவாக ரோனாவின் தெருவுக்குள் நுழைந்தான். அவளுடைய விடுதியின் சாளரங்களில்

ஒளியைக் காணவில்லை. ஆனால், அங்கே வெளிச்சம் இருந்திருந்தாலும் அவன் மேலே சென்றிருக்கமாட்டான். அப்போது மணி பத்தரை. பதினோரு மணிக்கு நிகோலஸ் ஆர்பெனது வீட்டில் இருக்கவேண்டும். (தெல்மா, பதினோரு மணிக்குக் கட்டாயமாக அங்கே வரவேண்டுமென்று சொல்லியிருந்தாள்.) ரோனாவை நாளைய தினம் காலையில் அவன் பார்க்கலாம். அல்லது ஆர்பெனைப் பார்த்தபின் இன்றிரவே கூடக் காணலாம். மீண்டும் ஒரு தடவை அவன் ரோனாவின் இருண்ட பலகணிகளைப் பார்த்தான். ஊஹூம்... .. அவளை நாளைக்கே பார்த்துக் கொள்ளலாம். அவளும் சிறிது அடக்கமாக இருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

ஆர்பெனைப் பார்க்கப் போவதற்கு முன் காரை வீட்டில் நிறுத்திவிட்டுச் செல்வதற்காக அவன் மீண்டும் பிரயாணம் செய்கையில், ஹோட்டலுக்கு வெளியே சற்றுமுன் அவனைப் பிடித்திருந்த அச்சம் மறைந்துவிட்டிருந்தது. அவன் மனது என்னவோ இன்னமும் ரோனாவையே நினைத்துக்கொண்டுதானிருந்தது. ஆனால் இப்போது அதில் பாதிக்கோபமும், பாதிக் கேலி உணர்வும் நிறைந்திருந்தன.

அத்தியாயம் 11

அந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பதினோரு மணிக்கு முன்னமேயே மூன்றாவது அவென்யூ தூங்கி வழிய ஆரம்பித்துவிட்டது. பானக் கடைகளும் ஹோட்டல்களும் மட்டும் ஒளியுடன் விளங்கின. ஒரு சில டாக்ஸிகள் மட்டும் டிராம் தண்டவாளங்களில் மோதிச் சப்தமிட்டுக்கொண்டு இருளிலே ஓடிக்கொண்டிருந்தன. சிறிய கடைகள் இருளில் மூழ்கிக் கிடந்தன.

இருண்டு கிடந்த வாசற்படியொன்றில், சட்டையின் கைப்பாகத்தை மடித்துவிட்டபடி, ஒருவன் அவசரமாகச் சிகரெட் புகைத்துக்கொண்டிருந்தான். குப்பைத் தொட்டிகளை முகர்ந்துகொண்டிருந்த தனது நாய்க்காகக் காத்து நின்றாள் ஒரு பெண். அண்மையிலிருந்த சினிமாக் கொட்டகையிலிருந்து சிறிய கூட்டம் ஒன்று வீடு திரும்பிக்கொண்டிருந்தது. இரண்டு போலீஸ்காரர்கள் மெதுவாக ரோந்து சுற்றிக்கொண்டிருந்தார்கள். ஓர் ஆணும், ஒரு பெண்ணும் ஏதோ விவாதம்

செய்துகொண்டே நடந்தார்கள். மூலையொன்றில் மாலை உடையிலிருந்த நால்வர் டாக்ஸிக்காகக் காத்து நின்றார்கள். பூனை ஒன்று நகங்களால் தரையைப் பிராண்டிக்கொண்டு சந்தேகமான முறையில் அலைந்தது. அவென்யூவிற்கு மேற்கே பாதி காலியாக ஒரு ரெயில் வண்டி பாலத்தின்மீது சப்தமிட்டுக்கொண்டு ஓடிற்று.

மூன்றாவது அவென்யூவைத் தாண்டிய ஸ்காட் எட்லீ, நிகோலஸ் ஆர்பென் வசிக்கும் தெருவிற்குள் நுழைந்தான். அங்கிருந்த பழுப்புக்கல் கட்டிடங்களுக்குப் 'பெயிண்ட்' அடித்துப் பல வருஷங்கள் ஆகியிருக்கும்போல் தோற்றியது; பலகணிகளுக்கு வெளிப்புறம் பெட்டிகள் போன்ற அமைப்பு இல்லை; 'பளிச்' சென்ற வண்ணங்களில் கதவுகளுமில்லை. மாடிப் படிகள் பெயர்ந்து கிடந்தன; கட்டடங்களை ஒட்டிய ஆளோடிகளில் குப்பைகள் நிறைந்து வழிந்தன.

கண் காணாமல் நீண்டு கிடந்த அத்தெருவில் இரவிலே அங்கங்கே நிறுத்திவைக்கப்பட்டிருந்த கார்களைத் தவிர வேறு ஆளரவமில்லை. ஆர்பெனின் முன் அறை மேலே கடைசி மாடியிலிருந்தது. நிழல் சாய்ந்திருந்த அதன் சாளரங்களில் மங்கலான ஒளிமட்டுமே தென்பட்டது. மற்றப் பலகணிகளில் ஒரே இருட்டு. இங்கே வாழ்பவர்களெல்லாம் சீக்கிரமாகவே படுத்துவிட்டிருந்தார்கள். ஆதி நாட்களில் காலம் கடந்து ஆர்பெனின் வீட்டுக்கு நண்பர்கள் வருவது, அவனுடைய அண்டை விடுதிக்காரர்களுக்கு வியப்பாக இருந்தாலும், நாளடைவில் அவர்களுக்கு அது பழக்கமாகிவிட்டது. "அவர் ஓர் எழுத்தாளர்" என்று அவர்கள் தோள்களைக் குலுக்குவார்கள். அதற்குள் எல்லாம் அடங்கிவிடும். ஆனாலும் நியூயார்க்கில் யாரும் வீண் கேள்விகள் கேட்பதில்லை.

வழக்கப்படி மணியை அடித்துவிட்டுக் காத்திருந்தான் ஸ்காட் எட்லீ. கதவு திறந்துகொண்டதும் அவன் அதிக வெளிச்சமின்றியிருந்த ஹாலுக்குள் நுழைந்தான். அங்கே மாடிப்படிகளின் அடியில் ஒரு டெலிபோன் பெட்டியிருந்தது. ஆனால் தனக்கென்று மேலே தனியாக ஒரு டெலிபோன் வைத்திருந்தான் ஆர்பென்.

குறுகலான மாடிப்படிகளின் வழியே மெதுவாக மேலே ஏறினான் ஸ்காட். போகும்போதே எப்போதும்போல் சமைத்த உணவின் வாசனை வந்தது. வழியில் மூடியிருந்த விடுதிகளில் சிலவற்றில் ஆழ்ந்த அமைதி நிலவியிருந்தது; சிலவற்றிலிருந்து குறட்டை ஒலிகள் கேட்டன. அங்கிருந்து மற்றைய விடுதிக்காரர்கள் விடியற்காலையிலேயே எழுந்து வேலைக்குப்

போகவேண்டியவர்கள். சிலசமயம் ஆர்பென் படுக்கப்போவதற்கும் அவர்கள் எழுந்து, காலை உணவை உண்பதற்குங்கூடச் சரியாக இருக்கும். (''அவர் ஓர் எழுத்தாளர்'' என்று அவர்கள் தோள்களைக் குலுக்குவார்கள். அவன் ஞாயிற்றுக்கிழமைகளில்கூட 'டுவீட்' கோட்டும், பழைய கம்பளிச் சராயும் அணிவான். அவனுக்கென்று விடுமுறை நாட்களே கிடையாது. அல்லது, எழுத்தாளர்களுக்குத் தினமுமே விடுமுறைதானோ என்னவோ? ஒரு சோம்பேறித்தனமான வாழ்க்கை.)

ஆர்பெனின் அறைக் கதவு மூடித்தான் இருந்தது. ஆனால் ஸ்காட் மீண்டும் பிரத்தியேகமான சங்கேத முறையில் கதவைத் தட்டியதும், அது திறந்துகொண்டது. வசதிகளோடு கூடிய அறை ஒன்றுக்குள் நுழைந்தான் ஸ்காட். அங்கே பெரிய மேஜை ஒன்றும், நாற்காலிகளும், புத்தக அலமாரிகளும் இருந்தன. ஜன்னல்களைக் கனமான திரைச்சீலைகள் மூடியிருந்தன. படிப்பதற்கான விளக்குகள் மட்டுமே எரிந்துகொண்டிருந்ததால், அந்த அறையே அமைதி வடிவாகத் தோன்றியது. அங்கே கிடந்த காகிதக் கட்டுக்களும், நாற்காலிகளின் மீதும், விளக்கு ஸ்டாண்டுகளின் மீதும் கிடந்த புத்தகங்களும், பத்திரிகைக் குவியல்களுமாகச் சேர்ந்து அங்கே நிலவிய அமைதியை இன்னும் அதிகரிக்கச் செய்தன.

ஆர்பென் தன் கண்ணாடிகளை எடுத்துத் துடைத்துவிட்டு மீண்டும் அணிந்துகொண்டிருந்தான். அவனுக்குப் பின்னால் சாளரத்தை ஒட்டியிருந்த மேஜைமீது ஏதேதோ கையெழுத்துப் பிரதிகள். அவைகள் கவனமாகப் பெரிய 'பிளாட்டிங் பேப்ப'ரால் மூடிவைக்கப்பட்டிருந்தன. நடுத்தரமான உயரத்திற்கும் சற்றுக் குறைவாகவே தோற்றிய அவன் ஒற்றைநாடியாக இருந்தான். அமைதியான மெலிந்த முகம். மெதுவாக, நளினமாகப் பேசிய அவன் தோற்றமும் சாதாரணமாகவே இருந்தது. பரந்து கிடந்த அவன் சிகை பழுப்பாக இருந்தது; கண்கள் சாம்பல் நிறம்; சருமம் வெளுத்து இருந்தது. (தனது இரண்டு சிறிய அறைகளையும் விட்டு அவன் நாட்கணக்கில் கூட வெளியே செல்லாமல் இருப்பதுண்டு). இருந்தும் அவனது அங்க அசைவுகள் வேகமாகவும், தீர்மானமாகவும் இருந்தன. அழுத்தம் திருத்தமாக, ஆனால் ஜாக்கிரதையாகப் பேசினான் அவன்.

இப்பொழுது ஸ்காட்டின் நீட்டிய கையைப் பற்றிச் சுருக்கமாக அவன் குலுக்கியது ஒரு காலேஜ் புரொஃபஸரைப் போலவே இருந்தது. மன்ரோ காலேஜின் போதகர் பதவியை அவன் ஒதுக்கியிருக்கலாம்; ஆனால் அந்தத் தோரணை இன்னமும் அவனிடம் காணப்பட்டது.

''உள்ளே வா....'' என்று அழைத்துக்கொண்டே, மீண்டும் கதவைச் சாத்திப் பூட்டினான் ஆர்பென். பிறகு அவனை

வசதியான நாற்காலி யொன்றில் அமர்த்திவிட்டு, மேஜை மீதிருந்த பீர் பாட்டில்கள் இரண்டையும் திறந்தான்.

இருவரும் நாற்காலிகளில் நன்கு அமர்ந்துகொண்டதும், ''என் கண்கள் சரியில்லை; இன்னமும் சக்தி வாய்ந்த கண்ணாடிகளாக வாங்கவேண்டும்'' என்றவாறு, தனக்குப் பின்னாலிருந்த விளக்கை அணைத்தான். பிறகு, அசைவற்று அமர்ந்த அவன் ஸ்காட்டைத் துருவி நோக்கினான். ஸ்காட் காத்திருந்தானே ஒழிய, இறுதியில் அவனேதான் பேச்சை ஆரம்பிகக வேண்டியிருந்தது.

''உங்கள் சேதியைத் தெல்மா தெரிவித்தாள்'' என்ற ஸ்காட் அறையிலிருந்த கடிகாரத்தைப் பார்த்தான். மணி பதினொன்றடித்து ஆறு நிமிஷங்களாகியிருந்தன.

ஆர்பென் தானும் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, ஒலியற்ற முறுவலுடன், ''நேரம் தவறாமல் இருப்பதற்கு நீ கற்றுக் கொள்ளவேண்டும்'' என்றான். தொடர்ந்து கோட்டுப் பையிலிருந்து புகைக்கும் குழாயை எடுத்துக்கொண்டே, ''என்ன கணக்கமாக இருக்கிறாய்? உனக்கு என்ன நேர்ந்துவிட்டது?'' என்று வினவினான்.

''ரோனாவுடன் ஒரு சிறிய சங்கடம் நேர்ந்து விட்டது'' என்றான் ஸ்காட். உண்மையில் ரோனாவைப்பற்றிக் கடைசியில் தான் சொல்ல வேண்டுமென்று அவனுக்கு எண்ணம். ஆனால், ஆரம்பத்திலேயே விஷயங்களை வெளிக்கொட்டச் செய்து விடும் ஒரு தனி முறை ஆர்பெனுக்கு இருந்தது.

''ஏன், தெல்மாவின் பார்ட்டியை அவள் ரசிக்கவில்லையா?''

''அவளை அங்கே அழைத்துச் செல்லும்படி நீங்கள்தான் சொன்னீர்கள்''. அவன் பேச்சில் மிதந்த கசப்பை அவனால் மறைக்க முடியவில்லை.

''இப்போது நீயே பார்த்துக் கொண்டாயல்லவா?'' என்று கேட்டான் ஆர்பென் கடுமையான குரலில்.

ஸ்காட் அவனை நிமிர்ந்து நோக்கினான். வெளிச்சம் கண்களைக் கூசச்செய்ததால் ஆர்பெனின் முகம் தெளிவாகத் தெரியவில்லை.

ஆர்பென் புகையிலை டப்பாவை எடுத்துத் தன் புகைக் குழாயை நிதானமாய் நிரப்பலானான்.

ஸ்காட் எழுந்து, அறைக்குள்ளே நடந்தான். ''ரோனாவை இவ்வளவு சீக்கிரம் தெல்மாவின் பார்ட்டிக்கு அழைத்துச்

செல்லக்கூடாதென்று நான் கூறினேன். அதற்கு இன்னமும் அவள் தயாராகவில்லை.''

''அவள் ஒருபோதும் தயாராக மாட்டாள். அருகில் வந்து உட்கார் ஸ்காட்! ரோனு மெட்ஃபோர்டைப்பற்றி விவாதிப்பதற்காக உன்னை நான் இங்கே அழைக்கவில்லை. உண்மை நண்பன் என்ற முறையில், அவள் உனக்கு ஏற்ற பெண் இல்லையென்று முன்பே கூறினேன்—'' என்று நிறுத்திய ஆர்பென் கோபத்துடன் கைகளை ஆட்டினுன். அவனுடைய கோபத்தில் இப்போது கேலியும் கலந்திருந்தது.

''நான் ரோனுவைக் காதலிக்கிறேன். செப்டம்பரில் எங்கள் திருமணம் நடக்கப் போகிறது'' என்று மெதுவாகச் சொன்ன ஸ்காட், திரும்பிவந்து நாற்காலியில் அமர்ந்தான்.

''அப்படியா...?''

ஆர்பெனின் கேள்வியில் மிதந்த அழுத்தம் ஸ்காட்டை வாய்திறவாமல் இருக்கச் செய்தது.

ஆர்பென் தொடர்ந்தான்: ''நீ ஏதாவது சிறிய புரட்சி செய்கிருயா ஸ்காட்? அது முட்டாள்தனம். அதுவும் உனது தற்போதைய வேலைக்கு இடையிலா? நான் நண்பன் என்ற முறையில் கூறுகிறேன், ஸ்காட்.''

ஸ்காட் தலையை அசைத்தான். ''எனக்கு இதெல்லாம் அலுத்துவிட்டது.''

''இதெல்லாம் என்றுல்...?''

''இந்த நாடகங்கள் எல்லாம். உண்மையான பலன்களை அளிக்கக் கூடிய தீர்மானமான செயல்களாக ஏதாவது செய்ய வேண்டும்.''

ஆர்பென் உறுதியாகச் சொன்னுன்: ''எந்தச் சண்டையிலும் புகைத் திரைகளுக்கும் உபயோகமுண்டு. எல்லாவற்றிற்குமே ஆபத்து வந்துவிட்ட இந்த நிலையில், எல்லா வழிகளையும் உபயோகப்படுத்த வேண்டும். ஆம், எல்லா வழிகளையும்—சம்பந்தமில்லாததாகவோ, அற்பமானதாகவோ இருந்தாலும் பரவாயில்லை. நான் சொல்லியபடி நீ செய். கேள்விகள் கேட்காதே. பலன் தானுகக் கிட்டும்.''

''எப்போதும் நான் நீங்கள் சொல்லியபடித்தான் நடந்து வருகிறேன்'' என்றுன் ஸ்காட். கடந்த ஆறு மாதங்களில் ஆர்பெனின் கூட்டங்களுக்காகவும், ஏற்பாடுகளுக்காகவும், ரோனுவைப் பார்ப்பதைக் கூடத் தவிர்த்துவிட்ட பல இரவுகளை அவன் நினைத்துக்கொண்டான்.

''இந்த மெட்ஃபோர்டு என்ற பெண்ணுடன் உன்னைப் பிணைத்துக் கொள்ளுவதற்கு முன்பு மட்டுமே நீ எனது உத்தரவுகளைப் புறக்கணிக்காமல் இருந்தாய்.''

''உங்கள் வார்த்தைகளை நான் புறக்கணிப்பதில்லை.'' ஸ்காட் அடித்துக் கூறினன்.

''நீ நிலை தவறி நிற்கிருய்.''

''ஆனல்—'' ஸ்காட் ஆரம்பித்தான்.

''ஆனல் என்ன?''

''நீங்கள் என்னை நம்பவில்லையென்று நான் உணர ஆரம்பித்திருக்கிறேன்.'' ஸ்காட் தயக்கத்துடன் கூறினன்.

''ஏன் அப்படி நினைக்கிருய்?''

''நான்கு வருஷங்களுக்கு முன்பு எனக்கு ராணுவத்திலிருந்து விடுதலை கிடைத்ததும் நான் உங்களிடம் வந்தேன். என் அப்போதைய உணர்ச்சிகளையும் கூறினேன். பழைய தொடர்பின் அறிவினல் நீங்கள் என் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளுவீர்கள் என்றும் நினைத்தேன்.''

''நான்தான் ஏற்றுக்கொண்டேனே!''

''நீங்கள் அத்துடன் நிற்கவில்லை; நான் ஏதாவது உபயோகமாகச் செய்யமுடியும் என்ற நம்பிக்கையையும் என்னிடம் வளர்த்தீர்கள்; எனக்காக முக்கியமான வேலையொன்று காத்துக்கிடப்பதாகவும் சொன்னீர்கள்.''

''ஸ்காட், உன் சிரத்தையை நான் ஒருபோதும் சந்தேகிக்கவில்லை. ஆனல் சிரத்தை மட்டும் இருந்தால் போதாது; மன உறுதியும், கட்டுப்பாடுங்கூட அவசியம்.''

''அவற்றையும் நிரூபிக்க எவ்வளவோ நான் முயன்றிருக்கிறேன்'' என்றான் ஸ்காட்.

''உண்மை, நீ மிகவும் நன்ருகத்தான் வேலை செய்திருக்கிருய். உன்னை எங்களுக்குள் ஒருவனுக ஏற்றுக்கொண்டு விட்டோம். உன்மீது எங்களுக்கு எந்தவிதச் சந்தேகமும் கிடையாது. கட்டுப்பாடுகள் பலவற்றையும் நீ அறிந்து கொண்டு விட்டாய்; ஆனல் பொறுமை மட்டும் உன்னிடம் இல்லை.''

''ஆனலும் முக்கியமான எந்தவேலையையும் நான் செய்ததாகத் தெரியவில்லையே?'' என்று வாதம் புரிந்தான் ஸ்காட்.

''நீ என்னுடன் சேர்ந்து வேலை செய்துவருகிருய். அதுவே முக்கியமானதுதான் என்று உனக்குத் தோன்றவில்லையா?'' ஒரு கணம் ஆர்பெனுக்குக் கோபம் வந்துவிட்டது. பிறகு கேலியாகச் சொன்னன்: ''பல ஆண்டுகளாக நான் உன் நண்பனுக இருக்கிறேன்; அதனல்தான் நான் ஒரு முக்கியமான நபர் என்று உன்னல் நினைக்க முடியவில்லையோ, என்னவோ?''

''நான் அப்படிக் கூறவில்லை.''

''இல்லையா? அல்லது எனது வேலை ஒன்றும் அப்படி முக்கியமல்ல என நினைத்தாயோ? சரி . ரோஜா மெட்ஃபோர்

டைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்து விட்டாயா?'' என்று கேட்டான் ஆர்பென்.

ஆர்பெனின் குரலில் ஓர் எச்சரிக்கை மிதந்ததைக் கண்ட ஸ்காட் நிமிர்ந்து நோக்கினான். பிறகு மெதுவாக, ''ரோனுவுக்கும் இவற்றிற்கும் என்ன சம்பந்தமிருக்கிறது?'' என்று வினவினான்.

''நிறைய சம்பந்தமிருக்கிறது.''

''எனக்குப் புரியவில்லை.''

''புரிந்து கொள்ள வேண்டும், ஸ்காட். உனக்காகக் காத்திருக்கும் பணியை நீ ஏற்க விரும்பினால், உனக்கு ஒரே ஒரு வழிதானுண்டு.'' ஆர்பென் தன் மேஜைக்குத் திரும்பினான். அவன் கையிலே ஒரு காகிதம் இருந்தது.

''பணியா?''

''ஆமாம். ஆனால் அது கஷ்டமானது, முக்கியமானது.''

ஸ்காட்டின் முகம் மாறியது. அவன் நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். ஆர்பெனின் முகத்தில் அரும்பிய முறுவலிலிருந்து, இப்பணி தான் விரும்புவது போலவே முக்கியமானதாக இருக்குமென்று அவனுக்குத் தோன்றியது.

பிறகு ஆர்பென் கையிலிருந்த கடிதத்தைப் பார்த்தவாறு உதடுகளைக் கூட்டிக்கொண்டான். ஸ்காட் காத்திருந்தான்.

ஆர்பென் சொன்னான்: ''இதுவரை நான் எப்போதுமே உன்னிடம் நண்பன் என்ற முறையிலேயே பேசியிருக்கிறேன்; உனது சமாதானங்களைக் கேட்டிருக்கிறேன்; கட்சிக்கு ஆற்ற வேண்டிய கடமைகளுக்கு முன் உனது சொந்த விருப்பங்களை வைக்கக்கூடாது என்பதை நீ உணரும் வரை காத்துமிருந்தேன். உன்னால் ரோனுவைச் சமாளிக்க முடியுமென்றும், உனது சொந்த வாழ்க்கை உன்னை மட்டுமே சார்ந்த விஷயமென்றும் நீ எண்ணிக் கொண்டிருந்தாய். இப்போது நான் கட்சியின் சார்பில் பேசுகிறேன். உன்னுடைய சொந்த வாழ்க்கை எங்களுடைய விஷயமாகும். பாதுகாப்புக்குக் குந்தகம் நேரும்படி நாங்கள் யாரையும் விடமுடியாது. ரோனு மெட்ஃபோர்டு மிகவும் அபாயகரமானவள்.''

''அவள் அரசியல் அறிவில் பக்குவமடையவில்லை என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அவளுடைய அரசியல் அறிவை வளர்க்க நான் முயன்றதும் இல்லை. அவளுடன் அரசியல் பேச்சுக்களை வைத்துக்கொள்ள வேண்டாமென்று நீங்களே சொன்னீர்கள். அவளை வழிக்குக் கொண்டுவரும் பொறுப்பை என்னிடம் விட்டுவிட்டால், கட்சியின் உறுப்பினன் ஆகாம

லேயே அதன் கொள்கைகளை அவள் அறிந்து கொண்டு விடுவாள். அது பத்திரமான வழியும்கூட.''

ஆர்பென் தலையைத் தூக்கிக்கொண்டு சிரித்தான். ''பத்திரமானதா? என்னருமை ஸ்காட், இன்று மாலை டெல்மாவின் பார்ட்டியில் நிகழ்ந்ததைப் பற்றிய முழு விவரமும் எனக்குக் கிடைத்திருக்கிறது, தெரியுமா?''

''ஆனால் அவளிடம் நான் ஒன்றும் சொல்லி வைக்கவில்லை. நீங்கள் அநுமதித்தால்—''

''அர்த்தமற்ற பேச்சு. அவள் முற்றிலும் நம்பத்தகாதவள். முன்னமேயே அவள் நமக்கு நாசத்தை விளைவித்து விட்டாள். 'ட்ரெண்டி'ல் ப்ளாக்வொர்த்திற்கு வேலை போகும்படி செய்தவள் அவள்தான்.''

''அது தற்செயலாக நேர்ந்துவிட்டது. தான் என்ன செய்தோம் என்பது அவளுக்கே தெரியாது. அக்கதையையெல்லாம் அவள் என்னிடம் கூறினாள்.''

''ஆமாம் அவளுடைய கதையை! பிரசுரத்திற்கான கட்டுரைகளை ப்ளாக்வொர்த் எந்த முறையில் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தான் என்பதை வேறு யாராவது க னித்தார்களா? அந்த மடையன் வெயிட்லர் கூடக் கவனிக்கவில்லை. மெட்ஃபோர்டு சொன்னபிறகுதான் அவன் தெரிந்து கொண்டான். அவளைப்பற்றி ப்ளாக்வொர்த் அனுப்பிய 'ரிபோர்ட்டு' என்ன தெரியுமா?'' கையிலிருந்த காகிதத்தைக் கோபத்துடன் நீட்டினான் ஆர்பென். ''அவன் ஒருபட்சமான விவாதங்களை வெளியிடுவதாகவும், அது உண்மையைத் திரித்துக் கூறுவதாகும் என்றும் அவள் சொல்லியிருக்கிறாள். 'ட்ரெண்டு' பிரசுரித்த விஷயங்களுக்குள் உண்மையானவை ப்ளாக்வொர்த் அளித்த கட்டுரைகள் தாம்.''

ஸ்காட் குனிந்து தன் கைகளைப் பார்த்துக் கொண்டான். பிறகு விரல்களைக் கோத்துக்கொண்டு சொன்னான்: ''வீட்டு அமைப்புக்களைப் பற்றிய கட்டுரைகளை ப்ளாக்வொர்த் வெளியிட்டது தவறு. கடந்த ஒரு வருஷமாக ரோனா அதைப்பற்றித்தான் படித்து வந்திருக்கிறாள். இது பற்றிய புள்ளி விவரங்கள் எல்லாம் அவளிடமிருந்தன. எனவே இந்த விஷயத்தில் மட்டுமே அவளால் அவனைக் கவிழ்க்க முடிந்தது. இத்தொடர்க் கட்டுரைகளை மட்டும் வெளியிடவில்லையென்றால் ப்ளாக்வொர்த் இன்னமும் 'ட்ரெண்டி'ல் பணி செய்து கொண்டிருப்பான்.''

ஆர்பென் அவனை வெறித்து நோக்கினான். என்ன சொன்னோம் என்பதை உணர்ந்தபோது ஸ்காட்டின் முகம் சிவந்தது.

ஆர்பென் சொன்னுன்: ''நமது உண்மைகள்தாம் சத்தியமானவை; அவைகள்தாம் அமெரிக்காவை நாம் பார்ப்பதுபோலவே வெளிப்படுத்துகின்றன. அது ஒன்றே உண்மை. ரோனு உன்னைக் கெடுக்க ஆரம்பித்திருக்கிருள். அவளைப்பற்றிய என் கருத்தை நீயே நிரூபித்துவிட்டாய். அவளை நாம் ஏற்கமுடியாது.'' ரோனுவைப் பற்றிய காகிதத்தை அவன் நாற்காலிக்குக் கீழே நழுவ விட்டான்.

ஸ்காட் பதில் பேசாமல் எழுந்தான். விளக்கு ஸ்டாண்டின் மீது கைகளை வைத்துக்கொண்டு நின்றான். அவன் கண்கள், சிகரெட் துண்டுகளாலும் சாம்பலாலும் நிறைந்திருந்த கணப்பின் மீது பதிந்திருந்தன.

நிகோலஸ் ஆர்பெனும் எழுந்தான். மற்ருெருவர் நிற்கும்போது அவன் எப்போதுமே உட்காருவதில்லை. அவன் மேஜையண்டை சென்று செய்திப் பத்திரிகையொன்றைக் கையில் எடுத்துக்கொண்டான். ''நாம் ஆபத்தில் இருக்கிறோம், ஸ்காட். இம்மாதிரியான ஒரு வீண் பயம், இந்த 'சூன்ய' வேட்டை—இவைகளை ஒழிப்பதற்கு உன்னைப்போன்ற விசுவாசமுள்ள, நம்பத்தகுந்த, புத்திசாலித்தனமான இளைஞர்கள் எங்களுக்குத் தேவை. பிறரால் கவனிக்கப்படாமல், பிறருடைய கவனத்தை இழுக்காமல் இருக்கக்கூடியவர்கள் தேவை. ஆமாம், ப்ளாக்வொர்த் ஒரு முட்டாள்தான். நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனுல் நீ சொல்லும் காரணங்களுக்காக இல்லை. தனக்கிருக்கும் பாதுகாப்பின் அளவைத் தவறுக அவன் எண்ணிவிட்டான். அங்கே அவன் தன்னை நிலைப்படுத்திக் கொள்ள ஐந்து வருஷங்களாயின; ஆனுல் ஒரு நாள் திடீரென்று வீழ்ந்து விட்டான். இம்மாதிரியான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நமக்கு நல்லதொரு பதவி போய்விடுகிறது; அத்துடன் அதிகமான சந்தேகங்களுக்கிடையில் மேலே வேலை செய்யவும் நேருகிறது. ஆனுல் நீ ஒரு முட்டாள் இல்லை, ஸ்காட். நீ யோசித்துத்தான் அடியெடுத்து வைக்கிருய். உன்னுடைய ஒரே தவறு இந்த ரோனுதான். அவளுடன் தொடர்பிருந்துங்கூட நீ நன்ருய்ப் பணியாற்றியிருக்கிருய்.''

ஆர்பென் சற்றே நிறுத்தினுன். பிறகு அவன் குரல் கடுமையாக மாறியது. ''ஆனுல் அவளை வைத்துக் கொள்ளக் கட்டி வராத ஒரு நிலையை நீ அடைந்துகொண்டிருக்கிருய். நாங்கள் அவளை நம்பவில்லை. அவள் ஒரு வெகுளி என்று நீ சொல்லுகிருய், ஆனுல் எதையாவது அவள் கண்டுபிடித்துவிட்டால், நீ செய்வதெல்லாம் வீணுகிவிடும். பிறகு உன்னுல் ஓர் உபயோகமும் இருக்காது; உன் மதிப்புக் குறைந்துவிடும். அப்படி மதிப்பை இழந்தவர்களுக்கு என்ன நேருகிறது, தெரியுமா?

ஸ்காட் அறைக்குள் நடக்க ஆரம்பித்தான். ஆர்பென் தொடர்ந்தான்: ''மதிப்பை இழந்தவர்களுக்கு என்ன நேரும்? அவர்கள் ஒதுக்கப்படுவார்கள். மீண்டும் அவர்கள் கட்சிக்கு உபயோகப்படுவதற்குப் பல வருஷங்கள் காத்திருக்க வேண்டியிருக்கும் அல்லது அவர்கள் பெயரையும், அடையாளத்தையும் மாற்றிக் கொண்டு, மீண்டும் ஆதியிலிருந்து தொடங்க வேண்டியிருக்கும். அது வீணான செய்கை. அதனால் எங்கள் வேலைகளுக்குக் குந்தகங்கள் ஏற்படுகின்றன. இப்படித் தங்கள் மதிப்பை இழப்பவர்களின் மீது நாங்கள் நம்பிக்கை வைக்க முடியுமென்று நீ நினைக்கிறாயா?''

''இல்லே'' என்றான் ஸ்காட். அவன் அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்து, கண்களைக் கைகளால் மூடிக் கொண்டான்.

''உன் தீர்மானம் என்ன? நீ எங்களுடன் இருக்கப் போகிறாயா?'' என்று கேட்டான் ஆர்பென்.

''நீங்கள் என்னை நம்பலாம்.''

''எனக்கு நேரான பதில் வேண்டும். முட்டாளாக இருக்காதே, ஸ்காட்!''

ஸ்காட் தலையை நிமிர்த்தினான். ''நான் மட்டுமே முட்டாள் அல்லன். மர்ரேயின் விஷயமென்ன?''

''மர்ரே என்ன செய்தான்?''

''தெல்மாவின் விடுதிக்கு பால் ஹேடனை அவன் அழைத்து வந்து விட்டான். ஹேடன் அங்கே என்ன செய்தான் தெரியுமா?''

''மர்ரே அவனை 'ஆழம்' பார்த்தான். ஹேடன் சாது. அவனுக்கென்று சொந்தமான எண்ணங்கள் இடையாது.''

''என்னது? தெல்மா, மர்ரே, இன்றைய பார்ட்டி, எல்லாவற்றையும் பற்றி ரோனா நினைத்ததை அவன் ஒப்புக்கொண்டதாக அவளே சொன்னாள்.''

இத்தடவை ஆர்பென் மௌனமானான்.

''ஹேடனின் யுத்த சேவையைப்பற்றி உங்களுக்குத் தெரியுமா?'' என்று ஸ்காட் வினவினான்.

''எங்களுக்குத் தெரியும்.''

''ராணுவத்திற்காக வேவு பார்த்தவன் அவன் என்பது உங்களுக்குத் தெரியுமா.''

ஆர்பென் கேட்டான்: ''இதையும் மெட்ஃபோர்டு தான் உனக்குக் கூறினாளா?''

''இது மாதிரி அவள் சொல்லவில்லே. ஒரு நாள் சாப்பிடும் போது ஹேடனைப் பற்றிக் கேட்டேன். அவள் தன்னையறியாமல் இம்மாதிரி நினைக்கும்படியான விஷயங்களைக் கூறினாள்''.

ஆர்பென் புன்னகை பூத்தான். ''அபாயகரமான ரோஜுவைக்கூட நன்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என்று நீ நினைப்பது புரிகிறது. தவிர உனது வேலைகளை மூடி மறைத்துக்கொள்ள ரோஜு திரையாக உதவுவாள் என்றும் நீ நினைக்கிறாய், இல்லையா? நீ சாதாரணக் கட்சி உறுப்பினஞக இருந்தாலோ, அல்லது உனக்கு இப் பெரிய பணியை நாங்கள் அளிக்காவிட்டாலோ அது சரிதான். ஆனால் இப்போது நாங்கள் உனக்கு அளிக்கப்போகும் வேலையை அறிந்தால், அவள் சந்தேகப்படுவாள்; அதை ஒப்பவும் மாட்டாள்.''

''அது என்ன பணி?''

''அதை நீ தெரிந்துகொண்டால், ஒப்புக் கொண்டே ஆகவேண்டும். பின்வாங்க முடியாது. அதை நீ ஒப்புக் கொள்ள விரும்பினால் நாளை இரவு என்னைப் பார். ஐம்பத்தொன்பதாவது தெருவும், மாடிஸன் அவென்யூவும் கூடும் வடகிழக்கு மூலையில் இரவு ஒன்பதரை மணிக்கு என்னைக் காணலாம்.''

''நாளைக்கா? ஆர்பென், எனக்குச் சிறிது அவகாசம் அளியுங்கள்.''

''அவகாசம் கொடுக்க முடியாது. நாளைக்கு என்னைச் சந்திக்கவில்லையென்றால், நீ எங்களிடமிருந்து முறித்துக் கொண்டு விட்டதாகப் புகார் செய்து விடுவேன். அதன் பலனை நீ ஏற்க நேரும்.''

''அட கடவுளே, இதென்ன இப்படி—''

''ஸ்காட், எனது சொந்த விருப்புக்களையும், லாபங்களையும் நான் புறக்கணிக்கவில்லையா? நான் செய்யாத ஒன்றையும் நீ செய்ய வேண்டுமென்று நான் கேட்கவில்லை.''

ஸ்காட் எட்லீ தலையை அசைத்தான். அவன் பேசவில்லை. மெல்ல எழுந்தான். ''நாளை இரவு ஒன்பதரை மணிக்கு என்னைப் பார்'' என்றான் ஆர்பென் சுருக்கமாக. தொடர்ந்து, ''எனது பணியை அப்போது நான் சொல்வேன். தவிர சில முக்கியமான மனிதர்களையும் நீ அங்கே அறிந்து கொள்வாய். நீ பெரிய வட்டாரத்தில் இனிமேல் நடமாடப் போகிறாய், ஸ்காட். மர்ரேக்களையும், தெல்மாக்களையும், ப்ளாக்வொர்த்களையும் இனிமேல் நீ பின்னால் ஒதுக்கிவிடுவாய். நான் நியூயார்க்கை விட்டுப் புறப்படும் முன் இவைகளையெல்லாம் நிலைப்படுத்தி விட்டுச் செல்ல வேண்டும். வியாழனன்று நான் போக இருப்பதால், அதிக அவகாசமில்லை. குட் நைட், ஸ்காட்'' என்றான் ஆர்பென்.

ஸ்காட் எட்லீக்குப் பின்னால் கதவு மெதுவாக மூடிக்கொண்டது. ஜாக்கிரதையாக அவன் படிகளில் இறங்கினான். தெருவில் அடித்த காற்று ஒரு கிழிந்த செய்தித்தாளைக்

கூரைக்குமேலே சுழற்றியது. தொலேவிலிருந்த கட்டடங்க ளில் தெரிந்த விளக்குகள் மங்கலாக இருந்தன.

அவன் எங்கே செல்கிறேம் என்று தெரியாமல் நடந்தான். அப்போது விடியற்காலே நாலுமணி. அவன் தன் தெருவை அடைவதற்குள் அடுத்த நாள் பிறந்து கொண்டிருந்தது.

அத்தியாயம் 12

மறுநாள் காலே ஒன்பது மணி வரையில் தன் விடுதியில் காத்திருந்தாள் ரோஞ. ஆனல் ஸ்காட்டிடமிருந்து டெலி போன் கூட ஒன்றும் வரவில்லே. இரு தடவைகள அவளே டெலிபோன் செய்ய இருந்தாள் ஆனல் ஒவ்வொரு தட வையும் வேண்டாமென்று தீர்மானித்துக் கொண்டாள். எப்போதுமே நான் தான் மன்னிப்புக் கோர வேண்டியிருக் கிறது; ஆனல் இச் சண்டையை ஆரம்பித்தது யார்?''

தனது சிறிய அறைக்குள் அமைதியில்லாமல் அலேந்து கொண்டிருந்தாள் அவள். வந்த கடிதங்கள் பிரிக்கப்படாமல் கிடந்தன; 'டைம்ஸ்' பத்திரிகை படிக்கப்படவில்லே; படுக்கை யறை ஒழிக்கப்படவில்லே; காலே உணவை உண்ட தட்டுக்கள் கழுவப்படவில்லே. நேற்று தான் பேசியது, செய்தது எல்லா வற்றையும் அவள் நினேத்துப் பார்த்தாள். அப்படி அவள் சிறு பிள்ளேத்தனமாக ஸ்காட்டை விட்டு ஓடிவந்தது தவறே என் ருலும், அவள் ஏன் அப்படி ஓடிஞள்? பால் ஹேடனேப் பற்றி அவன் தீர்மானமாகப் பேசியபோது அவளுக்குக் கோபம் வந்த தால் தானே? ஆமாம் அதுதான் அவளேச் சினத்தில் ஆழ்த்தி விட்டது. அவளுக்குத் தன்மீது காதல் உண்டு என்பதை ஸ்காட் அறிவான். அவனேத் தவிர அவளுக்கு வேறு நினேவேயில்லே என்பதையும் அறிவான். அப்படியிருந்தும் பால் ஹேடனேப் பற்றிய பேச்சை எடுத்து அவன் ஏன் அவளே வதைக்கிருன்? தன்னேயுங்கூட வதைத்துக் கொள்ளுகிருன்? ஸ்காட்டுக் காக அவள் எவ்வளவோ நட்புக்களேத் துறந்து விட்டிருக்கி ருள்; அவர்களேயெல்லாம் அவனுக்குப் பிடிப்பதில்லேயாத லால் அவள் அவர்களேப் பார்ப்பதையே நிறுத்தி விட்டாள். கடைசியாக அவள் அளித்த பார்ட்டிக்குக் கூட, பாதிப் பேர் களே ஸ்காட்டின் விருப்பப்படித்தான் அழைத்திருந்தாள். அதே மாதிரி, ஸ்காட்டைச் சந்திக்க வேண்டுமென்பதற்காகத்

தனது சிநேகிதிகள் பலருடைய அழைப்பையும் அவள் ஏற்றுக் கொள்ளாமலும் இருந்திருக்கிறாள்.

'ஓ! ஸ்காட்டைக் குறைகூறக்கூடாது; உன் மீதும் அதே அளவு குற்றம் உண்டு. உனக்குக் காதல் பைத்தியம்' என்று கோபத்துடன் தனக்குத் தானே சொல்லிக்கொண்டாள் ரோனா. கண்ணாடியில் தெரிந்த தனது வெளுத்த வதனத்தையும், சிவந்த விழிகளையும் வெறித்து நோக்கினாள்.

பால் ஹேடனையோ, அல்லது மற்ற எவரையுமோ தவிர இச்சண்டைக்கு ஏதோ காரணம் இருக்கத்தான் இருக்கிறது என்று நினைத்தாள் ரோனா. அதுதான் அவளை வேதனைப் படுத்துகிறது. ஆனால் அக்காரணம் என்னவென்று அவளுக்குப் புரியவில்லை. அவள் ஸ்காட் எட்லீயைக் காதலிக்கிறாளா? அல்லது காதலிப்பதாக நினைத்துக்கொண்டு கடந்த மூன்று வருடங்களை வீணாக்கி விட்டாளா? மகிழ்ச்சியற்ற அவள் விழிகளில் நீர் ததும்பி விட்டது. அவளுடைய துடிக்கும் உதடுகள் இக்கேள்விகளுக்கு விடை தந்தன. அவள் ஸ்காட்டைக் காதலிக்கிறாள்; அவன்தான் அவளுக்குச் சகலமும்!

அவள் கண்ணாடியிலிருந்து திரும்பித் தன் தொப்பியையும் பையையும் தேடச் சென்றாள். இன்று அவளுக்கு ஆபிஸிற்கு அதிகத் தாமதமாகத்தான் போகிறது.

டாக்ஸியில் செல்லத்தான் வேண்டும். அச் செலவைச் சாப்பாட்டுச் செலவில் குறைத்துக் கொள்ளலாம். ஆனால், இச் சண்டையெல்லாம் அற்பமானது; குழந்தைத்தனமானது; முடிவில் அது சரியாகிவிடும் என்றே நினைத்தாள்.

* * *

'ட்ரெண்டு'க் கட்டடத்தில் காலைக்கூட்டம் குறைந்து விட்டிருந்தது. ரோனா துரிதமான 'லிஃப்டி'ல் ஏறினாள். நல்ல வேளையாக வீண் வம்பு பேசும் லிஃப்ட்டுக்காரன் ஜோ அன்று இல்லை. (திங்கட்கிழமை தோறும் அவனுக்கு விடுமுறை; ஜமாய்காவில் நடக்கும் குதிரைப் பந்தயத்துக்குச் சென்றுவிடுவான்.) அவனுக்குப் பதிலாக இன்று 'லிஃப்டில்' இருந்தவன் புதிய ஆள்; அவன் கவலை அவனுக்கு.

வரவேற்பளிக்கும் பெண்ணைத் தாண்டி, நீண்ட தாழ்வாரத்தின் வழியே வேகமாக நடந்து தன் சிறிய ஆபிஸை அடைந்தாள் அவள். அதை ஓர் அறை என்று சொல்வதைவிட, முப்பட்டையான ஒழுங்கை என்று கூறலாம். ஆனாலும் அது அவளுக்கென்று தனியான இடம். அதன் பலகணிவழியே

நல்ல வெளிச்சமும் வந்தது. அறையின் பெரும் பாகத்தை அடைத்திருந்த மேஜையைச் சுற்றிச் சென்ற அவள் தன் தொப்பியையும் கை உறைகளையும் கழற்றி வைத்தாள்; தன்னுடைய கைப்பையை நாற்காலியின் மீது போட்டாள். பிறகு ஒரு நோட்டுப் புத்தகத்தையும் பென்சிலையும் கையில் எடுத்துக்கொண்டு மிஸ்டர் பர்னெட்டின் அறைக்குள் நுழைந்தாள்.

அக்டோபர் மாத 'ட்ரெண்டு' இதழுக்கான வேலைகளைத் தனது சிறிய இலாகாவிலுள்ளவர்களுக்கு முன்னமேயே பகிர்ந்து வைத்திருந்தான் அவன். வழக்கப்படி **ஹேரி ஜிம்சன்** குறிப்புக்களை எடுத்துக்கொண்டிருந்தான். பில் ஆர்னிம் சாளரத்தின் கட்டையில் சாய்ந்துகொண்டு எதையோ நினைவுபடுத்திக்கொண்டிருந்தான். ரோனு உள்ளே நுழைந்ததும் பர்னெட் தலையை நிமிர்த்தி, ''விடுமுறை சுகமாகக் கழிந்ததா? வீடு தேடிக்கொண்டிருந்தாயே, கிடைத்துவிட்டதா?'' என்று வினவினுர். பிறகு, தம் முன்னே கிடந்த கணக்கற்ற காகிதங்களின் மீது அவர் பார்வை சென்றது. அங்கிருந்தவர்களுக்கு யோசனைகள் சொல்லி, விவரிக்க ஆரம்பித்தார். வெளிப்புறங்களை உள்ளேயே கொணர முயற்சிக்கும் தற்போதைய கட்டடக் கலையையும், ஆதிகால ரோமானியர்களும் தற்கால ஜப்பானியர்களும் தோட்டங்களை அமைக்கும் முறையையும் ஒப்புநோக்கும் விஷயம் அப்போது யோசனையில் இருந்தது.

இறுதியில் பர்னெட் சொன்னுர்: ''ரோனு, சாஸ்திரீய முறைகளுக்கு நீ பொறுப்பாளி. ரோமானியர்கள் தங்களது பூங்காக்களை எப்படி வீட்டின் நடுவே திறந்த வெளியில் அமைத்து, அதைச் சுற்றிலும் அறைகளைக் கட்டினுர்கள் என்ற விவரங்களைக் கண்டுபிடி. இதற்காக நீ சிறிது ஆராய்ச்சி செய்யவேண்டியிருக்கும். ஆனுல் அதன்மூலம் நல்ல படத்தைப் பிரசுரிக்கமுடியும். எங்கெங்கே முடியுமோ அவ்விடங்களில் வண்ணப் படங்களையே வெளியிடலாம். ஹேரியிடமும் கலந்துகொள். அவன் தற்கால அமெரிக்க முறைகளை ஆராய்ந்து வருகிருன். அத்துடன் என்னிடமே ரோமானிய 'மொஸாய்க்கு'களைப்பற்றிய மாதிரி விவரங்கள் சில இருக்கின்றன, ரோனு. அவைகள் கவனிக்கத்தக்கவை.''

அதற்குள் தன் நோட்டுப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு புறப்படத் தயாரான ஹாரி ஜிம்ஸன், ''கலிஃபோர்னியாவில் ஒருவன் இருக்கிருன். அவன் திறந்த மாடியையும், குளத்தையும் தன் அறைக்குள்ளேயே அமைத்திருக்கிருன். அதற்குத்

தேவையானதெல்லாம் சில மீன்களும், அடிமைப் பெண்களுந் தான்'' என்றான்.

''ஏன், கூரையில் ஒரு துவாரமும் வேண்டுமே. அவன் என் வீட்டை வாங்கியிருக்கவேண்டும். நேற்று முழுவதும் அதன் மேல் துவாரங்களை நான் அடைத்துக்கொண்டிருந்தேன்'' என்று கூறிய பில் ஆர்னிம், ரோனாவைப் பார்த்து முறுவலித்துவிட்டு அறைக்கு வெளியே சென்றான். பிறகு அவன் ஜிம்ஸனின் பக்கம் திரும்பி, ''பார்த்தையா, ரோனா என்னவோ இன்று கணக்கமாக இருக்கிறாள்'' என்றான்.

''இன்று திங்கட்கிழமை'' என்றான் ஹேரி ஜிம்ஸன்.

''ஒருவேளை அந்தப் பாழும் வதந்தி அவள் காதுக்கு எட்டியிருக்குமோ?''

''நிச்சயம் எட்டியிருக்கும்.''

''இம்மாதிரியான வதந்தியெல்லாம் எப்படித்தான் கிளம்புகிறதோ?'' என்று கூறிவிட்டு அவர்கள் பிரிந்தார்கள். அவர்கள் இருவருக்குமே ரோனாவை நன்றாகத் தெரியும். சண்டைக்குப்பின் அவர்கள் 'ட்ரெண்டி'ல் சேர்ந்தது முதல் அவளை அறிவார்கள். ''இந்தக் கூற்றில் அர்த்தமே இல்லை'' என்றான் பில் கோபத்துடன.

இக்கடைசி வாக்கியத்தைக் கேட்டுக்கொண்டே பர்னெட்டின் அறையிலிருந்து வெளியேவந்த ரோனா, ''நீ ஏதாவது அர்த்தத்தைப் புகுத்துவதுதானே? பில், ஜப்பானியர்கள் இயற்கையை அணுகும் முறைகளை வரைந்துவிட்டீர்களா?'' என்று வினவினாள்.

''ஓ! நான் டோக்கியோ மீது வெடிகுண்டு வீசிய விமானத்தில் இருமுறைகள் பறந்தவனாயிற்றே?''

''எனக்கு எப்போதுமே மூன்று சுவர்களுடைய அறைகளைப் பற்றிய கருத்துக்கள் பிடிக்கும். ஆனால் நான்காவது சுவருக்குப் பதிலாக ஏதாவது இயற்கைக் காட்சி இருக்க வேண்டும்.''

''அதுமட்டுமில்லை. தலைச்சளி வராத சீதோஷ்ண நிலையும் வேண்டும்.'' அவர்கள் இருவரும் கலைப்புத்தக அலமாரியிடம் சென்று, தேவையான புத்தகங்களைத் தேர்ந்தெடுக்க ஆரம்பித்தார்கள். பில் ஆர்னிம் மேலே பேசினான். தான் போவதற்குமுன் அவளைச் சிரிக்கக்கூடச் செய்துவிட்டான்.

தேர்ந்தெடுத்த புத்தகங்களைத் தன் அறைக்குத் தூக்கிச் சென்று மேஜைமீது பரப்பினாள் ரோனா. அவளுக்குச் செய்ய வேண்டிய வேலை நிறைய இருந்தது. கடுமையான வேலைதான் தனக்குத் தேவையென்று அவள் நினைத்தாள். முதலில் பெருவாரியான கருத்துக்களை ஒன்றுசேர்க்க வேண்டும். பிறகு

அவற்றைக் குறுக்கி, ஆழ்ந்து ஆராயவேண்டும். அதற்குப் பிறகு அவள் ஃப்ரிக் நூல் நிலையத்திற்கும், மெட்ரோபாலிடன் மியூஸியத்திற்கும் செல்லவேண்டும். ஆனல், தனக்குத் தேவை யானது எது என்பதை அவள் தீர்மானித்துக்கொண்ட பிறகு தான் அதற்கு அவசியமேற்படும்.

அவள் மேஜையண்டை அமர்ந்து, மிகவும் முக்கியமான புத்தகங்களைத் தன் அருகில் இழுத்துக்கொண்டாள்.

''ரொம்பவும் வேலையோ?'' 'பளிச்'சென்று ஒரு குரல் கேட்டது. கதவண்டை ஒயிலாக நின்ற மிஸ். கட்மெனின் குரல் அது. நிச்சயதார்த்தம் ஆனதிலிருந்தே அவளுடைய துடியான முகம் சாந்தமாகிவிட்டிருந்தது; அவள் தோரணை களில் அதிகமான பெண்மை ஒளிர்ந்தது. கதவைப் பிடித்துக் கொண்டு நின்ற அவளுடைய இடது கை நன்கு தெரிந்தது. அவள் அக்கையிலிருந்த மோதிரத்தின் சதுரமான வைரத்தைப் பார்த்துக்கொண்டே சொன்னுள்: ''நான் உன்னை அதிகம் தொந்தரவு செய்யமாட்டேன். தபால்கள் இன்று கலந்து போய்விட்டன. இக்கடிதம் தவறுதலாக ஹேடனிடம் போய் விட்டது. அவர் இதை உன்னிடம் கொடுக்கச் சொன்னார்.'' கதவிலிருந்த கையை எடுத்துக்கொண்டு உள்ளே வந்த அவள், ஒரு கவரை ரோனுவிடம் கொடுத்தாள்.

''போர்டிகோக்களைப் பற்றிய நமது கருத்துக்களை ஒப்புக் கொள்ளாத தென்னுட்டான் யாராவது எழுதியிருப்பான். வந்தனம், மிஸ். கட்மென்.''

''மிஸ்டர் க்ரோவெல்லைப்பற்றிக் கேட்டாயா? அவர் நிலைமை மிகுந்த கவலையளிக்கிறதாம்; ஆஸ்பத்திரியில் இருக் கிருர்.''

''வருத்தம் தரும் செய்தி'' என்ருள் ரோனு.

''ஆமாம்...'' என்ற கட்மென், இன்னமும் போகாமல் தொடர்ந்தாள்: ''எனக்கு ஒரு சிறு பிரச்னை. எங்கள் விடுதியில் விருந்தாளி அறைக்குப் பக்கத்தில் ஹியூபர்ட் ஒரு குளியறை கட்டுகிருர். ஸெயின்ட் லூயிஸ்ஸிலிருந்து இப்போதுதான் திரும்பிய அவர், வீடு மிகவும் பகட்டாகவே இருக்கப் போகிறது என்கிருர். இந்தப் புதிய குளியறைக்குக் கீழே சலவைக்கற்கள்தாம் போடுகிறேம் — மங்கலான வண்ணத்தில். என் பிரச்னை என்னவெனில், அதன் திரைச்சீலைகளும், துவாலை களும் ஆழ்ந்த வண்ணத்தில் சற்று அதிகமான நீலத்தில் இருக்கலாமா, கூடாதா என்றுதான். அல்லது ஆழ்ந்த சிவப்பு சரியாக இருக்குமா? இது ஒரு பிரச்னைதானே?''

''ஆமாம்'' என்ருள் ரோனு. ''ஆனல் கடைகளில் என்ன நல்லதாகக் கிடைக்கிறது என்று பார்த்தால், சுலபமாக எதையாவது தேர்ந்தெடுக்கலாம்.''

''அதுவும் நல்ல யோசனை. சரி...நான் போகவேண்டும். ஆமாம், நேற்று உனக்கு வீடு ஏதாவது கிடைத்ததா?''

''இல்லை.''

''அதற்குப் பதில், உனக்கு வேறு வேண்டாதது ஏதாவது கிடைத்தமாதிரி சுணக்கமாக இருக்கிறாயே?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை. நேற்றிரவு நான் நன்றாகத் தூங்கவில்லை. அதுதான் காரணம்.'' ரோனா அத்துடன் தன் முன்னே இருந்த புத்தகங்களைப் புரட்டலானாள்.

திடீரென மிஸ். கட்மெனின் முகத்தில் வேதனை படர்ந்தது. கதவுவரை சென்ற அவள் திரும்பி, ''ஓ! அந்த வம்புப் பேச்சை நினைத்து நீ மருகாதே. நாங்கள் அதில் ஒரு வார்த்தையைக்கூட நம்பவில்லை'' என்று கூறிவிட்டு வேகமாகப் போய்விட்டாள்.

அவளைப் பின்னாலிருந்து வெறித்து நோக்கினாள் ரோனா. பிறகு மிஸ். கட்மென் கொண்டுவந்த கடிதத்தைக் கையில் எடுத்தாள். பால் ஹேடன் தன்னைத் தீர்மானமாக ஒதுக்குவதை நினைக்கையில், அவள் இதழ்கள் குறுநகை புரிந்தன. நேற்றுத் தெல்மாவின் வீட்டில்கூட, அவள் தனிமையில் தவிப்பதைக் கண்டுதான் அருகில் வந்தான். இப்படிப் பால் ஹேடன் ஆபீசிலே அவளை ஒதுக்குவதை ஸ்காட் பார்த்தால் எப்படியிருக்கும்! ஆனால் அவன் பார்க்கப்போவதில்லை. அவள் முகத்தைச் சுளித்துக் கொண்டு, இம்மாதிரியான எண்ண ஓட்டத்தை அறுத்துக்கொண்டாள். பிறகு அழகான கையெழுத்தில் விலாசம் எழுதப்பட்டிருந்த அந்தக் கடிதத்தைப் பிரித்தாள். அக்கடிதத்தின் உறையின்மேல் இடது மூலையில் 'அவசரம்' என்று எழுதப்பட்டிருந்தது. உள்ளே இருந்த கடிதத்திலும் அதேமாதிரியான எழுத்து. தவிர அந்த உறைக்குள்ளே கனமான, முத்திரை வைத்த மற்றொரு உறையும் இருந்தது. அந்த உறையின்மீது, ''கடிதத்தில் கூறியபடி மட்டுமே இதைப் பிரிக்கவும்'' என்று எழுதியிருந்தது.

கடிதத்தை எடுத்த அவள் 'பார்க் அவென்யூ' என்றிருந்த தலைப்பை வியப்புடன் பார்த்துவிட்டுச் 'சட்'டென்று அடியிலிருந்த கையெழுத்தைப் பார்த்தாள். 'சார்லஸ்' என்ற கையெழுத்து அது.

எளிய முறையில் எழுதப்பட்ட கடிதம் அது. 'ஞாயிறு மாலை, ஏப்ரல் 30-ஆம் தேதி, எட்டு மணி' என்று தேதி இடப்பட்டிருந்தது. அக்கடிதம் வருமாறு:

''பார்ட்டி இன்னமும் நடந்து கொண்டிருக்கிறது. என்னுடைய அறையில் என்னை நிம்மதியாக விட்டிருக்கிறார்கள். பிறகு, வெளியே செல்லும் சில விருந்தாளிகளோடு நானும்

மெல்ல நழுவி விடுவேன். அப்போது இக்கடிதத்தை உனக்குத் தபாலில் சேர்ப்பேன். ஏன் தெரியுமா? எனக்கு உன்னை நயபலாமென்று தோன்றுகிறது. தவிர, நான் உன்னுடன் தொடர்பு கொள்வேனென்று வேறு ஒருவரும் எதிர்பார்க்கமாட்டார்கள். எனவே, என்னால் உனக்கு அபாயம் நேராது.

''நான் என்ன செய்யவேண்டுமென்று எனக்கு இப்போது தெரிந்துவிட்டது. ஆனால் அதை எப்படிச் செய்வது என்பதுதான் இன்னமும் பிரச்னையாக இருக்கிறது. தெல்மாவை நோகச் செய்ய எனக்கு விருப்பம் இல்லை. அதுதான் சிரமம். எப்போதுமே எனக்கு இதுதான் இடைஞ்சலாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் நான் இப்போது எதிர்பார்ப்பதைப் போல் ஏதாவது நேருமானால், என் பிரச்னை தீர்ந்துவிடும். அத் தருணத்தில் எனக்கு மனத்தைப் பொறுத்த வரையில் விடுதலை கிடைத்துவிடும்; ஆனால் வாய்திறந்து பேசச் சுதந்தரமில்லாமல் போகலாம். அப்போதுதான் எனக்கு உன் உதவி தேவையாக இருக்கும்.

''இத்துடன் வரும் முத்திரையிட்ட கடிதத்தை சனிக்கிழமை வரையில் பத்திரமாக வைத்திரு. இக் கடிதத்தையும் கூடப் பத்திரப்படுத்திவை. ஏனெனில், இவையிரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்பு உள்ளவை.

''சனிக்கிழமைக்குள் என்னிடமிருந்து உனக்குத் தகவல் எதுவும் இல்லையெனில், பொறுப்பு வாய்ந்த, நம்பத்தகுந்த யாரிடமாவது இதைக் கொண்டுபோய்க் கொடுத்து, அவரை உடைக்கச் செய். அவரிடம் என்னைப் பற்றி நீ அறிந்ததைக் கூறு. என்ன செய்யவேண்டுமென்று அப்போது அவருக்குப் புரியும். 'ட்ரெண்டி'ன் ஆசிரியர் வெயிட்லரிடம் நீ இதைக் கொடுக்கலாமோ? அண்மையில், அவருக்குச் சிறிது அநுபவம் கிடைத்திருக்கிறது. அதனால் அவர் உன் பேச்சைக் கேட்கக் கூடும். நீ நம்பத் தகுந்தவர்கள் இன்னும் பலர் இருக்கலாம்; ஆனால் அவர்களில் ஒரு சிலரே இதைக் காதில் வாங்கிக் கொள்வார்கள். இது ஒரு விதத்தில் எனக்கும் சிரமமாகவே இருந்துள்ளது.

''நான் உனக்குத் தகவல் கொடுப்பதை எதிர்பார்த்து நீ காத்திருக்கையில், இக்கடிதத்தையும், மற்ற 'கவரை'யும் பத்திரமாக வைத்திரு. ஒருவரிடமும் எதுவும் சொல்ல வேண்டாம்; ஒன்றுமே சொல்லவேண்டாம், தயவு செய்து.

''கவனமாக நான் சொன்னபடி மட்டும் செய்ய வேண்டுமென்று கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். நான் உன்னை ஏன் நாடுகிறேன் தெரியுமா? இன்றிரவு அந்த அறையில் நான் கண்டவர்களுக்குள் உன் முகந்தான் என் செயலைக் கண்டு வேதனைப்படுவதாகத் தோன்றியது. மற்றவர்கள் கோப

மடைந்தார்கள்; அல்லது கேலி செய்தார்கள். நீ மட்டுமே வேதனையுற்றாய். என்னைப்பற்றி யாரிடமும் பேசிவிடாதே. இக்கடிதத்தைப் படித்ததையே மறந்து விடு. நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்வது போல் மட்டுமே செய். தயவு செய், சனிக்கிழமை வரை.

சார்லஸ்

பின்குறிப்பு :

இதை நான் கையால் எழுதுகிறேன்.

(1) டைப் செய்தால் அச்சப்தம் மார்டினுக்குக் கேட்கும்.

(2) நான் குடிபோதையிலா இருக்கிறேன்?''

ரோஜு கடிதத்தை இரு தடவைகள் படித்தாள். முதலில் அவளுக்குக் கோபம் வந்தது. பிறகு அதன் எல்லை மீறிய தன்மை அவளை அசைத்தது. சார்லஸ்ஸைப் போல் இவ்வளவு நிறுத்தி அழகாக எழுதும் யாரும் குடிபோதையில் இருக்க முடியாது. அதிகம் குடிப்பதுபோல் அவன் பாசாங்குதான் செய்தானே? ஏன்? பிறகு, அமைதியான அச்சிறிய மனிதனை அவள் நினைத்துப் பார்த்தாள். அந்த வெளுத்த, தூய்மையான முகம், செம்பட்டைக் கேசம், அநுதாபத்தைக் கிளறும் கேலிக் குரல், கவனமான கண்கள், அதை மறைக்கும் மூக்குக் கண்ணாடி—எல்லாவற்றையும் நினைத்துக் கொண்டாள். அவன் தன் அறையில் உட்கார்ந்திருந்தான்; அறைக் கதவு பூட்டியிருந்தது; உள்ளிருந்தபடியே வெளியேயிருந்து மெதுவாகக் கேட்கும் சிரிப்பொலிகளையும், சங்கீதத்தையும் கேட்டுக் கொண்டிருந்தான். ஏதோ சதிக் குற்றம் செய்தமாதிரி, டைப் கூடச் செய்யாமல் அவன் இக் கடிதத்தை எழுதியிருக்கிறான். அந்த மார்டின் என்பவன் யார் என்று வியந்தாள் ரோஜு.

பிறகு அவள் மீண்டும் படித்தாள்: '' நீ நம்பத் தகுந்தவர்கள் இன்னும் பலர் இருக்கலாம்; ஆனால் அவர்களில் ஒரு சிலரே இதைக் காதில் வாங்கிக் கொள்வார்கள். இது ஒரு விதத்தில் எனக்கும் சிரமமாகவே இருந்துள்ளது.''

கடிதத்தையும், உறையையும் மீண்டும் ஒன்றாகச் சேர்த்து, அவைகளைத் தனது கைப்பையில் வைத்துக் கொண்டாள். 'ஒருவரிடமும் எதுவும் சொல்ல வேண்டாம்; ஒன்றுமே சொல்ல வேண்டாம்.' ஸ்காட்டிடம் கூடவா? பெக்கி, ஜான் முதலியவர்களிடம் கூடவா? அவள் இவற்றை எங்கே பத்திரமாக வைக்கப்போகிறாள்? சார்லஸ் அவளைக் காண நேர்ந்தால், மீண்டும் ஒருதடவை இம்மாதிரியெல்லாம் செய்யக் கூடாதென்று தெளிவாகச் சொல்லிவிடவேண்டும். அவளுக்கு இருக்கும் கஷ்டங்கள் போதாவா? ஆனால் அவள் இக்கடி

தத்தை எங்கே வைப்பான்? ஆபீசில் அவனுக்கு ஒரு ஃபைலிங் அலமாரி மட்டுமே உள்ளது. அதற்குப் பூட்டு இல்லை. பர்னெட்டின் பீரோ எப்போதும் திறந்தே இருக்கும்—பூட்ட வேண்டுமென்ற ஜாக்கிரதையும் அவரிடம் இல்லை. மிஸ்டர் வெயிட்லரின் பீரோவில் வைத்தால்? ஆனால் அவரை எப்படிக் கேட்பது? என்ன காரணம் சொல்வது? எஜமானரிடம் போய் 'இதை வைத்திருங்கள்' என்று கேட்க முடியாது. கிராண்டு சென்டிரல் ஸ்டேஷனில் உள்ள ஒரு 'டெபாஸிட்' பெட்டியில் வைக்கலாமென்றால், இதற்காக அவ்வளவு தூரம் போயாக வேண்டும். தன் விடுதியிலேயே ஒரு தொப்பிப் பெட்டியிலோ, அல்லது மருந்துப் பெட்டியிலோ வைத்தால்? ஆனால் சார்லஸ் அதை ஆபீஸ் விலாசத்திற்கு அனுப்பியிருக்கிறான். அவனுடைய விடுதியில் அது இருக்கக்கூடாதென்று நினைத்தானோ என்னவோ? இல்லையெனில், டெலிபோன் புத்தகத்திலிருந்து எளிதில் அவனுடைய வீட்டு விலாசத்தைக் கண்டு பிடித்திருக்கலாமே!

பிறகு, திடீரென்று தனக்கு ஏன் இந்தச் சிறிய மனிதனைப் பற்றி இவ்வளவு கவலை என்று வியந்தாள். அவள் அத்துடன் தன் புத்தகங்களைத் திறந்து, தீர்மானத்துடன் ரோமானியர்களுடைய வீட்டுத் தோட்டங்களைப் பற்றிப் படிக்க ஆரம்பித்தாள்.

★ ★ ★

திருமதி ஹார்ஷி கையில் கட்டுக் காகிதங்களுடன் மிஸ்டர் வெயிட்லரின் அறையிலிருந்து வரும் வரை காத்திருந்தாள் மிஸ். கட்மென். பிறகு, குரலைத் தாழ்த்திக்கொண்டு, மற்றப் பெண்கள் கேட்காத வகையில், ''ரோனா மெட்ஃபோர்டு அதைக் கேட்டிருக்கிறாள் என்று தெரிகிறது'' என்றாள்.

''எதைக் கேட்டிருக்கிறாள்?''

''அந்த வதந்தியை .. உனக்கும் தெரியுமே.''

திருமதி ஹார்ஷி முகத்தைச் சுளித்துக்கொண்டாள். ''அது நம் ஆபீஸ் வரை எட்டி விட்டதா என்ன?'' சென்ற வாரம் சாப்பாட்டு நேரத்தில் ஹோட்டல்களில் அப்பேச்சு அடிபட்டது. வெள்ளிக்கிழமையன்று திருமதி ஹார்ஷி தன் சிநேகிதி மிஸ் ப்ளென்டனுடன் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது அவள் இந்த வம்புப் பேச்சை அவிழ்த்தாள். மிஸ் ப்ளென்டன் 'மாடர்ன்' பத்திரிகையில் வேலை செய்பவள். அவள் ரோனாவைப் பற்றிக் கூறியதும், திருமதி ஹார்ஷி அவளுக்குச் 'சுடச் சுட'ப் பதில் கொடுத்துவிட்டாள். ரோனா, மணமான ஒருவனை துரத்திக்கொண்டு போனாள் என்றும், பிறகு தனது பழைய காதலனுக்காக அவனுடைய வேலைக்கு 'வேட்டு' வைத்துவிட்டாளென்றும் சொன்னால், அவளை நன்கு அறிந்

திருந்த யார்தான் நம்பமுடியும்? கோபத்தால் திருமதி ஹார்ஷி யின் முகம் சிவந்துவிட்டது. ரோனுவை யாராவது தாக்கிப் பேசினால், அது 'ட்ரெண்டை'யே தாக்குவது போல்தான். அப்படித்தான் அவள் நினைத்தாள். தவிர, இதெல்லாம் அபத்தமான பேச்சு. அவளும், மிஸ் கட்மெனும் அப்படித் தான் எண்ணினார்கள்.

மிஸ் கட்மென் தன் இடக் கையைக் குனிந்து பார்த்துக் கொண்டாள். தன் மோதிரம் ஒளிபட்டு மின்னுவதற்காக, அந்த மூன்றாவது விரலை மட்டும் அசைத்தாள். ''இன்று காலை யில் கைகளை அலம்பும் அறையில் பெண்கள் எல்லாம் அதைப் பற்றித்தான் பேசினார்கள். ரோனு இதுமாதிரி செய்வாளா?''

''என்ன, நீயுமா இப்படிக் கேட்கிறாய்?'' என்று சீறினாள் திருமதி ஹார்ஷி.

''அவள் செய்தாளென்று நான் சொல்லவில்லை. ஆனால் ஒன்று மட்டும் உறுதி. இதை ஸ்காட் எட்லீ விரும்பப் போவ தில்லை.'' மிஸ் கட்மென் டைப் செய்ய ஆரம்பித்துவிட்டாள்.

திருமதி ஹார்ஷி பதில் சொல்லவில்லை. அவள் பற்களைக் கடித்துக்கொண்டு, தனது குறிப்புகளைப் படிக்கலானாள். ஆனா லும் அவளுடைய முகச்சுளிப்பு மாறவில்லை. அவசரமான கடி தங்களை டைப்செய்து முடித்ததும், அவள் வெளியே சென்றாள்.

நேராக அவள் பால்ஹேடனிடம் வந்தாள். அவனிடம் இக் கதையைக் கூறி முடித்ததும், ''இது என்னைப் பொறுத்த விஷ யமில்லை. ஆனால் யாராவது இதில் தலையிட்டு நிறுத்த வேண் டும்'' என்றாள்.

பால் ஹேடன் தலையை அசைத்தான். அவள் சென்றதும், தானும் எழுந்து வெயிட்லரைக் காணச் சென்றான். வெயிட்ல ரிடம் இக் கதையைக் கூறியபோது அவர் கவனமாகக் கேட் டார். இறுதியில் ''இதற்கு ஏதாவது செய்தாக வேண்டும்'' என்றான் பால் ஹேடன்.

''ஆனால், என்ன செய்யமுடியும்?'' வெயிட்லரின் முகத் தில் கவலை தோய்ந்திருந்தது. அவர் நாற்காலியை நகர்த்திக் கொண்டு சாளரத்தின் வழியே பார்வையை வெளியே திருப்பி னார். பிறகு அவர் மெதுவாகச் சொன்னார்: ''நேற்று கிளப்பில் யாரோ சொன்னது சரிதான் போலிருக்கிறது. எனக்குத் தெரிந்த பிரசுரகர்த்தர் ஒருவர், 'ட்ரெண்டி'ல் ஏதோ தகராறு என்று கேள்விப்பட்டதாகச் சொன்னார். பெண்களை வேலைக்கு வைத்துக் கொள்வதால் விளையும் இன்னல்கள் இவை என்றும் கூறினார்.''

பிறகு வெயிட்லர் நாற்காலியை இழுத்து பால் ஹேடனுக்கு எதிராகப் போட்டுக்கொண்டார். ''ரோனு மெட்ஃபோர்டை

யும், ப்ளாக்வொர்த்தையும் பற்றிய இக்கதை வேண்டுமென்றே கற்பனை செய்யப்பட்டதென்று நீ நம்புகிறாயா, பால்?''

''இதற்குமுன் ரோனுவைப் பற்றி எவ்விதமான அபவாதமும் வந்ததில்லை. இப்போது மட்டும் ஏன்?''

இது உண்மைதானென்று நினைத்தார் வெயிட்லர். ப்ளாக்வொர்த் வெளியேற்றப்பட்டதன் காரணத்தை மறைக்க இது ஒரு சூழ்ச்சியாக இருக்கக் கூடும். நிச்சயமாக இதற்கு அந்தக் கம்யூனிஸ்டுகள் ரோனுவைத்தான் குற்றம் சாட்டுவார்கள். ''ஆனால் யார் இக்கதையைத் திரித்திருக்க முடியும்? இந்த அற்பமான கதையை!''

பால் பதிலளிக்கவில்லை. இந்த வம்புப்பேச்சு கற்பனை செய்யப்பட்டதோடு நிற்கவில்லை. நன்கு பரப்பப்பட்டும் வருகிறது. அதுதான் அவனுக்கு வேதனையை அளித்தது.

''நான் குறிப்பிட்ட பிரசுரகர்த்தர் இன்னும் ஒருசம்பவத்தைச் சொன்னார். சோவியத் நாச வேலைகளைப்பற்றி அவர் அண்மையில் வெளியிட்ட முக்கியமான புத்தகம் ஒன்று நன்றாக விற்பனையாகவில்லை. அவருக்கு நன்கு தெரிந்த கடைக்காரர்களே இதுபற்றி வியந்தார்கள். அதனால் இதுபற்றி ரகசியமாக விசாரிக்க ஒருவரை அவர் அனுப்பினார். அந்த மனிதர் கடைகளில் எல்லாம் சென்று பார்த்தபோது, அப்புத்தகம் காட்சியாக வைக்கப்படவில்லை. சில கடைகளில் நல்ல முறையில் அது விளம்பரப்படுத்தப்படவில்லை. அடுக்கடுக்காக அதன் பிரதிகள் எங்கோ ஒரு மூலையில் போடப்பட்டிருந்தன. இதற்குக் காரணம் யார் தெரியுமா? ஒரு குமாஸ்தாதான். அங்கிருந்த பத்து.இருபது குமாஸ்தாக்களில், ஒருவன் மட்டும் இப்புத்தகத்தைக் கவனிப்பதில் அதிக சிரத்தை காட்டினான். புத்தகம் வாங்குபவர்களின் பார்வையில் விழாமல் அதை ஒரு மூலையில் அவன் போட்டுவிட்டான். இப்போது அதைச் சொன்னால், யார் நம்புவார்கள்? இருந்தும் இப்பிரசுரகர்த்தர் மற்ற வியாபாரிகளிடம் விசாரித்தபோது, கம்யூனிஸ்டுகளுக்குப் பிடிக்காத புத்தகங்களைப் பொறுத்தவரையில் தங்களுக்கும் கடந்த வருஷங்களில் இப்படிப்பட்ட சிரமங்கள் ஏற்பட்டதாக அவர்கள் அறிவித்தனர். சின்னக் கஷ்டங்கள்தாம். இவற்றை வெளிக்கொண்டுவந்தால் நமக்குத்தான் அசட்டுப்பட்டம் கிடைக்கும். அற்பமான விஷயங்களை ஓர் ஆயுதமாக உபயோகிக்கலாம் என்பது நம்பக்கூடியதும் அன்று. இதை நினைத்தால்தான் எனக்கு ஒரே அவதியாக இருக்கிறது—இந்த அற்ப விஷயங்கள்!''

''ஆமாம். அது அற்பமானதுதான். ஆனால் அதே சமயம் அது பலரைத் துன்பத்தில் ஆழ்த்துகிறது'' என்றான் பால். பிறகு தொடர்ந்து, ரோனு மெட்ஃபோர்டின் விஷயம் என்ன ஆவது என்று நேரிடையாகக் கேட்டான்.

''பிளாக்வொர்த்தைப் பற்றிய உண்மையை நாம் வெளியிட முடியாது.''

''ரோனுவிடம் மட்டும் சொன்னுல் என்ன? அப்போதுதான் அவளுக்கு இந்த அவதூறுக்கான காரணம் புரியும். நிச்சயம் இந்தவம்பு அவளுடைய காதுக்கும் எட்டத்தான்போகிறது.''

''காலை வேளையில் இது நல்ல தொந்தரவு நமக்கு! சரி... நாம் அவளை இங்கே அழைப்போம். நீயும் இங்கிரு, எனக்கு உன் உதவி தேவை, பால்'' என்று கூறிய வெயிட்லர் டெலிபோனை எடுத்து, ரோனுவைத் தன் அறைக்கு வருமாறு அழைத்தார் பிறகு மீண்டும் தன் நாற்காலியில் அமர்ந்து, ''வேதனை வேண்டாம், பால். ரோனுவிடம் நான் முழு விவரங்களையும் கூறிவிடுகிறேன். அதை அவள் ரகசியமாக வைத்திருப்பாள் என்று நாம் நம்பலாம் அல்லவா?'' என்று வினவினுர்.

''நம்பலாம்.''

''ஆனுல் நான் இங்கே அதிகமாகத் தாமதிக்க முடியாது: சாப்பாட்டு நேரத்தில் நான் ரோஜர்ப்ரெஎன்லீயைக் காண இருக்கிறேன். இன்று காலையில் முதல் டெலிபோன் அவரிடமிருந்துதான் வந்தது.''

''உங்களைப்பற்றி சனிக்கிழமைதான் நான் அவரிடம் பேசினேன். சீக்கிரமாகவே அவர் உங்களை நாடியிருக்கிருர்'' என்ருன் பால்.

''ஓ! ப்ளாக்வொர்த் விஷயத்தை நான் மூடிவைப்பது தவறு என்று அவர் கருதுகிருரா?''

''இல்லை.''

''அந்த மட்டும் எனக்குத் திருப்தி. இன்று காலை முதல் கிடைத்து வரும் கெட்ட சேதிகளுக்கிடையில் அது நல்ல சேதி அல்லவா?''

கதவுப் பக்கம் கவனித்த பால், ''ரோனுவின் குரல் கேட்கிறது'' என்ருன். ஆனுல் வெயிட்லரின் முகத்தில் இருந்த முறுவல் மறைந்துவிட்டிருந்தது. அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். அவர்கள் இருவருக்குமே இக்கணத்தில் வேறெங்கேயாவது இருபது மைல்களுக்கப்பால் இருக்கக்கூடாதா என்று ஓர் ஆசை.

ரோனு உள்ளே நுழைந்தாள். அவளுடைய வெளுத்த வதனத்தில் கவலை தோய்ந்திருந்தது. அவள் கையில் பையையும் தூக்கிக்கொண்டு வந்திருந்ததைக் கண்டு பால் ஹேடன் வியந்தான்.

அறைக்குள் குறுக்கே நடந்தபடியே வெயிட்லர் ப்ளாக்வொர்த்தைப் பற்றிய முழுக் கதையையும் கூறினுர். பிறகு ரோனுவைப்பற்றிக் கிளம்பியுள்ள அவதூறைத் தெரிவித்தார். இறுதியில், பால் ஊகிக்கும் இதற்கான காரணத்தையும் சொன்னுர்.

ரோனுவுக்கு இதை நம்பமுடியவில்லை. வியப்பும் அச்சமும் கொண்டாள். பிறகு சிரித்துவிட்டுக் கூறினள்:

''என்னைப் பற்றிய இக்கதை அபத்தமானது. பால், உங்களையுமல்லவா நான் இழுத்துவிட்டிருக்கிறேன்?'' மேலே பேச முடியாமல் அவள் உதட்டைக் கடித்துக்கொண்டாள். பிறகு கீழேயிருந்த தன் பையைப் பார்த்துக்கொண்டு அசையாமல் அமர்ந்திருந்தாள்.

வெயிட்லர் சங்கடத்துடன் கூறினர்: ''இதற்கெல்லாம் நானே பொறுப்பாளி .. இல்லை, நாம் பொறுப்பாளிகள் இல்லை. ப்ளாக்வொர்த்தின் நண்பர்கள்தாம் இதற்கெல்லாம் பொறுப்பாளிகள். ரோனு, நாங்கள் உன்னிடம் இதைச் சொல்ல நேர்ந்ததற்கு வருந்துகிறேன். ஆனல் அதுதான் சிறந்த வழியெனத் தோன்றியது. இவற்றில் ஒரு வார்த்தையைக் கூட நீ வெளியே விடக்கூடாது.''

ரோனு தலையை ஆட்டினள். ''நீங்கள் என்னிடம் கூறியது பற்றி எனக்கு மகிழ்ச்சியே. நம்ப முடியாத விஷயங்களைக் கூடத் தெரிந்துகொள்வது நல்லது.'' தொடர்ந்து அவள் முகம் திடீரென்று 'பளிச்' சிட்டது. ஆறுதல் தரும் ஒரு யோசனை அவள் உள்ளத்தில் பிறந்தது. ஸ்காட்... . . ஸ்காட் இந்த வம்புப் பேச்சைக் கேட்டிருக்கிறன் என்று அவள் நினைத்தாள். அவனல் நம்பமுடியவில்லை; ஆனல் மனவேதனை அடைந்திருக்கிறன். அதனல்தான் அவளுடன் அவன் வீண் சண்டையிட்டிருக்கிறன். உடனே அவனுக்கு டெலிபோன் செய்யவேண்டுமென்று அவள் நினைத்தாள். டெலிபோன் செய்து தன் வருத்தத்தைத் தெரிவிக்கவேண்டும்; அந்த அபவாதம் ஒரு முழுப் பொய் என்று அவனுக்குத் தெரியாதா?

ரோனுவைக் கவனித்துக்கொண்டிருந்த பால் ஹேடன், அவள் என்ன யோசனை செய்கிறள் என்று வியந்தான. இக் கெட்ட சேதிக்கு இடையிலும், ஏதோ நன்மை வந்திருக்கிறது போலும்.

''நடந்ததை இப்படி எடுத்துக்கொள்வதுதான் நல்லது. முதலில், யாவருமே உனக்கு எதிராக இருப்பதுபோலத்தோன்றும். ஒருவரையும் நம்பமுடியாதென்றும் நினைக்கத் தோன்றும். பிறகுதான், இந்தப் பலகணிக்கு வெளியே உள்ள எழுபது லட்சம் பேரும் உன்பக்கத்தில் இருப்பதை நீ உணர ஆரம்பிப்பாய்'' என்ருர் வெயிட்லர்.

எட்விக்கு விஷயம் தெரியும்போது, வெயிட்லரின் இவ் வார்த்தைகள் ரோனுவுக்கு மிகுந்த ஆறுதலை அளிக்கும் என்று கசப்புடன் நினைத்தான் பால்.

வெயிட்லர் தொடர்ந்தார்: ''இந்த நகரம் முழுவதையும் எடுத்துக்கொண்டால், ஒரு சில ஆயிரம் பேர்களே உனக்கு எதிராக இருக்கக்கூடும். ஒருசமயம் நான் இப்படித்தான்

எண்ணி, ஆறுதல் பெற்றுக்கொண்டேன். இதை மறந்து விடாதே, ரோனு. இந்த நகரத்தில் மட்டுமே எழுபது லட்சம் பேர்கள் உன் சார்பில் இருக்கிறார்கள். இப்போது நான் வெளியே போகவேண்டியிருக்கிறது—''

ரோனு எழுந்தாள். பிறகு அவள் தயங்கி, கையிலிருந்த பையைப் பார்த்தாள். ''மிஸ்டர் வெயிட்லர்''—என்று ஆரம்பித்தாள்.

''ஏதாவது அவசர விஷயமா, ரோனு?'' என்ற வெயிட்லர் தம் கடிகாரத்தைப் பார்த்தார்.

''இல்லை'' என்ற அவள் கதவை நோக்கி நடந்தாள்; பால் ஹேடன் பின் தொடர்ந்தான்.

ஆபீசுக்கு வெளியே வந்ததும், ''உபரியாக மூளைத் துள்ள உன் கவலை என்ன, ரோனு?'' என்றான் பால்.

அவள் சிரிப்பது போல் பாசாங்கு செய்தாள். ''பால், உங்கள் ஆபீஸில் பூட்டிவைக்கும் பீரோ ஒன்று இருக்கிறதா?''

''க்ரோவெல்லின் ஆபீசில் ஒன்று இருக்கிறது. அதை இப்போது நான்தான் உபயோகிக்கிறேன்''

''என் காகிதம் ஒன்றை அதில் பத்திரமாக வைக்கிறீர்களா? சில நாட்களுக்கு மட்டும்.'' அவள் குரல் தாழ்ந்து, வேகமாக வந்தது.

''நிச்சயமாக'' என்ற அவன் அவளை ஆவலுடன் நோக்கினான்.

''அது என்னவென்று விவரிக்க இப்போது முடியாது. நீங்கள் அதைப் பத்திரமாக வைத்திருப்பீர்கள் அல்லவா?'' ரோனு தன் பையிலிருந்து அந்த உறையை எடுத்து, வேகமாக அவனுடைய சட்டைப் பைக்குள் நழுவவிட்டாள்.

ரோனு பாலைப் பார்த்து முறுவலித்துவிட்டு நடந்தாள். ஒருகணம் காத்திருந்தபின் அவனும் நடந்தான்.

தாழ்வாரத்தில் அவன் மர்ரேயைச் சந்தித்தான். சோர் வடைந்திருந்த அவன் கவனிக்காதது மாதிரிச் சென்றான்.

''ஹலோ மர்ரே, நேற்றிரவு தெல்மாவின் பார்ட்டி நன்றாக இருந்தது. நான் சிறிது முன்னால் கிளம்ப வேண்டியிருந்ததற்கு வருந்துகிறேன்'' என்றான் பால்.

மர்ரே நிமிர்ந்து நோக்கினான். பாலை வெறித்து நோக்கிய அவன் பார்வையில் அதே பழைய வெறுப்பு. ''ஆமாம்'' என்று கூறிவிட்டு அவன் மேலே நடந்தான்.

பால் தன் அறையை நோக்கிப் போகலானான்.

''ஹேடன்!'' என்று மீண்டும் அழைத்தான் மர்ரே. ''நாளைக்கு உன்னுடன் உணவுக்கு வருவதாகச் சொல்லியிருந்தேனல்லவா? அது சௌகரியப்படாது.''

''எனக்கு ஏமாற்றமே'' என்ற ,பால், இப்போது தான் உபயோகித்துக் கொண்டிருந்த க்ரோவெல்லின் ஆபீசுக்குள் நுழைந்தான். அங்கே கதவை நன்கு மூடிவிட்டுப் பீரோவைத் திறந்தான். அதன் உள்ளே ரோஜுவின் உறையை வைத்துப் பூட்டினான். ஆனால் அவன் மனசு மட்டும் மர்ரேயைப்பற்றியே எண்ணமிட்டுக்கொண்டிருந்தது.

எவ்வளவோ நடந்திருந்தபோதிலும், பாலுக்கு ஒன்று மட்டும் நிச்சயமாகப் புரிந்தது. அவன்மீது மர்ரேக்கு ஏற்பட்ட சிரத்தை, ஆரம்பித்தது போலவே திடீரென்று மறைந்துவிட்டது. மர்ரேயின் சிரத்தை இப்படிக் குறையும்படி தெல்மாவின் பார்ட்டியில் அவன் என்னதான் செய்துவிட்டான்? பால் ஹேடன் வியந்தான். தவிர, இனிமேலும் அவனை ஆர்பெனின் 'வட்டத் தொட்டி'களுக்கு அழைக்கமாட்டார்கள் என்றும் அவனுக்கு உறுதியாயிற்று. ஒருவேளை பாலைப்பற்றிக் கவலைப்படாதே என்று மர்ரேக்கு ஆர்பெனே சொல்லியிருக்கக்கூடும். தானாகவே எதுவும் செய்ய மர்ரேக்குத் தெரியாது. ஆர்பெனின் சம்மதத்துடன்தான் அவன் பாலைப் 'பதம்' முயன்றிருக்கவேண்டும்.

''நேற்றுத் தெல்மாவின் விடுதியில் நான் என்ன தவறு செய்துவிட்டேன்'' என்று பால் ஹேடன் மீண்டும் தனக்குள் பார்க்க ஆலோசிக்கலானான்.

அத்தியாயம் 13

கையில் நீல உறையிட்ட பரீட்சைக் காகிதங்களோடு அன்று மாலை ஐந்து மணிக்கு ஜான் டைஸன் கலாசாலையிலிருந்து வீடு திரும்பினான். அங்கே முன் அறையில் அவனுடைய மாணவர்கள் இருவர் ஜானின் குடும்பத்தாருடன் அளவளாவிக்கொண்டிருந்தார்கள்.

தனக்குப் பிடித்த கதைப் புத்தகத்தைப் பற்றி பார்பரா சொல்லியதைக் கேட்டுக்கொண்டிருந்தான் மில்டன் லெயிட்னர். 'டீ காஸ்' என்ற நடனமாடும் பெண்ணைப் போல, முன்னே தன் சிறிய கால்களை நேராக நீட்டியவாறு விரிப்பின் மீது உட்கார்ந்திருந்தாள் அவள். ''இப்போது நான் படிக்கிறேன்'' என்று உரத்த இன்குரலில் கூறிய அவள், ''ஜாக் அண்டு ஜில்'' என்று ஒப்பிக்க ஆரம்பித்தாள். அவளது சிறிய

ஆள்காட்டி விரல் புத்தகத்தின் வரிகளில் நகர்ந்தது; கண்கள் தலைகீழாகப் பிடித்திருந்த புத்தகத்தின்மீது பதிந்திருந்தன. அடிக்கொரு தடவை அவள் மில்டனை நிமிர்ந்து நோக்கினாள். அவன் எல்லாவற்றையும் சரியாகப் புரிந்துகொள்ளுகிறானா என்று அவளுக்குக் கவலை.

பாப்பி தோளில் துப்பாக்கியுடன் இருந்தான். அநேகமாக ஒடிந்துவிட்டிருந்த தனது பொம்மை ரெயிலின் அமைப்புக்களைப் பற்றி ராபர்ட் கேஷுக்கு அவன் விவரித்துக் கொண்டிருந்தான். அந்த ரெயில் என்னவோ தன்னால்தான் ஓடியது.

"ஹலோ" என்று யாவரையும் பார்த்து முகமன்கூறிய ஜான், பெக்கியை அணைத்து ஒரு முத்தம் கொடுத்தபின், கையிலிருந்த நீலப் புத்தகங்களை மேஜையின்மீது போட்டான். ராபர்ட் கேஷையும், பிறகு ஜானையும் மாறி மாறிப் பார்த்த பெக்கியின் கண்களில் ஒரு வினாக் குறி எழுந்தது. ஜான் மட்டும் வெறுமே முறுவலித்தான். தன் அதிசய உணர்வை வெளிக்காட்டவில்லை என்று அவன் நம்பினான். அன்று பர்லே தம்பதிகளும, ரோஜாவும், பாலும் இங்கே வந்திருந்தற்குப் பிறகு பாப் கேஷை அவன் வகுப்பின் அறைகளுக்கு வெளியே பார்க்கவில்லை. ஒவ்வொரு பிரசங்கத்திற்குப் பிறகும் ஏதாவது கேள்விகளுடன் வழக்கமாக அவனைக் காணவரும் மாணவர்களுள் பாப் கேஷும் ஒருவன். ஆனால் கடந்த சில வாரங்களாக பாப் அவனை விட்டு ஒதுங்கிச் செல்வதாகவே தோன்றியது. இப்போது அவன் வேதனையுடன் காணப்பட்டான். அச்சத்துடன் அவன் வெயிட்னரைப் பார்த்த பார்வை, "நீதான் என்னை இங்கே அழைத்து வந்தாய்; நீயே விஷயத்தை விளக்கிவிடு" என்று கெஞ்சுவது போலிருந்தது.

ராபர்ட் கேஷை ஒதுக்கிவிட்டு ஜானிடம் ஓடிவந்தான் பாப்பி. ஆனால் பார்பரா தலையை நிமிர்த்தி, "நான் காரியமாக இருக்கிறேன்" என்றபடி மில்டனை நோக்கி ஒரு முறுவலை உதிர்த்தாள்.

"இங்கே வா, கிளியோபாட்ரா; சாப்பாட்டுக்கு முன் குளித்துவிடலாம்" என்றாள் அவள் தாய்.

பார்பரா அவசரமாகக் கடைசிப் பாட்டைத் திருப்பி அங்கிருந்த படத்தையும் உற்று நோக்கினாள். "ஜாக் முடியை உடைத்துக்கொண்டானாமே; அந்த முடி எங்கே?"

பெக்கி சொன்னாள்: "எல்லாம் படத்தில் இருக்கிறது கண்ணு. இதோபார், ஜாக் கீழே விழுகிறான். கூடவே ஜில்லும் விழுகிறாள். அங்கே வாளி நிறையத் தண்ணீர் இருக்கிறது. மலைகள்கூட—"

"ஆனால் முடி எங்கே?" பார்பரா கோபத்துடன் வினவினாள்.

''ஓ!'' என்ற மில்டன் பெக்கியைப் பார்த்துவிட்டுத் தொடர்ந்தான்: ''அது அந்தத் தங்க மகுடம் இல்லை, பார்பரா, இங்கே 'முடி' என்றால் அவன் தலைதான்''. மில்டன் படத்திலுள்ள ஜாக்கின் தலையை அவளுக்குக் காண்பித்தான்.

ஜானையும் ராபர்ட் கேஷையும் ஒருமுறை பார்த்த பெக்கி, ''வா, பார்பரா!'' என்றாள். அவள் புத்தகத்தை மெதுவாகப் பக்கத்தில் வைத்துவிட்டு எழுந்தாள். பிறகு மடங்கியிருந்த கவுனை இழுத்து விட்டுக்கொண்டு தன் அப்பாவிடம் கொஞ்சப்போனாள். ஜான் அவளை அப்படியே ஒரு தடவை தலைக்குமேல் தூக்கிக் கீழே விட்டான். பிறகு அவள் மில்டனுக்குக் கையை ஆட்டிவிட்டு வருவதற்குள் பெக்கி ஜானின் மேஜைமீதிருந்த பரீட்சைத் தாள்களைக் கவனித்தாள். அவைகளையெல்லாம் திருத்த ஜானுக்கு அதிக நேரமாகும். அப்படியானால் இன்றிரவு சிறிது தையல் வேலை செய்யலாம் என்று எண்ணினாள் பெக்கி. பிறகு அவள் குழந்தைகளைத் தொடர்ந்து ஓடினாள். முதலில் அவர்களைக் குளிப்பாட்ட வேண்டும்; பிறகு உணவு அளித்து, பார்பராவைத் தூங்கச் செய்யவேண்டும். அதற்குள் மில்டனும் பாப்பியும் போய் விடுவார்களோ?

★ ★ ★

குளித்துவிட்டு ஈரத்தலையுடனிருந்த பார்பராவுக்குக் கவுனைப் போடும்போது கதவின் மணி அடித்தது இன்னமும் குளிக்கும் தொட்டியிலேயே இருந்த பாப்பி, அத்தண்ணீரில் கப்பல் விட்டுக்கொண்டிருந்தான்.

''பார்பரா, இங்கேயே இரு; பாப்பி, தண்ணீரைத் துளும்ப அடிக்காதே!'' என்ற பெக்கி கதவைத் திறக்க ஓடினாள். எதிரே ரோனா!

திடீரென்று வந்ததற்குக் காரணம் கூறவில்லை அவள். தன் தங்கையின் தீவிரமான முகக்குறியைக் கண்ட பெக்கியும் எதுவும் கேட்கவில்லை. தவிர குளியலறையிலிருந்து கேட்ட ஓர் ஓலம் அவளைத் திரும்பவும் அங்கே ஓடவைத்தது. பார்பராவின் உடல் முழுவதிலும் தண்ணீரை வாரித் தெளித்திருந்தான் பாப்பி.

''ஓ, பாப்பி!'' என்று அவன் கன்னத்தில் ஓர் அறை கொடுத்தாள் பெக்கி. அவன் பதிலுக்கு வீறிட்டான். பார்பராவின் நனைந்த கவுனைப் பரிதாபமாகப் பார்த்த பெக்கி, ரோனாவிடம் திரும்பி, ''இங்கே ரப்பர் பூட்ஸுகளுடன் தான் வரமுடியும்!'' என்றாள்.

ரோனாவின் முகம் இப்போது மலர்ந்தது. அவள் தன் பூட்ஸுகளையும், கால் உறைகளையும் கழற்றிவிட்டு, ஒரு துவா

லையை முன்னே கட்டிக்கொண்டு, "நீ போய் உணவை எடுத்து வை; நான் அவர்களைச் சரிசெய்கிறேன்" என்றாள். பிறகு குளித் தொட்டியிலிருந்து பாப்பியை இழுத்து, அவனிடம் ஒரு துவாலையைக் கொடுத்து, "துஷ்டப் பயலே! நீதான் இதையும் ஈரமாக்கியிருக்கிறாய். அதனால் பேசாமல் துடைத்துக்கொள்" என்றாள்.

நன்றியுடன் தலையை அசைத்த பெக்கி, பார்பராவுக்கு வேறு கவுன் எடுத்துவர ஓடினாள். பிறகு சமையலறைக்குச் சென்று அங்கே வெந்துகொண்டிருந்த இறைச்சி தீய்ந்து போகாமல் கவனித்தாள். கவலையுடன் அந்த இறைச்சித் துண்டங்களை எண்ணவும் ஆரம்பித்தாள். குழந்தைகள், ரோனா, மில்டன், பாப், ஜான்....எல்லோருக்கும் போதாது. காய்கறிகளும் போதும் அளவுக்கு இல்லை. கொஞ்சம் சேமியா செய்துவிட்டால் என்ன? ரோனாவும் அவளும் அதைச் சாப்பிட்டுவிடலாமென்று அவள் தீர்மானித்தாள். ஆனால் இறைச்சித் துண்டுகளின் வாசனையை உணர்ந்தபோது அவளுக்குக் கோபம் வந்தது. மூன்று நாட்களுக்குப் பிறகு அவள் இறைச்சி சமைத்தாள். அது வீட்டிலுள்ளவர்களுக்குக் கிடைக்காமல் போய்விடும் போலிருக்கிறதே! மறுகணமே தனது தாராளமற்ற விருந்தோம்பலை எண்ணி அவள் தன்னையே கடிந்து கொண்டாள்.

ரோனா பார்பராவுக்குச் சிவப்பும், வெள்ளையும் கலந்த உடை உடுத்துச் சமையலறைக்குத் தூக்கிச் சென்றாள். அங்கே அவளை உயர்ந்த நாற்காலியில் அமர்த்தி, "முதல் பந்திக்கு ஆள் வந்தாகிவிட்டது. துடைக்கும் துணி எங்கே? நான் உனக்குச் சுத்தம் செய்து தருகிறேன்" என்றாள்.

பிறகு, பாப்பியுடன் திரும்பிவந்தபோது அவள் முகம் மாறியிருந்தது. "ஜான் ஏதோ வேண்டாத பேட்டி நடத்திக் கொண்டிருக்கிறார். அது என் காதில் விழுந்ததைத் தடுத்துக்கொள்ள முடியவில்லை" என்றாள் அவள்.

"இந்த விடுதியில் எங்கும் தனித்துப் பேசமுடியாது" என்றாள் பெக்கி. கவலைப்படும் அளவுக்கு அவள் காதுகளிலும் அவர்களுடைய பேச்சு விழுந்திருந்தது.

ஆறரை மணிக்குள் குழந்தைகளின் சாப்பாடு முடிந்து விட்டது. பெக்கி பார்பராவுக்குக் கதை சொல்லி உறங்கச் செய்துகொண்டிருந்தாள். சமையலறையில் ரோனா பாப்பிக்கு ஏதோ படித்துக் காட்டிக்கொண்டிருந்தாள். ஆனால் படுக்கப் போகுமுன் அப்பாவுடன் சிறிதுநேரம் விளையாடும் வழக்கமுள்ள அவன் தன் கவனத்தை எங்கெங்கோ ஓடவிட்டுக் கொண்டிருந்தான். "அவர்கள் எல்லாம் போகமாட்டார்களா?" என்று சினத்துடன் வினவினான் அவன். அதேசமயம்

வந்திருந்தவர்கள் புறப்படும் சப்தம் கேட்டதால், பாப்பி எழுந்து கூடத்திற்குச் சென்று அப்பாவின் பக்கத்தில் நின்றான்.

ஜானின் குரல் மகிழ்ச்சி நிறைந்தே காணப்பட்டதைச் செவிமடுத்தாள் ரோனு. நிச்சயம், கசப்பான வாதப் பிரதிவாதங்கள் ஒன்றும் நடந்திருக்க முடியாது. ராபர்ட் கேஷ் கூடச் சாதாரண முறையில்தான் 'குட் நைட்' சொன்னான். அவள் திடீரென்று அதிக மலர்ச்சியுற்றாள். சாப்பிடும்போது தன் கஷ்டங்களையெல்லாம் ஜானிடம் கூறலாம் என்று அவள் எண்ணம் ஓடியது. ஜானிடமும், பெக்கியிடமும் எல்லாவற்றையும் சொன்னால், அவர்கள் அவளுக்கு ஏதாவது யோசனை சொல்வார்கள். ஜானின் யோசனைகளை நம்பி ஏற்கலாம். அவனுடைய யோசனைப்படி ரோனு நடக்கமுடியாவிட்டாலும், அதன் மூலம் சிறிது ஆறுதலைப் பெறமுடியும். ஆயினும், சார்லஸின் கடிதத்தைப் பற்றி மட்டும் சொல்வதற்கில்லை.

ஆனால் சமையலறையில் இறைச்சி வெந்து விட்டதா என்று காணவந்த பெக்கி சொன்னாள்: "ரோனு, சாப்பிடும்போது நாம் காரசாரமாக எதுவும் பேசவேண்டாம் உன் முகத்தைப் பார்த்ததிலிருந்தே, எங்களிடம் சொல்ல உன்னிடம் ஏதோ விஷயமிருக்கிறதென்று நினைக்கிறேன். அதைக் காஃபிக்குப் பிறகு வைத்துக்கொள்ளலாம், என்ன?"

ரோனு தலையை ஆட்டினாள். சாப்பிடும்போது அவள் தெல்மாவின் பார்ட்டியை விவரிக்கலாம். அது காரசாரமான விஷயமில்லை. தவிர, பின்னால் அவள் சொல்லப்போவதற்கு அது முன்னுரை மாதிரியும் இருக்கும்.

★ ★ ★

கூடத்து அறையில் காஃபிக்கிடையில் தனது கதையைச் சொல்ல முடியாமல் ரோனு திணறினாள். வெளியே இருள் இறங்கிக் கொண்டிருந்தது. வீடு முழுவதுமே இப்போது ஓர் அமைதி குழந்தைகள் உறங்கிவிட்டன இருந்தாலும் அறையின் நிழல்களும் கேட்பாரிடையே காணப்பட்ட மோனமும் சேர்ந்து அவள் கதை சொல்வதைச் சிரமமாக்கிவிட்டன.

ரோனு இறுதியில் கூறினாள்: "இது தான் விஷயம்.... ஏன் நான் அப்படி ஓடினேனென்று எனக்கே தெரியவில்லை. ஆனால் எங்களுக்குள் நிச்சயமாக ஒரு சண்டை மூண்டுவிட்டது. இன்று பகல் உணவுக்கு முன்னால் ஸ்காட்டுக்குப் போன் செய்தேன். அவர் எங்கேயோ வெளியே போயிருந்தார். வந்ததும் நான் டெலிபோன் செய்ததாகச் செய்தி விடுத்திருந்தேன். பிறகு அவரிடமிருந்து தகவல் இல்லை."

''அவனுக்கு உன் செய்தி கிடைக்கவில்லையோ என்னவோ?'' என்ற பெக்கி ஜானைக் கவலையுடன் பார்த்தாள்.

''இன்று முழுவதும் நான் அதைப்பற்றிப் பட்ட வேதனை—''

''எதைப்பற்றி, ரோனு?'' என்று வினவினுன் ஜான்.

''எங்கள் திருமணம் நடக்கப்போவதில்லையென்று!''

விளக்கின் ஒளியிலிருந்து அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டு அழ ஆரம்பித்தாள். ஜானும் பெக்கியும் ஒருவரையொருவர் பார்த்து விழித்தார்கள்.

ஜான் சொன்னுன்: ''ரோனு, சண்டையிடுவதும் சமாதானம் செய்துகொள்ளுவதும் மனித இயல்பு. நீ இதைப் பெரிதாக எண்ணி வருந்தாதே.''

பெக்கி இடைமறித்தாள்: ''ஸ்காட் அந்த வதந்தியை நம்பியிருக்கமாட்டான். அவன் நம்புவானெயானுல், நீ மணப்பதற்கு அவன் லாயக்கற்றவன்.'' அதற்குள் கதவு மணி ஒலிக்கவே, பெக்கி எழுந்து ஓடினுள் முகக் கடுப்புடன்.

ரோனு தன் கைகுட்டையைத் தேடினுள். ஜான் தன்னுடையதை எடுத்துக் கொடுக்கும்போது அவள் முறுவலிக்க முயன்ருள். ஜான் இன்று மாலையிலிருந்து நடந்துவரும் நிகழ்ச்சிகளைப்பற்றி எண்ணிக் கொண்டிருந்தான். முதலில் ஏதோ யோசனை கேட்பதற்காக பாப் கேஷை மில்டன் லெயிட்னர் அழைத்து வந்திருந்தான்; பாப் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேரத் தீர்மானித்து, மில்டனையும் சேரும்படி தூண்டிக்கொண்டிருந்தான். கடந்த ஒரு வாரமாக மில்டன் அவனுடன் வாதம் புரிந்து வந்தான். பிறகு அவன் இன்று மாலை எப்படியோ யோசனை கேட்பதற்காக பாப்பை ஜானிடம் அழைத்து வந்திருந்தான். பாப்பின் சொந்தக்காரர்கள் இரண்டாயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கிருர்கள். எனவே ஜான்தான் இவ்விஷயத்தில் யோசனை கூறவேண்டுமென்று மில்டன் கோரினுன் ஆனுல் ஜான் செய்ய முடிந்ததெல்லாம் இதுதான்: பாப் தன் தீர்மானத்தை நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும். அத்துடன் இப் பிரச்னைபற்றிய மாறுபட்ட கருத்துக்களையும் தெரிந்து கொள்வதற்காக வருகிற கோடைவரை பொறுத்திருக்க வேண்டும். இவற்றைச் சொல்லி, பாப்பை அதற்கு இணங்கவும் வைத்தான். தவிர ஜான் தனது கருத்துக்களைக் கூறியபோது, அவற்றில் பலவற்றிற்கு பாப்பினுல் பதில்கூற இயலவில்லை. இப்பதில்களைத் தேடிக்கொண்டு தானே என்னவோ பாப் போய்விட்டான். இன்னுங்கூடப் பேச்சுக்களும், வாதங்களும் இருக்கும்—அது நீண்ட, சிரமமான வேலைதான். ஆனுல் யாராவது அதைச் செய்துதானுகவேண்டும்.

இப்படியாக முதலில் பாப் வந்திருந்தான். இப்போது ரோஜு இல்லை. முதன் முதலில் ஜோசப் லோகாஸ்ட்ரோ, இன்று பிற்பகல் லொகாஸ்ட்ரோ ஜானண்டை வந்து, தான் கலா சாலையை விட்டுப் போகப்போவதாகக் கூறினன். அவன் ஒரு வேலையைப் பிடித்துக்கொண்டு, கல்யாணமும் செய்து கொள்ளப் போகிருணும். அவனைத் தன் தீர்மானத்தை மாற்றிக் கொள்ளச் செய்வதற்கு ஜான், பாப்பிடம் கூறிய உண்மைக் காரணங்களைக் கூறப்பட்ட சிரமத்தைவிட அதிக சிரமப்பட வேண்டியிருந்தது. இன்று செய்யும் தீர்மானங்கள் எப்படி வாழ்வின் மாதிரியையே எதிர் காலத்தில் மாற்றிவிடுமென் பதை ஓர் இளைஞனுக்கு எடுத்துக்காட்டுவது எளிதன்று. இள வயதில் செயலுக்குத் தக்க விளைவை அளிக்கக் கூடியது தான் வாழ்வு என்று நமக்குப் புரிவதில்லை. கசப்பான முறையில் தான் இதை அறிந்துகொள்ள நேரிடுகிறது: ஜோ - பாப்- ரோஜு. காதல், அரசியல், காதல்!

''பெக்கி ஏன் திரும்பவில்லை?'' என்று வினவினன் ஜான். பெக்கியும், யாரோ புதிதாக வந்துள்ளவரும் கூட்டத்தில் தாழ்ந்த குரலில் பேசிக்கொள்வது கேட்டது. சாளரத்திற்கு வெளியே இருளில் தெரிந்த கட்டடங்களில் பார்வையைப் பதித்திருந்த ரோஜுவுக்கு பெக்கி திரும்பாதது பற்றிய உணர்வே இல்லை.

பிறகு பெக்கி வந்தாள். அவள் முகம் சிவந்திருந்தது; இதழ்கள் முறுவலிக்க முயன்றன. ''நம்மைப் பார்க்க மிஸ்டர் எட்லீ வந்திருக்கிருர், ஜான்'' என்ருள் சாதாரணமாக. தொடர்ந்து, மற்ருெரு விளக்கையும் போட்டுவிட்டு, ரோஜு ஸ்காட்டின் அப்பாவைக் காண்பதைத் தடுப்பதுபோல் திரைச் சீலைகளை இழுத்துவிட்டாள்.

வில்லியம் எட்லீ வேகமாக முன்வந்து ரோஜுவின் கைகளைக் குலுக்கினர். அவருடைய அமைதியான கண்கள் கண்ணுடி வழியே ரோஜுவைக் கவலையுடனும், அன்புடனும் கவனித்தன. அவர் ஜானின் கையையும் குலுக்கினர். பிறகு அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்துகொண்டார். கால்களைப் பின்னிக்கொண்டு, பிறகு பிரித்துக் கொண்டார்; சிகரெட் பெட்டியை வெளியே எடுத்து, அதைத் திறந்து, மூடி, மீண்டும் திறந்து கொண்டிருந்தார்.

அவர் ஆழ்ந்த குரலில் பேசினர். ''ஒருவிதத்தில் உன்னை இங்கே கண்டதில் எனக்கு மகிழ்ச்சி. ரோஜு. ஏனெனில் ஸ்காட்டைப்பற்றி உன்னிடந்தான் பேச வந்தேன். உண்

மையில் உங்களிருவரையும் பற்றித்தான் நான் கவலைப்படு கிறேன். நீ ஏன் ஸ்காட்டுடன் செய்துகொண்ட நிச்சயதார்த் தத்தை முறித்துக்கொள்கிறாய்?''

ரோனு அநாவசியமாக விஷயங்களைப் பெரிதாக்கிக்கொள் கிறாள் என்று இதுவரை நினைத்திருந்த பெக்கி மிஸ்டர் எட்லீயை ஆவலுடன் கவனித்தாள். ரோனுவின் பயங்கர மௌனத் தைக் கண்ட ஜான் கேட்டான்: ''மிஸ்டர் எட்லீ! நீங்கள் எல்லோரையும்விட ஒருபடி முன்னால் போகிறீர்கள். நிச்சய தார்த்தம் முறிக்கப்பட்டதாக யார் உங்களிடம் சொன் னார்கள்?''

''இன்று மாலை ஸ்காட் என்னுடன் பேசியதிலிருந்து நான் அப்படித்தான் ஊகிக்கிறேன். அவனை நான் ஐந்து மணிக்குச் சந்தித்தேன். இருவரும் சேர்ந்து உணவு கொண்டோம். இப்போதுதான் நான் அவனை விட்டு வந்தேன். எட்டு மணிக்கு அவன் ஆபீசுக்குத் திரும்பவேண்டுமென்றான். இது பரிதாபந் தான். நான் ரோனுவையும் அவனையும் ஒன்று சேர்க்க விரும்பி னேன். நாளைக் காலையில் நான் ஸ்டான்டனுக்குத் திரும்ப வேண்டியிருக்கிறது.''

அவர் தம்மைக் கவனித்துக்கொண்டிருந்த மூன்று முகங் களையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு, இறுதியில் தம் பார் வையை ரோனுவின் மீது பதித்தார். பிறகு அவர் கேட்டார்: ''நீ நிச்சயதார்த்தத்தை முறிக்கவில்லையே?''

ரோனு தலையை அசைத்தபடி தன் இடது கையிலிருந்த மோதிரத்தைப் பார்த்தாள் ''இல்லை. ஆனால் ஸ்காட் விரும் பினால் நான் முறித்துக்கொள்ளத் தயார்.''

''அவன் விரும்பவில்லை. இவை யாவையும் பற்றி அவன் மிகவும் கலங்கியிருக்கிறான்.''

''ஸ்காட் என்ன சொன்னான்?'' இது ஜானின் கேள்வி.

''ரோனுவும் அவனும் நேற்று வீடு தேடச் சென்றதாக வும், இடையில் ஒரு சண்டை நடந்தபோது ரோனு அவனை விட்டுச் சென்றுவிட்டதாகவும் கூறினான்.'' மிஸ்டர் எட்லீ தன் சிகரெட்டைப் பற்றவைக்க அதிக அவகாசம் எடுத்துக் கொண்டார்.

''அவன் இதைவிட இன்னும் அதிகமாகச் சொல்லியிருக்க வேண்டும், மிஸ்டர் எட்லீ.''

''ஆமாம். அவன் மகிழ்ச்சியற்று இருப்பதாகச் சொன் னான். அதைப்பற்றி அதிகமாக அவன் விவரிக்கவில்லை. ஆனால் இவர்களுக்கிடையில் பெரியதொரு தப்பபிப்பிராயம் இருக் கிறது. இன்றிரவு நான் இங்கே வந்தது நல்லதாகப் போய் விட்டது.''

''இன்று ஏன் ஸ்காட் ரோஜுவுடன் தொடர்பு கொண்டு, தானே எல்லாவற்றையும் விளக்கியிருக்கக் கூடாது?'' ஜான் இதைத் தெரிந்துகொள்ள விரும்பினான்.

''அவன் தொடர்புகொள்ள முயன்றான். அவள் போன் மூலம் பேசமாட்டாள்.''

''நான் போனில் பேசமாட்டேனா?'' என்று ரோஜு வின வினாள்.

பெக்கி இடைமறித்தாள். ''ஸ்காட் தவறாக எண்ணியிருக் கிறான். ரோஜு போனில் கிடைக்கவில்லை என்பதற்காக, அவள் பேசமாட்டாள் என்று ஸ்காட் ஏன் நினைக்கவேண்டும்? உண் மையில் மிஸ்டர் எட்லீ, ஸ்காட் நடந்துகொள்ளும் விதம் எனக்குப் பிடிக்கவில்லை.''

''ஆனால் இவற்றையெல்லாம் நாம் தெளிவாக்கிச் 'சரி' செய்துவிடலாம். மிஸ்டர் எட்லீ, நீங்கள் ஏன் ஸ்காட்டை அவன் ஆபீஸ் டெலிபோனில் அழைத்து, ரோஜுவை நீங்கள் பார்த்ததாகவும், அவளும் அவனைப்போலவே துயரமுற்று இருப்பதாவும் சொல்லக்கூடாது? கூடிய சீக்கிரம் அவன் அவளைக் காணட்டும்'' என்றான் ஜான்.

''வேண்டாம்'' என்று வெடித்தாள் ரோஜு. ''இந்த ஏற் பாடுகள் எனக்குத் தேவையில்லை. பிறர் தூண்டுதல் இன்றி, ஸ்காட் தாமே என்னை அழைக்கக்கூடும். நான் அவருக்கு டெலி போன் செய்து, சேதி விடுத்திருக்கிறேன். இப்போது அவர் முறை. ஸ்காட் என்னை மணந்துகொள்ள விரும்பவில்லை என்று தெரிகிறது. விஷயம் அதுதான். அவர் உங்களை ஏன் இங்கே அனுப்பியிருக்கிறார் தெரியுமா, மிஸ்டர் எட்லீ? எனக்கு இவ்விஷயத்தைச் சொல்ல இது சுலபமான வழியாக அவருக் குத் தோன்றியிருக்கிறது.''

''அவன் என்னை அனுப்பவில்லை, ரோஜு. நானாகத்தான் வந்தேன். இது அவனுக்கே தெரியாது.''

''ஆனால், நீங்கள் உங்களுடைய ஹோட்டலுக்குத் திரும் பிச் சென்று, அப்படியே எல்லாவற்றையும் மறந்து விட மாட் டீர்கள் என்று அவருக்குத் தெரியும். இதுபற்றி ஏதாவது செய்யாமல் நீங்கள் நியூயார்க்கை விட்டுச் செல்லமாட்டீர்கள் என்றும் அவர் அறிவார்.''

இதற்கு யாருமே வாயைத் திறக்கவில்லை. கடைசியில் எட்லீ பேசினார்: ''ரோஜு, இவையெல்லாம் பற்றி ஸ்காட் மிகவும் கலங்கியிருக்கிறான். ஆனால், அவன் உன்னை மணக்க விரும்புகிறான் என்று எனக்குத் தெரியும்.''

''அப்படியானால், யார் அவனைத் தடுக்கிறார்கள்?'' என்றாள் பெக்கி கோபத்துடன்.

''ரோஜு இன்னமும் பால் ஹேடனைக் காதலிப்பதாக அவன் நினைக்கிறுன். இதை என்னிடமே சொன்னுன்'' என்ருர் எட்லீ துயரத்துடன்.

''கிறிஸ்துமஸின்போது பால் ஹேடன் இங்கே இல்லை; அப்போது ரோஜுவும் ஸ்காட்டும் மணந்துகொள்ளுவார்கள் என்று நாங்கள் யாவரும் எதிர்பார்த்தோம்'' என்று கூறிய பெக்கி, தன் கணவனையும், எட்லியையும் மாறி மாறிப் பார்த்து விட்டுக் கடுமையாக வினவினுள்: ''என்ன, அப்படி நாம் எதிர்பார்க்கவில்லையா?''

''ஓ..'' என்று ஆரம்பித்த ரோஜு, 'சட்'டென்று எழுந்து அறைக்கு வெளியே போனுள். பெக்கியும் பின்தொடர்ந்தாள்.

''நீங்கள் என்ன யோசனை செய்கிறீர்கள்?'' என்று எட்லீ ஜான் டைஸனைக் கேட்டார்.

''ஸ்காட்டின் இடத்தில் நானிருந்தால் என்ன செய்வே னென்று எண்ணிப் பார்க்கிறேன். உண்மையைக் கூற வேண்டு மானுல், மிஸ்டர் எட்லீ, நான் அவனைப் போல் நடந்து கொள்ள மாட்டேன்.''

''நமக்குத் தெரிந்ததைவிட இதில் அதிகமான விஷயங் கள் உள்ளன. ஸ்காட் என்னிடம் உண்மையைக் கூறவில்லை. ரோஜுவை விட்டுக்கொடுக்க அவன் விரும்ப மாட்டான். ஆனுல் உங்களுக்குத் தெரியும்: அவளுக்கு ஸ்காட்டின் மீது காதல் இருந்தால், பணம் இல்லையென்ற விஷயம் அவளைத் தடுத்து விடாது. அநேகமாக இளைஞர்கள் யாவருமே சிறிய முறையில்தான் வாழ்வைத் தொடங்குகிருர்கள். அதை அநே கம் பெண்கள் ஏற்றுக்கொள்ளவும் செய்கிருர்கள். அவர் களுக்கு அது ஒருவிதமான சவால். உதாரணமாக, உங்கள் மனைவி இந்த வீட்டை நடத்துவதையே சொல்லலாம்.''

''பணந்தான் முக்கியமென்று ரோஜு நினைப்பதாக ஸ்காட் உங்களிடம் கூறினுரு?''

ஜானின் குரல் எட்லீக்குப் பிடிக்கவில்லை. அவரும் கடுமை யாகவே பதிலளித்தார்: ''அவன் இதைப்பற்றி அதிகம் வேத னைப்படுவதை நானறிவேன் இப்போது அவன் கவலை அதிக மாகி இருக்கிறது. ஏனெனில் ஹேடனின் வேலை நல்ல வரு மானமுடையது. ஸ்காட்டின் வருமானத்தை விட இரண்டு மடங்குக்கும் மேலானது. உங்களுக்குத் தெரியும், நேற்று ரோஜுவும், ஸ்காட்டும் வீட்டு வேட்டைக்குச் சென்று ஏமாற் றத்துடன் திரும்பியிருக்கிருர்கள். அதிக வாடகையில் வீட்டை அமர்த்தக்கூடாதென்பது அவன் எண்ணம்....''

''இதோ பாருங்கள், மிஸ்டர் எட்லீ, ஒன்று எனக்கு நிச் சயமாகப் புரிகிறது: ஸ்காட், ஒருதலைப்பட்சமாகத்தான் உங் களிடம் பேசியிருக்கிருன்.''

''அவன் என்னிடம் எப்போதுமே நேர்மையாகத்தான் நடந்துகொண்டிருக்கிறான். அவனுக்குப் பிடிவாதம் உண்டு என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் நேர்மை தெரியும். அவன் தனது வாழ்விலேயே என்னிடம் பொய் பேசியதில்லை என்று என்னால் பெருமையுடன் கூறிக்கொள்ள முடியும்.''

''உங்களுக்கு ரோனாவையும் கூடத்தான் தெரியும். இருந்தும், குற்றம் அவன் மீது மட்டுமேதான் என்று ஏன் நினைக்கிறீர்கள்?''

''நான் அப்படி நினைக்கவில்லை, புரொஃபசர் டைஸன்: இருவரும் சேர்ந்து பேசினால் எல்லாம் சரியாகி விடுமென்பதே என் எண்ணம். ஆனால் ஒன்று நிச்சயம்: எனக்கு ரோனாவை அதிகம் தெரியாமலிருக்கலாம்; என் மகனை நான் நன்கறிவேன். அவன் இப்படித் துயரத்தில் ஆழ்வதைக் கண்டு நான் களிக்க முடியாது.''

''கடந்த சில நாட்களாக ரோனாவும் சந்தோஷமாக இருக்கிறாள் என்று நான் கூறமுடியாது. அவளைப் பார்த்தாலே போதும்; ஆறு மாதத்திற்கு முன் அவள் இருந்ததற்கும், இப்போதிருப்பதற்கும் உள்ள வித்தியாசம் தெரியும்.''

சில கணங்கள் அங்கே அமைதி நிலவியது. பிறகு வில்லியம் எட்லீ சொன்னார்: ''அதை நான் இன்றிரவு கவனித்தேன், அவளோடு நான் சிறிது பேசவிரும்புகிறேன். இன்றிரவு அவள் இங்கே தங்கப்போகிறாளா? இல்லையெனில் நான் அவளை வீட்டில் கொண்டுபோய் விடுகிறேன். இன்று நான் உணர்ச்சிவசப்பட்டுவிட்டேன் போலிருக்கிறது.''

''தவறு என்னுடையது. நான்தான் ஆரம்பித்தேன்'' என்றான் ஜான்.

வில்லியம் எட்லீ சொன்னார்: ''குடும்ப விசுவாசம் என்பது விசித்திரமானது. நம்மையறியாமல் அது நம்மைப் பிடித்து விடுகிறது.''

''ஆமாம்...நான் போய் ரோனா புறப்படத் தயாராக இருக்கிறாளா என்று பார்க்கிறேன்'' என்று எழுந்தான் ஜான்.

வில்லியம் எட்லீ யோசனையுடன் அந்த அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார். சற்றைக்கெல்லாம் ரோனா அங்கே வந்தபோதுதான் அவர் இந்த உலகத்திற்கு வந்தார். அவள் தலையில் தொப்பியும், மேலே கோட்டும் அணிந்திருந்தாள். [redacted] உறைகளை மாட்டிக்கொண்டே, ''நாமிருவரும் சேர்ந்து போவதை நான் வரவேற்கிறேன்'' என்றாள்.

முகத்தில் யாதொரு கடுமையும், வாயில் யாதொரு கொடுமைச் சொல்லும், கண்களில் யாதொரு கோபக்குறியும் இல்லாதிருந்த ரோனாவைக் கண்ட வில்லியம் எட்லீ வியந்து போனார். இவளை இழப்பது எவ்வளவு நஷ்டம் என்பது ஸ்காட்

டுக்குத் தோன்றுகிறதோ என்னவோ? பிறகு அவர் புன்முறுவலுடன் ரோஹவின் கையைப் பற்றிக்கொண்டார். அப்போது தான் நினைத்ததற்கு மேலாகவே அவருக்கு அவளிடம் நம்பிக்கை இருப்பதை உணர்ந்தார். ஜானுக்கும், பெக்கிக்கும் ''குட் நைட்'' சொல்லியபோது, அவருடைய குரலிலும், [redacted] குலுக்குதலிலும் அதீதமான பற்றுதல் மிதந்தது.

சாத்திய கதவண்டை சிறிது நேரம் நின்ற பெக்கி, "இவ் விஷயத்தில் நாம் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. எல்லாம் ரோஹவையும், ஸ்காட்டையுமே பொறுத்தது'' என்றாள்.

ஜான் டெலிபோனண்டை இருந்தான். ''நான் அந்த மடப்பயலுக்கு டெலிபோன் செய்யப்போகிறேன். அக்கழுதை இப்போது ஆபீசில்தானிருப்பான்—'' படபடப்புடன் பேசினான் ஜான்.

''ஜான்!'' என்று கூவிய பெக்கி, குழந்தைகளது அறைப் பக்கம் கையைக் காட்டினாள்.

''சரி ...சரி...'' என்றான் அவன் குரலைத் தாழ்த்தியபடி.

"நீங்கள் ஒரு புரொஃபசர் என்பதை மறந்துவிடாதீர்கள்" என்றாள் பெக்கி. ஆனால், ஜான் ஸ்காட்டிடம் அடித்துப் பேச வேண்டுமென்றே அவள் விரும்பினாள். ஸ்காட் நொந்து கொள்வானோ என்று கவலைப்படாத ஒருவர் இதைச் செய்து தானாக வேண்டும். ரோஹவும், வில்லியம் எட்லீயும் அவனிடம் அதிர்ந்து பேசுவதே கிடையாது. இச் சிரமமெல்லாம் அதனால்தான். ஆனால் ஜானும், அவளும்கூட இப்படித்தான் இருந்திருக்கிறார்கள். காதல் ஏற்பட்டுவிட்டால் யாருமேகூட இப்படித்தான் நடந்துகொள்கிறார்கள். அப்படியானால் ஸ்காட்டின் விஷயம்? அவன் ரோஹவைக் காதலிக்கிறானா, அல்லது அவன் காதல் அரைகுறையானதா? தன் காதலில் பாதியை ஒரு பெண்ணிற்கு அளித்துவிட்டு, மற்றப் பாதியை அவன் தனக்கே வைத்துக்கொண்டிருக்கிறானா?

பெக்கி உணவுத் தட்டுகளை அகற்ற ஆரம்பிப்பதற்குள் ஜான் திரும்பிவந்துவிட்டான். ''ஸ்காட் என்ன சொன்னான்?'' என்று கேட்டாள் அவள்.

''அவன் அங்கில்லை. இன்றிரவு வரவும் மாட்டானாம்.''

''ஜான்!''

''ஆமாம், உண்மைதான்.'' ஜானின் குரலில் விசனம் மிதந்தது. ஸ்காட் தன் வாழ்வில் ஒரு பொய்கூடச் சொல்லியதில்லை என்று வில்லியம் எட்லீ சொன்னாரே!

''அவன் தன் வீட்டிலிருந்தால் . . . .?''

''அங்கும் போன் செய்தேன். பதில் இல்லை.''

''வேதனையை ஒதுக்குங்கள்; அன்பே! போய் உங்கள் விடைத் தாள்களைத் திருத்துங்கள். நானும் இதோ வந்து விடுகிறேன்.''

ஜான் தன் அறைக்குச் சென்று மேஜை விளக்கைப் போட்டான். பெக்கி திரும்பியபோது, கையில் தைப்பதற்கான சாமான்களுடன் வந்தாள். அவள் பேசவில்லை. ஆனால் தன் தையல் வேலையில் கவனத்தைப் பதித்திருந்தாள். பிறகு அவள் யோசனையுடன் நிமிர்ந்து உட்கார்ந்ததை ஜான் பார்த்துக்கொண்டேயிருந்தான். ''இதை இன்னும் சிறிது சின்னதாக வெட்டினால், பார்பராவுக்குக் கூட ஓர் உடை தைத்து விடலாம்'' என்று அவள் தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

ஜான் எழுந்து, அவளண்டை சென்று, குனிந்து முத்தமிட்டான்.

''வந்தனம், டார்லிங். ஆனால், எதற்காக?'' என்று வினவினாள் பெக்கி.

''என்னமோ எனக்குத் தோன்றிற்று. நான் அதிருஷ்டக்காரன்.''

அவள் எழுந்து அவனைக் கட்டிக்கொண்டாள். ''இது உங்களுக்காக. ஜான், நானும் அதிருஷ்டக்காரி.''

பிறகு அவர்கள் தங்கள் வேலைகளைக் கவனிக்கச் சென்றார்கள்.

அத்தியாயம் 14

ரோனுவும், வில்லியம் எட்லீயும் டைஸன் தம்பதிகளிடம் விடைபெற்றுக் கொண்டபோது இரவு ஒன்பது மணிகூட ஆகவில்லை. அதே சமயத்தில்தான் ஸ்காட் எட்லீ தன்னுடைய விடுதியை விட்டுப் புறப்பட்டான். 'பளிச்'சென்று தெரியாத வகையில் அவன் உடையணிந்து கொண்டிருந்தான். தவிர, போகும்போது டாக்ஸி ஒன்றையும் அவன் அமர்த்திக்கொள்ளவில்லை. அதற்குப் பதில், 59-வது தெருவையும், மாடிசன் சதுக்கத்தையும் நோக்கி, சுற்று வழி ஒன்றன் மூலமாய் மெதுவாக நடந்தான்.

ஜன நெருக்கமுள்ள பகுதியை அவன் அடைந்தபோது ஒன்பதரை மணிக்கு இன்னும் பத்து நிமிஷங்கள் இருந்தன.

இன்னமும் கூட்டமாக இருந்த நடைபாதைகளில் ஊர்ந்து கொண்டிருந்தவர்களது முகங்களில் அங்கிருந்த விளக்குகளின் ஒளி 'பளிச்'சென்று விழுந்தது. அவன் பெரிய மருந்துக் கடையொன்றிலிருந்து ஒரு பாக்கெட் சிகரெட்டு வாங்கிக் கொண்டான். பிறகு அக்கடையிலேயே வெளியே தொங்கிய சில மலிவுப் பதிப்பு நூல்களைப் பார்த்து விட்டுச் சரியாக ஒன்பதரை மணிக்கு மாடிசன் அவென்யூவிற்குள் நுழைந்தான். அங்கே 59-வது தெருவின் மூலையிலிருந்த கடை ஒன்றில் நிகோலஸ் ஆர்பென் பத்திரிகை ஒன்றை வாங்கிக் கொண்டிருந்தான். அவன் பார்வை ஒரு முறை ஸ்காட்டின் மீது விழுந்தது ஆனால் அவனைத் தெரிந்தவன் மாதிரி காட்டிக்கொள்ளாமல், சில்லறையைப் பையில் போட்டுக் கொண்டு ஐந்தாவது அவென்யூவை நோக்கி நடந்தான். ஸ்காட்டும் சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டு அவனைப் பின்தொடர்ந்தான்.

ஆர்பெனின் ஜாக்கிரதையான போக்கைக் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் அதைக் கண்டு அவன் மன மகிழ்ந்தான். அது அவனுக்கு உற்சாகத்தையும், அதிகமான பொறுப்பு உணர்ச்சியையும் அளித்தது. தான் செய்துகொண்டுள்ள தீர்மானம் சரியானதென்று அவன் எண்ணினான். இது வரை செய்யாத பெரிய பணி ஒன்றுக்குத் தனக்கு வாய்ப்புக் கிடைத்திருப்பதாக அவன் உணர்ந்தான். இது தன்னையும், ரோனாவையும் விடப் பெரிய விஷயம் என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். 'இப்பணியுடன் ஒப்பிடும்போது நாங்கள் முக்கியமானவர்கள் அல்லர். இதற்காகச் செய்யப்படும் ஒவ்வொரு தியாகமும் பொருத்தமானது. இதுவரை வந்துவிட்ட நான், இனியும் மேலே போகத்தான் வேண்டும். இல்லையெனில் நான் இதுவரை செய்ததெல்லாம் அர்த்தமற்றதாகி விடும்; எனது நம்பிக்கைகள் எல்லாம் சூன்யமாகிவிடும்.' காலையிலிருந்து அவன் முகத்தில் காணப்பட்ட துயரக் குறி இன்னமும் இருக்கத்தான் இருந்தது. ஆனாலும் இப்போது அவனுடைய உதடுகளைச் சுற்றிலும் ஒரு திருப்தி சுடர் விட்டது. நல்ல எதையும் எளிதில் அடைந்துவிட முடியாது. ஆர்பென் அடிக்கடி சொல்லுவது போல, அதிகார மென்பது அதைக் கஷ்டப்பட்டுச் சம்பாதித்துக் கொள்பவர்களுக்குத்தான் கிடைக்கும். தியாகம் செய்யாதவர்களுக்கு இறுதியில் ஒன்றுமே கிடைக்காது.

ஆர்பெனைத் தொடர்ந்து கொலம்பஸ் சர்க்கிளுக்குப் பஸ்ஸிலும், பிராட்வேக்கும், 72-வது தெருவுக்கும் சுரங்க வழி மூலமாகவும், பிறகு 86-வது தெருவிற்கும், ஆம்ஸ்டர்டாம் அவென்யூவிற்கும் நடந்தவாறும் சென்றான் ஸ்காட். அதற்குள் அவனுக்கு ஆர்பெனின் அதிகமான முன்ஜாக்கிரதை

கசந்துவிட்டது. அவர்களை யாரும் தொடரவில்லை; கவனிக்கவும் இல்லை. ஆனாலும் சதிகாரன் மாதிரிப் பாசாங்கு செய்ய ஆர்பெனுக்குப் பிடித்தது. அல்லது ஒருவேளை இன்றைய நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தை ஸ்காட்டுக்கு உணர்த்துவதற்காகத்தான் அப்படிச் செய்கிறானோ? எட்லீக்கு ஒன்றும் புரியவில்லை. இறுதியில், நகரத்துப் பஸ்ஸுக்காக இருவரும் இருளில் காத்து நிற்கையில் ஆர்பென் பேச ஆரம்பித்தான். அப்பொழுதுதான் ஸ்காட்டுக்கு நிம்மதி பிறந்தது.

''என்ன உன் மனதை உறுதி செய்துகொண்டு விட்டாயல்லவா?'' என்று வினவினான் ஆர்பென்.

''இதோ, இங்கே வந்திருக்கிறேன்!''

''உனக்கு மூளையிருக்கிறது...'' என்றான் ஆர்பென் முறுவலுடன்.

ஸ்காட் எட்லீ அவனைக் கூர்ந்து நோக்கினான்.

''ஒருவரைப் பின்தொடருவது எப்படியென்று நீ சடுதியில் அறிந்து கொள்கிறாய்'' என்று தொடர்ந்தான் ஆர்பென்.

அது உண்மைதான். ஆர்பென் எப்போதும் நல்ல ஆசிரியனாகவே இருந்திருக்கிறான். முதலில் கட்டுப்பாடு, பிறகு முழுமையான கீழ்ப்படிதல், இறுதியில் புகழ்ச்சி—இதுதான் அவன் சொல்லித்தரும் வழி. இப்படி எண்ணிய பிறகுதான் ஸ்காட் எட்லீக்கு, மனத்திலிருந்த குரோத உணர்ச்சி மறைந்தது.

''அடுத்தபடியாக என்ன?'' என்று புன்முறுவலுடன் வினவினான் ஸ்காட் எட்லீ. அப்பொழுது ஒரு பஸ் வந்துகொண்டிருந்தது.

''பஸ்ஸுக்குள் நாம் தனித்தனியாக இருப்போம். அதற்குப் பிறகு சேர்ந்து நடக்கலாம். அந்தக் கூட்டத்திற்குச் செல்லுமுன் நாம் சிறிது பேசவேண்டும்.''

ஸ்காட் தலையை அசைத்துவிட்டுச் சற்று நகர்ந்து நின்றுகொண்டான். மற்றும் ஒரு பிரயாணி பஸ்ஸுக்கு வந்தான். அவர்கள் முன்பின் தெரியாதவர்கள் மாதிரி பஸ்ஸில் ஏறினார்கள். ஆனால் சென்டிரல் பார்க் வழியாக பஸ் மீண்டும் கிழக்கு நோக்கி ஓடியபோது, ஆர்பென் தன்னை எதுபற்றிக் கேட்பான் என்று ஊகித்துக்கொண்டான் ஸ்காட். ரோனாவைப் பற்றிய அவனது தீர்மானத்தை ஆர்பென் அறிய விரும்புவான். 'நான் என்ன செய்ய முடியும்? நாங்கள் இருவரும் பிரிந்து போவதைத் தவிர வேறு நான் என்ன செய்யமுடியும்?' என்று எண்ணினான் அவன். பஸ்ஸுக்கு வெளியே ஓடும் பார்க்[illegible] கரிய நிழல்கள் மீதும், இருண்ட வானத்தை எட்டி நின்ற

கட்டடங்களின் மீதும், அவற்றில் அங்கங்கே புலப்பட்ட ஒளி நிறைந்த அறைகள் மீதும் அவனுடைய கண்கள் பதிந்திருந்தன. 'இவ்விஷயத்தில் அவசரம் கூடாது; இன்று ஒரு பெண்ணைக் காதலித்து, மறுநாளே அவளை மறப்பதாகப் பாசாங்கு செய்வது சாத்தியமில்லை என்பது ஏன் ஆர்பெனுக்குத் தெரியவில்லை? ஆர்பென் என்னைக் கோழை என்றால் நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ரோனாவின் முகத்தில்மட்டும் என்னால் விழிக்கமுடியாது. இருந்தாலும் என்ன? ஆர்பென் ஜெயித்து விட்டான். அது போதாதா? நான் கவனமாக இருக்க வேண்டும்; ஆர்பெனின் மீதுள்ள கசப்பை ஒதுக்க வேண்டும். வெற்றியடைந்தது அவன் இல்லை. இவ்விஷயம் ஆர்பென், ரோனா, நான் ஆகிய மூவரையும் விடப் பெரியது. ஏன், இந்த நகரத்தையும், இதில் உள்ள லட்சோபலட்சம் மக்களையும் விடப் பெரியது.

ஐந்தாவது அவென்யூவில் பஸ் நின்றதும், ஸ்காட் முதலில் இறங்கினான். எனவே ஆர்பென் அவனைத் தொடர வேண்டியதாயிற்று. ஐந்தாவது அவென்யூவிலிருந்து பார்க்கின் கிழக்கே மரங்களடர்ந்த பாதை வழியாக நடந்த ஸ்காட் ''நான் போகும் வழி சரிதானே?'' என்று கேட்டான்.

''சரிதான்'' என்று முறுவலித்த ஆர்பென் தனது கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தான். அவைகள் அநேகமாக ஸ்காட் எட்லீ எதிர்பார்த்த கேள்விகள்தாம்.

தயக்கமின்றி சுருக்கமாகப் பதில்களை அளித்தான் ஸ்காட். ஆர்பெனின் அடுத்த நடவடிக்கையைப் பற்றித் தான் அறிவதாகக் காட்டிக் கொண்டதில் திருப்தியே. தன் வாழ்வில் இது ஒரு புதிய கட்டம் என்று அவன் நினைத்துக் கொண்டான். இதுவரை ஆர்பென்தான் தன்னை நடத்திச் சென்றிருக்கிறான். இப்பொழுதுதான் ஆர்பெனின் கவலைக்குத் தான் மட்டுமே காரணமில்லை என்பதைக் கவனித்தான் ஸ்காட். ஏனெனில், இன்னமும் அவன் முகத்தில் வேதனைக் குறி படர்ந்திருந்தது. அதை அவன் மறைக்க முயன்று கொண்டிருந்தான். ஆர்பெனுக்குச் சொந்தமான சில சங்கடங்களும் இருந்தன. இதை ஸ்காட் நன்கு உணர்ந்து விட்டதால், அவர்கள் தெல்மாவின் விடுதியை அடைந்தபோது, ஸ்காட் தனது கேலி உணர்வைக்கூட மறைத்துக் கொண்டான். மூன்று 'பிளாக்'குகளுக்கு முன்னால் வரும்போதே, அவர்கள் செல்லும் இடம் இதுதான் என்று அவன் ஊகித்திருந்தான்.

தன் கடிகாரத்தைப் பார்த்தபடி, ''நீ இங்கே சிறிது காத்திருக்க வேண்டியிருக்கும். இன்றிரவு முக்கியமான ஒரு

வரைச் சந்திக்கப் போகிறோம். அவர் ஒரு யாத்ரிகர். ப்ரேக்கிலிருந்து வந்திருக்கிறார்'' என்றான் ஆர்பென்.

ஸ்காட்டுக்கு உற்சாகம் பிறந்தது. யாத்ரிகரா? அப்படியானால் யாரோ பெரிய மனிதர்தான்!

''அநேகமாக அவரை நீ பார்க்க மாட்டாய்'' என்று வேகமாகச் சொன்ன ஆர்பென், ஸ்காட்டை அவனுக்கு உரிய இடத்தில் வைத்தான். பிறகு மௌனமாக அவர்கள் அந்த வீட்டுக்குள் நுழைந்தார்கள்.

ஆர்பென் தன்னையே நொந்து கொண்டான். தான் முகத்தில் அடித்தாற்போல் பேசிவிட்டதாக எண்ணினான். பிறகு அவன், ஸ்காட் எட்லீக்குத் தானே வழி காட்டி இவ்வளவு தூரம் முன்னுக்குக் கொண்டு வந்ததை நினைத்துச் சிரித்துக்கொண்டான். ஆதியிலிருந்தே ஸ்காட்டுக்கு அவன் யோசனைகள் சொல்லியிருக்கிறான்; கற்றுக் கொடுத்திருக்கிறான். அவனுடைய சிபாரிசின் பேரில்தான் இவ்வளவு சீக்கிரமாக ஸ்காட் எட்லீ இந்த உயர்ந்த நிலையை அடைந்திருக்கிறான். அல்லது ஒரு வேளை கட்சியில் உள்ள ஒவ்வொருவருக்கும் இம்மாதிரியான வாய்ப்புக்கள் கிடைக்கும் என்று ஸ்காட் எண்ணுகிறானோ? மற்றவர்களை ஒதுக்கிவிட்டு அவன் முன்னேறுவதற்குக் காரணம் தன்னுடைய விசேஷத் தகுதிகள் தாம் என்று அவன் நினைக்கிறானோ? ஆர்பெனுடைய புன் முறுவல் சிரிப்பாக மாறியது; ஆனால் சீக்கிரமே ஓர் இருமல் வந்து அதை மூடி மறைத்து விட்டது.

★ ★ ★

''இரவு வேலை பார்க்கும் ஷிஃப்டுக்காரனைக் காணோமே என்று கவலைப்படாதே'' என்று தெல்மாவின் விடுதியை ஒட்டிய வராந்தாவில் நின்றபோது ஆர்பென் சொன்னான்.

இன்று கதவு சற்றுத் தாமதமாகத்தான் திறந்தது. தவிர, கதவு திறக்கப்பட்டதும் அங்கே 'பட்லர்' தான் நின்றான். ஆனால் கோட்டு அணிந்திருக்கவில்லை; முகம் முறுவலித்துக் கொண்டிருந்தது. அவர்கள் 'சட்'டென்று உள்ளே நுழைந்தார்கள்; உடனே கதவு மீண்டும் மூடப்பட்டது. பிறகு அந்த பட்லர் ஆர்பெனுடன் கைகுலுக்கினான்.

பட்லருடன் கை குலுக்கும்போது அவனை ''பில்!'' என்று அழைத்தான் ஆர்பென்.

தனது வியப்புணர்ச்சியை மறைத்துக் கொண்டதாகவே தம்பினான் ஸ்காட். பிறகு அவனும் பில்லுடன் கைகுலுக்கினான். அவன் பெயர் பில்லா? அந்த விடுதியில் ஒரே சமையற்காரனை அவனை யாவரும் மார்டின் என்று அல்லவா

அழைக்கக் கேட்டிருக்கிறான் அவன்? தெல்மாவின் மற்ற வேலைக்காரர்கள் சாப்பாடு முடிந்ததும் போய்விட்டிருந்தார்கள். வீட்டிலேயே தங்கி வேலைசெய்யக் கூடிய பணியாளர்கள் கிடைப்பது இந்த நாட்களில் சிரமம் என்று தெல்மா அடிக்கடி தனது நண்பர்களிடம் கூறியிருக்கிறாள். எனவே மார்டின் கண்டிப்பாகவும், முட்டாளாகவும் இருந்தாலும், தான் முழுவதும் வீட்டிலேயே இருந்து பணி புரிய அவன் கிடைத்தது தெல்மாவின் அதிருஷ்டமே என்று பலர் தங்களுக்குள் எண்ணினார்கள். அதிலும் சார்லஸ் குடித்து விட்டுக் கிடக்கும்போது மார்டினது உதவி எவ்வளவு முக்கியம்!

ஆனால் பில் இப்போது ஆர்பெனுக்கு முன்னால் நடந்தான். ஸ்காட் எட்லீ பின்னால்தான் தொடர விடப்பட்டான். கூடத்திலிருந்த குறுகிய கதவு வழியே பில் அவர்களை அழைத்துச் சென்றான். அப்போது இசையறையிலிருந்து வந்த பியானோவின் ஒலியைக்கேட்ட அவன் முறுவலித்துவிட்டு ''தெல்மா நன்றாக பியானோ வாசிக்காமலிருக்கலாம்; ஆனால் அவள் இரைந்து ஒலியெழுப்புகிறாள். அதுதான் நமக்கும் வேண்டியது'' என்றான். பிறகு அவர்கள் இருண்டிருந்த சிறிய இடைகழிவழியே போய்க்கொண்டிருந்தார்கள். இவைகளெல்லாம் வேலைக்காரர்களுக்கான அறைகளாக இருக்கலாம் என்று நினைத்தான் ஸ்காட்.

''அவளுடைய மகன் எங்கே, இன்றிரவு?'' என்று ஆர்பென் திடீரென்று வினவினான்.

''காலை பத்து மணிக்கு சார்லஸ் குடிக்க ஆரம்பித்தான். இப்போது தன் அறையில் இந்த உலகத்தின் நினைவின்றிக் கிடக்கிறான்.'' பில்லின் குரலில் சிரத்தையில்லை.

''அவன் இந்த வீட்டிற்கு வெளியில் இருந்தால்தான் எனக்கு எப்போதுமே மகிழ்ச்சி'' என்றான் ஆர்பென்.

''அவன் இப்படியிருப்பதும் நல்லதுதான். ஏனெனில் எங்கே அவன் திடீரென்று திரும்பி விடுவானோ என்று நாம் கவலைப்படத் தேவையில்லை. தெல்மாவைக் கூட அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் அவ்வளவு போதையிலிருக்கிறான் அவன். நீங்கள் இந்தவீட்டில் வாழ்ந்திர்களேயானால், அவனைப் பற்றிக் கவலைப்பட மாட்டீர்கள்'' என்று கூறிய பில், இடைகழியின் இரண்டாவது கதவைத் திறந்தான். அப்போது, ஸ்காட் எட்லீயிடம், ''நீ இங்கேயே இரு.'' என்றான். பிறகு ஆர்பெனின் பக்கம் திரும்பித் தாழ்ந்தகுரலில் கூறினான்: ''ஓ! பீட்டரை நாம் பார்க்கும்போது நினைவு வைத்துக்கொள்ளுங்கள். அவர் தோழர் 'ஜார்' என்றெல்லாம் ஐரோப்பிய வழக்கப்படி பேசுவார்.'' பில்லும் ஆர்பெனும் ஒருவரை

யொருவர் பார்த்துக் கொண்டனர். ஆர்பெனின் வாய் இறுக மூடியிருந்தது. பில் உணர்ச்சியற்று இருந்தான்.

"பீட்டர் இப்போது அடுத்த அறையில் இருக்கிறாரா?" என்று ஆர்பென் மெதுவான குரலில் வினவினான்.

பில் தலையை ஆட்டினான். "இன்றிரவு உங்களைக் காண ஆவலாய் இருப்பதாகத் தெரிகிறது."

இந்த வார்த்தைகளில் ஏதோ உட்பொருள் இருப்பதாகத் தோன்றியது. ஆர்பெனின் முகத்தில் ஒரு நிழல் படிந்து மறைந்ததைக் கவனித்தான் ஸ்காட். ஆனால் ஆர்பென், "நல்லது" என்றான். பிறகு பில் ஜாடை காட்டவே, காலியாக இருந்த ஒரு சிறிய அறைக்குள் நுழைந்தான் ஸ்காட். அதில வெளிச்சம் அதிகமில்லை. ஒரு சில மரச்சாமான்களே இருந்தன. அதற்குள் அவன் நுழைந்ததுமே அவனுக்குப் பின்னால் கதவைச் சாத்திவிட்டான் பில்.

ஒரு முரட்டு மர நாற்காலியில் அமர்ந்த ஸ்காட் பணிவுடன் காத்திருந்தான். நிமிஷங்கள் நழுவ நழுவ அவனது நரம்புகள் தளர்ந்தன. திடீரென்று, நேற்றிரவு ஆர்பென் கூறிய வார்த்தைகளை அவன் நினைத்துக்கொண்டான். "இப்போது நீ பெரிய மனிதர்களின் கூட்டத்தில் சேரப்போகிறாய்." கையில் சிகரெட்டுடன் அவன் மனம் தறிகெட்டு அலைந்தது. சிறியோர் குழுவில் இருப்பதே வசதியாக இருக்கும் போலிருக்கிறதே என்று அவன் எண்ணினான். அவன் 'டை'யைத் தளர்த்திக் கொண்டு மீண்டும் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தவாறு அவ்வறையில் கிடந்த சாமான்களைக் கண்களால் துருவினான். 'நான் செய்ய வேண்டிய வேலை என்னவாக இருக்கும்?' என்று அவன் வியந்தான். நேற்று ஆர்பென் அதைக் கூறியதிலிருந்து இந்த நிமிஷம் வரை, அவன் மனதை இக்கேள்விதான் அரித்துக்கொண்டிருக்கிறது. இனி அதைப்பற்றி யோசிப்பானேன்? அதை என்னவோ ஒப்புக்கொண்டாகிவிட்டது. ஆர்பெனும் அதை நிச்சயப் படுத்திவிட்டான். இனியும் எஞ்சியிருப்பது, அப்பணி என்னவென்று தெரிந்துகொள்ள வேண்டியது மட்டுமே.

ஆர்பெனுடன் இங்கு வந்தது வீணில்லை என்று திரும்பியது ஸ்காட்டின் எண்ணம். எதற்காகவோ ஆர்பென் அவனை இதுவரை தயார் செய்து வைத்திருக்கிறான். ஆனால் அது எதற்காக? ஆர்பெனது கேள்விகளின் போக்கை அவன் நினைவுபடுத்திக் கொண்டான். ரோனு ...... அவன் தந்தை ..... ஸ்காட் அவன் தந்தையை எப்போது பார்த்தான்? இன்று மாலையிலா? அவர் எப்படியிருந்தார்? நட்பு முறையில் தானே? ....இதெல்லாம் அற்பமான கேள்விகள்.

ஸ்காட் தோள்களைக் குலுக்கிக் கொண்டான். அப்பாவின் உணர்ச்சிகளை அவன் இன்றிரவு எப்படி விவரிக்கப் போகிறான்? ஆர்பென் அதை நம்பமாட்டான். மீண்டும் அவன் வியந்தபடியே மற்றொரு சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டான். அந்த வியப்பினூடே ஒருவித அச்சமும் அவனைத் தாக்கியது.

கதவு திறந்தது. உணர்வற்ற பில்லின் வெளுத்த முகம் உள்ளே நோக்கியது. பில்லின் குட்டையான விரல் ஜாடை காட்டியது. ஸ்காட் உடனே எழுந்தான். கையிலிருந்த சிகரெட்டைக் கீழே போட்டுக் காலால் அணைத்துவிட்டு அவனைப் பின்தொடர்ந்தான். அவன் மனத்திலிருந்த பயமும், தயக்கமும் எங்கேயோ போய்விட்டன. அவன் அடுத்த அறைக்குள் நுழைந்தான். அப்போது தன்னிடம் ஏற்பட்ட அமைதியான தன்மை அவனுக்குப் பிடித்தது.

முந்தைய அறையைப்போல் இதுவும் சிறிதாகவே இருந்தது. அதேமாதிரிக் குறைந்த வெளிச்சம்; குறைந்த தட்டுமுட்டுச் சாமான்கள்; சாளரக் கண்ணாடியில்கூட இலேசான வர்ணப் பூச்சு. அறையிலிருந்த வெப்பமும், பீடிப் புகையும், சாளரம் இதுவரை மூடியே வைக்கப்பட்டிருந்ததை உணர்த்தியது. மேஜையைச் சுற்றி நான்கு பேர்கள் அமர்ந்திருந்தனர். அவர்களில் மூவர் ஏதோ மெதுவாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அங்கே ஆர்பெனும் இருந்தான். ஆனால், ஏதோ தொடர்பற்றவன் மாதிரி அவன் ஸ்காட்டை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. மற்ற இருவருக்கும் நடுத்தரமான வயது. ஆர்பெனைப் போலவே அவர்கள் எளிய உடைகளில் இருந்தார்கள். நான்காவது மனிதர் கட்டைக் குட்டையாக இருந்தார். அவர் சிறிது விலகியே அமர்ந்திருந்தார். அவர் முகம் சூன்யமாக இருந்தது; அவரது கண்கள் மட்டும் கூர்மையாக யாவற்றையும் விழுங்கிக் கொண்டிருந்தன. அவர் வாய் திறந்து பேசவே இல்லை; ஆனால் அவர்தாம் அந்த அறைக்குள்ளேயே மிகவும் எடுப்பாக இருந்தார்.

பில் ஜாடை காட்டியதும் ஸ்காட் எட்லி ஒரு நாற்காலியில் உட்கார்ந்தான். அவன் உட்காரும்போது அது 'கிறீச்' சிட்டது. பிறகும் அவன் ஆழ்ந்து மூச்சு விடும்போதெல்லாம் அது ஒலியெழுப்பியது. இது அவனுக்குச் சங்கடமாக இருந்ததால், அசைவற்றுப் பெருமூச்சுக்களை அடக்கிக் கொண்டு அமர்ந்திருந்தான். 'சே.... வாழ்வில் முக்கியமான கட்டத்தில் புகப் போகும் தான், கேவலம் பின்னப்புவிட்ட இந்த நாற்காலியைப் பற்றி வேதனையடைவது என்ன மடத்தனம்!' என்று அவன் எண்ணினான்.

பிறகு பில் பேச ஆரம்பித்தான். அவன் கேட்காத கேள்விகள் இல்லை. அவனைப் பற்றி எல்லாமே அவர்களுக்குத் தெரிந்திருந்தன. ஆனாலும் அவர்கள் கேள்விகளை விசிறினார்கள். தன் வேலை முடிந்து விட்ட மாதிரி ஆர்லென் மட்டும் மௌனமாக இருந்தான். செக்கோஸ்லோவேகியாவிலிருந்து வந்துள்ள மனிதர் ஒன்றுமே கூறவில்லை. கேள்வி கேட்பவர்களை அவர் பரிசிலனை செய்து கொண்டிருந்தது போல் தோற்றியது.

ஸ்காட் தயக்கமின்றி வேகமாகப் பதில்களைக் கூறினான். அதற்காக அவன் ஆர்லெனுக்கு நன்றி செலுத்த வேண்டும். மற்றவர்கள் திருப்தி அடைந்து விட்டார்கள் எனத் தோன்றியது. பிறகு ஒரு கணம் பேச்சு நின்றது; அநேகமாக அது மௌனத் தீர்மானம் போலிருந்தது.

பிறகு 'பில்' என்று அழைக்கப்படுபவன் பேசினான்: "இதோ உனக்கான கட்டளை. கடந்த நான்கு வருஷங்களாக உபயோகமான அநுபவத்தைப் பெற்றுக்கொண்ட 'மார்னிங் ஸ்டார்' பத்திரிகையை நீ விட்டுவிடுவாய். உடனே உன் அப்பாவிடம் செல்வாய். உன்னுடைய தீர்மானத்தை நீ புனராலோசனை செய்ததாகவும், அப்போதுதான் உன்னுடைய தவறும் அவருடைய அரிய யோசனைகளும் உனக்கு விளங்கியதாகவும் கூறுவாய். பிறகு, நீ இனிமேல் 'கிளாரியன்' பத்திரிகையில் பணிபுரிய விரும்புவதாகவும் சொல்ல வேண்டும்."

ஸ்காட் எட்லீ தன்னையறியாமல் அயர்ந்து போனான். அவனுடைய நாற்காலி 'கிறீச்'சிட்டது. அவன் தன்னைச் சமாளித்துக்கொண்டான். எதுவாக இருந்தாலும் செய்வதாக நான் முன்னமேயே ஒப்புக்கொண்டு விட்டேன் என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

"வெளிநாட்டுச் செய்திகளின் இலாகாவில் வேலை செய்ய விரும்புவதாக நீ உன் தந்தையிடம் கூறவேண்டும். உனது இந்த விருப்பத்தைக் கண்டு அவர் மகிழ்ச்சி கொள்ளுவார்; அடுத்த வருஷத்திற்குள் வெளிநாட்டுச் செய்திகளின் ஆசிரியர் ஓய்வு பெற இருக்கிறார். என்ன புரிகிறதா?"

எட்லீ தலையை அசைத்தான். இனியும் பின்வாங்குவதற்கில்லை. நான் இதில் ஆழ வேரூன்றி விட்டேன். தன்னைக் கவனித்துக்கொண்டிருந்த முகங்களை அவன் ஏறிட்டு நோக்கினான்; "எல்லாவற்றையும் தெரிந்து கொண்டேன்" என்றான் மெதுவாக.

பில்லின் குரல் தொடர்ந்தது: "நீ நியூயார்க்கை விட்டுச் சென்று லண்டனில் வசிக்கவேண்டும். அங்கே நன்கு வேலை செய்து, கிடைக்கும் பதவி உயர்வுகளுக்கெல்லாம் உன்னைத் தகுதியாக்கிக்கொள்ள வேண்டும். அவ்வளவுதான் தற்போதைக்கு நீ செய்யவேண்டியது."

எட்லீ மீண்டும் தலையை ஆட்டினான். அவனால் ஒன்றும் பேச இயலவில்லை. தன் எண்ணங்களைக்கூட அவனால் சீர்படுத்திக் கொள்ள முடியவில்லை.

"உன்னுடைய தற்போதைய அரசியல் தொடர்புகளையெல்லாம் நீ அறுத்துக்கொள்ளவேண்டும். எந்தவிதமான அரசியல் கருத்தையும் நீ வெளியிடக்கூடாது. இதைத் தெளிவாகப் புரிந்துகொண்டாயா?" என்று வினவினான் பில்.

கணநேரம் மௌனம். "ம்ம்....புரிந்து கொண்டேன்" என்றான் ஸ்காட்.

செக்கோஸ்லோவேகியாவிலிருந்து வந்திருப்பவர் முன்னே குனிந்தார். அவர் ஆங்கிலத்தில், சற்றுத் தெளிவாக இல்லையெனிலும், தவறின்றி அழுத்தமாகப் பேசினார்: "தோழர் எட்லீக்கு இந்தப் பணி பிடிக்கவில்லையா?"

எட்லீ அவரை நேராகப் பார்த்தான். "நான் செய்வதாகச் சொன்னேனே. அப்படியே செய்வேன்." பிறகு அவன் ஆர்பெனை நோக்கினான். இம்மாதிரியான பணி எட்லீக்கு வரப்போகிறதென்று ஆர்பெனுக்கு எவ்வளவு நாட்களாகத் தெரியும்? நான்கு ஆண்டுகளுக்குமுன் அவனை 'மார்னிங் ஸ்டாரில்' சேருமாறு ஆர்பென் தூண்டியபோதிலிருந்தே தெரியுமே?

பில் தொடர்ந்தான்: "இவைகள் தாம் உனக்கான கட்டளைகள். சாதாரணமானவைதாம்; ஆனால் சிரமமானவை. இந்தப் பணியை நாங்கள் மிகவும் முக்கியமாகக் கருதுகிறோம்: காலம் தாழ்த்துவதற்கில்லை. உனது கோரிக்கைகளுக்கு உன் அப்பா என்ன சொல்கிறார் என்பதை இவ்வார இறுதிக்குள் நீ எங்களிடம் தெரிவிக்க வேண்டும்."

மீண்டும் அங்கே ஒரு சிறு அமைதி நிலவியது. மீண்டும் அந்த வெளிநாட்டுக்காரர் பேசுவதற்காக முன்னால் குனிந்தார். "எங்களுக்குத் தோன்றாத இடையூறுகள் ஏதாவது தோழர் எட்லீக்குப் புலப்படுகிறதா?"

ஸ்காட் எட்லீ மீண்டும் ஆர்பெனை நோக்கினான். மற்றவர்கள் விழிகளும் அவனுடைய விழிகளைத் தொடர்ந்தன. மேஜை மீதிருந்த அழுக்குக் கறைகளை ஆர்பென் ஆராய்ந்து கொண்டிருந்தான்.

"என்ன?" என்று வினவினார் செக்கோஸ்லோவேகியாக்காரர். அவர் குரலிலிருந்த கடுமை அவனை அதிர வைத்தது.

அவன் குரல் தடுமாறினான். "ஒரு சிரமம் இருக்கிறது: இன்று மாலையில் நான் என் தந்தையைச் சந்தித்தேன. எங்களுக்குள் அநேகமாக ஒரு சின்னச் சண்டையே நடந்தது. ரோனா மெட்ஃபோர்டுக்கும் எனக்கும் நடந்திருக்கும் நிச்சயதார்த்

தத்தை முறித்துக்கொள்வதற்காக நான் சொன்ன சமாதா னங்களையெல்லாம் அவர் ஏற்க மறுத்துவிட்டார்.''

அப்போதுதான் ஆர்பென் தலை நிமிர்ந்தான். இறுகிய உதடுகளுடன் அவன் எட்லீயை வெறித்து நோக்கினான்.

''உன் தந்தை இப்பெண்ணின் கூட்டாளியா ?'' என்று வேகம க் கேட்டான் பில்.

'' தெல்லாம் வீண் பேச்சு. நாம் காலத்தை வீணாக்கிக் கொண் டிருக்கிறோம். தோழர் எட்லீ, பலவீனங்களுக்கு இங்கே இடமி லை'' என்றார் அந்த வெளிநாட்டுக்காரர்.

''தோழர் எட்லீயின் நல்ல எண்ணத்தைச் சந்தேகிக்க வேண்டாம்'' என்று திடீரென்று குரல் கொடுத்தான் ஆர்பென். ''கட்சிக்கான வேலைகளில் இப்பெண் உதவியாக இருப்பாள் என்று எட்லீ எதிர்பார்த்தான். அவளால் இடை யூறுகள்தான் நேருமென்று நாங்கள் தீர்மானித்தோம். நேற் றிரவு நான் அவனிடம் இதைக் கூறினேன். அவன் நம் தீர்மா னத்தை ஒப்புக்கொண்டு விட்டான். பலவீனமான மனிதர்களை நான் தேர்ந்தெடுப்பதில்லை, தோழர் பீட்டர்.''

பில் அந்த வெளிநாட்டவரின் முகத்தைக் கவனித்துக் கொண்டிருந்தான். ''ஆனால் அப்பெண்ணின் உதவியைப்பற்றி உன்னால் நன்கு தீர்மானிக்க முடியாது. நீ சிறிது அடுத்த அறையில் காத்திரு'' என்று எட்லீயிடம் கூறினான் பில்.

எட்லீ எழுந்து விறைப்பாகக் கதவை நோக்கி நடந்தான். நம்பிக்கை இல்லாமல், விசுவாசம் இல்லையென்று குற்றம்சாட் டுவது போல் ஆர்பென் பார்த்த பார்வை அவன் நினைவுக்கு வந்தது. ஆனால், அந்த வெளிநாட்டுக்காரர் அருவருப்புடன் பேசியபோது, ஆர்பென் எட்லீயின் பக்கம் ஏன் வாதாடி னான்? ஆர்பென் ஒருவேளை தன் பாதுகாப்புக்காகத்தான் அப் படிப் பேசினானோ? ஏதோ மறைமுகமான சண்டை ஒன்று அவர் களுக்குள் நடப்பதாகவே ஸ்காட்டுக்குத் தோன்றியது. பதவிக் கான, அதிகாரத்துக்கான சண்டை. . . .

'சட்'டென்று அவன் தோளுக்கு மேலாகத் தலையைத் திருப்பியபோது தூரத்தே மற்றோர் அறையின் கதவு மூடிக் கொள்வது போலிருந்தது. ஒரு கணம் நின்று, அங்கே யாரென்று கவனிக்கலாமா என நினைத்தான் அவன். மறு கணமே அது என்னைப்போல் வேறொரு தொண்டனாக இருக்கு மென்று நினைத்தான். அல்லது சாளரத்தின் வழியே வந்த காற் றினால்தான் அக்கதவு அசைந்ததோ என்னவோ? அது எதுவாக இருந்தாலும் அவன் வராந்தாவில் சுற்றிக்கொண்டிருப்பதற் கில்லை. அந்த வெளிநாட்டுக்காரர் பார்த்தால் என்ன சொல் லுவார் என்றும் அவனால் ஊகிக்க முடிந்தது. கடைசியாக அவர்

கூறியதே இன்னமும் எட்லீயின் காதைத் துளைத்துக்கொண்டிருந்தது. அவன், முன்பு தங்கிய அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான்.

அதிகாரத்துக்கான சண்டை என்று மீண்டும் அவன் எண்ணினான்.... பிறகு, அது அபத்தமான எண்ணம் என்று அதை உதறித் தள்ளினான். ஆர்பெனேயும், பில்லேயும் போன்றவர்கள் சொந்த அதிகாரத்தைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். அவர்களுடைய லட்சியம் இவற்றிற்கெல்லாம் மேலானது. பிறகு அவன் தன்னைப்பற்றியும், 'கிளாரியன்' பத்திரிகையில் தன் வேலையைப் பற்றியும் எண்ணலானான்.

இறுதியில் கதவு திறக்கப்பட்டபோது ஆர்பெனே அறைக்குள் நுழைந்தான். "நீ இப்போது போகலாம், ஸ்காட். நமது அடுத்த சந்திப்பு வெள்ளிக்கிழமையன்று. இங்கேயே இதே நேரத்தில். நாம் தனித்தனியாக வருவோம். கவனம் வைத்துக்கொள்: உன் அப்பாவிடம் பேசியது பற்றி அப்போது நீ சொல்ல வேண்டும். நல்ல சேதியை நாங்கள் எதிர்பார்க்கிறோம். அப்புறம், உனக்கு இறுதியான உத்தரவுகள் கிடைக்கும்" என்று கூறிய ஆர்பென் புறப்படத் திரும்பினான். ஆனால் கதவுவரை சென்ற அவன் மீண்டும் திரும்பி, "ஸ்காட், ரோனு மெட்ஃபோர்டு விஷயத்தில் உன் அப்பாவின் கருத்தை நீ ஏன் என்னிடம் கூறவில்லை? நான் கூட உனக்கு அதைச் சொல்ல வாய்ப்பளித்தேனே!" என்றான்.

"எனக்குத் தோன்றவில்லை" என்று விசனத்துடன் கூறினான் ஸ்காட். பிறகு பேச்சை மாற்றும் முறையில், "வெள்ளிக்கிழமையா? அன்று நீங்கள் நியூயார்க்கில் இருப்பீர்களா?" என்று வினவினான். நேற்றிரவுதான், வியாழனன்று வெளியூர் போவதாக ஆர்பென் கூறியிருந்தான். அது வெளிநாட்டுக்கேகூட இருக்கும் என்பது ஸ்காட்டின் ஊகம். ஆர்பென் வெளிநாட்டுக்குச் செல்லும்போதெல்லாம் அதிகமான விவரங்களை வெளியிடுவதில்லை; அவன் எவ்வளவுக்குச் சாதாரணமாகச் சொல்கிறானோ, அவ்வளவுக்கு அது முக்கிய பிரயாணமாக இருக்கும்.

"என் பிரயாணம் ரத்தாகிவிட்டது. ரோனுவைப்பற்றிய என் யோசனைகளை மட்டும் மறந்து விடாதே" என்றான் ஆர்பென்.

"பிரயாணம் ரத்தாகிவிட்டதா?"

ஸ்காட்டின் முகத்தை ஒருகணம் ஆராய்ந்தான் ஆர்பென். "நீயல்லவா எதையோ இழந்துவிட்டவன் மாதிரி இருக்கிறாய்?" என்றான் விசனத்துடன். 'அவன் மட்டும் என் தீர்மானங்களை ஒப்புக்கொண்டிருந்தால், எவ்வளவோ எதிர்கால இன்னல்களைத் தடுத்துக் கொண்டிருக்க முடியும்' என்று

நினைத்தான் ஆர்பென். பின்னர் அப்பெண்ணினால் ஏற்படக் கூடிய உபயோகங்கள் தீர்ந்த பிறகு அவளைக் கைவிடுவதை விட, இப்போதே அவளிடமிருந்து அறுத்துக்கொள்ளுவது நல்லது. ''ஸ்காட், மெல்ல நழுவிச்செல்; தெல்மாவிடம் பேச வேண்டாம்'' என்றான் ஆர்பென். பிறகு, அடுத்த அறையில் நடக்கும் பேட்டிகளிலிருந்து அதிகநேரம் வெளியே இருக்க விரும்பாதவன் மாதிரி அங்கே உடனேயே திரும்பிச் சென்றான்.

★ ★ ★

அந்த விடுதியின் முக்கியமான கூடத்தை அடைந்தான் ஸ்காட் எட்லீ. அது காலியாக இருந்தது. அவன் முன்கதவை நோக்கி மெதுவாக நடந்தான். கடந்த சில நிமிஷங்களாக நின்றிருந்த இசை ஒலி மீண்டும் கேட்டது. அப்போது திடீரென்று தன் பின்னால் புத்தக அறையின் பக்கத்தில் ஏதோ காலரவம் கேட்டது.

ஸ்காட் தயங்கினான். அங்கே என்னவென்று பார்க்க நினைத்தான் அவன். ஆனால், ''தெல்மாவுடன் பேசவேண்டாம்'' என்ற ஆர்பெனின் உத்தரவு அவனைத் தடுத்தது. எதிரிலிருந்த பெரிய முன்கதவை அவன் ஒரு தடவை திறந்து மூடினான். பிறகு அங்கே அசையாமல் நின்று, அக்கூடத்தின் மறுகோடி வரை கண்களைச் சுழற்றினான். அப்போது புத்தக அறையிலிருந்து சார்லஸ் மெழுவாக நழுவி ஓடியது தெரிந்தது. சார்லஸும் எட்லீயைப் பார்த்துவிட்டான். அவன் ஒருகணம் நின்று அக்கூடத்தை வெறித்து நோக்கினான். பிறகு நகர்ந்து சென்றான். இத்தடவை சார்லஸ் தடுமாறி நடந்தான்; அத்துடன் குடிபோதையில் இருப்பவன் மாதிரியும் நடந்தான்.

சார்லஸ் தன் அறைக்குத் திரும்பும் வரை ஸ்காட் அங்கேயே நின்றான். பிறகு அவன் அந்தக் குறுகிய இடைகழிக்குத் திரும்பிச் சென்றான். ஒரே கணத்தில் பில்லும் அவன் எதிரே வந்துவிட்டான். ''என்ன விஷயம்?'' என்று வினவினான் பில். அவன் இப்போது 'பட்லர்' கோட்டைப் பாதி மாட்டிக்கொண்டிருந்தான்.

''சார்லஸ். அவன் இங்கே சுற்றிக்கொண்டிருக்கிறான்; குடிபோதையில் இல்லை.'' அவன் மெதுவாகத் தான் பேசினான். ஆனால் அடுத்திருந்த அறையில் திடீரென்று நிலவிய மௌனத்திலிருந்து, அவர்கள் காதுகளிலும் இப்பேச்சு விழுந்திருக்குமென்று அவனுக்குத் தோன்றிற்று. கவனமாக இருக்கவில்லையென்று அவன் மீதும் புகார் வரக்கூடும்.

பில் தன்னைச் சமாளித்துக்கொண்டான். அவன் வேகமாக அறைக் கதவை மூடிவிட்டுக் கூடத்தை நோக்கி நகர்ந்தான்.

''அவன் உன்னைப் பார்த்துவிட்டானா?'' என்று கண்களை இடுக்கிக்கொண்டு வினவினான் பில்.

''ஆமாம்......நம் எல்லோரையும் அவன் பார்த்திருக்கக் கூடும்.''

பில்லுக்கு வியர்த்துக் கொட்டியது. அவன் கவலையுடன் அந்த அறையைத் திரும்பி நோக்கினான். வந்திருக்கும் தோழர் இதைப்பற்றி என்ன சொல்வாரோ? பிறகு எட்லீயிடம், ''நீ வெளியே போய்விடுவது நல்லது'' என்றான் பில். அவன் குரல் பயத்தால் கூர்மையாக ஒலித்தது. தொடர்ந்து கோபத்துடன் கோட்டை நன்றாக இழுத்து விட்டுக்கொண்டு அக்கூடத்தில் நடந்து சென்றான்.

எட்லீ, முன் கதவுக்கு வெளியே வந்தபோது, பில் இசை அறையினுள் நுழைந்தான். தெல்மாவின் பதட்டமான குரல் கேட்டது. ''மார்டின், என்ன நேர்ந்துவிட்டது?'' அத்துடன் அவள் வாசித்துக்கொண்டிருந்த பியானோ இசையும் கடுமையாக மாறி ஒலித்தது.

அத்தியாயம் 15

''ஆனால் நான் உன்னைப் பார்க்க வேண்டும். ரோனா, உன்னிடம் சொல்ல நிறையச் செய்திகள் இருக்கின்றன. காலையிலிருந்து உனக்கு மூன்று தடவைகள் போன் செய்தேன் ரோனா...ரோனா...நீ அங்கிருக்கிறாயா? நான் பேசுவது காதில் விழுகிறதா?'' என்று டெலிபோனில் பொரிந்து தள்ளினான் ஸ்காட்.

''விழுகிறது'' என்ற ரோனா மேஜையின் மீதிருந்த டெலிபோனின்மீது பார்வையைப் பதித்தாள். வரும் டெலிபோனை எடுக்காமல் இருப்பதென்பது ஆபீசில் சாத்தியமில்லை. வீடாக இருந்தால் மணி அடித்து, அடித்து ஓயும்வரை அதை எடுத்துப் பேசாமல் இருந்துவிடலாம். ஸ்காட்டிடமிருந்து டெலிபோன் வராதா என்று நேற்று முழுவதும் அவள் ஏங்கினாள்; ஆனால் இன்று அதைத் தவிர்க்க முயல்வது அவளுக்கே விசித்திரமாக இருந்தது.

''ரோனா, இன்று பகல் உணவை நாம் சேர்ந்து சாப்பிடுவோம். எப்போது நான் உன்னைச் சந்திக்கட்டும்?''

''ஸ்காட், அதை நான் விரும்பவில்லை? அதனால் ஒரு பலனும் ஏற்படப் போவதில்லை. நேற்றிரவு நான் உங்கள் அப்பாவைப் பார்த்தேன்.''

''இதோ பார் ரோஸு, அவர் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு நீ தளர்ந்து போகாதே. அவர் 'சட்'டென்று தவறுதலான முடிவுகளுக்கு வரக்கூடியவர். ஸ்டான்டனுக்குப் புறப்படுமுன் இன்று காலையில் நான் பார்த்தேன். இப்போது அவர் பல விஷயங்களைப்பற்றி வேறுவிதமாக நினைக்கிறார்.''

''உங்கள் உணர்வுகூட மாறியிருக்கிறதா? மாறியிருந்தால் எப்படி?'' என்று கசப்புடன் வினவினாள் ரோஸு.

''ரோஸு! உனக்குப் புண்ணியம் உண்டு. நான் கூறுவது முழுவதையும் கேளேன்: அடுத்த மாசமே நாம் திருமணம் செய்துகொள்ளப் போகிறோம். இந்தச் சேதி எப்படி?''

''அடுத்த மாசமா?''

''ஆமாம். அத்துடன் நாம் ஸ்டான்டனிலேயே வசிக்கவும் போகிறோம்.''

''என்னது?''

ஸ்காட் சிரித்தான். ''ஆமாம், இனிமேலும் நாம் வீட்டு வேட்டையாட வேண்டாம். நாம் ஸ்டான்டனில் வாழப் போகிறோம். நான் 'கிளாரியன்' பத்திரிகையில் சேரப் போகிறேன், எப்படி?''

இத்தடவை அவளால் பதில் பேசவே முடியவில்லை.

ஸ்காட் சொன்னான்: "பன்னிரெண்டரை மணிக்கு நான் கீழே உனக்காகக் காத்திருப்பேன், அன்பே! குட் பை!'' எதிர்முனையில் டெலிபோன் கீழே வைக்கப்பட்ட சப்தம் கேட்டது.

''ஸ்காட்!'' என்றாள் அவள். பிறகு டெலிபோனைக் கீழே வைத்தாள்.

ஸ்காட் மட்டும் இச்சேதியை ஞாயிறன்றே சொல்லியிருந்தால்? அல்லது நேற்றுவது கூறியிருந்தால், அவள் எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பாள்! ஸ்காட் இப்போது இருப்பது போல் தானும் குதூகலத்துடன் இருந்திருக்கலாமே என்று அவள் எண்ணினாள். ''ஆனால் இப்போது—என்னிடம் எந்த உணர்ச்சியும் இல்லை. நான் ஜடமாகிவிட்டேன். நான் எங்கே இருக்கிறேன், எங்கே செல்கிறேன் என்றே எனக்குப் புரியவில்லை. ஸ்காட்டை நான் இன்று பார்க்க விரும்பவில்லை. நாளைக்கும் கூடத்தான். என்னைச் சமாளித்துக்கொள்ள எனக்கு அவகாசம் வேண்டும். நேற்றிரவு அவருடைய அப்பா பேசியதைக் கேட்டபோது நான் அடைந்த துன்பங்களை மறக்க எனக்கு அவகாசம் வேண்டும். ஏனெனில் நான் ஸ்காட்டைக் காதலிக்கிறேன். என் சிரமம் அதுதான்.''

பிறகு அவளுடைய நினைவு ஸ்காட்டின் பக்கம் திரும்பியது. இப்படித் தனது திட்டங்களை யெல்லாம் முழுவதும் மாற்றிக் கொள்ளும்படி அவனை எது தூண்டியது? நிச்சயம், அவனாகவே தன் தந்தையிடம் சென்று, நான்கு ஆண்டுகளாகத் தான் செய்ததெல்லாம் தவறென்று ஒப்புக்கொண்டிருக்கமாட்டான். அவன் அவளைச் சிறிதுதான் புரிந்துகொண்டிருப்பது போல் தோன்றுகிறது; அவளும் அவனைச் சிறிதே புரிந்து கொண்டிருக்கிறாளோ?

''ரொம்ப வேலையோ?'' என்று மிஸ் கட்மெனின் குரல் கேட்டது. ''எனக்கு உன் யோசனை தேவை, உணவு அறையின் அலங்காரம்பற்றி.'' அவளுடைய பார்வை ரோனாவின் இடது கையின்மீது விழுந்தது. ''உன் மோதிரமெங்கே? குளியறை யில் வைத்துவிட்டு மறந்துவிட்டாயா?''

''இல்லை. அது பத்திரமாக இருக்கிறது'' என்றாள் ரோனா. காலையில் அதை ஒரு பெட்டியில் வைத்து, ஸ்காட்டிடம் அனுப்புவதற்குத் தயாராக 'பாக்' செய்திருந்தாள். இப்போது அது அவளுடைய கைப் பையிலிருக்கிறது. பகல் உணவு நேரத்தின் போது அதைத் தபாலாபீசில் பதிவு செய்து அனுப்ப எண்ணியிருந்தாள்.

''ஏதாவது தகராறு நேர்ந்ததா?'' என்று மிஸ் கட்மென் ஆவலுடன் வினவினாள்.

''அடுத்த மாதமே அவர் என்னை மணந்துகொள்ள விரும்புகிறார்.'' ரோனாவினால் இதைக் கூறாமலிருக்க முடியவில்லை.

''ஜூன் மாதத்திலா? அப்படியானால் நம் இருவரது கல்யாணங்களும் ஒரே மாதத்தில்தான். மிகவும் மகிழ்ச்சி.''

ரோனா தன் வேலையைக் கவனிக்கலானாள். மிஸ். கட்மெனும் தன் இடத்தை நோக்கி நடந்து சென்றாள். வழியில் தாழ்வாரத்தில் கையில் காகிதங்களுடன் வந்த பால் ஹேடனை அவள் சந்தித்தாள். அவன் வழக்கம்போல் முறுவலித்தான்.

''உங்களுக்குச் சேதி தெரியுமா? மிஸ் மெட்ஃபோர்டுக்கு ஜூன் மாதத்தில் கல்யாணம்!'' என்றாள்.

''அப்படியா?'' என்று கேட்டவாறு அவன், மேலே நடந்து வெயிட்லரின் அறைக்குச் சென்றுகொண்டிருந்தான்.

ஆனால், நான் ஏன் இதை வெளியில் சொல்லிக்கொண்டு அலைகிறேன் என்று தனக்குள் விசனத்துடன் வியந்துகொண்டாள் மிஸ் கட்மென். ஆனாலும் பால் ஹேடனுக்கு இதைக் கேட்டதும் மகிழ்ச்சிதான் போலிருக்கிறது. ஏனெனில், இனி மேலாவது அந்த வம்புப் பேச்சுக்கள் நின்றுவிடுமல்லவா? பிறகு அவள் திருமதி ஹார்ஷியிடம் இதைச் சொல்ல ஓடினாள்; பாவம் ரோனா, ஒரு மனிதன் இப்படியா கல்யாணத்திற்கு அவசரப்படுத்துவது?

''ரோஜாவுக்காக நாம் ஒன்றும் வருந்தத் தேவையில்லை. அவளை அடைய ஒருவன் அவசரப்படுவதில் அதிசயமில்லை'' என்று முறுவலித்தாள் திருமதி ஹார்ஷி.

''ஆமாம். அவளுக்கு ஒன்றும் குறையில்லை அல்லவா? அவளுடைய கல்யாணப் போட்டோக்கள் கூட எல்லாப் பத்திரிகைகளிலும் வரக்கூடும். மணப்பெண் உடையில் அவள் அழகாக இருப்பாள்'' என்றாள் மிஸ் கட்மென்.

''ஓ! கல்யாணத்திற்கு அழகுத் தோற்றத்தைவிட முக்கியமான விஷயங்கள் எவ்வளவோ உள்ளன'' என்றாள் திருமதி ஹார்ஷி, தனது சொந்த மருமகளை நினைத்துக்கொண்டு.

மிஸ். கட்மென் அவளைக் கூர்ந்து நோக்கினாள். பிறகு தனது டைப் மெஷினில் காகிதங்களை வைத்துப் 'படபட' வென்று டைப் அடிக்க ஆரம்பித்தாள்.

★ ★ ★

பால் ஹேடன் தன் அறைக்குள் நுழைந்ததும், ''உனக்கு நல்லதும் கெட்டதும் கலந்த சேதியிருக்கிறது. அதாவது அது உனக்கு நன்மையானது; க்ரோவெல்லுக்குக் கெடுதலானது! அவருடைய மனைவி இப்போதுதான் எனக்குப் போன் செய்தாள்'' என்றார் வெயிட்லர்.

''ஏன் அவர் மருத்துவசாலையிலேயே தங்க வேண்டும் என்கிறார்களா?''

''ஆமாம். அத்துடன் அவர் அதைவிட்டுத் திரும்பவே முடியாதாம்.'' வெயிட்லர் விசனத்துடன் தன் மேஜையை உறுத்து நோக்கினார். க்ரோவெல்லுக்கு அவர் வயதுதான். 'ட்ரெண்டை' ஆரம்பித்த நாள் முதல் க்ரோவெல் அவருடன் வேலை பார்த்து வருபவர்... பிறகு வெயிட்லர் எழுந்து சாளரத்திற்கு வெளியே கண்களைப் பதித்தார். ''என்ன செய்வது? நிலைமை இப்படியாகிவிட்டது. இப்போது நீ ஆசிரியர் பதவியை ஏற்கவேண்டும். உனக்கு உதவிக்கு நம் ஆபீசிலேயே யாராவது இருக்கிறார்களா, அல்லது வெளியிலிருந்துபுதிதாகக் கொண்டு வரவேண்டுமா?'' என்று வினவினார் அவர். பால் ஹேடன் பதிலளிப்பதற்குள் அவரே தொடர்ந்து பேச ஆரம்பித்தார்: ''க்ரோவெல் நல்ல உழைப்பாளி. இத்துறையில் அவர் ஒரு சிறந்த ஆசிரியர்.''

''தயாளசிந்தை உடையவருங்கூட. இவ்வேலைபற்றி எனக்குத் தெரிந்திருப்பதையெல்லாம் அவர் தாம் எனக்குச் சொல்லிக் கொடுத்தார்'' என்றான் பால் ஹேடன் மெதுவாக.

''ஆமாம்... இப்போது வேலை எப்படிப் போகிறது?'' என்று வினவினார் வெயிட்லர். பால் ஹேடனின் மனத்தி

லிருந்து க்ரோவெல்லைப் பற்றிய விசனம் தரும் நினைவை அகற்றுவதற்காகவே அவர் இப்படிக் கேட்டார். உண்மையில், பத்திரிகை வேலை எப்படிப் போகிறதென்று அவருக்குத் தெரியும். இன்னும் சில வருஷங்களில் க்ரோவெல்லைப் போலவே பால் ஹேடனும் சிறந்த ஆசிரியனாகி விடுவான்.

''எல்லாம் சரியாகவே நடந்துகொண்டிருக்கிறது'' என்று பால், கையிலிருந்த கையெழுத்துப் பிரதி ஒன்றை அவர் முன்னே வைத்து, ''இதில் உங்களுக்குச் சிரத்தை இருக்கும் என்ற எண்ணத்தில் கொண்டு வந்திருக்கிறேன்'' என்றான்.

வெயிட்லர் அதைப் பரிசீலிக்க ஆரம்பித்தார். ஆனால் அவர் மனது இன்னமும் அலுவலகச் சிப்பந்திகள் விஷயத்தைப்பற்றிய எண்ணமிட்டுக் கொண்டிருந்தது. ''இனி மேலும் நாம் ப்ளாக்வொர்த்தைப் போன்றவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளக்கூடாது. அவர்கள் இங்கே நுழைய முயன்று கொண்டுதானிருப்பார்கள் என்று உன்னுடைய கர்னல்கூடச் சொன்னார்'' என்றார் வெயிட்லர்.

அவர் ரோஜர் பிரௌன்லியைக் காணச்சென்றது அப்போதுதான் பாலின் நினைவுக்கு வந்தது. ''கர்னல் எப்படியிருந்தார்?'' என்று அவன் வினவினான்.

''அவர் விஷயம் தெரிந்தவர்; சிரமமான அலுவல்களை அவர் கவனித்து வந்திருக்கிறார். ஆமாம்..இக்கட்டுரையை நான் படிக்கவேண்டுமென்கிறாயா? சிறிது விவாதத்திற்கு இடமான விஷயந்தான் என்றாலும், சுவையாக இருக்கும் போலிருக்கிறது.''

''ஆமாம். சுவையான விஷயந்தான். பிரௌன்லீ கூறியதுபோல, அவர்கள் முயன்று கொண்டுதானிருக்கிறார்கள்.''

''ஓ?'' என்று உஷாராகிவிட்ட வெயிட்லர், கட்டுரை ஆசிரியரின் பெயரைக் கவனித்தார். இப்பெயரை நான் கேட்டதே இல்லையே! உனக்கு அவனைத் தெரியுமா?''

''அது நிகோலஸ் ஆர்பெனின் மற்றொரு புனைப்பெயர்.''

''வெயிட்லர் அக்கட்டுரையின் தலைப்புப் பக்கத்தை வெறித்து நோக்கினார். ''என்ன அசட்டுத் துணிச்சல் அவனுக்கு? நிச்சயமாக அவன் கட்டுரைதானா இது?''

''நிச்சயமாக. பிரௌன்லீயின் ஆபீஸில் இதைப் பரிசீலிக்கச் செய்தேன். 1945-இல் பல தடவைகள் இப்பெயரை ஆர்பென் உபயோகித்திருக்கிறான். ஆனால் கடந்த ஐந்து வருஷங்களாக அவன் இதை உபயோகிக்கவில்லை.''

''பின் ஏன் இப்போது உபயோகிக்க வேண்டும்?''

''யாருக்கு அது நினைவில் இருக்கப்போகிறது? பிரௌன்லீ, ஆர்பெனைப் பற்றிய விஷயங்களைத் திரட்டி வைத்திருக்கிறார். இல்லையெனில் யாருக்குத் தெரியும்?''

''ஆனாலும் அவன் ஒரு முட்டாள்—அவன் ஏன் வேறொரு பெயரைக் கண்டுபிடிக்கக் கூடாது?''

''ஜான் ஸ்மித் என்றா? தோழர்களுக்குத் தெரிந்த பழைய பெயர்களை வைத்துக்கொண்டால்தானே அவர்கள் அவனைப் பாராட்டுவார்கள்? அல்லது ஒருவேளை அவன் நாமெல்லாம் முட்டாள்கள் என்று நினைத்திருப்பான்.''

''அசட்டுத் துணிச்சல்!'' என்றார் வெயிட்லர் மீண்டும்.

''அவர்களுக்கு அது அதிகமுண்டு. மர்ரே என்னைக் 'காக்கை' பிடித்தது உங்களுக்குத் தெரியாதா? நேற்றுவரை அவன் என்னுடன் குழைந்தான். இப்போது, நான் உபயோக மற்றவன் என்று அவனுக்குத் தகவல் வந்திருக்கக்கூடும். இக் கட்டுரை என்னிடம் சென்ற வெள்ளிக்கிழமையே வந்து விட்டது.''

''இப் புனைபெயரை நீ எப்படிப் புரிந்துகொண்டாய்?''

''இக்கட்டுரையைப் படித்தபோது நான் நிலைகொள்ளா மல் தவித்தேன். அதில் அதிகமான 'உபதேசம்' இருந்தது. எல்லாம் பிலிப்பைனைப்பற்றி. அங்குள்ள 'ஹக்' கட்சியினர் கம்யூனிஸ்டுகள் அல்லவாம்; அவர்களே நேர்மையான, தேசா பிமானமுள்ள நிலச் சீர்திருத்தவாதிகளாம்!''

வெயிட்லர் அக்கட்டுரையை மேஜையின்மீது எறிந்தார். ''இதை நீ என்ன செய்யப்போகிறாய்?''

''இதைப் பிரசுரிக்க விரும்புகிறேன்.''

''என்னது?''

''ஆமாம்... அப்படியே பிரசுரிக்க விரும்புகிறேன். அதன் தலைப்பில், இக்குறிப்பையும் எழுதப்போகிறேன்'' என்று கூறிவிட்டு, டைப் அடிக்கப்பட்ட காகிதம் ஒன்றைப் பால் நீட்டினான்.

வெயிட்லர் படிக்க ஆரம்பித்தார்: ''இக்கட்டுரை ஆசிரிய ரின் வாலஸ் யார்க் என்ற பெயர் நிகோலஸ் ஆர்பெனின் பல புனைபெயர்களில் ஒன்று. மிஸ்டர் ஆர்பெனின் கம்யூ னிஸ்டுக் கருத்துக்கள் நேயர்களுக்குச் சுவையாக இருக்கும் என்று நம்பி இதை வெளியிட்டிருக்கிறோம். இதே விஷயம் பற்றி ஒரு ரிபப்ளிகன் கட்சிக்காரர், ஒரு டெமொக்ராட் கட்சிக்காரர் ஆகியோரிடமிருந்தும் கட்டுரைகளைக் கேட்டிருக் கிறோம். அவர்கள் சமீபத்தில் பிலிப்பைன்ஸில் சில மாதங்கள் தங்கியவர்கள். அவர்களுடைய கட்டுரைகள் அடுத்துவரும் இதழ்களில் வெளியாகும். பிலிப்பைன் பிரச்னை பற்றிய கம்யூனிஸ்டுகளின் கருத்துக்களைத் தெளிவாக வாசகர் களுக்கு அளிக்கும் மிஸ்டர் ஆர்பெனுக்கு எங்கள் நன்றி.''

வெயிட்லர் ஒரு புன்முறுவலுடன் நிமிர்ந்து நோக்கினார். ''இதைப் பிரசுரித்துவிட்டு நாம் தப்பமுடியுமா?''

''ஏன்? இது உண்மைதானே?''

''ஆனால் அதற்கு ருசு வேண்டுமே? அவன்கோர்ட்டுக்குப் போனால்—''

''வேண்டிய ருசு இருக்கிறது.''

''ரைட்! 'ட்ரெண்டு' அரசியல் விஷயங்களுக்கு அப்பால் இருக்கவேண்டுமென்று ஒரு காலத்தில் நான் நினைத்ததுண்டு; அது கலை சம்பந்தப்பட்ட 'பத்திரிகையாகத்தானிருக்க வேண்டும் என்றே எண்ணிவந்தேன்.''

''இப்போதும் அது அப்படியேதானிருக்கிறது. அரசியலும் ஒரு கலைதான். ஆனால் அதை நாம் இப்போதுதான் தெரிந்து கொண்டிருக்கிறோம்.''

''ஆர்பெனின் கட்டுரையை நான் படிக்கிறேன். அவனுக்கு என்ன துணிச்சல்?''

ஹேடன் தலையை ஆட்டிவிட்டுக் கிளம்பினான்.

க்ரோம்வெல்லின் ஆபீசுக்கு அவன் திரும்பியபோது டெலிபோன் மணி ஒலித்தது. அவன் டெலிபோனை எடுத்து, ''ஹேடன் பேசுகிறேன்; யாரது...? மன்னிக்கவேண்டும்... உங்கள் பேச்சு சரியாகக் காதில் விழவில்லை'' என்றான்.

''என்ன, நீங்கள் கோபமாக இருக்கிறீர்கள் போலிருக்கிறதே. நான்தான் மேரி பேசுகிறேன். பால், என்னை மறந்துவிட்டீர்களா?'' மறுபுறத்தில் பேசிய பெண் சிரித்தாள்.

''இல்லை... இல்லை... சௌக்கியந்தானே? நாம் சந்தித்துப் பல நாட்களாகிவிட்டன். ஆமாம், இப்போது நியூயார்க்கில் என்ன செய்துகொண்டிருக்கிறாய்?''

''பிரமாதமாக ஒன்றும் செய்யவில்லை. இன்று பகல் உணவு நேரத்தில் எனக்கு ஓய்வுதான்.''

அவனுக்குத் திடீரென்று சந்தேகம் வந்துவிட்டது. எந்த மேரி இவள்? ' இதோ பார், நீ மேரி பார்ட்லெட்தானே?'' என்று வினவினான்.

''இல்லை. மேரி ஃபைன்!'' இப்போது அவள் சிரிக்கவில்லை.

ரோனுவின் பார்ட்டியில் சந்தித்த அந்த செம்பட்டைக் கூந்தலழகியை அவன் நினைத்துக்கொண்டான். மன்னிக்க வேண்டும்; இன்று உன்னுடன் உணவுகொள்ள எனக்கு நேரமிருக்காது.''

''அது என் துரதிருஷ்டந்தான். ஆனால் நாளைக்கு நான் ஒரு பார்ட்டி கொடுக்கிறேன். என் விலாசம்—''

''எனக்கு நினைவிருக்கிறது'' என்று அவன் அவளுடைய பேச்சை வெட்டினான்.

''நினைவிருக்கிறதா? ஆனால் பார்டிக்குக்கூட நீங்கள் வரமுடியாதா?''

''நான் வருவதற்கில்லை. முன்னமேயே வேறு—''

''பால், நீங்கள் ஒன்றுக்கும் பிரயோசனமில்லை என்று அவள் டெலிபோனைக் கீழே வைத்தாள்.

அவனும் போனைக் கீழே வைத்துவிட்டுச் சிரித்துக் கொண்டான். 'வயசு ஆக ஆக என்னிடம் கடுமை அதிகமாகி வருகிறது' என்று தன்னையே கடிந்துகொண்டான்.

பிறகு பகல் உணவு நேரம் வரை அவன் தன் வேலையில் முனைந்தான். ஒரு கட்டு இறுதி நகல்களைப் பரிசீலித்து முடித்து விட்டுத் தலையில் தொப்பியுடன் அவன் வராந்தா வழியே சென்றபோது, ''என்ன வேலை, ஒரே மாதிரியான வேலை! உடல் நரம்பு தளர்ந்துவிடுகின்றது'' என்று ஓடியது அவன் எண்ணம். அவன் இப்போது சாப்பிடுவதற்குக் கார்லோ ஹோட்டலுக்குப் போகிறான். அங்கே பழைய முகங்கள் பலவற்றை அவன் காண்பான். **டாம் அவெரில் ஹேரி மயர் சக் ஜோகன்ஸன்** ..அந்தப் பழைய கூட்டம். ஆனால் டாம் இப்போது ஒரு புத்தக விமர்சகனாக இருக்கிறான்: அழகிய பெண் ஒருவளையும் மணந்துகொண்டு அவன் ஸ்கார்ஸ்டேலில் வசதியாக வாழ்கிறான். ஹேரி மயர் நியூ ஜெர்ஸியில் குடியேறி விட்டான். சக் ஜோகன்ஸன் 'மார்னிங் ஸ்டார்' பத்திரிகையில் 'ஸ்போர்ட்ஸ்' ஆசிரியனாக இருக்கிறான். அவனுக்குக் கல்யாணமும் ஆகி, ஆளும் நன்கு வளர்ந்திருக்கிறான். இப்போது அவர்கள் வழக்கமான முறையில் கேலிப் பேச்சுக்களை ஆரம்பிப்பார்கள். ''பால்தான் கெட்டிக்காரன்; இன்னமும் பிரம்மச்சாரியாய்ச் சுகமாக இருக்கிறான்!'' என்பார்கள். ஆனால் அதே சமயம் அதிகமாகிவிட்ட தங்களது குடும்பச் செலவுகளைப்பற்றியோ, அல்லது மனைவியின் புதிய சிகை அலங்காரம், குழந்தைகளின் பள்ளிக்கூட ரிபோர்ட்டு முதலியன்வ பற்றியோ முணுமுணுக்காமல் இருக்கமாட்டார்கள்.

''ஹலோ, மிஸ்டர் ஹேடன். இன்று வானம் மூட்டமின்றி வெளியே செல்ல நன்றாக இருக்கிறது, இல்லையா?'' வரவேற்புப் பெண் மென்மையான முறுவலுடன் வினவினாள்.

''ஆமாம். நன்றாக இருக்கிறது.''

''நமக்கு மழை வேண்டும்; என்றாலும், இப்போது அது நின்றால்தான் நன்றாக இருக்கும்.''

அவன் தலையை ஆட்டிகொண்டே 'லிஃப்டு'க்குள் நுழைந்தான். லிஃப்டுக்காரன் ஜோ கூட மழையைப் பற்றிப் புகார் செய்தான். நேற்று ஜமாய்க்காவில் அவனுடைய குதிரைப் பந்தயத்திற்கு அது குந்தகமாகிவிட்டதென்ற வருத்தம் அவனுக்கு.

பால் விஃப்டிலிருந்து வெளியே வந்தான். காஃபிக்கடை வாசலில் நேராக இவனைப் பார்த்தவண்ணம் ஸ்காட் எட்லீ நின்று கொண்டிருந்தான். ஒருவரை மற்றவர் அறியாத மாதிரி இருவரும் ஒரு கணம் பார்த்துக் கொண்டார்கள். ஹேடன் தொப்பியை கழற்றிக் கொண்டு, கூட்டத்தில் புகுந்து சென்றான். அவனுக்கு சிகரெட்டுகள் தேவையாக இருந்தன. ஆனால் அதற்காக அவன் பத்திரிகைக் கடை வாசலில் நின்று அவற்றை வாங்க விரும்பவில்லை. இங்கு நின்றால், ரோனா விஃப்டுக்குள்ளிருந்து வந்து ஸ்காட் எட்லீயின் அணைப்பில் விழுவதைப் பார்க்க நேரும். அதை அவன் விரும்பவில்லை.

★ ★ ★

ரோனா கீழ்த் தளத்தை அடைந்தபோது "நேற்று மழை காரணமாக எனக்குக் குதிரைப் பந்தயத்தில் வரும்படி இல்லை. வீட்டுக்காரன் இந்த வார வாடகைக்காகக் காத்திருக்க வேண்டும்" என்றான் ஜோ. அவன் அவளிடமிருந்து எந்தப் பதிலையும் எதிர்பார்க்கவில்லை; அவள் தன் காதலனைத் தேடுவதில் முனைந்திருந்தாள். வெளியே கடந்த பத்து நிமிஷங்களாக ஸ்காட் எட்லீ நின்றிருப்பது ஜோவுக்குத் தெரியும். 'சீதோஷ்ணத்திலே இல்லாவிட்டாலும், காற்றிலே வசந்தம் மிளிர்கிறது. இவர்கள் அருமையான ஜோடி' என்று எண்ணிக் கொண்டான் அவன்.

"ரோனா!" ஸ்காட் அவள் கையை இறுகப் பிடித்துக் கொண்டு ஐந்தாவது அவென்யூவை நோக்கித் திரும்பினான். "நாம் மகிழ்வுடன் இருக்கவேண்டிய நேரமிது. ஷெர்ரி நெதர்லண்டு ஹோட்டலுக்குப் போவோமா?"

"நான்—" என்று அவள் தன் கையை இழுத்துக் கொள்ள முயன்றாள்.

"இதோ பார் ரோனா, கடைசியாக உன்னைப் பார்த்ததிலிருந்து நான் பல இன்னல்களை அநுபவித்துவிட்டேன். ஆனால் இப்போது யாவற்றையும் சரிப்படுத்திவிட்டேன். வா... நாம் ஷெர்ரி-நெதர்லண்டுக்குப் போவோம்" என்றான் ஸ்காட் குறுநகையுடன்.

"எனக்குப் பசிக்கவில்லை" என்றாள் ரோனா. தன் தீர்மானத்தைத் தளர்த்திகொள்ளாமலிருக்க அவள் முயன்றாள். ஆனால் அது கஷ்டமாக இருந்தது. அவள் அவனைச் சந்திக்கவே கூடாது. இனியும் கூடவா? அவள் தன் உதடுகளைக் கடித்துக் கொண்டு பார்வையை வேறு புறம் திருப்பினாள். அவன் அவளை இறுகப் பிடித்துக்கொண்டு ஐந்தாவது அவென்யூவை நோக்கி நடக்கலானான்.

''அல்லது நீ பிளாஸாவுக்குச் செல்ல விரும்புகிறாயா?'' என்று மீண்டும் கேட்டான் ஸ்காட்.

''எனக்குஎதுவும் தேவையில்லை. எனக்குப்பசியே இல்லை.''

அவன் அவளை வேதனையுடன் நோக்கினான். ''என்ன நேர்ந்து விட்டது, ரோனா? உன் மனத்தை நோக அடித்திருந்தால், அதற்கு நான் வருந்துகிறேன். ஆனால் எனக்கு இப்போது எல்லாம் தெளிவாகி விட்டது; எல்லாம் சரியாகிவிட்டது.''

''நாம் பார்க்குப் பக்கம் போவோம்; அங்கே பேசலாம்.''

''சரி... நாம் பேசுவோம்'' என்றான் ஸ்காட். ஆம், எதிர்காலத்தைப் பற்றி. அது இப்பொழுது ஒருவிதமாகத் திர்மானமாகிவிட்டது. இனிமேல் கவலைப்பட ஒன்றுமில்லை. ஒரு வேளை இந்த எதிர்கால ஏற்பாடு அவளுகச் செய்துகொண்டதாக இல்லாமலிருக்கலாம். ஆனாலும், எல்லாத் தயக்கங்களும், செயலின்மையும் ஒழிந்து அவனுக்கு நிம்மதி ஏற்பட்டிருக்கிறது. நேற்றிரவு மனக்கசப்பினாலும், சுய கர்வம்புரிந்த புரட்சியினாலும் அவன் தடுமாறிப் போனான். ஆனால் அவற்றை அவன் கெலித்து விட்டான். தன்னைத் தானே வெல்வதென்பது நல்லதுதான். இப்போது, தான் என்ன செய்யவேண்டுமென்பதைத் திர்மானித்து விட்ட அவன் களிப்புடனேயே இருந்தான். ரோனாவையும் அவன் பெற்றிருக்கிறான்.

''நாம் பேசுவோம், பிறகு ஏதாவது சாப்பிடுவோம். அது நல்ல யோசனைதான்'' என்றான் ஸ்காட்.

கதிரொளி வெளியே நன்றாக வீசியதால் அவென்யூவிற்குள் பகல் உணவை நாடும் கூட்டம் அதிகரித்தது. இந்த வசந்த காலத்தில் முதல் தடவையாகப் பெண்மணிகளின் வண்ண உடைகள் 'பளிச்' சென்று தெரிந்தன. ஆண்கள் வெளுத்த வண்ணங்களில் சராய்களை அணிந்திருந்தார்கள். டாக்ஸிகளும், சொந்தக் கார்களும் கூட்டத்தினிடையே புகுந்து, ஓலமிட்டுக்கொண்டு சென்றன. பச்சை நிறத்திலும், வெண்மை நிறத்திலும் பெரிய பஸ்கள் வேறு.

அவர்கள் பிளாஸாவைத் தாண்டியபோது அங்கிருந்த புறாக்கள் சிதறி ஓடின.

''இங்கு ஒரே கூட்டம். நாம் இன்னும் இரண்டு மைல்கள் நடந்தால்தான் இவர்களை ஒதுக்க முடியும்'' என்றான் ஸ்காட் 'சட்'டென்று நின்றபடி. அது உண்மையே. மிருகக் காட்சிசாலைக்கும், ஏரிக்கரைக்கும் செல்லும் இரண்டு பாதைகளிலுமே கூட்டம் தெரிந்தது. அங்கிருந்த பெஞ்சுகளில் எல்லாம் மக்கள்வெயிலில் காய்ந்துகொண்டு அமர்ந்திருந்தார்கள்.

''நாம் ஒரு வண்டியில் செல்லுவோம்'' என்ற ஸ்காட் 59-வது

தெருவில் அணிவகுத்து நின்ற குதிரை வண்டிகளை நோக்கி நகர்ந்தான்.

''வேண்டாம்'' என்றாள் ரோஜா.

அவனுக்குக் கோபம் வந்துவிட்டது. அவள் கையைப் பிடித்துப் பலமாக அழுத்திய அவன், ''உனக்கு என்ன வந்து விட்டது? நான் ஏதாவது காதல் லீலை செய்வேன் என்று பயப் படுகிறாயா? என்று வினவினான்.

ரோஜா, பதில் பேசவில்லை.

இவர்கள் வருவதை வண்டிக்காரன் பார்த்துவிட்டான். வண்டிக் கூட்டை இழுத்து, கதவும் திறக்கப்பட்டு இருந்தது. இவர்கள் எவ்வளவு கனம் இருப்பார்கள் என்று கணக்கிடுவது போல, அதன் குதிரை சுற்று முற்றும் பார்த்தது.

''பார்க்கைச் சுற்றி வண்டியில் போனால் சுகமாக இருக் கும். அதோ பார்த்தீர்களா, மங்கோலியா, செர்ரி மரங்களை! எவ்வளவு தூரம் போகவேண்டுமானாலும் கொண்டு போய் விடுகிறேன்'' என்று முறுவலித்தான் வண்டிக்காரன். அவன் வாய் அகன்று இருந்தது; ஆனால் பற்கள் இல்லை. அவன் வய தான கிழவன். வட்டமான முகம்; சிவந்த மூக்கு, தலையில் உயர்ந்த தொப்பியும், மூடிய மேல் கோட்டுமாக அவன் தற் போதைக்குக் கம்பீரமாகத் தோற்றமளிக்க முயன்று கொண் டிருந்தான். அவனுடைய வண்டி அவ்வளவு நேர்த்தியாக இல்லாவிட்டாலும், சுத்தமாக இருந்தது. சக்கரங்களில் புதி தாகப் பூசப்பட்ட வெள்ளை வண்ணம்.

''எங்களுக்குச் சிறிது தூரம் போனால் போதும்'' என்றாள் ரோஜா.

வண்டிக்காரனது வட்ட முகம் ஏமாற்றத்தால் சுண்டி யது. அவன் தோள்களைக் குலுக்கிக் கொண்டு வண்டிமீது ஏறி அமர்ந்தான். குதிரை குளம்பொலி எழும்ப மெல்ல நடக்க ஆரம்பித்தபோது, கதிரொளியில் அதனுடைய வாளித்த பின் முதுகு மின்னியது.

ஸ்காட் ரோஜாவின் முகத்தைக் கவனித்துக்கொண்டிருந் தான். ''நான் சொன்ன சேதியை நீ இப்படி வரவேற்பாய் என்று நான் நினைக்கவில்லை'' என்றான் கசப்புடன். ஆனால் அவள் அதற்கும் அசைந்து கொடுக்கவில்லை. உடனே அவன் அவள் இடுப்பைப் பற்றிக்கொண்டு முத்தமிட்டான்.

''ஓ, ஸ்காட்''! என்று கூவினாள் ரோஜா.

''என்ன சங்கடம் உனக்கு? சொல்லக்கூடாதா?''

''நேற்று ஏன் நீங்கள் பெக்கியின் வீட்டிற்குவந்து என்னை அழைத்துப்போயிருக்கக்கூடாது?''

''உன்னைச் சந்திக்கநேற்று நான்முயன்றேன். சாப்பாட்டு வேளையில் அப்பாவைக்காண்பதற்கு முன் நான் உனது விடுதிப் பக்கம் சென்றேன். ஆனால் நீ வீட்டில் இல்லை'' என்றான் ஸ்காட் மெதுவாக.

அவள் பதில் பேசவில்லை. அவள் முகம் 'உம்' மென்றிருந்தது. அவன் ஏன் பொய் சொல்லுகிறான் என்று அவள் எண்ணம் ஓடியது. அவளிடம் அன்புடன் நடந்துகொள்வதற்காகவா? அவள் ஸ்காட்டுக்காக எழுதி, தன் வீட்டுத் தபால் பெட்டியில் சொருகி வைத்திருந்த கடிதம் நேற்றிரவு அவள் வில்லியம் எட்லியுடன் வீடு திரும்பும்போது அப்படியே இருந்ததே!

ஸ்காட் கோபத்துடன் கேட்டான்: ''என் அப்பா உன்னிடம் என்னென்னதான் சொல்லித் தொலைத்தாரோ?''

''அவர் மீது குற்றம் சொல்லவேண்டாம். மிகுந்த அன்புடனும், வேதனையுடனுந்தான் அவர் என்னிடம் பேசினார். நமது நிச்சயதார்த்தத்தை முன்னமேயே நான் முறித்துவிட்டதுபோல் ஏன் அவரிடம் பேசினீர்கள்?''

''நான் அப்படியொன்றும் பேசவில்லை. நேற்று நான் அப்பாவைச் சந்தித்தபோது மிகுந்த வேதனையுடன் இருந்தேன். அவரும் அதைக் கவனித்துவிட்டார். உடனேயே அவர் தவறான முடிவுக்கு வந்திருக்கிறார். ஒரு வேளை நான் தெளிவாகப் பேசாமல் இருந்திருக்கலாம். சில நாட்களாகவே எனக்கு மிகுந்த மனவேதனை—எதிர்கால வாழ்வைப்பற்றி. பிறகு நேற்றுத்தான் எல்லாம் சரியாயிற்று. அப்பாவிடமிருந்து சென்ற உடனேயே 'கிளாரியன்' பத்திரிகையில் சேரவேண்டும் என்று தீர்மானித்தேன். விஷயம் இதுதான், அன்பே! ஒரு மனிதன் கவலையில் ஆழ்ந்திருக்கும்போது, உற்றதுணையாக இருக்க முடியாது. நம்மைப் பற்றி அப்பா தவறாக நினைப்பதற்கு நான் இடமளித்திருந்தேனானால், அதற்காக வருந்துகிறேன்.''

இப்போது ரோனா அவன் முகத்தைக் கவனித்துக்கொண்டிருந்தாள். ''அவருடைய பத்திரிகையில் பணியாற்ற விரும்பும் உங்கள் தீர்மானத்தைப் பற்றி உங்கள் தந்தை என்ன நினைக்கிறார்?''

''அவருக்கு மிகுந்த மகிழ்ச்சி.''

''அவர் அதிசயப்படவில்லையா?''

''ஆமாம்—முதலில், ஆனால் அவர் புரிந்துகொண்டார்.''

எனக்குத்தான் புரியவில்லை என்று மகிழ்ச்சியற்று ஓடியது ரோனாவின் நினைவு. அவள் பார்வை எதிரேயிருந்த கிழிந்த ஸிட்டின் மீது பதிந்திருந்தது.

''நாம் ஸ்டான்டனில் வசிப்போம்'' என்றான் ஸ்காட்.

இயற்கையான. அமைதியான அவன் குரலைச் செவிமடுத்தாள் அவள். ஸ்டான்டனை எவ்வளவு தூரம் அவன் வெறுத்து வந்தான் என்பது அவள் நினைவுக்கு வந்தது. குறிப்பாக அவனை ஏறிட்டு நோக்கினாள் ரோனா. ஆனால் அவன் முறுவ லிடையே பேசலானான்: ''ஆமாம், நாம் நியூயார்க்கை விட்டுப் போய்விடுவோம். அது எவ்வளவோ பிரச்னைகளைத் தீர்த்துவிடும். ''அந்தக் கூட்டங்கள்...... ஆர்பெனுடன் சந்திப்பு... பால் ஹேடன்.... ஆமாம், ஸ்டான்டன பல பிரச்னைகளைத் தீர்த்துவிடும்.

''எல்லாப் பிரச்சினைகளையுமே தீர்த்துவிட முடியாது'' என்றாள் அவள்.

''ஏன்....!''

''ஏனென்றால், எங்கேயோ ஏதோ ஒரு தவறு இருப்பதாக நான் நினைக்கிறேன். ஆனால் எனக்கு அது புரியவே இல்லை. எவ்வளவுக்கு நீங்கள் அதிகமாக விவரித்துப் பேசுகிறீர்களோ, அவ்வளவுக்கு குறைவாகத்தான் என்னால் அறிந்துகொள்ள முடிகிறது. சில மாதங்களாகவே வேதனையில் உழன்று வந்ததாக நீங்கள் கூறினீர்கள். நானும் அப்படியேதான். ஏதோ ஒன்று எனக்கு இம்மாதிரியான உணர்வைத் தருகிறது. அதை விவரிக்கவும் எனக்குத் தெரியவில்லை. உண்மையிலேயே நீங்கள் எனக்குச் சொந்தமானவர் இல்லையோ, என்னவோ?''

ஸ்காட்டின் முகம் வெளுத்து, வாய் இறுகியது. இறுதியில், ''நான் யாருக்குத்தான் சொந்தமானவன்?'' என்று அவன் அவளை வெறித்துப் பார்த்தவாறு வினவினான்.

அவள் தலையை ஆட்டினாள். ''நாம் வேண்டிய அளவு பேசியாகிவிட்டது'' என்றபடி தன் பர்ஸைத் திறந்தாள்.

''இல்லை.... நாம் பேசவில்லை. நான் யாருக்குச் சொந்தமானவன்?'' அவள் கையைப் பிடித்துக்கொண்டு அவன் மீண்டும் வினவினான்.

''உங்களுக்கேதான்!''

'சட்'டென்று அவன் இடி-இடியென்று சிரித்தான். பிறகு, அவள் கையை விட்டுவிட்டு, '' எனக்கு விருப்பமில்லாததை நான் ஒருபோதும் செய்ததில்லையா?'' என்று எகத்தாளமாகக் கேட்டான்.

உங்களுக்கு விருப்பமானால்தான் செய்வீர்கள் என்று நினைத்தாள் அவள். ஆனால் அதைச் சொல்லமுடியவில்லை. அவள் குனிந்து, பர்ஸுக்குள் தேடி, அந்த மோதிரத்தோடு கூடிய பெட்டியை எடுத்தாள். அதை அவன் கையில் வைத்துவிட்டு வேறு புறம் திரும்பிக் கொண்டாள்.

நன்றாக 'பாக்கிங்' செய்யப்பட்டு, முகவரியும் எழுதப்பட்டிருந்த அப்பெட்டியை நோக்கினான் ஸ்காட். பிறகு அவன்

அவளுடைய இடது கரத்தைப் பற்றி, அக்கையின் உறையை உறுவினுன். ''இல்லே! ரோஞ, இல்லே! உன்னே அடைவதற்கு இவ்வளவு கஷ்டப்பட்ட பிறகு இது நடக்கக்கூடாது!'' அவன் அப்பெட்டி மீதிருந்த காகிதத்தையும், நூலேயும் பிரித்துப் பந்தாக நசுக்கினுன். பிறகு தாழ்ந்த குரலில் சொன்னுன்: ''நீ எனக்குத் தேவை, ரோஞ, நான் உன்னே விரும்புகிறேன். அது உனக்கே தெரியும்.''

''இப்போது எனக்கு அதுகூடத் தெரியாது'' என்ற அவள், சட்டென்று வண்டிக்காரனிடம் திரும்பி உரத்த குரலில், ''நாம் வெகுதூரம் வந்து விட்டோம்; வண்டியைத் திருப்பு'' என்ருள்.

அதிசயத்துடன் அவர்களே ஏறிட்டு நோக்கினுன் வண்டிக்காரன். ஆனுல் அது ஒரு கணந்தான். அதற்குள் இப்பெண்ணின் கன்னத்தில் வழிந்த விழி நீரையும், அந்த இளேஞனின் சினம் மிகுந்த, வெளுத்த முகத்தையும் அவன் பார்த்துவிட்டான். எனவே மெதுவாகக் குதிரையைத் திருப்பினுன். அது வேகமாக வீட்டை நோக்கி ஓட ஆரம்பித்தது.

ஸ்காட் எட்லீ மெதுவாகக் கேட்டான்: ''இதற்கெல்லாம் காரணம் பால் ஹேடன் தான்; அந்த உண்மையை ஒப்புக் கொள்ள உனக்குத் துணிவில்லேயா?''

அவள் தலேயை அசைத்தாள்: ''நான் உங்களேக் காதலிக்கிறேன், ஸ்காட்.''

''பின்னே ஏன் ....?''

''ஏனென்ருல், ஒரு கல்யாணம் நடக்கக் காதல் மட்டுமே இருந்தால் போதாது. மேலும் எவ்வளவோ விஷயங்கள் உள்ளன. உதாரணமாக, துர்விநியோகம் செய்யப்படாத நம்பிக்கை, பரஸ்பரமான விசுவாசம் முதலியவைகளும் வேண்டும்.''

''ஹேடன் திரும்பும் வரை நீ என்னேக் குறை கூறியதே இல்லே'' என்ருன் ஸ்காட் கசப்புடன்.

''அது தவறு. அவர் வருவதற்குப் பல வாரங்களுக்கு முன்பிருந்தே நான்—ஒ, பால் ஹேடனேப்பற்றிய இப்பேச்சை நிறுத்துங்கள்! வேண்டிய அளவுக்கு நீங்கள் என் உள்ளத்தை நோக அடித்தாகிவிட்டது.''

''அவன் உன்னே அடையப்போவதில்லே.''

''நிறுத்துங்கள்'' என்ருள் அவள் சீற்றத்துடன். அக்கோபத்தில், இன்னும் கன்னங்களில் விழி நீர் வழிய, அகன்ற கருவிழிகளுடனும், பிரிந்த அதரங்களுடனும் மிளிர்ந்த தோற்றம், என்றுமில்லாதபடி அழகுடன் விளங்குவதாக நினேத்தான் ஸ்காட்.

கடுமையாக அவன் கூறினன்: "நான் உன்னை இழக்கப் போவதில்லை. நீ என்னுடையவள். நான் உன்னை இழந்தால், வேறு ஒருவரும் உன்னை அடையப்போவதில்லை. நீ என் வாழ்வின் ஒரு பகுதி." அவன் அவளுடைய இடது கரத்தை இழுத்து அதன் விரலில் அந்த மோதிரத்தை வேகமாக அணிவித்தான். அவள் வலியினல் சிறிது கூவினள். விடுவித்துக் கொள்ள முடியாதபடி அவளுடைய கையை இறுகப் பிடித்துக் கொண்டிருந்தான் ஸ்காட்.

பிறகு அவன் தொடர்ந்தான்: "உன்னை நான் நோகச் செய்து விட்டதாக நீ சொல்கிருய். இப்போது நீ என்னை நோக அடிக்கிருய். சரி....அதை அப்படியே விட்டுவிடுவோம். இவ்வாரச் சம்பவங்களையே நாம் மறந்துவிடுவோம். இன்பமாக நாம் கழித்த நாட்களை நினைத்துக்கொண்டு, அங்கிருந்து மேலே தொடருவோம்."

கட்டடங்கள் அருகே வந்துகொண்டிருந்தன. ஒரு புருக் கூட்டம் திரும்பி, கதிரொளியில் இறகுகள் மின்னப் பறந்தது. தூரத்தில் தெரிந்த உயர்ந்த கூரை ஒன்றின்மீது ஒரு கழுகு அமர்ந்திருந்தது.

"சென்ற கோடை நாட்களை நினைத்துக் கொள்ளுவோம். அங்கிருந்து நாம் புதிதாக ஆரம்பிப்போம்" என்ருன் ஸ்காட்.

பார்க்குக்கு வெளியே வந்த வண்டி, ஜெனரல் ஷெர்மன் சதுக்கத்தைச் சுற்றி ஓடியது. சிவப்பும் வெள்ளையுமாக அணிவகுத்திருந்த 'ட்யூலிப்' மலர்கள் சிரித்தன. இலையை ஒட்டிய படிகளில் அமர்ந்திருந்த ஆண்களும் பெண்களும், கதிரவனைப் பார்த்தபடி இப் பூக்களைப் போலவே அசைவற்று இருந்தார்கள்.

"இன்று மாலை உன்னை காண வருகிறேன், ஆறு மணி சுமாருக்கு." அவன் முறுவலித்தான்; அவன் குரல் கூட மென்மையாகி விட்டிருந்தது. அவன் அவளுடைய கையை விடுவித்தான். வண்டியை நிறுத்திவிட்டு, வண்டிக்காரனும் கீழே இறங்கினன்.

"ஐந்து டாலர்கள்" என்ருன் அவன் கதவைத் திறந்தபடி.

ஸ்காட் பர்ஸை எடுத்து, சில்லறையை எண்ணினன். இவர்களோடு பேரம் பேசிப் பயனில்லை. தந்திரம் அறிந்த பழம் பெருச்சாளிகள் இவர்கள்.

"இந்தா!" என்று பணத்தை வண்டிக்காரனிடம் நீட்டினன் ஸ்காட். பிறகு அவன் வேகமாகத் திரும்பினன். ரோனு போய்விட்டிருந்தாள்.

"உங்கள் தொப்பி, ஸார்!" என்ற வண்டிக்காரன், அதை வண்டியிலிருந்து எடுத்துக் கொடுத்தான் பிறகு, கூட்டத்திற்

குள் நுழைந்து வேகமாகச் செல்லும் அந்த இளைஞனைப் பார்த்தவாறு இடுப்பில் கைகளை வைத்துக்கொண்டு நின்றான் அவன். பின்னர், குதிரையின் வாயில் கொள்ளுப் பையைக் கட்டிக் கொண்டே, அதனிடம் சொன்னான்: "ஒரு பெண்ணைப் பார்க்கிலே அழவிடலாமா? ச்சே..சே..இது நமது வண்டியில் நடந்துவிட்டதே!"

பிறகு அவன் வண்டிமீது ஏறி அமர்ந்து தொப்பியைத் தாழ்த்திக் கொண்டான். அவனுடைய கண்கள் யாராவது 'சவாரி'க்கு வருகிறார்களா வென்று கவனமாகக் கழுகு போல் கவனித்துக்கொண்டிருந்தன.

அத்தியாயம் 16

"வாழ்த்துக்கள், மிஸ். மெட்ஃபோர்டு."

'ட்ரெண்டு' ஆபீசின் வரவேற்பு அறை வழியே சென்று கொண்டிருந்த ரோனா நின்று, நிமிர்ந்து நோக்கினாள். எதிரே மேஜைக்குப் பின்னால் அமர்ந்திருந்த வரவேற்பளிக்கும் பெண் புன்னகை பூத்துக்கொண்டிருந்தாள். "நீங்கள் ஜூன் மாதத்தில் திருமணம் செய்து கொள்ளப் போவதாகக் கேள்விப் பட்டேன்."

அதற்குள் டெலிபோன் மணி 'கண கண' த்தது: அந்த அழகிய வரவேற்புப் பெண் போனை எடுத்து, "எஸ், மிஸ்டர் பில்ஸ்பரி. நோ மிஸ்டர் பில்ஸ்பரி" என்று பேசலானாள். அச்சமயம் பார்த்து ரோனா மெல்லத் தாழ்வாரத்துக்கு நழுவினாள்.

அவளுடைய இலாகாவைச் சேர்ந்தவர்களில் பெரும் பாலோர் இன்னமும் பகல் உணவை முடித்துக் கொண்டு திரும்பவில்லை. பில் ஆர்னிம் மட்டும் அங்கே அலைந்து கொண்டிருந்தான். அவன் மெல்ல ரோனாவின் மேஜையின் மீது ஓர் ஓரமாக அமர்ந்து, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள புதிய வேலைகள் பற்றிப் பேச ஆரம்பித்தான். தன்னுடைய யோசனைகளை ஒன்றுசேர்க்க அவனுக்கு ஒரு திட்டம் கிடைத்து விட்டது. ஆனால் ரோனா?

"நான் சிறிதுதான் செய்திருக்கிறேன். அதனால் இன்று மாலை அதிக நேரம் உட்கார்ந்து வேலை செய்யப்போகிறேன்"

என்ற ரோனு அப்போது ஸ்காட்டை நினைத்துக் கொண்டாள். இப்படி அதிக நேரம் வேலை செய்வது அவனை மறக்க ஒரு நல்ல வழிதான்; ஆனுல் அது தைரியமான வழியில்லை.

''பகல் உணவு ஆகி விட்டதா?'' என்று மெதுவாக வினவினுன் ஆர்னிம். ஆபீசுக்குத் திரும்பும்போது ஐந்தாவது அவென்யூவில் ரோனுவையும், எட்லீயையும் பார்த்திருந்தான்.

அவள் தலையை ஆட்டினுள்.

''ஆனுல் நீ என் மனைவியைப்போலவே அல்லவா காண்கிருய்? கோடை காலம் வந்து விட்டால் தனக்குப் பகல் உணவே வேண்டாமென்பாள் அவள்.''

ரோனு முறுவலித்தாள்.

''இது உண்மைதான் ரோனு. ஒவ்வொரு வருஷமும் நான் கவனித்து வருகிறேன். கோடை வந்து, தன் கம்பளிக் கோட்டைக் கழற்றிவிட்டால் அவள் உணவைக் குறைத்து விடுகிருள்.''

''ஓ, பில்!''

''இத் தடவை தைரியமாக அவளையே 'ஏன்' என்று கேட்டேன். அவள் என்ன சொன்னுள் தெரியுமா? கம்பளிக் கோட்டுடன் அவளால் கடைகளின் கண்ணுடிப் பெட்டிகளின் முன் நின்று தன்னைப் பார்த்துக் கொண்டால் ஒன்றும் தெரிவதில்லையாம். ஆனுல் கோடையில் 'ஸூட்டு'களை அணிந்து கொண்டு, கடைக் கண்ணுடிகளில் தன்னைப் பார்த்துக்கொண்டால், 'சட்'டென்று தன் பருமனை உணர்கிருளாம். உடனே மிதமான உணவு முறையில இறங்கி விடுகிருள். அதனுல் எனக்கு நன்மைதான்; மளிகைக் கடைக்குப் பணம் குறைகிறது. . . . . . சரி, நான் போய் செர்ரி மரங்களைப் பழகும் அறைக்குள் கொண்டுவர இயலவேண்டும். நீயும் ரோமானிய நீர் ஊற்றுக்களில் திளைத்து, இன்பம் காணலாம்.''

பில் ஆர்னிம் போகும்போது, 'நான் கண்டபோது அவள் 'உம்' மென்றிருந்தாள்; அவளைச் சிரிக்கவாவது வைத்தேனே' என்று எண்ணிக்கொண்டான். பிறகு, அப்போது தான் உணவை அடித்துக்கொண்டு திரும்பியிருந்த ஹேரி ஜிம்ஸனிடம், ''ரோனுவின் மனத்தில் ஏதோ ஒரு போராட்டம் நிகழ்ந்துகொண்டிருக்கிறது'' என்முன்.

''யாருக்குத்தான் சங்கடங்கள் இல்லை?'' என்று கசப்புடன் வினவினுன் ஹேரி. ஏனெனில் அப்போதுதான் அவனும் தன் காதலியுடன் ஏதோ சண்டை போட்டுவிட்டுத் திரும்பியிருந்தான். அவனுடைய மனைவி 'ஹாய்'யாக வீட்டில் அமர்ந்திருக்கையில், தான் மட்டும் ஏன் 'நைட் கிளப்'புகளில் வேலை

செய்ய வேண்டுமென்று வாதம் செய்தாள் அவனுடைய அக்காதலி; அவளுக்கும் தனியாக ஒரு வீடு வேண்டுமாம்!

தெற்கிலிருந்த பலகணிகளின் வழியே கதிரொளி உள்ளே வந்தது. மீண்டும் ஆபீஸ் அறைகளில் கூட்டம் சேர்ந்து விட்டது. தாழ்வாரத்தின் பக்கத்திலிருந்து டைப்ரைட்டர் களின் சப்தமும், உரத்த பேச்சுக் குரல்களும், நடக்கும் பூட்சு களின் ஓசையும், திடீர்ச் சிரிப்பொலியும், டெலிபோன் மணி களின் 'கண கண'ப்பும் கேட்ட, வண்ண மிருந்தன. ஆம், பிற்பகல் வேலை ஆரம்பமாகிவிட்டது.

★ ★ ★

மாலை ஐந்து மணிக்கு எல்லாரும் தங்கள் அன்றைய வேலையை முடிப்பதில் முனைந்தனர். அப்போது ரோஜா காஃபிக் கடைக்குப் போன் செய்து, ஒரு ஸாண்டுவிச்சும், காஃபியும், சிகரெட்டும், ஒரு மாலைப் பேப்பரும் கொண்டுவரச் சொன் ஞள். அவை வந்ததும், அவள் மேஜையண்டை தளர்ந்து அமர்ந்தபடி பொட்டலங்களைப் பிரிக்கலானுள். அப்போது வீட்டுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த பில் ஆர்னிம் 'குட் நைட்' சொல்ல அவளிடம் வந்தான்.

''என் வேலை நன்ருக நடக்கிறது. பில், கொஞ்சம் ஊறு காய் சாப்பிடுகிருயா?'' என்ருள் ரோஜா.

புருக்களுக்குப் போடு. ஆனுல், அதிக நேரம் அமர்ந்து உழைக்க வேண்டாம்'' என்ற அவன் முறுவலித்து விட்டு வெளியேறினுன்.

ஆபீஸ் முழுவதும் மௌனம் குடிகொண்டது. அங்கங்கே தனித்துக் கேட்ட ஒரு சில ஒலிகள் அவளைப்போலவே இன் னும் சிலரும் அங்கே தங்கி வேலை செய்வதை ரோஜாவுக்கு உணர்த்தின. பசியாக இருந்ததால் சீக்கிரமாகவே 'ஸாண்டு விச்' சைப் புசித்துவிட்டு, காப்பிக்கிடையில் ஒரு சிகரெட்டை யும் பற்றவைத்துக்கொண்டாள் அவள். பிறகு மாலைச் செய் தித் தாளைக் கையில் எடுத்தாள். 'அமரேசியா' என்ற வழக்கு மறு விசாரணைக்கு வரப்போகிறதாம். இவ்வளவு நாட்க ளாக நியூயார்க்கில் இருக்கும் அவளுக்கு அது என்ன வழக்கு என்று புரியாதது அதிசயமாக இருந்தது. இது மடத்தனமா, இல்லை அவள் தன் வாழ்வே முக்கியமென்று கவனித்துக் கொண்டிருந்து விட்டாளா?....

அவள் பேப்பரை மடித்து வைத்தாள். எனக்கிருக்கும் வேலைகளுக்குடையில், இதைப்பற்றி நான் கவலைப்பட முடி யாது என்று ஓடியது அவள் எண்ணம். அவள் எழுந்து, உண வுப் பொட்டலங்களை அப்புறப்படுத்தி விட்டுத் தன் வேலை யைச் சுறுசுறுப்புடன் கவனிக்க ஆரம்பித்தாள். அப்போது

மணி ஆறு அடித்தது. தன் பென்சில்களைக் கூர்மையாக்கிக் கொண்டு, குறிப்புக்களை எழுதலானாள் ரோனா.

தாழ்வாரத்தில் எழுந்த காலடி ஓசை உள்ளே வருவது கேட்டது. பிறகு அச்சப்தம் நின்றதும், ரோனா தலையை நிமிர்த்தி, ''ஹலோ, யாரது?'' என்று வினவினாள்.

பால் ஹேடன் பதிலளித்தான்: ''ஹலோ, நீயா?'' தொடர்ந்து அவன் தன் கையிலிருந்த பத்திரிகையை பில் ஆர்னிமின் மேஜைமீது வைத்துவிட்டு, ரோனாவின் அறைக்குள் நுழைந்தான். இருவருமே அதிசயமும் சங்கடமும் பீடிக்கத் தவித்தார்கள். உடனே தன் கையிலிருந்த காகிதங்களை நீட்டிய அவன், ''இக்கட்டுரையை பர்னெட்டிடம் கொடுக்கலாமென்று வந்தேன். இது நல்ல கட்டுரை; உன் வேலை சம்பந்தமானதுதான். இதைப் படித்துப் பார்க்கிறாயா?'' என்று கேட்டான். மறுகணம் அவன் பார்வை அவளுடைய மேஜை மீதிருந்த புத்தகங்களின் மீது விழுந்ததும், ''இல்லை...இப்போது உன்னைத்தொந்தரவு செய்யக்கூடாது'' என்றான் முறுவலுடன்.

''நாளைக்கு அதைப் பார்க்கிறேன்.'' என்று அதைக் கையில் வாங்கிக் கொண்ட ரோனா, அக்கட்டுரை மீதிருந்த குறிப்பைப்படித்தாள்: ''மிஸ் மெட்ஃபோர்டு இதைப் படித்து, அபிப்பிராயம் கூற முடியுமா? நன்றி—பி. எச்.'' அவள் முறுவலித்துக் கொண்டாள்.

வெளியே செல்லத் திரும்பிய அவன் சட்டென்று, ''உனக்கு என் வாழ்த்துக்கள்!'' என்றான்.

''எதற்காக?''

''ஜூன் மாதம் உன் திருமணம் நடக்கப்போகிறதென்று கேள்விப்பட்டேன்.''

''ஓ, அது இன்னுமொரு வதந்தி'' என்றாள் அவள். அப்போது அவள் முகத்தில் நெளிந்த முறுவல் மறைந்திருந்தது.

அதே சமயம் அவள் கையில் மோதிரம் இல்லாததையும் கவனித்தான் பால். அவனுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

டெலிபோன் மணி ஒலித்தது. ரோனா தன் கடிகாரத்தைப் பார்த்தாள். மணி ஆறரை. அது ஸ்காட்டாகத்தானிருக்கும். ஏன் அவள் இன்னமும் வீட்டுக்குத் திரும்பவில்லை என்று கேட்க அவன் அழைக்கக்கூடும்.

ரிஸீவரை எடுக்கக் கைகளை நீட்டினான் பால் ஹேடன்.

''வேண்டாம், பால். அதை எடுக்க வேண்டாம்'' என்றாள் ரோனா.

அவன் அவளை உற்று நோக்கினான் யோசனையுடன். அவள் பார்வையை அவனிடமிருந்து திருப்பி, பலகணிக்கு வெளியே தெரிந்த வீட்டுக்கூரைகளையும், புகைபோக்கிகளையும், தண்ணீர்

'டாங்கு' களையும் பார்ப்பது போல் பாசாங்கு செய்தாள். டெலிபோன் மணி அடித்துக்கொண்டேயிருந்தது. ஸ்காட்டுக்குத் தன்னலந்தான் முக்கியம் என்று அவள் நினைத்தாள். அவன் தன் வழியிலே போகிறான்; தன் தீர்மானங்கள்தாம் சரியானவை என்றும் நினைக்கிறான். ஒருதலைப்பட்ட அவன் எண்ணத்தில் ஏதோ ஒரு கொடுமையும் கலந்திருக்கிறது. அவன் தயங்கும் போதோ, அல்லது, தனக்குள்ளேயே விவாதித்துக் கொள்ளும் போதோ கூட, இறுதியில் தான் செய்யப் போவதைப் பற்றிய சந்தேகம் அவனிடம் இருப்பதில்லை. இவ்வளவு நாட்களாகத் தான் இவற்றை எப்படிப் பொறுத்துக் கொண்டோம் என்று அவளுக்கு அதிசயமாக இருந்தது. இந்த நிலையில், திடீரென்று சென்ற வாரம் மட்டும் ஏன் அவள் பொறுமையை இழந்தாள்? ஓ... இந்த எண்ணமெல்லாம் மடத்தனமானது!

ரோனு டெலிபோனைப் பார்த்தாள். அதை எடுக்க அவளுடைய கரம் நீண்டது. ஆனால் அதை இழுத்துக்கொண்டு விட்டாள்.

பால் ஹேடன் சொன்னான்: ''டெலிபோனில் யாரோ அழைக்கிறார்களே, நீ பேசப் போவதில்லையா?'' அவன் குரலில் உணர்வில்லை; கண்களில் இரக்கம் தெறித்தது. இன்னமும் அவள் எட்லீயைக் காதலிக்கிறாள் என்று எண்ணினான் அவன்.

''ஆமாம்... நான் பேசப்போவதில்லை'' என்றாள் அவள் விசனத்துடன். யாரைக் கண்டு பயப்படுகிறோமோ, அந்த நபரைத் திருமணம் செய்து கொள்வதெப்படி? டெலிபோன் மணி நின்று விட்டது. அவள் ஒரு தடவை பெருமூச்செறிந்தாள்.

ஹேடன் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். ''சரி நான் வருகிறேன்; ஏழரை மணிக்கு நான் ஒருவரைப் பார்க்க வேண்டும்'' என்று கூறிவிட்டு மீண்டும் ஒரு தடவை ரோனுவை நோக்கினான். ''நீயும் கூட வந்தால் அது உனக்கு நல்லது. உனக்கு இப்போது நல்ல சாப்பாடு தேவையென்று நினைக்கிறேன்.''

''நன்றி, பால். ஆனால் நான் வருவதற்கில்லை.''

அவன் தயங்கினான்.

''பால், உங்களைப்பற்றிக் கிளம்பியுள்ள அவதூறை நான் அதிகமாக விரும்பவில்லை'' என்று விவரித்தாள் ரோனு.

''ப்ளாக்வொர்த், நீ, நான் ஆகிய மூவரையும் பற்றிய வம்புப் பேச்சைத்தானே சொல்கிறாய்?''

அவள் தலையை ஆட்டினாள்.

அவன் கோபத்தோடு கேட்டான்: ''இந்த வதந்திக்குப் பயந்தா நீ என்னை ஒதுக்க விரும்புகிறாய்?''

''ஏன், நீங்களும் என்னிடமிருந்து ஒதுங்கவில்லையா?''

''ஆமாம்..அதற்குக் காரணம் இருந்தது. ஆனால் இப்போது அது இல்லை.'' பால் ஹேடன் டெலிபோனைத் திரும்பி நோக்கினான்.

ரோனாவின் முகம் சிவந்தது.

அவளுடைய சங்கடத்தை உணர்ந்த அவன், அவசரப் பட்டுப் பேசிவிட்டதற்காக வருந்தினான். ''சரி.. அப்படியானால் நிச்சயமாக நீ என்னுடன் வரப்போவதில்லையா?''

கதவு வரை சென்ற அவன் திரும்பிக் கேட்டான்: ''ரோனா, மாலைப் பத்திரிகையைப் பார்த்தாயல்லவா? அது மிகவும் கோரமானது, இல்லையா?''

''நான் பேப்பரைச் சரியாகப் படிக்கவில்லை. எதைப் பற்றிச் சொல்கிறீர்கள்?''

''சார்லஸ்.''

''சார்லஸா?''

''ஆமாம். தெல்மாவின் மகனை உனக்கு நினைவில்லையா? அது மாலைப் பேப்பரில் வந்திருக்கிறது. இதோ பார்!'' அவன் அருகில் வந்து, பேப்பரை எடுத்துக் காட்டினான்.

''என்ன? சார்லஸ் தற்கொலை புரிந்துகொண்டு விட்டானா?'' அவள் திடீரென்று பயத்துடன் வினவினாள்.

''மாடிச் சாளரத்திலிருந்து குதித்து விட்டான். கீழே நடந்துகொண்டிருந்த ஒரு கிழவனுக்குக்கூடக் காயம். இறுதி வரை அவன் செயல்கள் எல்லாமே பரிதாபமானவைதாம்.''

''இல்லை... இல்லை..'' என்றபடி அவள் பேப்பரைக் கீழே வைத்தாள். ரோனா இவ்வளவு அதிர்ச்சியடைந்து அவன் கண்டதில்லை. அவள் தன் கண்களையும் பொத்திக் கொண்டாள்.

''வருந்துகிறேன் ரோனா. உனக்கு அவனைத் தெரியுமா?''

''ஒரே ஒரு தடவைதான் நான் அவனைப் பார்த்தேன். ஞாயிற்றுக்கிழமையன்று. நான் அவனை நம்பவே இல்லை. ஒரு வேளை நான் அவனுக்கு உதவியாயிருக்கக்கூடுமோ என்னவோ? நான்—'' மேலே பேசமுடியாமல் அவள் விம்மியவாறு அசைவற்று அமர்ந்தாள்.

''அவனை யாருமே காப்பாற்றியிருக்க முடியாது. பேப்பரில் உள்ள செய்தியைப் பார். அவனைக் குடிகாரர்களது விடுதிக்கு அனுப்புவதாக இருந்தார்களாம். அவனை இட்டுச்செல்ல வந்த இரு மனிதர்களுக்கு எதிரே அவன் பலகணி வழியே வெளியே குதித்து விட்டிருக்கிறான்.''

''எந்த மனிதர்கள்? எங்கே அவனை இட்டுச் செல்ல இருந்தார்கள்?'' அவள் கூவினாள்.

''ரோனா, சாந்தப்படுத்திக்கொள்.''

அவள் 'சட்'டென்று எழுந்தாள். ''அன்று நான் உங்களிடம் ஒரு கடித உறை கொடுத்தேனே, அது சார்லஸிடமிருந்து வந்தது.'' அவள் ஹேடனின் அறையை நோக்கி ஓடினாள்.

அவனும் பின் தொடர்ந்தான். பீரோவைத் திறந்து, அக் கடிதத்தை எடுத்து அவளிடம் கொடுத்தான். இப்போது அவள் அமைதியாகி விட்டிருந்தாள்.

''திங்கட்கிழமை காலையில் இக்கடிதம் வந்தது. இதைப் படித்துப் பாருங்கள்.''

அவன் கடிதத்தைப் படித்தான். இறுதியில் சுளிப்புடன், சார்லஸின் வாக்கியங்களைத் திருப்பிச் சொன்னான்: ''ஆனால் நான் எதிர்பார்க்கின்றபடி எனக்கு ஏதாவது நேர்ந்து விட்டால், பிறகு என் பிரச்னை தீர்ந்துவிடும். ஆனால் ஒருவேளை பேசுவதற்கான உடல் சம்பந்தப்பட்ட விடுதலை எனக்குக் கிட்டாமல் போகலாம். அச்சமயத்தில்தான் எனக்கு உன் உதவி தேவை.''

காலம் கடந்துவிட்டதே யென்று வருந்தினாள் ரோனா. பாவம் சார்லஸ்...அவனுக்கு அவள் உதவ முடியவில்லை.

பால் ஹேடன் சொன்னான்: ''ஏதாவது விடுதியில் அடைத்துவிடுவார்கள் என்று அவன் எதிர்பார்த்திருக்கிறான். ஆனால் தற்கொலை இல்லை.''

''ஆனால் அவனை இட்டுச்செல்ல வந்தபோது அவன் சாளரத்தின் வழியே குதித்துவிட்டான்'' என்ற ரோனா, பாலின் முகத்தைக் கவனித்தாள். பிறகு, ''என்ன, அவனாகவா குதித்திருப்பான்?'' என்றாள்.

''அவர்கள் அவனைக் கொல்ல வேண்டியதில்லை; அவனைத் தான் நன்றாக மடக்கி வைத்திருக்கிறார்களே!''

''ஒருவிதத்தில், அவர்கள் இவனைக் கொன்றிருக்கிறார்கள் என்றே சொல்லவேண்டும்.''

ஹேடன் தலையை அசைத்தான். ''இக்கடிதம் நிலைமையை மிகவும் மாற்றுகிறது. அங்கே வேறு யார் சாட்சிகள் இருந்தார்கள்? வேலைக்காரர்கள் இல்லையா? உண்மையில், இக்கடிதத்தைப் போலீசாரிடம் கொடுப்பதே சிறந்ததென்று நான் நினைக்கிறேன்.''

''இக்கடிதத்தோடு வந்த மற்றோர் 'கவரை' என்ன செய்வது? வெயிட்லரைப் போன்றவர் யாராவது அதைப் பிரிக்க வேண்டுமென்று சார்லஸ் எழுதியிருந்தான். போலீசாரிடம்

கொடுக்கும்படி அவன் ஏன் எழுதவில்லை? வெயிட்லர் இப்போது வெஸ்ட்செஸ்டரில் தன் வீட்டில் இருப்பார்'' என்றாள் ரோனா.

''அவர் அங்கே இல்லை. இன்று பிற்பகலில் சிகாகோவுக்குப் பிரயாணமாகிவிட்டார். சனிக்கிழமையன்றுதான் திரும்புவார்.''

''ஆனால் அந்தக் கடிதத்தை உடனேயே பிரிக்கவேண்டும், பால் நான் என்ன செய்யட்டும்?''

அவன் அந்தக் 'கவரை'ப் பார்த்தான். ஆனால் தொடவில்லை.

''இதையெல்லாம் பெரிய விஷயமாக நீங்கள் எடுத்துக்கொள்கிறீர்களா?'' என்று வினவினாள் ரோனா.

''ஆமாம்...ஒரு சாவிற்குப் பிறகு—''

''அதைப் பிரித்தாக வேண்டும்'' என்றாள் அவள் இன்னமும் அதைப் பார்த்துக்கொண்டே. ''இல்லையெனில் சார்லஸின் சாவு அர்த்தமற்றுப் போய்விடும்.''

பால் மெதுவாகச் சொன்னான்: ''எனக்கு ஒருவரைத் தெரியும். என்ன செய்யவேண்டுமென்று அவர் அறிந்தவர். இக்கடிதத்தில் முக்கியமானதாக ஒன்றும் இல்லாதிருக்கலாம். ஆனாலும் இது சரியான நபரின் கைகளை அடைய வேண்டும். இல்லையா?''

''ஆமாம் உங்கள் நண்பர் நியூ யார்க்கில் தானே இருக்கிறார்?''

''ஆமாம். உண்மையில் இப்போது நான் அவரைத்தான் காணப்போவதாக இருந்தேன். இருவருமாக இரவு உணவை முடித்துக்கொண்டு, ஏதாவது மல் யுத்த ஆட்டம் பார்க்கப் போவதாகத் திட்டமிட்டிருந்தோம்.''

''நீங்கள் அவரை நம்புகிறீர்களா?''

''நன்றாக. அவருக்குப் பலரைத் தெரியும். சீக்கிரமாகச் செயலில் இறங்க அது உதவியாக இருக்கும்.''

''சரி...'' என்றாள் ரோனா.

பால் ஹேடன் டெலிபோனை எடுத்து எண்களைச் சுழற்றிக்கொண்டே, ''என்மீது அதிக நம்பிக்கை வைத்திருப்பதை நீ உணருகிறாயா?'' என்றான் ரோனாவிடம்.

''உங்களுக்கு இதெல்லாம் பற்றி நன்கு தெரிந்திருக்கும்; நீங்கள் ராணுவத்தில் ரகசிய இலாகாவில் இருந்தவர் இல்லையா?''

வியப்புடன் அவன் அவளை நோக்கினான். ''இப்போது உனக்கு அந்த யோசனை எப்படி வந்தது?''

"ஏன், நீங்கள் லண்டனில் பார்த்த வேலைபற்றி வெளியே மூச்சுக் காட்டியதில்லை. அது ரகசியம் என்று நினைத்தேன்."

''ரகசியமில்லாத ரகசிய வேலைகள் எவ்வளவோ இருக்கின்றன'' என்ற பால் டெலிபோனில் பேச ஆரம்பித்தான். ''ரோஜர்? பால் பேசுகிறேன். அவசர அலுவல் ஒன்று முளைத்துள்ளது. நீங்கள் இங்கே வர முடியுமா? உடனேயே .. நல்லது . . . .''

இப்போது எல்லாம் தன் கைகளைவிட்டு நழுவிவிட்டதாக ரோனு நினைத்தாள். ஆனால் அவள் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டாளா? அவள் வேறு என்னதான் செய்திருக்க முடியும்? பால் ஹேடனை நம்புவதாக ஒப்புக்கொண்டது விசித்திரமாகப்பட்டது அவளுக்கு. எட்டு வருஷங்களுக்கு முன்

''உங்கள் நண்பர் இங்கே வர எவ்வளவு நேரமாகும்?'' என்று கேட்டாள் ரோனு.

"பத்துப் பதினைந்து நிமிஷங்கள் தாம். உட்கார் இப்படி. சிகரெட் வேண்டுமா?'' அவன் குரல் சாதாரணமாக ஒலித்தது. செயின்ட் நிக்கில் உள்ள மல்யுத்த ஆட்டங்கள் பற்றி அவன் பேச ஆரம்பித்தான்.

''நீங்கள் அங்கே அடிக்கடி போகிறீர்களா?'' என்றாள் ரோனு.

''நான் நல்லது, கெட்டது பற்றிய பழைய அமெரிக்கக் கதை ஒன்றைப்பற்றி ஒரு கட்டுரை எழுதலாமென்றிருக்கிறேன்.''

''நல்லது, கெட்டதா? எப்படி?'' அவள் முறுவலிக்க ஆரம்பித்தாள்.

''கேள்; செயின்ட் நிக்கில் நடக்கும் பந்தயங்களில் நல்ல ஆட்டக்காரன் ஆரம்பத்தில் தோற்கிறான். நேர்மையான முறையிலும் சண்டை போடுகிறான். எதிராளியின் நேர்மையற்ற தந்திரங்களை உணராமல் தோற்கிறான். ஆனால் அவன் விட்டுவிடுவதில்லை. இடையில், நேர்மையற்ற எதிராளியை ஜனங்கள் கூச்சலிட்டுக் கண்டிக்கிறார்கள். கடைசி சில நிமிஷங்களில் நல்ல ஆட்டக்காரன் திடீரென்று கோபமடைந்து தீவிரமாகச் சண்டை போடுகிறான். கெலிக்கவும் தொடங்குகிறான். கூட்டம் சந்தோஷ ஆரவாரம் செய்துவிட்டு, திருப்தியுடன் வீட்டுக்குச் செல்கிறது. வாழ்க்கை கூட இப்படித் தானிருக்க வேண்டும்—நல்லவர்கள் ஜெயித்து, கெட்டவர்கள் தோற்கவேண்டும்.''

''ஆறுதலளிக்கக் கூடிய கதைதான்'' என்றாள் ரோனு.

''உண்மையோடு ஒப்பிட்டு, நாமாகக் குழப்பிக்கொள்ளாவிட்டால், தீங்கு அளிக்காத கதையும் கூட.''

அவள் பாலின் முகத்தை ஆராய்ந்து கொண்டிருந்தாள். அவன் மிகவும் மாறிப்போயிருக்கிறான் என்று அவள் நினைத்தாள். ''பால், நீங்கள் ராணுவத்தில் என்ன பணிபுரிந்தீர்கள்? ஒருவேளை அது வெளியே சொல்லக்கூடாததோ?'' என்று வினவினாள்.

''தாராளமாகச் சொல்லலாம்; ஆனால் கேட்பதற்குத்தான் ஒருவரும் முன்வந்ததில்லை'' என்று சிரித்தான் அவன். பிறகு பிரிட்டானியைப் பற்றியும், அங்குள்ள எதிர்ப்புக்களைப்பற்றியும் பேசினான்.

அதற்குள் வெளியே காலரவம் கேட்டது. பால் ஹேடன் எழுந்து கதவை நோக்கிச் சென்றான். ''இந்தப் பக்கம் வாருங்கள்'' என்று அழைத்தான்.

ரோனா திரும்பி, நரைத்த தலையுள்ள மெலிந்த மனிதர் ஒருவர் உள்ளே வருவதைக் கண்டாள். அவரும் கவனம் நிறைந்த தமது பழுப்புக் கண்களால் அவளை நோக்கினார். எதைக் கண்டும் வியந்த மாதிரி அவர் காணப்படவில்லை. பால் அறிமுகப்படுத்தியபோது, அவர் புன்முறுவலுடன் கை குலுக்கினார். அவளுடைய தயக்கமும் பீதியும் சிறிதளவு மறைந்துவிட்டன.

பால் சொன்னான்: ''எப்படி முதலில் நீ சார்லஸைச் சந்தித்தாய் என்று சொல், ரோனா. அவன் உன்னிடம் என்ன சொன்னான்? அங்கிருந்து நாம் ஆரம்பிப்போம்.

ரோனா தலையை ஆட்டினாள். சுருக்கமாக அவள் கதையை ஆரம்பித்தாள்.

★ ★ ★

''எவ்வளவு அமைதியாக அந்த அறைக்குள் நுழைந்தாரோ, அதே அமைதியுடன் செவி மடுத்தார் ரோஜர் பிரௌன்லீ. பிறகு, ரோனாவுக்கு எழுதப்பட்ட சார்லஸின் கடிதத்தைப் படித்தார். அதற்கப்புறம் பால் அவர் முன்னே வைத்த மாலைப் பேப்பரில் வந்துள்ள செய்தியையும் படித்தார். இறுதியில், மேஜைமீது கிடந்த அக்கடிதத்தின் உறை மீது கவனத்தைப் பதித்தார்.

''நீங்கள் அதைப்பிரிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்'' என்றாள் ரோனா. பிறகு அவள் எழுந்து பாலைப் பார்த்து முறுவலித்தபடி, ''நான் என் ஆபீசுக்குச் சென்று மேஜைக் காகிதங்களை ஒழுங்குபடுத்துகிறேன். இந்த விஷயம் என் கையை விட்டுப் போய்விட்டது, இல்லையா? உண்மையில் எனக்கு அது மகிழ்ச்சியே'' என்றாள். பிறகு அவள் பிரௌன்லீயின் பக்கம் திரும்பியபோது அவர் அந்த உறையைப் பிரித்து, உள்ளே

யிருந்த கடிதத்தை வேகமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் முகம் சுளித்தது; உதடுகள் முறுக்கிக்கொண்டன.

திடீரென்று அவர் தலையை நிமிர்த்தினார்: இதிலுள்ள விஷயம் நமக்கு அப்பாற்பட்டது; இதை நமது மத்திய அரசாங்கந்தான் கவனிக்கவேண்டும்.''

''அவ்வளவு முக்கியமானதா?'' ரோனா பாலை வெறித்து நோக்கினாள்.

''இது ஒரு விவரமான ரிப்போர்ட்டு. ரொம்பவும் முக்கியமானது, மிஸ் மெட்ஃபோர்டு'' என்றார் பிரெளன்லீ.

அது என்னவென்று அறிய அவளுக்கு ஆவல்தான். இருந்தாலும் அவளுக்கு ஒரு நிம்மதி பிறந்தது. இனி அவள் அக் கடிதத்தைப் பற்றி மறந்துவிடலாம்.

''இந்த சார்லஸைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?'' என்று கேட்டார் ரோஜர் பிரெளன்லீ.

''அது முக்கியமானதா?''

''ஆமாம். அது இக்கடிதத்திலுள்ள விஷயங்களை மேலும் தெளிவாக்கும். அவன் சார்பில் நீ ஒரு சாட்சியாவாய். அவனுடைய கையெழுத்தும், அதே போல் உனக்கு அவனிடமிருந்து வந்த கடிதத்தின் மீதுள்ள தபால் முத்திரையும் கூடச் சாட்சிகளாகும். எல்லோரும் நினைத்த மாதிரி அந்த ஞாயிற்றுக்கிழமையன்று அவன் குடி போதையில் இருந்திருக்க முடியாது. உண்மையில், அப்படிக் குடிகாரன் போல் நடிப்பது அவனுக்கு உதவியாக இருந்தது என்றுதான் இந்த ரிப்போர்ட்டு ஆரம்பமாகிறது. அபாயமற்ற முட்டாள் என்று மற்றவர்களை அது நினைக்கச் செய்திருக்கிறது. இங்குள்ள சாட்சியங்களெல்லாம் அதை உறுதிப்படுத்துகின்றன.''

''பாவம், சார்லஸ்'' என்றாள் ரோனா மெதுவாக. பிரெளன்லீ டெலிபோனை எடுத்து 'டயல்' செய்ய ஆரம்பித்தார். ''நாம் இன்றிரவைக் கழிக்கப் போட்ட திட்டங்களை ரத்து செய்யவேண்டும். மிஸ் மெட்ஃபோர்டும் நம்முடன் வருவது நல்லது.''

எங்கே போகவேண்டுமென்று அவர் கூறவில்லை. ஆனால் ரோனா ஊகித்துக்கொண்டாள்; அவளுடைய வாக்கு மூலம் உபயோகமாக இருக்குமானால், அவள் அதைக் கொடுக்கத்தான் வேண்டும். ''உங்களுக்காக என் ஆபீஸ் அறையில் காத்திருக்கிறேன்'' என்றாள் அவள்.

குனிந்த தலையுடனும், வேதனை கவிந்த முகத்துடனும் அவள் மெதுவாகத் தாழ்வாரத்தின் வழியே நடந்தாள். அவள் மனம் இன்னமும் சார்லஸைப் பற்றியே நினைத்துக்கொண்டிருந்தது.

திருமதி ஹார்ஷி கையலம்பும் அறையை நோக்கிப்போய்க் கொண்டிருந்தாள். ''இன்றைய இரவு நான் குழந்தையைப் பார்த்துக்கொள்ளவேண்டும்; ஆனால் ஆபீசில் இவ்வளவு நேரமாகி விட்டது'' என்றாள் திருமதி ஹார்ஷி புன்முறுவலுடன்.

''உங்கள் பேரக் குழந்தை எப்படியிருக்கிறான்?'' என்றாள் ரோனா.

''நன்றாக இருக்கிறான். அடுத்த மாதம் மூன்று வயதாகப் போகிறது'' என்று சொல்லிக்கொண்டே ஓடினாள் அவள். பிறகு 'சட்'டென்று திரும்பி, ''ஓ, மறந்தே போய் விட்டேன்; உனக்கு என் வாழ்த்துக்கள்!'' என்று முறுவலித்த பின் மேலே நடந்தாள்.

வாழ்த்துக்கள்....தூரத்தில் தனியாக ஒலித்த டைப்ரைட்டரின் சப்தம் அவ்வார்த்தையைக் கேலியாக எதிரொலித்தது. வாழ்த்துக்கள்....

★ ★ ★

ரோஜர் பிரௌன்லீ டெலிபோன் செய்து முடித்துவிட்டு, நாற்காலியில் சுழன்றபடி பாலின் பக்கம் திரும்பினார். ''எல்லாம் தீர்மானமாகிவிட்டது. நான் விரும்பிய மனிதர் கிடைத்தார். உச்சியில் உள்ளவராகப் பிடிப்பதற்கு இணையில்லை. அவர் ஏதோ 'பார்ட்டி'க்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். ஆனால், நாம் அவரை அதிக நேரம் நிறுத்திவைக்க மாட்டோம். நாம் செய்யப்போவதெல்லாம், சார்லஸைப் பற்றி நமக்குத் தெரிந்ததை அவரிடம் கூறி, இக்கடிதத்தையும், வாக்குமூலத்தையும் சேர்ப்பிக்க வேண்டியதுதான்.''

''அவரை நாம் எங்கே சந்திக்கப் போகிறோம்?''

''அவர் வீட்டில், எட்டு மணிக்கு. அதற்குள் அவர் ஒரு சுருக்கெழுத்தாளரையும், இரண்டொரு ஏஜெண்டுகளையும் அழைத்து வைத்திருப்பார்.''

''சார்லஸின் ரிப்போர்ட்டு உபயோகமானதாக இருந்தால் நல்லது'' என்றான் பால். வீணுக்கு நேரம் செலவாகிறதோ என்று அவனுக்குக் கவலை. சார்லஸால் உபயோகமான விவரங்களைக் கொடுக்கமுடியுமோ என்று நம்புவது சிரமமாக இருந்தது. பியானோ பெஞ்சின் மீது நிற்கக்கூட அவனால் முடிந்ததில்லையே. பலகணி வழியே கீழே குதித்தபோதுகூட யாரோ கிழப் பாதசாரிக்கல்லவா காயங்களை ஏற்படுத்தியிருக்கிறான்? அவன் செய்யும் காரியங்கள் எல்லாமே அபத்தந்தான்.

''நீயே இதைப் பார், பால். நீ இதில் சிரத்தை கொள்ளக் கூடும். தோழர் ஆர்பெனின் பெயர்தான் முதலில் இருக்கிறது'' என்றபடி அக்காகிதங்களைக் காண்பித்தார் பிரௌன்லீ.

பால் தலையை அசைத்தான். பிறகு நாற்காலியில் அமர்ந்து படிக்க ஆரம்பித்தான்.

சார்லஸ் தனது வாக்கு மூலத்தைப் பாராக்களாகப் பிரித்து இலக்கமிட்டிருந்தான். அரைகுறையான வாக்கியங்களால் எழுதப்பட்டிருந்த அது, வேகமாக எழுதப்பட்டிருக்க வேண்டுமென்பதை உணர்த்தியது. ஆனால் அவனுடைய வார்த்தைகள் தெளிவாகவும், குறிப்பாகவும் இருந்தன. அதிலும் அவன் தன்னுடைய நேர்மையைப்பற்றி உணர்த்தி எழுதும்போது, அவற்றில் சொல்லாத சேதிகள் பல தொங்கி நிற்பது விளங்கியது. அவன் கொடுத்த விவரங்கள் திடுக்கிடக்கூடியவைதாம்; ஆனால் அவை உபயோகமானவை என்றே தோற்றின. மூன்று பக்கங்கள் இருந்த அந்த ரிப்போர்ட்டைப் படித்து முடித்த பால், அதிலிருந்த உண்மைகளில் மட்டுமே சிரத்தை கொள்ளவில்லை. வியக்கத்தக்க வகையில் சார்லஸின் மீதே அவன் சிரத்தை கொள்ளலானான்.

பிரௌன்லியிடம் அதைத் திருப்பிக் கொடுத்த பால் நாற்காலியில் சாய்ந்துகொண்டு பார்வையைப் பலகணிக்கு வெளியே ஓடவிட்டான். சார்லஸின் எழுத்திலிருந்து, அவன் தன்னால் முடிந்தவரை தெல்மாவைப் பாதுகாக்க விரும்பியிருக்கிறான் என்பது தெளிவாகத் தெரிந்தது. நாளுக்கு ஒரு புது முறையைத் தேடி ஓடும் சுபாவமுள்ளவள் தெல்மா. பதினைந்து ஆண்டுகளுக்கு முன் சார்லஸின் தந்தை இறந்தார். அன்றிலிருந்து தெல்மாவின் எதேச்சாதிகாரத்துக்கு உட்பட்டுப் பழகியிருக்கிறான் சார்லஸ். தனது விடுதியில் விசித்திரமான நபர்களைக் கூட்டமாகக் காண்பதும் அவனுக்கு வழக்கமாகிவிட்டது. அவனுக்கென்று உண்மையான நண்பர்கள் யாருமில்லை.

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு தெல்மாவின் கவனம் திடீரென அரசியல் பக்கம் திரும்பியது. அப்போது பத்தொன்பது பிராயத்தை எட்டியிருந்த சார்லஸ், தாயின் இப் புது மோகமும் போய்விடும் என்று காத்திருந்தான். அதற்குப் பதில் அவளுடைய அரசியல் சிரத்தை ஆழமாகி வருவதையே அவன் கண்டான். இப்போது அவளுடைய விடுதிக்கு வந்தவர்கள் அவளைப் புகழ்ந்ததோடு, மரியாதையுடனும் நடந்து கொண்டார்கள். அப்போதுதான் வாழ்விலேயே முதல் தடவையாக தன்னை நாடியும் மனிதர்கள் வருவதை அவள் உணர்ந்தாள். வருபவர்கள் எல்லாம் கம்யூனிஸ்டுகள், அல்லது அவர்களுடைய அநுதாபிகள் என்றும், அவர்கள் அவளுடைய பணத்தையும், பெரிய விடுதியையும் உபயோகித்துக் கொள்ள வருகிறார்கள் என்றும் சார்லஸ் எவ்வளவோ அவளிடம் எடுத்துக் கூறினான். தெல்மா செவிமடுக்கவில்லை. அதற்குப் பதில், அவள் கட்சியிலேயே சேர்ந்து நிகோலஸ் ஆர்பெனின்

நெருங்கிய சிநேகிதியும் ஆனுள். அப்போதுதான் சார்லஸ் அதிகமாகக் குடிக்க ஆரம்பித்தான்; திடீரென்று நியூயார்க்கை விட்டு ஓடி, முன் பின் தெரியாத இடங்களிலே அதிக நாட்களைக் கழிக்க ஆரம்பித்தான்.

பிறகு மூன்று வருஷங்கள் கழிந்ததும் திடீரென்று அவன் திரும்பி வந்தான். அப்போது வீட்டிலே மார்ட்டின் என்ற ஒரு பட்லர் சர்வாதிகாரியாக இருப்பதைக் கண்டான். ஏதோ விபரீதமான செயல்கள் அவன் வீட்டில் நிகழ்ந்து வருவதையும், அவை நிகோலஸ் ஆர்பெனின் நிர்வாகத்தில் நடப்பதையும் அவன் உணர ஆரம்பித்தான். இப்போது சார்லஸ் மீண்டும் குடிக்க ஆரம்பித்தான். சாது போலவும், எப்போதுமே குடிபோதையில் இருந்து கொண்டு ஏதையுமே கவனிக்காதவன் மாதிரியும் அவன் நடந்து கொண்டான். ஆனுல் உண்மையில் எல்லாவற்றையும் நுட்பமாகக் கவனித்து வேவு பார்த்து வந்தான். தெல்மா கஷ்டங்களை விலைக்கு வாங்கிக் கொண்டு வருகிருள் என்பதை அவளுக்கு சாட்சியுடன் உணர்த்துவதற்காகத்தான் அவன் இப்படியெல்லாம் நடந்து கொண்டான்.

சார்லஸ் மெதுவாகவும், ஜாக்கிரதையாகவும் செல்ல வேண்டியிருந்தது. அவனுக்கு வேண்டிய விவரங்கள் கிடைக்க இரண்டு ஆண்டுகளாயின. பிறகு அவற்றின் பலாபலன்கள் அவனை அச்சமுறுத்தின. அந்த வீட்டில் நடக்கும் செயல்களில் தெல்மாவுக்கு விஷேசமான பங்கு இல்லையெனினும், அவள் எளிதில் இவற்றிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முடியாதென்பதை அவன் உணர்ந்தான். கடந்த ஆறு மாதங்களாக என்ன செய்வதென்று புரியாமல் அவன் தயங்கிக் கொண்டிருந்தான். மீண்டும் வெளியே செல்லக்கூட அவன் ஆரம்பித்தான். என்ன செய்யவேண்டுமென்று அவனுக்குப் புரிந்தது; ஆனுல் அவனுல் அதைச் செய்யமுடியவில்லை. சமீப காலமாக தெல்மா அவனுக்கு எதிராகத் திரும்பலானுள். நிகோலஸ் ஆர்பென் சொல்லுவதையெல்லாம் அவள் கேட்க ஆரம்பித்தாள். அவன் உபயோகமற்ற குடிகாரனென்றும், சிகிச்சைக்காக அவனை வெளியே அனுப்பப்போவதாகவுங்கூட அவள் பயமுறுத்தினுள். ஒரு வாரம் யோசித்துக்கொண்டு இருந்தபின், ஞாயிற்றுக்கிழமையன்று முதல் தடவையாக சார்லஸும் எதிர்ப் புரட்சி செய்தான்.

அவள் என்ன செய்கிருள் என்று பார்ப்பதற்காகவே சார்லஸ் அவளை எதிர்த்திருக்கவேண்டுமென்று பால் ஹேடனுக்குத் தோன்றியது. தெல்மா சார்லஸை நிகோலஸ் ஆர்பெனுக்குப் பலியிட்டுவிட்டால், தாய்ப்பாசம் காரண

மாக அவன் தயங்கவேண்டாம் அல்லவா? சுதந்திரமாக என்ன வேண்டுமானாலும் செய்யலாமல்லவா?

சார்லஸின் ரிப்போர்ட்டிலிருந்து பார்வையை நிமிர்த்திய பிரௌன்லீ கூறினார்: ''எல்லாம் மட்டமான விஷயங்கள். ஆனால் துப்புக் கொடுக்கக்கூடிய பல சேதிகள் இதில் உள்ளன. சில மாதங்கள் கவனமாக விசாரணையை நடத்தினால், தோழர் ஆர்பெனைக் கம்பி எண்ண வைத்துவிட முடியும். ஆனால் இந்த சார்லஸ் ஏன் விஷயங்களை இவ்வளவு நாட்களுக்கு அமுக்கிவைத்துவிட்டான்?''

''தெல்மாவிற்காகத்தான்'' என்றான் பால்.

''ஆனால்'' அதன் பலன் அவனை அதிகமாக அல்லவா சிக்க வைத்திருக்கிறது? இப்போது சார்லஸின் மரணம்பற்றியும் விசாரணை வரும்!''

இருவரும் மௌனமானார்கள்.

ரோஜர் பிரௌன்லீ அக்காகிதங்களை எடுத்து உறைக்குள் போட்டார். ''சார்லஸ் துணிந்து இதை எழுதியதற்கு நான் அவனுக்கு நன்றி செலுத்துகிறேன்' இக் கூட்டத்திற்குத் தலைவன் ஆர்பென்தான் என்பது வெளிப்படை. மார்ட்டினை மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பட்லர் வேடத்தில் அங்கே அவன் அமர்த்தியிருக்கிறான். அங்கு வேலைக்காரர்களுக்கான அறையில் நடக்கும் இரகசியக் கூட்டங்களில் இவர்களிருவரும் எப்போதுமே கலந்துகொள்கிறார்கள். இக்கூட்டங்கள் சில இரவுகளில் மட்டுமே நடப்பது கவனிக்கத்தக்கது. ஒருவேளை அந்த நாட்களில் உள்ள 'லிஃப்டு'க்காரன்தான் நம்பகமானவனோ என்னவோ? இவையெல்லாம் விசாரிக்கப்பட வேண்டும்.''

பிறகு பிரௌன்லீ மௌனமானார். அவர் எண்ணம், அங்கே எப்போதாவது வெளிநாட்டவர்களும் வருகிறார்கள் என்று சார்லஸ் எழுதியிருந்ததை ஒட்டி ஓடியது. பகல் முழுவதும் மறைந்து இருந்துவிட்டு, இரவில் மட்டுமே அவர்கள் வெளியே போனார்கள். சார்லஸ் கவனமாக அவர்கள் வந்து தங்கிய தேதிகள், அவர்களுடைய கட்சிப் பெயர்கள் முதலியவற்றைக்கூடக் குறிப்பிட்டிருந்தான்.

''ஒருவிதத்தில் சார்லஸ் ஒன்றும் முட்டாள் இல்லை'' என்றார் பிரௌன்லீ.

''அவனுக்குத் துணிச்சலும் இருந்திருக்கிறது. ஆனால் அவன் ஏன் எஃப்.பி.ஐ.க்காரர்களிடம் சொல்லவில்லை?''

''தன்னால் முடிந்த அளவு அவன் செய்திருக்கிறான். தெல்மா அவனை ஒரு தினுசாக வளர்த்துவிட்டாள். தவிர எப்போதும் அவனை அவள் அடக்கியே வைத்திருந்தாள். அதை அவன் ஒப்புக்கொள்ளுகிறான்.''

பிரௌன்லீ தலையை அசைத்தார். ''சார்லஸின் படிப்பும் வாழ்வும் இப்படி வீணாகிவிட்டது எனக்குப் பிடிக்கவில்லை.'' பிறகு அவர் எழுந்து கடிகாரத்தைப் பார்த்தபின் தொடர்ந்தார்: ''இன்னும் ஐந்து நிமிஷங்கள் உள்ளன. தெருவில் போய் நிற்பதைவிட இங்கேயே காத்திருப்பது நல்லது. நாம் செல்லவேண்டிய இடம் அருகில்தான்; கிழக்கு 57-வது தெரு.''

இன்னமும் சார்லஸைப் பற்றியே நினைத்துக்கொண்டிருந்த பால் ஹேடன் கூறினான்: ''இவ்வளவு மனக்குழப்பங்களுக்கிடையிலும், அவன் எப்படிக் கவனமாகத் திட்டமிட்டு வேலை செய்திருக்கிறான்? விசித்திரம்தான்!''

''மார்ட்டினைப் பின்தொடர அவன் ஒரு வேவுகாரனை அமர்த்தியதைத்தானே குறிப்பிடுகிறாய்? அது கெட்டிக்கார வேலைதான். அந்த வேவுபார்க்கும் கம்பெனிக்காரர்கள், மார்ட்டின் கையில் ஒரு பையுடன் வெளிநாட்டுத் தூதர் காரியாலயங்களுக்குச் சென்று வந்ததைப்பற்றி சாட்சி சொல்லக்கூடும். மார்ட்டின் அந்தப் பை நிறையப் பணம் கொண்டுவந்ததையும், இரகசியக் கூட்டங்கள் நடந்தபின், அது காலியாகிவிடுவது பற்றியும் சார்லஸே எழுதியிருக்கிறான்.''

''மார்ட்டின் இரவுவேளையைத் தெல்மாவுடன் கழிப்பது தெரிந்திருந்தாலும், அவனுடைய அறைக்குள் செல்வதற்கு சார்லஸுக்கு நல்ல துணிவு இருந்திருக்க வேண்டும்'' என்றான் ஹேடன் மெதுவாக.

பிரௌன்லீ கசப்புடன் உதடுகளைச் சுளித்துக்கொண்டார். ''மார்ட்டினுக்கும் அவனுடைய தோழர்களுக்கும் வெளிநாட்டுப் பணம் கிடைக்கிறது. தெல்மாவுக்கு மார்ட்டின் செலவுக்குக் கொடுக்கிறான். கட்சியிலுள்ள லட்சியவாதிகளுக்கு இது தெரிந்தால், அவர்கள் என்ன நினைப்பார்களோ?''

''தெல்மாவின் வீட்டில் ஞாயிற்றுக்கிழமை மாலைகளில் நடக்கும் இன்னிசை விருந்துகளில் சிலருக்கு உற்சாகம் குறையலாம்.''

பிரௌன்லீ அறைக்குள்ளே நடந்தார். ''இந்த ஞாயிற்றுக்கிழமை விருந்துகள் சில சமயங்களில்தான் நடப்பதாக சார்லஸ் எழுதியிருக்கிறான். ஒருவேளை தன் அன்னையைக் காப்பாற்றுவதற்காக இருக்குமோ?''

''பிரசாரத்தின் மதிப்புத் தெரியாதவர்களுக்கு இந்த விருந்துகள் அதிகமாகத் தோன்றாமலிருக்கலாம். ஆனால் உங்களுக்கும் எனக்கும் தெரியும், எப்பேர்ப்பட்ட நாசத்தில் மார்ட்டின் தன்னை மெதுவாகச் சிக்கவைத்துக்கொண்டிருக்

கிருன் என்று! இந்த உண்மை அவனுக்கும் புரிந்து, அவன் தன்னே விடுவித்துக்கொள்ள விரும்பினுல், அதற்கு அவனுக்கு அநுமதி கிடைக்குமா?''

''கிடைக்காது'' என்று முறுவலித்தார் பிரௌன்லீ. ''ஒரு சதியில் ஆழப் புதைந்துவிட்டவர்கள் எளிதில் வெளிவர முடியாது. ஆர்பெனும், மார்ட்டினும் இந்தச் சேற்றில் கழுத்துவரை அமுங்கியிருக்கிருர்கள். இவற்றில் உழல்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லே.''

ரோஜர் பிரௌன்லீ அக்கடிதங்களேத் தன் உள்பையில் வைத்துக்கொண்டு, கோட்டின் பொத்தான்களேப் போட்டுக் கொண்டார்.

''நான் ரோனுவை அழைக்கிறேன்'' என்ற ஹேடன் தன் தொப்பியை எடுக்கச் சென்ருன்.

''ரைட்!...ஓரிரு வாரங்களுக்கு மிஸ் மெட்ஃபோர்டை ரகசியமாகப் பின்தொடர்ந்து கவனித்துக்கொள்ள ஒரு வேவுகாரக் காவலாளியை நியமிப்பது நல்லதென நினேக்கிறேன். ஒருவேளே சார்லஸ் இறக்குமுன் உணர்ச்சிவசப்பட்டுத் தான் எழுதிய கடிதம்பற்றி ஏதாவது சொல்லிருக்கலாமல்லவா?'' என்ருர் பிரௌன்லீ.

''ரோனுவுக்கு அவன் எழுதியிருப்பான் என்று அவர்கள் எண்ணவே இடமில்லே. அதனுல்தான் சார்லஸ் அவளேத் தேர்ந்தெடுத்துக்கொண்டான்.''

''இக்கடிதம்பற்றி அவள் யாரிடமும் கூறக்கூடாதென்று எச்சரித்துவிடு.''

இருவரும் தாழ்வாரத்துக்கு வந்தார்கள். அங்கே ரோனு தயாராக நின்றுகொண்டிருந்தாள்.

''எனக்கு மேலே வேலே ஒன்றும் செய்யப்பிடிக்கவில்லே'' என்று முறுவலித்தாள் ரோனு: ஆனுலும் அவள் வேதனேயால் சோர்ந்துதானிருந்தாள். ஸ்காட்; சார்லஸின் மரணம்; வேலேயில் அவள் சுணக்கமாக இருந்ததைக் கண்டு பார்னெட் கோபமுற்றது—இவையெல்லாம் அவளே வருத்திக்கொண்டிருந்தன.

''கவலே கொள்ளாதே, மிஸ் மெட்ஃபோர்டு. உன்னே அதிக நேரம் நாங்கள் தங்கவைக்கமாட்டோம். பிறகு பால் உன்னே ஏதாவது சாப்பிட, உனக்குப் பிடித்த ஹோட்டலுக்கு அழைத்துச் செல்வான்'' என்ருர் பிரௌன்லீ, அவர்கள் 'லிஃப்டு'க்காகக் காத்திருந்தபோது.

''நான் பட்டினிக்காரியாகவா தோன்றுகிறேன்?'' என்று முறுவலித்த ரோனு, தளர்ச்சியுடன் பாலின் பக்கம் திரும்பினுள். நாங்களிருவரும் ஒன்ருகத் தள்ளப்படுகிருேம் என்று

அவள் நினைவு ஓடியது. கடந்த வாரத்தில் நடந்த ஒவ்வொன்றும் அவர்களை நெருக்கமாக்கிக்கொண்டு வருகிறது. ஸ்காட் கூட அதில் தன் பங்கைச் செலுத்தியிருக்கிறான்.

அவர்கள் லிஃப்டுக்குள் நுழைந்ததும் பிரௌன்லீதான் பேச்சைத் தொடங்கினார். பால் ஹேடனுக்குக் கூறுவதற்கு ஒன்றுமேயில்லை போல் தோன்றியது. ''ஆமாம், உணவுதான் மக்களை மகிழ்ச்சியுடன் இருக்கச் செய்கிறது. எதிர்காலத்தைப் பற்றிப் பயப்படுபவர்கள் எல்லோரும் பசிக்காரர்களே'' என்றார் பிரௌன்லீ.

அவர் பேசும்போது, எல்லாம் அவ்வளவு எளிதாக இருக்குமென்றே ரோனா நம்பினாள். 'எல்லாம் தலைக்கு மேல் போய் விட்ட ஒரு நிலையை நான் அடைந்திருக்கிறேன். இருந்தும், அவற்றிலிருந்து தப்புவதற்காக நான் போராடுவதாகத் தெரியவில்லை. அது கூடாது. நான் போராட வேண்டும்.'

அவர்கள் அவென்யூவை அடைந்தபோது கடைக் கண்ணாடி யொன்றில் தன்னைப் பார்த்துக் கொண்டாள் ரோனா. தன் தோற்றம் சாதாரணமாகவே இருந்ததைக் கண்ட அவள் வியந்து போனாள். பிறகு அவள் பார்வை சுற்றிலும் சிதறிக் கிடந்த ஜனத் திரளின் மீது திரும்பியது. எவ்வளவு சொந்தக் கவலைகளை, ஏமாற்றங்களை, துன்பங்களை அவர்களும் தங்களது இதயங்களுக்குள் மூடி வைத்திருப்பார்கள்? பார்ப்பதற்கு அவர்கள் சாதாரணமாகத்தான் தோன்றினார்கள். ஆனால் அவளும் அப்படித்தான்!

பிறகு பால் ஹேடன் மெதுவாகச் சொன்னான்: ''நமக்குப் பின்னால் ஸ்காட் எட்லீ நிற்கிறான்.''

''வருந்துகிறேன், ரோனா. நீ அவனுடன் இப்போது பேசுவதற்கில்லை. நமக்கு நேரமாகி விடும்'' என்றார் பிரௌன்லீ.

''நான் அவருடன் இப்போது பேச விரும்பவில்லை'' என்றாள் ரோனா மெதுவான குரலில். அவள் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அவள் பிரௌன்லீயின் கையைப் பற்றிக் கொண்டாள். அப்போது அவள் கரம் நடுங்குவதை உணர்ந்தார் அவர். அத்துடன், ரோனாவுக்கும் பாலுக்குமிடையில் ஓர் இறுக்கம் முளைத்து விட்டது போலவும் தோன்றியது. சார்லஸின் மரணம் சம்பந்தமற்ற ஓர் இறுக்கம். ரோனா உரக்கவே கூவினாள்: ''அதோ ஒரு டாக்ஸி, அதோ!''

''நான் மிஸ் மெட்ஃபோர்டை அழைத்துச் செல்கிறேன். நீ அவன் எங்களைப் பின்தொடராமல் பார்த்துக் கொள்'' என்ற பிரௌன்லீ, டாக்ஸியின் கதவைத் திறந்து அதனுள் ரோனா அமருவதற்கு உதவினார். பிறகு, தான் செல்லும் முகவரியையும் பாலிடம் அவசரமாகக் கூறினார். கார்

புறப்பட்ட பிறகுதான், அவர் திரும்பி ஸ்காட் எட்லீயைப் பார்த்தார். நல்ல உடையில் உயர்ந்து நின்ற அவன் மற்றொரு டாக்ஸியைக் கூவி அழைக்க முன்னால் நகர்ந்தான். அதே சமயம் பாலும் முன்னால் வந்தான்.

''நான் வருந்துகிறேன்...'' என்றார் பிரௌன்லீ. வயதான மாமாத் தாத்தா மாதிரி அவர் அவள் கையில் தட்டினார். இந்த அலுவலை அவர் அவ்வளவு விரும்பவில்லைதான். இருந்தாலும். . . .

★ ★ ★

''ஒரு நிமிஷம்,'' என்றான் பால் ஹேடன்.

ஸ்காட் எட்லீ அவனை முற்றிலும் பொருட்படுத்தவில்லை. ஒரு டாக்ஸியை வரச் சொல்லிக் கையை ஆட்டிக் கொண்டிருந்தான். அவன் முகம் சுளித்திருந்தது; கண்கள் குறுகியிருந்தன.

''நிகோலஸ் ஆர்பெனிடம் சொல்லு—'' என்று ஆரம்பித்த பால், பேச்சை முடிக்காமல் நிறுத்தினான்.

எட்லீ திரும்பி அவனை நேருக்கு நேராக நோக்கினான். அவன் முகத்தில் ஓர் அதிர்ச்சி. அருகில் வந்து நின்ற டாக்ஸியைக் கூடக் கவனிக்கவில்லை.

''எங்களுக்கு அனுப்பும் கட்டுரைகளுக்காக நிகோலஸ் ஆர்பென் புதுப் புது புனைபெயர்களைத் தேட வேண்டாமென்று சொல்.''

ஸ்காட் எட்லீ தன்னை நிதானப்படுத்திக் கொண்டான். அவனுக்குப் பாதி கோபம், பாதி அருவருப்பு. ''முதலாவதாக நான் ஆர்பெனைச் சந்திக்கப் போவது நிச்சயமில்லை. இரண்டாவது, உன் சேதிகளை நீயே நேராக அனுப்பிக் கொள்ளலாம். மூன்றாவது—நீ எனது ரோனாவை விட்டு ஒதுங்கியே இரு.''

யார் டாக்ஸியில் வரப் போகிறீர்கள்?'' என்று குரல் கொடுத்தான் டாக்ஸிக்காரன்.

''நான் உனது நிலையில் இருந்தால், ரோனாவே தன் முடிவைச் செய்துகொள்ளட்டுமென்று விட்டுவிடுவேன்'' என்றான் பால் மெதுவாக.

''உண்மையில் நீ அப்படியா செய்வாய்?''

''ஆமாம். அத்துடன் உனக்கு மற்றொரு புத்திமதி—''

''உங்களுக்கு டாக்ஸி வேண்டுமா, வேண்டாமா?'' டாக்ஸிக்காரன் தலையை வெளியே நீட்டி இடைமறித்தான்.

''ரோனாவை அங்கு மிங்கும் இழுத்துக் கொண்டு போவதை நிறுத்திவிடு'' என்றான் ஹேடன்.

அவர்கள் ஒருவரை யொருவர் கண்களால் துருவிக் கொண்டனர்.

எட்லீ கை முட்டியை மடித்துக் கொண்டு உயரே எழுப்பினுன்.

"ஆல் ரைட்" என்று ஹேடன் தன் இடக்கையைத் தூக்கி அவனை ஓங்கி அடித்துக் கீழே தள்ளினுன்.

"ஹேய்! என் டாக்ஸிக்கு அப்பால் போங்கள்" என்று இடைமறித்த டிரைவர், காரின் கதவை மூட முயன்ருன்.

"இதோ உனக்குச் சவாரி" என்ருன் ஹேடன், கீழே விழுந்த எட்லீயைத் தூக்கிக் காருக்குள் திணித்தபடி. "இவனை கிழக்கு நதிப் பக்கம் கொண்டு போய், அங்குள்ள குப்பைக் குவியலில் போடு." பால் ஹேடன் டாக்ஸியின் கதவை அறைந்து மூடினுன்.

டாக்ஸிக்காரன் மீட்டரைப் போட்டுக்கொண்டு காரை நடுரோட்டுக்குத் திருப்பினுன். பிறகு உள்ளே இருந்த ஸ்காட்டின் பக்கம் திரும்பி, "நன்ருகச் சாய்ந்து உட்கார்ந்து கொள்ளுங்கள். கடை வாய்க் காயத்தில் சிறிது ஐஸ் வைத்தால் நல்லது என்ருன்."

ஸ்காட் பதிலொன்றும் கூறவில்லை.

"சரி... வண்டியை எங்கே விட வேண்டும்?" என்று தொழில் முறையில் சுருக்கமாக வினவினுன் அவன்.

அத்தியாயம் 17

"நன்றி பால். ஆனுல் நான் இப்போது வீட்டிற்குப் போவதையே விரும்புகிறேன்" என்ருள் ரோனு, மூன்ருவது அவென்யூவில் 'கண கண'த்து ஓடிய ஒரு டிராம் வண்டியைப் பார்த்துக் கொண்டே. பிறகு அந்த வண்டி மறைந்ததும், தெருவில் மீண்டும் அமைதி நிலவியது. அங்கங்கே ஓரிரு ஜன்னல்களில் விளக்குக் கூடப் போட்டிருந்தார்கள். நடைபாதையில் சில குழந்தைகள் இன்னமும் விளையாடிக் கொண்டிருந்தனர். மற்றப்படி ஜன நடமாட்டமும் குறைவாக இருந்தது.

மறுதலித்து விட்டதற்காக மன்னிப்புக் கோரும் வகையில் இளம் முறுவல் ஒன்றை உதிர்த்தாள் ரோனு. ஆனுல் இன்றிரவு பால் அவளுடைய சமாதானங்களை ஒப்புக்கொள்வதாக இல்லை.

''பிரெளன்லீ சொன்னபடி நீ என்னுடன் சாப்பிட வரப் போகிறுய். நீ என்னைத் தனியாக உண்ணும்படி விடமாட்டாய், இல்லையா?'' அவன் அவள் கையைப் பற்றிக் கொண்டு லெக்ஸிங்டன் அவென்யூவை நோக்கி நகர்ந்தான். அங்கே பாதரச விளக்கினுல் 'பென்னீஸ்' என்று ஒரு ஹோட்டலில் பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. ''சுத்தமான ஹோட்டல் இது. வழக்கமாக நான் இங்கே வருவதுண்டு. ஆனுல் அது இன்னமும் என்னைக் கொல்லவில்லை. தவிர, உனக்குத் தெரிந்த ஒருவரும் இங்கே இருக்கமாட்டார்கள்'' என்று முறுவலித்தான் அவன்.

''அதற்காக நான் கவலைப்படவில்லை, பால்.''

''இல்லையா? பின் எதைப் பற்றிக் கவலை? ஒரு வேளை வீட்டில் நல்ல முட்டைகளும், உணவும் உனக்காகக் காத்திருக்க வேண்டும்.'' ஆனுலும் எப்படியோ ரோஞ பென்னீஸ் ஹோட்டலுக்குள் நுழைந்து விட்டதை உணர்ந்தாள்.

குறுகலான நீண்ட அறை அது. பெட்டியண்டை அமர்ந்திருந்த பென்னி தலையை அசைத்து வரவேற்புக் கூறினுன். அங்கிருந்தவர்களில் சிலர் பாலைத் தெரிந்து கொண்டு தலையை அசைத்தார்கள்; பிறகு அவர்கள் தங்கள் பேச்சுக்குத் திரும்பினுர்கள். கறுப்பு 'ஸ்வெட்டர்' அணிந்திருந்த அழகிய பெண் ஒருத்தி முறுவலித்து விட்டு, 'ஹியா!' என்றுள். தொடர்ந்து அவள் பார்வை ரோஞவை ஆராய்ந்தது.

தலையை அசைத்த பால் ரோஞவைக் கோடியில் இருந்த சிறு அறை ஒன்றுக்கு அழைத்துச் சென்றுன். இருவரும் அமர்ந்ததும் ரோஞ தொப்பியைக் கழற்றி விட்டுக் காதண்டை மயிரை ஒதுக்கி விட்டுக் கொண்டாள்.

''வீட்டை விட்டு வெகு தூரம் வந்தவர்களுக்கு இது ஒரு வீடு மாதிரி'' என்றுன் பால்.

''உங்கள் புது விடுதி எப்படியிருக்கிறது?''

''ஓ! மிகவும் அமைதியான இடம். ஆனுல் சுயம் பாகந்தான் எனக்கு அலுத்து விட்டது.''

''யாராவது சமையற்காரன் ஒருவனை வைத்துக்கொள்ளலாமே!''

''அப்போது நான் மாலை ஆறுமணிக்கெல்லாம் சாப்பிட வேண்டியிருக்கும், அவர்கள் எல்லாம் 'டெலிவிஷன்' பார்ப்பதற்காகச் சீக்கிரமே வீட்டுக்கு ஓடவேண்டுமென்கிறுர்கள்.''

''அப்படியானுல் நீங்கள்தான் சமைக்கிறீர்களா?'' ரோஞவுக்கு வியப்பாக இருந்தது.

''ஆமாம்...''

அதற்குள் பென்னி உணவுத் தட்டுக்களைக் கொணர்ந்தான். பால் அவனுக்கு ரோனுவை அறிமுகம் செய்வித்தான்.

அவன் சென்றதும், ''மகிழ்ச்சி மிக்க மனிதன் இவன். சீதோஷ்ண நிலை, வருமான வரி இவ்விரண்டைத் தவிர வேறு எதுபற்றியும் குறைப்படமாட்டான். ஐரோப்பாவில் சுற்றி விட்டு வந்த இவன் இக்கடையைத் திறந்துகொண்டு உட்கார்ந்து விட்டான். ப்ரூக்லினில் இருந்து ஒரு பெண்ணை மணந்து கொண்டிருக்கிறான். இரண்டு குழந்தைகளும் உள்ளன'' என்றான் பால்.

''சீதோஷ்ணத்தையும் வருமான வரியையும் தவிர அவனுக்குக் கவலைப்பட எதுவுமில்லையென்று உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''உண்மை. வேறு கஷ்டங்களைப் பற்றி அவன் அழுவதில்லையென்று நான் கூறியிருக்க வேண்டும். பென்னிக்கு ஒரு கொள்கை உண்டு. அதாவது, ஒருவன் சந்தோஷமாக இருக்க வேண்டுமானால், அவன் தன் தேவைகள் யாவை என்று அறிந்திருக்கவேண்டும்; ஆனால், தன் தேவைகளை எப்போது நிறுத்திக் கொள்ள வேண்டுமென்றும் அவன் அறிந்திருக்க வேண்டும்.''

''நான் சின்னவளாக இருந்தபொழுது—'' என்று ஆரம்பித்த ரோனு தயங்கினாள்.

''அப்படியானால் இப்போது நீ எப்படி இருப்பதாக நினைப்பு?'' என்று கிண்டலாக வினவினான் பால்.

''நான் மிகவும் சின்னவளாக இருந்தபோது, தினமும் வேண்டிய சாக்லெட் வாங்கஒருவரிடம் பணமிருந்தால் அவர் மகிழ்ச்சியாக இருப்பார் என்று நினைத்திருக்கிறேன். ஆனால் இப்போது எனக்கு சாக்லெட்டே பிடிப்பதில்லை'' என்று முறுவலித்தாள் ரோனு. தொடர்ந்து, வாழ்விலேயே கசப்பான நாட்களின் முடிவில் சாக்லெட்டைப் பற்றித் தான் பேசுவதை எண்ணியபோது அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''என்ன யோசனை ரோனு?'' என்று சட்டென்று வினவினான் பால்.

பாலுக்கு எப்படித் தெரிந்தது என்று அவள் வியந்தாள். ''ஒன்றுமில்லை, நாம் சந்தித்தவர் நல்ல மனிதர்தாம்; அவரிடம் பேசும்போது எனக்குப் பயம் தோன்றவில்லை.''

''நல்லவர்—நாம் சட்டத்தை மீறுமலிருந்தால்'' என்றான் பால்.

''ஆமாம்'' என்று ஒப்புக்கொண்டாள் ரோஜா. சார்லஸின் கதையையும், அந்தக் கடிதத்தையும்பற்றி அவள் கூறும்போது கவனமாக இருந்து குறிப்பான கேள்விகளைக் கேட்ட அந்த மனிதரை அவள் நினைத்துக்கொண்டாள். ''அவர் அவ்வளவு முக்கியமான மனிதரா?'' அவர் அன்புடனும், கண்யமாகவுந் தான் நடந்துகொண்டார். அச்சுறுத்தவே இல்லை.

''அப்படித்தான் நினைக்கிறேன்'' என்றான் பால்.

''மேலும் விவரமாகப் பேசுவதற்காக மிஸ்டர் பிரௌன்லீ அவருடன் தங்கிவிட்டார் போலிருக்கிறது'' என்ற ரோஜா பாலின் முகத்தைக் கவனித்தாள். உடனே, ''ஏன், அதைப் பற்றிப் பேச நீங்கள் விரும்பவில்லையா?'' என்றாள்.

''அது நாம் மறந்துவிட வேண்டிய விஷயம், ரோஜா.''

''ஓ! சரி...பால். நான் அதைப்பற்றிப் பேசமாட்டேன். கவலைப்படாதீர்கள். என்னால் அதை மறக்க முடியாது. ஆனால் அதைப்பற்றி வாயைத் திறக்கமாட்டேன் என்று உறுதி கூறுகிறேன்'' என்ற ரோஜா 'ஐஸ்' கட்டி ஒன்றை ஆரஞ்சுத் துண்டம் ஒன்றுடன் அமுக்கினாள்.

''நல்லது'' என்றான் அவன். சார்லஸ் என்ற பெயரை அவள் கவனமாகத்தான் குறிப்பிடாமல் இருந்திருக்கிறாள். 'நான் மறக்க முடியாது' என்றாள் ரோஜா...'என்னாலும் அதை மறக்க முடியாது' என்று எண்ணினான் பால். பிறகு அவளுடைய தம்ளரைப் பார்த்துவிட்டு, ''இன்னும் ஒன்று சாப்பிடுகிறாயா?'' என்று கேட்டான்.

அவள் தலையை ஆட்டினாள் ''இன்று நான் சாப்பிடும் கனிசமான சாப்பாடு இதுதான். ஓ! என்ன அருமையாக இருக்கிறது. மிஸ்டர் பிரௌன்லீ சொன்னது உண்மைதான். இது தான் எனக்குத் தேவையாக இருந்திருக்கிறது.'' அவள் கத்தியையும், 'ஃபோர்க்'கையும் கையில் எடுத்துக்கொண்டாள். அடுத்த பத்து நிமிஷங்களுக்குப் பேச்சு நின்றது.

இறுதியில், ''நீ ஏன் இங்குவர முதலில் மறுத்தாய்?'' என்று வினவினான் பால். அவர்களைப்பற்றிய வம்புப் பேச்சு குறித்து அவள் வேதனைப்பட்டாளோ? அதுமட்டுமேதான் காரணமோ? அதுவாகவே இருக்கட்டும் என்று அவன் எண்ணினான்.

''நான் வருவது உங்களுக்கு நல்லதில்லை.''

''எனக்கு எது நல்லது என்பதை நான் தீர்மானித்துக் கொள்ளுகிறேன், ரோஜா.''

''ஆனால், எங்களுடைய நிச்சயதார்த்தம் முறிந்ததற்கு நீங்கள்தான் காரணமென்று ஸ்காட் குற்றம் சாட்டுகிறார். சமீப காலங்களில் எங்களுக்குள் நடந்த ஒவ்வொரு விவாதத்திலும் அவர் உங்கள் பெயரை இழுக்காமல் இருந்ததில்லை.''

''அதில் அதிசயமில்லை. நாமும் அவனுக்குத் தக்க காரணங்களைச் சொல்லவில்லை'' என்றான் பால் மெதுவாக.

''அது உண்மை. ஆனால் அவர் அப்படி நம்புகிறார்.''

''நீ பயப்படுகிற மாதிரித் தோன்றுகிறாய்'' என்றான் பால். இதெல்லாம் எனக்குப் பிடிக்கவில்லை என்று அவன் எண்ணினான். ''ரோனா இப்படிக் சாட்சி தருவதை நான் என்றுமே பார்த்ததில்லை. எட்லீ என்னதான் சொல்லியிருக்கிறான்? அவன் என்ன செய்துவிட்டான்? இன்றுமாலை நான் அவன் பற்களை உடைத்திருக்க வேண்டும். ஒரு விவாதத்தைத் தீர்க்க அது புத்திசாலித்தனமான வழியில்லைதான்; ஆனால் ஒரு பாடம் கற்பிக்க அதுதான் திருப்திகரமான வழி.''

''எனக்கு பயமாகத்தானிருக்கிறது'' என்று அவள் எதிர்பாராத முறையில் ஒப்புக்கொண்டாள்.

''எதைப்பற்றி?''

அவள் அவனை நிமிர்ந்து நோக்கினாள். ''அதுதான் தெரியவில்லை.''

''எட்லீ உன்னைப் பயமுறுத்தினானா?''

அவள் அசைவற்று அமர்ந்தாள். இன்று ஸ்காட் ஒன்றும் பயமுறுத்தவில்லை. அவன் கோபந்தான் அளவுகடந்து போயிருந்தது. ''நீங்கள் எதற்கும் ஜாக்கிரதையாக இருங்கள். அவர் உங்களுடன் வீண் சண்டைக்கு வந்து, உங்கள் பற்களை உடைத்து, ஏதாவது செய்துவிட்டால்''—

பால் 'கபக்'கென்று சிரித்தான்.

''இது கேலியில்லை. ஸ்காட்டுக்கு முன்கோபம் உண்டு. அவர் இப்போது அளவற்ற கோபத்துடன் இருக்கிறார்.''

அவள் குரலில் மிதந்த வேதனையைக் கண்ட பால், தன் சிரிப்பை நிறுத்திக்கொண்டான். அவளுக்குத் தன்மீது சிரத்தை இருக்கிறதென்பதை அவன் நினைவுபடுத்திக்கொண்டான்; அவன் பற்களை உடைத்துக் கொண்டால் அவள் வேதனைப்படுவாள். ''நீ ஸ்காட்டைக் காதலிக்கிறாயா?'' என்று பால் அப்பட்டமாகக் கேட்டான்.

அவள் தலையை அசைத்தாள்.

''அப்படியானால் ஏன் நீ நிச்சயதார்த்தத்தை முறித்துக் கொண்டாய்?''

எதிரிலிருந்த காலித் தட்டுக்களை அவள் பக்கவாட்டில் தள்ளினாள். பிறகு சிறிது தயக்கம். ஆனால் உண்டிருந்த

உணவும், பானமும் அவளுக்குத் தைரியத்தை அளித்திருந்தன. ''முன்பு உங்களையும் நான் காதலித்தேன். இருந்தும் நமது நிச்சயதார்த்தம் நிலைக்கவில்லை. ஏன்? ஏனென்றால், நமது திருமணம் மகிழ்ச்சிகரமாக இருந்திருக்காது. நான் யாரை யாவது மணந்துகொண்டால், அது நிரந்தரமானதாக இருக்கும். மகிழ்ச்சியளிப்பதாகவும் இருக்கும். என்னுடைய இந்த இளமைக் கனவைமட்டும் நான் விட்டுக்கொடுக்க மாட்டேன்.'' அவள் அவனை நேராகப் பார்ப்பதைத் தவிர்த்தாள். தன் தொப்பியையும், கை உறைகளையும், பையையும் எடுத்துக்கொண்டு எழுந்திருக்க ஆரம்பித்தாள். ''நான் இப்போது முரட்டுத்தனமாகப் பேசிவிட்டதற்கு வருந்துகிறேன், பால், நான் போவது நல்லது.''

அவன் மேஜையைத் தாண்டி, கைகளை நீட்டி மெதுவாக அவளைப் பின்னால் தள்ளி அமர்த்தியபடி, ''இல்லை ரோனு. நேருக்கு நேர் இப்படிப் பேசுவதை நான் எதிர்நோக்கியிருப்பேன் என்பதை எப்போதாவது நீ நினைத்துப் பார்த்தாயா? உனது கடிதங்கள் எல்லாம் கண்ணியமாகவும், சம்பிரதாய முறையிலும் இருந்தன. முறிந்த நமது நிச்சயதார்த்தத்தைப் பற்றி நீ அதிகம் கவலைப்படவில்லையென்றே நான் எண்ணினேன். நீ இளமையுடனும், அழகுடனும் இருந்தாய்; உன்னை வெளியே அழைத்துச் சென்று, இன்பகரமாகப் பொழுதைக் கழிக்க உனக்கு ஒருவர் தேவையாக இருந்தது. லண்டனில் உன்னுடைய கடிதங்களைப் பெற்றபோது, நான் அப்படித்தான் நினைத்தேன்'' என்றான் பால் ஹேடன்.

''என்னைப்பற்றி அப்படியா நினைத்தீர்கள்?'' அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது. தொப்பியையும், பையையும், கையுறைகளையும் அவள் நழுவவிட்டாள்.

''கடிதங்களிலிருந்து சரியான சமாதானங்களை அறிந்து கொள்வது கடினம். பேசுபவரின் முகத்தைக் கவனிக்க முடியாத நிலையில் வார்த்தைகள் உணர்ச்சியற்றுத்தாம் தோன்றும்.''

அசைவற்று அவனையே நோக்கிக்கொண்டு அமர்ந்திருந்தாள் அவள். பிறகு ''ஆனால் அந்த நாட்கள் எல்லாம் இப்போது கழிந்து போய்விட்டன'' என்றாள்.

அவளைப் பார்த்தபடியே அவனும், ''ஆமாம்'' என்றான். அவன் வேறு ஏதாவது சொல்லியிருந்தால், அவள் எழுந்து போயிருக்கக்கூடும். அவன் தொடர்ந்தான்: ''பழைய நண்பர்கள் என்ற முறையில் நாம் இப்போது பேசிக் கொண்டிருக்கிறோம். அவ்வளவுதான், ரோனு. ஆனாலும், உன் கடிதங்களுக்கு ஓரிரு பின் குறிப்புக்கள் இருக்கவேண்டுமென்று நான் இன்னமும் விரும்புகிறேன். நாம் மணந்து கொண்டிருந்தால்

—எட்டு வருஷங்களுக்கு முன்பு—ஏன் அது மகிழ்ச்சிகரமாக இருந்திருக்காது?''

''நாம் மகிழ்வுள்ள தம்பதிகளாக வாழ்ந்திருக்கலாம். ஆனால் அந்த மகிழ்ச்சி நிலைத்து இருந்திருக்க முடியாது.''

''ஏன்....?''

''எனக்குப் பொறுமைப்படும் மனைவிமார்களைக் கண்டால் பிடிக்காது.''

அவன் வாயை இறுக்கிக்கொண்டான். ஆனால் அவனுடைய சாம்பல் நிறக் கண்கள் அவளைக் களங்கமற்று நோக்கின. ''நான் உன்னை அப்படியொரு நிலையில் வைத்துவிடுவேன் என்று நினைத்தாய்? இந்த வம்புப் பேச்சுக்கள் எல்லாம் உண்மையானதென்று நீ நம்புகிறாயா?''

அவள் முறுவலித்தாள். தோள் பட்டைக்கு மேலாகப் பார்வையைத் திருப்பி, அங்கே அமர்ந்திருந்த அந்த அழகிய நங்கையைப் பார்த்தாள். ''வம்பு தும்புகளை நான் இப்போது நம்புவதில்லை. ஆனாலும் ஒரு பெண்ணிடம் உங்களால் கடுமையாக 'இல்லை' என்று சொல்ல முடியாதென்றே நான் இன்னும் நம்புகிறேன். தேவையான சமயங்களில் கூட அவர்களிடம் அடித்துப்பேச உங்களால் முடியாதல்லவா?''

''ஒரு வேளை அது ஒரு பெண்ணுக்கு மட்டுமே சாத்தியமாக இருக்கலாம். நான் ஒரு முட்டாள்தான். என்னுடைய ஐம்பத்தைக் குறைகூறு, ரோனா. அது எனக்கு அதிகந்தான்.''

''ஓ, பால்!'' என்று அவள் கையை நீட்டி அவன் தோளைத் தொட்டாள். அவளது கருவிழிகளிலே குளுமை; அழகிய அதரங்களின் வளைவிலே ஒரு வேண்டுகோள். ''என் கடிதங்களுக்கு நீங்கள் பின்குறிப்பு வேண்டும் என்றீர்கள் இல்லையா? ஆமாம், அதையாவது நீங்கள் பெறவேண்டுமென்றே நான் நினைக்கிறேன். ஆனால் அதைச் சொல்லமுடியாத அளவுக்கு என்னிடம் அப்போது கர்வம் இருந்தது. உண்மையில் நீங்கள் என்னை மணக்க விரும்பவில்லையென்று எனக்குத் தெரியும். இல்லையெனில், கடல் கடந்து போகு முன்னமேயே நீங்கள் என்னை மணந்துகொண்டிருப்பீர்கள்.''

''அதனால்தான் நான் உன்னை மணந்து கொள்ளவில்லை என்கிறாயா?'' என்ற அவன் தலையை மெதுவாக அசைத்தான். கசப்பான கேலிப் புன்னகை ஒன்று அவனுடைய உதடுகளிலே தெளிந்தது.

''பின் ஏன் மணக்கவில்லை?''

''நான் போனபோது, 1942-இல், உன் வயதென்ன?''

''பதினெட்டு.'' அவள் அவனைக் கலக்கத்துடன் பார்த்தாள்.

''நான் அப்போது உன்னைவிட ஏழு வருஷங்களாவது அதிக வயதுள்ளவன். தவிர, நீ எந்த உறவினர்களை அப்போது நம்பியிருந்தாய்?''

அவள் அதிர்ந்து போனாள். ''ஏன்... பெக்கி'' என்றாள் மெதுவாக.

''அவளுக்குத் தன் குடும்பம் வேறு இருந்தது. தவிர, எனக்கு யார் உறவினர்கள் இருந்தார்கள்?''

''ஃப்ரெஸ்னோவில் ஓர் அத்தை; ஓரேகானில் ஓர் ஒன்று விட்ட சகோதரன்.''

''அவர்களிருவரும் என்னைப் பார்த்ததே கிடையாது. தவிர, எனது சிப்பாய்ச் சம்பளத்தை விட்டால் என்னிடம் வேறு என்ன பணமிருந்தது?''

''ஒன்றுமில்லை. ஆனால் அது ஒரு குறுக்கீடா, பால்?''

''1942-இல் இங்கிருந்து சென்ற சிப்பாய் தனக்கு என்ன எதிர்காலம் இருப்பதாக நினைத்திருப்பான்?''

மேஜைத் துணியின் மீது காஃபி ஸ்பூனால் கோடுகளை வரைந்து கொண்டிருந்தாள் அவள்.

''நான் உங்கள் மனத்தைப் புண்படுத்தியிருக்க வேண்டும், பால். அதற்கு வருந்துகிறேன். ஆனால் நான் நினைத்தது...'' அவள் வேதனை மிளிர்ந்த தனது அகன்ற கருவிழிகளால் அவனை நோக்கினாள்.

''அதை மறந்து விடு. ஆதியிலிருந்து அந்தம் வரை எல்லாவற்றிலுமே நான் தவறு செய்து விட்டேன். அதற்கேற்றதை நான் அடைந்தும் ஆயிற்று. என்னுடைய போலிக் கர்வத்தைச் சிறிதாவது அது அகற்றிவிட்டதென்றே நம்புகிறேன்'' என்றான் அவன் ஒரு கேலிச் சிரிப்புடன்.

அவள் சொன்னாள்: ''பிறருடைய எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் நாம் நன்கு அறிந்து கொண்டு விட்டதாக நினைப்பது எவ்வளவு விசித்திரமானது...ஆனாலும் நாம் என்னவோ உண்மையில் அப்படி அறிய முடிவதில்லை. ஜனங்கள் ஏன் எதையும் நன்றாக விவரித்துக் கூறக்கூடாது? நாம் ஒன்றும் புரியாமல் திகைக்கும்போது ஏன் அதிகமாகக் கேள்விகளைக் கேட்கக்கூடாது?''

''ஆனால் அக்கேள்விகளுக்கெல்லாம் எப்போதுமே நேர்மையான பதில்கள் கிடைக்குமா? அப்படி நேர்மையான பதில்களைத் தரும் அளவுக்கு நம்மில் எத்தனை பேர் நம்மையே சரியாகத் தெரிந்து கொண்டிருக்கிறோம்? நேர்மையற்றது என்று நிச்சயமாகத் தெரிந்தவைகளைக்கூட நாம் நேர்மையென்று தோன்றச் செய்ய முயற்சிக்கிறோம். ஆனால், முயற்சிக்கும், சாதனைக்கும் மிகுந்த வித்தியாசம் இருக்கிறது.''

''இது ஒரு தனிமையான உலகம், பால். அப்படியானால் நாம் வேறு ஒருவரையுமே உண்மையாக அறிந்து கொள்ள முடியாதா?''

''ஒருவேளை அது கஷ்டப்பட்டு மட்டுமே தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கலாம்!''

''வலியினால் மட்டுமே என்று சொல்கிறீர்களா? உடல்வலி யில்லை, நமக்கு இங்கும் அங்கும் ஏற்படுகிறதே, அந்த வலி—'' என்று தன் இதயத்தையும் முன் தலையையும் தொட்டுக் காட்டினாள் ரோனா. அவளுடைய அபிநயம் சாதாரணமாகத் தோன்றினாலும், அந்தக் கேள்வி மிகவும் பரிதாபமாகவே இருந்தது.

சில வினாடிகளுக்கு அவன் ஒன்றும் பேசவில்லை. அவள் முகத்தில் திடீரென்று தோன்றிய ஆவலையும், நம்பிக்கையையும், அவன் கவனித்துக் கொண்டிருந்தான். அவளுடைய முகம் மீண்டும் ஒளி விட்டுப் பிரகாசித்தது. ''ஆமாம். அது ஒன்றே வழியென்று நினைக்கிறேன்'' என்றான். பிறகு அவன் பார்வை கதவண்டை திரும்பியதும் அப்படியே நிலைத்தது.

அப்போது உள்ளே நுழைந்தவர் ரோஜர் பிரௌன்லீ. ஒரு கணம் நின்று அவர் அந்த அறை முழுவதும் பார்வையைச் சுழற்றினார். பாலையும் ரோனாவையும் கண்டதும் நேராக அவர்களிடம் நடந்தார்.

''அவரும் இங்கே நம்முடன் சேர்ந்து கொள்வாரென்று எனக்குத் தெரியாது'' என்றாள் ரோனா வியப்புடன். ஆனாலும் அவளுக்கு மகிழ்ச்சிதான். நிம்மதியுங்கூட. ஏனெனில் பிரௌன்லீ வேதனையற்று மகிழ்ச்சிகரமாகவே காட்சியளித்தார்.

''அவர் சொன்னபடி நீ நன்கு சாப்பிடுகிறாயா என்று கவனிக்க வந்திருக்கிறாரோ என்னவோ!'' என்று கூறிய பால் அவரை வரவேற்க எழுந்தான்.

''உட்காரு பால், வெறுமே கவனிக்க வந்தேன்.'' ரோனாவின் பக்கத்தில் அமர்ந்த அவர், தானும் அவர்களுடன் சிறிது காஃபி அருந்துவதாகத் தெரிவித்தார். சம்பாஷணை சுலபமாகச் சென்றது.

ஆனால் பால் இன்னமும் கதவையே கவனித்துக்கொண்டிருந்தான். அப்படி அவன் எதிர்பார்த்தது போலவே, ஓர் இளைஞன் உள்ளே நுழைந்து பானப் பகுதிவரைச் சென்றான். அப்புதிய ஆள் நீல ஸூட்டும், சாம்பல் நிறத் தொப்பியும் அணிந்திருந்தான். அவனுடைய முகம் மெலிந்து, சந்தேகிக்க முடியாதபடி இருந்தது. அடர்த்தியான கரிய புருவங்கள், கறுத்த சிகை. பிறகு பீருக்காகக் காத்திருந்த அவன் மெதுவாகப் பார்வையை நாற்புறமும் சுழற்றினான். பிரௌன்லீ அமர்ந்திருந்த இடத்திற்கு வந்ததும் அப்பார்வை அப்படியே

நிலைத்தது. இறுதியில் அவன் பீரைக் குடித்ததும் மெதுவாக நடந்து ஆண்கள் கைகழுவும் இடத்தைநோக்கிச் சென்றான். பிரௌன்லீயை நிமிர்ந்து நோக்கிய பால், அவர் முறுவலிப்பதைக் கண்டான். பால் நினைத்தது சரிதான். கைகழுவும் இடத்திலிருந்து திரும்பிய அந்த இளைஞன் இவர்களைச் சாதாரணமாகத்தான் தாண்டிச் சென்றான். ஒரு முழு விநாடி அவன் ரோனாவை நன்றாக உற்று நோக்கினான்.

அவன் நல்ல கவனிப்பாளனாகத்தான் தோன்றுகிறான் என்று எண்ணினான் பால். அவனுக்கு வலிய புஜங்களும் இருந்தன. இந்த எஸ். பி. ஐ. போலீஸ் வேவுகாரனின் பாதுகாப்பு அநாவசியமானதாக இருக்கலாம்; எப்போதும் கவனமாக இருக்கும் ரோஜர் பிரௌன்லீயின் ஜாக்கிரதையான எண்ணத்திற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகமட்டுமே இருக்கலாம். ஆனாலும் அவன் அடுத்த ஓரிரு வாரங்களுக்கு ரோனாவைக் கவனித்துக்கொள்வான் என்ற நினைவு நிம்மதியைத்தான் தந்தது.

''நீ நண்பர் யாருடனாவது வசிக்கிறாயா, மிஸ் மெட்ஃபோர்டு?'' என்று வினவினார் பிரௌன்லீ.

''இல்லை. எனக்குச் சொந்தமான சிறிய விடுதி இருக்கிறது.''

''இன்றிரவு நீ ஏன் பெக்கி, ஜான் இவர்களுடன் தங்கக் கூடாது?'' என்றான் பால்.

''இல்லை பால். எனக்கு இப்போது ஒன்றுமில்லை. நான் அவர்களுக்குத் தொந்தரவு கொடுக்கவேண்டியதில்லை.''

''பெக்கியை இன்றிரவு பார்ப்பது ஒரு நல்ல யோசனை'' என்று விடாப்பிடியாகக் கூறினான் அவன். ஏனெனில், சார்லஸ் ரோனாவின் பெயரை வெளியிட்டிருந்தானானால், அவளுக்குக் கடிதம் அனுப்பியதைக் கூறியிருந்தானானால், இன்றிரவே அவர்கள் ரோனாவின் வீட்டைச் சோதனை போட முயலக் கூடும்.

ஆனால் ரோனா தலையை அசைத்தாள். நிச்சயதார்த்த முறிவைப் பற்றி இன்றிரவு பெக்கி, ஜான் இவர்களிடம் நான் சொல்லமுடியாது என்று துன்பத்துடன் எண்ணினாள் அவள். நாளை, மறுநாள் பார்க்கலாம். ''பெக்கிக்கு என் வரவினால் கவலைதான் கிடைக்கும். ஜானும் வேதனைப்படுவார். அவருக்குச் சொந்தக் கவலைகள் எவ்வளவோ இருக்கின்றன. நான் அவற்றை அதிகப்படுத்தத் தேவையில்லை'' என்றாள் அவள்.

பால், பிரௌன்லீயைப் பார்த்தான். 'கவலைப்படாதே, இன்றும் நாளையும் அவளுக்கு நல்ல பாதுகாப்பு இருக்கிறது' என்று சொல்வதுபோல் அவர் தலையை அசைத்தார். அதே சமயம், ஏன் ரோனா இன்றிரவு பெக்கியையும் ஜானையும் பார்க்க விரும்பவில்லை என்றும் பால் புரிந்துகொண்டான்.

ஆமாம், தம்பதிகளான அவர்கள் தனிப்பட்ட இரு நபர்கள் அல்ல; ஒருவரையொருவர் புரிந்துகொள்ளக் கற்றுக்கொண்டவர்கள் அவர்கள். ஒருபோதும் இந்த உலகம் தனிமையான இடமென்று அவர்கள் நினைக்கமாட்டார்கள். தனிமையைப் பற்றிப் பேசும்போது ரோனு இதைத்தான் சொன்னுளோ? இதைத்தான் ரோனு விரும்பினுளோ?

பால் சொன்னுன்: ''அவர்கள் உன்னை இன்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கலாமென்று சொன்னேன். நீ ஏன் வரவில்லையென்று அவர்கள் வியப்படையவும் கூடும். நான் டெலிபோன் செய்து, அவர்களிடம் நீ சௌகரியமாய் இருப்பதாகக் கூறட்டுமா?''

ரோனு தலையை ஆட்டினுள். பிறகு, ''எனது நிச்சயதார்த்த முறிவு பற்றியும் தெரிவித்து விடுகிறீர்களா?'' என்ருள். அது சுலபமான வழியென்று அவளுக்குத் தோன்றியது.

டெலிபோன் செய்துவிட்டுத் திரும்பிய பால், ரோஜர் பிரௌன்லீ போவதற்கு எழுந்துவிட்டதைக் கண்டான். அவர் ரோனுவுக்குத் தமது முகவரியையும், டெலிபோன் எண்ணையும் கொடுத்துக் கொண்டிருந்தார். ''ஓ! நான் மறந்தே போய்விட்டேன். இன்று மாலை நாம் பேசிய விஷயங்களைப் பற்றி நாமெல்லோரும் இனிக் கவலைப்படத் தேவையில்லை. எல்லாம் சமாளிக்கக்கூடிய விஷயந்தான். நீயும், நானும், பாலும் செய்வதற்கு ஒரே ஒரு வேலைதானிருக்கிறது—அதாவது மூச்சு விடாமல் சும்மா இருப்பது. நாம் ஒருவிதக் கருத்தையும் வெளியிடக்கூடாது; பத்திரிகைகளில் ஏதாவது தலையங்கங்கள் வந்தால்கூட. என்ன, மிஸ் மெட்ஃபோர்டு, சரிதானே?'' என்று வினவினுர் பிரௌன்லீ.

''அப்படியே.''

''நல்லது'' என்று முறுவலித்தபடி அவர் அவளுடைய கைகளைக் குலுக்கியவிதம் பால் ஹேடனை வியப்பில் ஆழ்த்தியது. ''நீ மிஸ் மெட்ஃபோர்டை ஜாக்கிரதையாக வீட்டில் விட்டுச் செல்கிருயா?'' என்று பாலைக் கேட்டார் அவர்.

''எல்லாம் பத்திரமாகச் செய்கிறேன்'' என்ற பால், அவர் கதவை நோக்கிச் செல்வதைக் கவனித்தான். பிறகு ரோனுவைப் பார்த்து, ''நீ ஒரு நண்பரைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிருய்'' என்ருன்.

''அவர் நல்ல நண்பர் என்றே நினைக்கிறேன். அவருக்கு எதிராக இருப்பதைவிட, அவர் கட்சியில் இருப்பதே எனக்கு விருப்பம். ஆமாம், அவர் நம் கட்சியில் இருப்பது குறித்து எனக்குச் சந்தோஷமே.''

''நம் கட்சி....! என்ன சொல்லுகிருய்?''

அவள் குரலைக் குறைத்து முணுமுணுத்தாள்: ''நம் கட்சி என்ருல் சார்லஸின் கட்சி. ஒருவருக்கும் தீங்கிழைக்காத

சாதாரண மனிதனின் கட்சி. எவன் அங்குமிங்கும் தள்ளப் பட்டு, இறுதியில் அதைப் பொறுக்கமுடியாமல் திணறு கிருனே அவன் கட்சி. ஆமாம், அதுதான், மற்றவர்களை அங்குமிங்கும் தள்ளுபவர்கள், தள்ளத் திட்டமிடுபவர்கள் ஆகியோருக்கு எதிராளி நான். சரி....பெக்கி, ஜான் இவர் களிடம் என் சேதியைச் சொன்னீர்களா?''

''சுருக்கமாக.''

''அவர்கள் ஏமாற்றத்தை வெளியிட்டார்களா?''

''இல்லை....ஜானுக்கு எட்லீயின்மீது கோபம் என்று தோன்றுகிறது.''

''ஏன்....?''

ஏதோ நடந்திருக்கிறதென்று நினைக்கிறேன். நேற்றிரவு ஆபீசில் அதிக நேரம் வேலை செய்ததாக எட்லீ சொன்ன புளு கைப் பற்றி ஜானையே ரோனுவிடம் சொல்லச் சொல்லலாம் என்று நினைத்தான் பால். பிறகு அவன் சொன்னுன்: ''ஜான் உனக்குத் தன் அன்பைத் தெரிவிக்கச் சொன்னுர். வாழ்த்துக்களையுங்கூட.''

'சட்'டென்று நிமிர்ந்தாள் ரோனு. ''பால்!'' என்ருள் கோபத்துடன். அவள் மனது புண்பட்டிருந்தது. ''ஜான் ஒன் றும் அப்படிக் கூறியிருக்கமாட்டார்.''

தன் மடத்தனத்திற்காக நொந்துகொண்டான் பால். ''வருந்துகிறேன், ரோனு.'' உண்மையில் எட்லீயைப்பற்றிய ஜானின் பேச்சு திருப்பிச்சொல்ல முடியாதபடி மோசமாகத் தானிருந்தது. பெண்களே விசித்திரப் பிராணிகள் என நினைத் தான் அவன். பிறகு, ஒரு மணி நேரத்துக்கு முன், தான் ஸ்காட்டின் தாடையில் அடித்துவிட்டு வந்ததைச் சொன்னுல், அவள் என்ன சொல்வாள் என்று அவன் வியந்தான். அப் போது பெண்களுக்கே உரிய முழு அநுதாபமும் அவளிடம் தோன்றி, அவள் நேராக ஸ்காட்டின் விரித்த கரங்களை நோக்கி ஓடியிருக்கவும் கூடும்.

''உண்மையில் ஜான் என்ன சொன்னுர்?'' அவள் வின வினுள்.

''எட்லீ இன்று மாலையிலிருந்து பல தடவைகள் டெலி போன் செய்திருக்கிருன். முதலில் எல்லாம் பெக்கி பேசியிருக் கிருள். ஜானைக் கிட்டத்தில் வராதபடி அவள் தடுக்கவும் முயன்றிருக்கிருள். கடைசியாக ஏழரை மணிக்கு ஜான் போனை எடுத்து விட்டான்.''

''அப்புறம்?''

''அவ்வளவுதான்.''

''நான் சௌகரியமாய் இருப்பதாக நீங்கள் பெக்கி, ஜான் இவர்களிடம் கூறினீர்களா?'' அவள் கவலையுடன் கேட்டாள்.

''ஆமாம்'' என்ருன் பால்.

''நான் சரியாக இருக்கிறேன்.''

''நிச்சயமாக'' என்ருன் அவன். என்னைப் போலவே நீ குதூகலமாக இருக்கிருய் என்றும் நினைத்தான்.

ரோஞ தொப்பியை மாட்டிக் கொள்ள ஆரம்பித்தாள்.

''பால், இன்றிரவு நீங்கள் செய்த உதவிக்கு நான் எப்படி நன்றி கூறுவேன்?''

''நான் ஒன்றும் செய்யவில்லை. உன்னை என்னுடன் சாப்பிட வரத் தூண்டினேன், அவ்வளவு தான்.''

''நான் வந்திரா விட்டாலும் உங்களுக்குத் துணை கிடைத்திருக்கும். அவள் அழகாகத் தானிருக்கிருள்'' என்று முறுவலித்த ரோஞ, நண்பர்கள் சிலருடன் உணவு கொண்டிருந்த அப்பெண்ணின் பக்கம் பார்த்தாள்.

''தனிமையில் திண்டாடுபவர்களில் அவள் ஒருத்தி. பன்பிச் சண்டையில் அவள் கணவன் கொல்லப்பட்டு விட்டான். அவளுக்கு ஒரு குழந்தை இருந்தது. அதுவும் இரண்டு வருஷங்களுக்குப் பிறகு இறந்து விட்டது. சிறிது பணத்தைச் சேமித்துக் கொண்டு அவள் நியூயார்க்கிற்கு வந்தாள். சித்திரங்கள் தீட்டுவதற்கு மாதிரியாக இருந்து சம்பாதிக்க நினைத்தாள். ஆனல் அதற்கு அவள் அவ்வளவு ஏற்றவள் இல்லை. அதனல் அவள் இப்போது ஒரு தொப்பிக் கடையில் வேலை செய்கிருள். இங்கே அருகில்தான் வசிக்கிருள். பென்னி அவளைச் செய்யும் கிண்டல்கள் எல்லாம் அவளுக்குப் பிடிக்கிறது. இங்கு வருபவர்களுக்குள் அவளைப் பென்னிக்குமிகவும்பிடிக்கும். இத்தனைக்கும் அவன் ஒரு கிளாஸ் பீர்தான் வாங்குகிருன். அவனுடைய மனைவிக்கான தொப்பிகளைச் செய்து கொடுப்பதால் அவளுக்கு இங்கே உணவு இலவசந்தான். அவளை முதன் முதலில் நான் பார்த்தபோது, 'வாழ்க்கை என்பது பிரிந்த ஒரு முறுவலுக்குள் அடங்கியிருப்பதுபோல் இவள் நினைக்கிருளோ', என்று வியந்ததுண்டு'' என்று நிறுத்தினுன் பால் ஹேடன்.

பிறகு, அவன் வெளியே புறப்பட்டான். ரோஞவும் பின் தொடர்ந்தாள். போகும்போது, அடக்கமும் கவலையற்ற தோற்றமும் உடைய அந்த அழகியைப் பார்த்துக் கொண்டே சென்ருள் அவள்.

லெக்ஸிங்டன் அவென்யூவிற்கு வந்ததும், ''இன்றிரவு எனக்கு நீங்கள் எல்லையற்ற உதவி செய்திருக்கிறீர்கள், பால், நன்றி'' என்று ரோஞ கூறினுள்.

அவர்களுக்குப் பின்னல் முப்பதடி தூரத்தில் நீலக் கோட்டும், சாம்பல் நிறக் தொப்பியும் அணிந்த ஓர் இளைஞன் அவர்கள் செல்லும் திசையிலேயே தொடர்ந்து வருவது போல் இருந்தது.

மூன்றும் பாகம் • இணைப்பு

அத்தியாயம் 18

புதன், வியாழன், வெள்ளி— இம்மூன்று நாட்களிலும் வானம் மூட்டமாக இருந்தது. வசந்த காலமேயானாலும் இம் மூன்று நாட்களும் மாரிக்கால நாட்கள் போலவே தோற்றின. எல்லோரும் அலுத்துக் கொண்டார்கள்.

ரோஜுவும் அலுத்துக் கொண்டாள். இவ்வாரத்தில் முதல் மூன்று நாட்களும் இருந்ததைப் போலவே பின் வந்த மூன்று நாட்களிலும் ஸ்காட்டிடமிருந்து யாதொரு தகவலும் இல்லை. எனவே இந்த மூன்று நாட்களுங்கூட அவளுக்கு மந்தமாகவே கழிந்தன. உறங்குவது, உண்பது, வேலை செய்வது, கவலைகளை மறைத்துக் கொண்டு சிரித்த முகத்துடன் மற்றவருடன் பழகுவது, இப்படியே இந்த நாட்கள் சென்றன.

ரோஜு மெட்ஃபோர்டு தனது காதல் உறவை முறித்துக் கொண்ட சேதி எப்படியோ 'ட்ரெண்டு' ஆபீஸ் முழுவதும் பரவி விட்டது. மற்ற மர்மச் சேதிகளைப் போலவே இதையும் யார் முதன் முதலில் கிளப்பினார்கள் என்று ஒருவருக்கும் தெரியாது. ஆனால் அது நம்பக் கூடியதென்றே தோற்றியது. எட்லீயின் மோதிரத்தை ரோஜு அணிந்திருக்கவில்லை; அவள் காரியமே கண்ணுக ஆபீசில் வேலை செய்கிறாள், பால் ஹேடனும் அவளை விட்டு ஒதுங்கிச் செல்வதை நிறுத்தி விட்டான்.

அன்பு உள்ளம் படைத்த திருமதி ஹார்ஷிக்கு என்ன நடந்து விட்டதென்றே புரியவில்லை. ரோஜு வாழ்வில் முன்னேறி வருகிறாள்; இருபத்து ஆறிலிருந்து இருபத்தேழாவது வயதை அடைந்து விட்டாள். இக்காலங்களில் இருபத்தேழு வயதான மாதர்கள் இருபது வயது இள நங்கைகள் போல் தான் தோற்றமளிக்கிறார்கள். ஆனாலும் உண்மையில் அவர்கள்

இளமையைத்தாண்டிய மாதர்களே ஆதலால் இரண்டாவது நிச்சயதார்த்தத்தைக் கூட முறித்துக் கொள்வது அத்தனை சரியில்லை.

''அதுவும் நிச்சயதார்த்தம் நடந்து இவ்வளவு வருஷங்களுக்குப் பிறகா முறித்துக் கொள்வது?'' என்றாள் மிஸ் கட்மென். ரோனாவை மலர்ச்சியுறச் செய்வதற்காக, அடிக்கடி தன் பிரச்னைகளுடன் அவளிடம் சென்று வந்தாள். அவளுடைய தற்போதைய பிரச்னை காலை உணவு கொள்ளும் இடத்தை எப்படி அமைப்பது என்றுதான். அதைப் பற்றி ரோனாவிடம் கேட்டபோது, அவளுக்கு எரிச்சலாக இருந்தது. இருப்பினும் நிதானித்துக்கொண்டு, தற்போதைக்குத் தன் கவனமெல்லாம் ரோமானிய ஊற்றுக்கள், சலவைக்கல் தரைகள், இவற்றின் மீதே இருப்பதாகக் கூறி விட்டாள்.

''பாவம், ரோனா மிகவும் வருந்திக் கொண்டிருக்கிறாள்'' என்று திருமதி ஹர்ஷியிடம் கூறினாள் மிஸ் கட்மென். ''வாழ்வில் மூன்று வருஷங்களை ஒரு மனிதனுக்கு அளித்து விட்டு, பிறகு அவனை மறுப்பதென்றால் எவ்வளவு சிரமம்!'' கட்மெனின் இப்பேச்சு டைப்பிஸ்டுகள் ஆபீசிலும், முகம் கழுவும் அறையிலும், ஆண்களின் தீய குணங்களைப் பற்றிய நீண்ட விவாதத்தில் முடிந்தது. ஆனால், ஒவ்வொரு பெண்ணும், நல்ல வேளையாகத் தனது காதலன் அம்மாதிரி இல்லையென்று சமாதானம் செய்துகொண்டாள்.

கலை இலாகாவைச் சேர்ந்த ஹேரி ஜிம்சன் சொன்னான்: ''பில், ரோனா நம்மை விட்டுப் போய்விட மாட்டாளென்று தெரிகிறது. அப்படியானால் உன் பதவி உயர்வதற்கான வாய்ப்பும் போய்விடும்.'' பில் ஆர்னிம் முன்பே இதைப் பற்றி எண்ணமவில்லை. ஆனாலும், ''பாவம், அவள் சிரமப்படுகிறாள்'' என்று கூறிவிட்டுத் தன் வேலையில் முனைந்தான்.

ஹேரி ஜிம்சன் தன் மனைவி, சிநேகிதி, தன் கடன்கள் முதலியவற்றைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தான். ''இங்கு ஒன்றும் நல்ல எதிர்காலம் இல்லையென்றே தோன்றுகிறது'' என்றான் அவன். இந்தப் பெண்கள், ஒன்று ஆண்களின் வேலைகளைப் பறித்துக் கொள்கிறார்கள்; அல்லது, ஆண்கள் சம்பாதிக்கும் எல்லாப் பணத்தையும் உறிஞ்சிக் கொண்டு விடுகிறார்கள். இச் சிந்தனையைத் தொடர்ந்து, ''திடீரென்று இங்கிருந்து கிளம்பிச் சென்று, ஸான்ஃப்ரான்ஸிஸ்கோவில் ஏதாவது முயற்சி செய்யலாம் என்றே தோன்றுகிறது. அது நல்ல நகரம், நாகரிகப் பட்டினம். இங்கே நியூயார்க்கில் யந்திரங்களைத் தவிர வேறொன்றுமில்லை'' என்றான் அவன். அப்போது அவன்

பார்வை கோபத்துடன் ரோனுவின் அறையை நோக்கித் திரும்பியது. அவளுடைய கவலைகள் அவளை வதைப்பதாகத் தெரியவில்லை. அவள் தீவிரமாகத் தன் வேலையில் ஈடுபட்டிருந்தாள். இவளும் மற்றொரு யந்திரம். பெண்களுக்கு உண்மையான உணர்ச்சிகளே இல்லை.

ஆர்னிம் சொன்னான்: ''உன் வேலையைக் கவனி, ஹேரி. இல்லையெனில் அந்தக் கிழவர் பர்னெட் உன் மேல் பாய்ந்து விடுவார்.''

ஹேரி ஜிம்சன் தலையை அசைத்தான். பிறகு இன்னும் ஒரு சிகரெட்டைக் கொளுத்திக்கொண்டு, இந்த உலகத்தையே வெறுப்பவன் மாதிரி முகத்தைச் சுளித்துக் கொண்டான். நியூயார்க்கிலே சீதோஷ்ண நிலை கூடப் படுமோசமாகிவிட்டது. அவனைப் போல் கவலைகளால் சூழப்பட்ட யாரால் தான் வேலை செய்ய முடியும்? பெண்கள் எல்லோருமே வெளியே பாசாங்குடன் நடந்து கொண்டு விடுகிறார்கள். மறுபடியும் அவன் ரோனுவின் அறைப்பக்கம் திரும்பி நோக்கினான். பெண்கள் வேலை செய்வதைப்போல் நன்றாகத்தான் நடிக்கிறார்கள். காதல் விஷயத்திலும் அப்படித்தான். அவன், கைச் சிகரெட்டை எறிந்து விட்டு, மற்றொன்றைப் பற்ற வைத்துக் கொண்டான். பிறகு தன் காதலியைப் பற்றி நினைத்துக் கொண்டே பென்சிலை எடுத்தான். உண்மையிலேயே அவள் அவனுடைய மனைவியைக் காணச் செல்லப் போகிறாளா? இல்லை, அதுவும் அவளுடைய நட்பின் ஒரு பகுதியா?

★ ★ ★

ஆனால் ரோனுவின் வேலை பாசாங்கு இல்லை. தன்னைப் பற்றி நினைத்து அல்லல்படுவதைத் தவிர்க்க, அது அவளுக்குத் தேவையாக இருந்தது.

செவ்வாய்க்கிழமை இரவு அவள் ரோஜர் பிரௌன் லீயுடன் டாக்ஸிக்குள் அமர்ந்தபோது, ஸ்காட் அவளைக் கடைசியாகப் பார்த்தான். அப்போது அவனுக்கு அவளுடைய பதில் புரிந்திருக்கும். புதனும், வியாழனும் மறைந்து, வெள்ளிக்கிழமை முடியும் சமயத்தில், அதைத்தான் நானும் விரும்பினேன் என்று அவள் தனக்குள் சொல்லிக் கொண்டாள். ஆனால் ஸ்காட்டைப் பற்றி எண்ணும் பழக்கத்தை நிறுத்துவது சிறிது சிரமமாகவே இருந்தது. அதேமாதிரி அவனுக்காகக் காத்திருப்பதையும், ஒவ்வொரு தடவை டெலிபோன் ஒலிக்கும்போது அது ஸ்காட்டாக இருக்கும் என்று நினைத்து எழுந்திருப்பதை நிறுத்துவதும் சற்று சிரமமாகவே இருந்தது. இவற்றால், அவள் தன்னை வேலையில் மூழ்கடித்துக்கொள்ள முயன்று வந்தாள்.

அது அவ்வளவு எளிதாயிருக்கவில்லை. அவள் மனதில் இருவிதச் சிந்தனைகள் போராடிக் கொண்டிருந்தன. அவளுடைய கோபமும், பங்கமடைந்த சுயமதிப்புங்கூடத் தணிந்து விட்டன. ஆனால் இரக்கம், வருத்தம், காதல் பாதையில் மீண்டும் திரும்பி விடக்கூடாது என்ற தற்காலிக வெறுப்பு, ஆகியவைதாம் அவளிடத்தில் மிஞ்சியிருந்தன. விசித்திரமான நினைவுகளும், இவையெல்லாம் மடத்தனமானது, வேண்டாதது என்ற ஓர் உணர்வும் இவையெல்லாம் தடுக்க முடியாதவை என்ற ஓர் எண்ணமுந்தான் அவளை ஆட்கொண்டிருந்தன.

ஒரு வேளை ஸ்காட் அவளைக் காணத் திரும்பி வந்திருந்தால், ரோனா நடந்தது யாவையும் மறந்து விட்டிருக்கலாம். ஆனால் ஸ்காட்டைக் காதலித்த உண்மையை மட்டும் அவளால் மறக்க முடியாது. மற்றப் பெண்களைப் போலவே தான் செய்த முடிவு சரிதானா என்று அவள் மனம் குழம்பிக் கொண்டிருந்தாள். ஆனால், கடைக்குச் சென்று, வாங்கிய சாமான் நன்றாக இல்லையென்று திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு ஒன்றை மாற்றிக் கொள்ளும் விஷயமில்லை இது. வாழ்க்கையின் போக்கையே நிர்ணயிக்கும் பிரச்னை; ஒரு தீர்மானம் செய்து விட்டால், அதை எளிதில் மாற்ற முடியாது.

★ ★ ★

ஸ்காட் எட்லீயும் ஓர் உணர்ச்சிப் போராட்டத்தில் தத்தளித்துக் கொண்டு தானிருந்தான். ஆனால் அவனுடைய மனப் போராட்டம் அவ்வளவு குழம்பியிருக்கவில்லை. காரணம், அவனால் தன் மனக் கசப்புகளை நேராக ரோனாவின் மீதும், பால் ஹேடனின் மீதும் திருப்ப முடிந்தது. மிஞ்சியிருந்த கோபத்தை அவன் நிகோலஸ் ஆர்பெனுக்காக வைத்திருந்தான். ஆர்பெனுடைய தீர்மானங்கள் சரியானவை; சரியாகத்தானிருக்க வேண்டும். அவற்றைத் துருவி நோக்குவதில் பயனில்லை. இருந்தும், அவன் ரோனாவை இழந்ததற்கு ஆர்பெனின் தவறுதான் காரணம். சில மாதங்களாகவே ஆர்பெனின் குறுக்கீடு இருந்து வந்திருக்கிறது. அது எதற்காக? முடிவில் ஒன்றும் பயனில்லை. ஆர்பெனின் முடிவைக் கட்சிக் கமிட்டி மாற்றி விட்டது. ஆனால் அதற்குள் ரோனாவுக்குச் சந்தேகங்கள் அதிகமாகி விட்டன. தன் திருமணத்திற்குக் குந்தகம் வருகிறது என்பதை அவள் உணர்ந்து விட்டாளோ? அல்லது கடந்த மாதங்களில் தங்களுக்கு ஏற்பட்ட இடையூறுகளையெல்லாம் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ஹேடனுக்காகக் காத்திருந்தாளோ?

இப்படியாகக் குற்றங்களை யெல்லாம் ஹேடனின் மீதே எட்லீ திருப்பினான். ரோஹாவின் மீதும் கூடத்தான். அவள் அவனுக்கு துரோக மிழைத்து விட்டாள். அவள் தேவைப் படும் சமயத்தில் அவனை விட்டுப் போய்விட்டாள். செவ் வாய்க்கிழமையன்று அவன் ஐந்தாவது அவென்யூவில் அவளுக்காகக் காத்திருந்தபோது அவள் யாரோ புதிய மனி தருடன் போனதைத்தான் காண முடிந்தது. தவிர அவளைப் பின்தொடரவும் முடியாமல் இந்த ஹேடன் தடுத்து நிறுத்தி விட்டான். அவமானம்! ரோஹா அவனை ஒரு முட்டாள் ஆக்கி விட்டாளே!

ஆனால் அவனை முட்டாளாக்குவதற்கு ரோஹாவுக்கு இனியும் வாய்ப்பில்லை. ஏன், வேறு எந்தப் பெண்ணுமே இனி அவனை முட்டாளாக்க முடியாது. அவனுக்கு அவனுடைய வேலையிருக் கிறது. இப்போதிலிருந்து இனி அவன் அதைப்பற்றி மட் டுமே நினைப்பான். ஆர்பெனுக்கு அது மகிழ்ச்சி தரும் என்று கசப்புடன் எண்ணினான் ஸ்காட் எட்லீ.

ஆர்பென்......ஆர்பென் போட்ட திட்டம் மாதி ரியே எல்லாம் எப்படி நடக்கிறது? அவன் ஒன்றும் திட்ட மிட்டு இப்படிச் செய்யவில்லை. அப்படி எண்ணுவதுகூட மடத் தனம். இருந்தும் இப்படி நடந்து விட்டது. ரோஹாவைப் பற்றி ஆர்பெனுக்கு எப்போதுமே பொறாமை உண்டு. அது தான் முழு உண்மை. ஆர்பெனின் எதிர்ப்புக்கும், குறுக் கீட்டிற்கும் அதுதான் காரணம். அவனுடைய மற்ற விரி வுரைகள் எல்லாம் வெறும் நொண்டிச் சமாதானங்கள். ஆனால், ரோஹா விசுவாச முள்ளவளாகவும், துரோகமிழைக் கத் திட்டமிடாதவளாகவும் இருந்திருந்தால், வெளியிலிருந்து வந்த எந்தக் குறுக்கீடும் பலனற்றுப் போயிருக்கும். இல்லை, பலவீனம் ரோஹாவிடந்தான் இருக்கிறது. அப்படியானால் ஆர்பெனை ஏன் குறை கூற வேண்டும்?

ரோஹா எனக்கு இப்படிச் செய்வாளென்று யார் நினைத் திருக்க முடியும் என்று கோபமும், மனவலியும் மிஞ்ச வியந் தான் ஸ்காட்.

''அவளை என் வாழ்விலிருந்து ஒதுக்கி விடுவேன்; அதற்கு எனக்கு மனத் திடம் உண்டு'' என்று எண்ணினான் அவன். இந்த நிமிடத்தில், இப்போதே, நடந்ததை மறந்து விட வேண்டும். எல்லாத் தவறுகளும் மனக் கசப்புக்களும், சுய வேதனைகளும், ஏமாற்றங்களும் முடிந்து விட்ட. இத்தரு ணத்திலேயே புதிய எதிர்காலம் ஒன்று தொடங்குகிறது.

நான் விரும்பும் வகையில்தான் அந்த எதிர்காலம் இருக் கும். இப்போது எனக்கு அதைப் பற்றித்தான் நினைவு.

அத்தியாயம் 19

வெள்ளிக்கிழமை காலையில் ஆர்பென், ஸ்காட் எட்லீக்கு டெலிபோன் செய்து, ''இன்றிரவு ஆட்டத்திற்குப் போக எனக்கு டிக்கெட் கிடைக்கவில்லை.'' என்றான்.

''அட கஷ்டகாலமே!'' என்றான் எட்லீ. அதாவது, அன்றிரவு தெல்மாவின் விடுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'மீட்டிங்' நடக்காது. அதில் அதிசயம் ஒன்றுமில்லை; சார்லஸின் தற்கொலைச் செய்தி கடந்த இரு நாட்களில் பத்திரிகைகளிலே அதிகமான விளம்பரம் பெற்றிருந்தது. ''நான் உங்களைச் சந்திக்கட்டுமா?'' என்றான் ஸ்காட்.

''அப்படியே செய்'' என்று பதிலளித்தான் ஆர்பென்; ஆனால் அவனிடம் இரவில் எட்லீ எதிர்பார்த்த அளவுக்கு உற்சாகம் எதுவுமில்லை. பிறகு சட்டென்று அவன் டெலிபோனைக் கீழே வைத்துவிட்டான்.

என்ன நேர்ந்துவிட்டது என்று வியந்தான் ஸ்காட்; ஆர்பென் ஒருவேளை சோர்வுடன் இருந்திருக்கலாம். ஆனால் அச்சமயத்தில்கூட அவனால் 'பளிச்' சென்று சில வார்த்தைகள் பேச முடியுமே. எட்லீ சிந்தனையுடன் டெலிபோனைக் கீழே வைத்தான். ஆர்பெனுக்குச் சோர்வுமட்டுமில்லை, ஏதோ வேதனையுங்கூட. ''என்ன தவறு நேர்ந்துவிட்டது?'' என்று தனக்குள் உரக்கவே கேட்டுக்கொண்டான் எட்லீ.

பிறகு, அன்று மாலை ஐந்து மணிசுமாருக்கு அவன் ஆர்பெனின் விடுதிக்குள் அடியெடுத்து வைத்தபோது இதே கேள்வியைத்தான் முதலில் கேட்டான்.

வானத்தின் மூட்டம் திடீரென்று கலைந்திருந்தது. ஆர்பென் இருந்த தெரு இச்சமயத்திலும் கலகலப்பாக இருந்தது. வெளியே நிறுத்தப்பட்டிருந்த கார்களுக்குப் பின்னால் குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தனர்.

ஆர்பெனின் வீட்டுக்கு வெளியே கடகடத்துப்போன ஒரு குழந்தை வண்டி நின்றது. வீட்டுக்குள்ளே இருண்ட ஹாலில் மண்டியிட்டபடி ஒரு தொழிலாளி மின்சார விளக்கு ஒன்றிற்குப் 'பாலிஷ்' போட்டுக் கொண்டிருந்தான். இவன் வீட்டுக் காவல்காரனாக இருக்கவேண்டும் என்று எண்ணினான் எட்லீ. பிறகு அவன் திடீரென்று திரும்பி, படிகளில் வேகமாக ஏறலானான்.

ஆர்பென் வசிக்கும் தளத்தை அடைந்ததும் கீழே திரும்பிப் பார்த்தபடி சிறிது நின்றான். கீழ் தளத்திலிருந்து

வந்த மின்விளக்கின் மெல்லிய ஒளிக்கீற்று மட்டுமே அவன் கண்களுக்குப் புலப்பட்டது. ஒருவரும் அவனைத் தொடர்ந்து வரவில்லை. வழக்கப்படி, கதவைத் தட்டிவிட்டு உள்ளே செல்ல முயன்றான் எட்லீ. ஆனால் இன்று அவனுக்காகக் கதவு பூட்டாமல் வைக்கப்படவில்லை. ''யாரது?'' என்று ஆர்பெனின் குரல் தாழ்ந்து கேட்டது.

''ஸ்காட்'' என்று அவனும் தாழ்ந்த குரலிலேயே விடையிறுத்தான். பிறகுதான் கதவு திறக்கப்பட்டது. அவன் வியப்புடன் உள்ளே சென்றான்.

கீழே இருந்த காவல்காரன் மேலே 'டார்ச்' விளக்கை அடித்துக்கொண்டு, அசையாமல் அமர்ந்து, ஸ்காட்டின் காலடி ஓசையிலிருந்து அவன் எந்தத் தளத்திற்குப் போகிறான் என்று கவனிப்பதை ஸ்காட் பார்த்திருந்தால், அவன் இன்னமும் வியப்படைந்திருப்பான். மேலே மாடிக் கதவு மூடிக் கொண்டதிலிருந்து ஸ்காட் எங்கே செல்கிறான் என்று அக்காவல்காரனுக்குப் புரிந்துவிட்டது. மேல் தளத்தில் ஆர்பென் மட்டுந்தானே வசிக்கிறான்?

பிறகு அந்த மனிதன் எழுந்து, மெதுவாக முன் கதவைத் திறந்து அங்கே சிறிது நின்றான். தொடர்ந்து அவன் ஒரு சிகரெட்டைக் கொளுத்திக் கொண்டே வாசற் பக்கம் பார்வையைத் திருப்பினான். அங்கே இருந்த குழந்தை வண்டியை ஒட்டி யாரோ இரு பெண்கள் நின்றுகொண்டிருந்ததைக் கண்டதும் அவன் தலையை அசைத்தான். அவர்களில் ஒருத்தி ''ஓ! ஜோ...'' என்று முறுவலித்துவிட்டு, மற்றவள் பக்கம் திரும்பிச் சொன்னாள்: ''இவன் பெயர் ஜோ. இங்குள்ள சாமான்கள் போடும் இடத்தைச் 'சரியாக' அமைக்க வீட்டுக்காரரால் அனுப்பப்பட்டிருக்கும் புதிய ஆள்'' இவன் என்றாள். அதே சமயம் ஜோ உள்ளே திரும்பினான்; முன் கதவும் மூடிக்கொண்டது. அவன் தன் வேலையில் முனைந்தான். நாளைய தினம், சுவரிலுள்ள விரிசல்களைச் செப்பனிட வேண்டும் என்று எண்ணினான் அவன். அல்லது, ஆர்பெனுக்குக் கீழே உள்ள குடித்தனக்காரரை அவர் வீடுதிக்கு மேலேயுள்ள குழாய்கள் பழுதுற்று இருப்பதாகப் புகார் செய்யச் சொல்லி, அந்த வேலையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஸ்காட் எட்லீ தனக்குப் பின்னாலிருந்த கதவை மூடினான். நாட்கணக்கில் சுத்தப்படுத்தாதது மாதிரி, ஆர்பெனின் அறை 'காமா சோமா' வென்றிருந்தது.

கணப்பின் அருகில் மௌனமாக நின்ற ஆர்பெனைப் பார்த்தபடி, ''என்ன தவறு நேர்ந்துவிட்டது?'' என்று வினவினான் எட்லீ.

ஆர்பென் அதற்குப் பதில் கூறவில்லை. ''நீ சீக்கிரமாகவே வந்துவிட்டாய். அதில் ஆபத்து இருக்கிறது'' என்றான்

அவன். அப்போது அவனுடைய உதடுகளிலே ஒரு குறு நகை நெளிந்தது.

''என்ன ஆபத்து?'' எட்லீயும் முறுவலித்தான்.

ஆர்பென் மெதுவாகப் பலகணியை நோக்கி நடந்தான். அவன் நடையில் துடிப்பு இல்லை; அவன் குரலைப்போலவே அதிலும் ஓர் அயர்வு.

''இன்றிரவு நமது 'மீட்டிங்' எங்கே நடக்கப் போகிற தென்று தெரிந்துகொள்ளலாம் என்று நினைத்தேன்'' என்று எட்லீ நிதானமாகக் கூறினன்.

ஆர்பென் பதில் கூறவில்லை. ஆனல் அவன் திரும்பி அறை யின் நடுவுக்கு வந்தான். அங்கே பத்திரிகைக் குவியலுடன் இருந்த மேஜையண்டை தயங்கி நின்று கீழே நோக்கினன். பிறகுதான் என்றுமில்லாதபடி ஆர்பெனின் முகம் வெளுத் திருப்பதையும் அவனுடைய கண்களைச் சுற்றியுள்ள கருவளை யம் எடுப்பாக இருந்ததையும் கவனித்தான் எட்லீ.

''மீட்டிங் எங்கே நடக்கப் போகிறது?'' என்று விடாமல் வினவினன் அவன்.

''மீட்டிங்கா? எட்டு மணிக்கு.''

''மீட்டிங் எங்கே என்று நான் கேட்டேன்'' என்று எட்லீ ஆர்பெனைத் துருவி நோக்கினன். ''கடைசியாக நீங்கள் எப்போது தூங்கினீர்கள்? அல்லது உங்களுக்கு உடம் புக்கு ஏதாவது...''

''உடம்புக்கா?'' ஆர்பெனின் முகத்தில் கசப்பான குறு நகை தோன்றி மறைந்தது. பிறகு, ''ஆமாம். உடம்பு சரியில் லாதது மாதிரித்தானிருக்கிறது'' என்று அவன் ஒரு நாற் காலியில் அமர்ந்தான். அவனுடைய முழங்கைகள் மேஜைமீது அழுந்தியிருந்தன. தலையைக் கைகளின்மீது பதித்துக்கொண் டிருந்தான்.

''ஆர்பென், என்ன நேர்ந்துவிட்டது? உண்மையைச் சொல்லுங்கள்!''

''கவலை வேண்டாம். எனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை'' என்றுன் ஆர்பென் மெதுவாக.

''இதோ பாருங்கள். கஷ்டங்கள் உங்கள் ஒருவருக்கு மட் டுந்தானு? என்னைப்பற்றிய சேதிகளை நீங்கள் கேட்க விரும்ப வில்லையா?''

ஆர்பென் தலையை நிமிர்த்தி எட்லீயை நோக்கினன்.

''ரோனு என்னை விட்டுப் போய்விட்டாள்'' என்றபடி முகத்தை மறைவாகத் திருப்பிக்கொண்டான் எட்லீ.

ஒரு கணம் அங்கே மௌனம் தோய்ந்தது. பிறகு, ''நான் வருந்துகிறேன்'' என்றுன் ஆர்பென்.

எட்லீக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. ''உங்க ளுக்கு வருத்தமா? ஆதியிலிருந்து எல்லாவற்றையும் முடிந்த

வரையில் சிரமமாக்கி விட்டீர்கள். ஏன், இச்சங்கடத்தைத் தோற்றுவித்தவரே நீங்கள்தாம்.''

"நானு? அப்படியா நீ நினைக்கிறுய்? ஸ்காட், உன் சிரமங்களை நீயே தருவித்துக்கொள்ள வில்லையா?''

ஸ்காட் திரும்பி ஆர்பெனைக் கூர்ந்து நோக்கினுன்.

ஆர்பென் பேசினுன்: ''உன் விசுவாசத்தை நீ இரண்டாகப் பிரித்துக்கொள்ள முடியாது. உனக்கு என்னுடைய புத்திமதி தேவையென்றால், அது இதோ இருக்கிறது. உன்னுல் செய்யக்கூடியது இரண்டே செயல்கள்தாம். முதலாவது, ரோஞ உன்னை விட்டுப் போனது குறித்து மகிழ்ச்சி அடைந்தபடி உன் வேலையைக் கவனி; கட்சிக்கு உன் முழுப் பணிவையும் காண்பி. இரண்டாவது, ரோஞவிடம் திரும்பிச் சென்று, எல்லாவற்றையும் அவளிடம் சொல்லிச் சமாதானம் செய்து கொண்டு நீ அவளுடன் வாழலாம்; கட்சியின் மீதுள்ள உன் பற்றை நீ உதறிவிடலாம். இந்த இரண்டில் உன் விருப்பப்படி எதை வேண்டுமானுலும் தீர்மானித்துக்கொள்.''

''ஆர்பென்! கட்சிப் பற்றை நான் விடுவதா?'' ஸ்காட் கேள்வியை முடிக்க வில்லை.

அறைக்குள்ளே ஒரு நீண்ட மௌனம் நிலவியது. வெளியே தெருவில் விளையாடும் குழந்தைகளின் கூக்குரல்.

ஸ்காட் கேட்டான்: ''நீங்கள் என்ன சொன்னீர்கள் என்பதை உணருகிறீர்களா?''

ஆர்பென் தலையை ஆட்டினுன். ''ஆமாம், உணர்ந்து தான் சொல்கிறேன்.''

ஸ்காட் நீள் மூச்செறிந்தான். ஆர்பென் தன்னை இறுதி முறையாகச் சோதிக்கிறுன் என்று அவனுக்குத் தோன்றியது. ''நான் கட்சிக்குத் துரோகமிழைக்க மாட்டேன். அது என்னையும், உங்களையும், ஏன் ரோஞவையும் விட முக்கியமானது'' என்று அடித்துக் கூறினுன் அவன்.

ஆர்பென் கைகளைத் தூக்கிக் கொண்டு எழுந்தான். திரும்பிச் சாளரத்தை நெருங்கி, கீழே தெருவில் விளையாடும் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டே சொன்னுன்: ''கட்சியை விட்டு இப்போது அகலுவது சுலபமாக இருக்கும். பிற்பாடு உன் மனம் மாறி, விடுபட்டுப் போக வேண்டுமென்றுல், அது மிக மிகக் கஷ்டமாக இருக்கும். எவ்வளவுக்கு அதிகமாக நீ கட்சிக்குள்ளே சிக்கிக் கொள்கிறுயோ, அவ்வளவுக்கவ்வளவு அதிலிருந்து வெளிவருவதில் ஆபத்து இருக்கிறது. அது புரிகிறதல்லவா?''

எட்லீ முறுவலித்தான். ''ஆனுல், கட்சியை விட்டு வெளியேறும் நிலைக்கு நான் ஒரு போதும் செல்லமாட்டேன்.''

ஆர்பென் திரும்பி மேஜையண்டை வந்தான். அவன் ஸ்காட் எட்லீயைக் கவனமாக, நீண்ட நேரம் துருவி நோக்கி

ளுன். அந்த இளைஞனுடைய கண்களில் பரிவும், வேதனையும் நிறைந்திருந்தன. ஆர்பெனின் கை எட்லீயின் தோளைப் பற்றியது. பிறகு அவன் மேஜை மீதிருந்து ஒரு பத்திரிகையை எடுத்து, மௌனமாக எட்லீயிடம் கொடுத்தான்.

செக்கோஸ்லோவேகியாவில் பிரதானிகளான கம்யூனிஸ்டுகளைக் கைது செய்த விவரங்கள் அப்பத்திரிகையில் வெளியாகியிருந்தன. அதைக் கண்ட எட்லீ, ''இரண்டு நாட்களுக்கு முன் நான் இச் செய்தியைப் படித்தேன். அவர்களே இதைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிருர்கள்'' என்ருன். அவர்கள் எல்லாம் துரோகிகள் என்று அவன் நினைத்தான்.

ஆர்பென் அப்பத்திரிகையை எடுத்து மீண்டும் அதைக் கவனமாக மேஜைமீது வைத்தான். பிறகு, ''ஸ்காட், ஜாக் என்று ஒருவன் அண்மையில் இங்கே வந்திருந்தானே, நினைவிருக்கிறதா?'' என்று வினவினுன்.

''இருக்கிறது; ஏன்?'' எட்லீ வியப்பில் அமிழ்ந்து போனுன். அந்த ஜாக், ஆர்பெனைக் காண வந்து, ஒரு மாதங்கூட ஆகவில்லை. யுத்தகாலத்தில் ஃபிரான்ஸ் தேசத்தில் தலைமறைவாக இருந்து கம்யூனிஸ்டுக் குழுக்களை அமைத்த தன் அனுபவங்களைப் பற்றி அவன் விவரித்தான். அன்றிரவுதான் எட்லீ, சகோதரி வீட்டிலிருந்த ரோஜுவுக்குப் போன் செய்தான். பால் ஹேடன் அவளை வீட்டில் விட்டுச் சென்றதும் அன்றிரவுதான்—ஆம், ரோஜு துரோகம் புரிய ஆரம்பித்த இரவு அது! அது அவனுக்கு நன்ருக நினைவும் வந்தது.

ரோஜுவைப் பற்றிய எண்ணங்களை ஒதுக்கி விட்டு, ''ஆமாம்...அன்றிரவு எனக்கு நன்ருக நினைவிருக்கிறது. ஜாக் பத்திரமாக ஃபிரான்சுக்குத் திரும்பிச் சென்ருனல்லவா?'' என்று வினவினுன் ஸ்காட்.

''அவன் பத்திரமாகத் திரும்பிச் சென்ருன். ஆனுல் ஃபிரான்சுக்கு இல்லை. யுத்தகாலத்தில் மட்டுமே அவனை ஃபிரான்சுக்கு அனுப்பியிருந்தார்கள்.''

''அவர் ஃபிரெஞ்சுக்காரர் என்று நான் எண்ணியிருந்தேன்.'' ஸ்காட் எட்லீயின் குரலில் ஒரு வியப்பும், சிறிது அவநம்பிக்கையும் பிரதிபலித்தன.

''அவன் ஃபிரான்ஸைச் சேர்ந்தவன் இல்லை; முடி மறைக்க அது ஒரு தந்திரம்.''

''சந்தேகிக்க முடியாத தந்திரம்.''

''ஆமாம். அவனைப் பற்றி நீ என்ன நினைத்தாய், ஸ்காட்?''

''அவர் சரியான பேர்வழிதான்.''

ஆர்பென் தலையை அசைத்தான். பிறகு பேசினுன்: ''என்னுடைய நண்பர்களுக்குள் அவன் சிறந்தவன். நான் ஐரோப்பாவுக்குச் சென்றிருந்தபோது, அவனுடன் இணைந்து

பணியாற்றினேன். அவனுடன் பல விஷயங்களைப் பேசினேன்; நல்ல மனிதன்.''

''தைரியசாலியுங்கூட. வெகு நாட்களாக அவர் போராடிக் கொண்டு வருகிறார். ஸ்பெயினில் அவர் பணி புரிந்தார், இல்லையா?''

''அதற்கும் முன்பிருந்தே அவன் உழைத்து வருகிறான். 1916-இல் ஸ்விட்ஜர்லாந்தில் லெனினுடன் கூட அவன் பணி புரிய ஆரம்பித்தான்.''

''அது பெருமைப்படக்கூடிய விஷயம்'' என்றான் ஸ்காட்.

''ஆமாம்'' என்றான் ஆர்பென் மெதுவாக. பிறகு திடீரென்று செக்கோஸ்லோவேகியாவில் வழக்குத் தொடுக்கப் பட்டுள்ள கம்யூனிஸ்டுகளின் பட்டியலைக் காண்பித்து, ''இதோ அவன் பெயர்!'' என்றான்.

திடீரென்று ஆர்பெனுக்குப் புத்தி பேதலித்து விட்டதோ என்ற உணர்வில் ஸ்காட் எட்லீ அவனை உறுத்து நோக்கினான்.

''இதோ அவன் பெயர்! அவன் அந்த நாட்களில் நாஜிகளின் சம்பளத்தில் வாழ்ந்தவன் என்று அவர்கள் கூறுகிறார்கள். அவன் இப்போது அமெரிக்காவின் வேவுகாரன் என்றும் சொல்கிறார்கள். கம்யூனிஸ்டுக் கட்சிக்காக முப்பத்து நான்கு வருஷங்கள் உழைத்தவன் ஜாக். அவற்றில் ஐந்து வருஷங்களைச் சிறையிலும், பதினெட்டு மாதங்களை ஜெர்மானியக் கைதிகள் முகாமிலும் கழித்தவன். தவிர செக்கோஸ்லோவேகியா கம்யூனிஸ்டு நாடாக மாறுவதற்கு உதவியவன் அவன்!'' என்று நிறுத்தினான் ஆர்பென்.

''அவர் செக்கோஸ்லோவேகியரா? என்னால் நம்ப முடியவில்லை. மூன்று, நான்கு வாரங்களுக்கு முன்பு அவர் இங்கு வந்திருந்தாரே!'' என்ற ஸ்காட், பத்திரிகையில் கண்டிருந்த குற்றங்களின் விவரங்களைப் படித்தான். பிறகுதான் அவனுக்கு விஷயம் புரிந்தது. பரிவுடன் ஆர்பெனைப் பார்த்தபடி கூறினான்: ''உங்களுக்கு இது மகிழ்ச்சி அளிக்காது. ஆனால் ஜாக்கினால் ஏமாற்றப்பட்டதற்காக உங்களை யார் எப்படிக் குறை கூற முடியும்? நாம் எல்லாருமே ஏமாந்துதான் போய் விட்டோம். மிகவும் ஜாக்கிரதையாக உள்ள ஸ்தாபனங்களுக்குள்ளே கூட எப்படியோ ஒற்றர்கள் புகுந்து விடுகிறார்கள். அது நமக்குத் தெரிந்த விஷயந்தான்.''

''அதனால்தான் நான் கவலைப் படுகிறேன் என்று நீ நினைக்கிறாயா?'' ஆர்பெனின் குரலில் அலட்சியம் மிதந்தது.

''அப்படியானால், வேறு என்ன?'' என்று வினவினான் ஸ்காட். பிறகு ஆறுதல் கூறும் வகையில் தொடர்ந்து, ''ஜாக் நம்மிடமிருந்து என்னென்ன விஷயங்களைக் கறந்து கொண்டு சென்றார் என்பதை ஆராயத்தான் இப்போது

செக்கோஸ்லோவேகியாவிலிருந்து வந்துள்ளவர் இங்கே இருக்கிறாரோ? ஆனால் ஜாக் ஒன்றும் அப்படி அதிக நாசம் விளைவிக்க வில்லை அல்லவா? அவர்தான் அதிகம் பேசினார் என்றே எனக்குத் தோன்றுகிறது'' என்றான் ஸ்காட்.

''ஜாக் ஒரு கட்சித் துரோகி என்று நீ நினைக்கிறாயா?''

''அப்படித்தானே தோன்றுகிறது, இல்லையா?''

ஆர்பென் முறுவலித்தான். ''ஒரு விஷயத்தை நான் விளக்குகிறேன். பிறகு மற்றதெல்லாம் தெளிவாகி விடும்.''

''எதை நான் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறேன்?''

''ஐந்து நிமிஷ நேரம் நீ சந்தித்தாயல்லவா, அந்தத் தோழர் பீட்டர் செக்கோஸ்லோவேகியாக்காரர் இல்லை. அண்மையில் அவர் அந்த நாட்டுக்குப் போய் வந்தவர். அவ்வளவுதான். அவர் இப்போது கண்காணிப்பு யாத்திரை செய்கிறார். முதலில் ஹங்கேரி, பிறகு பல்கேரியா, போலந்து, பிறகு செக்கோஸ்லோவேகியா. அவர் சென்று வந்த இடங்களிலெல்லாம் குற்றச் சாட்டுகளையும், வழக்குகளையும் விட்டு விடுகிறார்.''

''விசுவாசமின்மையையும், உபயோகமின்மையையும் அவர் கண்டுபிடித்திருக்கிறார் என்கிறீர்களா?''

''அல்லது, தம் நாடுகளில் கம்யூனிஸ்டுக் கொள்கைகளுக்காகப் போரிட்டு, அது கிடைத்ததும், நாட்டைத் தாமே நடத்தவேண்டுமென்று விரும்புகிறவர்களையும் கண்டுபிடித்திருக்கிறார்.''

''அவர் இங்கே என்ன செய்யலாமென்று நம்புகிறார்?'' என்று அவநம்பிக்கையுடன் வினவினான் ஸ்காட்.

''எதிர்காலத்தில் பிரிந்து போகக்கூடியவர்களைக் குறித்துக் கொள்வார். அவர்கள் எவ்வளவு கட்சிப்பற்று உள்ளவர்களாயிருந்தாலுங்கூடத் தமது அரசியல் வாழ்வில் அதிக தூரம் செல்லமாட்டார்கள். புரிகிறதா, ஸ்காட்? வெளி நாட்டு ஆதிக்கத்தைத் தகர்த்தெறிய விரும்பும் நாம் கூடப் பதவிக்கு வந்தோமானால், உடனேயே ஜாக்கைப் போலவே துரோகிகள் என்று குற்றம் சாட்டப்பட்டுவிடுவோம்'' என்றான் ஆர்பென்.

ஸ்காட் எட்லீ வேதனையுடன் கூறினான்: ''உங்களுக்கு உடம்பு சரியில்லை, ஆர்பென்; என்ன சொல்கிறீர்கள் என்பதை நீங்கள் உணரவில்லை.''

''அப்படியானால் நீயும் ஒருநாள் ஜாக் மாதிரி இருப்பாய் என்பதை நீ உணரவில்லையா? அது இங்கே நடக்க முடியாதா?... என்னை அப்படிப் பார்க்காதே, எட்லீ. நான் துரோகி இல்லை. கட்சிக்காக நான் உழைத்தவன். எனக்கு அதனிடம் விசுவாசமுண்டு. ஆனால் நாம் பதவியில் இருக்கும்போது நமக்கு நம்முடைய கட்சி கிடைக்குமா?''

''ஆனால் அமெரிக்காவின் விஷயம் வேறு. அது பெரிய நாடு. நாமே நமது விஷயங்களைத் தீர்மானித்துக்கொள்ள லாம்.''

ஆர்பென் சோர்வுடன் கீழே அமர்ந்தான். ''முக்கியத் தீர்மானம் ஒன்றுகூட நம்மால் செய்யப்படுவதில்லை. அது எனக்குத் தெரியும்'' என்றான் ஆர்பென்.

நம்பமுடியாதவன் மாதிரி எட்லீ அவனை உறுத்து நோக்கினான். ''இப்புரட்சிக்கு வழிகாட்டியவர்களுடைய உதவியும், அநுபவமும் நமக்குத் தேவையே. இதை நீங்களும் பல வருஷங்களாக ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள். இப்போது ஏதோ பத்திரிகைச் சேதியைப் படித்துவிட்டு நீங்கள் பேசும் விதம்—"

''துரோகியின் பேச்சுப் போலிருக்கிறதா? இது திடீரென்று எனக்கு நேர்ந்துவிடவில்லை, ஸ்காட். மாதக்கணக்கில் இப்போராட்டம் என்னுள்ளே நிகழ்ந்துவருகிறது. ஜாக்குக்கு நேர்ந்ததை என்னால் ஒப்பமுடியாது. உன்னையும், என்னையும் யாராவது முட்டாள்கள் ஆக்குகிறார்கள் என்றால், அது யார் தெரியுமா? தோழர் பீட்டரும், அவருக்கு உத்தரவுகள் கொடுக்கும் மனிதர்களுந்தாம். புரட்சிக்காக நாம் வேலை செய்து, போராடி, கஷ்டப்படுகிறோம். ஆனால் அவர்கள் அதை வென்றுகொண்டு போகிறார்கள்.''

ஸ்காட் எட்லீ பதில் பேசவில்லை. அவன் முகம் வெளுத்திருந்தது; கண்களிலே கலக்கம். ஒருவேளை ஆர்பெனின் வேலையில் பீட்டர் ஏதாவது தவறுகளைக் கண்டுபிடித்துவிட்டாரோ என்று அவன் நினைத்தான். தெல்மாவின் விடுதி பற்றி எழுந்த அவதூறாக இருக்கலாம். அம்மாதிரியான இடத்தில் முக்கியமான கூட்டங்களை நடத்துவதை பீட்டர் ஒப்புக்கொள்ளாமலிருக்கலாம். இதனால் ஆர்பெனுக்குப் பதவி இறக்கம் ஏற்படலாம். அதனால்தான் அவனுக்குக் கசப்போ என்னவோ?

ஆர்பென் சொன்னான்: ''கண்களைத் திற, எட்லீ! நீ இந்த நிலையை அடைவதற்கு உனக்கு உதவியது யார்?"

''ஓரளவு நீங்கள்தான். ஆனால் முழுவதற்கும் நீங்களே காரணமில்லை என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்'' என்றான் ஸ்காட் கடுமையாக.

''ஆமாம். அது உண்மைதான். முழுவதற்கும் நான் காரணமில்லை; பாதிக்குமேல் உன் தந்தையே காரணம்!"

''என்னது?'' எட்லீ கோபத்தில் உதடுகளை இறுக்கிக்கொண்டான்.

''ஸ்காட், நீ நான் சொல்வதைக் கேட்கவேண்டுமென்பதற்காகவே இதைச் சொல்கிறேன். இதை ஓர் அதிர்ச்சி வைத்தியம் என்று வேண்டுமானாலும் வைத்துக்கொள். ஆனால்

இது உண்மை. எல்லாவற்றிற்கும் காரணம் உன் தந்தைதான். அவர் மட்டும் ஒரு பத்திராதிபராக இல்லையெனில், உன்னைத் தயார்செய்யும்படி எனக்கு உத்தரவு வந்திருக்குமா? உன் தந்தையார் ஒரு மருந்துக்கடை முதலாளியாகவோ, குழாய்கள் விற்பவராகவோ இருந்திருந்தால், நீ எங்கே இன்று இருந்திருப்பாய்? உன்னால் தோழர் பீட்டரைப் பார்த்திருக்க முடியுமா? நமக்கு உதவியதற்காக உன் தந்தையாருக்கு நீ நன்றி கூறலாம்.''

சிறிது மௌனத்திற்குப் பிறகு, ''இன்றிரவு மீட்டிங் எங்கே?'' என்று கடுமையுடன் வினவினான் ஸ்காட்.

நிகோலஸ் ஆர்பென் அவனை நோக்கியபடி பேசினான்: ''உனக்கு என்ன நேரக்கூடும் என்பதைக் கண்டுகொள்ள இதுதான் சமயம். சிறிதளவு வேதனையுடன் பிரியவேண்டுமானால் அதற்கு இதுதான் சமயம்.''

''கட்சியை விட்டா?''

''அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறும்வரை.''

''உங்களுக்குப் பைத்தியந்தான்.''

''இல்லை. எதிர்கால விளைவுகளை நான் நன்கு காண்கிறேன். ஸ்காட், எப்போதாவது உனக்கு நான் கெடுதலான புத்திமதிகளைக் கூறியிருக்கிறேனா?''

''கூறியிருக்கிறீர்கள்!'' என்றான் ஸ்காட் மெதுவாக.

''ஓ! ரோனா விஷயமாகத்தானே? அது கெடுதலான யோசனையில்லை, ஸ்காட்.'' பிறகு அவன் எழுந்து, மெல்லிய குரலில், கூட்டம் நடக்கப்போகும் இடத்தின் முகவரியை எட்லீயிடம் கூறினான்.

ஸ்காட் எட்லீ தன் தொப்பியை எடுத்துக்கொண்டு, நரைத் தலையுடன் தன்னை கவனித்துக்கொண்டு நின்ற ஆர்பெனின் பக்கம் திரும்பினான். அவனது கலங்கிய கண்களிலிருந்த ஏதோ ஒன்று எட்லீயைத் தொட்டது. ''உங்களை 'மீட்டிங்'கில் பார்க்கட்டுமா?'' என்றான் ஸ்காட்.

நிகோலஸ் ஆர்பென் மெதுவாகத் தலையை அசைத்தான்.

''நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?''

ஆர்பென் தயங்கினான். நம்பிக்கையிழந்தவன் மாதிரி அவன் கூறினான்: ''எனக்குத் தெரியாது.........எனக்குத் தெரியாது.''

தெருவிலிருந்த கிடங்குகளின் கதவுகள் மூடிக்கொள்ள ஆரம்பித்தன. தனித்திருந்த வண்டிக்கொட்டகையொன்றின் வாசலில் மெக்கானிக் ஒருவன், நன்றாக உடையணிந்திருந்த மற்றொருவருடன் ஏதோ திக்கைக்காட்டிப் பேசிக் கொண்டிருந்தான். அதே சமயம் ஸ்காட் எட்லீ வெளியே வருவதைக் கண்டதும், அந்த மனிதன் மெல்ல அவனைப் பின் தொடரலானான்.

இப்போது தனித்து நின்ற அந்த மெக்கானிக்கின் மனத்திலே ஒரு நிறைவு. கடந்த மூன்று நாட்களாக அவன் இங்கே வேலை செய்கிறான். இம்மூன்று நாட்களில் ஆர்பெனின் விடுதிக்குள் அனுமதிக்கப்பட்ட ஒரே மனிதன் இவன். புது சூப்பரிண்டெண்டெண்ட் மாதிரி நல்ல உடையுடன் ஆர்பெனின் விடுதியைச் சேர்ந்த கூடத்தில் மின்சாரக் கம்பிகளை ரிப்பேர் செய்யும் மக்மான்கூட திருப்தியுடன்தானிருப்பான். ஆர்பெனின விடுதிக்குள் இன்று ஒருவர் சென்றதைக் கண்டதும் அவன்தான் ஜாடை தெரிவித்தான். உடனேயே அந்த வண்டிக்கொட்டகையிலிருந்து டெலிபோன் பறந்தது. உடனேயே ஆர்பெனைக் காண வந்தவனைப் பின் தொடருவதற்காக ஒருவன் நல்ல உடையுடன் காரில் வந்து இறங்கித் தயாராகக் காத்திருந்தான். இனிமேல் செய்ய வேண்டிய வேலை அவனுடையது.

அத்தியாயம் 20

ஆர்பெனின் விடுதியை விட்டுப் புறப்பட்ட ஸ்காட் எட்லீ தன் அறைக்குத் திரும்பினான். ஆர்பென் உண்மையாக அப்படிப் பேசியிருக்க முடியாது. நிச்சயமாக அவன் எட்லீயைச் சோதிப்பதற்காகத்தான் அப்படிப் பேசியிருக்க வேண்டும். ஆர்பெனுக்கு உடல் நலமில்லை....

தனது விடுதியில், ஸ்காட் உடைகளை மாற்றிக்கொண்டான். எடுப்பான சாம்பல் நிற 'ஸூட்'டைக் களைந்துவிட்டு, பகட்டற்ற பழுப்பு 'ட்வீடு' கோட்டும், 'டை'யும் அணிந்து கொண்டான். உடை அணிந்துகொள்ளும்போதே, மீட்டிங்குக்காக மேற்குப் பகுதியைக் குறித்த நேரத்திற்குள் அடைவதற்கான ஒரு திட்டம் அவனுள்ளே உருவாகியது. இன்றிரவு அவன் தாமதமாகச் செல்வதற்கில்லை.

பிறகு அவன் புறப்பட்டு லெக்ஸிங்டனை நோக்கி நடந்தான். வழியில் ஒரு கடைக்குள் புகுந்து அவசரமாக ஒரு ஸாண்டுவிச்சும், காஃபியும் சாப்பிட்டான். தன்னையறியாமலேயே அவன் மீண்டும் ஆர்பெனைப்பற்றி எண்ணினான். அப்படியானால், நான் இப்படி முன்னேறியதற்கு என் அப்பாவா காரணம் என்று தனக்குள் கேட்டுக்கொண்டான். ஆர்பெனைப் பற்றிய அவன் வேதனை கோபமாக மாறியது.

அவன் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டு தீப்பெட்டியைக் கீழே நழுவவிட்டான். பிறகு குனிந்து அதை எடுக்கும்போது, தனக்குப் பின்னால் தெருவைப் பார்த்தான்; நிச்சயமாக அவனைப் பின்தொடர்ந்து யாரும் வரவில்லை. இருப்பினும், ஜாக்கிரதையாக இருப்பது நல்லது. இன்றிரவு முதல் அவன் தனக்குத் தானே வழிகாட்டிக் கொள்ளவேண்டும். ஆமாம், ஆர்பென் உண்மையாகவேதான் அப்படிக் கூறியிருக்கவேண்டும் என்று ஓடியது எட்லீயின் எண்ணம்.

கமிட்டிக்கு ஆர்பெனது மனது புரிந்திருக்குமா? தோழர் பீட்டர் அறிந்துகொண்டிருப்பாரா? அல்லது எட்லீக்குத்தான் முதன் முதலாகச் செய்தி தெரிந்திருக்கிறதா? இது முக்கியமான சேதி என்பதில் சந்தேகமில்லை. கட்சியில் ஆர்பென் முக்கியமான பதவியில் இருந்திருக்கவேண்டும். ஜாக் அதை நிரூபித்து விட்டான். செக்கோஸ்லோவேகியாத் தலைவர்களிலே ஒருவனாக ஜாக் இருந்திருக்கிறான். அவனுக்குச் சமமான பதவியில் ஆர்பெனும் இல்லாவிட்டால், அவன் ஜாக்குடன் இணைந்து வேலை செய்திருக்கமுடியாது. அப்படியானால் தான் அவனைப்பற்றி ரிப்போர்ட்டு செய்யவேண்டியது மிகவும் அவசரமாகிறது.

திடீரென்று எட்லீயின் உற்சாகம் மறைந்து, அவனை வெட்கமும் பயமும் பற்றிக்கொண்டன. இல்லை, ஆர்பெனின் மீது புகார் செய்ய எதுவுமில்லை என்று அவன் தீர்மானித்துக் கொண்டான். அது அவனுடைய வேலை இல்லை; ஆர்பென் ஒழிந்தால், அவனும் ஒழிந்துவிடுவான். அதற்கு அவன் உதவமாட்டான்.

ஒரு பஸ் லெக்ஸிங்டன் வழியே வந்தது. அவன் அதில் ஏறிக் கையிலிருந்த சில்லறைக் காசுகளை எண்ணலானான். அதேசமயம் வேகமாகப் பஸ்ஸில் ஏற ஓடிவந்த ஒருவன் மீண்டும் கதவைத் திறந்துகொண்டு உள்ளே ஏறினான். முகம் சிவக்க, பெருமூச்சு வாங்க நின்ற அவனை நோக்கிய டிரைவர், ''என்னய்யா அவ்வளவு அவசரம்? உயிரைப் போக்கிக்கொள்ளப் போகிறீர்களா?'' என்று வினவினான். பஸ் நகர்ந்தது.

சீக்கிரமாகவே பஸ் பிரயாணம் முடிந்தது. கிராண்ட் சென்டிரலில் இறங்கிய எட்லீ சுரங்க வழியே பதினைந்தாவது தெருவிற்குச் சென்றான். அங்கிருந்து வடக்கே பஸ்ஸில் போகலாமா, அல்லது சுரங்கவழியே செல்லலாமா என்பதை அவன் தீர்மானிக்கவில்லை. ஆனால் அங்கே காத்துக்கொண்டு நின்ற பஸ் அவன் பிரச்னையைத் தீர்மானித்துவிட்டது. அதில் ஏற இருந்த கூட்டத்தோடு சேர்ந்து அவனும் ஏறினான். உள்ளே அவன் ஓர் இடத்தைப் பிடித்துக்கொள்வதற்குள் பஸ் நிரம்பி விட்டது. அது அவனுக்கு மகிழ்வை அளித்தது. பெரிய கூட்டத்துக்கு நடுவில் இருப்பது பாதுகாப்புத்தான். அத்துடன் அப் பஸ் ஜன நெருக்கமற்ற வீதிகளினூடே ஓட ஆரம்பித்ததால் அவன் இன்னமும் திருப்தியடைந்தான்.

நாற்பத்து இரண்டாவதுதெருவில் இறங்கிய கும்பலோடு அவனும் இறங்கினான். அப்போதுஅவன் மிகவும் பத்திரமாகப் பிரயாணம் செய்துவிட்டதுபோலவே நினைத்தான். இனியும் ஆர்பெனைப்பற்றி நினைக்காமலிருப்பது நல்லது என்று மூன்றுவது தடவையாகத் தனக்குள் கூறிக்கொண்டான். வேகமாக நடந்து டைம்ஸ் சதுக்கத்தை அடைந்த அவன், அங்கே ஒரு சுரங்கவழிக்குள் இறங்கி எக்ஸ்பிரஸ்ரெயில் ஒன்றில் ஏறினான். 96-ஆவது தெருவில் இறங்கியதும், சென்டிரல் பார்க்கின் பக்கம் திரும்புவதற்கு அவன் சில கட்டடங்களை மட்டுமே கடக்க வேண்டியிருந்தது. மேற்குப் பிராட்வேயிலிருந்து கிழக்கே திரும்பி, ஆம்ஸ்டர்டாம் அவென்யூவை நோக்கி நடந்தான் எட்லீ. அங்கே இருந்த பானக்கடைகளின் பெயர்கள் அயர்லாந்துப் பெயர்களாக இருந்தன. சிறிய கடைகளின் மீது ஸ்பானிஷ் பாஷையில் யாத்திரை விளம்பரங்கள்!

எட்லீ தேடிச் சென்ற தெரு தொழிலாளர்கள் வசிக்கும் பகுதியில் இருந்தது. வரிசையாக நிறுத்தப்பட்டிருந்த கார்கள் நடைபாதையை மறைத்துக்கொண்டிருந்ததால், அத்தெருவின் குறுகிய அகலத்தில்போய் வருபவர்களும் குறைவாகவே இருந்தனர். இங்கே நகரவாழ்வின் வேகமே குறைந்துவிட்டிருந்தது. ஒரு மூலையில் மூன்று பையன்கள் தனியாகப் பந்து விளையாடிக்கொண்டிருந்தனர் அழகிய நீக்ரோப் பெண்கள் இருவர் சினிமாப் பார்க்கப் போய்க்கொண்டிருந்தார்கள். சில குழந்தைகள் தங்கள் வீடுகளின் முன்னே குதித்து விளையாடிக் கொண்டிருந்தனர். ஓரிரு பெண்கள் தங்கள் வீட்டு வாசற்படியில் அமர்ந்து, தெருக்குழந்தைகளின் பேச்சைக் கேட்டு ரசித்துக்கொண்டிருந்தனர். அவரவர்கள் தங்களது வீடுகளுக்குள்ளே டெலிவிஷனைப் பார்த்துக்கொண்டிருந்ததால், அத்தெரு அமைதியாகவும், பத்திரமானதாகவும் இருந்தது. வெளிச்சம் மங்க ஆரம்பித்திருந்தது. ஹட்ஸன்

நதிக்குப் பின்னால் கதிரவன் அமிழ்ந்துவிட்டான். குளுமை யான மேல் காற்று வேறு வீச ஆரம்பித்தது.

ஸ்காட் எட்லீ மிகவும் குதூகலமடைந்தான். ஏனெனில், கூட்டத்தினூடே வேகமாகப் பிரயாணம் செய்ததாலோ, அல்லது பிராட்வேயின் உஷ்ணமான விளக்குகளினாலோ, அவனுக்கு மிகவும் இறுக்கமாக இருந்தது. அவன் கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக்கொண்டு, வியர்வையால் நனைந்த சட்டை உலருவதற்காக உள் கோட்டைத் திறந்துவிட்டுக் கொண்டான். ஆம்ஸ்டர்டாம் அவென்யூவைத் தாண்டியதும் அவன் மூடியிருந்த ஒரு சலவைக் கடையண்டை நின்றான். அவன் இன்னமும் சிறிதுநேரம் காத்திருக்கவேண்டியிருந்தது. எனவே அவன் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டான். அப்போது தனது கை நடுங்காமலிருப்பதை அவன் கவனித்தான். அவன் தன் அலுவலே கண்ணாக இருப்பான். ஆர்பெனைப் பற்றி அவன் எதுவும் கூறத் தேவையில்லை. அது அவனுடைய வேலையில்லை.

முற்றிலும் புகைக்காத தன் சிகரெட்டை அவன் தூக்கி எறிந்தான். பிறகு உள்கோட்டின் பித்தான்களைப் போட்டுக் கொள்ளும்போது, மீண்டும் ஒரு தடவை அக்கடையின் கதவி லிருந்த நம்பரைக் கவனித்தான். அவன் செல்லவேண்டிய இடம் அந்த 'பிளாக்'கின் நடுவில் இருக்கவேண்டும். அவன் கடிகாரத்தை ஒருமுறை பார்த்துக்கொண்டு மெதுவாக மேலே நடந்தான்.

அத்தெருவிலிருந்த மற்ற வீடுகளைப்போல் அதுவும் பழுப் புக் கற்களாலான நான்கு மாடிக் கட்டடந்தான். அவன் செல்லவேண்டிய இடம் முதல் மாடி—ஒரு டாக்டரின் வீடு. அதற்கு அடையாளப் பெயர்ப் பலகை இல்லை; பலகணியிலே சொருகியிருக்கும் ஒரு வெண்மையான அட்டையிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டும்.

எட்லீ வேகமாகப் படிகளின்மீது ஏறிச்சென்று, வாசற் படியண்டை நின்றபடி, அதன் கண்ணாடிக் கதவை மெது வாகத் தட்டியபோது சரியாக இரவு மணி எட்டு. அவனை எதிர்பார்த்ததுபோல் கதவு மெதுவாகத் திறந்துகொண்டது. அவன் உள்ளே இருண்டிருந்த கூடத்திற்குள் அனுமதிக்கப்பட்டான். கதவைத் திறந்தவன் தெல்மாவின் 'பட்லர்' மார்ட்டின் தான். அவன் இப்போது ஒன்றுமே பேசாமல் எட்லீயை முதல் மாடியிலிருந்த விடுதிக்குள் அழைத்துச் சென்றான். அவர்கள் நுழைந்த அறை அந்த வீட்டின் முன்பகுதியிலிருந்தது. அவ னுடைய பலகணிகளில் மறைப்புக்கள் இருந்தன. மார்ட்டின்

எட்லீயின் பக்கம் நேராகத் திரும்பியபோது, அவன் பெயர் பில் என்பதை ஸ்காட் நினைவுபடுத்திக் கொண்டான்.

முன்பெல்லாம் பார்த்தது போல் இல்லாமல் இன்று முற்றிலும் மாறுபட்டவனாக, கோபமும் அச்சமும் கலந்த முகச் சுளிப்புடன் தோற்றமளித்தான் பில். வேதனையும், சந்தேகமும் அவனை இன்று ஆட்கொண்டிருந்தன. ''அப்படியானால், நீ வந்து விட்டாய் போலும்'' என்றான் அவன் மெதுவாக.

ஸ்காட் எட்லீ தலையை அசைத்தான். ''இடத்தையும் நேரத்தையும் அவர் உன்னிடம் சொல்லியிருந்தாரா?''

''ஆமாம்'' என்றான் ஸ்காட். இக்கேள்விகளிலிருந்தும், அவற்றை அவன் கேட்ட விதத்திலிருந்தும், ஆர்பெனின் மனநிலை முன்பே இவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமென்று ஸ்காட் எண்ணினான். அத்துடன் தன்னையும் பில்லும், மற்றவர்களும் சந்தேகிக்கிறார்கள் என்று அவனுக்குத் தோன்றியது. நிலைமையே இப்போது முற்றிலும் மாறிவிட்டது. கடந்த சில நிமிஷங்களாக ஆர்பெனை அறவே மறந்துவிட வேண்டுமென்று அவன் விரும்பினான். ஆனால் முடியவில்லை. நிகோலஸ் ஆர்பெனின் முக்கியத்துவம் அவனை மௌனியாக இருக்க விடவில்லை. ஆர்பென் சொன்னதுபோல் அவனுக்கு இரண்டு வழிகளே இருந்தன. ஆர்பென், அல்லது கட்சி — இரண்டில் ஒன்றை அவன் தேர்ந்து கொள்ள வேண்டும்.

தனக்குப் பின்னால் மூடியிருந்த அறையைக் கவனித்தபடி தாழ்ந்த குரலில் பில் பேசினான். அந்த அறையினுள் முன்னமேயே 'மீட்டிங்' ஆரம்பமாகி விட்டதுபோல் தோற்றியது. வேதனை கவிந்த பில்லின் கண்களைக் கண்டபோது, அந்த மீட்டிங் மிகவும் முக்கியமானதென்றும் விளங்கியது.

ஆர்பெனைப் பற்றித்தான் அவர்கள் பேசுகிறார்களோ? அவன் அவ்வளவு முக்கியமானவனா? எட்லீயின் நெற்றியில் வியர்வை கசிந்தது.

பில் திரும்பவும் கேட்டான்: ''நீ அவரைப் பார்த்தாயா?''

''பார்த்தேன்.''

''அவர் உன்னோடு பேசினாரா?''

ஒருகணம் தயங்கிய ஸ்காட், பிறகு தலையை அசைத்தான்.

''இன்றிரவு அவர் இங்கே வரமாட்டாரா?'' பில்லின் வெளுத்த முகம் ஸ்காட் எட்லீயைத் துருவி நோக்கியது. உதடுகளைக் கடித்துக்கொண்டு அவன் மேலும் பேசினான்: ''அவர் இரண்டு மணி நேரம் முன்பே இங்கு வந்திருக்க வேண்டும். கடந்த இரு நாட்களில் அவர் வர மறுத்த கூட்டங்களில் இது மூன்றாவது. அவரைக் கண்டு வர ஓர் ஆளை அனுப்பினோம்; வீட்டில் அவர் இல்லாததுபோல பாசாங்கு செய்கிறார்,

நாங்கள் அவருக்கு டெலிபோன் செய்தோம்; அவர் ரிஸீவரைக் கையில் எடுத்துக் கேட்கிறார். ஆனால் பதிலளிப்பதில்லை. இது சுத்த மோசம்.''

''என்னால் நம்பவே முடியவில்லை'' என்றான் எட்லீ.

''இதைவிடத் தீர்மானமான பதிலை தோழர் பீட்டர் விரும்புவார். ஆனால் என்னாலும் இதை நம்பமுடியவில்லை. தாம் என்ன செய்கிறோம் என்பதை ஆர்பென் உணருகிறாரா?'' என்று வினவினான் பில்.

ஸ்காட் எட்லீ மௌனமாக பில்லின் வெளுத்த முகத்தை நோக்கிய வண்ணமிருந்தான்.

''நிலைமை மிகவும் விபரீதமாகி விட்டது. இதை நிறுத்தி யாக வேண்டுமென்று அவர் உணரவில்லையா?''

பில்லின் பேச்சில் மறைந்துள்ள அர்த்தம் எட்லீக்குப் புரியவில்லை. பில் ஏனோ பயப்படுகிறான். அது ஒன்றுதான் எட்லீக்குப் புரிந்தது. ''இந்தச் சங்கடம் எப்போது ஆரம்பித்தது?'' என்று கேட்டான் அவன்.

பில் குரலை இன்னும் தாழ்த்திக்கொண்டான். ''சில நாட்களாகவே அது மறைவாக நடந்து வந்திருக்கிறது. திங்கள் அன்று தெல்மாவின் வீட்டில் நீ போன பிறகு கசப்பான விவாதம் ஒன்று நடந்தது. செவ்வாயன்று கொள்கைகள் பற்றிக் கருத்து வேறுபாடுகள் பகிரங்கமாக விவாதிக்கப் பட்டன. இவற்றுடன் மற்ற தகராறுகளும் சேர்ந்து கொண்டன... சார்லஸின் மரணம், தெல்மாவின் மனக்கோளாறு... அவன் வீட்டுப் பலகணிகளைப் பார்வையிடுவதற்காக இன்ஷூரென்ஸ் காரர்களும், பத்திரிகை நிருபர்களும் படையெடுத்து விட்டார்கள். நல்ல வேளையாக, தோழர் பீட்டரை முன்கூட்டியே நான் வெளியே கொண்டு வந்து விட்டேன். ஆர்பெனின் நிர்வாகத் திறமையின் மீது இனியும் அவருக்கு அதிக நம்பிக்கையில்லை. தெல்மாவைப் போன்ற ஒரு பெண்மணியை நம்பியதோடு, சார்லஸை நம்மிடையே உலாவவும் அனுமதித்தால், இப்படித்தான் நடக்கும்.''

முதலில் எட்லீ ஒன்றும் கூறவில்லை. அவனுக்கு நினைவுள்ள வரையில், திங்களன்று சார்லஸ் அந்த விடுதியிலிருந்ததை ஆர்பென் ஆட்சேபித்தான். பில்லின் அஜாக்கிரதையினால் தான் சார்லஸ் நல்ல போதையில் இருந்ததாக எல்லாரும் எண்ணும்படி ஆயிற்று. ஆனால் இப்போது பில் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முயல்கிறான். பிறகு எட்லீ சொன்னான்: ''ஆர்பெனுக்கு அதில் ஒன்றில்தான் தோல்வி.''

''காலம் பிசகிவிட்டால் ஒரு தவறே போதும்.'' பில் மேலும் தகவலுக்காக எட்லீயை நோக்கினான்.

எட்லீ ஒன்றும் புரியாதவன் மாதிரி நின்றான்.

பில் தொடர்ந்து, ''அண்மையில் ஆர்பென் பல தவறு களைச் செய்துவிட்டார். 'ட்ரெண்டி'ல் வேலைசெய்த ப்ளாக் வொர்த் விஷயம். அதேமாதிரி ஹாலிவுட்டில் ஃப்ரெம்மிங், சிகாகோவில் மர்லின்—யாவரும் சென்ற மாதம் வேலையி லிருந்து நீக்கப்பட்டு விட்டார்கள்'' என்றான்.

ஆனால், அப்படி நீக்கப்படாதவர்கள் எவ்வளவோ பேர் கள் இருக்கிறார்களே என்று எண்ணினான் எட்லீ. அதற்குள் தன் கடிகாரத்தைப் பார்த்து முகம் சுளித்துக் கொண்டான் பில். அவன் கண்களில் மீண்டும் கலக்கம். ''சீக்கிரம் அழைப்பு வரும்'' என்று அவன் சொல்லிக் கொண்டே பழைய நாற்காலி யொன்றில் அமர்ந்தான்.

இந்த 'மீட்டிங்'கில் கலந்து கொள்ள பில்லுக்கு அநுமதி யில்லையா? எட்லீ வியந்தான். அவனுக்குமா தண்டனை? என் னைக் கண்காணித்துக் கொண்டு இங்கே 'ஆபீஸ் பையன்' வேலை யல்லவா செய்கிறான் அவன்? தோழர் பீட்டர் கண்டிப்பான வர். ஆனால் கண்டிப்பும், பலமுந்தான் நமக்குத் தேவை; தீய மனிதர்கள் நமக்குத் தேவையில்லை. பிறகு அவன் அருவருப்பு டன் பில்லைப் பார்த்தான். அவன் பருத்து மென்மையுடன் தோன்றினான். அவனுடைய வேலை எளிதானது. அவன் மிகுந்த மன உறுதியுடன் காணப்பட்டான்.

''உன் சொந்தச் சேதி என்ன? நல்ல சேதிதானே?'' என்று திடீரென வினவினான் பில்.

எட்லீ தலையை ஆட்டினான். சென்ற திங்கட்கிழமையாக இருந்தால் அவன் பெருமையுடன் சேதியைச் சொல்லியிருப் பான். ஆனால் இன்று, அவன் அதைத் தக்க சமயத்தில், தகுந்த மனிதர்களிடம் கூறுவான்.

பில் அவனை நோக்கினான். அவனுடைய உதடுகள் இறுகின; அவன் மேலே ஒன்றும் பேசவில்லை.

பெட்டிபோலிருந்த அந்த அறைக்குள் குறுக்கும் நெடுக்கு மாக நடந்தான் எட்லீ. வண்ணம் மங்கிய படம் ஒன்று அங்கே சுவற்றில் தொங்கியது. பலகணிகளில் கிழிந்த திரைச்சீலைகள். இங்கே வந்து டாக்டருக்காகக் காக்க நேரிட்டால், எந்த நோயாளியும், அடுத்திருந்த பரிசீலனை அறைக்குள் செல்வதற் குள்ளாகவே இருமடங்கு சிக்காகி விடுவான். இங்கு டாக் டர் ஒருவர் நிஜமாகவே பணிபுரிகிறாரோ என்னவோ? இங் குள்ள பழைய மரச்சாமான்களின்மீது படிந்திருந்த தூசியைக் கண்ட எட்லீக்கு, இங்கே உண்மையான டாக்டர் ஒருவரும் வேலை செய்யவில்லை என்றே தோன்றியது. அப்படிச் செய் தால் அந்த டாக்டர் நோயாளிகளிடம் உள்ள கிருமிகளை அகற்

றுவற்குப் பதிலாக இன்னும் அதிகமான கிருமிகளைத்தான் அவர்களிடம் சேர்ப்பார்.

அறைக் கதவு பாதி திறந்தது. உயரமான சிவந்த மனிதர் ஒருவர் அடுத்த அறைக்குள் நடப்பதைப் பார்க்க முடியாதபடி மறைத்துக்கொண்டு அங்கே நின்றார். அவர் எட்லீக்கு ஜாடை காட்டினார். பில்கூட எழுந்திருக்கத் தயாரானான். ஆனால் அவனுக்கு அழைப்பு வரவில்லை.

அப் புது மனிதரைத் தொடர்ந்து உள்ளே போகுமுன் ஒரு முறைத் திரும்பி நோக்கினான் எட்லீ. பின் மீண்டும் நாற்காலியில் நன்கு சாய்ந்துகொண்டு விட்டான். அவன் முகத்தில் துயரம் தெளிந்தது. தவிர, மறைக்க முடியாத அச்சத்தின் அறிகுறியுங்கூட.

★ ★ ★

டாக்டரின் அறையைப் போல் மோசமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அந்த அறையில் மூன்று பேர் காத்திருந்தார்கள். அங்கிருந்த ஒரே விளக்கு, மற்ற இடங்களைவிட அங்கு காலியாகக் கிடந்த நாற்காலியின் மீதுதான் அதிக ஒளியைப் பரப்பிக் கொண்டிருந்தது. எட்லீயை அழைத்து வந்த அந்தச் சிவந்த மனிதர் மௌனமாக மற்றவர்களை அடுத்து அமர்ந்து கொண்டார். கவனம் மிக்க நான்கு முகங்கள் எட்லீயின் பால் திரும்பின. "உட்காரு!" என்று அச் சிவப்பு மனிதர் காலி நாற்காலியைச் சுட்டினார்.

தோழர் பீட்டர் பேசுவதற்காகக் காத்திருந்தான் எட்லீ. அவர் கேள்விகள் கேட்கும்போது கூடப் புகை பிடித்துக் கொண்டிருந்தார். பதில்களுக்காகக் காத்திருக்கையில், அவருடைய கண்கள் பாதி மூடியிருந்தன; அவர் தலை பின்புறம் சாய்ந்திருந்தது.

எட்லீ காரியார்த்தமாக, உள்ளது உள்ளபடி பதில்களை அளித்தான். தன்னைப் பற்றியும், தன் தந்தையாரின் கருத்துக்களையும், 'கிளாரியன்' பத்திரிகையில் தனது எதிர்காலத்தையும் பற்றி மட்டுமே பேசினான். துருவிக் கேட்கப்பட்ட சுருக்கமான கேள்விகளுக்குக் குறிப்பான விடைகளைக் கூறியபோது எட்லீக்குத் தன்னம்பிக்கை பிறந்தது. கேட்டுக் கொண்டிருந்த மனிதர்களுக்கும் தனது 'ரிப்போர்ட்டு' ஒரு மகிழ்ச்சியை அளித்ததை அவன் கவனித்தான். பீட்டர் என்ற இந்த மனிதரிடமிருந்து வரும் ஆமோதிப்புப் பெரிய பாக்கியமாகும். அவருடைய உத்தரவுகளைக் கேட்டு, அவற்றைத் திருப்பிக் கூறியபோது, எட்லீ தன் உணர்வுகளை வென்று, என்றுமில்லாத

தன்னம்பிக்கையைப் பெற்ருன். இந்த ஒரு கணம் அவனுக்குப் போதை அளிக்கக் கூடியதாக இருந்தது.

அதற்குப் பிறகுதான் பீட்டர் மற்றுமொரு சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டு ஆர்பெனைப்பற்றி வினவினர். ஏட்லீ எப்போது ஆர்பெனைக் கடைசியாகப் பார்த்தான்? ஏன்? எப்படி?

எட்லீயின் பதில் சொல்லும் முறையில் எவ்வித மாறுதலும் இல்லை. தயக்கமின்றி, குரலில் எவ்விதத் தடுமாற்றமும் இல்லாமல் அவன் பதிலளித்தான். இன்று ஆர்பெனைச் சந்தித்தபோது நடந்த விவரத்தைக் கேட்டபோதுகூட, அவன் அதே நோரணையில் ஆர்பென் கூறிய வாக்கியங்களைத் தவறின்றித் திருப்பிச் சொன்ஞன். ஏனெனில், இத்தருணத்தில் சொந்த உணர்ச்சிகளுக்கு இடமில்லை. இந்த அறையில் ஆர்பெனை ஒரு நண்பன் என்ற முறையில் மதிப்பிடுவது கூடாது; இங்கே அவன் ஒரு துரோகியாகத்தான் மதிப்பிடப் படுகிருன்.

''அதுதான் அவன் கடைசியாகச்சொன்னவார்த்தையா?'' என்று கேட்டார் அச் சிவந்த மனிதர், பீட்டரை ஜாடையாகப் பார்த்தபடி.

''ஆமாம், நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்று நான் கேட்டதற்கு, 'எனக்குத் தெரியாது' என்ருர். அவ்வளவுதான். நான் புறப்பட்டுவிட்டேன்.''

அந்த நான்கு மனிதர்களும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். பிறகு அவர்கள் அப்படிப் பார்த்துக் கொள்வதைத் தவிர்ப்பது போல் தோற்றியது. அக்கண நேரத்தில், முன்பே விவாதிக்கப்பட்ட ஏதோ ஒரு தீர்மானம் உறுதி செய்யப்பட்டு விட்டது.

பீட்டர் தொண்டையைச் சரி செய்துகொண்டார். அவ்வளவு தான் என்று எட்லீயிடம் கூறப்பட்டது.

பிறகு அவன் கதவைத் திறந்தபோது, ''வெளியில் உள்ள அறையில் காத்திரு'' என்று ஒரு குரல் பின்ஞலிருந்து கேட்டது. அவனை உள்ளே அழைத்து வந்தவர் எழுந்து கதவுவரை பின் தொடர்ந்தார். இத்தடவை பில்லுக்கு அவர் ஏதோ சமிக்ஞை கொடுத்தார்.

பிறகு கதவை மூடிக்கொண்டு அவர் உள்ளே போனபோது, "நாங்கள் ஒரு தீர்மானம் செய்ய இருக்கிறோம்" என்று பில்லிடம் கூறிவிட்டுச் சென்ருர்.

அது என்னவாக இருக்கும் என்று வியந்தான் ஸ்காட் எட்லீ. அப்போது அவனிடம் ஏற்பட்ட ஒரு நடுக்கம் அவனுக்கே அதிசயத்தை அளித்தது. ஆனுல் ஒன்று நிச்சயம்:

இத்தீர்மானம் எதுவாக இருந்தாலும் அதற்கு பில் ஒப்பு வான். வாக்கு எடுப்பார்களேயானால், அவனுடைய வாக்கு தோழர் பீட்டருக்குத்தான். ஆனால் அவன் ஏன் இப்படி பயப் படுகிறான்?

காத்திருக்கும்போது எட்லீயின் திகில் அதிகரித்தது. அவன் தவறாக ஏதாவது பேசிவிட்டானா? அல்லது செய்து விட்டானா? இல்லை. அப்படியானால் வேறு என்ன?

பலகணிக் கதவைத் திறந்து அந்த அறைக்குள்ளே சிறிது நல்ல காற்றைப் புகவிட விரும்பினான் எட்லீ. இக்கதவைத் தாண்டிச் சென்று வெளியிலுள்ள இருண்ட, குளுமையான தெருவில் நடக்கவும் அவன் மனம் விரும்பியது. அவனை இங்கே எது நிறுத்தி வைத்திருக்கிறது? அவனுக்கான உத்தரவுகள் தாம் கொடுக்கப்பட்டு விட்டனவே!

இறுதியில் கதவு திறக்கப்பட்டது. அப்போது பில்தான் உள்ளே வந்தான். அவனுடைய கண்களில் இன்னமும் கலக்கம் தெரிந்தது.

''உனக்கு ஒரு வேலை இருக்கிறது'' என்றான் பில்.

''எனக்கு உத்தரவுகள் கிடைத்து விட்டன'' என்றான் எட்லீ.

''இது மேலும் ஒரு பணி. நீ ஆர்பெனுக்குப் போன் செய்து, இன்றிரவு நீ இங்கே வரவில்லை என்று சொல்லவேண் டும். நீ இதுவரை யோசித்துக்கொண்டு இருந்ததாகவும், ஆனால் என்ன செய்யவேண்டுமென்று புரியவில்லையென்றும் அவரிடம் கூறு. உன்னைச் சந்தித்துப் பேசும்படி அவரிடம் கேள்.''

''அவர் வராவிட்டால்?''

அவரை வரும்படி செய்யவேண்டும். உன்மீது அவருக்கு அதிகப் பிரியம் உண்டு. அது தெரியுமல்லவா?''

எட்லீ தலையை அசைத்தான்.

''எனவே இவ்விஷயத்தில் உன்னை நம்பலாமல்லவா?'' என்று வினவினான் பில்.

எட்லீ அவனுடைய வெளுத்த முகத்தை வெறித்து நோக் கியபடி தலையை ஆட்டினான்.

''நல்லது. இன்றிரவு பன்னிரெண்டு மணிக்கு ஆர்பெ னுக்குப் போன் செய். 59-வது தெருவுக்கருகில் லெக்ஸிங் டனிலுள்ள ஒரு மருந்துக் கடையிலிருந்து டெலிபோன் செய் வதாக நீ அவரிடம் தெரிவி. அந்த வடமேற்கு மூலையில் நீ காத்திருப்பதாக அவரிடம் சொல்.''

''பிறகு...?''

''அவரை அங்குள்ள சுரங்கப்பாதைக்கு அழைத்துச்செல். அங்கிருந்து கிராண்ட் சென்டிரலுக்கு ரெயிலைப் பிடிக்கலாம்.

நீ நியூயார்க்கை விட்டுப் போவதாகவும், உனக்கு அவருடைய யோசனைகள் தேவையென்றும் சொல்.''

''அப்புறம்?''

''அவ்வளவுதான். நீ வேறென்றும் செய்யவேண்டியதில்லை. மற்றவர்கள் கவனித்துக்கொள்ளுவார்கள்.''

ஸ்காட் எட்லீ உதடுகளை நக்கிக் கொண்டான். அவன் கண்களில், பில்லிடம் காணப்பட்டதைவிட அதிகமான பயம் தேங்கியிருந்தது. அவன் திரும்பி, மூடியிருந்த கதவை வெறித்துப் பார்த்தான்.

பில் தன் கடிகாரத்தைப் பார்த்து விட்டுச் சொன்னான்: ''இப்போது மணி எட்டு நாற்பத்து ஏழு. பன்னிரெண்டுக்கு நீ டெலிபோன் செய்வாய். ஆர்பென் வீட்டண்டை நான் காத்திருப்பேன். அவன் வெளியே வந்ததும், நான் உள்ளே நுழைவேன். அவனிடம் உபயோககரமான விஷயங்கள் ஒன்றும் தங்கிவிடாமல் நான் பார்த்துக் கொள்வேன்.''

''ஆர்பென் என்னைச் சந்திக்க வராவிட்டால்?''

''வரும்படி செய்யவேண்டும். ஆர்பெனின் அடுத்த திட்டம் என்னவாக இருக்கும்? அவர் நம்மையெல்லாம் காட்டிக் கொடுத்துவிடுவார். எட்லீ, நான் சொல்வதைக் கேள்; நாம் ஒரு பொருட்டா? நம்மில் யாராவது ஒருவர்தான் முக்கியமா?''

''இல்லை....ஆனல் ஆர்பென் கட்சிக்குத் துரோகமிழைக்க மாட்டார். இன்னமும் அவரிடம் விசுவாசமிருக்கிறது. அவர் நம்மை விட்டுப் பிரியலாம்; ஆனல் தனக்குத் தெரிந்ததை அவர் காட்டிக் கொடுக்க மாட்டார்'' என்றான் எட்லீ.

''அவர் உன்னிடம் சொன்னதையெல்லாம் கேட்ட பிறகா விசுவாசம் என்கிறாய்? நாம் உடனேயே செயலில் இறங்க வேண்டும். நாம் தாமதித்தால், அவர் ரகசியங்களை வெளியிட ஆரம்பித்து விடுவார்; அத்துடன் மற்றவர்களுக்கும் சந்தேகம் எழச் செய்து விடுவார். அவர் தோற்றுவிக்கும் அபாயங்களை நீ புரிந்துகொள்ளவில்லையென்றால், நீயும் அவர் வலையில் சிக்கி விட்டாய் என்றுதான் பொருள்.''

''இல்லை'' என்றான் எட்லீ கடுங்குரலில்.

''நீயும் நானும் நமது விசுவாசத்தை நிரூபிக்க வேண்டும். தெரிகிறதா? இது தோழர் பீட்டரின் தீர்மானம்; கமிட்டியின் ஏகமனதான ஆதரவைப் பெற்றது. அவர்கள் எனக்காகக் காத்திருக்கிறார்கள். தாமதம் என்றால் உன்னுடன் விவாதம் என்று பொருள்; விவாதம் என்றால் நிச்சயமற்ற விசுவாசம், சந்தேகம் என்றெல்லாம் அவர்கள் நினைக்கக்கூடும்.''

எட்லீ தன் தொப்பியை எடுத்துக்கொண்டு அறையை விட்டுக் கிளம்பினான். பில் அவனைப் பின்தொடர்ந்தவாறே

சொன்னான்: ''ஆர்பென் இப்போது திட்டமிடுவதை, முன்பு பலர் செய்திருக்கிறார்கள். அதன் பலனாக நாங்கள் ஒளிந்து மறையவும் நேர்ந்திருக்கிறது. அவர்கள் செய்ததை விட அதிகமான நாசத்தை ஆர்பெனால் விளைவிக்க முடியும். எண்ணத்தில் துரோகம் இழைப்பவன் செயலிலும் துரோகியாகி விடுவான்.''

அவர்கள் ஒளி குன்றியிருந்த கூடத்தை அடைந்தார்கள். பில், ஸ்காட் எட்லீயின் கையைப் பற்றினான். இருவரும் ஒரு கணம் அசையாமல் மௌனமாக நின்றார்கள். பில் தலையை அசைத்தபடி முன்கதவை நோக்கி நகர்ந்தான். ''நீ செய்ய வேண்டியது புரிகிறதல்லவா? ஒரு டெலிபோன். அவ்வளவு தான்.''

''சரி'' என்றான் ஸ்காட் எட்லீ. அவனுக்குப் பின்னால் கதவு மூடிக்கொண்டது. இருண்ட காலியான தெரு அவன் முன்னே கிடந்தது. ஒரு டெலிபோன் அழைப்பு. இரு நபர்களிடையே ஒரு சந்திப்பு. அவ்வளவுதான்!

பீட்டரின் உத்தரவுப்படி அவன் நடக்காவிட்டால்? கட்சியுடன் அவனுக்குள்ள தொடர்பு முறிந்துவிடும்; அவனுடைய எதிர்காலம் இருண்டுவிடும். அவனைக் காட்டிக் கொடுத்து விடுவார்கள். அவன் ஏன் 'கிளாரியன்' பத்திரிகையில் சேர விரும்பினான் என்பதை அவனுடைய அப்பாவும் நண்பர்களும் தெரிந்துகொண்டு விடுவார்கள். அவர்களுக்கு அவனைப் பற்றிய மற்ற விஷயங்களும் தெரிந்துவிடும். அவர்களுடைய அனுமானப்படி அவன் பொய்யனாகவும், ஏமாற்றுக்காரனாகவும் துரோகியாகவும் ஆகிவிடுவான். அவன் அவர்களுடைய உலகைச் சேர்ந்தவனில்லை. அவர்களிடையே அவனுக்கு நல்ல எதிர்காலம் இருக்க முடியாது.

அவன் தொப்பியை நெற்றிவரை கீழே இழுத்து விட்டுக்கொண்டு ஆம்ஸ்டர்டாம் அவென்யூவை நோக்கி நடக்க ஆரம்பித்தான். அவனுள்ளே ஒரு தயக்கம். அவன் என்னவோ கீழ்ப்படிந்து 'சரி' என்று சொல்லிவிட்டான். கீழ்ப்படிதல் தான் முக்கியமானது. அதுதான் எல்லாம். கீழ்படிதலும், கட்டுப்பாடும்!

★ ★ ★

கறுப்பு 'ஸூட்'டில் இருந்த அந்த மனிதன் தனது தொப்பியை மேலே நகர்த்திக்கொண்டான். அவன் தன் புருவத்தைக் கீறிக்கொண்டே டெலிபோன் செய்தவனையிருந்தான்.

''நிச்சயமாக அவன் கைதேர்ந்த நபர்தான். அவனைப் பின்தொடருவது அவசியம். என்னை அவன் நன்கு ஓட வைத்துவிட்டான். வண்டிக் கொட்டகையிலிருந்து அவனுடைய சொந்த விடுதிக்குப் பின்தொடர்ந்தேன். பிறகு லெக்ஸிங்டன் ஹோட்டல் ஒன்றில் சாப்பிட்டுவிட்டு கிரான்ட் சென்டிரலுக்குப் பஸ்ஸில் போனான். பிறகு பதினான்காவது தெரு, பிராட்வே இவற்றிற்குச் சுரங்க வழியிலே சென்றான்; அங்கிருந்து ஆம்ஸ்டர்டாம் அவென்யூ வழியே நடந்தான். அங்கே ஒரு சலவைச்சாலை வாசலில் எட்டு மணி வரை காத்திருந்தான். சரியாக எட்டு மணிக்கு ஒரு வீட்டிற்குள் நுழைந்தான். அதன் முகவரி இதோ......கவனிக்கப்பட வேண்டியவன். எட்டு ஐம்பத்து மூன்றுக்கு அவன் வெளியே வந்து ஆம்ஸ்டர்டாம் நோக்கி நடந்தான். அங்கே ஒரு பானக் கடைக்குள் புகுந்தான். யாரிடமும் பேசவில்லை. மூன்று தம்ளர் பானம் குடித்தான். ஆம், மூன்று. அங்கே பதினைந்து நிமிடம் தன் கடிகாரத்தைப் பார்த்தவண்ணம் அமர்ந்திருந்தான். இன்னொரு தம்ளர் பானம் 'ஆர்டர்' செய்தான். அவனைக் கவனித்துக்கொண்டே நான் டெலிபோன் செய்யச் சென்றேன். பிறகு திடீரென்று கிளம்பி வெளியே வந்த அவன் ஒரு டாக்ஸிக்குள் ஏறினான். பின்தொடருவதற்கு எனக்கு அங்கே வேறு டாக்ஸி கிடைக்கவில்லை. ஆனால் அந்த டாக்ஸி நம்பர் இதோ......அவனுடைய வீட்டு முகவரி.... அவனுடைய அடையாளங்கள்....சரிதானே? ஒரு தரம் திருப்பிப் படித்துவிடுங்கள்....''

படிப்பதைக் கேட்டபோது அவன் தன் தொப்பியை முன்னும், பின்னும் தள்ளிக் கொண்டிருந்தான். பிறகு ''ஆம்....சரிதான்....'' என்றான் சோர்வுடன்.

21

அத்தியாயம் 17

மணி பத்தடித்தது. மேஜைமீதிருந்த புத்தகங்களையும் காகிதங்களையும் ஓர் ஓரத்தில் தள்ளினாள் ரோனா. இன்றிரவு அவளால் வேலைசெய்ய முடியவில்லை. அவள் மனது நிம்மதியில்லாமல் தவித்தது. பொறுமையின்றி எழுந்திருந்த அவள் தன் அறை முழுவதையும் ஒரு தடவை கண்ணோட்டம் விட்டவாறு தயங்கி நின்றாள். இங்கே நான் மிகவும் குதூகலத்து

டன்தான் இருந்தேன் என்று அவள் எண்ணம் ஓடியது. அதே காரணத்தினால்தான் இப்போது தனிமை அவளுக்கு அதிகமாகத் தோன்றுகிறது.

அவள் புத்தகங்களையும், பத்திரிகைகளையும், சாம்பல் டப்பாவையும் அகற்றி மேஜையைத் துப்புரவாக்கினாள். பிறகு ரேடியோவை முடிக்கிவிட்டு, பலகணியண்டை சென்று அதன் சீலைகளை விலக்கினாள். குளிர்ந்த காற்று உள்ளே வந்தது. அங்கு நின்றபடியே வெளியே பிரிந்து கிடந்த இரவை நோக்கினாள்.

''ஆமாம், நான் மகிழ்ச்சியின்றித்தானிருக்கிறேன்' என்று அவள் தனக்குள் கூறிக்கொண்டாள். ஏனெனில் அவள் தனிமையில் இருக்கிறாள். ஆனால் இவ்விஷயத்தில் அவளைத் தவிர அவளுக்கு உதவுபவர் யாருமில்லை. வாழ்வதற்கென்று அவளுக்கு ஒரு வாழ்க்கையிருக்கிறது. அதை அவள் மட்டுமே வாழ முடியும். அவள் செய்யும் ஒவ்வொரு தீர்மானமும், ஒவ்வொரு செயலும் அவளை வாழ்விக்கவோ, அல்லது தாழ்விக்கவோ செய்யும்.

பிறகு அவள் பலகணியிலிருந்து திரும்பி, கணப்புக்கு மேலே இருந்த கண்ணாடியில் தனது வெளுத்த முகத்தைப் பார்த்துக்கொண்டாள். ''வீணாக உன்னைப் பற்றி விசனப்பட்டுக்கொள்ளாதே!'' என்று உரக்கவே சொல்லிக் கொண்டாள். சிறிது நேரம் கண்ணாடியில் தனது பிம்பத்தை வெறித்து நோக்கியபின் அவள் முறுவலித்துக்கொண்டாள். தொடர்ந்து பெரிய சிரிப்பே வந்தது.

அடுத்த வாரம் மீண்டும் நான் நண்பர்களைப் பார்க்க ஆரம்பிப்பேன் என்று அவள் எண்ணினாள். இன்னும் சிலநாட்கள் கழிந்துவிட்டால், நான் மற்றவர்களை நிமிர்ந்து நோக்க முடியும். ஆனால் இப்போது? படுக்கப் போகுமுன் இன்னும் ஒரு மணி நேரத்தைக் கழித்தாக வேண்டுமே!

படிப்பதற்கான விளக்கைப் போட்டுக்கொண்டு, புதிய சிகரெட் பாக்கெட் ஒன்றைத் திறந்தாள். கையில் ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு மெத்தையில் வசதியாகச் சாய்ந்து அமர்ந்தாள். வெகு நேரம்வரை அப்புத்தகம் பிரிக்கப்படாமலேயே அவளுடைய முழங்காலின் மீது கிடந்தது. மீண்டும் அவள் இரவு வானத்தைக் கவனித்துக்கொண்டிருந்தாள்.

இறுதியில் அவள் படிக்க ஆரம்பித்தபோது கதவு மணி ஒலித்தது. முதலில் ரோனா அலட்சியமாக இருந்தாள். யாராவது தவறி அவள் வீட்டு மணியை அடித்திருக்கலாமென

எண்ணியவாறு மீண்டும் அப்புத்தகத்தின்மீது கவனத்தைப் பதித்தாள்.

ஆனால் மறுபடியும் மணி அடித்தது.

உடனே புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டு, ரேடியோவையும் மூடினாள். மணி அடித்ததில் ஏதோ அவசரம் தென்பட்டதால் அவள் வேகமாகக் கூடத்திற்கு ஓடிக் கதவைப் பாதி திறந்தாள். ஆனால் நிலைக்கும் கதவுக்கும் நடுவில் சங்கிலி இணைப்பு இருந்தது. ஸ்காட்டின் குரல் கேட்டது. "ரோனா!—ரோனா!"

அவள் கதவுச் சங்கிலியை உறுத்து நோக்கினாள். பிறகு, முடிந்துபோனதை மீண்டும் ஆரம்பிப்பது தவறு என்று நினைத்த அவள் மெதுவாக, "சற்று இருங்கள்" என்றாள்.

"ரோனா! தயவு செய்!"

அவள் சங்கிலியை எடுத்துக் கதவைத் திறந்தாள். விழுந்தடித்துக்கொண்டு கூடத்திற்குள் நுழைந்த அவன் தன்னை நிதானப்படுத்திக் கொள்வதற்காகச் சுவரைப் பிடித்துக்கொண்டு அவளை நோக்கினான். அவன் முகம் வெளுத்துத் தொங்கியது; கண்கள் அகன்று ஆழத்தில் இருந்தன. அவன் தன் 'டை'யைத் தளர்த்திக் கொண்டான். டெலிபோன் மேஜைமீது தன் தொப்பியை வைத்த அவன் அது நழுவி விழுந்ததைக்கூடக் கவனிக்கவில்லை, பிறகு, ரோனாவின் முகத்தில் மிளிர்ந்த விதிர்ப்பைக் காண விரும்பாதவன்போல் தன் கண்களை மூடிக்கொண்டான். இறுதியில் அவன் முறுவலித்தபடி, "எங்கே நீ என்னை உள்ளே விடமாட்டாயோ என்று பயந்தேன்" என்றான்.

அவன் குரல் ஏறக்குறையச் சாதாரண நிலையிலே இருந்தது. பிறகு அவன் அதிசயத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தான். 'நான் ஏன் இங்கே வந்தேன்?' என்று அவன் தன்னையே கேட்டுக்கொள்வது போலிருந்தது.

ஆனால் அவனுடைய சொற்கள் பொய்யானவை என்று ரோனாவுக்குத் தெரியும். எதனால் தோன்றியிருந்தாலும் அவனுடைய அச்சம் உண்மையானது. அது அவனை இப்போது ஆட்கொண்டிருந்தது. அவன் கூறும் வார்த்தைகள் எல்லாம் அவன் இங்கே வந்ததற்காகச் சொல்லப்படும் வெறும் சமாதானமே. அவன் இங்கே ஏன் வந்தான்? அவசரமான அவன் குரலைக் கேட்டதும் அவள் உள்ளத்தில் எழுந்த நம்பிக்கை இப்போது ஏமாற்றமாக மாறியது. அவள் கன்னங்கள் சிவந்தன; முன்னே அடி வைத்த கால்கள் நின்றன; அவளுடைய உள்ளத் துடிப்பு, பிறக்கு முன்னமேயே இறந்தது; அவள் குரல் கடுமையாகியது.

''என்ன நேர்ந்துவிட்டது, ஸ்காட்?'' என்று அவள் கேட்டாள். என்ன நேர்ந்துவிட்டது? இதே கேள்வியைத் தான் அவன் ஐந்து மணி நேரம் முன்பு ஆர்பெனிடம் கேட்டான். இப்போது அதனுடைய எதிரொலி அவனைத் தாக்குகிறது.

''ஒன்றும் நேர்ந்துவிடவில்லை.'' ஸ்காட்டின் குரல் கோபத்துடன் ஒலித்தது. அவன் சுவரை விட்டு நகர்ந்து நிமிர்ந்து நின்றான். அவன் பார்வை கதவின்மீது விழுந்தது.

''அட கடவுளே!'' அவன் குரல் ஒடிந்தது. அவன் 'சட்'டென்று திரும்பி அடுத்த அறைக்குச் சென்றான்.

ரோனுவின் அதிசயம் அதிர்ச்சியாக மாறிற்று. அவள் மெதுவாக அவனைப் பின்தொடர்ந்தாள்.

அவன் சோபாவில் அமர்ந்து, ரோனுவின் 'ஸாலம்போ' என்ற நூலை எடுத்து அதன் பக்கங்களைப் புரட்டினான். மீண்டும் அவன் இயல்பான நிலையை அடைந்திருந்தான்.

கதவருகில் தயங்கி நின்ற அவளை ஸ்காட் நிமிர்ந்து நோக்கி, ''இம்மாதிரி நூல்களை இன்னமும் நீ விரும்பிப் படிக்கிறாயா?'' என்று வினவினான்.

''ஆமாம். இதை நான் மிகவும் ரசிக்கிறேன். அது வேண்டாத வற்றை மறப்பதற்கு நல்ல மருந்து.''

''மறப்பதற்கா?''

''வேண்டுமானால், நிலை தவறாமல் இருப்பதற்கு என்றும் சொல்லலாம்.''

''இங்கே ஒரு கிளாஸ் பானம் கிடைக்குமா? நான் இன்று அதிகமாக நடந்திருக்கிறேன். முதலில் ஒரு டாக்ஸியைப் பிடித்தேன்; பிறகு நடந்தேன். எங்கெங்கே என்று கடவுளுக்குத்தான் தெரியும். இங்கு வந்ததும் உன் விடுதியில் விளக்குத் தெரிந்தது. நீ பலகணியண்டை நின்று கொண்டிருந்தாய். நான் போய்விட்டேன். பிறகு எப்படியோ மீண்டும் இங்கே வந்துவிட்டதை உணர்ந்தேன்.'' ரோனு வேதனை கவிய அவனைப் பார்த்தாள். :

''நான் இரு தடவைகள் குடித்துவிட்டேன். மூன்றாவது கிளாஸ் ஒன்றைக் குடித்தால் எதுவும் நேர்ந்துவிடாது'' என்றான் ஸ்காட் கோபத்துடன்.

அவள் சோடாவும், ஐஸூம் கொண்டு வருவதற்காகச் சென்றாள். திரும்பி வந்ததும், ''என்னிடம் கலந்த விஸ்கி மட்டுமே இருக்கிறது'' என்றாள். அவள் குரலில் ஓர் அமைதி; முகத்திலே முறுவல். நல்ல உபசாரிகையாகிவிட்டாள்.

''நன்றி. நரம்புகள் தளர்ந்துவிட்ட எனக்கு இது தேவை'' என்ற ஸ்காட், கிளாஸை வாங்கி ஒரே மூச்சில் குடித்தான்;

பிறகு அவளைப் பார்த்து "ரோனு, நாம் எல்லாக் காரியத்தை யும் கெடுத்துவிட்டோம் இல்லையா?" என்று வினவினன்.

அவள் தலையை ஆட்டினுள்.

அவன் பார்வை திரும்பி, கீழே கிடந்த புத்தகத்தின்மீது நிலைத்தது. "மறப்பதற்கு...இப்படித்தான் நிலை தவருமல் நீ பார்த்துக் கொள்கிருயா ரோனு?" என்று கூறிவிட்டு அவன் முகத்தில் முறுவல் நெளிய, அறை முழுவதையும் ஒரு தடவை கண்ணேட்டம் விட்டான். "சுத்தமாக, அமைதியாக இருக் கிறது. நன்கு அமையப்பெற்ற வாழ்வு. பொருந்தாதவைகளை அப்புறப்படுத்தி யிருக்கிருய். தீங்கு அளிக்கக்கூடியவைகளைத் தூர எறிந்துவிட்டாய்.—சிகரெட் துண்டுகளைப்போல், கிழிந்த கடிதங்கள், பழைய பத்திரிகைகள் இவற்றைப்போல். நானும் அப்படித்தானே ரோனு? நான் உன்னிடம் பொருந்தாதவன். உன்னுடைய வாழ்வுக்கு வெளியே தூக்கி எறியப்பட வேண் டியவன், இல்லையா?"

முதலில் அவள் பதில் கூறவில்லை. பிறகு "என்னை இன்ன மும் துயரத்தில் ஆழ்த்தத்தான் நீங்கள் வந்திருக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

"நீ ஏன் என்னை இப்படிப் பார்க்கிருய்?" என்று அவன் எதிர்க் கேள்வியை விசிறினன்.

"நீங்கள் ஏன் என்னைக் காண வந்தீர்கள் என்று அறிய முயன்று கொண்டிருக்கிறேன்."

"அது கடவுளுக்குத்தான் தெரியும். ஆனல், நான் உன்னை இன்னமும் காதலிக்கிறேன் என்ற ஒரு காரணம் போதாதா?"

"போதும்" என்றுள் அவள் மெதுவாக.

"நீ அதை நம்புகிருய் அல்லவா?"

"எனக்குத் தெரியாது."

எனக்குத் தெரியாது...இரண்டு மணி நேரம் முன்பு ஆர்பென் கூறிய அதே நேர்மையான வார்த்தைகள் 'எனக் குத் தெரியாது' என்று கூறிவிட்டால் மேலே கேள்விகளுக்கு இடமில்லை. ஆனல் தோழர் பீட்டரிடம், "எனக்குத் தெரி யாது" என்று யாரும் சொல்ல முடியாது. 'இல்லை' யெனும் மனம் விரோதியைப் போன்றது; ஒருவனைத் துரோகியாக மாற்றக் கூடியது.

"உனக்குத் தெரியாது. ஆனலும் நீ வாழ்ந்துகொண்டு தானிருக்கிருய்" என்றுன் ஸ்காட் மென்குரலில்.

அவன் முகத்தைக் காணமலிருப்பதற்காக, அவள் தலையை திருப்பிச் சாரளத்திற்கு வெளியே நோக்கினுள். 'அவருக்கு

நான் தேவைதான்; இல்லையெனில் அவர் இங்கே வந்திருக்க மாட்டார்.'

''இன்னமுமா வெளிக்காட்சியை ரசித்துக்கொண்டிருக்கிறாய்?'' ஸ்காட்டும் பலகணியண்டை வந்து வெளியே தெரிந்த நகரத்தை நோக்கினான். ''நான் இங்கு வந்தபோதெல்லாம், வெளியே தெரியும் சிமெண்டுக் கட்டடங்களை ஏதோ வைர மாளிகைகள் என்று நினைப்பவள் மாதிரி பார்த்தவண்ணம் இருந்திருக்கிறாய். உண்மையில் அவைகள் மனித நம்பிக்கைகளாலும், ரத்தத்தாலும் அமைக்கப்பட்ட வைரக் கோபுரங்கள்தாம்.'' இவ்வாறு கூறிவிட்டு அவன் திரும்பி சோபாவுக்கு வந்தான். பிறகு சொன்னான்: ''ஆமாம் இவைகளைப் பார்த்துக்கொண்டு, இவற்றிற்கும் பின்னாலிருக்கும் கொடுமைகளை மறந்துவிட்டால், நிதானம் தவறாமல் இருப்பது எளிதுதான் ரோனு. வானத்திலே உள்ள தாரகைகளைப் பார்க்கமட்டுமே உன்னை நீ அநுமதிக்கிறாய். அதன்மூலம் வேண்டாததை உன்னால் மறக்க முடிகிறது. அதோ தெரியும் ஒளி நிறைந்த ஜன்னல்களைப் பார். ஆனால் அவைகள் எவற்றை மறைக்கின்றன என்று யோசித்திருக்கிறாயா? அந்த விளக்குகளுக்குப் பின்னால் அசிங்கமான சேரிகள் உள்ளன; அவலட்சணமான நரகமே உள்ளது. அவற்றிற்குக்கீழே குப்பைத்தொட்டிகளும் கக்கூஸ் குழாய்களும். அது உனக்கு நினைவு இல்லை, ரோனு: அதை நீ நினைப்பதில்லை.''

அவள் திடுக்கிட்டு அவனைப் பார்த்தாள். ''ஸ்காட், உங்களுக்கு என்ன வந்துவிட்டது?''

''ஆமாம்...அவ்வளவுதான் உன்னால் கூறமுடியும்...நான் அநியாயங்களைப்பற்றிக் கூறுகிறேன். நீயானால், 'எனக்கு என்ன வந்துவிட்டது?' என்று கேட்கிறாய். உங்களிடமெல்லாம் உள்ள சங்கடம் இதுதான், ரோனு!''

''எங்களிடமெல்லாமா?'' என்று அவள் கேலி செய்வது போல் முறுவலிக்க முயன்றாள்.

ஆனால் அவன் புன்னகை பூக்கவில்லை. குற்றம் சாட்டுபவன் மாதிரி அவளை நோக்கினான்.

''நான் என்ன நாகரிகத்தின் கொடுமைச் சின்னமாகத் தோன்றுகிறேனா? ஓ, ஸ்காட், இது அபத்தப்பேச்சு. பலகணி மூலமாக வளம்பெற்ற நகரம் ஒன்றைப் பார்த்ததும், நீங்கள் ஏனோ இடிந்துபோய் விட்டீர்கள். பிறகு, என்னைப் போன்றவர்களுக்குச் சிந்தனையோ அநுதாபமோ இல்லையென்று பேசுகிறீர்கள். அதோ தெரியும் கூரைகளுக்குள்ளே, இன்பமெய்துபவர்களும், துன்பப்படுபவர்களும், பசியெடுத்தவர்களும், புளித்த ஏப்பக்காரர்களும், விருந்துகள், விடுமுறைகள்

என்று திட்டமிடுபவர்களும், கொலை, கொள்ளையென்று திட்டமிடுபவர்களும் இருக்கிறார்கள் என்பதை நாங்கள் அறியாமலில்லை.''

அவளை வெறித்து நோக்கிய அவன் முகம் உணர்ச்சியற்று இருந்தது. அசைவற்று அமர்ந்திருந்த அவன் திடீரென்று தன் தலையைக் கைக்குள் புதைத்துக்கொண்டான்.

அவள் எழுந்துவந்து மெதுவாக அவன் கையைப் பற்றி இழுத்தாள். ''ஸ்காட் என்ன நேர்ந்துவிட்டது? என்னிடம் சொல்லுங்கள். உங்கள் மனத்தை வருத்துவதை யாரிடமாவது சொல்வதுதான் நலம். நிச்சயம் நீங்கள் என்னுடன் விவாதம் செய்ய வந்திருக்கமாட்டீர்கள்.''

''இல்லை'' என்ற அவன் இறுதியில் தலையை நிமிர்த்தினான். அவன் பார்வை அமைதியான அந்தச் சிறு அறை முழுவதும் சுழன்றபின் ரோனாவின்மீது நிலைத்தது. ''என்னுடனேயே விவாதித்துக்கொள்வதற்காக நான் இங்கே வந்தேன். உன்னை நான் நம்புகிறேன், ரோனா. நான் நம்பக்கூடிய ஒரே நபர் நீதான்.'' அவன் அவளுடைய தோளைப் பற்றினான். பிறகு வலியினால் அவள் நெளியும்வரை இறுக்கிப் பிடித்தான். பின்னர் திடீரென்று அவளைத் தள்ளிவிட்டு எழுந்தான். நேராகப் பலகணிவரை சென்று, அதன் திரைச் சீலைகளை இழுத்து மூடினான்.

''ஸ்காட், என்ன தவறு நேர்ந்து விட்டது?'' என்று குற்றம் சாட்டும் முறையில் வினவினாள் ரோனா.

''கேள்வி ஒன்றும் கேட்காதே. நான் உன்னை நம்புவது போல், நீயும் என்னை நம்பவேண்டும், ரோனா.''

அவள் பதில் பேசவில்லை.

அவளுடைய முகத்தில் நெளிந்த உணர்ச்சிகளை அவன் கவனித்தான். பிறகு மெதுவாக, 'எனக்குச் சரியென்று தோன்றியதைத்தான் நான் செய்திருக்கிறேன்'' என்றான்.

''பின்......''

''பின்பு வேதனைப்பட ஒன்றுமில்லையா?... அந்தக் கிளாஸ் எங்கே?'' மீண்டும் அவன் குரலில் கோபம் குமுழியிட்டது. தானே கிளாஸை எடுத்து, மறுபடியும் அதில் பானத்தை ஊற்றிக்கொண்டான். ''நான் நல்ல நிலையில்தானிருக்கிறேன்; போதையில் இல்லை'' என்று கசப்புடன் கூறிக்கொண்டே கணப்பண்டை சென்றான்.

இன்றுபோல் அங்கே அவன் அடிக்கடி நின்றிருப்பதை நினைத்துக்கொண்டாள் ரோனா. ஆனால் இன்று அவன் முகத்தில் அவள் என்றும் கண்டிராத உணர்ச்சிகள் நெளிந்துகொண்டிருந்தன. தப்பி ஓடமுயலும் ஒருவன் அதற்கு வழியில்லாமல்

தவிப்பதைப் போலிருந்தது அவன் தோற்றம். "ஓ ஸ்காட், உங்களுக்கு என்ன நேர்ந்துவிட்டது?" என்று அவள் தனக்குள் கூறிக்கொண்டாள். அவளுடைய உதடுகள் நடுங்கின; அன்றிரவில் இரண்டாவது முறையாக அவள் விழிகள் கண்ணீரில் மிதந்தன. அதே சமயம் ஸ்காட் தலை நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அவள் வேகமாகத் தலையை திருப்பிக் கொண்டாள்.

"ரோனு!" என்று அவன் ஓரடி அருகில் வந்தான். மறு நிமிஷம் தன் உணர்ச்சிகளைத் தடுத்துக்கொண்டு "இல்லை... இல்லை..." என்றபடி அங்கேயே அசையாமல் நின்றான்.

நான் இங்கே வந்திருக்கக்கூடாது என்று அவன் எண்ணம் ஓடியது. வந்தது பைத்தியக்காரத்தனம். ஏன் நான் வந்தேன்? மனத்தெம்பு பெறுவதற்கு. ஆனால் நான் என்னைப் பலவீனப் படுத்திக்கொண்டதுதான் பலன். நான் சொல்ல விரும்புவது இதுதான்: "ரோனு, எல்லாவற்றையும் விட்டுவிட்டு என்னுடன் வந்துவிடு. இன்றைக்கோ, நாளைக்கோ புறப்படுவோம்; மெக்ஸிகோ அல்லது கனடாவுக்குச் சென்றுவிடுவோம். இல்லையெனில் பிரேஸில் இருக்கிறது; ஏன்? அமெரிக்கா முழுவதுமே உள்ளது. நாம் புது வாழ்வை ஆரம்பிப்போம். நாம் தப்பிச் சென்றுவிடுவோம்." ஆனால் தப்பிச் செல்வது முடியாது. தப்பி ஓடுவதென்பது பலவீனமாகும்; பயத்தினால் உந்தப்பட்டுச் செய்யும் ஏமாற்று வித்தையாகும்.

அவன் கேட்டான். "ரோனு இன்னமும் நீ என்னைக் காதலிக்கிறாயா?"

அவளிடமிருந்து அவன் கேள்விக்குப் பதில் வரவில்லை; மாறாக, "விசுவாச பாதகம் புரிவது எளிதில்லை" என்று துயரத்துடன் சொன்னாள்.

"விசுவாசம்! என்னிடம் உனக்கு அது ஒன்றுதானிருக்கிறதா? அதையும் எப்போது நீ முறிக்கப்போகிறாய்? இன்றிரவா? நாளைக்கா? ஆனால் அதை நீ நம்பிக்கைத் துரோகம் என்பாய் இல்லையா?"

அவள் தயங்கினாள். பிறகு சொன்னாள்: "ஒரு நம்பிக்கைக்குத் துரோகமிழைக்காமலேயே ஒருவர் மற்றொரு நம்பிக்கையைத் தழுவலாம் என்று நான் நினைக்கிறேன்."

ஸ்காட் எட்லீ, அவளுடைய பதிலை விரும்பாதவன் மாதிரி தலையை ஆட்டினான். அறையின் குறுக்கே நடந்துசென்று மீண்டும் ஒரு கிளாஸ் பானத்தை நிரப்பிக்கொண்டான். ரோனு அவனைக் கவலையுடன் கவனித்தாள்.

"ஸ்காட், வெளியே குளுமையாக இருக்கிறது. வாருங்கள், சற்று உலாவிவிட்டு வரலாம்."

''ஆனால், நல்லது ஒன்றிற்கு இந்த மனிதன் துரோக பிழைத்தால்தான் என்ன?'' என்று கடுங்குரலில் வினவியபடி அவளருகில் சென்றான் ஸ்காட். தொடர்ந்து, ''ரோனு, நீ என் கேள்விக்கு பதிலளிக்கவில்லை'' என்றான்.

''ஆனால் இந்த மனிதன் எதற்குத் துரோகம் செய்தான் என்று எனக்குத் தெரியவில்லையே. அது என்ன நட்பா, காதலா? அல்லது அவனுடைய தேசமா?''

''வாழ்க்கையில் இவைகளை மட்டுமே நீ காண்கிறாயா?'' அவன் சிரிக்க ஆரம்பித்தான்.

ரோனு கோபத்துடன் சொன்னாள்: ''நான் கொடுக்கக் கூடிய பதில்கள் எளிதானவை. அது எனக்குத் தெரியும். ஆனால் அதனால் அவை பொய்யாகி விடுமா?''

அவளுடைய வார்த்தைகளை அவன் செவிமடுத்ததாகத் தோன்றவில்லை. அவன் பேசிக்கொண்டே போனான்: ''இன்றிரவு ஒரு மனிதன் துரோகியென்று கண்டனம் செய்யப்பட்டான். அவன் துரோகிதான். எனக்கு அவனைத் தெரியும். அவன் என்னுடைய நண்பன். ஆனாலும் அவன் துரோகி.''

திடீரென்று அவளை அச்சம் பற்றிக்கொண்டது. ஏனென்று அவளால் விவரிக்க இயலவில்லை. அவள் சொன்னாள்: ''கண்டனமா? ஆனால் ஸ்காட், சமாதான நாட்களில் நாம் துரோகிகளைத் தூக்கில் போடுவதில்லை அல்லவா?''

ஒரு கணம் அவன் அவளை வெறித்து நோக்கினான். பிறகு மீண்டும் கடிகாரத்தைப் பார்த்தான். பதினொன்றுக்கு இருபத்து ஐந்து நிமிஷங்கள் இருந்தன. சிந்திக்க அதிக அவகாசமில்லை; காத்திருக்க வெகு நேரம் இருக்கிறது. ஆனால் இவர்கள் அவனை ஏன் தேர்ந்தெடுத்தார்கள்? தனது விசுவாசத்தை அவன் முன்பே நிரூபித்திருக்கிறான். இந்த இறுதிச் சோதனை மிகவும் அதிகமானது. அது அவர்களுக்குத் தெரியாதா? தெரியும். அதனால்தான் அதை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். செய்ய முடியாத நிரூபணந்தான் இறுதியான நிரூபணம். இதனால் அவனை நன்கு அளந்து விடுவார்கள். இதனால் அவன் தன்னையும் நன்கு அளந்து கொள்ளலாம்.

அவன் சொன்னான்: ''துரோகியைக் காட்டிக்கொடுப்பது கொடுமையில்லை அல்லவா, ரோனு? அவன் இறந்து போனால் யாரையும் குற்றம் சொல்வதற்கில்லை.'' அவள் நிலைகொள்ளாது அவனைக் கவனித்துக்கொண்டிருந்தாள். தன்னுள்ளே அதிகரித்துக்கொண்டிருந்த அச்சத்தை அடக்கிக் கொள்ள முயன்று கொண்டிருந்தாள். ''அந்த மனிதனை விசாரித்து, குற்றவாளி என்று தீர்மானித்து வி[illegible]ளா?''

''ஆமாம். அவன் குற்றவாளியே!''

''அவன் முன்பே இறந்து விட்டானா? அவன் சார்லஸ் தானே, ஸ்காட்? ஆனால் சார்லஸ் துரோகியில்லை. என்னை நம்புங்கள்.''

''சார்லஸா?''

''சில சமயங்களில், அவனை அவர்களே கொன்றிருப்பார்களோ என்று நான் வியக்கிறேன்.

''அவர்கள் என்றால் யார்?''

''எனக்குத் தெரியாது'' என்றாள் ரோனா திகிலுடன்.

''இல்லை. சார்லஸைப் பற்றி நான் பேசவில்லை.'' அவன் திரும்பி, கதவுப்பக்கம் நடந்தான். ''என்னால் நேராக ஒன்றும் நினைக்க முடியவில்லை. நான் இங்கே வந்தது மடத்தனம். வீணுக்கு உன்னைக் கலக்கிவிட்டதுதான் மிச்சம். சரி... உலாவச் செல்லலாம் என்றாயே வருகிறாயா?''

''நீங்கள் விரும்பினால் வருகிறேன். ஆனால் உங்களுக்கு அவகாசமிருக்கிறதா? மணி பதினொன்று ஆகப் போகிறது.'' அவள் எழுந்து, தன் படுக்கையறைக்குள் சென்றாள்.

''அவகாசமா? ஏன் இல்லை? அவன் அவளைத் தொடர்ந்தான். அங்கே கதவண்டை நின்று, கண்ணாடியின் முன்னே ரோனா தலையை வாரிக்கொள்வதைக் கவனித்தான். அவளுடைய தோள்கள் மென்மையாக, வெளுப்பாக இருந்தன.

அவள் சொன்னாள்: ''நீங்கள் கடிகாரத்தையே பார்த்துக் கொண்டிருந்ததால் இன்றிரவு உங்களுக்கு ஏதோ வேலையிருக்கிறதென்று நினைத்தேன்.''

அவன் திடீரென்று உரத்த குரலில், ''எனக்கு ஒன்றும் வேலையில்லை'' என்றான். திரும்பி முன்கதவை நோக்கி நடந்தான்.

அவளும் தன் பர்ஸையும், தொப்பியையும் எடுத்துக் கொண்டு அவனுக்குப் பின்னால் ஓடினாள். அவள் கதவை மூடியபோது உள்ளே டெலிபோன் ஒலித்தது. அதை அவள் லட்சியம் செய்யவில்லை. ''ஸ்காட், இருங்கள்'' என்று அழைத்தாள்.

இருண்டு அமைதியாக இருந்த தெருவிற்கு வந்ததும், ''இங்கே பரவாயில்லை'' என்று ஸ்காட் நீள் மூச்செறிந்தான். பிறகு மேலே நடக்கலானான். பின்னால் ரோனா ஓடிவரும் காலடி ஓசை கேட்டது.

அவன் நின்றான். அவள் அருகே வந்துவிட்டாள்

லெக்ஸிங்டனையும், பிறகு பார்க்கையும் அவர்கள் தாண்டிவிட்டார்கள். மாடிசன் அவென்யூ வழியே அவர்கள் திரும்பிச் சென்றார்கள். அவனுடைய கண்கள் எதிலும் பதியாமல் நேராக வெறித்து நோக்கியபடி இருந்தன. 'பளிச்'சென்று தெரிந்த கடைகளின் பலகணிகளையோ, அல்லது அண்மை

போய்க்கொண்டிருந்த ஜனங்களையோ அவன் கவனிக்கவில்லை. இருந்தாலும் எங்கே போகிறோம் என்பதை அறிந்தவன் மாதிரி நடந்துகொண்டிருந்தான். அவர்கள் 59-வது தெருவைத் தாண்டி, மாடிசன் அவென்யூவிலே தொடர்ந்து வடக்குப் புறமாய் வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தார்கள். அப பகுதிகள் இருண்டு, அமைதியாய் இருந்தன.

65-வது தெருவை அடைந்தபோது, ''இந்த இடம் தேவலை'' என்றான் அவன் மறுபடியும். அவனுடைய மூளை தெளிந்திருந்தது. ''உனக்கு ஜலதோஷம் பிடிக்கும்'' என்று அவன் சட்டென்று நின்றபடி ரோனாவிடம் சொன்னான். பிறகு அவள் கையில் வைத்திருந்த கோட்டைப் போட்டுக்கொள்ள உதவி செய்தான். மீண்டும் அவர்கள் மேலே நடந்தனர். 67-வது தெருவில் அவன் சிறிது தயங்கியபின் அவென்யூவைக் கடந்தான். பிறகு மீண்டும் தயக்கம். ரோனா அவனை ஓரக் கண்களால் கவனித்தாள். அதைப் புரிந்துகொண்ட அவன் ''நீ வேதனைப்படாதே; எனக்கு எல்லாம் சரியாகி விட்டது'' என்று முறுவலித்தான். பிறகு மேற்குத் திக்கில் நடந்தான்.

''ஸ்காட், நீங்கள் ஏன் வீட்டிற்குப் போய் சிறிதுநேரம் தூங்கக்கூடாது? நாளைக்கு ஜான் டைஸனைப் பார்க்கலாம், அல்லது உங்கள் அப்பா நகரத்தில் இருக்கிறாரா? அவர் ஏதாவது உதவக்கூடும்'' என்றாள் ரோனா.

''எனக்கு எவர் உதவியும் தேவையில்லை'' என்றான் அவன் கடுமையாக.

''நிகோலஸ் ஆர்பென் இல்லையா?''

''இப்போது ஆர்பெனை எப்படி நினைத்தாய்?''

''அவர் உங்கள் நண்பர்.''

''அது சரி...அவர் உன் நினைவில் வரக் காரணம்?''

''அவர் உங்களுக்கு உதவக்கூடும் என்று நினைத்தேன்; அவ்வளவுதான்.

''ஆனால் அவர்மீது உனக்கு வெறுப்பாயிற்றே!''

''அவர்மீது எனக்கு நம்பிக்கையில்லைதான். அவர் எங்களுக்கு என்ன செய்துவிடுவாரோ என்று எனக்கு எப்போதுமே பயம். ஒருவேளை அது பொறாமையினாலும் இருக்கலாம்.'' அவள் முறுவலிக்க முயன்றாள். ஆனால் அம்முயற்சி படுதோல்வியாயிற்று.

''நீயே வெறுக்கும் ஒருவரிடம் என்னை ஆலோசனைக்குப் போகச்சொல்கிறாய். ஏன் உண்மையைச் சொல், ரோனா.''

''அவரைப்பற்றி நான் கெடுதலாகப் பேசும்போதெல்லாம் நீங்கள் அவருக்குப் பரிந்து பேசியிருக்கிறீர்கள். ஆனால்

எனக்குத் தெரியாவிட்டாலும் அவரிடம் ஏதாவது நல்லது இருக்கவேண்டும் என நினைக்கிறேன்.''

அவர்கள் ஐந்தாவது அவென்யூவை அடைந்தனர். இத் தடவை அவள் நின்றாள். விளக்கொளி தெரிந்த ஒரு பெரிய வீட்டை ஒட்டிய அகலமான நடைபாதையில் அவர்கள் நின்றார்கள். அவென்யூவிற்கு எதிரே சென்டிரல் பார்க் இருண்டு தெரிந்தது. அதன் மரங்கள், அடர்ந்த நிழல்களாகக் காணப் பட்டன.

''நான் களைத்து விட்டேன், ஸ்காட்'' என்ற ரோனா அந்த அவென்யூவையும், அவர்கள் நடந்து வந்த அமைதியான தெருவையும் நோக்கினாள். அப்பகுதி முழுவதும் நன்கு உறங்கிவிட்டது. அங்கங்கே சில கார்கள் நின்றன. தனிமையில் ஒரு மனிதன் மெதுவாக நடந்து கொண்டிருந்தான். வேகமாக ஒரு டாக்ஸி ஓடியது. அவ்வளவுதான். நகரத்தின் இப் பகுதி இரவில் விசித்திரமான தனிமையுடன் விளங்கியது.

''எந்த வழி? ஐந்தாவது அவென்யூவின் பக்கமாகவா போக வேண்டும்?'' என்று வினவினாள் ரோனா.

ஆனால் ஸ்காட் அசையவில்லை. அவளுடைய முகத்தைக் கவனித்தபடி, ''உன் விடுதியிலே நான் என்ன சொன்னேன்?'' என்று கேட்டான் மெதுவாக.

''ஒன்றுமில்லை. எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.''

''ஆர்பெனைப் பற்றி நான் என்ன சொன்னேன்?''

''ஒன்றுமில்லை.''

அவன் தன் கோபத்தை அடக்கிக்கொண்டான். பிறகு அவள் கையைப்பற்றி ஐந்தாவது அவென்யூவைத் தாண்டி அழைத்துச் சென்றான். ''இங்கே நாம் பேசலாம்'' என்றபடி பார்க்கின் வாசலை நோக்கி நடந்தான்.

''இரவில் அங்கே நடப்பது நல்லதில்லை. அவென்யூவிலே நாம் பேசலாம்.'' ரோனா அவனைப் பின்னுக்கு இழுக்க முயன்றாள்.

''பயமா? நிழல்களிடையே கள்ளர்கள் இருப்பார்கள் என்று பயமா?''

''ஸ்காட், பதினொரு மணிக்குமேலாகிவிட்டது. நாம்—''

''இது உனக்குப் பிடித்த இடங்களில் ஒன்று, இல்லையா?'' என்று கசப்புடன் வினவினான் ஸ்காட். பிறகு 67-வது தெருப் பக்கம் அவன் திரும்பிப் பார்த்தான். உடனே, ''அதோ, அந்த மனிதன் நம்மைத் தொடர்ந்தா வருகிறான்?'' என்று கேட்டான்.

அவளும் திரும்பி நோக்கினாள். அங்கே காணப்பட்ட மனிதன் அவர்களுக்கு எதிராக ஒரு மூலையில் இருந்தான்.

அவனுடைய நடையைக் கவனித்த ரோஜு, ''அவன் ஏதோ வரியைத் தேடிக்கொண்டிருக்கிருன்'' என்ருள்.

''உன் வீட்டு மணியை நான் அடித்தபோது அவன் அங்கே வெளியே இருந்தான். அது ஒரு மணி நேரத்திற்கு முன்பு.''

''நீங்கள் கற்பனை செய்து கொள்கிறீர்கள். நம்மை ஏன் ஒருவன் தொடரவேண்டும்?''

''இந்த வழியாக வா! வேகமாக—''

''ஸ்காட், நீங்கள் ஏதாவது ஆபத்தில் இருக்கிறீர்களா?''

அவன் பதில் சொல்லாமல், ''இந்த வழியே வா'' என்று அவளைப் படிகளின் வழியே பார்க்குக்குள் இழுத்தான்.

''விளக்குகள் உள்ள நடைபாதையில் செல்வோம், ஸ்காட்.''

''இந்த வழியே வா நீ. அதோ அவன் கூட இப்போது பார்க்குக்குள் நுழைகிருன்.'' ஸ்காட் அவளைப் பாறைகளுக்குப் பின்புறமாக இழுத்துச்சென்ருன். மரங்களின் நிழல் அவர்களை மறைத்தது. ஓடும்போது மேடுபள்ளமாக இருந்த தரையில் அவள் தடுக்கி விழுந்தாள். விளக்கொளியோடு கூடிய நடைபாதை கண்களுக்குத் தெரியவில்லை. இங்கே ஒரே இருட்டுத்தான்.

ஸ்காட் அவளது கையை நழுவவிட்டான். அவன் முகத்தை அவளால் சரியாகப் பார்க்க முடியவில்லை. அது கூடக் கரு நிழல்களில் மறைந்து விட்டது. ''ஆர்பெனேப் பற்றி நான் என்ன சொன்னேன்?'' அவன் கேள்வி கடுங்குரலில் வெளி வந்தது.

இருட்டினூடே அவள் வெறித்து நோக்கினுள். ''அந்த மனிதன் நம்மைத் தொடருவதாக நீங்கள் கூறியது பொய். அவன் நம்மைத் தொடரவில்லை. என்னை இங்கே அழைத்து வருவதற்காகப் பொய் பேசியிருக்கிறீர்கள்.''

''நான் உன்னுடன் பேசியாக வேண்டும். நான் சொல்வதைக் கேள்! இன்றிரவு உன் விடுதியில் நான் என்ன சொன்னேன்?''

''எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும்போலிருக்கிறது. ஸ்காட் எட்லீ, நீங்கள்தான் என்னை இங்கே கொணர்ந்தீர்கள். இப்போது வெளியே கொண்டுபோய் விட்டு விடுங்கள். ஒன்றையும் இங்கே சரியாகப் பார்க்கக் கூட முடியவில்லை.''

''தயவு செய்து சொல். உன் விடுதியில் நான் என்ன சொன்னேனென்று எனக்குத் தெரிந்தாக வேண்டும்.''

''இதென்ன நடிப்பு? உண்மையாகவே உங்களுக்கு ஒன்றும் நினைவில்லையா?''

''நான் ஏதாவது உன்னிடம் கூறியிருப்பேன். அதை அறிந்துகொள்ள வேண்டும்'' என்றான் ஸ்காட்.

''யாரோ கண்டனம் செய்யப்பட்டு, மரண தண்டனை அடைந்தது பற்றிக் கூறினீர்கள்'' என்று அவள் மெதுவாக அடியெடுத்து வைத்தாள். இருட்டில் கால் தடுக்கியது. ''ஓ ஸ்காட், இங்கிருந்து நாம் வெளியே போவோம்!''

அவன் அசையவில்லை. ''மரண தண்டனையா?'' என்று வினவினான்.

''எனக்கும் சரியாக நினைவில்லை. துரோகியென்று கண்டனம் செய்யப்பட்டதாகச் சொன்னீர்கள். அப்படியானால் மரண தண்டனையென்று அர்த்தமில்லையா?''

இன்னமும் அவன் நகரவில்லை. அவளுக்குப் பின்னாலிருந்த புதரில் ஏதோ மிருகம் ஒன்று சலசலத்துக்கொண்டு ஓடியது; இரவுக் காற்றில் மரங்கள் அசைந்தன.

பிறகு ரோனா கேட்டாள்: ''ஆர்பென்தான் அந்தத் துரோகியா? எதற்கு அவர் துரோகம் செய்தார்?'' இதைக் கேட்டதுமே ஸ்காட் சொன்ன சொற்கள் அவள் நினைவிற்கு வந்தன. அவளுக்கு உடனே திகிலாக இருந்தது. எதைப் பார்த்தாலுமே அவளுக்குப் பயமாக இருந்தது. அவள் ஓடுவதற்காகத் திரும்பினாள்.

ஒரு கை அவள் கழுத்தைப் பிடித்து நெரித்தது. ஒரு முழங்கால் அவளைத் தரைமீது மல்லாந்த நிலையில் தள்ளி அழுத்தியது. ''ஸ்காட்!'' என்று அவள் அலற முயன்றாள். ஆனால் அவள் வாயைப் பொத்திய கரம் ஸ்காட்டினுடையது இல்லை. அவள் போராடினாள். புதிதான கட்டைக் குரல் ஒன்று பேசியது: ''இவள் முரட்டுப் பூனைதான். அவனைவிட அதிகமாகத் தொந்தரவு கொடுத்துவிட்டாள்.'' அவளுக்குப் பின்னால் யாரோ சிரிப்பது கேட்டது.

அவள் கட்டைபோல் கீழே சாய்ந்தாள். பிறகு தன் வாயைப் பொத்தியிருந்த கையைக் கடித்துக் கூவினாள். ஒரு கணம் அக் கை கூட வாயிலிருந்து நழுவிவிட்டது. அந்த மனிதன் சபித்துக் கொண்டே அவள் தொண்டையை இறுகப் பிடித்தான். யாரோ அவள் கையைப்பிடித்துத் தரையுடன் அழுத்தினார்கள். கால்களை ஏதோ கனம் அழுத்தியதால், அவளால் அவற்றை நகர்த்த முடியவில்லை.

அப்போது திடீரென்று ஏதோ துப்பாக்கி வெடி கேட்டது. மேலும் மேலும் வெடிகளும், அதன் எதிரொலிகளும். ஓர் எச்சரிக்கைக் குரல். அவள் உடலை அழுத்திய கனம் மறைந்தது. அவளைப் பிடித்திருந்த கரங்கள் நழுவின. காலரவங்கள் கேட்டன. இருளைத் துளைத்துக் கொண்டு ஒரு விசில் சப்தம்.

அவள் அழுது கொண்டு இருட்டில் கிடந்தாள்: பிறகு மெதுவாக எழுந்து உட்கார்ந்தாள். யாரோ அவளுக்கு உதவினார்கள். அன்போடு ஒரு மனிதன் பேசினான்; ''நீ இப்போது பத்திரமாக இருக்கிறாய், பயப்படாதே. இதோ உன் கோட்டு இருக்கிறது.'' கிழிந்துபோயிருந்த கோட்டை அவன் அவளுடைய தோள்களில் போர்த்தினான். அவள் நன்றாகத் தன்னை மூடிக்கொள்ளும் வரை காத்திருந்த பின், கையிலிருந்த 'டார்ச்' விளக்கைப் போட்டான்.

''ஸ்காட்?'' என்றாள் அவள்.

''அவருக்கும் ஒன்றும் ஏற்படவில்லை'' என்றான் அவன் மெதுவாக. வலியுடன் ரோனா நிமிர்ந்து பார்த்தாள். அவனருகே கைகளில் முகத்தைப் பதித்துக் கொண்டு ஸ்காட் அசையாது அமர்ந்திருந்தான்.

பிறகு தன் முன்னே இருந்த அந்த வேற்று மனிதனை அவள் நோக்கினாள். அவனுடைய சாம்பல் நிறத்தொப்பி பின் தலையில் இருந்தது. அவனுடைய முகம் வேதனையுடன் அவளைக் கவனித்துக் கொண்டிருந்தது.

பாறைகளின் மீது காலரவம் கேட்டது. கையில் ரோனாவின் கைப் பையையும், ஒரு 'டார்ச்' விளக்கையும் எடுத்துக் கொண்டு யாரோ ஒருவன் அவலட்சணமான கிழிந்த உடையில் வந்தான்.

''பயப்படாதே. அவன் மாறு உடையிலுள்ள போலீஸ்காரன். அவன் தான் துப்பாக்கியால் சுட்டவன்'' என்றான் ரோனாவின் அருகில் இருந்தவன்.

''ஒருவனைப் பிடித்தாகிவிட்டது. மற்ற இருவரையும் பின்னால பிடித்துக்கொள்ளலாம்'' என்றான் அந்தப் பார்க்கின் போலீஸ்காரன். தொடர்ந்து, ''அவர்கள் இதைப் போட்டு விட்டுப் போய்விட்டார்கள். இதிலிருந்து எதையும் எடுத்துக் கொள்ள அவர்களுக்கு நேரம் கிடைக்கவில்லை'' என்றவாறு முறுவலுடன் ரோனாவின் கைப்பையைத் தூக்கிக் காண்பித்தான். பிறகு தன் விளக்கை ஸ்காட்டின் மீது திருப்பி, ''அடுத்த தடவை யாராவது உன் கழுத்தை நெரிக்கவேண்டுமென்றால், பத்திரமான இடத்தில் தங்கிக்கொள், என்ன?'' என்றான்.

''உண்மை. இப்பெண் மட்டும் கூவவில்லையென்றால், நாம் அவனைக் கண்டுபிடித்திருக்க முடியாது'' என்றான் ரோனாவின் அருகில் நின்றவன்.

ஸ்காட் எட்லீ தலையைத் தூக்கி அவனை வெறித்து நோக்கினான். ''அப்படியானால் நீ என்னைத் தொடர்ந்து வந்தாய் அல்லவா?''

''உன்னை ஏன் நான் தொடரப்போகிறேன்?'' என்ற அவன் ரோனுவின் பக்கம் திரும்பி, ''இப்பொழுது சரியாகி விட்டதல்லவா?'' என்று வினவினுன்.

அவள் தலையை ஆட்டினுள்.

''ரைட்!'' என்றுன் அவன். எனக்குக்கொடுத்த வேலையை நான் கோட்டைவிட இருந்தேனே என்று தனக்குள் எண்ணினுன் அவன். அவள்மீது ஒரு கண்ணை வைத்துக்கொள் என்று எனக்கு உத்தரவு. ஆனுல் மூன்று நாட்களாகியும் ஒன்றும் நேரவில்லை. பிறகு இந்த இளைஞன் வந்து, அவள் வாழ்வையே முடித்துவிடும் நிலைக்கல்லவா கொண்டுவந்து விட்டான்? அப்படி ஏதாவது நேர்ந்திருந்தால், என் 'ரிப்போர்ட்டு' எவ்வளவு மோசமாகி யிருக்கும்?

ஸ்காட் எட்லீ மெதுவாக எழுந்து, ''ரோனு'' என்றுன். அவள் அவனைப் பார்த்தாள்.

''உனக்கு ஒன்றுமில்லையே, ரோனு?''

அவள் சிரிக்க முயன்றுள். பிறகு திடீரென்று மௌனமானுள். ''எனக்கு ஒன்றுமில்லை. அதனுல் உங்களுக்கு ஏமாற்றந்தானே?'' என்று அவள் தன் பார்வையை அந்த அயலார்களின் பக்கம் திருப்பி ''என்னை வீட்டில் கொண்டுபோய் விட்டுவிடுங்கள்'' என்றுள்.

அவளை நிறுத்துவதற்காக ஸ்காட் எட்லீ நகர்ந்தான்; ''ரோனு ....''

''தனக்குக் கிட்டாதவற்றை அவர் அழித்துவிடுவார்'' என்றுள் அவள் ஸ்காட்டைப் பார்த்தபடி.

''அவளை நாங்கள் கவனித்துக்கொள்கிறேம்; நாம் ஸ்டேஷனுக்குப் போவோம். நீ உன்னுடைய பாஸின் அடையாளத்தைக் கொடுக்கலாம். அந்த மனிதர்களை உன்னுல் அடையாளம் காட்டமுடியாது, அல்லவா?'' என்றுன் போலீஸ்காரன் எட்லீயிடம்.

''அதுதான் நல்லது'' என்று கூறிய அந்தச் சாம்பல் நிறத் தொப்பிக்காரன், ரோனுவைப் பற்றி நடத்திச் சென்றுன். கிழிந்த உடையில் இருந்த போலீஸ்காரன் விளக்கைக் காட்டிக்கொண்டு முன்னுல் நடந்தான். ''போலீஸ் மோட்டாரைக் கொண்டுவரச் செய்தி விடுத்திருக்கிறேன். சீக்கிரமே நாங்கள் உன்னை வீட்டில் சேர்த்துவிடுவோம் மிஸ்'' என்றுன் அவன்.

பிறகு அவன், எட்லீ வருகிறுனு என்று கவனிப்பதற்காகப் பின்னுல் திரும்பினுன். ஆனுல் பின்புறம் யாருமே இல்லை. தன்னுடைய விளக்கைத் திருப்பி அப்பாறைகளின்மீது அடித்தான். அங்கே ஒன்றுமேயில்லை. பார்க்கின் இருண்ட தோற்றந்தான் விரிந்து கிடந்தது. அதுவும் இப்போது அமைதியாகவும், அங்கே ஒன்றுமே நடவாததுபோலவும் தோற்றமளித்தது.

அத்தியாயம் 22

அந்த வெள்ளிக்கிழமையன்று டைஸன் தம்பதிகளுடைய விடுதி சந்தடியற்று இருந்தது. இடை வருஷப் பரீட்சை வர இருந்ததால் ஜானின் மாணவர்கள் தமது வீடுகளிலேயே பாடங்களைப் படிப்பதில் முனைந்திருந்தார்கள். எனவே அங்கு மாணவர் கூட்டம் எதுவுமில்லை. பால் ஹேடன் மட்டுந்தான் அங்கே வந்து சேர்ந்தான். சொன்னபடியே சரியாக ஒன்பது மணிக்கு வந்துவிட்ட அவன், அன்று ரோனு அங்கே இருக்கப் போவதில்லையென்று தெரிந்ததும், தன்னுடைய ஏமாற்றத்தை மறைத்துக்கொள்ள முயன்றான்.

''அவளுக்கு வேலை இருக்கிறதாம்'' என்று விவரித்தாள் பெக்கி.

''நான் இங்கே வரப்போவதாக அவளிடம் கூறினீர்களா?'' என்று பால் புன்முறுவலுடன் வினவினான்.

''நிச்சயமாக இல்லை'' என்றாள் பெக்கி. ஆனால் அவளால் சாதுரியமாகப் பொய் சொல்ல முடியவில்லை. தன் உதவிக்கு யாரும் வரமாட்டார்களா என்று சுற்றுமுற்றும் பார்த்தாள். அங்கு ஒருவருமில்லை—ஐஸ் 'டிரே'யுடன் ஜான் சமையலறைக்குள் சென்றிருந்தான். அவள் ஒரு கணம் ஹேடனின் முகத்தைக் கவனித்தாள். பிறகு, ''பால், ரோனுவுடன் தனது நிச்சயதார்த்தம் முறிந்ததற்கு ஸ்காட் எட்லீ உங்களைக் குறை கூறுவான் என்று, நீங்கள் எப்போதாவது நினைத்ததுண்டா?'' என்று வினவினாள்.

''இதில் எனக்குப் பெருமையே'' என்று அவன் பெக்கியைக் கேலியாகப் பார்த்தான்.

''ஆனால், ஸ்காட்டுக்கு எப்போதுமே யாரையாவது குறை கூறவேண்டும். அவன் தன்னைத்தானே குறை கூறிக்கொள்வது பற்றி மட்டும் நான் இன்னமும் கேள்விப்படவில்லை. உங்கள் மீது அவன் சந்தேகப்படுவதை ரோனு தடுக்கத்தான் முயலுவாள்.''

''ஐந்தாவது அவென்யூவில் நாங்கள் ஒருவேளை சண்டையிட நேர்ந்தால்?'' என்று வினவினான் பால்.

''அதிசயமில்லை. ஸ்காட் முன்கோபக்காரன்.''

''என்னைப் பொறுத்தவரையில் அவன் ஒரு செத்த பாம்பு.''

''அவன் மீது உங்களுக்கு வெறுப்பு.''

''நிச்சயமாக வெறுப்புத்தான். ஆனால் உங்களுக்கு ஸ்காட் எட்லீயைப் பிடிக்கிறதா?''

அதைக் கேட்க இது சமயமில்லை. இந்தக் கணத்தில், பற்கள் உடையும்வரை அவனை அடித்து நொறுக்கத்தான் நான் விரும்புகிறேன்.''

''உடைப்பதற்கு அவனிடம் நல்ல பல்வரிசை இருக்கிறது.''

பெக்கி சிரிக்க ஆரம்பித்தாள். ''இந்த விஷயத்தில் உங்களுக்கும் ஜானுக்கும் ஒரே கருத்துத்தான். சென்ற வாரம் அவர் கோபம் கொண்டதுபோல் என்றுமே நான் பார்த்ததில்லை. ஆனால், இதெல்லாம் இறுதியில் நன்றாக முடிந்துவிடலாம்.'' அவள் காலடியில் கிடந்த விரிப்பை ஆராய்ந்தாள்.

''இனியும் அவர்கள் மணந்துகொள்ளக்கூடும் என்று சொல்கிறீர்களா?'' என்று வினவினான் பால். அவன் அப்படி நினைக்கவில்லை. இருந்தும் அப்படி நடக்கக்கூடும். எட்லீக்கு நற்புத்தி வருமானால் அப்படி நடக்கலாம்.

''எனக்குத் தெரியாது. ஆனால் மூன்று வருஷங்களாகக் காதலித்த ஒருவனை யார்தான் ஒரே வாரத்தில் கை நழுவவிடுவார்கள்?'' என்றாள் பெக்கி.

''ஆனால் மனிதர்கள் அப்படிப் பழைய நிலைக்கு எளிதில் மாறிவிட முடியுமா?''

பெக்கி பதில் சொல்லவில்லை. தலையை இலேசாகத் தூக்கியபடி வேறு எதையோ கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தாள். அவளுடைய புருவத்தில் வேதனை நெளிந்தது. பிறகு பேசினாள்: ''மன்னிக்கவேண்டும் பால்..பாப்பி கூப்பிடுவது போல இருந்தது; கவனித்துக்கொண்டிருந்துவிட்டேன். நீங்கள் என்ன சொன்னீர்கள்?''

''மனிதர்கள் அப்படி எளிதில் பழைய நிலைக்குத் திரும்பிவிட முடியுமா என்று வியந்தேன்.''

''முடியாதுதான். தமது சிந்தனைகளையெல்லாம் மாற்றிக்கொண்டு, தமது செயல்களையெல்லாம் அழித்துக்கொண்டால் ஒழிய முடியாதுதான்.''

''என்ன விஷயம்? பிரசங்கம் பிரமாதமாக இருக்கிறதே'' என்று கேட்டவாறு, கையில் பானங்கள் நிறைந்த தட்டுடன் அறைக்குள் நுழைந்தான் ஜான்.

''ஸ்காட் எட்லீயைப் பற்றித்தான் பெரும்பாலும்'' என்றாள் பெக்கி.

''ஓ!'' என்று கூறிய ஜான், தன் கையிலிருந்த தட்டை வைப்பதற்கு ஓர் இடத்தைத் தேடிச் சுற்றுமுற்றும் பார்த்தான். பிறகு, ''பெக்கியின் புது உடை எப்படி இருக்கிறது,

பால்? இன்றிரவு நீ இங்கே வரப்போகிருய் என்று கேட்டதும் அவள் இதை அணிந்து கொண்டாள்'' என்ருன்.

பெக்கிக்கு வெட்கமாக இருந்தது. அவள் காஃபி மேஜையை ஒழிப்பதற்காக எழுந்தாள். ''ஜான், எப்போதும் இங்கே ஏதாவது சாமான்கள் குவிந்துவிடுகின்றன'' என்ருள்.

மேஜை மீதிருந்த தன் புத்தகங்களேயும், பத்திரிகைகளேயும் அகற்றிய ஜான், ''இதெல்லாம் என்னுடையவைதாம்; நான் மறந்துபோய் விட்டதற்கு வருந்துகிறேன். ஆனல், சாமான்களே வைக்கக்கூடாதென்ருல், இந்த மேஜை வேறு எதற்குத்தானிருக்கிறது?'' என்று கேட்டான்.

பால் சாதுரியமாகப் பேசினன். ''இந்த உடை நேர்த்தியாக இருக்கிறது. பச்சை நிறம் உங்களுக்குப் பொருந்தியிருக்கிறது.''

''பொருத்தமாகத்தான் இருந்தது. ஆனல் இன்று இப்பச்சை நிறத்தில் நான் மோசமாகத்தான் காட்சியளிக்கிறேன்'' என்ருள் பெக்கி. இந்த உடையை அணிந்து கொண்டு அதிக வேலேசெய்து அதைக் கசக்கிக்கொண்டு விட்டதாக அவள் எண்ணினுள்.

பால் சுற்றுமுற்றும் திரும்பி நோக்கினன். ''இது வசதி மிகுந்த இடம். உங்களிருவரையும் கண்டு நான் பொருமைப் படுகிறேன். இன்று நீங்கள் இந்தப் பச்சை உடையைப்பற்றி கூறியது தவறு, பெக்கி. இந்த உடையில் நீங்கள் நன்ருகத்தான் இருக்கிறீர்கள்.''

''பெக்கி, உன் உடையையும், பாப்பியையும் பற்றி வேதனேப்படுவதை நிறுத்திக்கொள்'' என்ருன் ஜான்.

''பாப்பிக்கு என்ன?'' அவசரமாக வினவினன் பால்.

''ஒன்றுமில்லே. அவனுக்கு என்னவென்று புரியாததுதான் சங்கடமாக இருக்கிறது.''

''அவன் உடல்நிலே சரியாக இருக்கிறதென்று தோன்றுவதாகவே டாக்டர் சொல்கிருர்'' என்ருன் ஜான். ஆனல் அவன் கூட இப்போது வேதனேப்படாமலில்லே.

''இன்று அவன் நிலேகொள்ளாமல் தவித்துவிட்டான். இன்று பிற்பகல் குழந்தைகளே நான் விளேயாட்டு மைதானத்திற்கு அழைத்துச் சென்றிருந்தேன். பால், நீங்கள் அனுப்பினீர்களே அந்தத் துப்பாக்கியுடன் அங்கே வந்தான் பாப்பி; ஆனல் அதை உபயோகித்து அவன் விளேயாடவே இல்லே. என் பக்கத்தில் வெறுமே பெஞ்சியில் உட்கார்ந்து விட்ட அவன், மற்றப் பையன்களே உபயோகிக்கச் சொல்லி அதைக் கொடுத்துவிட்டான்!'' என்ருள் பெக்கி.

ஜான் பேச்சை மாற்றுவதற்காக வேறு விஷயமாகப் பேச ஆரம்பித்தான்: ''இன்று நான் மில்டன் லெயிட்னருடன்

பேசிக் கொண்டிருந்தேன். இன்றிரவு நீ எங்களைக் காண வரப்போவதாக அவனிடம் சொன்னேன். அதனால், அவனும் இன்றிரவு இங்கே வந்தாலும் வரலாம். உங்கள் கம்பெனியில் விளம்பர இலாகாவில் வேலை செய்துகொண்டு, வெளியே விருந்துகளில் அரசியலைப் பற்றிப் பேசுகிறானே ஒரு பையன், அவனுடன் கேலியான விவாதங்களில் பொழுதைப் போக்கி யிருக்கிறான், லெயிட்னர்.''

''மர்ரேயுடனா?''

''ஆமாம். மர்ரேயிக்கும் மில்டனுக்கும் நடந்த விவாதத் தில், மில்டன் அவனை அவனுடைய வழியிலேயே விட்டுப் பார்த்திருக்கிறான். ஆனால் இந்த வாரம் மர்ரேயிடம் பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. அவன் ஏனோ பயப்படுவதாக மில்டன் சொல்கிறான். ஜன்னலிலிருந்து குதித்த அந்த இளைஞ னுடைய சாவைப்பற்றி அவன் பயப்படுவதாகத் தெரிகிறது. வேறு வதந்திகளும் பரவ ஆரம்பித்துள்ளன. அந்த விடுதியின் வேலைக்காரியின் மூலம் மில்டனின் நண்பனான ஒரு பத்திரி கைக்காரன், அங்கே நடக்கும் ரகசிய விஷயங்களைப்பற்றி ஏதோ செய்திகளைத் திரட்டியிருக்கிறான். ஆனால் அதை அவன் பிரசுரிக்கவில்லை. மான நஷ்டம் விளைவிக்கக்கூடிய விஷயமோ, என்னவோ?''

''உண்மை அதிகமானால், அது அதிகமான மானபங்கத் தைத்தான் அளிக்கும்.''

''ஜன்னல் வழியே குதித்த அந்த மனிதனைப்பற்றி ரோனா மிகவும் கலக்கமடைந்திருக்கிறாள்'' என்றாள் பெக்கி.

''சார்லஸைப் பற்றியா?''

''ஆமாம். ரோனாவுக்கு ஏன் கலக்கம், பால்? அவள் அவனை ஒரே ஒரு தடவைதான் சந்தித்திருக்கிறாள். இல்லையா?''

''அவன் ஒரு பரிதாபகரமான பிராணி.''

''பாவம், அவன் அதிகமாகக் குடித்தானாமே?''

''இல்லை, அப்படி நான் நினைக்கவில்லை'' என்றான் பால்.

ஜான் அவனைக் கவனித்துக் கொண்டிருந்தான். ''சார்ல ஸைப் பற்றிய உண்மையான கதை வெளிப்படுமென்று நான் நினைக்கவில்லை'' என்ற அவன் மேலே கேள்விகள் கேட்க வேண்டாமென்று பெக்கியை ஜாடையாக எச்சரித்தான்.

''அப்படி வெளிப்பட்டால், அதற்கும் சார்லஸுக்கும் சம்பந்தமிருப்பதாகத்தோன்றாது. பாவம், அவனுக்கும் அந்தப் பெருமைகூடக் கிட்டாது'' என்று பதிலளித்தான் பால்.

அம்மாதிரியான கதையா அது என்று எண்ணினான் ஜான். அவனுக்கு இதுபற்றி மேலே பேச ஆவல்தான். ஆனால் அவன் தன்னுடைய கோடை காலத்துத் திட்டம் பற்றிப் பேச

ஆரம்பித்தான். பெக்கிக்கு ஓய்வு தேவை. அவள் எல்லா வற்றையும்பற்றி அதிகமான வேதனைப்படுகிறாள்.

பாலுடன் பேசிக் கொண்டிருந்த பெக்கி, திடீரென்று கணவன் பக்கம் திரும்பி, "என்ன அப்படிச் சமைந்து விட்டீர்கள்?" என்று வினவினாள்.

ஜான் தலை நிமிர்ந்தான். "வேண்டிய அளவுக்கு நீ எதையும் பற்றி அலுத்துக் கொள்வதில்லை. அதைப்பற்றி நினைத்துக்கொண்டேன்" என்றான் உண்மையாக.

பெக்கி கணவனுக்காக ஓர் அன்பு முறுவலை உதிர்த்தாள். அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்த பால், தான் அந்த அறைக்கு வெளியே இருப்பதுபோல் உணர்ந்தான். அதை உணர்ந்தவள் மாதிரி, பெக்கி அவனிடம் சொன்னாள்: "நீங்கள் வருவதற்கு முன்னால் நான் இவரிடம் சிறிது அலுத்துக் கொண்டேன். இந்த உடையை அணிந்துகொண்டு, என்னை நானே கண்ணாடியில் பார்த்துக் கொண்டபோது—சரி, மறுபடியும் அதைப்பற்றிப் பேசுவானேன்? மொத்தத்தில், நான் முட்டாள்தனமாக வீண் கோபப்பட்டேன். அதற்காக நான் வருந்துகிறேன்." அத்துடன் அவள் எழுந்து ஜானிடம் சென்று, அவனை அன்பாகப் பிடித்து உலுக்கினாள். அதே சமயம் வெளியே கதவு மணி ஒலித்தது. "மில்டனாக இருக்கும்" என்று அவள் ஓடினாள்.

போகும் அவளையும், பிறகு அந்த அறை முழுவதையும் ஒரு கணம் ஜான் உற்று நோக்கினான். "தவறான தொழில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு விட்டதாகவே நான் சில சமயங்களில் நினைக்கிறேன்" என்றான் அவன் விசனத்துடன்.

பால் வியப்புடன் அவனைப் பார்த்தான்.

"நீங்கள் உங்கள் வேலையில் சிறப்புடன் விளங்குவதாகவே நான் கேள்விப்படுகிறேன்" என்றான் பால்.

"செலவுக்குப் பணம் தேடாத வரையில் அது சிறப்பான வேலைதான்" என்றான் ஜான் கோபத்துடன். "சில சமயங்களில், இப் போராட்டத்தை விட்டுவிட்டு ஏதாவது வியாபாரம் செய்தால் என்ன என்றே எனக்குத் தோன்றுகிறது. அல்லது ஆசிரியர்கள் துறவிகளாக இருக்க வேண்டும்—சாய வேஷ்டியும், குடிசை போன்ற ஆசிரமமும்!—இந்நாட்களில் ஆசிரியர்களுக்கு அம்மாதிரியான வாழ்க்கைதான் கட்டிவரும். ஆனால், என்னை இன்னமும் மனிதனாக வைத்திருப்பது பெக்கிதான். அவள் இல்லையெனில் நான் சிறப்பாகப் போதிக்க முடியாது." அவன் எழுந்து, கதவுப் பக்கம் திரும்பினான். அங்கே மில்டன் லெயிட்னரும், தொடர்ந்து ஜோசப் லொகாஸ்

ட்ரோவும், பெக்கியும் அந்த அறைக்குள் வந்து கொண்டிருந்தார்கள்.

அந்த இரு மாணவர்களும் ஜானை வணங்கிய மாதிரியையும், பதிலுக்கு அவன் வாஞ்சையுடன் முறுவலித்ததையும் பால் கவனித்தான். மிகவும் அவசியமான பணி ஒன்றைப் புரிபவன் ஏன் இப்படித் தண்டிக்கப்பட வேண்டும் என்று அவன் வியந்தான். சிறந்த அறிவாளிகள், போதிக்கும் வேலையை அநுபவமற்ற அறிவீனர்களிடம் விட்டு விட்டுச் சென்றால், இந்த மில்டன் லெயிட்னர்கள், ஜோ லொகாஸ்ட்ரோக்கள் ஆகியோரது கதி என்னவாகும்? அத்துடன் தன் சிந்தனையை அடக்கிக் கொண்ட பால், இந்த இளைஞர்களுடன் கை குலுக்க எழுந்தான்.

''வெறுமே பார்த்துப் போகத்தான் நாங்கள் வந்திருக்கிறோம். இன்றிரவு நன்கு படித்தாக வேண்டும். பரீட்சை நெருங்கி விட்டதே'' என்ற மில்டன் லெயிட்னர், ஓரிரு பெரிய நூல்களை ஜானிடம் கொடுத்தான். ''இவற்றை நான் படித்துவிட்டேன். என் அறையில் தற்போதுள்ள குப்பைகளுக்குள் மறைந்து போகு முன் இவைகளைத் திருப்பிக் கொடுத்து விடலாமென்று நினைத்தேன்.''

''அப்படியானால் ஜோ நமக்கு ஏதாவது சேதி சொல்ல வந்திருப்பான்'' என்று முறுவலித்தான் பெக்கி.''

''எனக்கு அந்தக் குறை-நேர வேலை கிடைத்து விட்டது. படிப்போடு அதையும் நான் கவனித்துக் கொள்ள முடியும். எனவே எல்லாப் பிரச்னையும் தீர்ந்தது'' என்று கூறினான் ஜோ. அப்போது அவனுடைய மெலிந்த முகத்தில் மிளிர்ந்த மகிழ்ச்சி முறுவலை அவனால் அடக்கிக் கொள்ள முடியவில்லை. பிறகு அவன் பாலின் பக்கம் திரும்பி விவரித்தான்: ''இந்தக் கோடையில் எனக்குத் திருமணம். எடித்தை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள், இல்லையா?''

''எடித்தின் விஷயம்?—'' பெக்கி வினவினான்.

''எடித் வஸ்ஸாரை விட்டுப் போகிறாள். ஆனால் அவள் நியூயார்க்கில் தனது படிப்பைத் தொடருவாள். அவளுக்கும் ஒரு விளம்பரக் கம்பெனியில் குறை-நேர வேலையொன்று கிடைத்திருக்கிறது. நாங்கள் சமாளித்து விடுவோம்.''

''உனக்கும் எடித்துக்கும் இந்த ஏற்பாடு நல்லதுதான். ஆனால், எடித்தின் பெற்றோர்களை நீ வசப்படுத்தி விடுவாய் என்று நான் ஒரு போதும் எண்ணியதில்லை'' என்றான் ஜான்.

''ஓ, அவர்கள் மனிதத் தன்மையுடன் நடந்து கொண்டு விட்டார்கள். ஆனாலும் அவர்களுக்குச் சிறிது திகைப்புத் தான்'' என்று சிரித்தான் ஜோ. பிறகு, அவன் பார்த்திருக்கும்

வீட்டைப் பற்றிப் பெக்கியிடம் கூறினான். அவளும் அன்று பிற்பகல் அதை வந்து பார்த்துத் தன் கருத்தைக் கூறுவதாக உறுதி சொன்னாள். அதே சமயம் மில்டன் பாலின் அருகில் வந்தான்.

''இந்தக் காதல் விஷயத்தில் ஏதோ ஒன்று இருக்கிறது. விவாக ரத்துக்களின் எண்ணிக்கை அதிகமாகி வந்த போதிலுங்கூட, ஜனங்கள் இவ்விஷயத்தில் முயன்று கொண்டே இருக்கிறார்களே! ஜோவைப் பார்த்தால், அவன் அதிக வேலைகளை எடுத்துக் கொண்டு, அடுத்த ஐந்து வருஷங்களுக்கு சிரமமும், வேதனையும் அடையப் போகிறான் என்று நீங்கள் நினைக்க மாட்டீர்கள், இல்லையா?'' என்று வினவினான் மில்டன்.

''ஜோவைப் பார்த்தால், நாமும் அப்படிச் சிரமப்படலாம் என்றே தோன்றுகிறது. அவன் ஒரு நல்ல பிரசாரகன்.''

''என்னை விட அவன் தேவலாம். முன்பு நீங்கள் இங்கே சந்தித்தீர்களே—பாப் கேஷ்—அவன் தெல்மாவினுடைய சிறு விருந்துகளில் மயங்கி விட்டான்'' என்ற மில்டன், ஜாடை காட்டி மற்றவர்களை விட்டுத் தனியாக ஒரு மூலைக்குப் பாலை அழைத்துச் சென்றான்.

அங்கே மில்டன் சொன்னான்: ''நான் சிறிது ஆராய்ச்சி நடத்தி வருகிறேன். அதனால் பல விஷயங்கள் எனக்குப் புலனாகியுள்ளன. ஒரு காலத்தில், ஸ்காட் எட்லீ, ஜான் டைஸனின் மாணவர்களிடம் நெருங்கிப் பழகினான். அவனை அடுத்து மர்ரே. அவன் மூலமாக அந்த மாணவர்கள் நிகோலஸ் ஆர்பெனிடம் அழைத்துச் செல்லப்பட்டார்கள். ஆர்பென் அவர்களையெல்லாம் கவனித்துக் கொண்டான். அவர்களில் சிறந்தவர்கள் தெல்மா ஏற்பாடு செய்வதைப் போன்ற விருந்துகளிலும் ஆலோசனைக் குழுக்களிலும் தம்மை மறந்து சுழன்று வருகிறார்கள். இவர்களில் ஒரு சிலர் மட்டும் மீண்டும் ஆர்பெனிடம் அழைக்கப்படுகிறார்கள். அங்கு நடக்கும், சிறிய கூட்டங்களிலும், பெரிய விஷயங்களிலும், அவர்கள் பங்கு கொள்கிறார்கள். அப்போது அங்கே ஸ்காட் எட்லீ இருப்பதை அவர்கள் கண்டார்கள். ஆர்பெனைப் போலவே அவன் விலகினாற் போல் இருக்கிறான்; கட்சியில் உறுப்பினர்களாவது பற்றி அவர்கள் பேசுவதேயில்லை. மர்ரேயைப் போன்றவர்களிடம் அவற்றை விட்டிருக்கிறார்கள். மர்ரே காட்டும் வழியை ஏற்காத மாணவர்கள் மேலே முன்னேறுவதில்லை; ஏற்றுக்கொண்டவர்கள் வாய் திறப்பதில்லை. இப்படி ஒரு சில இளைஞர்களைத் தங்கள் வழிக்குத் திருப்புவதற்காக, ஒரு சிலர் இவ்வளவு சிரமங்களை ஏற்றுக்கொள்வது விசித்திரம் இல்லையா?''

பால் வியப்புடன் அவனை நோக்கினான். ''இவற்றையெல்லாம் நீ எப்படிக் கண்டுபிடித்தாய்?''

''கடந்த மூன்று வருஷங்களாக இங்கே வெள்ளிக்கிழமைகளில் வரும் மாணவர்களின் பெயர்களிலிருந்து தொடங்கினேன். அவர்களில் சிலருடன் நான் பேசினேன். அவர்கள், முதலில் ஆவலால் தூண்டப்பட்டு அந்த விருந்துகளுக்குச் சென்றவர்கள்; பிறகு அங்கே நடப்பதைப் புரிந்து கொண்டு, அங்கிருந்து ஓடிவந்து விட்டார்கள். அவர்கள்தாம் எனக்கு முழு விவரங்களையும் கூறினர்கள். அத்துடன் ஒன்று புரிகிறது; ஸ்காட் எட்லீ இப்போது ஆள் சேர்க்கும் வேலையில் இல்லை. கடைசியாக அவன் முயன்றது, என்னிடமும் பாப் கேஷிடமுந்தான். அது ஆறு மாதங்களுக்கு முன். இதிலிருந்து அவன் கம்யூனிஸ்டுக் கட்சியை விட்டுப் பிரிந்து விட்டான் என்று கொள்ளலாமா?''

பால் ஹேடன் அதற்குப் பதில் கூறவில்லை. இருக்கலாம் என்று அவன் நினைத்தான். அல்லது எட்லீ கட்சியில் முன்னேறிச் சென்றுமிருக்கலாம். ''இதைப்பற்றி நீ டைஸனிடம் கூறினையா?'' என்று மெதுவாக வினவினன் பால்.

மில்டன் லெயிட்னர் துயரத்துடன் அவனை நோக்கினன். ''எப்படி நான் சொல்ல முடியும்? நீங்கள் அவர் காதுகளில் ஒரு வார்த்தை போட்டு வைப்பீர்கள் என்று நான் நம்பிக் கொண்டிருந்தேன். யாராவது அப்படிச் செய்ய வேண்டும். ரோனுவைப் பற்றியும் கூட நினைக்க வேண்டியிருக்கிறது.''

பால் பதில் கூறவில்லை. ஆனல் அவன் கவலை அதிகரித்தது.

அச்சமயத்தில், பெக்கியிடமும், ஜானிடமும் விடைபெற்றுக்கொண்ட ஜோ, லெயிட்னரிடம் வந்தான். ''மில்ட்! நாம் புறப்படுவது நல்லது. இரண்டு மணி நேரமாவது இன்று படிக்க வேண்டாமா?''

''அவசியந்தான்'' என்ற மில்டன் லெயிட்னர் கதவை நோக்கி நடந்தான்.

பெக்கி கேட்டாள்: ''நான் கேட்க மறந்து விட்டேன். செய்ன்னியில் அந்த வேலையை நீ ஒப்புக்கொண்டு விட்டாயா?''

''ஆமாம்'' என்று தலையை ஆட்டினன் மில்டன்.

''நான் உங்களை வழியனுப்புகிறேன்'' என்று ஜான் அவர்களைக் கூடத்தின் வழியே இட்டுச் சென்றான். பிறகு மில்டன் லெயிட்னர் அறையை விட்டுச் சென்றதும், அவன் பாலை ஒருகணம் உற்று நோக்கினன்.

பெக்கி அதைக் கவனித்தாள். ''உங்களுக்கு அவனைப் பிடிக்கிறது, இல்லையா? ஜானுக்குக் கூடத்தான்'' என்றாள் அவள் பாலை நோக்கி. பிறகு, தொடர்ந்து, ''அவன் முன்னுக்கு வரக்கூடியவன் என்று ஜான் சொல்கிறார். ஜோவும் அப்படித்தான். அதனல்தான் அவன் படிப்பை நிறுத்தப்

போவதில்லை யென்று தெரிந்ததும், ஜானுக்கு அவ்வளவு மகிழ்ச்சி. ஜோ கல்யாணம் செய்து கொள்ள அவசரப்படுவதற்குக் காரணம், இந்த உலகத்தில் என்ன நடக்கப் போகிறதென்று அவனால் நம்ப முடியவில்லையாம். அவனை ஒத்தவர்கள் இப்போது இன்ப வாழ்விற்கு வாய்ப்பிருக்கும்போதே, அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிறான் ஜோ. அவர்கள் ஏன் இப்படி முதுமையை அடைந்து விட்டதாக நினைக்கிறார்கள்? நாம் அவர்களுடைய வயதில் அப்படியில்லையே?'' என்று வினவினாள்.

''இல்லைதான். ஏனெனில் முதல் உலக மகா யுத்தத்திலிருந்து எதையும் அறிந்து கொள்ளக்கூடிய வயது அப்போது நமக்கு ஆகவில்லை. ஆனால், இந்த இளைஞர்கள் இரண்டாவது யுத்தத்தின்போது வளர்ந்தவர்கள். அதுதான் வித்தியாசம்.'' இத்துடன் நிறுத்திய பால் சிறிதே தயங்கினான். பிறகு அவன் வாயிலிருந்து ஒரு பாடலே வெளிப்பட்டது:

எண்ணி லிரண்டும் இரண்டும் நாலே
என்றுமே ஐந்தும் மூன்றும் அல்ல
வண்ணமுற இதைக் காணவே மனிதன்
வருந்தினன் பல நான் வருந்துவன் இனியும்

''இதென்ன பால், பாடுகிறாயா? ஆனால் சோகமான பாடலாக இருக்கிறதே?'' என்று வினவினாள் ஜான்.

''என்னை ஒரு துயரம் தாக்கிற்று; அதை யார் மேலாவது திருப்ப எண்ணினேன்'' என்றான் பால் முறுவலுடன்.

இன்னமும் தன் எண்ணங்களிலேயே லயித்துக் கிடந்த பெக்கி துயரத்துடன் கூறினாள்: ''ஆமாம்... நாமெல்லாம் அந்த இரண்டும், இரண்டும், 'ஐந்து — மூன்று' என்று கூறும் தலைமுறையைச் சேர்ந்தவர்கள், இல்லையா?''

ஜான் பாலைப் பார்த்தான். ஹேடனை எது வருத்திக்கொண்டிருக்கிறது என்று வியந்த அவன், ''சரி...நாம் வசதியாக அமருவோம். உன்னுடைய பானக் கிளாஸ் எங்கே, பால்?'' என்று வினவினான்.

''நான் செல்ல வேண்டும். ஆனால், ஸ்காட் எட்லீயைப் பற்றி எனக்கு ஒரு சிறு தகவல் கிடைத்தது. அது வதந்தியாகக் கூட இருக்கலாம். ஆனால் நிச்சயமாக அது எதிர்பாராதது'' என்றான் ஹேடன்.

''அவனுடைய புது வேலையைச் சொல்கிறீர்களா?'' என்று வினவினாள் பெக்கி.

''அது என்ன?'' பால் அவளைச் 'சட்'டென்று நோக்கினன்.

''அவன் தனது அப்பாவின் பத்திரிகையில் சேரப் போகிறான். அவன் மட்டும் போதிய அளவு திறமையுடன் விளங்கினால், என்றாவது ஒரு நாள் அதன் ஆசிரியராகவும் ஆகிவிடுவான்.''

''அவனுக்குப் போதிய திறமையுண்டு. அதற்கு அவன் வழியும் செய்து கொள்ளுவான்'' என்று பால் ஹேடன் கசப்புடன் கூறியதும், ஜானும் பெக்கியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். பிறகு பால் கோபத்துடன் தொடர்ந்தான்: ''நாமெல்லாம் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம். நாமென்ன செய்ய முடியும்? வில்லியம் எட்லியிடம் போய்ச் சொல்ல முடியுமா? அவர் நம்மை நம்பமாட்டார். நான் என்னவோ போய்ச் சொல்லப் போவதில்லை.''

''அவரிடம் எதைச் சொல்வது?'' பெக்கி வினவினாள்.

பாலின் உதடுகள் கூடிக் கொண்டன. அவனுடைய சாம்பல் நிறக்கண்கள் கவலையால் கருத்து விட்டாற் போல் தோன்றின. ''நாம் உட்காருவது சிறந்தது. ஜான், மில்டன் லெயிட்னர் ஒரு சேதி சொன்னான். அது உண்மையெனில், நாமெல்லோருமே பாதிக்கப்படுவோம். வெவ்வேறுவிதத்தில். ஆனால்-''

அத் தருணத்தில் நீண்ட அலறல் ஒன்று அவர்களை எழச் செய்தது. மறுகணம் திடீரென்று அது நின்று, மீண்டும் மௌனம் நிலவியது.

''என்ன இது?'' பால் துடித்தான்.

''பாப்பி! அவன் அலறல்தான்!'' என்று அழுது கொண்டே ஜானுடன் இருண்டிருந்த ஹாலுக்குள் ஓடினாள் பெக்கி. பால் பின்தொடர முயன்றான். ஆனால் படுக்கையறையின் கதவுக்கு வெளியே அவன் நின்றான். பார்பராவும் விழித்துக் கொண்டு, பயத்தால் அலறினாள். ஆனால் பாப்பியிடமிருந்து இப்போது முனகல்தான் கேட்டது. பிறகு அதுவும் நின்று விட்டது.

ஜான் திரும்பி வந்து டாக்டருக்கு டெலிபோன் செய்ய ஆரம்பித்தான்.

''நல்ல வேளை, அவர் வீட்டில் இருந்தார்'' என்றான் ஜான் டெலிபோனை முடித்ததும். பிறகு ஒரு கணம் அங்கேயே நின்ற பின், ''ரோனுவிற்கும் தெரிவிப்பது நல்லது'' என்றவாறு மீண்டும் டெலிபோனை எடுத்தான்.

''அதை நான் செய்கிறேன். நீங்கள் போய் பார்பராவைச் சமாதானப்படுத்துங்கள். ஆனால், பாப்பிக்கு என்ன?'' என்று கேட்டான் பால், டெலிபோனைத் தன் கையில் வாங்கிக் கொண்டு.

பதில் கூறமுடியாமல் ஜான் தலையை அசைத்தான். சிறிய வெளுத்த முகம் வலியால் சுளிக்க, பயமடைந்த கண்கள் உதவிகோரப் படுக்கையில் நூலாகக் கிடந்த பாப்பியின் மேல் அவன் பார்வை பதிந்தது. அவன் தலையை ஆட்டி விட்டு மீண்டும் படுக்கை அறைக்குள் நுழைந்தான்.

ரோனுவின் டெலிபோன் நம்பரைச் சுழற்றினான் பால். பதில் கிடைக்கவில்லை. அவன் கடிகாரத்தைப் பார்த்தான். மணி பதினொன்றே கால். அதற்குள்ளாகவா அவள் படுத்திருப்பாள்? வெகு நேரம் டெலிபோனைக் காதில் வைத்திருந்தபின், அவன் நகர்ந்தான்.

தயக்கத்துடன் அவன் படுக்கையறைக் கதவண்டை நின்றான். அசையாது படுத்திருந்த பாப்பியின் மெல்லிய உருவத்தையும், பிறகு ஜான், பெக்கி இவர்களது தொங்கிய முகங்களையும் கண்ட அவனுடைய கண்கள் கலங்கின. படுக்கையின் அருகில் ஜான் நின்று கொண்டிருந்தான். பார்பராவைக் கையில் வைத்துக் கொண்டு பெக்கி அமர்ந்திருந்தாள். பார்பராவின் கேள்விகள்தாம் அங்கிருந்த மௌனத்தைக் கலைத்தன.

வெளியே கதவு மணி அடித்தது. ஜான் அவனைத் தாண்டிக் கொண்டு திறக்க ஓடினான்.

''நான் பார்பராவைப் பார்த்துக் கொள்கிறேன்'' என்ற பால், அவளைக் கூடத்து அறைக்குத் தூக்கிச் சென்றான். பின்னாலே ஜானுடன் பேசிய டாக்டரின் குரல் அவன் காதில் விழுந்தது.

அறையிலே பார்பரா நன்கு விழித்துக் கொண்டு பாலின் மடியில் அமர்ந்தாள். பிறகு தன் விழிகளை அகல விரித்துக் கொண்டு, ''ஒரு கதை சொல்லு'' என்று உத்தரவிட்டாள்.

''சரி... கேட்டு விட்டுத் தூங்கி விடுவாயல்லவா?''

அவள் தலையை அசைத்தாள்.

பால் கதை சொல்ல ஆரம்பித்தான். அப்போது மருத்துவ மனைக்கு டாக்டர் டெலிபோன் செய்வதையும் அவன் கேட்டான். அவசரமான ஆபரேஷன். ஆம்புலன்ஸ் வண்டி வரும் வரை கூடக் காத்திருக்க முடியாது. டாக்டர் தன் காரிலேயே குழந்தையைக் கொண்டு செல்லப் போகிறார்.

ஜான் பின்புறமாக வந்து கூறினான்: ''நாங்கள் செயின்ட் லூக் மருத்துவ மனைக்குப் போகிறோம். ரோனு இங்கே வருகிறாளா?''

''அவள் வரும் வரையில் நான் காத்திருக்கிறேன்'' என்றான் பால்.

''நான் கதை கேட்கிறேன்'' என்றாள் பார்பரா மகிழ்ச்சியுடன், பாலைப் பார்த்தபடி.

''சமர்த்துப் பெண்'' என்று ஜான் குனிந்து அவள் தலையின் பின்புறத்தில் முத்தமிட்டான். பிறகு மௌனமாக வந்த மாதிரியே அந்த அறையை விட்டு வெளியே போனான்.

பால் மேலே கதையைத் தொடர்ந்தான். சற்றைக் கெல்லாம் அவன் குனிந்து நோக்கி முறுவலித்துக் கொண்டான்; பார்பராவின் கண்கள் மூடியிருந்தன. அவள் தூங்கி விட்டாள்.

என் கதைக்கு நல்ல பலன்தான் என்று எண்ணினான் பால். மேலும் சில நிமிடங்கள் அவன் பொறுத்திருந்தான். பிறகு அவளைக் கட்டிலில் கொண்டுபோய் விடுவதற்காக எழுந்திருந்தான்.

காலியாக இருந்த பாப்பியின் கட்டிலை ஒரு கணம் நின்று நோக்கினான் பால். பிறகு உறங்கிக் கொண்டிருக்கும் பார்பராவையும் ஒரு தடவை நோக்கி விட்டு, டெலிபோன் செய்வதற்காகத் திரும்பிச் சென்றான். ரோனாவின் விடுதியிலிருந்து பதில் ஒன்றும் கிடைக்கவில்லை.

★ ★ ★

அநேகமாக நள்ளிரவாகி விட்டது. இன்னமும் மருத்துவ மனையிலுள்ள ஜானிடமிருந்து எந்தத் தகவலும் வரவில்லை ரோனாவுக்குச் செய்த டெலிபோன்களுக்கும் பதில் கிடைக்கவில்லை.

பால் ஹேடன் அந்த விடுதி முழுவதிலும் ஒரு தடவை நடந்தான். பிறகு மீண்டும் டெலிபோன் இருந்த இடத்திற்குத் திரும்பினான். இத்தடவை மருத்துவ மனைக்குப் போன் செய்தான். ஒரு பெண்மணியின் பதற்றமற்ற குரல் கேட்டது. தனக்கு ஒன்றும் தெரியாதென்றும், விசாரித்துக் கூறுவதாகவும் அவள் சொன்னாள். டாக்டர் டைஸனிடம் அவனுடைய சேதியைத் தெரிவிப்பதாகவும் சொன்னாள்: வீட்டில் எல்லாம் சரியாக இருக்கிறது; பார்பரா தூங்கி விட்டாள். நிலைமையில் ஏதாவது மாறுதல் இருந்தால் உடனே பாலுக்கு டெலிபோன் செய்வதாகவும் அவள் சொன்னாள் .....

பால் ஹேடன் டெலிபோனைக் கீழே வைத்தான். தினசரி எத்தனை கவலை மிகுந்த குரல்களுக்கு அவள் பதிலளிக்க வேண்டும் என்று வியந்தான் அவன். வலியும், கவலையும், துக்கமும் அவளுக்கு சகஜமாகி விட்டிருக்கும். அவள் பாலுக்கு டெலிபோன் செய்வாளா? பாப்பி எப்படியிருக்கிறான் என்று கண்டறிய அவளுக்கு நேரம் இருக்குமா?

டெலிபோன் அவனுக்குப் பதிலளித்தது. நீண்ட அக்கூடத்தில் அவன் திரும்பி ஓடினான். ஆமாம், அதே மென்குரல்; செய்தியும் நல்லதாக இருந்தது. ஆபரேஷன் முடிந்து விட்டது. குழந்தை மயக்கம் தெளிந்து கொண்டிருந்தான். பெற்றோர்கள் குழந்தையுடன் இருந்தார்கள்.

''எல்லாம் சரியாக இருக்கிறதல்லவா?'' என்று வினவினான் பால்.

''எதிர்பார்த்த அளவுக்கு நன்மைதான்'' என்றது அந்த நிதானமான குரல்.

''ரொம்பவும் ஆபத்தோ? சிறிதாவது நம்பிக்கை இருக்கிறதல்லவா?''

''முன்பை விட இப்போது நல்ல நம்பிக்கை இருக்கிறது.''

''ஆனால் குழந்தை எப்படியிருக்கிறான்?'' கோபத்தோடு வினவினான் பால். அதே சமயம் வெளியே கதவு மணி ஒலித்தது. அதைப் பொருட்படுத்தாமல் அடுத்த பேச்சைக் கவனித்தான்.

''குழந்தை நிம்மதியான ஓய்வில் இருக்கிறான்'' என்றாள் அவள்.

''நன்றி; இவ்வளவு சீக்கிரம் அழைத்துச் சேதியைத் தெரிவித்ததற்கு மிகவும் நன்றி'' என்றான் குரலில் நன்றி துளும்ப.

''நீங்கள் வேண்டுமானால் இங்கே வரலாம். இப்போது கவலைப்படத் தேவையில்லை'' என்ற நர்ஸ் மறுபுறத்தில் டெலிபோனைக் கீழே வைத்தாள்.

பால் ஹேடன் கதவண்டை சென்றான். அப்போது கதவு மணி மூன்றாவது தடவையாக ஒலித்துக் கொண்டிருந்தது. பின்னால் பார்பராவின் அறையிலிருந்து அழுகைக் குரல் வேறு கேட்டது. அவன் கதவைத் திறந்தான்.

வெளியே இருந்தவள் ரோனா. கூடவே ஒரு போலீஸ்காரனும், மெலிந்த முகமும் கருத்த சிகையுமுடைய ஒரு மனிதனும்.

''நீங்கள்தாம் இப்பெண்ணின் அக்காள் புருஷனா?'' போலீஸ்காரன் வினவினான்.

''இல்லை. அவர் வெளியில் போயிருக்கிறார்'' என்ற பால் ஹேடன் திரும்பி, ''ரோனா—'' என்றான்.

''சரிதானே மிஸ்?'' என்று வினவினான் கூட வந்தவன்.

ரோனா தலையை அசைத்து விட்டு உள்ளே அடியெடுத்து வைத்தாள்.

''ரோனா'' என்றான் பால் மறுபடியும்.

ரோனா முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டாள். கையைக் கழுத்தின்மேல் வைத்துக் கொண்டு, அவன் அவளைத்

தொடுவதைத் தவிர்க்க விரும்புபவள் மாதிரி பக்கவாட்டில் நகர்ந்து கொண்டாள். மறு கணம் திரும்பிப் பார்க்காமல் அந்த நீண்ட கூடத்தினுள் நடந்தாள். பிறகு 'சட்'டென்று நின்றவள், அப்போது தான் பார்பரா அழுததைக் கேட்டவள் மாதிரி, படுக்கையறைக்குள் சென்றாள்.

''அவளுக்குச் சிறிது அதிர்ச்சி. சென்டிரல் பார்க்கில் அவள் தாக்கப்பட்டாள். ஆனால் அவளுக்கு ஒன்றுமில்லை'' என்று தாழ்ந்த குரலில் கூறினான் போலீஸ்காரன். ''நாங்கள் பிற்பாடு வந்து அவள் ஏதாவது விவரங்கள் தரக் கூடுமானால் பெற்றுக் கொள்கிறோம். இன்றிரவு அவளிடம் விவரமான கேள்விகளைக் கேட்பது நல்லதில்லை. அவளுடன் கூட இருந்தவனை ஓர் உதவியென்றே சொல்ல முடியாது.''

''நீங்கள் உள்ளே வந்து விவரமாகச் சொல்லுங்கள். அவளுடைய அக்காவும், அவள் கணவரும் மருத்துவ மனையில் இருக்கிறார்கள். இங்கே கூடச் சிறிது சங்கடங்கள் நேர்ந்துள்ளன'' என்று பால் சுருக்கமாக நடந்ததைக் கூறினான்.

ரோனா விடுதிக்குள் நுழைந்ததுமே மறைமுகமாகப் பின் தங்கி விட்ட மற்றவன் திடீரென்று இப்போது முன்னால் வந்தான்.

''நீங்கள் யார்?'' என்று வினவினான் பால் அப்புது மனிதனுடைய உடைகளையும், சாம்பல் நிறத் தொப்பியையும் பார்த்தபடி. பிறகு தான், பென்னீஸ் ஹோட்டலில் பார்த்த மனிதன் அவன் என்று அவனுக்கு நினைவு வந்தது.

''ஓ, இவரா? அது நடந்தபோது அந்த வழியாகப் போக நேர்ந்த மனிதர் இவர்'' என்றான் அப்போலீஸ்காரன்.

''நீங்கள் இருவரும் உள்ளே வாருங்கள். எனக்கு உங்கள் உதவி மட்டுமின்றி, நடந்தது பற்றிய சேதியும் தேவையென்று நினைக்கிறேன்'' என்ற பால் இன்னமும் 'அவ்வழியே போக நேர்ந்த' அந்த மனிதனைக் கவனித்துக் கொண்டிருந்தான். பிறகு தொடர்ந்து, ''நீங்கள் அங்கேயிருந்தது நல்லதாகப் போயிற்று. குமாரி மெட்லிபோர்டைக் கவனித்துக் கொள்வதற்காக நியமிக்கப்பட்ட அந்த எஃப்.பி.ஐ. ஆளுக்கு என்ன நேர்ந்ததோ தெரியவில்லை. அவனுக்குச் சாமர்த்தியம் போதாதென்று நினைக்கிறேன்'' என்றான்.

அந்த மனிதன் பாலை நிமிர்ந்து நோக்கினான். ''சரி.... என் உதவி உங்களுக்குத் தேவையாக இருக்குமானால்....'' என்று இழுத்தபடி உள்ளே அடியெடுத்து வைத்தான்.

இப்போது பார்பராவின் அறையில் நிசப்தம் நிலவியது. இன்னமும் ரோனா அதனுள்ளே தான் இருந்தாள்.

"நாம் என்ன செய்யலாம்?" என்று பால் வினவினன் தயங்கியபடி.

''அவளைக் குழந்தையுடன் விட்டு விடுங்கள்'' என்ற போலீஸ்காரன் முகச்சுளிப்புடன் தன் கடிகாரத்தைப் பார்த்தான்.

''அவளைத் தூங்கும்படி செய்வது நல்லது'' என்றான் மற்றவன். அந்த மூன்று பேரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர்.

''அதை நான் கவனிக்கிறேன்" என்ற போலீஸ்காரன் கதவைத் திறந்து கொண்டு பார்பராவின் அறைக்குள் நுழைந்தான். அங்கே ஒரு கணம் ஜாக்கிரதையாகச் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, மெதுவாக மீண்டும் கதவை மூடிவிட்டுத் திரும்பி வந்தான். ''நம் இருவரது யோசனைகளையும் அவள் ஏற்றுக் கொண்டிருக்கிறாள். குழந்தையின் கட்டிலை அடுத்த மெத்தையில் படுத்து அவள் தூங்கிப்போய் விட்டாள்'' என்று தன் கூட வந்தவனிடம் போலீஸ்காரன் புன்முறுவலுடன் சொன்னான். பிறகு அவன் பாலின் பக்கம் திரும்பி, ''இப்போது நாங்கள் செய்யவேண்டியது, உங்களிடம் நடந்ததைக் கூறுவதுதான்'' என்றான்.

அவர்கள் அடுத்திருந்த அறைக்குள் நுழைந்தார்கள்.

''குமாரி மெட்ஃபோர்டுடன் இருந்தவன் யார்?" என்று வினவினன் பால்.

போலீஸ்காரன் தன் நோட்டுப் புத்தகத்தைத் திறந்தான்: ''அவன் பெயர் ஸ்காட் எட்லீயென்று அவள் கூறினாள்."

''உயரமும் வாளிப்புமான இளைஞன். நல்ல புஜங்கள்; நீலமான, அல்லது சாம்பல் நிறமான கண்கள்" என்றான் மற்றவன்.

''ஆமாம், அவன் ஸ்காட் எட்லீதான்" என்றான் பால் ஹேடன் மெதுவாக. திடீரென்று அப்போது அவன் முகம் வெளுத்தது, உதடுகள் கூடியிருந்தன. அவன் ஒரு தடவை நீள் மூச்செறிந்தான். பிறகு, ''மேலே சொல்லுங்கள்" என்றான்.

★ ★ ★

சுருக்கமாக விஷயத்தைக் கூறிவிட்டுச் சற்றைக்கெல்லாம் அவர்கள் சென்று விட்டனர். போலீஸ்காரனுடைய உணர்ச்சியற்ற குரல் அப்பட்டமான உண்மைச் செய்தியைக் கூறியது. அவர்கள் வாசற்கதவை நோக்கி நடக்கும்போது, ''கவலை வேண்டாம். அவர்களில் ஒருவனைப் பிடித்து விட்டோம். மற்றவர்களையும் பிடித்து விடுவோம். மற்றவர்களில்

ஒருவன் பார்க்கிலுள்ள ஸி. ஐ. டி.யின் துப்பாக்கிக் குண்டி ஞல் அடிபட்டுக் கொண்டுதான் ஓடியிருக்கிருன். புல் தரையில் ரத்தம் கூடக் காணப்பட்டது. அவர்கள் மூவரையுமே பிடித்து விடுவோம். ஒருவனைப் பிடித்து விட்டால், மற்றவர்களையும் பிடித்த மாதிரித்தான். பயந்தாங்கொள்ளிகள்'' என்று கூவி விட்டு 'ஜீப்பி'ல் ஏறினன் போலீஸ்காரன். மற்றவனும் தொடர்ந்தான்.

ஸ்காட் எட்லீயைப்பற்றியே நினைத்துக் கொண்டிருந்த பால் ஹேடன் கதவை மூடிவிட்டு விளக்குகளையும் அணைத்தான்.

படுக்கையறைக்குள் நுழைந்த அவன் கீழே குனிந்து ரோஜைவைப் பார்த்தபடி இருளில் நின்ருன். அவள் உறக்கத்தி லிருந்தாள். செத்த பிணம் மாதிரி ஆழ்ந்த உறக்கம். அவ ளுடைய கால்களிலிருந்த செருப்பை அவன் மெதுவாகக் கழற் றினன். ஒரு போர்வையையும் எடுத்துப் போர்த்திவிட்டபின், மெதுவாக அறைக்கு வெளியே வந்தான்.

தனது நாற்காலிக்குப் பக்கத்திலிருந்த படிக்கும் விளக் கைத் தவிர மற்ற விளக்குகளையெல்லாம் அணைத்தான். கண் களை மூடிக்கொண்டு மல்லாந்து படுத்த அவன், போலீஸ் காரன் கொடுத்த செய்தியை வார்த்தைக்கு வார்த்தை நினைத் துக் கொண்டான். ஸ்காட் எட்லீ! அவன் கழுத்தை நான் முறிக் கப் போகிறேன் என்று எண்ணினன் அவன். ஆமாம், எட்லீ கெட்டிக்காரன்தான்; ஆனல் தூக்கில் போடுவதற்கும் அவன் மோசமானவன் இல்லை!

அத்தியாயம் 23

காலை மணி ஆறு இருக்கும். கதிரவனின் இளங்கதிர்கள் திரைச் சீலைகளின் வழியே உள்ளே புகுவதற்கும் பால் ஹேடன் எழுந்திருப்பதற்கும் சரியாக இருந்தது. அதே சமயத்தில் ஜான் டைஸனும் வீடு திரும்பினன். அவன் கதவண்டை நின்று, பாலையும் அவனுடைய கசங்கிய உடைகளையும், உற்று நோக்கி ஞன்.

பால் முழங்காலைத் தடவிக்கொண்டே, ''பாப்பிக்கு எப்படியிருக்கிறது?'' என்று விசாரித்தான்.

ஜான் பதில் கூறவில்லை. அவனுடைய வெளுத்த முகம் குறிப்பின்றிப் பாலை நோக்கிற்று. ''அவன் இன்னமும் உயிரோடுதான் இருக்கிறான்'' என்று குரல் தடுமாறினான் ஜான்.

''பெக்கி எப்படியிருக்கிறாள்?''

ஜான் தன்னை நிதானப் படுத்திக் கொண்டான், ''அவள் தைரியமாக இருக்கிறாள். நான் சில சாமான்களை எடுத்துப்போக வந்தேன். பெக்கிக்கும், எனக்கும்...ஏதாவது ஏற்பாடு செய்து கொண்டு எங்களில் ஒருவர் எப்போதும் அங்கே பாப்பியுடன் இருக்கவேண்டும். நேற்றிரவு அவன் இருக்கும் அறையின் கதவுக்கு வெளியே நாங்கள் உட்கார்ந்திருந்தோம். எங்களை உள்ளே அநுமதிக்கவில்லை. இன்றிரவு அவனுடைய அறைக்குள்ளே ஒரு கட்டிலைப் போட ஏற்பாடு செய்யவேண்டும். அவனுடன் பெக்கி தங்கப்போகிறாள். பார்பராவை ரோனா பார்த்துக் கொள்வாளானால், நான் இங்கேயும், மருத்துவ மனையிலுமாக இருப்பேன். பார்பரா எப்படியிருக்கிறாள்?''

அவன் பதிலுக்குக் காத்திருக்கவில்லை. கூடத்து அலமாரியைத் திறந்து, ஒரு தோல் பெட்டியை எடுத்து வந்தான். பிறகு அவன் தன் படுக்கையறைக்குச் சென்றான். கை நிறைய கைக்குட்டைகளையும், ஓர் இரவு உடையையும் எடுத்துக் கொண்டு திரும்பினான். ''டூத் பிரஷ்'' என்று தனக்குள் கூறிக் கொண்டு குளியலறைக்கு விரைந்தான். திரும்பி வந்ததும், சேகரித்த சாமான்களைப் பொட்டலம் கட்டினான்.

பிறகு, ''பாப்பிக்கு அவள் எதுவோ வேண்டுமென்றாள்... அட கடவுளே, ஒரு குழந்தை அவ்வளவு வலியை எப்படித் தாங்கும்? என்னவோ உயிருடனாவது இருக்கிறான். பிழைக்க வாய்ப்பிருக்கிறதென்று டாக்டர்கள் சொல்கிறார்கள். அது உண்மைதானே, பால்? முதலில் 'ஆபரேஷனு'க்குக் குழந்தையை எடுத்துச் சென்றபோது, ஒன்றும் சொல்வதற்கில்லை என்றார்கள்; இப்போது சிறிது நம்பிக்கையிருக்கிறது என்கிறார்கள். அவர்களை நம்பலாமா, பால்?'' என்று வினவினான் ஜான்.

''நம்பலாம்...இதோ பாருங்கள் ஜான், நான் நமக்குச் சிறிது காஃபி தயாரிக்கப்போகிறேன். அதற்குள் நீங்கள் சீக்கிரமாகவே க்ஷவரத்தையும், குளியலையும் முடித்துக் கொள்ளுங்கள். பிறகு நீங்கள் மருத்துவ மனைக்குச் சென்று பெக்கியை அனுப்பினால், அவளுக்கும் சாப்பிட நேரம் கிடைக்கும். இல்லையா?''

ஜான் தலையை அசைத்தான். பெட்டியைத் திறந்தபடியே தரையில் போட்டு விட்டுக் குளியலறையை நோக்கி ஓடினான். அவன் தனக்குத்தானே ஏதோ ஆறுதல் அடையும் வகையில்

பேசிக் கொண்டான்: ''சின்னக் குழந்தைகள் விஷயம் இப்படித்தான். எச்சரிக்கையின்றி திடீரென்று ஏதாவது பெரிதாக வந்து விடுகிறது. என்ன வந்து விட்டதென்று புரிவதில்லை. டாக்டர் அண்மையில் வசிக்காமலிருந்தால், நேற்றிரவு உடனேயே அவர் வராமலிருந்தால், நானும் பெக்கியும் எங்கேயாவது வெளியே போயிருந்தால்...ஓ...கடவுளே!''

''ஆனால் நீங்கள் மருத்துவ மனையில் பாப்பியைச் சேர்த்து விட்டீர்களே. தவிர அவன் பிழைப்பானென்று நம்பிக்கையுமிருக்கிறதே! அதனால் நீங்கள் மனம் நொந்து கொள்வது நல்லதில்லை, ஜான்'' என்று மெதுவாகக் கூறினான் பால். அப்போது அவன் ரோனா வந்ததிலிருந்து தான் அடைந்த வேதனையை நினைத்துக் கொண்டான். இந்தப் புத்திமதியை நானே எனக்குக் கூறிக்கொண்டு இருக்கவேண்டும் என்று அவன் நினைவு ஓடியது.

''பார்பரா சரியாக இருக்கிறாளா? ரோனா அவளுடன் தானே இருக்கிறாள்?'' என்று வினவிய ஜான், அந்த அறைப் பக்கம் பார்த்தான்.

''அவர்கள் தூங்கட்டும்; முதலில் நீங்கள் க்ஷவரத்தையும் குளியலையும் முடியுங்கள்'' என்ற பால் சமையலறைக்குச் சென்றான். ரோனாவையும், ஸ்காட் எட்லீயையும் பற்றி அவன் ஜானிடம் என்ன சொல்லப் போகிறான்? சிறிது சொல்வதா, முழுவதையுமா! எப்படியும் இன்றோ, நாளையோ அவன் அறிந்து கொள்ளத்தான் வேண்டும். ரோனாவுக்காக மட்டுமில்லை. அவனுடைய சொந்த நன்மையை உத்தேசித்தும்தான்.

சீக்கிரமே ஜானும் சமையலறைக்கு வந்தான். அவன் கசங்கிய உடைகளைக் களைந்துவிட்டு வேறு உடையிலிருந்தான். தவிர அவன் குளிர்ந்த நீரில் குளித்ததாலோ என்னவோ ஒரு புதுத் தெம்புடனும் காணப்பட்டான். உடனே அவன் பேசினான்: ''பார்பராவைக் காண நான் அவளுடைய அறைக்குள் நுழைந்தேன். ரோனா—அவள் இன்னமும் பகல் உடையிலேயே இருந்தாள். அவைகள் கிழிந்தும் உள்ளன. கழுத்தண்டை ஒரு காயம் வேறு. என்ன நடந்தது பால்?''

''நிதானப்படுத்திக் கொள்ளுங்கள் ஜான். ஒன்றும் விபரீதமாக நடந்துவிடவில்லை.''

''விஷயம் என்னவென்று நீ கூறுவது நல்லது'' என்றான் ஜான். அவன் முகம் வெளுத்துவிட்டிருந்தது.

''இதோ, கொஞ்சம் காஃபி குடியுங்கள். பிறகு, எனக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறேன்.'' பால் ஜானின் முகத்தைக்

கவனித்துக்கொண்டே விஷயத்தைச் சொன்னான். போலீஸ்காரனிடமிருந்து அறிந்த சுருக்கமான விவரங்களைக் கவனமாகத் தேர்ந்தெடுத்த வார்த்தைகளில் கூறிய பால், முட்டி வந்த தன் மன உணர்ச்சிகளையும் இயன்றவரையில் மறைத்துக்கொண்டான்.

அவன் முடித்ததும் ஜான், ''வந்தது முதல் ரோனு இப்படித்தான் தூங்கிக்கொண்டிருக்கிறாளா?'' என்று கேட்டான்.

''ஆமாம். அவளுடைய நரம்புத் தளர்ச்சிக்கு இதுதான் சிறந்த வைத்தியம். போன் செய்து ஒரு நர்ஸை வரவழைக்கலாமா என்று நினைத்தேன். ஆனால் இதைப்பற்றி அதிகமாகக் கலவரம் செய்யாமலிருப்பது நல்லது. ரோனுவும் அதைத்தான் விரும்புவாள்.''

ஜான் தலையை அசைத்தான். பிறகு அவன் வாய் இறுகியது. ''எட்லீ மறைந்தா ஓடிவிட்டான்? திருடர்களுடன் சண்டைகூடப் போடாமல் இருந்துவிட்டுப் பிறகு ஓடியும் விட்டானா? ஆனால், ஏன் அப்படி? அவன் ஒரு பயந்தாங்கொள்ளி என்று எனக்குத் தெரியாது. அவனுக்குப் பைத்தியமா, என்ன?''

''அவன் பயந்தாங்கொள்ளி என்று நான் நினைக்கவில்லை; அவனுக்குப் பிரமை பிடித்திருக்குமென்றும் நான் நினைக்கவில்லை'' என்றான் பால்.

ஜான் தலையை ஆட்டியபடி, ''நல்ல புத்தியிலுள்ள எந்த மனிதனும் அப்படி நடந்து கொண்டிருக்க மாட்டான்'' என்றான்.

''ரோனுவை அவன் பார்க்கிலே அந்த இருள் கவிந்த இடத்திற்கு அழைத்துச் சென்றானென்றால், அதற்குக் காரணம் இருந்திருக்க வேண்டும். போலீஸ் ஸ்டேஷனுக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னதும், அவன் மறைந்துவிட்டானென்றால் அதற்கும் காரணம் இருந்திருக்க வேண்டும். அவனுடைய காரணங்கள் நமக்குப் பிடிக்காமலிருக்கலாம். அவைகளை நாம் புரிந்து கொள்ளவும் முடியாது. ஏனெனில் நாம் வேறு உலகத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால், அவனுக்கென்று ஏதோ காரணங்கள் உள்ளன என்பது மட்டும் உண்மை. அவற்றைக் கண்டுபிடிக்க நான் பெரிதும் விரும்புகிறேன்.''

''அவன் பற்களை நான் உடைக்க விரும்புகிறேன்! ஆனால் நீ என்னவோ ரொம்பவும் இதைப் பற்றி நிதானமாகப் பேசுகிறாய் பால்'' என்றான் ஜான். மீண்டும் அவனுக்குக் கோபம் பிறந்தது.

"நேற்றிரவு நான் அவன் கழுத்தை நெரிக்கவே தயாராக இருந்தேன். ஆனால் சிந்தித்துப் பார்க்க எனக்குச் சிறிது நேரம் கிடைத்தது. மேலே என்ன செய்ய வேண்டுமென்று எனக்குப் புரிந்துவிட்டது. எட்லீயின் காரணங்களை நான் கண்டுபிடிக்கப் போகிறேன். அவனுக்கு இவற்றையெல்லாம் போதித்தார்களே, அவர்களுக்கு இனியும் அவன் பயன்படுவதை நிறுத்தப் போகிறேன். ஆமாம்...தோழர் எட்லீயைப் பற்றிய எல்லா விஷயங்களையும் நான் கண்டறியப் போகிறேன்."

"கசப்பான வேடிக்கைகளுக்கு இப்போது இடமில்லை, பால். எனக்கு இப்போது முறுவலிக்கக்கூடச் சக்தியில்லை" என்றான் ஜான்.

"நான் கேலியாகப் பேசவில்லை. உங்களைப் போலவே தீவிரமாக, உண்மையாகத்தான் பேசுகிறேன்."

"ஜான் அவனை வெறித்து நோக்கினான். "எட்லீ ஒரு கம்யூனிஸ்ட் என்று சொல்கிறாய்? நான் நம்பமாட்டேன். உனக்குப் பைத்தியம், பால்."

"அப்படியானால், மில்டன் லெயிட்னருக்கும் பைத்தியந்தான்."

"ஆ..." என்றான் ஜான். நேற்றிரவு மில்டன் இங்கே வந்ததும், அறையின் மறு மூலையிலே அவன் ரகசியமாகப் பாலுடன் பேசியதும், பிறகு அவன் வேதனை மிக்க முகத்துடன் திரும்பிச் சென்றதும், பால் கவலை ததும்ப பெக்கியிடமும், ஜானிடமும் ஏதோ செய்தி ஒன்றைச் சொல்ல முன்வந்ததும், ஜானுக்கு இப்போது நினைவு வந்தன. அப்படியானால் மில்டன் லெயிட்னர் தான் இச்செய்தியைக் கொண்டு வந்திருக்க வேண்டும். "இதற்கு ஏதாவது சான்று இருக்கிறதா? இல்லை, இது வெறும் சந்தேகமா?" என்று கேட்டான் ஜான். அவனுடைய குரல் மீண்டும் நிதானத்தை அடைந்திருந்தது.

"அதைத்தான் முதலில் நான் கண்டுபிடித்தாக வேண்டும். அதைத் தெரிந்து கொண்டபின் மேலே செயலில் இறங்குவேன்" என்ற பால் ஹேடன், மேலும் ஒரு கிண்ணம் காஃபியைத் தம்ளரில் ஊற்றிக்கொண்டான்.

"ஆனால் இதையெல்லாம் நீ எப்படிச் செய்யப் போகிறாய்?"

"முதலில் நாம் வயிற்றுக்கு ஏதாவது போடுவோம்" என்று சில ரொட்டித் துண்டுகளை ஜானிடம் நகர்த்தினான் பால்.

''பால், நீ எப்படி உண்மையைக் கண்டுபிடிக்கப் போகிறாய்? உன் முழு நேரத்தையும் செலவழிக்க வேண்டியிருக்குமே!'' என்றான் ஜான் விடாமல்.

''செலவழித்தால் என்ன?''

''ட்ரெண்டு வேலையை விட்டு விடுவேன் என்கிறாயா? ஆனால் பால், நீ உன் உத்தியோகத்தை விடலாமா? இப்போது தான் நீ அதில் மீண்டும் சேர்ந்தாய்?''

''எட்லியும், அவன் கூட்டத்தினரும் எல்லாவற்றையும் பிடித்துக்கொண்டு விட்டால், நம்மில் பலருக்கு விடாமல் பிடித்துக்கொள்ளக் கூடிய நல்ல உத்தியோகங்கள் எவையும் இரா. தவிர, நான் என்ன செய்யப்போகிறேன் என்பது எட்லீயின் தோழர்களுக்குத் தெரிந்துவிட்டால், அவர்கள் எனக்கெதிராகப் பிரசாரம் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். பிறகு எனக்கு உத்தியோகமென்ன, கௌரவமே குறைந்துபோய் விடாதா?'' என்று சிரித்தான் பால்.

''அவர்கள் பலம் மிக்கவர்கள் என்று சொல்கிறாய்?''

''நாம் எவ்வளவு பலம் அளிக்கிறோமோ, அந்த அளவுக்கு அவர்கள் பலசாலிகள்தாம்.''

''ஆமாம்'' என்றான் ஜான் கசப்புடன். ''நம்முடைய நல்லெண்ணத்தைப் பயன்படுத்திக் கொண்டு, பிறகு அதை நமக்கு எதிராகவே ஆயுதமாக உபயோகிக்கிறார்கள்.'' மில்டன் லெயிட்னர் கொணர்ந்த செய்தியை அவன் நினைத்துக் கொண்டான். அதன் பலாபலன்களையும் அவன் எண்ணிப் பார்த்தான். அவனுடைய மாணவர்களுடன் எட்லீ நட்புக் கொண்டது; அவர்களைச் சாதாரணமாக அறிமுகம் செய்வது போல் மார்ரேயிக்கு அறிமுகம் செய்வித்தது; அந்த விருந்துக்கான அழைப்புக்கள்; நிகோலஸ் ஆர்பெனுடன் அவர்களைத் தொடர்புகொள்ளச் செய்வதற்கான அந்தக் குறுக்கு வழி... ''ஆனால், என்னால் அதை நம்ப முடியாது. எட்லீ கம்யூனிஸ்டா?'' என்று தனக்குள் கூறிக்கொண்டான் ஜான். பிறகு ஜானைப் பார்த்துத் தொடர்ந்தான்: ''உன் யூகம் தவறாக இருக்கும் என்று என்னால் எண்ண முடியாது. இதுமட்டும் உண்மையாயின், நிச்சயம் நானும் அவர்களுக்கு உதவி செய்த முட்டாள்தான்!''

''நானும் அப்படித்தான்'' என்றான் பால். முதன் முதலில் ரோஜர் பிரௌன்லி கூறியதைத் தான் கேட்க மறுத்ததை அவன் அப்பொழுது நினைவு கூர்ந்தான். பிறகும் அரை மனத்துடன்தான் அவருடைய வார்த்தைகளை அவன் நம்பினான். தன்னை நிம்மதியின்றி அலைத்த மனச்சாட்சியைச் சபித்துக் கொண்டு வேண்டாவெறுப்புடன்தான் அவன் பிரௌன்லியின்

குழுவில் சேர்ந்தான். ஆனல் இன்று—உடனே ரோஜரைப் பார்க்கவேண்டும் என்று எண்ணினன். அவர் ஏதாவது யோசனைகள் கூறி, இம்மாதிரி வேலைகளில் அவனைவிட அனுபவம் உள்ளவர்களுடன் அவனுக்குத் தொடர்பு ஏற்படுத்திக்கொடுப்பார். தவிர அவனுக்கும் நல்லவேளையாகச் சிறிது அநுபவம் கிடைத்திருக்கிறதே. நாஜிகளுக்கு எதிராக அவன் வேலைசெய்த அநுபவம் இப்போது பயன்படும்.

''நான் உணர்ச்சியற்றுப் போய்விட்டேன். எட்லீயைப் பற்றி என்ன செய்யவேண்டுமென்று என்னல் சிந்திக்கக்கூட முடியவில்லை'' என்ருன் ஜான். ஆனல் அவன் குரல் அமைதியாக இருந்தது.

''நானே இவ்விஷயமாக செயல்படப் போவதாகச் சொன்னேனே'' என்ருன் பால்.

''என்னைத்தான் அதிகம் குறைகூற வேண்டும். குறையுள்ளவர்கள்தாம் அதன் பலனையும் அநுபவிக்கவேண்டும். ஆமாம்...நான்தான் பொறுப்பாளி'' என்ருன் ஜான், கண்களையும் வெளுத்த உதடுகளையும் இடுக்கிக்கொண்டு.

''நீங்கள் இல்லை.''

''எட்லீயின் பாதையிலே பாப் கேஷும் சென்ருல்—'' என்று ஜான் ஆரம்பித்தான்.

''அந்த எண்ணத்தை விடுங்கள்'' என்று குறுக்கிட்டான் பால். ''குற்றத்தை நாம் உரியவர்கள்மீது சுமத்துவோம்; எட்லீ உங்கள் நட்புக்குத் துரோகமிழைத்துவிட்டான். அவன் தன் தகப்பனுக்கும், தன் காதலிக்குங்கூடத் துரோகம் புரிந்துவிட்டான். ஜனநாயகம், லட்சியக்கொள்கை இவைகளைப்பற்றி இருவிதமாகப் பேசிக்கொண்டு, தன் கட்சிக்குப் பணியவேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக அவன் இவை யாவற்றையும் செய்திருக்கிருன். தான் எடுத்துவைக்கும் ஒவ்வோர் அடியும், தன்னைச் சாக்கடைக்குள்ளே ஆழத்தில் அமிழ்த்துகிறது என்பதை அவன் நின்று யோசிக்கவில்லை. சாக்கடையின் அசுத்தங்கள் அவனை இறுகப்பற்றிக்கொண்டு விடும் என்பதையும் எவ்வளவுதான் இருவிதமாகப் பேசினலும் தன்னைச் சுத்தப்படுத்திக்கொள்ள முடியாதென்பதையும் அவன் உணரவில்லை. அவனிடமுள்ள அழுக்கு, அவன் அடைய விரும்பும் அதிகாரத்தைக்கூட அழுக்காக்கிவிடும் என்பதையும் அவன் நின்று சிந்திக்கவில்லை.''

சிறிது நேரம் மௌனம் நிலத்தது. பிறகு, ''அவன் நின்று யோசித்தால்தான் என்ன நேரப்போகிறது?'' என்று வினவினன் ஜான்.

''அது அவனுடைய பிரச்னை'' என்று பால் கசப்புடன் பதிலளித்தான்.

ஜான் கடிகாரத்தைப் பார்த்தான். ''மணி ஏழேகால்... பார்பராவுக்கு என்ன வந்தது? வழக்கமாக அவள் விடியற் காலையிலேயே விழித்துக்கொண்டுவிடுவாளே?''

இக்கேள்விகளுக்குப் பதிலளிப்பதுபோல், பார்பராவின் குரல் கேட்டது: ''பாப்பி! பாப்பி எங்கேயோ போய் விட்டான். ரோனு சித்தி, பாப்பி எங்கே? ரோனு சித்தி'' அவளுடைய முனகல் அழுகையாக மாறியது.

ஜான் கூடத்தின் வழியே சென்றான். ஆனால் அவன் படுக்கை அறையை அடைவதற்குள்ளாகவே அழுகை நின்று விட்டது. ரோனு மெலிந்த, ஆனால் நிதானமான குரலில் பேசிக்கொண்டிருந்தாள். பார்பரா சிரித்தபடி கேட்டாள்: ''உன் குரல் வேடிக்கையாக இருக்கிறதே. எங்கே, இன்னும் ஒரு தடவை அப்படிப்பேசு.''

ஜான் திரும்பிப் பின்னே வந்துகொண்டிருந்த பாலைப் பார்த்து, ''இப்போதே பாப்பியைப்பற்றிக் கூறலாமா?'' என்று வினவினான்.

''அவளைச் சிறிதுநேரம் பார்பராவுடன் விட்டுவிடுங்கள். முதலில் உங்கள் சாமான்களை மூட்டை கட்டிக்கொள்ளுங்கள்'' என்றான் பால்.

அவர்கள் பின்வாங்கி, கூடத்து அறைக்கு வந்தார்கள். அங்கே ஜான் தனக்கு வேண்டிய புத்தகங்களை எடுத்து வைத்தான். வேலையினூடே, நேற்றிரவு பால் எவ்வளவு சஞ்சலமடைந்திருப்பான் என்பதையும் அவன் உணர ஆரம்பித்தான். ரோனுவின்மீது பால் ஹேடனுக்குக் காதல் இருக்கிறது. அதை இக்கடைசி நேரம்வரை நான் உணரவில்லையே என்று தனக்குள்ளேயே கோபத்துடன் கூறிக்கொண்டான் அவன். சொந்த வேதனைகள் இப்படித்தான் ஒருவனை சுயநலமுள்ளவனாக ஆக்கிவிடுகின்றது. நேற்றிரவு நாங்கள் எவ்வளவு துயரத்தில் ஆழ்ந்திருந்தோமோ, அதே அளவுக்குப் பாலும் இங்கே துன்பத்தில் உழன்றிருக்கிறான். அதுவும், அவன் தனிமையில் இருந்தான். எனக்காவது பெக்கி துணையாக இருந்தாள்.

ஜானை நிமிர்ந்து நோக்கிய பால், ''என்ன?'' என்று வினவினான்.

''பெக்கி இங்கே திரும்பிவந்து, வீட்டைக் கவனித்துக் கொள்வது நலமென்று நினைக்கிறேன். அல்லது, மேல்மாடியில் வசிக்கும் மொய்ரா பர்லேயை உதவிக்கு அழைத்துக்கொள்ள வேண்டும்.''

''தேவையில்லை. நான் பார்பராவைப் பார்த்துக்கொள் கிறேன். எனக்கு ஒன்றுமில்லை'' என்றாள் ரோனா அறை வாயிலில் நின்றபடி. இருவரும் 'சட்'டென்று திரும்பிப் பார்த்தார்கள். பெக்கியின் கோட்டு ஒன்றை அவள் அணிந்து கொண்டிருந்தாள். கழுத்தைச்சுற்றி ஒரு மஃப்ளரைப் போட்டுக்கொண்டிருந்தாள். அவளுடைய முகம் வெளுத்திருந்தாலும், அமைதியாக இருந்தது. கைகளில் பார்பராவைத் தாங்கிக்கொண்டே அவள் தொடர்ந்து சொன்னாள்: ''என் குரலைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். அதனால் எனக்கு வேதனையில்லை.''

''வேடிக்கையான குரல்'' என்றாள் பார்பரா.

ரோனா அறைக்குள் நுழைந்து கேட்டாள்: ''பாப்பி எங்கே? அவனுக்கு என்ன?'' அவள் பால் ஹேடன் பக்கம் பார்க்கவில்லை. ஜானின்மீது பார்வையை நிதானமாகப் பதித்தபடி பேசினாள். ''நேற்றிரவு நான் இங்கே வந்தேன். எனக்கு மிகவும் களைப்பாக இருந்ததால் தூங்கிப்போய்விட்டேன். எனக்கிருந்த களைப்பில், நான் பாப்பியின் படுக்கையில் படுத்துவிட்டதைக்கூடக் கவனிக்கவில்லை. அது காலியாக இருந்தது. அது ஒன்றைத்தான் நான் கவனித்திருக்கிறேன்; ஆனால்—அவன் எங்கே?''

''அவன் மருத்துவ மனையில் இருக்கிறான். 'அப்பென்டிஸிடிஸ்' என்கிறார்கள்.''

''நிலைமை கெடுதலில்லையே?''

''கெடுதலாக இருந்தது. இப்போது சிறிது நம்பிக்கையிருக்கிறது.''

''ஓ, ஜான்!'' பார்பராவைக் கீழே விட்டுவிட்டு, ஜானை நம்பமுடியாதவள்போல் நோக்கினாள்.

அவள் முகத்தைக் கவனித்தபடி ஜான் வேகமாகக் கூறினான்: ''நான் இப்போதே மருத்துவமனைக்குத் திரும்பிப் போகவேண்டும். எனக்கு உதவிசெய், ரோனா. பெக்கிக்கு என்னென்ன தேவையாக இருக்கும்?'' அவன் எதிரேயிருந்த தோல்பெட்டியை சுட்டிக்காட்டினான்.

ரோனா அப்பெட்டியைப் பார்த்தாள். பிறகு முறுவலித்தபடி, ''இது போதுமா?'' என்றாள்.

ஜான் பெட்டியை எடுத்துக்கொண்டு படுக்கை அறையை நோக்கிச் சென்றான். ரோனாவும் பின்சென்றாள். இன்னமும் அவள் பாலைப் பார்க்கவில்லை. ஜானும் அவளுமாகச் சாமான்களைக் கட்டும் வேலையை முடித்தார்கள். கடைசியில் அவர்கள்

கூடத்து அறைக்குத் திரும்பியபோது, அது காலியாக இருந்தது!

''பார்பரா!'' ஜான் உரக்கக் குரல் கொடுத்தான்.

''இங்கே இருக்கிறேன்.'' அடுக்களையிலிருந்து அவள் திரும்பக் கூவினாள்.

அங்கே ஒரு உயர்ந்த நாற்காலியில் அமர்ந்து, பெரிய ஜாடியில் இருந்த பாலைக் குனிந்து கவனித்துக்கொண்டிருந்தாள் அவள். பிறகு பாலை வாயால் ஊதி, அதில் எழும் குமிழ்களைப் பார்த்து வியந்துகொண்டிருந்தாள்.

''பால் ஹேடன் எங்கே?'' என்று வினவினாள் ரோனா. அவளுக்குப் பதில் கூறுவதுபோல் கூடத்தின் வெளிக் கதவு மெள்ள மூடிக்கொண்டது. அவள் ஜானை நோக்கினாள்.

''அவர் போய்விட்டார்'' என்ற பார்பரா பாலை வேகமாக ஊதவே, அது நாற்புறமும் இனிய சப்தத்துடன் சிதறியது. அவள் நிமிர்ந்து சிரித்தாள்.

ஜான் அவளுடைய தலையில் முத்தமிட்டான். ''சரி..... இங்கே எல்லாம் வழக்கப்படி சரியாக நடக்கிறதென்று பெக்கியிடம் கூறுகிறேன். நமது டாக்டரையும் அனுப்பி உன் தொண்டைக்கு ஏதாவது மருந்து கொடுக்கச் சொல்கிறேன்'' என்ற ஜான், ஒரு கணம் தன் கையை நீட்டி அவளுடைய தோளைப் பற்றியவாறு, ''நல்ல பெண்'' என்றான்.

ரோனா 'சட்'டென்று தலையைக் கவிழ்த்துக்கொண்டாள். பிறகு, மெல்ல ஜான் வெளியேறியபோது ஒரு துவாலையைத் தேடியெடுத்து பார்பராவின் முகத்தில் இருந்த பாலைத் துடைத்தாள். ஆமாம், அப்போது பார்பராவை வெளியே அழைத்துச் செல்வதாக ரோனா வாக்களித்தாள். பென் ஸ்டேஷனுக்கா? ஏன் ஸ்டேஷனுக்குச் செல்லவேண்டும்?

''ஏனென்றால்....'' என்று பற்கள் அற்ற மோனா லிசாவைப்போல் பேச ஆரம்பித்த பார்பரா, 'சட்'டென்று நிறுத்தி நாற்புறமும் நோக்கினாள். ''அப்பா எங்கே? அப்பா!'' அவளுடைய வாயின் ஓரங்கள் தாழ்ந்தன. விழிநீர் பாலின் மீது சொட்டியது.

பார்பராவிடம் மீண்டும் முறுவல் ஏற்படச் செய்து, அவளுடைய முகத்தை ஏப்ரல் மாத வானம்போல் நிர்மலமாகத் திகழச் செய்வதற்கு ரோனாவுக்குப் பத்து நிமிஷங்கள் பிடித்தன. ஆனால், அதற்குப் பிறகும் அவளுக்குத் தன்னைப் பற்றி நினைக்க நேரம் கிடைக்காதவாறு பார்பரா ஏதேதோ கேட்டுக்கொண்டே இருந்தாள்.

அத்தியாயம் 24

ஒன்பது மணிக்கு பெக்கி டெலிபோன் செய்தாள்.

''ரோனு, பார்பரா எப்படியிருக்கிறாள்? காலையில் வேண்டிய அளவு சாப்பிட்டாளா? விளையாடும்போது அணியவேண்டிய அவளுடைய உடைகள் படுக்கை அறை அலமாரியில் இருக்கின்றன.... இன்று காலை முதல் பனியாக இருக்கிறது. அதனால், மேலே ஒரு கம்பளிச்சட்டையையும் போட்டுவிடு....'' பெக்கி மூச்சு விடாமல் பேசினாள்.

''சரி.....பெக்கி'' என்றாள் ரோனு புன்முறுவலுடன். முன்பே கம்பளிச் சட்டையை அணிந்துகொண்டிருந்த பார்பரா, ரோனுவின் கையிலிருந்து பேசும் குழலைப் பிடுங்க முயன்று கொண்டிருந்தாள். ''ஒரு நிமிஷம் பொறு, கண்ணு! அப்புறம் நீ அம்மாவுடன் பேசலாம்'' என்றாள் ரோனு. பார்பரா தலையை அசைத்துவிட்டு, ரோனுவின் தலையண்டை தன் தலையை வைத்துக்கொண்டு அவர்கள் பேசுவதைக் கேட்க முயன்றாள்.

''கம்பளி உடுப்புக்கள் படுக்கை அறைப் பீரோவில் அடித் தட்டில் இருக்கின்றன.''

''அது சரி....பாப்பி எப்படியிருக்கிறான்?'' என்று கேட்டாள் ரோனு.

''அவன் அரைத் தூக்கமும், அரை விழிப்புமாக இருக்கிறான். அவன் படுத்திருக்கும் அறைக் கதவண்டை ஜான் உட்கார்ந்திருக்கிறார். ஒரு வேளை, இன்று பிற்பகல் இறுதியில் எங்களை உள்ளே அநுமதிக்கக்கூடும். ரோனு— உனக்கு ஜல தோஷமா, என்ன?''

''இல்லை. தொண்டை சிறிது ரணமாயிருக்கிறது. ஆனால் பாப்பி—அவன் சுகமடைந்து வருகிறான் இல்லையா?''

''அப்படித்தான் நான் எனக்குள் சொல்லிச் சமாதானமடைந்து கொண்டிருக்கிறேன். டாக்டர்கள் நிச்சயமாக ஒன்றும் சொல்கிறார்கள் இல்லை. ஓ, ரோனு!—''

''இப்போது மனதைத் தேற்றிக்கொள், பெக்கி. கண்டம் தாண்டி விட்டது.''

பெக்கி மூக்கை உறிஞ்சிக் கொண்டாள்.

''என்னது அது?'' பார்பரா திடுக்கிட்டு வினவினாள்.

இப்போது பார்பராவின் முறை என்று தீர்மானித்த ரோஞ டெலிபோனைக் குழந்தையின் கையில் கொடுத்தாள். பார்பரா அதில் உரக்கப பேசும்போது, ரோஞவுக்குச் சிந்திக்க அவகாசம் கிடைத்தது. நேற்றிரவு பார்க்கில் நடந்ததுபற்றிப் பெக்கிக்கு இன்னும் எதுவும் தெரியாது என்பது அவளுக்கு ஆறுதலாக இருந்தது. இருந்தும் மேலே ஸ்காட்டைப் பற்றியோ, அல்லது நேற்றைய இரவைப்பற்றியோ அவளுக்கு நினைக்கவே பயமாக இருந்தது.

''பார்பரா, என்னிடம் கொடு'' என்று அவள் மீண்டும் டெலிபோனை வாங்கிக்கொண்டாள். ''நான் என்ன செய்ய வேண்டுமோ, சொல் பெக்கி. பாப்பியின் நிலைமை தெரியுமுன் நீ மருத்துவ மனையை விட்டு நகராதே.'' சிறிது நேரம் பார்பராவைப்பற்றி பெக்கி பேசினுள். இச்சிறிய சம்பாஷணை இருவருக்குமே பயனுள்ளதாக இருந்தது. வாழ்வின் இச்சிறு விஷயங்கள், அதன் கொடூரமான நிமிஷங்களின் அதிர்ச்சியை அடக்கிக் கொண்டன.

★ ★ ★

பத்து மணிக்கெல்லாம் டைஸனின் குடும்ப டாக்டர் வந்தார். வயதான மனிதர் அவர். முதலில் அன்போடு ரோஞவின் தொண்டையைப் பரிசீலித்த அவர், பார்பராவையும் கவனிப்பதுபோல் பாசாங்கு செய்து, அவளை மகிழ்வித்தார். பிறகு அவர் சில சிகிச்சைகளைக் கூறிவிட்டு,''குணமாகச் சிறிது அவகாசம் பிடிக்கும்'' என்று முறுவலித்தார். ''அதற்கென்று கவலைப்படாதே. அந்தக் கீறல்கள் அவலட்சணமாக இருக்கின்றன. உன் தொண்டையில் வலியும் இருக்கும். ஆனுலும் அபாயம் ஒன்றுமில்லை. நீ நினைத்திருக்கமாட்டாய்: ஆனுல் நீ அதிருஷ்டக்காரிதான். இப்போது நீ அதிகமாகப் பேச வேண்டாம்; பேசவேண்டியிருந்தால், மெதுவாகவே பேசு. கவலைப்படாதே.'' அவர் குரலில் வழிந்த தேற்றம் அவளுக்கு ஆறுதலை அளித்தது. அவர் உடனேயே மருந்துக் கடைக்குப் போன் செய்து, சில மருந்துகளையும் கொணரச் செய்தது அவருடைய அன்பை அதிகமாக்கிக் காட்டியது. களைத்திருந்த அவருடைய கண்களின் கீழே காணப்பட்ட கருவளையங்கள், அவருக்கு இப்போது உறக்கம் தேவை என்று அறிவித்தன. மருத்துவ மனையில் அவர் இரவு முழுவதும் பாப்பியுடன் விழித்துக்கொண்டிருந்திருக்கிருர். இருந்தும் இப்போது அவர் எனக்காக மருந்துக் கடைக்குக் கூடப் போன் செய்கிருரே என்று எண்ணினுள் ரோஞ. அன்புள்ள, நல்ல மனிதர்களும் உலகத்தில்

இருக்கத் தானிருக்கிறார்கள். நான் அவர்களை நினைத்துக் கொள்ள வேண்டும். உதவி செய்யக்கூடியவர்கள்கூட இருக்கத் தான் இருக்கிறார்கள். நாசம் விளைவிக்கக்கூடியவர்கள் மட்டுந் தான் இருக்கிறார்கள் என்று எண்ணுவது தவறு.

பிறகு, டாக்டர் சென்றுவிட்டார். ரோனுவும் வீட்டு வேலைகளில் முனைந்தாள். பார்பரா தன் பொம்மைகளை எடுத்து, அவற்றின் தொண்டையைப் 'பரிசீலித்து'ச் 'சிகிச்சை' செய்யத் தொடங்கினாள். ஆனால் மருந்துக் கடையிலிருந்து மருந்துகள் வந்ததும் பார்பரா பொம்மைகளைப் போட்டு விட்டு நகர்ந்தாள். அவைகளைத் திறந்து, எல்லாம் சரியாக இருக்கின்றனவா என்று பார்க்கவேண்டாமா? அவைகள் சரி யாகத்தானிருந்தன. ஏனெனில், வெளியே டெலிபோன் மணி ஒலித்தபோது ரோனு அவைகளை மெதுவாக மறைத்து வைக்க முயன்றாள்.

மணி பதினொன்றாகி விட்டதைக் கவனித்தபடி ரோனு டெலிபோனை நோக்கி ஓடினாள். டெலிபோனில் ஒரு பெண்ணின் குரல் கேட்டது. ''நான்தான் மொய்ரா பர்லே, மேல் மாடியிலிருந்து பேசுகிறேன். நீ பெக்கியின் தங்கை தானே?''

''ஆமாம்'' என்றாள் ரோனு, யாரென்று புரியாமல்.

''ஒரு வெள்ளிக்கிழமையன்று பெக்கியின் வீட்டில் நாம் சந்தித்தோமே, நினைவிருக்கிறதா?''

ரோனுவுக்கு நினைவு வந்தது. ஆர்பெனை வெறுத்துப் பேசியவள் அவள்; ஸ்டான்டனில் சிறுவனாக இருந்த ஸ்காட்டை அறிந்தவள் அவள். ''ஆமாம்...—'' என்றாள் ரோனு.

''இப்போதுதான் எனக்குச் செய்தி கிடைத்தது. என்ன கஷ்டம்! மருத்துவமனைக்குப் போன் செய்தேன். ஆனால் அவர்கள் எங்கே சரியாக விடை கொடுக்கிறார்கள்? பாவம், பெக்கி! இப்படியா அவளுக்குக் கஷ்டம் வரவேண்டும்! நீ ஏன் இங்கே மேலே வரக்கூடாது? உனக்கு உதவி தேவை யென்றால் உடனே என்னைக் கூப்பிடு. இன்று முழுவதும் நான் வீட்டில்தானிருப்பேன். பார்பராவையாவது இங்கே சாப்பிட அனுப்பினால் என்ன? நீ நிம்மதியாகப் புத்தகமாவது படிக்க லாம்.''

ரோனு பார்பராவை ஒரு தடவை பார்த்துவிட்டு, ''இப்போதைக்கு எனக்கு ஒன்றும் சிரமமில்லை'' என்று பதிலளித்தாள். அதே சமயம் வெளியே கதவு மணி ஒலித்தது.

"யாரோ கூப்பிடுகிறார்கள்; வருகிறேன்" என்று டெலி போனைக் கீழே வைத்தாள் ரோஜா.

ரோஜா வாசற் கதவைத் திறந்தாள். அங்கே யாரோ இரு வேற்று மனிதர்கள் நின்றார்கள்.

"மிஸ் மெட்ஃபோர்டு?" என்று வினவினான் ஒருவன். அவனுக்கு ஸ்காட்டைப்போல நீலக்கண்கள். ஸ்காட்டின் வயதுதான். அதே உயரமுங்கூட. ஏன், அவனுடைய உடைகளும் ஸ்காட்டினுடையதைப் போலவே ஆடம்பரமற்று இருந்தன.

"ஆமாம்" என்றாள் அவள் கதவை முழுவதும் திறக்காமல்.

"உங்களைத் தொந்தரவு செய்வதற்கு வருந்துகிறேன், மிஸ் மெட்ஃபோர்டு. ஆனால் இது அவசரமான விஷயம்."

"பாப்பியா?" கலக்கத்துடன் வினவினாள் அவள்.

"இல்லை. உங்களுடன் நாங்கள் சில நிமிஷங்கள் பேச வேண்டும்." அவன் தன் சட்டைப் பையிலிருந்து ஓர் அடையாளச் சீட்டை எடுத்தான்.

அவள் அதைப் பார்த்தாள். "ஆனால் நீங்கள் தாம்—" என்று இழுத்த அவள், மீண்டும் அச்சீட்டை உறுத்து நோக்கினாள்.

அந்த மனிதர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். பிறகு ஒருவன் பேசினான்: "உங்களுடைய சந்தேகம் நியாயமானதுதான். ஆனால் நீங்கள் எங்களுடைய தலைமை ஆபீசுக்குப் போன் செய்து, எங்களுடைய வருகைபற்றி உறுதி செய்துகொள்ளலாம். அதுவரை நாங்கள் இங்கே காத்திருக்கிறோம்."

அவள் கதவை மூடிவிட்டு அதன்மேல் சாய்ந்தாள். பிறகு மீண்டும் அதைத் திறந்தாள்.

அந்த இரு மனிதர்களும் சிகரெட்டுகளைப் பற்றவைத்துக் கொண்டிருந்தார்கள். செம்பட்டைத் தலையுள்ளவன் தன் தொப்பியைப் பின்னால் தள்ளிக்கொண்டு அங்குமிங்கும் நடந்துகொண்டிருந்தான். மற்றவன் சொன்னான்: "அவளைக் குறை கூறமுடியாது. பாவம், நேற்றுதான்—" முடிப்பதற்குள் எதிரே ரோஜாவைப் பார்த்துவிட்டு நிறுத்தினான். உடனே, "இவ்வளவு சீக்கிரமாகவா டெலிபோனை முடித்துவிட்டீர்கள்?" என்று சிரித்தான்.

"நீங்கள் திருடர்களாய் இருந்தால், எளிதில் பலவந்தமாக உள்ளே வந்திருப்பீர்கள்" என்ற ரோஜா முறுவலிக்க முயன்றாள். ஆனால், அவர்களுக்கு என்னைப்பற்றித் தெரியும் என்று நினைத்தாள். பிறகு, "உள்ளே வாருங்கள்" என்றாள்.

"இது அவசரமில்லையெனில், நாங்கள் உங்களைத் தொந்தரவு செய்யமாட்டோம்" என்றான் ஒருவன். அவள் பதில் பேசாமல் உள்ளே இட்டுச்சென்றாள்.

"யார் அது?" என்றாள் பார்பரா.

"நான்தான் ஃப்ரெட்" என்றான் மற்றவன். அவன் இப்போதுதான் முதல் தடவையாகப் பேசினான். "என் பெயர் பார்பரா" என்றாள் சிறுமி. இரு மனிதர்களும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். பிறகு, ஃப்ரெட் மெதுவாக மேஜையண்டை சென்றான். அங்கே தன தொப்பியை வைத்துவிட்டு, கீழே கிடந்த பொம்மை ஒன்றை எடுத்தான். "இவள் பெயரென்ன?" என்றபடி, பார்பராவை ரோனா இருந்த இடத்தைவிட்டு அழைத்துச் சென்றான்.

"அவளை ஃப்ரெட் கவனித்துக்கொள்வான். அவனுக்குக் கூட இரு குழந்தைகள் உண்டு" என்று கூறிய அந்த செம்பட்டைத் தலைக்காரன், ஒரு நாற்காலியை இழுத்து ரோனாவின் அருகில் போட்டுக்கொண்டு அமர்ந்தான். ரோனா பார்பராவின் பக்கம் பார்வையைத் திருப்பினாள். அங்கே அவள் டெலிபோன் புத்தகத்தின்மீது உட்கார்ந்திருந்தாள். ஃப்ரெட் கையில் சில காகிதங்களை எடுத்துக்கொண்டபின், நீலப் பென்சில் ஒன்றைச் சீவிக்கொண்டிருந்தான்.

ரோனாவின் அருகிலிருந்தவன் தாழ்ந்த குரலில் பேசலானான்: "இன்று காலையில் உங்களைத் தொந்தரவு செய்வதற்கு வருந்துகிறோம். ஆனால், உங்களால் எங்களுக்கு உதவ முடியும் என்று நினைத்தோம். உங்கள் உடல்நிலை ஒரு சில கேள்விகளுக்குப் பதில்கூற அநுமதிக்குமல்லவா?"

ரோனா அவனை வெறித்துப் பார்த்தபடி தலையை அசைத்தாள். ஆனால் வழக்கமாகக் கொள்ளைக் கேசுகளைப் போலீசார் அல்லவா கவனிப்பார்கள்? இருந்தும் எஃப். பி. ஐ. ரகசிய இலாகாவிலிருந்தல்லவா இவர்கள் வந்திருக்கிறார்கள்?

அவன் பேசினான்: "நேற்று உங்களுடன்கூட இருந்தவரின் பெயர் ஸ்காட் எட்லீ என்று போலீசாரிடம் நீங்கள் சொன்னீர்கள், இல்லையா?"

மீண்டும் அவள் தலையை ஆட்டினாள்.

"அவரை உங்களுக்கு எத்தனை நாட்களாகத் தெரியும்?"

"மூன்று வருஷங்களாக."

"உங்கள் இருவருக்கும் நிச்சயதார்த்தம் நடந்திருக்கிறதல்லவா?"

"நடந்து இருந்தது." அவள் தலைநிமிர்ந்தாள். அவன் அவளைக் கவனித்துக்கொண்டிருந்தான்.

''எட்லியின் அரசியல் பற்றுக்களைப்பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?''

''தெரியாது'' என்றாள் அவள் தயக்கத்துடன். நேற்றிரவு வரைத் தெரியாது என்று தனக்குள் எண்ணினாள்.

''அவருடைய நண்பர்களை அறிவீர்களா?''

"பலரை அறிவேன்."

''அவர்கள் எப்படிப்பட்டவர்கள்?''

''என்னைப்போல் சாதாரண மனிதர்கள்.''

''அவருடைய நண்பர்களில் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா?''

''நிச்சயமாகத் தெரியாது......ஒருவரைத் தவிர......'' என்று இழுத்த அவள், 'ஆர்பெனைத் தவிர' என்று தனக்குள் நினைத்தாள்; அவன் கம்யூனிஸ்டுதான். துரோகி அவன். எதற்கு அவன் துரோகமிழைத்தான்? ஆமாம், ஸ்காட்கூட அவனுடைய அரசியல் விவகாரங்களுக்கு உதவியாகத்தான் இருந்திருக்கிறான். ''ஸ்காட் எட்லி ஒரு கம்யூனிஸ்டா?'' என்று கேட்டாள் ரோனா.

''ஆமாம் என்றால், அது உங்களுக்கு அதிசயமாக இருக்காதுபோலிருக்கிறதே, மிஸ் மெட்ஃபோர்டு'' என்ற அவன் சற்று நிதானித்தான். பிறகு, ''உங்களுக்கு எட்லீயின் வேறு கம்யூனிஸ்ட் நண்பர்கள் ஒருவரையும் தெரியாதா?''

அவள் முகம் சிவந்தது. ''நிகோலஸ் ஆர்பெனைத் தெரியும். ஆனால் அது காலேஜ் நாட்களிலேயே ஏற்பட்ட பழைய நட்பு.''

''அவன் பழைய காலேஜ் நண்பன் மட்டுந்தான் என்பது உறுதிதானா?''

''எனக்குத் தெரியாது'' என்றாள் ரோனா.

''நீங்கள் ஸ்காட் எட்லீயைப் பற்றி எப்போது முதன் முதலாகச் சந்தேகிக்க ஆரம்பித்தீர்கள்?''

அவள் கன்னம் பின்னும் சிவந்தது. ''அவரை நான் சந்தேகித்ததாகச் சொல்லவில்லையே.''

''அப்படிச் சொன்னதாக நான் நினைத்துவிட்டதற்கு விசனிக்கிறேன். மக்களுக்கு அநேக கஷ்டங்களை விளைவிக்கிறார்கள் கம்யூனிஸ்டுகள். ஆனால், மற்றவர்கள் கம்யூனிஸ்டுகளுக்கு எவ்விதச் சங்கடமும் விளைவிக்க விரும்பாதது விசித்திரமே!''

ஒரு கண மௌனத்திற்குப் பிறகு ரோனா சொன்னாள்: ''நான் யாரையும் மூடி மறைக்கவில்லை. எனக்கு நிச்சயமாக ஒன்றும் தெரியாது.''

''நிச்சயமில்லாத விவரங்கள் எங்களுக்கும் தேவையில்லை. திட்டமான உண்மைதான் எங்களுக்குத் தேவை. நேற்றிரவு

பத்து மணிக்கு மேல் ஸ்காட் எட்லீ உங்களைப் பார்க்க வந்தார். உங்களுடன் முக்கால் மணி நேரம் தங்கினர்.''

அவள் அதிசயத்துடன் அவனை நிமிர்ந்து நோக்கி, ''ஆமாம்'' என்றாள்.

''எங்களுக்கு முக்கியமானதாக இருக்கக் கூடிய விஷயம் ஏதாவது அவர் உங்களிடம் கூறினரா?''

''இல்லை.''

''அவர் ஒருவரது பெயரையும் குறிப்பிடவில்லையா?''

''இல்லை. அவர் தனக்குள்ளேயே ஏதோ விவாதித்துக் கொண்டிருந்தார். அவர் பேச்சு எனக்கு ஒன்றும் புரியவில்லை.''

''நீங்கள் ஏன் அவருடன் கிளம்பி சென்டிரல் பார்க்குக்குள் நடந்தீர்கள்?''

''நான் அவருக்கு உதவி செய்ய முயன்றேன்.''

''அவர் ஏதாவது சங்கடத்தில் இருந்தாரா?''

''அப்படி நான் நினைத்தேன்.''

''தான் கம்யூனிஸ்டுக் கட்சியை விட்டு விலகப் போவதாக அவர் கூறினரா? தனது பாதுகாப்பைப் பற்றி ஏதாவது பயப்பட்டாரா?''

''இல்லை. அவர் தனக்குள்ளே ஏதோ போராடிக் கொண்டிருந்தார்.''

''உங்களுடைய நிச்சயதார்த்தம் முறிந்தது பற்றி அவர் மனம் உடைந்து காணப்பட்டாரா?''

''அவர் மனம் உடைந்தது உண்டு. ஆனல் நேற்றிரவு அவர் அதைப் பற்றிப் பேசவில்லை.''

''இவ்வார ஆரம்பத்தில் உங்களுக்குக் கிடைத்த கடிதங்கள் பற்றி அவருக்குத் தெரியுமா?''

அவள் திடுக்கிட்டாள். ''சார்லஸிடமிருந்து வந்த கடிதங்களா? அவருக்குத் தெரியாது.'' சார்லஸைப் பற்றி நேற்றிரவு தான் பேசியது அவள் நினைவுக்கு வந்தது. உடனேயே ஸ்காட் புறப்பட்டு விட்டான். போகும்போது தன்னையும் கூட வரும்படி அழைத்தான்...

அவள் நடுங்கினாள். அது உண்மையாக இருக்க முடியாது: ஸ்காட் திட்டமில்லாமல்தான் புறப்பட்டார். அதுவரை நான் அபாயமில்லாமல்தான் இருந்தேன். அதுவரை ஸ்காட் எட்லீ தன்னுள்ளே போராடிக் கொண்டிருந்தார். பிறகு என்னிடம் என்ன சொல்லிவிட்டோமோ எனப் பயந்தார். நான் ஆர்பெனைப் பற்றிப் பேசியதும் அவர் அச்சம் இரு மடங்காகியது. நாங்கள் பார்க்குக்குள் நுழைந்தோம்...

''எட்லீ எப்போதாவது கொலை செய்வது பற்றிப் பேசியதுண்டா?'' என்று வினவினன் அந்தத் துப்பறிபவன்.

''ஓ!'' என்று அலறினள் அவள்.

அவன் அவளைக் கவனித்தபடி, எதுவும் பேசாமல் உணர்வற்ற முகத்துடன் பொறுத்திருந்தான்.

''அதனால்தான் நீங்கள் இங்கே வந்திருக்கிறீர்களா? ஆர்பென் கொலை செய்யப்பட்டிருக்கிறாரா?'' என்று கேட்டாள் ரோனு, அதை எதிர்பார்த்தவள் மாதிரி.

''நிகோலஸ் ஆர்பென்?'' அது புதிய சேதியாக இருக்கிறதே என்று நினைத்த அவன் எழுந்து, ஃப்ரெட்டைப் பார்த்துத் தலையை ஆட்டினான்.

ரோனு திடீரென்று திகிலுடன் அவனைப் பார்த்தாள். ''எனக்குத் தெரியும், ஸ்காட்டுக்கும் அதற்கும் சம்பந்தமில்லை!''

அந்த வேவுகாரன் தன் தொப்பியை எடுத்துக்கொண்டான். ''ஆர்பென் உயிரோடுதானிருக்கிறான்'' என்ற அவன் மேலே பேசத் தயங்கினான். பிறகு உண்மைச் சேதியை சொல்லக் கூடாதென்று தீர்மானித்துக் கொண்டான். இன்று மாலை அச் செய்தி ரேடியோவில் அறிவிக்கப்படும். ஸ்காட் எட்லீ, வில்லியம் எட்லீயின் மகனாயிற்றே! ஆமாம், ரேடியோ மூலம் விஷயத்தை அறிவதுதான் அவளுக்கு எளிதாக இருக்கும். இருந்தும் அந்த ரகசியப் போலீஸ்காரன் தயங்கினான். ஏனெனில், விஷயத்தை அப்படி அறிந்துகொள்வது ஒருவகையில் கொடுமையான வழியாகவும் இருக்கும் என்று அவன் எண்ணினான்.

அவன் தன் கையிலிருந்த தொப்பியைப் பார்த்து முகம் சுளித்தான். பிறகு மிகுந்த பிரயாசையுடன் சொன்னான். ''உங்களுக்கு ஒரு கெட்ட செய்தி கொணர்ந்திருப்பதற்கு வருந்துகிறோம். இன்று விடியற்காலையில் ஸ்காட் எட்லீ இறந்து கிடந்தார். சுரங்க ரெயில் ஒன்று அவரைக் கொன்றிருக்கிறது. நாங்கள் மிகவும் வருந்துகிறோம், மிஸ் மெட்ஃபோர்டு. ஆனால் இச்செய்தி இன்றைய மாலைப் பத்திரிகைகளில் வெளிவரும். அதனால்தான்...''—அவன் அவளை நிமிர்ந்து நோக்கினான்.

''ஆமாம். நீங்கள் இப்போது சொன்னது நல்லதுதான்'' என்றாள் ரோனு. அவள் எழுந்திருக்கவில்லை. மூச்சுக்கூட விடாதவள் மாதிரி, அப்படியே அசையாமல் அமர்ந்துவிட்டாள்.

''வருகிறோம், மிஸ் மெட்ஃபோர்டு; வருகிறோம், பார்பரா.''

பார்பரா தன் குஞ்சுக் கையை எழுப்பி ஆட்டினாள்.

வாசற் கதவு மூடிக்கொண்டது. கூடத்தில் மீண்டும் அமைதி நிலவியது. பாதி திகிலுடனும், பாதி திகைப்புடனும் தன்னைக் கவனித்துக் கொண்டிருந்த பார்பராவின் முகத்தை நிமிர்ந்து நோக்கினாள், ரோனு. பிறகு ஒருதடவை நீள் மூச்செறிந்துவிட்டு எழுந்தாள். ஸ்காட்டையும், அவனுடைய

தந்தையையும் பற்றிய நினைவுகளைத் தன் மனத்திலிருந்து அகற்றிக் கொள்ளும் முறையில், குழந்தையைப் பார்த்து, ''எல்லாம் சரியாக இருக்கிறது, பார்பரா'' என்றாள். அவள் கையிலிருந்த விளையாட்டுச் சாமான்கள் அடங்கிய பெட்டியைத் திறந்தபடி. ஆனால் அது சரியாக இல்லை. அவளுடைய உணர்ச்சிகள் திடீரென்று கோபமாக மாறின: ஆர்பெனைப் பற்றி அவள் நினைவு ஓடியது, ஆர்பென்...

★ ★ ★

ரகசியப் போலீஸ்காரர்கள் இருவரும் மௌனமாகப் படிகளில் இறங்கிச் சென்றனர். காரின் கதவைத் திறந்த ஃப்ரெட், ''இந்த அரைமணிநேரம் மிகவும் கடினமாகத்தானிருந்தது, டாம்!'' என்றான்.

''ஆமாம். ஆனால் அவள் செய்தியைக் கேட்டதும் சமாளித்துக் கொண்டுவிட்டாள்.''

''அவள் முழு உண்மையையும் கூறினாளா?''

''அப்படித்தான் நினைக்கிறேன். அவளை நாம் பார்க்க வந்தது பரிதாபந்தான்'' என்றான் டாம்.

ஃப்ரெட் தலையை ஆட்டினான். இருவரும் காருக்குள் அமர்ந்தார்கள். அங்கே அவன் அந்தரங்கமாகத் தொடர்ந்தான். ''இன்னமும் அது தற்கொலையா, அல்லது அரசியல் கொலையா என்று நமக்குத் தெரியவில்லை. இந்தச் சிரமத்திற்கெல்லாம் பலனைக் காணவில்லை.''

''ஒரு பலனும் இல்லாமற் போகவில்லை. ஆர்பென் ஆபத்தில் இருக்கிறான்; அதை நாம் கண்டுபிடித்துவிட்டோம். ஆர்பெனைப் போன்றவன் ஆபத்தில் சிக்க வேண்டுமானால் அதற்கு ஒரே ஒரு காரணந்தானிருக்க முடியும்: அவன் கட்சியில் இருந்து முறித்துக்கொண்டு, விஷயங்களை வெளியிடத் தயாராக இருக்கிறான்...முதலில் எதிர்ப்படும் மருந்துக்கடையண்டை காரை நிறுத்து, ஃப்ரெட். நான் டெலிபோன் செய்ய வேண்டும்'' என்றான் டாம்.

ஃப்ரெட் காரைக் கிளப்பி, மேற்குப் புறமாகச் செலுத்தினான். ''விசித்திரந்தான். நேற்று பிற்பகல்வரை நாம் ஸ்காட் எட்லீயைப் பற்றிக் கேள்விப் படடதேயில்லை. பிறகு ஐந்து மணிக்கு அவன் ஆர்ஃபெனைக் காணச் சென்றது முதல், நமது கண்காணிப்புக்குள் வந்துவிட்டான். எனக்கு என்ன வருத்தமென்றால், நாம் அவனைப் பற்றிச் சிறிதளவே அறிந்துகொண்டோம். அவன் தன்னுடைய கட்சிச் சீட்டை எங்கே வைத்திருந்தான்? அது அவன் வீட்டில்கூட இல்லையே. இன்று காலை

நாம் அதை அங்கே காணமுடியும் என்று எண்ணியிருந்தேன்.''

''ஒருவேளை அதைக் கிழித்துப்போடும்படி அவனுக்கு உத்தரவு கிடைத்திருக்கலாம்'' என்றான் டாம்.

''ஒருவேளை பகிரங்கப் படுத்திக்கொள்ளாத கம்யூனிஸ்டோ அவன்?''

''அப்படித்தான் தோன்றுகிறது. மிஸ் மெட்ஃபோர்டு கூட அப்படி நினைக்கிறாள் என்றே எனக்குப் பட்டது.''

''ஸ்காட் எட்லியைப்பற்றி ஒன்று நான் சொல்வேன்: சந்தேகப்படத்தக்கவர்களுடன் தொடர்புடைய கம்யூனிஸ்டுகளுக்குள், இவனைப் பற்றி நம்மிடம் மிகக் குறைவான தகவல்கள்தாம் உள்ளன.''

''இப்போது நாம் அவனை மறந்துவிடலாம். ஆர்பெனைத்தான் நாம் கவனிக்க வேண்டும். நேற்றிரவு எட்லீயைத் தொடர்ந்து அந்த மேற்குப் பகுதி முகவரியிலிருந்து வெளியே வந்த மனிதர்களையும் நாம் கண்காணிக்கவேண்டும். அவர்களைப் பற்றிய அடையாளங்களிலிருந்து பார்த்தால், அவர்கள் சிறந்ததோர் கூட்டம் என்றே தோன்றுகிறது.''

''நிச்சயமாக'' என்று முறுவலித்தான் ஃப்ரெட்; பிறகு, அவர்கள் திரும்பி பிராட்வேயின் பக்கமிருந்த மருந்துக் கடையை நோக்கிப் போகும்போது, ''ஆமாம், அவர்கள் மதிப்புள்ள, நிதானமான மனிதர்களாகத்தான் தோன்றுகிறார்கள். பெஸ்ஸரேபியாவிலிருந்தோ, ஒடெஸ்ஸாவிலிருந்தோ வந்திருந்தாலுங்கூட, அவர்கள் டாம், ஜோன்ஸ் என்றெல்லாம் அசல் ஆங்கிலேயர்கள் மாதிரித்தான் பெயர்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஏதாவது பொய்ப் பெயர்களைத் தேர்ந்தெடுக்கும்போதெல்லாம், அநேகமாக அவைகள் பிரௌன் என்றோ, க்ளார்க் அல்லது ஜேம்ஸ் என்றோ தானிருக்கும். அவர்கள் யாரை ஏமாற்றுவதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்?'' என்று வினவினான்.

''அவர்கள் தம்மையே ஏமாற்றிக்கொள்ளாவிட்டால், அவர்களுடைய நிலைமை எப்படியிருக்கும்?'' என்று திருப்பிக் கேட்டான் டாம்.

அத்தியாயம் 25

சனிக்கிழமை காலை ரோஜர் பிரௌன்லியின் ஆபீஸ் அதிகார பூர்வமாக மூடப்பட்டிருந்தது. அதனால் அவருடைய 'இதர வேலை'களுக்கு அவகாசம் கிடைப்பதாக அவர் கூறுவதுண்டு. வழக்கயாக இரண்டு டைப்பிஸ்டுகள் அமர்ந்திருக்கும் ஆபீசின் வெளிப் பகுதியில் அன்று நிசப்தம் தவழ்ந்தது. பால் ஹேடன் வந்தபோது, ''இன்று நம்மைத் தொந்தரவு செய்யத் தையல் ஊசிகளின் சப்தம் கேட்காது. சரி.....இப்போது என்ன சங்கடம் நேர்ந்திருக்கிறது?'' என்று வினவினார் பிரௌன்லி. தொடர்ந்து பால் ஹேடன் சொன்ன கதையையும், அவனுடைய தீர்மானத்தையும் நிதானமாகக் கேட்டார்.

''அதெல்லாம் சரிதான். ஆனால் ஸ்காட் எட்லீயைப் பற்றி மட்டும் நீ கவலைப்பட வேண்டியதில்லை. எனக்கு இப்போதுதான் தகவல் கிடைத்தது. அவன் இறந்துவிட்டான்'' என்ற அவர் சுருக்கமாகப் போலீசாரின் ரிப்போர்ட்டைக் கூறினார்.

''அதென்ன தற்கொலையா? இல்லை கொலையா?'' என்று வினவினான் பால் ஹேடன்.

''பிராயச் சித்தமா அல்லது தண்டனையா?'' என்று தோள்களைக் குலுக்கினார் பிரௌன்லி. அதே சமயம் டெலிபோன் மணி அடித்தது.

பால் எழுந்து, எளிய முறையில் இருந்த அந்த அறை முழுவதும் கண்களைச் சுழற்றிவிட்டு, பலகணியண்டை சென்று வெளியே தெரிந்த பூந்தோட்டத்தைப் பார்த்தான். ஸ்காட் எட்லீ இறந்துவிட்டான். பால் ஹேடனால் அதை நம்பமுடியவில்லை. இருந்தும் இப்படி ஏதாவது நம்பமுடியாத செயல்கள் நடந்துகொண்டு தானிருக்கின்றன.

டெலிபோன் பேச்சு முடிந்துவிட்டதை உணர்ந்த பால், பிரௌன்லீயின் பக்கம் திரும்பினான். அவர் களித்த முகத்துடன் இவனை நோக்கினார். ''உனக்கு இன்னும் என்ன கவலை? அவன் இறந்துவிட்டான், இல்லையா?''

''அது விசித்திரமாக இருக்கிறது.....அவன் இறப்பதற்கு முந்திய ஒரு மணி நேரம் வெறும் நரகமாகத்தான் இருந்திருக்கும்'' என்றான் பால்.

பிரௌன்லீ தலையை ஆட்டினார். ''நமக்கு நாமே படைத்துக்கொண்ட நரகத்தைவிட மோசமானது வேறில்லை.''

''இப்போது ஆர்பென் என்ன நினைப்பான்?'' என்று வினவினான் பால்.

''சொல்லியபடி நினைப்பான்.''

''அவன் எப்படி இவ்விஷயத்தில் தன்னுடைய பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியும்? மன்ரோ காலேஜில் எட்லீ மீது வலை வீசிய நாட்களிலிருந்து அவன்தானே இதையெல்லாம் ஆரம்பித்தான்? ஆர்பெனுடைய பொய்ப்பேச்சுக்களையும் தந்திரங்களையும் எட்லீ ஒப்புக்கொண்டிருக்கிறான் என்றால், அவன் ஆர்பெனிடம் ஏதாவது ஒரு தன்மையைக்கண்டு மயங்கியிருக்கவேண்டும். தவிர ஆர்பெனை நம்புவதற்கு அவனிடம் ஒரு விருப்பமும் ஏற்படவில்லையெனில், எட்லீ அவனுடைய பாதையில் சென்றிருக்கமாட்டான். வேறு எத்தனையோ இளைஞர்கள்கூட ஆர்பெனின் பிடிக்குள் வந்திருக்கிறார்கள்; ஆனால் அவன் அவர்களை முற்றிலும் வெல்ல முடியவில்லை. எனவே எட்லீ தனக்குப் பிடித்த பாதையில்தான் சென்றிருக்கிறான். ஆனால் நேற்றிரவு, அவனுடைய பாதை நினைத்ததற்கு மேல் செங்குத்தாக இருந்திருக்கிறது. அவன் கீழே குதித்துவிட்டான். ஆர்பென் எங்கே இருந்தான்? நமக்குத் தெரிந்தவரையில் அவர்கள் இருவரும் சேர்ந்துதான் வேலை செய்பவர்கள்.''

''நமக்கு மட்டுமே ஆர்பெனின்மீது சிரத்தை என்று நினைக்காதே. அந்த டெலிபோன் அழைப்பு மெட்ஃபோர்டிடமிருந்து வந்தது. அவள் ஆர்பெனுடைய முகவரியைக் கேட்டாள்'' என்றார் ரோஜர் பிரௌன்லீ நிதானமாக.

''ரோனா?'' பிரௌன்லீ முகவரியைக் கொடுத்திருக்கிறார். பிரௌன்லீயின் டெலிபோன் பேச்சு அந்த அளவுக்கு அவன் காதில் விழுந்திருந்தது.

''அவள் வற்புறுத்தினாள். ஸ்காட் எட்லீ இறந்துவிட்ட விஷயம் அவளுக்கும் தெரிந்திருக்கிறது'' என்றார் பிரௌன்லீ.

''அவள் ஆர்பெனின் விடுதிக்குப் போகப்போகிறாளா?''

''அப்படி அவள் சொல்லவில்லை.''

''அவள் போகப் போகிறாள்'' என்றான் பால், மேஜையை வெறித்து நோக்கியபடி.

''அவன் வீட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் நல்ல காவல் வைக்கப் பட்டிருக்கிறது. ரோனாவையும் ஒரு பாதுகாப்பாளன் இன்னமும் தொடர்ந்துகொண்டுதானிருக்கிறான்'' என்று நினைவுபடுத்தினார் பிரௌன்லீ.

''அந்த மனிதனைப் போய்ப் பார்க்க ரோனாவை அநுமதித்து விட்டீர்களே!'' என்று சினத்துடன் வெடித்தான் பால்.

''நிதானமாயிரு, பால். நான் முன்பே கூறியபடி, கடந்த மூன்று நாட்களாக ஆர்பென் யாரையும் தன் வீட்டுக்குள் அநுமதிக்கவில்லை. நேற்றுப் பிற்பகலில் எட்லீயை மட்டுமே

அநுமதித்தான். ஒருவரிடமும் அவன் தொடர்பு கொள்ள வில்லை. அவனுக்கு ஏதோ பயம் என்று தோன்றுகிறது. ஏதோ தவறு நேர்ந்திருக்கிறது. தோழர் ஆர்பெனுக்கு ஏதோ பெரிய சங்கடம் நேர்ந்துள்ளது. ரோனுவை மட்டும் அவன் பார்க்க அநுமதிக்கக்கூடும். அவள் எட்லீ இறந்த செய்தியைச் சொன்னால், அவன் அவளுடன் பேசவும் கூடும். அந்த மன நிலையில்தான் அவன் இருக்கிறான்.''

''எனக்கு அது பிடிக்க வில்லை. அவள் வேண்டிய அளவு சிரமப்பட்டு விட்டாள்'' என்றான் பால்.

''உண்மை. ஒப்புக்கொள்கிறேன். ஆனால், அவள் ஒரு சிறு தண்டனையை ஆர்பெனுக்கு அளிக்கட்டுமே.''

''அவளுக்கு மேலும் மனவலிதான் உண்டாகும். அவளி டம் முகவரியைக் கொடுத்து விட்டீர்களே!'' பால் கதவை நோக்கி நகரலானான்.

''அவளிடம் 'மாட்டேன்' என்று சொல்ல முடியவில்லை, அவள் கோபமாக இருந்தாள், பால்.''

''ரோனுவா?''

பிரௌன்லீ தலையை அசைத்தார். பிறகு வேகமாக, ''நீ எங்கே போகிறாய்?'' என்று கேட்டார்.

''எங்கே என்று நினைக்கிறீர்கள்? ஆர்பெனைப் பாதுகாப் பதற்கா?'' பால் கதவை அளவுக்கு அதிகமான கவனத்துடன் மூடினான். அவனுக்குக் கோபம் அதிகமானால் மட்டுமே அம் படிச் செய்வான் என்பது பிரௌன்லீக்கு நினைவு வந்தது.

பிரௌன்லீ ஒரு டெலிபோன் செய்து, ஆர்பெனின் விடு தியைச் சுற்றியுள்ள வேவுகாரர்கள் அதிகக் கவனத்துடன் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். பிறகு அவர் மேஜையைச் சுத்தம் செய்து, தான் பார்த்துக் கொண்டிருந்த கடிதங்களையெல்லாம் அலமாரியில் வைத்துப் பூட்டினார். பால் சென்ற இருபது நிமிஷங்களுக்கெல்லாம் அவரும் வெளிக் கிளம்பினார். 'இன்னும் நேரம் இருக்கிறது; டைஸன் தம்பதி களின் வீட்டிலிருந்து ரோனு ஆர்பெனின் விடுதியை அடை வதற்கு முக்கால் மணி நேரம் ஆகும் என்று அவர் எண்ணி னார். இது ஓர் எக்கச்சக்கமான நிலைமை. இம்மாதிரியான சம யங்களில் 'சட்'டென்று மனத்திற்குத் தோன்றிய கருத்துப் படி செயலாற்றுவதுதான் சிறந்தது என்பது அவர் அநுபவம். ரோனுவுக்கு ஆர்பெனின் முகவரியை அவர் கொடுத்ததற்கு இது ஒரு காரணம். மற்றொரு காரணம்? எப்படியும் ரோனு மில்டன் லெயிட்னர், அல்லது வேறு ஒரு மாணவனிடமிருந்து அந்த முகவரியைப் பெற்று விடக் கூடும். அப்படி நேர்ந்தால், எப்போது அவள் ஆர்பெனைக் காணப் போகிறாள் என்று

பிரௌன்லீக்குத் தெரியாமல் போய் விடும். அது உண்மையி லேயே சங்கடங்களை விளைவிக்கும்.

ஆனால் பிரௌன்லீ ஓர் உண்மையைத் தவறாக மதிப் பிட்டு விட்டார். அதாவது நகரத்தின் மேற்குக் கோடியிலி ருந்த டைஸன் தம்பதிகளின் விடுதியிலிருந்து ரோனா அவருக்கு டெலிபோன் செய்யவில்லை!

★ ★ ★

ரகசியப் போலீஸ்காரர்கள் இருவரும் சென்றதும், ரோனா பெக்கியின் உடைகளை எடுத்து அணிந்து கொண்டாள். பிறகு பார்பராவை மேல் மாடிக்கு அழைத்துச்சென்று பர்லே தம் பதிகளின் வீட்டில் விட்டு விட்டுக் கிளம்பினாள்.

ஒரு டாக்ஸியைப் பிடித்துக் கொண்டு லெக்ஸிங்டனை அடைந்த அவள், ஐம்பதாவது தெருவில் எதிர்ப்பட்ட முதல் மருந்துக் கடையண்டை இறங்கிக் கொண்டாள். அங்கிருந்த டெலிபோன் புத்தகத்தில் அவளுக்கு ஆர்பெனின் முகவரி கிடைக்க வில்லை. ஒரு கணம் தயங்கினாலும் அவள் தோல் வியை ஏற்கத் தயாராக இல்லை. ஒருவேளை பால் ஹேடன் உதவக்கூடும்; அவனுக்கு ஆர்பெனின் முகவரி தெரிந்திருக்க லாம். அல்லது இன்னும் நிச்சயமாக பிரௌன்லீக்கு அது தெரிந்திருக்கக் கூடும். ஆர்பெனுடன் பால் நேராகத் தானே பேச விரும்புவான். ஆனால் அவனுக்கு எல்லா உண்மைகளும் தெரியாது. அவனால் ஆர்பெனைச் சமாளிக்க முடியாது.

என்னைப் பொறுத்த வரையில், நான் கொண்டிருப்பது வெறும் சந்தேகங்களும், ஊகங்களுமே என்று ரோனா எண்ணி னாள். பாலிடமோ, பிரௌன்லீயிடமோ, அல்லது காலையில் வந்த ரகசியப் போலீஸ்காரர்களிடமோ சொல்லும் அளவுக்கு அவை போதுமானவையல்ல. ஆனால் அவை வெறும் சந்தே கங்கள்தாம் என்பதை ஆர்பென் அறிய மாட்டான். எனக்கு எல்லாம் தெரிந்திருக்குமென்ற எண்ணத்தில் அவன் உண்மை யைச் சொல்லக் கூடும்.

ரோஜர் பிரௌன்லீக்கு டெலிபோன் செய்தபோது ரோனா இந்த மனநிலையில் தானிருந்தாள். அன்று சனிக்கிழமையாத லால் அவர் ஆபீஸ் மூடியிருக்கும் என்று அவளுக்கு நினைவு வந்தது. பிறகு அவள் என்ன செய்வாள்? ஸ்காட்டின் மரணச் செய்தி வெளியாகு முன் அவள் ஆர்பெனைச் சந்தித்தாக வேண்டும். அது முக்கியமானது என்பதை அவள் அறிவாள். திடீரென்று தோன்றிய அவளது இக்கவலைகள் எல்லாம், பேசும் குழலில் ரோஜர் பிரௌன்லீயின் குரலைக் கேட்டதும் மறைந்தன.

வெளியே வந்ததும், ஆர்பெனின் விடுதி அருகில் தானிருக்கிறது என்று எண்ணினாள் ரோனா. நடைபாதையிலே அவள் தயங்கினாள். மெதுவாக நடந்தபடி, தான் ஆர்பெனுடன் என்ன பேசவேண்டுமென்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டாள். கிழக்கே திரும்பிய அவள், மூன்றாவது அவென்யூவை அடைந்ததும் தெற்கே நடந்தாள். அந்தத் தெரு கலகலப்பாகவும், வெப்பமாகவும் இருந்தது. ஜனங்கள் ஒரு வார வேலைக்குப் பிறகு ஓய்வு மனத்துடன் காணப்பட்டார்கள். விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளை ஒதுக்கிக் கொண்டு அவள் நடந்தாள்.

ஆர்பெனின் கருத்தை எதிரொலிப்பவன் மாதிரி, இது உண்மையான உலகமில்லை என்பான் ஸ்காட். இது கனவைப் போல் பொய்யானது, கற்பனையானது, என்பான் அவன். சூழ்ச்சி, ஏமாற்றம் என்பான் ஆர்பென். இந்த ஜனங்கள் எல்லாம் அடிமையாக்கப்பட்ட கூட்டம், தனி உடைமைக் கொள்கையின் கைதிகள், சுரண்டப்பட்ட ஏமாளிகள்; இது உண்மையான உலகமில்லை என்றெல்லாம் அவன் கூறுவான். இருந்தும், இங்கே யாரும் பயத்துடன் நடக்கவில்லை; யாரும் பேசுமுன் பின்னால் பார்த்துக் கொண்டு பேசவில்லை; ஆர்பெனின் உலகத்தைப் பற்றி நினைத்ததுமே இப்போது ரோனாவைத் தாக்கிய பயம், இங்கே வேறு யாரையும் தாக்கவில்லை. இல்லை, அவனுடைய உலகந்தான் கனவு உலகம் என்று எண்ணினாள் ரோனா. இதுதான் உண்மை. ஏனெனில், இதனுடைய தவறுகள் மனிதவர்க்கத்தின் தவறுகள். ஆனால் ஆர்பெனுடைய தவறுகளும், அவன் நம்பும் மற்றவர்கள் யாவருடைய தவறுகளும் மனிதத்தன்மையற்ற தவறுகள். அதுதான் வேறுபாடு.

''ரோனா!'' என்ற குரலை அடுத்து, யாரோ அவள் தோளைப் பற்றினார்கள். ரோனா திரும்பி வெறித்து நோக்கினாள். எதிரே விலை உயர்ந்த பட்டு உடைகளும், செருப்புகளும் அணிந்து கொண்டு நின்றவள் மேரி ஃபைன். அவளுடைய அழகு முகத்திலே மென்மையாகப் பவுடர் பூச்சு; கை நகங்களுக்கு ஈடாக அவளது அதரங்களிலும் செம்பவளச் சாயம். பச்சை விழிகள் சிரிக்க, அழகான கழுத்துத் தெரியும்படி சற்றே தூக்கிய தலையுடன் நின்றாள் அவள். உடனே தன் கையில் பிடித்துக் கொண்டிருந்த நாயை அருகில் இழுத்து, ''என் நாயைப் பார்த்தாயா? ஹஸ்துருபால் என்று பெயர். சென்ற வாரந்தான் எனக்கு இதை ஒருவன் கொடுத்தான். அழகாக இருக்கிறது, இல்லையா?'' என்று அவள் பெருமையுடன் வினவினாள்.

பிறகு அவள் கவனமாக ரோனுவை நோக்கினாள். சரியாக உடை பொருந்தவில்லை. கறுப்புச் செருப்புக்கும், கைப்பைக்கும் எதிராக ஏன் நீல உடையை அணிய வேண்டும்? ரோனுவுக்கு ரசனையே போய் விட்டது. தாராளமாக முறுவலித்த மேரி ஃபைன் சிறிது நேரம் நின்று பேசத் தீர்மானித்தாள். "இப்போதெல்லாம் உன்னைப் பார்க்கவே முடிவதில்லையே. என்ன செய்து கொண்டிருக்கிறாய்? ஸ்காட் எப்படியிருக்கிறான்? ஓ— நான் மறந்து விட்டேன்! உங்கள் திருமண ஏற்பாடு முறிந்து விட்டதாமே! நான் மிகவும் விசனப்பட்டேன். ஸ்காட் கூட மனம் ஒடிந்து போய் விட்டதாகக் கேள்வி." அவள் ரோனுவை ஓரக் கண்ணால் பார்த்தாள்.

ரோனுவின் மௌனம் அவளைச் சுணங்கவைத்தது. நாயை ஒரு தடவை சுண்டியிழுத்துக் கொண்டு, "சரி...பால் ஹேடனை எப்போதாவது பார்த்தாயா?" என்று வினவினாள்.

"அவரும் 'ட்ரெண்டி'ல் தான் வேலை செய்கிறார்" என்று நினைவுறுத்தினாள் ரோனு.

"என் அன்பே, என்ன ஜலதோஷம் உனக்கு! இந்த வெப்பத்தில் ஏன் மஃப்ளர் அணிந்திருக்கிறாய் என்று நான் வியந்தேன். சீக்கிரம் வீட்டுக்குப் போய் ஏதாவது மருந்து போட்டுக் கொப்பளி. பால் ஹேடனைப் பற்றிய என் புத்திமதிகளை மறந்து விடாதே— அவனை நம்பி உன் காலத்தை இன்னும் வீணாக்காதே. அவன் ஜெர்மனியிலிருந்து ஓர் அழகு ராணியைப் பிடித்து வந்திருந்தாலும், நான் அதிசயப்பட மாட்டேன். குட் பை!" என்று கூறியபடி நடந்தாள் மேரி ஃபைன்.

ரோனுவும் மேலே செல்லலானாள். இன்னும் இரண்டு கட்டடங்கள் தாண்டினால் போதும். அவளுடைய சிந்தனைகள் குழம்பின. மேரி ஃபைனும், மற்றவர் பலரும் திருமண முறிவுதான் ஸ்காட்டின் தற்கொலைக்குக் காரணம் என்பார்கள். ஸ்காட்டின் தந்தைகூட அப்படி நினைக்கக் கூடும். செய்தி தெரிந்தும் பால் என்ன நினைப்பான்? ....ஸ்காட் தனக்கெதிராகவே செய்து கொண்ட கடைசிப் புரட்சி இது என்று நான் கூறினால் யார் நம்புவார்கள்? ஸ்காட் என்னைத் தன்னுடன் பிணைத்துக் கொண்டு விட்டார். அப்பிணைப்பிலிருந்து நான் விடுதலை பெறுவேனா?

அவள் களைத்துப் போய், ஆர்பெனது தெருவின் கோடியில் திடீரென்று தயங்கி நின்றாள்.

ஸ்காட்டைப் பற்றிய உண்மை எவருக்கும் தெரியாமல் போனாலும், நான் மட்டும் அறிய விரும்புகிறேன் என்று நினைத்தாள் ரோனு. அறிந்தால்தான், பிறகு நான் அதை மறக்க முடியும். அறியாதது எதையும் மறக்க முடியாது. மறக்காவிட்டால், சந்தேகங்களும் வேதனைகளும்தாம் சூழும்.

என்றுமே மன நிம்மதி பெற முடியாது....அவள் மேலே நடந்தாள்.

மூன்று குழந்தைகள் பனி உருளைகளின் மீது ஓடிக்கொண்டிருந்தார்கள். இரண்டு பெண்மணிகள் இறைச்சியின் விலையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். மெக்கானிக் ஒருவன் மோட்டார் கொட்டகையொன்றின் கதவில் சாய்ந்தபடி சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று கேட்ட குழிதோண்டும் யந்திரத்தின் ஓசை ரோனுவை நிமிர வைத்தது. தொழிலாளி ஒருவன் முறுவலித்தபடி தலையை அசைத்தான். அவளும் பதிலுக்குப் புன்முறுவல் பூத்தாள். நடுக்கிக் குளிர்ந்த கூடத்திலிருந்து கணப்பு உள்ள அறைக்குள் புகுந்தாற்போல் உணர்ந்தாள் ரோனு. பிறகு அவள் நின்று வீட்டு இலக்கங்களைக் கவனிக்கலானாள்; தெருப் பக்கம் ஒரு தடவை பார்த்துவிட்டு, அவள் எதிரிலிருந்த வீட்டின் படிகளில் ஏறினாள். அவள் தேடிய பெயரை அங்கே காணாததால், ரோனு மீண்டும் தயங்கினாள்.

அங்கு வேலை செய்துகொண்டிருந்தவர்கள் அவளைக்கவனித்ததாகத் தெரியவில்லை. ஒருவன் தன் வேலையின் மீது கவனமாக இருந்தான். மற்றவன், அங்கிருந்த குழந்தைகளின் கேள்விகளுக்குப் பதில் அளித்துக் கொண்டிருந்தான். மூன்றாமவன் பொதுவாக அங்கு நடக்கும் 'ரிப்பேர்' வேலைகளைக் கண்காணித்துக் கொண்டிருந்தான். இருந்தும் அவர்கள் நடப்பதைக் கவனித்துக் கொண்டுதானிருந்தார்கள். நீல உடையில் ஒரு பெண்; குளுமையான முறுவல், நடுத்தர உயரம்; கழுத்தைச் சுற்றி மஃப்ளர், கருங் கூந்தல், அகன்ற விழிகள், சுமார் 120 பவுண்டுகள் எடை, அழகிய கால்கள், நன்றாக நடக்கிறாள். அவளைத் தொடர்ந்து வரும் இந்த மனிதன் யார்? சாதாரண ஸூட்டு, சாம்பல் நிறத் தொப்பி, வெளுப்பற்ற முகம். அப் பெண்ணுக்குச் சற்றுப் பின்னால்தான் அவன் வந்தான். ஆனால் அவள் படிகளில் ஏறியதும் வேகமாக நடந்து வருகிறான். அவன் மோட்டார் கொட்டகையண்டை நின்றுவிட்டான். ஒரு வேளை அவனும் நம்மில் ஒருவனோ?

நீல உடையிலிருந்த அப்பெண் இறுதியில் கதவு மணி ஒன்றை அடித்தாள். அது வீட்டு மேற்பார்வையாளரின் மணிதான். வேலை செய்யும் அழுக்கு உடையிலிருந்த ஒருவன் கதவைத் திறந்தான். கண நேரம் வெளியே வேலை செய்த யந்திரங்கள் நின்று விட்டன. அப்பெண் கேட்ட கேள்வி காதில் விழவில்லை. மேற்பார்வையாளர் தலையை அசைத்தார். பிறகு அவன் ஒதுங்கி அவளை உள்ளே செல்லவிட்டான்; சில கணங்கள் அவன் கதவை மூடவில்லை. அவன் வெளியே வந்து காற்று வாங்குபவன் மாதிரிச் சற்றே நின்றான். அறைக்

குத் திரும்புமுன் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டான். அப்படியானால் அப்பெண் ஆர்பெனைக் காணத்தான் சென்றிருக்கிறாள்.

வேலை செய்து கொண்டிருந்தவர்கள் தெருப் பக்கம் பார்த்தார்கள். சாதாரண ஸூட்டுடனும், சாம்பல் நிறத் தொப்பியுடனும் வந்தவன் எதிரேயுள்ள மோட்டார் கொட்டகையிலிருந்து தன் காரை ஓட்டிச் செல்ல வந்திருக்க வேண்டும். ஏனெனில், அவன் அங்குள்ள மெக்கானிக்கைத் தொடர்ந்து உள்ளே சென்று, அங்குள்ள இருட்டான பின்புறத்தில் நிற்கிறான். தெருவிலே இன்னும் தள்ளி, நரைத்த தலையுள்ள ஒரு மனிதன் தண்ணீர்க் குழாயின் மீது அமர்ந்து, அந்தக் கிடங்குச் சுவற்றின் மீது சாய்ந்து கொண்டிருக்கிறான். அவன் புகை குடித்துக் கொண்டிருந்தாலும் அவன் பார்வை சாமான்களை ஏற்றிக் கொண்டிருக்கும் லாரி ஒன்றைத் துருவிக் கொண்டிருக்கிறது. அவனுக்கப்பால் ஒரு பெண்மணி, தூங்கும் குழந்தையின் மீது போர்வையைப் போர்த்தி விட்டு அமர்ந்திருக்கிறாள்.

ஆர்பெனின் கட்டடத்தில் வேலை செய்துகொண்டிருப்பவனது மனத்தில் ஒரு வேடிக்கையான எண்ணம் முளைத்தது. அங்கே வீட்டில் டெலிபோனுக்கோ, கதவு மணிகளுக்கோ கூடப் பதில் தராமல் ஆர்பென் உட்கார்ந்திருக்கிறான். கீழே இங்கே தெருவில் ஒருவிதக் கூட்டம் இருக்கிறது. இவ்விரு குழுவினரும் மாடியில் உள்ள மனிதனின் மீது சிரத்தை கொண்டு, கவனித்த வண்ணம் காத்திருக்கிறார்கள். இவர்கள் இங்கே இருப்பது மேலே உள்ளவனுக்குத் தெரியாமல் இருக்கலாம். இப்போது நீல உடையிலுள்ள இப்பெண் ஆர்பெனின் விடுதியை நோக்கி மேலே செல்கிறாள். அவள் எந்தக் குழுவைச் சேர்ந்தவள்? அவர்களுடைய குழுவா, அல்லது எங்களுடைய குழுவா? அல்லது இரண்டையும் சேர்ந்தவள் இல்லையோ? அவர்களைச் சேர்ந்தவளானால் . . . .

இதே மாதிரி எண்ணம் அவர்கள் கூட இருந்தவர்களில் மற்றொருவனுக்கும் உதித்தது. அவன் அருகில் வந்து சொன்னான்: ''உன் குழி தோண்டும் யந்திரத்தை நிறுத்து. ஒரே சப்தம். ஒன்றுமே நமக்கு கேட்காது.'' அவன் பேச்சில் வேதனை தெறித்தது.

அவன் அந்த யந்திரத்தை நிறுத்திவிட்டு, ஒரு மண்வெட்டியை எடுத்துக் கொண்டான். சாலையில் இருந்த வெடிப்பைக் காட்டியபடி, ''அவள் மீது நம்பிக்கையிருந்தாலொழிய ஆர்பென் உள்ளே அனுமதிக்க மாட்டான். இது வீட்டு மேற்பார்வையாளருக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்'' என்றான் அவன்.

மூன்றாவது மனிதன் ஆளோடியைப் பார்த்து விட்டுத் தலையை ஆட்டினான். "அந்தப் பயல் ஆர்பென் பத்திரமாகத்தானிருக்கிறான்" என்றான். ஆனால் உள்ளே உட்கார்ந்திருக்கும் அவனை எப்படிக் காப்பாற்றுவது? அவனைக் கைது செய்வதுதான் ஒரே வழியென்று அவன் எண்ணினான். ஆனால் எந்தக் குற்றத்திற்காக? அவன் எவ்வளவோ சட்ட விரோதமான செயல்களைப் புரிந்திருக்கலாம். ஆனால் நிருபணம் இல்லாமல் ஒன்றும் செய்ய முடியாதே? அந்தத் தொழிலாளி கையில் ஒரு கோடரியை எடுத்துக் கொண்டு, தெருவில் லாரியை ஓட்டி அமர்ந்திருந்த நரைத்த மனிதனையும், குழந்தையை ஆட்டிக் கொண்டிருந்த பெண்மணியையும் கண்ணோட்டம் விட்டான். 'அவர்களுக்கும் காத்திருப்பது தவிர வேறு வழியில்லை' என்று நினைத்தான் அவன். நாங்கள் இங்கிருக்கும் வரை அவர்களால் மெதுவாக ஆர்பெனைக் கிளப்பிக் கொண்டு போக முடியாது.

அதே சமயத்தில் அப் பெண்மணி எழுந்தாள். ஒரு முறை தன் கடிகாரத்தைப் பார்த்து விட்டு, ஏதோ அதிக நேரம் உட்கார்ந்து விட்டது போலவும், வீட்டிலே சோறு அதிகமாக வெந்துபோயிருக்கும் என்று நினைப்பவள் போலவும் தலையை ஆட்டிக் கொண்டாள். பிறகு குழந்தை வண்டியைத் தள்ளிக்கொண்டு, வேகமாக கிழக்கு நதியை நோக்கி நடந்தாள்.

அவள் ஒருவேளை இவற்றிலெல்லாம் சம்பந்தப்படாதவளோ என்னவோ என்று நினைத்தான் அத் தொழிலாளி. பிறகு, மேலே சென்ற நீல உடைப் பெண் திரும்பி வராதது அவனுடைய நினைவுக்கு வந்தது. கிழக்கே சென்ற அப் பெண்மணியும் அதைக் கவனித்திருப்பாள். இருக்காது, இந்த வேலையில் எடுத்ததற்கெல்லாம் சந்தேகமல்லவா வந்து விடுகிறது?

தன் பக்கத்தில் வேலை செய்பவனைப் பார்த்து, "அவள் இன்னும் திரும்பி வரவில்லை" என்றான்.

"அப்படியானால் இந்த நியூயார்க்கிலேயே அவளைத்தான் ஆர்பென் நம்புகிறான் போலும்."

அவன் சற்று உரத்த குரலில் சொன்னான்: "அதோ பார், ஜோ, கார் வருகிறது!"

சற்றுமுன் கார் கொட்டகைக்குள் சென்றவன் மெதுவாகத் தன் காரை வெளியே கொண்டு வந்து கொண்டிருந்தான். பிறகு அது தெருவில் நகர்ந்தது.

கோடரிக்காரன் அதைக் கீழே வைத்து விட்டு, "சாப்பிட நேரமாகி விட்டது" என்றான். தொடர்ந்து சாப்பாட்டு மூட்டைகளை அவிழ்த்துக்கொண்டே மூவரும் பேச ஆரம்பித்

தார்கள். அந்த நீல உடைப் பெண் ஆர்பெனின் சிநேகிதி போலும். அவள் யார் என்பது அந்த நரைத்த தலை மனிதனுக்கும், குழந்தையுடனிருக்கும் அப் பெண்மணிக்கும் புரிந்திருக்க வேண்டும். காரில் இருந்தவன் அந்த நீல உடைப் பெண்ணுக்கு உடந்தையாக இருப்பவன். இதனால் மட்டும் அந்த நீல உடைப் பெண்ணைப் பற்றி என்னதான் ஊகிக்க முடியும்?

நல்ல உடையிலிருந்த உயரமான மனிதன் ஒருவன் மூன்றாவது அவென்யூவின் அருகே அத்தெருவின் கோடியில் காத்துக் கொண்டிருந்தான். இப்போது அவன் திரும்பி, சாப்பிட்டுக் கொண்டிருந்த இந்த மூன்று பேரையும் நெருங்கினான். ''இவ்வழியே ஒரு பெண் வந்தாளா? இந்த வீட்டிற்குள் அவள் நுழைந்தாளா?'' என்று வினவினான் அவன்.

''பல பெண்கள் இவ்வழியே போனார்கள்'' என்று பதிலளித்த ஒரு தொழிலாளி, மற்றவர்களைப் பார்த்தான்.

''கறுப்புக் கூந்தலுடன், லட்சணமாக இருப்பவள் யாராவது?''

''அவள் என்ன உடையிலிருந்தாள்?''

''கடவுளுக்குத்தான் தெரியும்'' என்றான் பால் ஹேடன். காலையில் ரோனா என்ன உடுத்தியிருந்தாள்?

''கவலைப் பட்டுப் பயனில்லை பெண்கள் விஷயம் எப்படியென்று உங்களுக்குத் தெரியாதா? எங்கேயாவது கடை கண்ணிக்குப் போயிருக்கலாம்'' என்றான் ஒரு தொழிலாளி.

பால் ஹேடன் தயங்கினான். பிறகு வீட்டுப் படிகளில் ஏறி வீட்டு மேற்பார்வையாளரின் அறை மணியை அடித்தான். கதவு திறந்தது. ஆனால் அவராலும் சரியான பதில் கொடுக்க முடியவில்லை.

''சரி.. நான் மேலே பார்க்கிறேன். ஆர்பெனின் விடுதி எது?'' என்று கேட்டபடி பால் ஹேடன் கூடத்தினுள் நடந்தான். மேற்பார்வையாளரும் தோள்களைக் குலுக்கிக்கொண்டு அவனைப் பின்தொடர்ந்தார்.

பால் திரும்பிப் படிகளில் ஏறினான். ஆர்பெனது தளத்திற்கு வந்ததும் மீண்டும் நின்று அங்கிருந்த ஒரே கதவைக் காட்டி, ''இது தானே?'' என்றான்.

''ஆமாம்..'' என்று மேற்பார்வையாளர் சில படிகள் கீழேயே நின்றவாறு பதிலளித்தார்.

பால் கதவை நெருங்கினான். பேச்சுக் குரல் ஒன்றும் கேட்கவில்லை. அவன் திரும்பி மேற்பார்வையாளரைப் பார்த்தான். பிறகு கோபத்துடன் மணியை அடித்தான்.

பதில் ஒன்றும் வரவில்லை. விடுதிக்குள்ளே காலரவங்கூடக் கேட்கவில்லை. அவன் மீண்டும் மணியை அடித்தான். பிறகு வேகமாகக் கதவைத் தட்டி விட்டு, ''ரோனு!'' என்று அழைத்தான்.

பதில் இல்லை. காலியாயுள்ள விடுதியின் நிசப்தந்தான் அங்கே நிலவியது.

அவன் திரும்பி மீண்டும் மேற்பார்வையாளரைப் பார்த்தான். அவரோ இன்னமும் காது கொடுத்து அந்த அறையிலிருந்து சப்தம் வருகிறதா என்று கேட்டுக் கொண்டிருந்தார்.

''இங்கு ஒருவருமே இல்லை'' என்ருன் பால்.

மேற்பார்வையாளர் பதில் பேசவில்லை. தயங்கிய அவர் கண்களிலே ஏதோ சிந்தனை. அதற்குள் பால் அவரைத் தாண்டிப் பாதிப் படிகளைக் கடந்து விட்டான். பிறகு திரும்பி, ''இங்கே போன் எங்கு இருக்கிறது? கூடத்திலா?'' என்று வினவினுன்.

★ ★ ★

ஆர்பெனின் விடுதியை நோக்கி மாடிப்படிகளில் ஏறும் போது ரோனுவின் மனத் திகில் அதிகரித்தது. எல்லாம் அவள் முதன் முதலில் பேசும் வார்த்தைகளைப் பொறுத்திருக்கிறது. அவைகள் 'சரி'யில்லாவிட்டால், கதவைத் தாண்டி அவள் உள்ளே அநுமதிக்கப் படமாட்டாள்.

மணியை அடித்து விட்டு அவள் காத்திருந்தாள். ஒரே நிசப்தம். பிறகு உள்ளேயிருந்து வந்த மெல்லிய காலரவம் சட்டென்று நின்றது. அவன் மறைந்துகொண்டிருக்கிறுன் என்று அவள் நினைத்தாள். அப்படியானுல் அவன் ஏதோ ஆபத்திலிருக்கிறுன். அது அவனுக்குத் தெரிந்திருக்கிறது. அவளுடைய சந்தேகங்களும், தயக்கங்களும் குறைய ஆரம்பித்தன. மெதுவாக அவள் கதவைத் தட்டிவிட்டு, ''ரோனு மெட்ஃபோர்டு வந்திருக்கிறேன். ஸ்காட் எட்லீயிடமிருந்து அவசரச் செய்தி ஒன்று கொணர்ந்திருக்கிறேன்'' என்று குரல் கொடுத்தாள்.

அவள் காத்திருந்தாள். ''ரோனு மெட்ஃபோர்டு நான். இது அவசர விஷயம். ஸ்காட்டைப் பற்றி'' என்ருள் மீண்டும். கதவு சிறித திறந்து கொண்டது.

''நீ தனியாக வந்திருக்கிருயா?'' என்று கேட்டான் ஆர்பென்.

''ஆமாம்''.

அவள் உள்ளே நுழையும் அளவுக்குக் கதவு இன்னும் சிறிது திறந்து கொண்டது. அவள் நுழைந்ததும் கதவை மூடி நன்கு தாழ்ப்பாள் போட்டான் ஆர்பென்.

அவள் அந்த அறை முழுவதும் விழிகளைச் சுழற்றினள். ஆர்பென் ஏதோ எழுதிக்கொண்டு இருந்திருக்கிறன். மேஜை மீது காகிதங்கள் நிரம்பிய இரும்புப் பெட்டி ஒன்று திறந்து கிடந்தது. அதைச் சுற்றிலும் டைப் செய்யப்பட்ட காகிதங்கள் சிதறிக் கிடந்தன. தவிர சிறிது உணவு வகைகளும், காஃபிக் கோப்பையும், சில தட்டுகளும் மேஜை மீதிருந்தன. அறையிலிருந்த கணப்பிலே எரிந்து போன காகிதச் சுருள்கள். பலகணிகள் மூடிக் கிடந்தன. அறையினுள்ளே சிகரெட், பீர், காஃபி இம்மூன்றின் நாற்றமும் கலந்த ஒரு நெடி மூக்கைத் துளைத்தது.

''என்ன?'' என்ற ஆர்பெனின் குரலைக் கேட்டதும், அவள் திரும்பி அவனை நோக்கினள்.

''கடந்த சில நாட்களாக எனக்கு உடம்பு சரியாக இல்லை. ஆனல் என் தோற்றத்தைப் போல் உடம்பு அவ்வளவு அசௌகரியமாக இல்லை. நீ என்ன செய்தி கொண்டு வந்திருக்கிருய்?'' என்று வினவினன் ஆர்பென். தொடர்ந்து மேஜையை நெருங்கி, சில காகிதங்களை எடுத்து அப்பெட்டியில் அடைத்து, அதை மூடினன்.

''கவலை வேண்டாம். நான் வேவு பார்க்க வரவில்லை'' என்ருள் ரோஞ.

அவனை ஏறிட்டு நோக்குவதற்காக அவன் திரும்பினன். பிறகு வெளுத்த அவனது முகத்தில் ஒரு முறுவல் நெளிந்தது. ''ஸ்காட்டிடமிருந்து வந்துள்ள செய்தி என்ன?''

ரோஞ நாற்காலி யொன்றில் அமர்ந்தபடி, ''நீங்கள் அபாயத்தில் இருக்கிறீர்கள்'' என்ருள்.

''நானு?''

''ஆமாம். உங்களைத் துரோகி யென்று கண்டனம் செய்திருக்கிருர்கள்.''

''இதை நான் நம்புவேனென்று நீ எதிர்பார்க்கிருயா?'' நகைப்பது போல் அவன் நன்ருகப் பாசாங்கு செய்தான்.

ரோஞ தோள்களைக் குலுக்கினள். ''என்னைப் போன்ற கம்யூனிஸ்ட் அல்லாதவர்களுக்கு இது கேலிக் கூத்தாகத் தானிருக்கிறது. ஆனல் நாங்கள் உங்களுடைய உலகத்தில் வாழவில்லையே.... ஸ்காட் இதைத் தீவிரமாகத்தான் எடுத்துக் கொண்டார். தெல்மாவும், மர்ரேயும், மற்ற தோழர்களும் அப்படித்தான் எடுத்துக் கொள்வார்கள்.'' ரோஞ அவனை நிமிர்ந்து நோக்கினள். உடனே அவள் நிலை குத்திப்

போனுள். ஆர்பெனிடமிருந்த கேலிப் பாசாங்கெல்லாம் மறைநது போயிருந்தது. இறுகிய உதடுகளுடன் அவன் 'உம்' மென்றிருந்தான். அவனுடைய கண்கள் வெறித்து நோக்கிக் கொண்டிருந்தன.

''எங்கேயிருந்து ஸ்காட் இதை அறிந்து கொண்டான்?'' என்று இறுதியில் கேட்டான் ஆர்பென். நேற்றிரவு நடந்த கூட்டத்திலிருந்தா? ஆமாம், அங்கேதானிருக்க வேண்டும். நேற்றிரவு தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது: பீட்டரின் தீர்மானம். அதனுல்தான் தெருவிலே இன்று காலையில் சில வேவுக்காரர்கள் காணப்பட்டார்கள் போலும்....

ஆர்பென் பலகணியண்டை சென்றுன். அதன் திரைச் சீலை மறைவிலே நின்று கீழேயிருந்த கிடங்கின் கூடத்தைப் பார்த்தான். அவர்கள் எச்சரிக்கைக்காக இங்கே அனுப்பப் பட்டிருக்க வேண்டும். ஆனுல் அவனைப் பயமுறுத்திப் பணியச் செய்வதற்காக அவர்கள் இங்கே வந்து கவனித்துக் கொண் டிருக்க வில்லை என்பதை ஆர்பென் அறிவான். எவ்வளவு பேர்கள்? ஆனுல் அது ஒரு முக்கியமா? இல்லை. அவர்கள் அங்கே இருக்கிறுர்கள் என்ற விஷயந்தான் முக்கியமானது. தோழர் பீட்டர் ஜெயித்து விட்டார்.

''அதை எங்கே அறிந்தார் என்று ஸ்காட் என்னிடம் கூற வில்லை'' என்றுள் ரோனு.

என் வீட்டை வேவு பார்ப்பார்கள் என்று ஸ்காட்டுக்குத் தெரியுமாதலால், அவன் இப்பெண்ணை அனுப்பியிருக்கிறுன் என்று நினைத்தான் ஆர்பென். அப்படியானுல் ஸ்காட் என் கட்சி. ஆனுல் அவன் ஏன் எனக்கு டெலிபோன் செய்ய வில்லை? நான் அவனுடன் பேசியிருப்பேன். ஒரு வேளை அவன் பயந்து விட்டானே? என்னுடைய மற்ற நண்பர்களைப் போலவே அவ னும் தன்னைக் காத்துக் கொள்ளுவதற்காக வாளா விருந் திருக்கிறுன் என்று கசப்புடன் எண்ணினுன் ஆர்பென்.

பலகணியை விட்டு நகர்ந்த அவன் மேலே என்ன செய்வ தென்று புரியாதவன்மாதிரி அங்குமிங்கும் நடந்தான். மேஜை யண்டை நின்று அப்பெட்டியிலிருந்த பெயர்ப்பட்டியல்களைப் பார்த்தான். அமெரிக்கக் கம்யூனிஸ்ட் கட்சிச் சர்வாதிகாரி களின் பெயர்கள் அவை. யாரானுல் என்ன? எல்லாருடைய கதியும் ஒன்றேதான். அவர்களுடைய அதிகார எல்லையும் வரம்புக்குட்பட்டதுதான். ஆர்பெனைப்போலவே அவர்களை யும் ஒப்புக்கு ஏற்றுக்கொண்டிருக்கிறுர்கள். ஆனுல் உண்மை யான அதிகாரம் என்னவோ ரஷ்யர்களுடைய கைகளில் தானிருந்தது. உத்தரவுகள் மாஸ்கோவிலிருந்துதான் வந்தன.

ஆமாம், அதை அவன் எப்போதுமே அறிந்திருந்தான். ஆனால் கடந்த சில மாதங்களில் நிகழ்ந்ததுபோல் அவர்களுடைய பிடி இப்படி இறுகும் என்று அவன் ஒருநாளும் எதிர்பார்த்ததில்லை. இத்தனை வருஷங்களாக வெளிநாட்டவர்களை உபயோகித்துக் கொண்டதன் விளைவுதான் அவனுடைய இத்தோல்வி. அவர்களால் பலனடையலாம் என்ற எண்ணத்தில் அவன் முற்றிலும் சரணடைந்துவிட்டான். அவனுடைய கட்சி கூடத் தோற்று, சரணாகதியடைந்துவிட்டதா? ரஷ்யர்களா அல்லது கட்சியா? எது முக்கியம் என்பதுதான் பிரச்னை. ஆனால் அதற்கு அவன் இன்னமும் விடைகாணவில்லை. அதைக் கண்டு பிடிப்பதற்குள் அவனைத் 'துரோகி' யென்று தீர்மானித்து விட்டார்கள். ரஷ்யர்களும், கட்சியும்! இவற்றில் ஒன்றைப் பற்றிக்கொண்டு, மற்றதை மட்டும் உதறுவது எப்படி? யார் அவனுக்கு அதில் உதவி செய்வார்கள்?

கடைசியாக அவன் தான் எழுதிய பெயர்ப் பட்டியல் ஒன்றை எடுத்தான். தனது புரட்சிக்குச் சிறிதாவது ஆதரவு இருக்கும் என்பதை உறுதி செய்துகொள்வதற்காகவே அவன் அதைத் தயாரித்திருந்தான். ஆனால் பதில் எப்போதுமே ஒரே மாதிரித்தானிருந்தது. உண்மையான அதிகாரம் ரஷ்யர்கள் கையிலோ, அல்லது ரஷ்யாவில் பல வருஷங்கள் வாழ்ந்து 'நம்பத் தகுந்தவர்கள்' என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட பிற நாட்டவர்களின் கைகளிலோ தானிருந்தது. அவன் மட்டும் இப்படி உணரவில்லை. அவனைவிட இன்னும் மோசமாக நிலைமையை உணர்ந்தவர்கள் பலர் இருந்திருக்கிறார்கள். தவிர்க்க முடியாதவற்றை ஒப்புக்கொண்டு, அதைக் கண்டு மகிழ்ச்சி கொள்ளும்படி அவர்கள் தங்களையே பலவந்தப்படுத்திக் கொண்டுவிட்டார்கள். ஆனால் ரஷ்யர்களை ஒதுக்கவேண்டுமென்றால், கட்சியையும் சேர்த்து ஒதுக்குவதைத்தவிர அவர்களுக்கு வேறு என்ன வழி இருந்தது? மேலும் நம்பிக்கையில்லாமல் ஒரு மனிதன் வாழமுடியுமா? நம்பிக்கையில்லையெனில், உண்மையான அதிகாரமும் இல்லை.

அந்தப் பெயர்ப்பட்டியலைக் கசக்கி மீண்டும் மேஜைமீது போட்டான். நான் உணர்ச்சி வசப்பட்ட, கட்டுப்பாடற்ற முட்டாளாக இருந்திருக்கிறேன். ஸ்காட்டுக்கும், மற்றவருக்கும் உணர்ச்சி வசப்படக்கூடாதென்று எச்சரிக்கை விடுத்த நானே இப்போது உணர்ச்சிகளுக்கு அடிமையாகி விட்டேன்.......

பிறகு, தனக்குப் பின்னால் அமர்ந்திருக்கும் ரோஜாவின் நினைவு வந்ததும் அவன் திரும்பினான். ''அவசரமாக எதுவும் செய்யவேண்டாமென்று ஸ்காட்டிடம் சொல்லு. தவிர நான் கூறியது தவறுதானென்றும், அக்குற்றத்தை நான் ஒப்புக் கொள்வதாகவும் அவனிடம் கூறு....சரி....நீ போகலாமே.

நீ கொண்டுவந்த செய்திக்கு நான் பதிலளித்துவிட்டேன்'' என்றான் ஆர்பென்.

ஆனால், அவனை உற்றுப் பார்த்தபடி அவள் அசையாமல் அமர்ந்திருந்தாள். ஒருவேளை ஸ்காட் எட்லீ முன்பே கமிட்டியிடம் அவனைப்பற்றிக் கூறிவிட்டானோ என்று எண்ணினான் ஆர்பென். உடனே, ''என்ன, காலம் கடந்துவிட்டதா?'' என்று ரோனாவை நோக்கினான் அவன்.

பிறகு திடீரென்று கண்களை இடுக்கிக்கொண்டு ரோனாவை நெருங்கினான். அவள் எதிரே நின்றபடி, ''என்னையோ, ஸ்காட் எட்லீயையோ, அல்லது கட்சியையோ பற்றி உனக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டான் கடுங்குரலில்.

ரோனா பதில் அளிக்கவில்லை.

ஆர்பெனின் கோபம் அதிகமாயிற்று.

''நீ அவனை பலவீனப்படுத்தி விட்டாய். நீ அவனை நாசமாக்கி விட்டாய். அவன் உன்னிடம் எல்லாவற்றையும் கூறி விட்டான், இல்லையா?''

ரோனா தலையை அசைத்தாள்.

''அதற்கு அவனுக்கு என்ன தண்டனை கிடைக்கக்கூடும் என்பதையும் சொன்னானல்லவா?''

ரோனா மெதுவாக, நிதானத்துடன், ''அவர் இறந்துபோய் விட்டார்'' என்றாள்.

நம்ப முடியாமல் அவளை வெறித்து நோக்கினான் ஆர்பென்.

''நேற்றிரவு அவர் என்னைப் பார்க்க வந்தபோது மனம் கலங்கி, ஏதோ அச்சத்துடன் காணப்பட்டார். பிறகு அவர் சென்றுவிட்டார். இன்று காலையில், அவர் சுரங்க ரெயில் ஒன்றன் முன்னே குதித்து தற்கொலை செய்துகொண்டுவிட்டதாகக் கேள்விப்பட்டேன்.''

அவள் பொய் சொல்கிறாளோ? ஏதாவது வலை விரிக்க வந்திருக்கிறாளோ? ஆர்பெனின் கண்கள் அவளது முகத்தைத் துருவின. பிறகு திடீரென்று, அவள் உண்மைதான் பேசுகிறாள் என்று அவனுக்குத் தெரிந்தது.

''ஏன் எட்லீ இப்படிச் செய்துவிட்டான்?'' என்றான் அவன் துயரத்துடன். பிறகு திரும்பி நாற்காலியண்டை சென்று அதன் பின்புறத்தைப் பிடித்துக்கொண்டு நின்றவாறு மீண்டும், ''ஏன்?'' என்று வினவினான்.

''இக்கேள்வியைத்தான் அவன் தந்தை கேட்பார்: அதைத்தான் நானும் கேட்டுக்கொண்டிருக்கிறேன். ஒருவேளை, எங்களுடைய பதில்களைவிட, உங்களுடைய பதில்களில் அதிகம் உண்மை இருக்கலாம். அவர் உங்களைப்போல் வாழ்ந்தார்; உங்களைப்போலவே எண்ணவும், செயல்புரியவும்

அவர் ஆரம்பித்திருந்தார். நேற்று ஸ்காட் உணர்ந்தது போல நீங்கள் என்றுமே உணர்ந்ததில்லையா?'' என்று சவால் விடுவதுபோல் வினவினாள் ரோனு.

நாற்காலியைப் பிடித்திருந்த ஆர்பெனின் கை தளர்ந்தது. ''இல்லை....எட்லியை உன் பொறிக்குள் பிடித்தது போல், என்னையும் பிடிக்காதே'' என்றான் அவன்.

''உங்களைப் பொறிக்குள் பிடிக்கிறேனு?'' அவளுடைய விழிகள் விரிந்தன,

''எட்லீ இறந்துவிட்டான். உன்னை இங்கே அனுப்பியது யார்?''

''ஒருவருமில்லை.''

அவன் அவளைத் துருவி நோக்கினான். பிறகு வேகமாகப் பலகணியை நெருங்கி, கீழே தெருவைக் கவனிப்பதற்காக மெதுவாகத் திரைச்சீலையைச் சிறிதே அகற்றினான்.

ரோனு எழுந்து அவனருகில் சென்றபடி சொன்னாள்: ''ஜன்னல் வழியேகூட மற்ற சாமான்ய மனிதர்களைப்போல் உங்களால் பார்க்கமுடியாது. நீங்கள் பயந்து ஒளிந்துகொள்கிறீர்கள். தெருவிலேயும் பின்புறம் திரும்பிப் பார்க்காமல் உங்களால் நடக்கமுடியாது. உங்களுடைய நிழலேகூட உங்களுக்கு எதிராகிவிடுமோ என்று பயம். ஆனால் என்னுடைய உலகம் உங்களை அப்படி அச்சுறுத்தவில்லை. உங்களுடைய உலகந்தான் அப்படி உங்களைப் பயமுறுத்துகிறது. அதில் ஏன் நீங்கள் வாழ்கிறீர்கள்?'' ரோனு பலகணியை நெருங்கினாள்.

ஆர்பென் அவள் கையைப் பிடித்து மூர்க்கத்தனமாக இழுத்து நடு அறைக்குக் கொணர்ந்தான்.

''என்னைப் போகவிடுங்கள்'' என்றாள் ரோனு கோபத்துடன்.

அவனுடைய பிடி இறுகியது. அவள் மௌனமானாள்.

''எட்லீயைப் பற்றித் தெரிந்துகொண்டவள் நீ ஒருவள் தான்'' என்றான் ஆர்பென். அவனைக் கவனித்தபடி அவள் மெதுவாகத் தலையை அசைத்தாள்.

''வேறு யாருக்குத் தெரியும்?'' அவன் கேலியாகக் கேட்டான்.

போலீசாரும், எஃப். பி. ஐ.க்காரர்களுங்கூட அவர் விஷயத்தில் சிரத்தை காட்டுகிறார்கள்.''

அவன் சிரித்தான். பிறகு திடீரென்று குரலைக் கடுமையாக்கிக்கொண்டு, ''நீ பொய் சொல்கிறாய். ஸ்காட் உன்னிடம் சொல்லியிருக்கலாம். ஆனால் அவர்களிடம் ஒன்றும் கூறியிருக்க மாட்டான்'' என்றான்.

''அவர்கள் அறிவார்கள்'' என்றாள் ரோனு.

அவன் அவளுடைய கையை விட்டான். ''உட்கார். ஸ்காட் போலீசாரிடமோ, அல்லது எஃப். பி. ஐ.க்காரர்களிடமோ சென்றாயா?''

அவள் மீண்டும் தலையை ஆட்டினாள்.

''நீ எஃப். பி. ஐ.க்காரர்களிடம் சென்றாயா!''

அவள் தயங்கினாள். அவன் அதைக் கவனித்தான்; ''சொல்லு. நீ எஃப்.பி. ஐ.யிடமும், போலீசிடமும் சென்றாயா? இந்த இரட்டைப் பயமுறுத்தலை நான் மறக்கக் கூடாது. ஏதாவது ஒன்றாக இருந்தால் சிறிது நம்பலாம். ஆனால் இரண்டு பேரிடமும் சென்றாயென்பது அதிகந்தான்.''

ரோனு சோர்வுடன் சொன்னாள்: ''எப்படி வேண்டுமானாலும் எண்ணிக் கொள்ளுங்கள்.''

''நீ எஃப். பி. ஐ.க்காரர்களிடம் சென்றிருந்தால், அவர்கள் இப்போது என்ன செய்கிறார்கள் என்று உனக்குத் தெரியுமா? அவர்கள் உன்னைப் பற்றிய விவரங்களைத் தான் பரிசீலிக்கிறார்கள். ஸ்காட்டைப் பற்றி இல்லை. அவர்கள் செயலில் இறங்குமுன், நீ நம்பத் தகுந்தவளா என்று ஆராய்கிறார்கள். நீ அவர்களிடம் உனது அபாண்டமான சந்தேகங்களை மட்டும் தெரிவித்தால் அவர்கள் எப்படிச் செயலில் இறங்க முடியும்? அவர்களுக்குத் திட்டமான உண்மை விவரங்கள் தேவை'' என்றான் ஆர்பென்.

''அப்படியானால், நீங்கள் பிரசாரம் செய்வது போல் அவர்கள் அவ்வளவு கொடுமைக்காரர்கள் இல்லையா?''

அவன் உதடுகள் இறுகின. ''எட்லீயைப் பற்றி உணர்ச்சி வசத்தில் பிதற்றியதைத் தவிர உன்னால் அவர்களிடம் திட்டமான தகவல் எதையும் கொடுத்திருக்க முடியாது. அவன் ஒரு கம்யூனிஸ்டு என்று நிரூபணமானாலும், ஒன்றும் செய்வதற்கில்லை. கம்யூனிஸ்டுக் கட்சியில் சேருவது சட்ட விரோதமான செயல் இல்லை. என்னுடைய உலகத்தைப் பற்றி நீ இழித்துப் பேசினாய், மிஸ் மெட்ஃபோர்டு. ஆனால், உங்கள் உலகத்தில் உள்ளவர்களைப் போல் நாங்கள் முட்டாள்களாக வாழ்வதில்லை.''

மேஜை மீதிருந்த டெலிபோனை நோக்கினான் ஆர்பென். பிறகு, ''எஃப். பி. ஐ.க்காரர்களிடம் நீ என்ன சொன்னாய்?'' என்று கேட்டான்.

''நான் அவர்களிடம் போகவில்லை. அவர்கள் என்னிடம் வந்தார்கள்'' என்றாள் ரோனு.

அவன் அசைவற்று நின்றான். பிறகு மெதுவாகத் திரும்பி அவளை நோக்கினான்.

''ஸ்காட் விஷயமாக என்னைக் காண்பதற்காக அவர்கள் இன்று காலையில் வந்தார்கள். அவர் ஒரு கம்யூனிஸ்டு என்று அவர்கள் அறிந்திருக்கிறார்கள். அவர்கள் அவரைத் தொடர்ந்து சென்று வேவு பார்த்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். நேற்றிரவு அவர் கூட அப்படிச் சந்தேகப்பட்டுப் பயந்தார்'' என்றாள் ரோனா.

ஆர்பெனின் முகம் சுருங்கியது. பிறகு வேகமாக அவன் டெலிபோனண்டை சென்றான். மற்றவர்களை நான் எச்சரிக்க வேண்டும் என்று அவன் நினைத்தான். இந்தப் போனில் பேசப் படுவதை அவர்கள் ரகசியமாகக் கேட்கக் கூடும். என்னையே கூட அவர்கள் கண்காணித்துக் கொண்டிருக்கலாம். இருந்தாலும் பரவாயில்லை. மற்றவர்களை எச்சரிப்பதே சிறந்தது. ஆனால் ஏனோ அவன் டெலிபோனின் மீது கையை வைத்த பிறகும் தயங்கினான்.

''ஸ்காட் இறந்த விஷயம் எஃப். பி. ஐ.க்குத் தெரியுமா?''

''அவர்கள்தாம் எனக்குச் சொன்னார்கள்.''

ஆர்பென் மெதுவாகச் சொன்னான்: ''நான் எதிர்பார்த்ததைவிட நீ கெட்டிக்காரியாயிருக்கிறாய், மிஸ் மெட்ஃபோர்டு. எப்போது, எப்படித் தாக்க வேண்டுமென்று உனக்குத் தெரிந்திருக்கிறது. நான் மிகவும் குழம்பிப் பயந்து எஃப். பி. ஐ.க்காரர்களிடம் சென்று விடுவேன் என்று நீ நினைக்கிறாயா? அப்படி என்னை அங்கே செல்லும்படித் தூண்டுவதற்காகத் தான் நீ வந்திருக்கிறாயா?''

''நீங்கள் போவீர்கள் என்று நான் நம்பியது உண்டு. ஆனால் அதற்காக நான் வரவில்லை.''

''பிறகு எதற்காக? நான் ஒரு 'துரோகி' யென்று நீ உண்மையாகவே நம்புகிறாயா?''

''உங்களுக்கு மனச் சாட்சியென்று ஒன்று எப்படியும் இருக்குமென்று நான் நம்பினேன்.''

''ஓ? எப்படியாவது நீ மனச் சாட்சியைக் கொணர்ந்து என்னைக் குழப்புவாய் என்று நான் எண்ணினேன்.''

ஆர்பென் டெலிபோனை எடுத்து எண்களைச் சுழற்றினான். அவன் கண்கள் கேலியாக இன்னமும் அவளைக் கவனித்துக் கொண்டிருந்தன. டெலிபோனில் வந்த எதிர்க்குரலை நன்கு கவனித்த பிறகு, ''ஜிம்? எட் பேசுகிறேன். இப்போது நான் வெளியே செல்வதற்கில்லை. என்னிடமுள்ள சிகரெட்டுக்கள் தீர்ந்து விட்டன. சிறிது எடுத்துக் கொண்டுவா. நாம் பேசலாம். நன்றி'' என்றான்.

ரிஸீவரை அவன் கீழே வைத்ததும், ''ஏமாந்து போனாயல்லவா?'' என்று ரோனாவைக் கேட்டான். ''ஜிம் அருகி

ளுள்ள சிகரெட் கடைக்குச் சென்று, அங்கிருந்து பத்திரயாக எனக்குப் போன் செய்வார். அப்போது ஒருவேளை நீ அதிகமாக ஏதாவது கேட்கலாம். ஆனால், இப்போதை விட அதிகமாக அப்போதும் உன்னால் எதையும் புரிந்து கொள்ள முடியுமென்று நான் நினைக்கவில்லை.''

ரோனு எழுந்தாள்.

''போகப் போகிருயா?'' அவன் முறுவலித்தபடி கேட்டான்.

''பையிலுள்ள சாவியை எடுத்துக் கதவைத் திறந்து விட்டீர்களானால்—''

''தோல்வியை நீ நன்கு ஏற்றுக் கொள்கிருய். நீ திரும்பிச் சென்று, உன்னுடைய சிறிய முயற்சி தோற்று விட்டதென்பதை எஃப்.பி.ஐ.யிலுள்ள உன் நண்பர்களிடம் சொல்லலாம். என்னை ஒரு முக்கியமானவன் என்று நினைத்து நீ இங்கே வந்தது குறித்து நான் பெருமையே கொள்கிறேன்.''

ரோனு கதவுப் பக்கம் அடியெடுத்து வைத்தாள்; ஆர்பென் வழியை மறித்தான்.

''அதற்குள் போவதற்கில்லை. உன்னிடம் நான் மேலும் சில கேள்விகள் கேட்க வேண்டும், மிஸ் மெட்ஃபோர்டு. உட்கார்.''

டெலிபோன் மணி அடித்தது.

ஆர்பென் டெலிபோனை எடுத்து பதில் கொடுத்தான்: ''ஜிம்? எட் பேசுகிறேன். இவ்வாரம் உன்னைக் காண முடியாததற்கு வருந்துகிறேன். கவலை வேண்டாம், ஆபத்து ஒன்றுமில்லை— சாதாரண வயிற்று வலிதான்: இப்போது தேவலை: உன்னை நான் சீக்கிரம் காண விரும்புகிறேன். இன்று மாலை பார்ப்போமா? சரி... உன்னிடம் நான் அதிகம் பேசவேண்டும். அதை ஒரு 'பார்ட்டி'யாகச் செய்து விடு. பீட்டரையும், மற்றவர்களையும் அழை. இவ்வாரம் முழுவதும் நான் யாரையும் பார்க்கவில்லை, மாக்கைத் தவிர. நான் மிகவும் அசௌகரியமாக, ஆபத்தான நிலையில் இருப்பதாக அவன் சொன்னுனு? அது தான் சங்கடமாகியிருக்கிறது. என் உடல் நிலை பற்றிக் கவலை வேண்டாம். மாக் சொல்வதை நீ நம்ப வேண்டாம். நொண்டியாகி விட்டவனைப் போல் என்னைக் கண்காணித்துக் கொள்ளவும் அவசியமில்லை... அதோடு மாக்கின் உடல் நிலையே சரியில்லை. டாக்டர்கள் அவனுடன் இருந்திருக்கிருர்கள். ஆமாம், ஆபத்தான நிலை...நம்பிக்கையில்லை. நேற்றிரவு அவன் டாக்டரை அழைத்தானென்று தெரிகிறது. அவனுடைய ஒரு நெருக்கிதி விஷயத்தைச் சொல்ல வந்தாள். அவள் சொல்லியது சரியென்று நான் நம்புகிறேன்: உண்மையில், இவ்வாரம்

முழுவதும் எனக்கு அந்தக் கவலைதான். நீ இதை உடனே அறிய விரும்புவாய் என்று எண்ணினேன். பின்னால் பார்க்கிறேன்.''

டெலிபோனைப் பார்த்துக் கொண்டு ஆர்பென் ஒரு கணம் நின்றான். அவர்களுக்கு ஸ்காட் எட்லீ ஓர் அபாய மனிதனாக இருந்தான் என்று எச்சரிக்கை செய்தாகி விட்டது. நேற்றிரவு எட்லீ எஃப். பி. ஐ.க்காரர்களிடம் சென்றான் என்று சொல்வது மிகைப்படுத்தும் கூற்றாக இருக்கலாம். ஆனால் எட்லீ இறந்து விட்டான். அவனுடைய சாட்சி இனிமேல் கிடைக்காது. நான் எதிர்ச் சாட்சி கொண்டு வந்து ஸ்காட் தான் துரோகியென்றும், அவன் கூறியதெல்லாம் கமிட்டியைத் தவறான எண்ணத்தில் திருப்புவதற்காகச் சொல்லப்பட்ட பொய்களென்றும், அவைகள் என்னைத் தாக்கி, நமது வேலைகளுக்குக் குந்தகம் புரிவதற்காகக் கூறப்பட்டவைகளென்றும் நிரூபித்து விட்டால் எவ்வளவு நல்லது என்று எண்ணினான் ஆர்பென்—ஆமாம், அதுதான் அவனுடைய வாதம். அதை எட்லீயின் மறைவு பலப்படுத்துகிறது.

மேஜையை விட்டு ரோனா நின்றிருந்த இடத்திற்கு வந்த அவன், ''உட்கார்'' என்றான் மெதுவாக.

ரோனா பீதியுடன் அவனை நோக்கினாள். பிறகு ஓரடி பின்வாங்கினாள். ''ஸ்காட்டின் மரணச் செய்தியை நான் கொணர்ந்தேன். அதை நீங்கள்—''

''எட்லீயின்மீது கரியைப் பூசுவதற்கும், என்னைத் தூய்மைப்படுத்திக் கொள்வதற்கும் உபயோகப்படுத்திக் கொண்டுவிட்டேன், இல்லையா? ஆனால், நீ பேசுவது தவறு, மிஸ் மெட்ஃபோர்டு. எட்லீதான் துரோகி, நானில்லை.'' அவன் நிறுத்தினான். திடீரென்று வெளியே மாடிப்படிகளில் எழுந்த காலரவத்தையும், குரல்களையும் கவனமாகக் கேட்டான்.

ரோனா சொன்னாள்: ''உங்களுடைய நண்பர்களா? அவர்களே உங்களை நம்பவில்லை. அவர்களைப் பொறுத்த வரையில் உங்களுக்கு இன்னமும் 'அசௌகரியம்' தான், ஆர்பென்.''

அவன் திரும்பி, தன் கையால் அவள் வாயைப் பொத்தினான். அவளுடைய கையைப் பற்றி, முதுகுப்புறமாக வளைத்துத் திருப்பினான். அவன் கண்கள் மேஜைமீது இன்னமும் நாசமாக்கப்படாமல் பெட்டியிலிருந்த கடைசிப் பட்டியலைப் பரிதாபகரமாகப் பார்த்தன. அவளை இறுகப் பிடித்துக் கொண்டு ''அசையாமல் இரு'' என்று முணுமுணுத்தான்.

சிறிதாவது சப்தம் காட்டும் முயற்சியில் அவள் காலை நகர்த்த முயன்றாள். ஆனால் வலி அதை அனுமதிக்கவில்லை; நேற்றிரவு அனுபவித்த சங்கடத்தின் விளைவு அது...பயமும்,

குமட்டலும் திரும்பவும் வந்தன. கதவு மணி ஒலித்து, கூடவே, ''ரோனு!'' என்ற குரல்—பாலின் குரலைப்போலிருந்தது அது— கேட்டபோது அவள் தரையை நோக்கித் தொய்ந்தாள். அவளைச் சுற்றியிருந்த மௌனத்தில் அந்த மென்குரல் மறைந்துவிட்டது. உடனே அவளுடைய உடல் வலியும் போய் விட்டது அந்த அறை முடிவற்று நீண்டிருப்பதுபோல் தோற்றியது; கதவு முன்னும் பின்னும் நகர்ந்து, இறுதியில் பின்னே சென்று, சிறிது சிறிதாகத் தேய்ந்து மறைந்து விட்டது.

ஆர்பென் பிடியை இறுக்கினன். அவள் மூர்ச்சை யுடைந்திருப்பது வெறும் பாசாங்காக இருக்குமோ? அவன் தும்பைவிட்டு வாலைப்பிடிக்கத் தயாராக இல்லை. அவளுடைய உடல் கனத்தைத் தாங்கிக்கொண்டு அவன் நின்றான். இன்ன மும் அவன் கை அவளது வாயை அடைத்தபடியே இருந்தது.

சிறிது நேரத்தில் கதவை இடிக்கும் சப்தம் நின்றது. காலரவம் பின்னேக்கிச் சென்றது. ''...இங்கே ஒருவரையுமே காணோம்'' என்றது ஒரு குரல். பிறகு வேகமாகக் கீழே இறங்கும் காலடி ஓசை கேட்டு மறைந்தது.

ரோனுவை ஒரு நாற்காலிக்கு இழுத்துச் சென்றான் ஆர்பென். மெதுவாக அவள் மூர்ச்சை தெளியட்டும் என்று அவன் விரும்பினன். எவ்வளவுக்கெவ்வளவு அவள் மெதுவாக நினைவு பெறுவாளோ, அவ்வளவுக்குப் பத்திரமாகும்!

சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்றவைத்துக்கொண்ட போது அவனுடைய கைகள் நடுங்கின. வாழ்வில் நான் என்றுமே இப்படி பலாத்காரத்தை உபயோகித்ததில்லை என்று எண்ணியவாறு அவன் ரோனுவைக் குனிந்து நோக்கினன். இந்தப் பெண் எப்படியெல்லாம் பேசினள், எப்படியெல்லாம் என்னைப் பேச்சில் மடக்கினள்...தன்னை நிதானித்துக்கொள் பவன்போல், நான் என்றுமே பலாத்காரத்தை உபயோகித்த தில்லை என்று மீண்டும் சொல்லிக்கொண்டான் ஆர்பென். ஆனல் நான் இப்படிச் சொல்வதை இப்பெண் கேட்டால், என்ன சொல்லுவாள் என்று அவன் எண்ணிப்பார்த்தான். ''பலாத்காரத்தை உபயோகிப்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர் கள்; தோழர்கள் திடீரென்று மறைவதை அறிந்தும் நீங்கள் ஒரு கேள்விகூடக் கேட்டதில்லை; ஜாக்கை ஒதுக்கிவிட்டு, அவன் மரணம்பற்றிய சந்தேகத்தை அமுக்கிவிட்டீர்கள்...'' என்றுதான் சொல்வாள். 'ச்சே...என்ன எண்ணம்; நிறுத்து!' என்று அவன் தன்னையே கடிந்துகொண்டான்.

அவன் ரோனுவைக் குனிந்து நோக்கினன்; அவள் விழிகளை மலர்த்தினள். உதடுகள் பிரிந்தன. தன் கையால் கழுத்தைத் தடவிக்கொண்டு, மெதுவாக எழுந்து உட்கார

முயன்றாள். ஒரு தடவை சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, ஆர்பெனை நோக்கினாள்.

மௌனமாக ஒரு தம்ளர் தண்ணீரைக் கொண்டுவந்தான் அவன். பிறகு ஒரு நாற்காலியை இழுத்து அவள் எதிரே போட்டுக்கொண்டு, ''ஸ்காட் உன்னிடம் என்ன சொன்னான்? எல்லாவற்றையும் கூறு'' என்று மெதுவாகவும் அமைதியாகவும் வினவினான்.

அவள் பலகணிப்பக்கம் பார்த்தாள். உடனே, ''இந்த அறையில் காற்றே இல்லை. எனக்கு மூச்சுத் திணறுகிறது. தயவுசெய்து கதவைத் திறவுங்கள்'' என்றாள்.

அவன் எழுந்தான். தயங்கினான். பிறகு, விடுதியின் பின்புறமிருந்த ஓர் இருட்டான அறையின் கதவைத் திறந்தான். அங்கு தரையிலே ஒரு பெட்டி கிடந்தது. அதைச் சுற்றிலும் படுக்கையும், துணிகளும், காகிதங்களும் தாறுமாறாகக் கிடந்தன. அவன் சாளரத்தண்டை சென்று கனமான அதன் உள்கதவைத் திறந்தான். பிறகு வெளிக்கதவின் இடுக்குவழியே கீழே பார்த்தான். அங்கே வீட்டு மேற்பார்வையாளரின் நாய், தீப்பிடித்த காலங்களில் வெளியேறுவதற்காக அமைக்கப்பட்ட வாயிலைக் காவல் காத்துக்கொண்டு நின்றது. தான் பழக்கிவிட்டதுபோல் அந்த இடத்தைக் காத்துக் கொண்டிருந்த முரட்டு நாயைக் கண்டதும், அவனுடைய முறுவல் விரிந்தது.

அவன் கூடத்து அறைக்குத் திரும்பினான். அவன் விட்டுச் சென்ற மாதிரியே ரோனா அங்கு உட்கார்ந்திருந்தாள். திரும்பி அந்தப் பலகணியைப் பார்த்துக்கொண்டு அவன் சொன்னான்: ''இப்போதைக்கு இது போதும். எப்படியாயினும், இந்த முற்றுகை நிலை முடிந்துவிடும். உண்மையில் அது முடிந்திருக்கிறது. இங்கே சற்றுமுன் வந்தது யாராயிருந்தாலும், அவனுக்கு என்மீது அக்கறையில்லை. உன்னைத் தேடித்தான் வந்திருக்கிறான், ரோனா மெட்ஃபோர்டு. தவிர, நீ இங்கிருக்கிறாய் என்றுகூட அவனுக்கு நிச்சயமில்லை. அதனால் நீ இங்குள்ள விஷயம் ஒருவருக்கும் தெரியாது. அது நல்லதில்லையா?''

அவளுக்கு எதிரே நாற்காலியை அருகில் இழுத்துப் போட்டுக்கொண்டு அமர்ந்தான் அவன். ''நான் கூட்டத்துக்குப் போகுமுன், ஸ்காட் எட்லீயைப்பற்றிச் சொல்லு. எனக்குத் தெரிந்தாகவேண்டும். புரிகிறதா?'' அவன் குரல் அன்புடன் ஒலித்தது. அவனுடைய மெலிந்த உதடுகளில் ஒரு முறுவல். ஆனால் கண்ணாடிக்குள்ளிருந்த சாம்பல் நிறக் கண்கள் மட்டும் கடுமையாகவே இருந்தன.

அத்தியாயம் 26

ஆர்பெனின் விடுதியிலிருந்து பால் ஹேடன் குறுகலான படிகள் வழியே கீழே ஓடினான். பின்னால் வேகமாக, ஆனால் கிழிந்திருந்த தரை விரிப்பையுங்கூடக் கவனித்த வண்ணம் வந்தார் வீட்டு மேற்பார்வையாளர். அவர்களது நடையினால் ஏற்பட்ட சப்தத்தைக்கேட்டு, மூன்றாவது மாடியின் விடுதியொன்றிலிருந்து ஒரு பெண்மணி கையில் உருளைக் கிழங்குப் பானையுடன் வெளியே வந்தாள். ''உங்கள் மனத்தில் நீங்கள் யாரென்று எண்ணம்? இப்படியா 'தடபுடால்' என்று நடப்பது?'' என்று கூவிய அவள், கதவைப் 'படீர்' என்று மூடிக்கொண்டு மீண்டும் உருளைக்கிழங்கை மசிக்கச் சென்றாள்.

கூடத்திற்கு வந்த பால் மேற்பார்வையாளரைக்கூடக் கவனிக்காமல் நேராகச் சுவற்றில் தொங்கிய டெலிபோனண்டைச் சென்று, டைஸனின் எண்ணைச் சுழற்றினான். அவன் எதிர்பார்த்தபடியே பதில் ஒன்றும் கிடைக்கவில்லை. ரோஜா போய்விட்டிருந்தாள். ஒருவேளை அவள் தாமதமாகக் கிளம்பி, இங்கேதான் வந்துகொண்டிருக்கிறாளோ என்னவோ என்று எண்ணினான் அவன். அடுத்து அவன் ரோஜர் பிரௌன்லீக்குப் போன்செய்ய நினைத்தான். அவர் எஃப். பி. ஐ. நண்பர்களை விசாரித்து ரோஜா எங்கிருக்கிறாள் என்று சொல்லக்கூடும்—அவர்கள் அவளைக் கண்காணித்து வருகிறார்கள் அல்லவா?

டெலிபோனில் போட நிக்கல் நாணயம் இல்லாததால், ''உங்களிடம் சில்லறை இருக்கிறதா?'' என்று அவன் மேற்பார்வையாளரைக் கேட்டான்.

அவர் உடனே முன் கதவைத் திறந்து, வெளியே இருந்த தொழிலாளிகளை விளித்து, ''உங்கள் யாரிடமாவது நிக்கல் நாணயமிருக்கிறதா?'' என்று வினவினார்.

தொழிலாளிகளில் ஒருவன் எழுந்து, ''ஓ... இருக்கிறது'' என்று பைகளைத் துழாவிக் கொண்டே படிகளில் ஏறிவந்தான்.

''நன்றி, இது முக்கியமானது'' என்ற பால் அந்த செம்பட்டைத் தலை இளைஞனைப் பார்த்துத் தலையை ஆட்டிவிட்டு, மீண்டும் டெலிபோன் பக்கம் திரும்பினான்.

கதவினருகில் அந்த மனிதன் தயங்கி நின்றான். வீட்டு மேற்பார்வையாளர் அப்போது ஏதோ ஜாடை காட்டியதும், ''இங்கே குடிக்கத் தண்ணீர் கிடைக்குமா?'' என்று அவன் வினவினான்.

''தாராளமாக. நான் ஒரு தம்ளரும் கூடக் கொடுக்கிறேன்'' என்று மேற்பார்வையாளர் கூடத்தின் பின்புற

மிருந்த ஒரு கதவைக் காட்டினுன். தொடர்ந்து இருவரும் அடித்தளத்துக்குச் செல்லும் படிகளில் இறங்கி மறைந்தனர்.

பால் ரிஸீவரைக் காதில் வைத்துக்கொண்டு காத்திருந்தான். பிரெளன்லீயின் ஆபீசில் டெலிபோனை எடுக்க யாரும் இருந்ததாகத் தெரியவில்லை. எனவே வேதனையுடன் ரிஸீவரைக் கீழே வைத்துவிட்டு அங்கேயே சற்று நின்ருன்.

அதற்குள் கூடத்துக்குத் திரும்பிய மேற்பார்வையாளர் ''ஆர்பென் மேலே தானிருக்கிருன். காலையில் விளக்குகளைச் 'சரி' செய்வதற்காக மேல் மாடிக்குச் சென்றபோது, அவன் உள்ளே நடமாடிக் கொண்டிருந்த சப்தம் கேட்டது'' என்ருர்.

''அதை ஏன் நீங்கள் முன்பே கூறவில்லை?'' என்று பால் கோபத்துடன் வினவினுன்.

''அதனுல் பலன் ஒன்றுமில்லை; யாராவது வருவது தெரிந்தால், அவன் சப்தம் காட்டுவதில்லை. வெளியூருக்கு அத்தை வீட்டுக்குப் போயிருப்பதுபோல் போக்குக் காட்டுகிருனென்று நினைக்கிறேன்.''

பால் முகத்தைச் சுளித்தான். பிறகு ஏதோ சிந்தனையுடன், ''ஏன் கடன்காரர்களுக்குப் பயந்துகொண்டு இப்படிச் செய்கிருனே?'' என்று வினவினுன்.

மேற்பார்வையாளர் பால் ஹேடனை மேலும் கீழும் பார்த்தவாறு, ''அப்படித்தான் இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்'' என்ருர்.

பால் கேட்டான்: ''ஒரு போலீஸ்காரனை அழைத்து மாடியில் என்னவென்று பார்த்தால் என்ன? ஆர்பென் ஒருவேளை சீக்காக இருக்கிருனே என்னவோ? நாமே கதவை உடைத்துப் பார்க்கலாம். இங்கு ஏதாவது கோடரி கிடைக்குமா ?''

அந்த செம்பட்டைத் தலையன் அவனை உறுத்து நோக்கிவிட்டுப் பார்வையை மேற்பார்வையாளரிடம் திருப்பினுன்.

''சரி போகட்டும். எனக்கு இப்போதைக்கு வேறு எவ்வளவோ வேலை இருக்கிறது'' என்று பால் கோபத்துடன் தெருப்பக்கம் பார்த்தான்.

''அந்தப் பெண்ணைப்பற்றி நான் வியந்துகொண்டிருந்தேன். அவள் நீல உடை அணிந்திருந்தாளோ?'' என்று வினவினுன் அந்த செம்பட்டைத் தலைக்காரன்.

''அது எனக்குத் தெரியாது'' என்ற பால் ஹேடன் பின்னுல் காலரவம் கேட்கவே திரும்பினுன்.

''என்ன பால்?'' என்று கேட்டவாறு அவ்வீட்டினுள் நுழைந்தார் ரோஜர் பிரெளன்லீ.

''நீங்கள் சொன்னது சரிதான், ரோனு இங்கே இல்லை'' என்ருன் பால் கோபத்துடன்.

''அது விந்தையாக இருக்கிறது. அவளைக் கண்காணிப்பதற்காக அமர்த்தப்பட்டவன் தெருவிலே காரை நிறுத்தி, அதில் அமர்ந்திருப்பதைக் கண்டேன். அவள் இங்கே இல்லையெனில் அவன் அப்படி நிம்மதியாக உட்கார்ந்திருக்கமாட்டான். நான் எப்.பி.ஐ. க்காரர்களுடன் போனில் பேசுகிறேன். அவர்கள் ஏமாந்துவிட்டிருக்கிறார்கள்.'' பிரௌன்லீ அருகிலிருந்த வீட்டு மேற்பார்வையாளரையும், தொழிலாளி உடையிலிருந்த செம்பட்டைத் தலைக்காரனையும் பார்த்தார். பிறகு, ''பால், நீ வெளியே ஓடி அங்கே வெள்ளை நிறப்ளிமௌத் காரில் உள்ளவனிடம் விசாரித்துப் பார். நேற்றிரவு நீ பார்த்த மனிதன்தான் அவன் என்று நினைக்கிறேன்'' என்றார்.

பாலின் பார்வை மாடிப்படிகளின் மீது திரும்பியது; ''அதைவிட, ஆர்பெனுடன் பேச ஆரம்பிப்பதையே நான் விரும்புவேன்'' என்றான் அவன்.

வீட்டு மேற்பார்வையாளர் ஓரடி முன்னால் வந்து ''உங்களுடைய பிரச்னை என்ன? ஒருவேளை அதுவே எங்களுடைய பிரச்னையாகவும் இருக்கலாம்'' என்றார்.

செம்பட்டைத் தலையன் சொன்னான்: ''கருங்கூந்தல் உள்ள ஒரு பெண் அரை மணி நேரம் முன்பு மேலே சென்றாள். அவள் நீல உடை அணிந்திருந்தாள்.''

பால் ஓரடி முன்னால் வந்தான்.

பிரௌன்லீ அவன் முழங்கையைப் பற்றிப் பின்னால் இழுத்தார். ''நிதானமாக இரு, பால். நீயாரென்று அவர்களுக்குத் தெரியாது.''

மேற்பார்வையாளர் தலையை ஆட்டினார். ''ஆர்பெனை அணுகுவதற்காக நீங்கள் இப்பெண்ணை ஒரு காரணமாக உபயோகிக்கவில்லை யென்று நாங்கள் உறுதி செய்துகொள்ள நினைத்தோம்'' என்று கூறிவிட்டு அவர் பிரௌன்லீயைப் பார்த்துத் தொடர்ந்தார்: ''நாங்கள் ஏமாந்துவிடவில்லை; ஆர்பென் இன்னமும் இங்கேதானிருக்கிறான். நாங்கள் இங்கே இல்லையெனில் அவன் இவ்வளவு நேரம் இங்கே இருந்திருக்கமாட்டான்.'' ஆர்பென் டெலிபோன் செய்ததாகச் சொல்லிக்கொண்டு, ஆம்புலன்ஸ் வண்டியுடன் வந்த வெள்ளை உடைச் சேவகர்களை அவர் நினைத்துக் கொண்டார். அவர்கள் சொல்வது உண்மைதானாவென்று ஆஸ்பத்திரிக்கு டெலிபோன் செய்ய ஆரம்பித்ததுமே, அவர்கள் திடீரென்று போய் விட்டார்கள். ''ஹேய்'' நீங்கள் எங்கே போகிறீர்கள்?'' என்று அதற்குள் மேலே செல்ல எத்தனித்த பால் ஹேடனைக் கேட்டார் மேற்பார்வையாளர்.

''மேலே'' என்று கூறிய பால், மாடிப் படிகளில் நின்ற படி, ''இன்னமுமா நான் ஆர்பெனைக் கொல்ல வந்திருப்ப தாக நீங்கள் நினைத்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''அவனுடைய வீட்டுக் கதவைத் திறப்பது அவ்வளவு எளிதில்லை. பின்புறமுள்ள 'அபாய வழி'யினூடே செல்வது சுலபமாக இருக்கும்'' என்றார் வீட்டு மேற்பார்வையாளர்.

பால் திரும்பி வந்துகொண்டே, ''வீட்டின் பின்புறத் திலா? இப்படிப் போனால் பின்புறக் காம்பவுண்டுக்குள் செல் லலாமல்லவா?'' என்று கேட்டுவிட்டு அவர்களைத் தாண்டிப் பின்கட்டை நோக்கி நடந்தான்.

''ஆமாம் அங்கேயுள்ள ஆளிடம் ஃப்ராங்க் அனுப்பிய தாகச் சொன்னால், மேலே செல்ல அநுமதிப்பான்.''

பிரௌன்லீ புருவத்தை உயர்த்தினார். ''தோழர் ஆர்பென் அயர்ந்து போய்விடுவான். அவன் அவ்வளவு முக்கியமானவனா?''

வீட்டு மேற்பார்வையாளர் பாலுக்குப் பின்னால் பின்புறக் கதவு மூடிக் கொள்வதைக் கவனித்துக் கொண்டிருந்தார். ''இதுதான் சிறந்த வழி. அவர் மேலே சென்று ஆர்பெனின் விடுதிக்குள் நுழைந்து ஏதாவது சண்டை போட்டா லும் போடுவார். நாம் ஒரு போலீஸ்காரனை அழைத்து, கல வரம் செய்த குற்றத்திற்காக மேல் மாடியில் உள்ள யாவரை யுமே கைது செய்யலாம்'' என்ற அவர், அந்த செம்பட்டைத் தலைக்காரன் பக்கம் திரும்பி, ''ஹூயி, ஒரு போலீஸ்காரனைக் கூப்பிடு!'' என்றார்.

''ஆகட்டும்'' என்று ஹூயி சிரித்தபடியே நகர்ந்தான். வாசற் கதவண்டை செல்லும்போது எதிரே வெளுப்பு உடை யில் கையில் பெரிய பெட்டி ஒன்றைச் சுமந்து வந்துகொண் டிருந்த மளிகைக் கடைக்காரன் ஒருவனுக்கு ஒதுங்கி வழி விட்டான்.

''ஏது, நிறைய சாமான்கள் வருகிறாப் போல் இருக்கி றதே?'' என்றார் வீட்டு மேற்பார்வையாளர் அக்கடைக் காரனைப் பார்த்தபடி.

''கொஞ்சந்தான்'' என்றவாறு மாடிப் படிகளில் ஏறப் போனான் அவன்.

''எங்கே கொண்டு போகிறாய்?''

கடைக்காரன் மேற்பார்வையாளரையும், பிறகு பிரௌன் லீயையும் பார்த்தவாறு ''ஆர்பெனின் விடுதிக்கு'' என்றான்.

''அது எங்கேயிருக்கிறது, தெரியுமா?'' என்று மேற்பார் வையாளர் சாதாரணமாக வினவினார். ஆனால் அவர் கண்கள் கவனமாக இருந்தன.

''தெரியாது; எங்கே இருக்கிறது?''

''கடைசி மேல் மாடியில்.''

''அம்மாடீ! நல்ல அதிருஷ்டம்!'' என்ற அவன் முடிவற்ற அந்த மாடிப்படிகளைப் பார்த்தான். பிறகு அவற்றின் மீது ஏற ஆரம்பித்தான்.

''நீ அதை இங்கேயே வைக்கலாம்; நான் கொண்டு போய்க் கொடுத்துவிடுவேன்'' என்றார் மேற்பார்வையாளர்.

''நானே நேரில் கொடுக்க வேண்டும். அது எங்கள் கம்பெனி உத்தரவு.''

''இங்கேயே வை!''

''ஏன், நான் என் வேலையை இழக்கவேண்டுமா?'' அவன் நிற்கவில்லை. மேற்பார்வையாளரும் பிரௌன்லீயும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். பிறகு அவர்களும் அவனைத் தொடர்ந்தார்கள். மேற்பார்வையாளர் அவனுடைய கையைப் பிடித்தார். கடைக்காரன் கோபத்துடன் ''ஹேய்....என் வேலையைச் செய்ய விடமாட்டீர்களா?'' என்று வினவினான்.

''யார் இச்சாமான்களுக்கு ஆர்டர் கொடுத்தார்கள்?'' என்று மேற்பார்வையாளர் அப்பெட்டியைத் திறந்தபடி கேட்டார். அதற்குள் முட்டை, ரொட்டி, காரெட் ஆகியவை இருந்தன.

''எதற்காக இந்தச் சோதனை?'' என்று அந்த மனிதன் திடீரென்று சீறினான்.

''யார் இதற்கு ஆர்டர் கொடுத்தார்கள்?'' மேற்பார்வையாளர் மீண்டும் வினவினார்.

''ஆர்பென்தான் டெலிபோன் செய்தார். அவசரம் என்றார்.''

''இங்கேயே நில்! நான் அது உண்மையா என்பதை விசாரிக்கட்டும்'' என்று பார்வையாளர் அடித் தளத்தை நோக்கி விரைந்தார்.

அப்படியானால் ஆர்பெனின் டெலிபோன் பேச்சுக்களைக் கவனிக்கிறார்கள் என்று எண்ணினார் பிரௌன்லீ. ஒரு வேலையை நன்கு செய்கிறார்கள் என்றால் அவருக்குப் பிடிக்கும். எனவே அவர் முறுவலித்துக் கொண்டார்.

''என்ன அதிசயத்தைக் கண்டீர்கள்?'' என்று கடைக்காரன் கீழே சென்ற வீட்டு மேற்பார்வையாளரை வேதனையுடன் நோக்கினான்.

''நீ சற்று நில் இங்கே. அப்படி என்ன அவசரம்?'' என்றார் பிரௌன்லீ நிதானமாக.

''எனக்கு வேறு சில பட்டுவாடாக்கள் செய்ய வேண்டும். இன்று கடையில் ஆட்கள் குறைவு.'' ஆனால் அவன் கண்களிலே

சிறிது அச்சம் ஒளிர்ந்தது. கைக்கடிகாரத்தைப் பார்த்து முகத்தைச் சுளித்தபடி. ''மணி ஒன்றரை ஆகி விட்டதே'' என்றான் கோபத்துடன். இவன் வீட்டு மேற்பார்வையாளரிடம் பொய் சொல்லியிருக்கிறான். அதனால் பயப்படுகிறான் என்று நினைத்தார் பிரௌன்லீ.

''சரி....சரி.... நீங்களே இதை ஆர்பெனிடம் சேர்த்து விடுங்கள்'' என்று அவன் திடீரென்று கூறியவாறு அடுத்த படியில் பெட்டியை வைத்து விட்டுக் கீழே இறங்க ஆரம்பித்தான். ஆனால் பிரௌன்லீ வழியை மறித்தார். ''நாம் இருவரும் கீழே சென்று வீட்டு மேற்பார்வையாளரிடம் பேசுவோம்.''

அவன் பின்வாங்கி நின்று, பிரௌன்லீயை வெறித்து நோக்கினான். அதே சமயம், மூன்றாவது மாடியிலிருந்து ஒரு விடுதியின் கதவு திறந்துகொண்டது. ஒரு பெண்மணி அலறிக் கொண்டு வெளியே வந்தாள். ''போலீசைக் கூப்பிடுங்கள்! தீப் பாதுகாப்பு யந்திரத்தில் யாரோ ஒருவன் ஏறி, கடைசி மாடிக்குள் புக முயற்சிக்கிறான்!''

இதைக் கேட்ட கடைக்காரனின் பார்வை மேலும் நிலை குத்திப் போயிற்று. அவன் ஒரு கணம் அசையாமல் நின்றான். பிறகு திரும்பி மாடிப்பக்கம் ஓடினான். பிரௌன்லீயும் அவனைத் தொடர்ந்து ஓடினார். கீழே ஏதோ கூக்குரல் கேட்டது. கதவுகள் திறந்து கொண்டன. வீடு முழுவதுமே ஒரே இரைச்சல்.

பிரௌன்லீ விடாமல் தொடர்ந்து ஓடினார். இப்போது அவருக்கும் அக்கடைக்காரனுக்கும் இடையே மூன்று படிகள்தாம் இருந்தன. ஒரு கஜ தூரந்தான். அவர்களிருவரும் ஆர்பெனின் வீட்டு வாசற்படிவரை வந்து விட்டிருந்தனர். அந்த மனிதன் அங்கே தந்திரமாகக் கீழே விழுபவன் மாதிரி விழுந்து, தன் பையிலிருந்து பென்சில் ஒன்றை எடுத்தான். அதைத் தனியாக எடுத்ததும் நன்றாக முறுக்கி, பிரௌன்லீ தனது கையைப் பற்றிய அதே சமயத்தில் ஆர்பெனின் கதவண்டை வீசியெறிந்து விட்டான். முறுக்கி வளைக்கப்பட்ட அப் பென்சில் கதவினடியில் பார்ப்பதற்குச் சாதாரணமாகத்தான் கிடந்தது.

பிரௌன்லி அதை உறுத்து நோக்கினார். அது தீப் பற்றச் செய்யக் கூடிய பென்சில். அதன் வேலை ஆரம்பமாகி விட்டது. அதை முறுக்கி வளைத்திலிருந்தே அதன் வேலை ஆரம்பமாகி விட்டது. இனி அதை ஒன்றும் செய்ய முடியாது. எதுவும் செய்ய முடியாதென்று தெரிந்திருந்த போதிலும், அதை எடுக்கலாம் என்ற உணர்வுடன் ஓரடி நகர்ந்தார் பிரௌன்லீ. அதற்குள் பெரு வெளிச்சத்துடன் அப்பென்சி

லிலிருந்து தீ கிளம்பி விட்டது. உடனே பிரௌன்லீயைத் தள்ளிக் கொண்டு அந்த மனிதன் கீழே இறங்கி ஓடலானான்.

அவனை ஓட விடமாட்டார்கள் என்று நினைத்தார் பிரௌன்லீ. ஆனால் இப்போது எச்சரிக்கை செய்ய வேண்டியதுதான் முக்கியம். எனவே அவரும் கீழே சென்றார். அங்கே வீட்டு மேற்பார்வையாளரும் மற்றும் சிலரும் தப்பி ஓட முயன்ற ஆளைத் தடுக்க முயன்று கொண்டிருந்தார்கள். ''விலகுங்கள்! நெருப்பு! நெருப்பு!'' என்று கூவினார் பிரௌன்லீ. மேற்பார்வையாளர் அதிர்ந்துபோய்த் தம்மைப் பார்த்ததும், ''தீப் பற்றவைக்கக் கூடிய பென்சில்!'' என்று தமது எஞ்சியிருந்த சக்தியையெல்லாம் திரட்டிக் கொண்டு கூவினார் அவர்.

மேற்பார்வையாளரின் முகம் கடுமையாகியது. உடனே அவர் பிரௌன்லீயின் எச்சரிக்கையைச் செயலாக்கும் வகையில், ''எல்லோரும் கீழே செல்லுங்கள், உடனே!'' என்று கத்தினார்.

இப்பென்சிலால் பற்றும் தீயை அணைக்க முடியாது; அது வாகத் தீரும் வரைப் பொறுத்திருந்து பிறகு எஞ்சியுள்ள சாதாரண நெருப்பை அணைக்கலாம் என்று விவரிக்க அவருக்கு அவகாசம் இல்லை. இருந்தாலும் அவருடைய குரலில் ஓர் அவசரம் தொனிக்காமலில்லை. யாரோ ஒருவன் மணல் வாளி ஒன்றை எடுத்ததைக் கண்ட அவர், ''இப்போது அதனால் பலனில்லை, பின்னால் பார்த்துக் கொள்ளலாம். கீழே இறங்குங்கள்!'' என்று கூவினார். இன்னமும் அந்த மனிதனை இறுக்கிப் பிடித்துக் கொண்டபடி, விடுதிகளிலிருந்து வந்து கொண்டிருந்த ஜனங்களையும் எண்ண முயன்றார்.

பிரௌன்லி மூன்றாவது மாடியில் நின்றார். அங்கே ஒரு பெண்மணி, ''நெருப்பா? ஒன்றையும் காணோமே!'' என்றபடி தன் வீட்டினுள் புகுந்தாள். பிரௌன்லீ அவள் கையைப் பிடித்து, ''வெளியே வா'' என்று இழுத்தார்.

சுத்தமாக இருந்த தன் விடுதியை ஒரு தடவை பார்த்த அவள், ''ஊஹூம் . . . .'' என்று கத்தினாள்.

''நாங்கள் அதைக் காப்பாற்றுகிறோம். ஆனால் முதலில் நாம் கீழே போக வேண்டும்.'' பிரௌன்லீ அவளை மாடிப்படிகளை நோக்கி இழுத்தார். அவள் வேண்டா வெறுப்புடன், அவரைப் பார்த்தபடியே பின்தொடர்ந்தாள்.

மேல்மாடித் தளத்திலிருந்து 'உஸ்' என்ற சப்தம் ஒன்று கேட்டது. ''அது என்ன?'' என்று வினவினாள் அப்பெண்மணி. பிரௌன்லீ நடையைத் துரிதப்படுத்தினார். திடீரென்று அப் பெண் கூச்சலிட்டபடி, தன் கண்களைப் பொத்திக் கொண்டாள்.

புதுமாதிரியான ஒரு வெளிச்சம் எழுந்து மாடிப்படிகளில் வீசியது. பிறகு, வேகமான சப்தத்துடன் தீயின் நாக்குகள் வெளிப்பட்டுச் சிதறி எரிந்தன.

★ ★ ★

பால் ஹேடன் மூன்றாவது மாடியை அடைந்தான்.

அங்கே அவன் கடைசிப் படிகளை நோக்கி வேகமாகவும், சப்தமில்லாமலும் நகர்ந்தபோது, ஏதோ அசைவு தென்பட்டது. ஆனால் அவன் நகர்ந்து, நகர்ந்து, ஆர்பெனுடைய அறைப் பலகணி அருகில் வந்து விட்டான். வந்த பிறகு, அவன் சற்றே நின்று மூச்சு விட்டுக் கொண்டான். பலகணியின் கதவு சிறிய கண்ணாடி அடைப்புகளுள்ள மரச் சட்டங்களால் நெருக்கமாக மூடப்பட்டிருப்பதைக் கண்டதும் அவன் திடுக்கிட்டான். ஆனால் அதன் மேல் பகுதியில் சிறிது இடைவெளி இருந்தது. அதைப் பார்த்ததும் அவனுக்கு நிம்மதி பிறந்தது. அப்பலகணிக் கதவின் கீழ்ப் பகுதியை அவன் தூக்க முயன்றான். ஆனால் அது நன்றாக ஆணி அடித்துப் பதிக்கப்பட்டிருந்தது. அதே சமயம், திடீரென்று கீழ்த் தளத்திலிருந்து யாரோ ஒரு பெண் அலறுவது கேட்டது.

பால் ஹேடனால் பலத்தோடு கீழே அமுக்கப்பட்ட பலகணியின் மேல் பகுதி, அந்த அலறலின் எதிரொலி போல், சப்தமிட்டது. அவன் தலையை உள்ளே நுழைத்தான். பிறகு அந்த விடுதியின் படுக்கை யறைக்குள் இறங்கினான்.

அவனுக்கு முன்னே இருந்த கதவு திறந்து கிடந்தது. ஆனால் ரோனாவோ, ஆர்பெனோ அவனைக் கவனிக்க வில்லை. ரோனாவுக்கு எதிரே நின்றுகொண்டிருந்த ஆர்பென் தன் முகத்திலும் தோள்களிலும் இருந்த சிகரெட் சாம்பலைத் தட்டிக் கொண்டிருந்தான். கையில் காஃபிக் கோப்பையுடன் மேஜைக்குப் பின்னால் ரோனா நின்று கொண்டிருந்தாள். "என்னை இங்கே நிறுத்தி வைக்க உங்களுக்கு உரிமையில்லை; உங்கள் கேள்விகளுக் கெல்லாம் என்னைப் பதில் கூறும்படி செய்யவும் உங்களுக்கு உரிமையில்லை.." என்று கூறிக் கொண்டிருந்தாள் அவள்.

துடைப்பதற்காகத் தன் மூக்குக் கண்ணாடியைக் கழற்றிக் கொண்டிட்ட ஆர்பென் கோபத்துடன் வெடித்தான்: "அந்தக் காஃபிக் கோப்பையைக் கீழே வை. அதை நீ தான் உடைத்திருக்கக்கூடும்....என்னுடைய உரிமைகளைப் பற்றி நானே தீர்மானித்துக் கொள்ளுகிறேன்." பிறகு அவனது கவனம் வெளியே மாடிப்படிகளிலிருந்து கேட்ட ஓசையின் மீது திரும்பியது. கதவை நோக்கி ஓரடி நகர்ந்த அவன் இன்னமும் ரோனாவைக் கவனித்தபடியே இருந்தான். "இது ஒரு பழைய

தந்திரம். நீ எதையாவது பார்ப்பது போல் பாசாங்கு செய்தால், நானும் ஏமாந்து எனக்குப் பின்புறம் திரும்புவேன் என்று நினைத்தாயா? அந்தக் காஃபிக் கோப்பையைக் கீழே வை..''

பால் ஹேடன் அந்த அறைக்குள் வந்தான். ''ஆமாம்.. நீ அதைக் கீழே வைக்கலாம், ரோனு'' என்று அவன் அவளருகில் சென்று நின்றான்.

ஆர்பென் பால் ஹேடனைக் கவனித்த போதிலும், அவனுடைய கவனம் இன்னமும் வெளியிலிருந்து வந்த சப்தத்திலே இருந்தது. ஓடிக் கொண்டிருந்த காலடிகளின் ஓசை கீழ்ப்படிகளுக்குச் சென்று விட்டது புரிந்தது.

''நீ எங்களைக் கவனிக்க வேண்டாம். நாங்கள் உன்னுடைய நண்பர்கள் அல்ல'' என்ற பால், ரோனுவின் அச்சம் மறைந்து விட்டதை உணர்ந்தான். அதுதான் இப்போது முக்கியம். ஆர்பெனின் மூக்குக் கண்ணாடியைச் சிதற அடிக்க வேண்டுமென்ற தனது முதல் விருப்பத்தை அவன் கைவிட்டான்.

தீர்மானமற்ற பார்வை ஒன்று ஆர்பெனின் முகத்தில் தெளிந்தது. வெளியே காலரவம் அதிர்ந்தது.

பால் ஹேடன் ரோனுவின் கையைப் பற்றிக் கொண்டு, கதவுக்கு அப்பால் நகர்ந்தான். ஒரு கணம் அவள் குறுகிப் போனாள். பிறகு தன் மடத்தனத்திற்கு மன்னிப்புக் கோருவது போல் அவனைப் பார்த்தாள். ஆனால் அவன் வெளியிலிருந்து ஒலித்த ரோஜர் பிரௌன்லீயின் குரலைக் கேட்டுக் கொண்டிருந்தான்: ''பின்னால் போங்கள்! நெருப்பு, நெருப்பு! அது ஒரு தீப்பற்ற வைக்கும் பென்சில்..!''

பால் ஆர்பெனை நோக்கினான். இதன் அர்த்தம் அவனுக்கும் புரிந்திருக்க வேண்டும். ஏனெனில், அவன் மேஜையண்டை ஓடி, ஏதோ காகிதங்களைத் திரட்டிச் சட்டைப் பையில் திணித்துக் கொண்டே, அங்கிருந்த இரும்புப் பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டான்.

பால் ஹேடன் அவனை வெறுப்புடன் நோக்கினான். ''நாங்கள் திருடர்கள் அல்ல'' என்றான் அவன். பிறகு ரோனுவின் பக்கம் திரும்பி, ''இப்படி வா'' என்று கூறியபடி, அவளைப் படுக்கையறையை ஒட்டியிருந்த தீப் பாதுகாப்பு யந்திரத்தை நோக்கி அழைத்துச் சென்றான்.

அவனுடைய அவசரத்தைக் கண்டு ரோனு வியந்தாள். ஆனால் அவனுடன் சென்றாள். கதவின் மறுபக்கத்திலிருந்து வந்த 'உஸ்..' என்ற சப்தத்தைக் கேட்ட ரோனு, ''பென்சிலா..?'' என்று வியப்புடன் வினவினாள்.

''தீப்பற்ற வைப்பதற்கு நிச்சயமான வழி அது.''

ரோனு ஒரு கணம் நின்றாள். அவள் திரும்பி ஆர்பெனைப் பார்த்தாள். ஆனால் ஒன்றும் பேசவில்லை. இன்னமும் கையில் பெட்டியுடன் நின்றிருந்த ஆர்பென் பார்வையைத் திருப்பிக் கொண்டான். பிறகு 'உஸ்' என்ற சப்தம் பெரிதாகி வருகையில், அவன் நம்பிக்கை இல்லாமல் கதவை வெறித்து நோக்கினான்.

படுக்கையறைப் பலகணியண்டை ஒரு பீரோவைக் கீழே தள்ளினான் ஹேடன். ''வா, ரோனு'' என்றபடி ரோனுவை அதன் மேல் தூக்கி நிறுத்தினான். பிறகு பலகணியின் மேல் பகுதி வழியே அவள் வெளியே செல்ல உதவியவாறு, தானும் பின்தொடர்ந்தான். அதே சமயம் அவன் திரும்பி ஆர்பெனை நோக்கி, ''ஏதாவது முடிவு செய். சும்மா நிற்காதே'' என்று கூவினான்.

ஆனால் ஆர்பென் அசையவில்லை. அறையின் நடுவிலே இன்னமும் நின்று கொண்டிருந்தான். அவன் முகம் உணர்வற்று, அமைதியாக இருந்தது.

பால், ரோனுவைப் பார்த்தான். அவள் தீப் பாதுகாப்பு யந்திரத்தின் குறுகிய தட்டில் காத்திருந்தாள். அவள் கண்கள் கீழே ஓடிய மிகக் குறுகலான படிகளின மீது பதிந்திருந்தன. அவனும் பலகணி வழியே வெளிப்பட்டு அவளருகில் நின்றான்.

''இது ஆடுகிறது, பால். எனக்குப் பயமாக இருக்கிறது'' என்றாள் அவள் கண்களை மூடிக்கொண்டு.

''நான் முன்னால் போகிறேன். நீ கீழே பார்க்காதே. இந்தா, கையைப் பிடித்துக் கொள்.''

அவள் தனது செருப்பைக் கழற்றி எறிந்தாள். பிறகு கையை நீட்டி பாலின் கரத்தைப் பற்றினாள்.

கீழே தரையில் ஒரு கூட்டம். அங்கே பிரௌன்லீயும் இருந்தார்.

''ஆர்பென் எங்கே?'' என்று பிரௌன்லீ கேட்டார்.

''யோசித்துக் கொண்டிருக்கிறான். நாம் திரும்பிப் போய் அவனை இழுத்து வர வேண்டும்.''

''தொலையட்டும்'' என்ற பிரௌன்லீ படிகளில் ஏற ஆரம்பித்தார்.

''நீங்கள் இறங்குங்கள்'' என்றது கீழேயிருந்து ஒரு குரல். ஆனால் பிரௌன்லீ மேலே ஏறினார். தெருவிலே தீயணைக்கும் யந்திரங்களின் மணியோசை கேட்டது. இப்போது, கையில் கோடரிகளுடன் மற்றவர்களும் தீப் பாதுகாப்பு யந்திரத்தின் மேல் ஏறலானார்கள்.

தெருவிலே ஏணிகள் அமைக்கப்பட்டு, ரப்பர்க் குழாய்களை நான்காவது மாடிக்கும், கூரைக்கும் ஏற்றியிருந்தார்கள்.

வீட்டு மேற்பார்வையாளர் முகம் கறுத்து, கண்கள் சிவந்திருந்த நிலையில், சோர்வுடன், பேசினார்: ''எப்படியோ தீயணைக்கும் கருவிகளையும், மணல் மூட்டைகளையும் கொண்டு தீ கீழே பரவாமல் தடுத்துவிட்டோம். ஆனால் மேல் மாடியில் ஒரே நாசம். தீயணைக்கும் படையினர் கூரையைப் பற்றித்தான் கவலைப்படுகிறார்கள். இந்தப் பழைய வீடுகள் எல்லாம் காய்ந்து கிடப்பதால், தீப்பிடித்தால் சீக்கிரம் இரையாகி விடுகின்றன. நல்ல வேளையாக ஒருவருக்கும் காயமில்லை. எல்லோரையும் முன்பே எச்சரித்தது நல்லதாயிற்று. ஆனால் சேதம் அதிகம். இந்த நஷ்டங்களுக்கு யார் பொறுப்பு?'' அவர் மனத்திறகுள் ஆர்பெனைச் சபித்தார். பிறகு ரோனுவின் மீது பார்வையைத் திருப்பினார். ''ஆர்பென் கீழே வந்ததும் நாம் அவனைத் தொடருவோம். முன்பக்கத்திலும், பின் பக்கத்திலும் நமது ஆட்கள் இருக்கிறார்கள். காலையிலேயே ஏதாவது காரணத்திற்காக நாம் அவனைக் கைது செய்யாதது வருந்தத்தக்க விஷயம். செய்திருந்தால் அவனிடமிருந்து உபயோகமிக்க காகிதங்கள் சிலவற்றைக் கைப்பற்றியிருக்கலாம்'' என்று பால் ஹேடனிடம் கூறிக்கொண்டே வந்தவர் நான்காவது மாடியை நோக்கியதும் வாயடைத்து நின்றார்.

''நான் மிஸ் மெட்ஃபோர்டை அவளுடைய சகோதரி வீட்டிற்கு அழைத்துச் செல்கிறேன். பிரௌன்லீயைக் கண்டால், அவரிடம் சொல்லி விடுங்கள்; அவருக்கு ஒன்றும் நேரவில்லையென்று நம்புகிறேன்'' என்றான் பால்.

''அவர் தம்மைப் பாதுகாத்துக் கொள்வார்.''

''ஆமாம் . . . . இந்தத் தீயைக் கிளப்பியது யார்?''

''நாங்கள் அவனைப் பிடித்துவிட்டோம். அவன் மற்றொரு கையாள். மடத்தனமாக நடந்துகொண்டுவிட்டான். நமக்குச் சந்தேகம் விழுந்துவிட்ட பிறகு, இப்படித் தீ வைப்பதால் பலன் இருக்காது என்பதை அவன் அறியவில்லை'' என்றார் வீட்டு மேற்பார்வையாளர்.

''ஆர்பெனை வழிக்குக் கொணர இது மிகவும் கொடூரமான வழிதான். வேறு எவ்வளவோ வழிகள் இல்லாமலில்லை'' என்றான் பால்.

''ஆர்பெனிடம் உள்ள எதையோ அவர்கள் அழிக்க விரும்பியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவனைப் பொறுத்தவரையில், அவன் சுலபமாகத் தீப் பாதுகாப்பு யந்திரத்தின் வழியே வெளியேறிவிடலாம். ஆனால் அவனிடமுள்ளவைகள் நம்மிடம் சிக்கிவிடக்கூடாதென்று அவர்கள் விரும்பியிருக்கிறார்கள்'' என்ற மேற்பார்வையாளர் ரோனுவின் பக்கம் திரும்பினார்.

''நீங்கள் காலையில் ஆர்பெனின் வீட்டுக்குள் சென்ற பிறகுதான், அவர்கள் இனியும் வாளாவிருக்கக்கூடாதென்று தீர்மானித்திருக்கவேண்டும். ஆமாம், ஆர்பென் உங்களுடன் நிறையப் பேசினனல்லவா?'' என வினவினர்.

ரோனு தலையை ஆட்டினள்.

''பிற்பாடு கேட்டுக்கொள்ளலாம்'' என்ருன் பால் இடைமறித்து. பிறகு அங்கே கூடியிருந்த கூட்டத்தினூடே ரோனுவுக்கு வழிகாட்டி அழைத்துச் சென்ருன்.

★ ★ ★

அவர்கள் மூன்ருவது அவென்யூவை நெருங்கியபோது ''பால்'' என்ற பிரௌன்லீயின் குரலைக் கேட்டார்கள். திரும்பிப் பார்க்கையில், அவர் தெரு வழியே இவர்களை நோக்கி ஓடி வந்துகொண்டிருந்தார். அவருடைய ஷூட்டு கறைபட்டு முழங்காலண்டை கிழிந்தும் இருந்தது; தலைமயிர் கலைந்திருந்தது. உணர்ச்சிவசப்பட்டதால், புகை கவிந்திருந்த அவர் முகத்தில் வியர்வை வழிந்தது. அவர் ரோனுவை ஒருமுறை நிமிர்ந்து நோக்கிவிட்டு, பால் ஹேடனின் தோளின்மீது தட்டி ''பால்—'' என்று ஏதோ பேச ஆரம்பித்தார். ஆனல் ரோனுவைப் பார்த்துவிட்டுத் தயங்கினர். பிறகு உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு, ''டைஸன் வீட்டுக்குத் தானே அவளை இப்போது அழைத்துச் செல்கிருய்? நான் அங்கே உனக்கு டெலிபோன் செய்யட்டுமா?'' என்று வினவினர்.

ரோஜர் பிரௌன்லீயைக் கவனமாகப் பார்த்துக் கொண்டே பால் தலையை அசைத்தான்.

ரோனுவும் அவரைக் கவனித்துக் கொண்டிருந்தாள். அவள் மெதுவாக, ''ஆர்பென் இறந்துவிட்டான், இல்லையா?'' என்று கேட்டாள்.

பிரௌன்லீ அவளை வெறித்து நோக்கினர். பிறகு தலையை ஆட்டினர்.

ரோனு திரும்பி தெருக்கோடியை நோக்கி நடந்தாள். ஒருதடவை அவள் ஜாடையாக உடைந்த பலகணிகளும், எரிந்த கூரையுமாக நின்ற அந்த வீட்டைப் பார்த்தாள். ''அந்த டெலிபோன் செய்திதான் காரணம். தனது பொய்யை அவர்கள் நம்பிவிட்டதாய் அவன் நிச்சயமாக நினைத்தான். அவர்கள் நம்பாதது தெரிந்ததும், அவன் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டுவிட்டான் . . . . அவர்களிடம்; நம்மிடம் இல்லை.''

அவள் என்ன சொல்கிறாள் என்று புரிந்துகொள்ளக்கூடப் பால் ஹேடன் முயலவில்லை. வேறு எதையாவது பற்றிச் சிந்திக்கும்படி அவளைத் தூண்டவேண்டும்.

அவன் திடீரென்று சொன்னான்: ''நாம் போய் பார்பராவை அழைத்து வருவோம்.''

''பார்பரா? ஆமாம்....ஆமாம்....'' என்று அவள் நடையை எட்டிப் போட்டாள்.

மூன்றாவது அவென்யூவில் அவன் ஒரு டாக்ஸியைக் கூவி அழைத்தான். தெருக்களில் ஜன நடமாட்டம் இருந்தது. 'பனிச்'சென்ற புது உடைகளில் ஜனங்கள் நடைபாதைகளில் கூட்டமாகச் சென்றுகொண்டிருந்தனர்.

''பாப்பி....மருத்துவ மனைக்கு டெலிபோன் செய்ய வேண்டும்'' என்றாள் ரோனா. அவள் மீண்டும் தனது சொந்த உலகத்திற்கு வந்துவிட்டாள்.

''ஆமாம். டெலிபோன் செய்வோம். அத்துடன், உன்னுடைய தொண்டையை டாக்டரிடம் காட்டினாயா? அவர் என்ன சொன்னார்?'' என்று கேட்டான் பால்.

ரோனா முறுவலித்துக் கொண்டாள். ''நான் அதிகம் பேசக்கூடாதாம்'' என்றாள்.

''சரி....மீதிப் பொழுதுக்கு நானே பேசுகிறேன்'' என்று அவன் முறுவலித்தான். ஆனால் அவன் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக்கொள்ளும்போது, தன் கைகள் நடுங்குவதைக் கண்டான். தவிர, அவனால் பேசவும் முடியவில்லை. டாக்ஸியில் ரோனாவின் அருகில் அமைதியாக உட்கார்ந்துகொண்டு, அவளுடைய முகத்தைக் கவனிக்காததுபோல் பாசாங்கு செய்யத்தான் அவனால் முடிந்தது.

தன் விடுதியுள்ள தெருவை டாக்ஸி நெருங்கியதும் ரோனா அவனிடம், ''எனக்குச் சில துணிமணிகள் வேண்டும். பெக்கி தம்பதிகளிடமே நான் உடைகளைக் கடன் வாங்கிக்கொண்டிருக்கமுடியாது'' என்றாள்.

அவன் டாக்ஸிக்காரனிடம் தக்க உத்தரவு கொடுத்தான். டாக்ஸி வீட்டு வாசலை நெருங்கியதும், ''நான் இங்கேயே இருக்கட்டுமா, அல்லது உன்னுடன் மேலே வந்து, மருத்துவ மனைக்கு டெலிபோன் செய்யட்டுமா?'' என்று கேட்டான்.

''வாருங்கள். நான் தனியே மேலே செல்ல விரும்பவில்லை'' என்று ரோனா, மாடிப்படிகளில் தயங்கி நின்றாள். தன்னைப் பற்றிய இக் கவலைகளை முதலில் ஒழிக்கவேண்டுமென்று எண்ணமிட்டவாறே அவள் வேகமாகப் படிகளில் ஏறிச் சென்று கதவைத் திறந்தாள். நேற்றிரவைப் பற்றிய நினைவு அவளையறியாமலேயே வந்தது....ஆனால் கேலியாகப்

பேசி, கேள்விகளைக் கேட்டு, பதில் சொல்லும்படி பால் நிர்ப்பந்தப்படுத்தி வந்ததால் அவளுடைய அந்த நினைவு நெடு நேரம் நீடிக்கவில்லை.

கூடத்திலிருந்து பால் டெலிபோனில் பேசிய குரல்கூட அவளுக்குத் தெம்பை ஊட்டியது. தனக்கு வேண்டியவற்றை எடுத்துக்கொண்டதும் அவள் பெட்டியைப் பூட்டிவிட்டுக் கூடத்திற்குத் திரும்பினாள். ''இந்த விடுதியை வாடகைக்கு விட்டு விடுவேன்; மீண்டும் இங்கே நான் தூங்கப் போவதில்லை, என்று அவள் எண்ணமிட்டாள்.

பாலின் முகத்தில் துலங்கிய நிம்மதியையும், கண்களில் மிளிர்ந்த உண்மையான சிரிப்பையும் கண்ட அவள், ''நல்ல செய்தி தானே?'' என்று வினவினாள்.

''ஆமாம். கண்டம் தாண்டிவிட்டது.'' பால் அவளுடைய பெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டான்.

கூடத்தைப் பார்த்துக்கொண்டு அவள் ஒரு கணம் நின்றாள். 'எல்லாம் முடிந்துவிட்டது' நல்லது, கெட்டது, எல்லாம், என்று நினைத்த அவள் கூடத்து மேஜையின் நிழலில் ஏதோ கிடப்பதைக் கண்ணுற்று, அதைக் கையில் எடுத்தாள். அது ஸ்காட்டின் தொப்பி! நேற்றிரவு அவன் விட்டுச் சென்றிருக்கிறான் . . . .

''எல்லாம் எப்போதுமே முடிந்துவிடுமா?'' திடீரென்று அவள் அழுதாள். அவளது முகம் தீவிரமாகியது; அச்சத்தால் உடல் விறைத்தது. அத்தொப்பியை எறிந்துவிட்டுச் சமையலறைக்கு ஓடி: முதலில் மெதுவாகவும், பிறகு விம்மி விம்மியும் அழுதாள்.

பால் ஹேடன் பெட்டியைக் கீழே வைத்துவிட்டு அவளைத் தொடர்ந்து சென்றவன், கதவண்டை நின்றான். அவளை நான் இழந்துவிடக்கூடும் என்று அவன் நினைவு ஓடியது. நான் செய்ய விரும்புவதைச் செய்தால், அவளை என்றுமே நான் இழந்துவிடக்கூடும். ஆர்பெனின் விடுதியில் அவன் அவளைத் தொட்டபோது, அவளுடைய கைகள் நடுங்கியது அவன் நினைவுக்கு வந்தது. பிறகு தீப் பாதுகாப்பு யந்திரத்தின் அடியில் சென்றபோதும், அவள் எல்லாவித உடல் ஸ்பரிசத்தையும் மறுத்ததுகூட அவன் நினைவில் மிதந்தது.

அவளை நான் என்றுமே இழந்துவிடக்கூடும் என்று மீண்டும் எண்ணினான் அவன். ஆயினும் முன்னே அடியெடுத்து வைத்து அவளைத் தன் கைகளில் தாங்கிக்கொண்டான். அவளுடைய மெல்லிய உடலின் வெப்பத்தை உணர்ந்தவாறு,

மென்மையான அவளது கருங்கூந்தலையும், வெளுத்த நெற்றியையும், வழவழப்பான கன்னங்களின் வளைவையும் பார்த்தான். அழுகை நிற்கும்வரை அவளைத் தாங்கியபடியே நின்றான். அழுகை நின்ற பிறகு கூட அவர்கள் மௌனமாகச் சேர்ந்தே நின்றார்கள்.

கடைசியில் அவள் நகர்ந்து கொண்டாள். பிறகு அவனை நிமிர்ந்து நோக்கினாள். அவன் கண்களில் வேதனை தெறித்ததை அவள் கண்ணுற்றாள். அவன் 'சட்'டென்று திரும்பிக் கூடத்திற்குப் போனான். அங்கே கதவண்டை கையில் பெட்டியுடன் அவளுக்காக காத்திருந்தான். அவன் அவளுடைய கண்களை நேரே பார்ப்பதைத் தவிர்த்தான்.

அவளை இழந்து விடுவேன் என்று நினைத்தது முட்டாள் தனம் என்று எண்ணினான் அவன். ஜான் டைஸனின் விடுதிக்குப் போவதற்குள் அதை அவன் உறுதியாகவும் நம்பினான். ஆனால் மீண்டும் தன் உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்திக் கொண்டான். பிறகு அவனால் முறுவலிக்கவும், ஓரிரு கேலிப் பேச்சுக்களை உதிர்க்கவும் முடிந்தது.

ஜான் வரும் வரையில் அங்கேயே காத்திருக்கத் தீர்மானித்தான் பால் ஹேடேன். பிறகு அவன் போய் விடுவான். ஆனால் இத்தடவை—அவனுக்கு அன்று காலையில் நடந்தது நினைவுக்கு வந்தது— இத்தடவை, அவன் வெளியே தயங்கியிருப்பான்.

அத்தியாயம் 27

"**பா**ப்பி எழுந்து நடமாட இன்னும் ஆறு வாரங்களாகும்'' என்று பிரௌன்லீயிடமும், பால் ஹேடனிடம் சொல்லிக் கொண்டிருந்தான் ஜான். ஆனால் அந்த இடைப் பொழுது நல்ல பொழுதாகப் போகவேண்டும்... இப்போதாவது பாப்பியின் நிலையில் நம்பிக்கையிருக்கிறது. நேற்றிரவு அது கூட இல்லை. இருபதே மணி நேரத்திற்கு முன்பு...'' நம்ப முடியாதவன் போல் ஜான் கடிகாரத்தைப் பார்த்தான். பிறகு தன் வீட்டுக்கு வந்திருப்பவர்களின் நினைவு வந்தது அவனுக்கு. ''நீங்கள் வந்தது முதல் நான் பேசிக் கொண்டே இருந்ததற்கு

வருந்துகிறேன். எனக்கு மனைதிடம் போதாது'' என்று முறுவலித்தபடி, அருந்துவதற்குப் பானங்களைக் கொணர்ந்து கொடுத்தான். பிறகு திடீரென்று, ''நாச காலம் என்பது புயலைப் போல் தாக்குகிறது, இல்லையா?'' என்று கேட்டான்.

எப்படியாவது அதைத் தாண்டி விட்டால், பிறகு நாம் அதை எங்கே, எப்படிச் சமாளித்தோம் என்றே நம்ப முடிவதில்லை. ஜான் மீண்டும் கடிகாரத்தைப் பார்த்து விட்டுத் தலையை ஆட்டினான்.

''நான் இங்கே அதிகம் தாமதிக்கப் போவதில்லை. நான் வந்தது—'' பிரௌன்லீ இழுத்தார்.

''இல்லை, இல்லை. நான் கூறுவது அதையில்லை. என்னுடைய வாழ்வின் அந்த இருபது மணி நேரத்துக்கு என்ன நேர்ந்தது என்று நான் ஊகிக்க முயன்று கொண்டிருக்கிறேன்; அவ்வளவு தான். ஆனால், அக் கேள்விக்குப் பதில் ஒன்றும் இல்லையல்லவா?'' என்று கேட்டான் ஜான் டைஸன்.

''நீங்கள் அதை அநுபவித்துச் சமாளித்தீர்கள் என்பதைத் தவிர'' என்றார் பிரௌன்லீ. அவர் பார்வை மௌனமாக இருந்த பாலிடம் திரும்பியது. பிரௌன்லீ வந்ததிலிருந்து அவன் பேசவேயில்லை. பிரௌன்லீ தொடர்ந்தார்: ''நான் இங்கே வந்ததால் உங்களுக்குத் தொந்தரவில்லையென்று நினைக்கிறேன். ஆனால், பாலுக்குச் செய்திகளைப் போனில் சொல்ல வேண்டாமென்றும், நேராகப் பார்த்து இன்று பிற்பகலில் நடந்தவற்றைச் சொல்வதுதான் சிறந்ததென்றும் தோன்றியது. உண்மையில், ரோனா எப்படி இருக்கிறாள் என்று அறியவும் எனக்கு அவா. நாமெல்லாம் நினைத்ததற்கு அதிகமான சங்கடங்களில் அவள் தலையை விட்டிருக்கிறாள்.''

''எதிர்பார்த்ததற்கு மேலாக அவள் நிலைமையைச் சமாளித்து விட்டாள். உண்மையில், நான் சிறிது வியப்பே அடைந்து விட்டேன்'' என்ற ஜான் கூடத்துப் பக்கம் பார்த்தான். உடனே, ''கேளுங்கள்!'' என்றான் மெதுவாக. அடுக்களையில் பார்பரா சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். அவளுடைய சிரிப்பு, இங்கே உள்ளவர்களின் முகங்களிலே கூட ஒரு முறுவலைத் தருவித்தது. ''ரோனா சமைக்கும் விதமே ஒரு வேடிக்கையாகத் தோன்றுகிறது'' என்றான் ஜான்.

''அவள் தற்போதைக்கு இங்கேதான் தங்கப் போகிறாளா? கோடையைக் கழிக்க உங்களுடைய திட்டமென்ன?'' என்று கேட்டார் பிரௌன்லீ.

''கோடையில் வகுப்புக்களை நடத்துவதென்று நான் தீர்மானித்து விட்டேன். டாக்டர் ஃபீஸ், மருத்துவ மனைச் செலவுகள் எல்லாம் இருக்கிறதே—இன்ஷூரென்ஸ் பணம் எப்போதுமே கட்டி வந்ததில்லை. எங்களுடைய ஏற்பாட்டின்படி பெக்கி குழந்தைகளைக் கிராமத்திற்கு அழைத்துச் செல்லலாம். பாப்பிக்கு அது மிகவும் நல்லது. ரோனுவுக்குங்கூட அது நன்மையாக இருக்கும். ஆனால் அவளுக்கு 'ட்ரெண்டு' வேலை இருக்கிறது. அதெல்லாம் அவளுடைய தீர்மானங்களைப் பொறுத்த விஷயம். அவள் விரும்பும் வரையில் எங்களுடன் தங்கியிருக்கலாம். உண்மையில், எங்களுக்கு அவள் தேவை'' என்றான் ஜான்.

''அது ஒரு பிரச்னையென்று தோன்றுகிறது?'' என்றார் பிரௌன்லீ. 'ஆமாம் பிரச்னைதான்' என்று நினைத்தவாறு அவர் பால் ஹேடனைப் பார்த்து ''உனக்கு என்ன சஞ்சலம், பால்?'' என்று வினவினார்.

''இன்னுமா அவளுக்கு ஆபத்து இருக்கிறது? ஆர்பெனின் நண்பர்களிடமிருந்தா?''

அது மட்டுமே அவனை வருத்தவில்லை என்று எண்ணிய பிரௌன்லீ, ''அவளை இன்னமும் ஆபத்து சூழ்ந்தே இருக்கும்; ஆனால் ஆர்பென் இறந்து விட்டான். அதனால் அவன் அவளிடம் கூறியதெல்லாம் இப்போது முக்கியம் இல்லை. அவன் அவளிடம் கூறியதற்கு மேலேயே நாம் அறிந்திருக்கிறோம். இந்த உண்மை அவர்களுக்கும் தெரியும்.''

அங்கே சிறிது மௌனம் நிலவியது. பால் துயர் கவிந்த முகத்துடன் கம்பள விரிப்பை வெறித்து நோக்கிக் கொண்டிருந்தான்.

''நீயே தீர்மானித்துக் கொள், பால்'' என்றார் பிரௌன்லீ. ''நான் சொல்ல வந்த கதை இதோ இருக்கிறது: ஒருவேளை அது உன் வேதனைகளை நிறுத்தக்கூடும். நீயும் ரோனுவும் கீழே வந்த பிறகு, நான் தீப் பாதுகாப்பு யந்திரத்தின் மீது ஏறினேன். அதன் படிகள் ஆடியதால் மேலே செல்லச் சிறிது நேரமாயிற்று. பலகணியை அடைந்தபின், சிறிது பிரயாசையுடன் அந்த விடுதிக்குள்ளே குதித்து விட்டேன். என்னுடைய ஸூட்டுக் கூடப் பாழாகிவிட்டது. ஆனால் எனது முயற்சிகளைப் பாராட்டாமல், ஆர்பென் என்னை அறவே ஒதுக்கி விட்டான். ஏதேதோ காகிதங்களைப் பொறுக்கிப் பெட்டியில் திணித்த வண்ணம், அந்த இரு அறைகளுக்குள்ளும் ஓடிக் கொண்டிருந்தான். நிலைமை எனக்கு வேடிக்கையாகத் தோன்றியது. ஒரு புறம் ஆர்பெனை அவனது நண்பர்கள் பொசுக்

கித் தள்ள முயற்சிக்கிறார்கள். மறுபுறம் அவனுடைய விரோதியான நான் அவனைத் தப்பிப் போகும்படி தூண்டுகிறேன். கதவு வெடிக்க ஆரம்பித்து, அதன் இடுக்குகள்வழியே தீ வரலாயிற்று. சில நிமிஷங்களில் கதவு முழுவதுமே பற்றிக்கொண்டுவிடும். ஆனால் அவன் அதை உணரவில்லை. நான் அவனுடைய பெட்டியைக் கவர வந்திருந்தால், ஓங்கித் தலையில் அடித்து வீழ்த்தி விட்டுப் பெட்டியுடன் வெளியேறியிருக்கலாம் என்பதையும் அவன் உணரவில்லை. அந்தப் பெட்டியில் எனக்குச் சிரத்தை இருந்தது உண்மைதான். ஆனால் எனக்குத் தோழர் ஆர்பெனின் மீது அதையும் விடச் சிரத்தை அதிகம். அவன் ஐம்பது பெட்டிகளுக்குச் சமமானவன். ஒரு வேளை அது அவனுக்கே தெரிந்திருக்கக் கூடும்.''

பிறகு பிரௌன்லீயின் குரல் சோகமாக இழைந்தது. ''புகை அதிகரித்தது. நிஜமாகவே அவனுடைய மண்டையில் அடித்து, அவனை வெளியே தூக்கிச் செல்லலாமா என்று கூட நான் எண்ணினேன் அதே சமயம் தீயணைக்கும் ஆட்கள் பலகணியண்டை வந்து விட்டார்கள். அவர்களில் ஒருவன் எங்களை வெளியே வரும்படி கூவி அழைத்தான். நான் கீழ்ப்படிந்து விட்டேன். ஏனெனில், தன் வேலையைச் செய்ய வந்த அவனுடன் விவாதம் புரிவது நல்லதல்ல. ஆனால் ஆர்பென், புத்தக அலமாரிக்குப் பின்னால் மறைத்து வைத்திருந்த இரும்புப் பெட்டியொன்றைத் திறக்க முயன்று கொண்டிருந்தான். எனவே இரண்டு ஆட்கள் உள்ளே குதித்து, அவனைப் பலவந்தமாக இழுத்து வந்து, வெளியே தீப்பாதுகாப்பு யந்திரத்தின் மீது என் பக்கத்தில் நிறுத்தினார்கள். நான் கீழே இறங்க ஆரம்பித்தேன். ''ஸூட் கேஸ், ஸூட் கேஸ்...'' என்று ஆர்பென் கூவினான். தீப் படையைச் சேர்ந்தவன் ஒருவன் கேலியாக, 'இந்தா உன் பெட்டி!' என்று அதைத் தூக்கிப் பலகணி வழியே ஆர்பெனின் காலண்டை எறிந்தான்.''

பிரௌன்லீ சிறிது நிறுத்தினார். பிறகு தொடர்ந்தார்: ''நான் திரும்பி ஆர்பெனைப் பார்த்தேன். அந்தப் பெட்டி அங்கே விழுந்து, திறந்துகொண்டு விட்டதையும் பார்த்தேன். அதை மூடுவதற்காகக் குனிந்த அவசரத்தில், ஆர்பென் அதன்மீதே விழுந்துவிட்டான். அப்பெட்டி ஓரத்திற்கு நகரவே அதனுள்ளிருந்த காகிதங்கள் வெளியே உதிரலாயின. பிறகு, அப்பெட்டியே நழுவி, கீழே தரையை நோக்கி விழுந்துவிட்டது. அதனுள்ளிருந்த நூற்றுக் கணக்கான காகிதங்கள் எங்கும் சிதறிப் பறந்தன. நான் சிரிக்க ஆரம்பித்தேன். அவன் இன்னமும் அப்பெட்டியின் மூடியை மட்டும் கையில் பிடித்தபடி நிமிர்ந்து நின்றான். அவன் பார்வை என்மீது விழுந்தது. பிறகு அவன் இந்த நகரம் முழுவதையுமே ஒரு தடவை நோக்

கிறான். கை பெட்டியை நழுவவிட்டது. பிறகு அவனே எழும்பி, தன்னைக் கீழே நழுவ விட்டுவிட்டான்!''

சிறிது மௌனம்.

பிறகு பால் கேட்டான்: ''நீங்கள் யாரென்று அவனுக்குத் தெரியுமா?''

பிரௌன்லீ தலையை அசைத்தார். ''தெரியாது. நான் யாராக வேண்டுமானாலும் இருக்கலாம்.''

''அதுதான் அவன் செயலுக்குக் காரணமா?'' என்று ஜான் வினவினான்.

''எனக்குத் தெரியாது. எனக்கு எவ்வளவோ காரணங்கள் புலப்படுகின்றன. ஆனால், ஒரு காரணம் எனக்கு நிச்சயமாகத் தெரிகிறது. அதாவது, அவன் தன் குற்றங்களை ஒப்புக் கொள்ளும் முகமாக இறந்துவிட்டிருக்கிறான்—கட்சிக்குச் செய்த துரோகத்தை ஒப்புக்கொள்ளும் முகமாக!''

பால் முன்னால் சாய்ந்தான். ''ரோனாவும் அம்மாதிரித் தான் கூறினாள். அவள் அவனுடைய சாவைக் குற்றத்தின் ஒப்புதல் என்றாள்.''

''அவள் வேறென்ன சொன்னாள்?'' என்று வேகமாக வினவினார் பிரௌன்லீ.

''அதிகமாக ஒன்றுமில்லை. உண்மையில், நான் அவளுடைய மனத்தை ஆர்பெனிடமிருந்து அகற்றத்தான் முயன்று கொண்டிருந்தேன். டெலிபோன் பேச்சு ஒன்றைப் பற்றிச் சொன்னாள். அது மிகவும் முக்கியமானதென்று அவள் நினைக்கிறாள்.''

அதைப்பற்றி முன்பே தெரிந்து கொண்டவர்போல் பிரௌன்லீ தலையை ஆட்டினார். பிறகு ஒரு கணம் மௌனமாக இருந்துவிட்டுச் சொன்னார்: ''ரோனா கூறியது சரிதான். அந்த டெலிபோன் பேச்சின் மூலம் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முயன்றான் ஆர்பென். ஆனால் அவனுடைய நண்பர்கள் அவனை நம்பவில்லை. அவர்கள் தங்களது திட்டத்தை அமுல் நடத்தத் தீர்மானித்துவிட்டனர். அவனுடைய அறைக்குத் தீயிட்டு, அங்கிருந்த ரகசியக் காகிதங்களை அழிக்க முயன்றதுதான் அவர்களுடைய நேரான பதில்.''

''கொலைகாரப் பதில்'' என்றான் ஜான். அவனுக்குத் தன் மாணவன் பாப் கேஷின் நினைவு வந்தது. அவன் இதை நம்ப மாட்டான். அவன் இப்போது ஒரு சாதாரணக் கம்யூனிச மாணவன்தான். ஸ்காட் எட்லீகூட அரைகுறைக் கம்யூனிஸ்டுதான். ''ஆனால் ஆர்பென் ஏன் தப்பி ஓட வில்லை? விரும்பினால் அவன் படிகள் வழியே இறங்கி, சிதறிக் கிடந்த ரகசியக் காகிதங்களைத் திரட்டிக்கொண்டு ஓடியிருக்கலாமே!... ஆனால்

அவன் எங்கே போவான்? வேறு என்னதான் செய்வான்? நமது உலகத்தை அவன் உதறிவிட்டான்; அவனுடைய உலகம் அவனைக் கண்டனம் செய்துவிட்டது. அதனால்தானே?'' என்று ஜான் பிரௌன்லியைப் பார்த்தான்.

" அது பாதிக் காரணம். ஆனால் ஆர்பென் ஒரு பூரணக் கம்யூனிஸ்டு என்பதை நீங்கள் மறந்துவிட்டீர்கள். அண்மையில் அவன் ஏதோ தவறு செய்திருக்கிறான். அதைக் கண்டு பயந்த அவனுடைய கட்சி, அத்தவற்றை முற்றிலும் அழிக்க விரும்பியிருக்கிறது. ஆர்பென் தனது புரட்சியின் கடைசிப் படியில் இருந்திருக்கிறான். ஆனால் காகிதங்களையெல்லாம் பறக்க விட்டுவிட்டு, தப்ப வழியின்றி தீப் பாதுகாப்பு யந்திரத்தின் மீது நின்றபோது, அவனுடைய புரட்சி ஒடுங்கிவிட்டது. உடனே கட்சிப் பணிவும் வந்துவிட்டது. கட்சிக்கு முன்னால் அவன் ஒரு பொருட்டல்ல. அவன் குற்றவாளி; அவன் நழுவவிட்ட பெட்டிகூட அவனுக்கு எதிரான ஒரு சாட்சியே. கட்சியின் கட்டுப்பாட்டை எப்படி அவனுடைய மரணம் பலப்படுத்துமோ, அப்படி அவனுடைய புரட்சியும் கட்சியை பலவீனப்படுத்தும். எனவே அவன் தன் குற்றத்துக்கான தண்டனையை ஒப்புக்கொண்டது மட்டுமின்றி, அதைத் தானே நிறைவேற்றிக்கொண்டுவிட்டான்'' என்று முடித்தார் பிரௌன்லீ. மீண்டும் அறையிலே சிறிது நேரம் மௌனம்.

''அப்பெட்டியில் என்ன இருந்தது?'' என்று வினவினான் ஜான்.

''அதை எஃப். பி.ஐ.க்காரர்கள் நமக்குச் சொல்லமாட்டார்கள்.''

''அப்படியானால், அந்த அறை முழுவதும் எரிந்து போகவில்லையா?''

''கொஞ்சம் நாசமாயிற்று; அவ்வளவுதான். தீப் படையினர் நிறையத் தண்ணீரைக் கொட்டிவிட்டனர்.''

''ஆர்பெனின் நண்பர்களுக்கு இது ஏமாற்றத்தை அளிக்கும்'' என்றான் பால் யோசனையுடன்.

''ஆமாம். எரிந்த வீட்டைப் பார்வையிட வந்த ஒருவனைப் போலீசார் நிறுத்தினார்கள். தான் ஒரு பத்திரிகை நிருபர் என்று அவன் சொன்னான். மற்றும் ஒருவன் கையில் காமிராவுடன் தீப் பாதுகாப்பு யந்திரத்தின்மீது ஏற முயன்றான். ஏன்? ஒரு வக்கீலே வந்து, தான் ஆர்பெனின் பிரதிநிதியென்றும், வீட்டையும், அங்குள்ள காகிதங்களையும் அப்படியே தன்னிடம் ஒப்புவிக்க வேண்டுமென்றும் கோரியிருந்தால்கூட நான் அதிசயப்பட மாட்டேன்.''

''அப்படியானால் அப்பெட்டியில் உபயோகமான விஷயம் ஏதாவது இருக்கவேண்டும்'' என்றான் ஜான்.

''அப்படித்தான் தோன்றுகிறது.''

பால் சொன்னான் : '' ஒரு நாள் காலையில் நான் செய்தித் தாளைப் பிரிக்கும்போது, இதன் விளைவுகளைக் காண நேரலாம். அம்பலமாகிய ஒரு நாசத் திட்டத்தைப்பற்றியோ, பிரசாரக் குழுவைப் பற்றியோ, தடுக்கப்பட்ட ஒரு கலகத்தைப்பற்றியோ நாம் படிக்கக்கூடும்.''

''ஆமாம். ஆனால், மனிதன் செய்யும் தீச் செயல்கள் அவனுக்குப் பின்னும் வாழ்கின்றன... ஆதலால், எத்தனையோ பேர்கள் விஷயத்தில் ஆர்பென் இன்னமும் இறக்கவில்லை'' என்று பிரௌன்லீ எழுந்தார். பிறகு ஜானிடம் கையை நீட்டியபடி, ''நீங்களாவது அவனை மறக்க முடியும்'' என்றார்.

'' நான் வாசல்வரை வருகிறேன்'' என்றான் ஜான்.

''நானும் கூடப் போகவேண்டும். இரு பால்.''

ஜான் அவனை நோக்கினான்: ''நீ சற்று இரு. உன்னிடம் நான் சில விஷயங்கள் பேசவேண்டும்.''

ஆனால் ஹேடன் அவர்களைத் தொடர்ந்து கூடத்திற்குள் நுழைந்தான்.

''வேலையை விட்டுவிடலாமென்று பாலுக்கு எண்ணமிருக்கிறதே, உங்களுக்குத் தெரியுமா? 'ட்ரெண்டி' விருந்து விலகப் போவதாக அவன் கூறுகிறான். எனக்கு அது சரியாகப் படவில்லை'' என்றான் ஜான்.

ரோஜர் பிரௌன்லீ சமையலறைக் கதவண்டை நின்றார். ''ஆமாம், இன்று அவன் என்னிடமும் சொன்னான்.'' அவரது பார்வை உயரமான நாற்காலியில் அமர்ந்திருந்த பார்பராவின் மீது விழுந்தது. அவளுக்கு எதிரே ரோனு அமர்ந்திருந்தான். ''ஓ... நீங்களா? முட்டை உணவு எப்படியிருக்கிறது, பார்பரா?'' என்றுவினவினார் பிரௌன்லீ. பிறகு ரோனுவின் பக்கம் திரும்பி, ''குட் பை'' என்று முறுவலித்துவிட்டு நகர்ந்தார்.

கூடத்துக்கு வந்ததும் அவர், மீண்டும் ஜானின் கேள்விக்குத் தாவியவராக, ''உண்மையாகச் சொல்கிறேன், பால். நீ வேலையை விடுவதற்கு இப்போது அவசியமிருப்பதாக நான் எண்ணவில்லை. ஆனால் சீக்கிரமே நம்மில் பலர் நமது வேலைகளை விட்டுவிட நேரலாம் என்று மட்டும் எனக்குத் தோன்றுகிறது'' என்றார். பிறகு கதவை நோக்கி நடந்தவாறு கூறினார். ''ட்ரெண்டில் நீ உபயோகமான வேலையைச் செய்து

கொண்டிருக்கிறாய். நமக்கும் இப்போது விசுவாசமுள்ள ஆசிரியர்கள் தேவை. பிளாக்வொர்த்தனூர்க்கும், மார்ரேக்களுக்கும் வாய்ப்பை அளித்துவிட்டு வெளியே வருவது நல்லதில்லை. அப்படித்தான் வெயிட்லாநும் நினைக்கிறார் என்றே நான் நம்புகிறேன். இன்று காலையில் நீ மிகவும் கலங்கிவிட்டாய்; அதனால்தான் ஏதாவது செயல்பட வேண்டுமென்ற துடிப்பு உனக்கு, அது எனக்குத் தெரியும். ஆனால்...'' அவர் குரல் தேய்ந்து மறைந்துவிட்டது.

★ ★ ★

உணவுத் தட்டைக் காலிசெய்து கொண்டிருந்த பார்பராவைக் கவனித்த வண்ணமிருந்த ரோனாவின் காதுகளில், வெளியே பிரௌன்லீ விடைபெற்றுக் கொண்ட பேச்சுக்குரல் விழுந்தது. திடீரென்று அவள் எழுந்து அடுக்களையின் கதவண்டை சென்றாள். ''பால்'' என்று அழைத்த பின், ''கதை எப்படி முடிகிறது?'' என்று வினவினாள்.

பால் திரும்பி வந்தான். ''கதையா ?''

''தலையில் தொப்பியும், வில்லும் உடைய நீர்ப் பறவையின் கதை.''

''நீல நிற வில்'' என்று தூண்டினாள் பார்பரா.

''முடிவு எனக்குத் தெரியவில்லை. நானுங்கூட பார்பராவிடம் விழித்தேன்'' என்றான் பால்.

அவர்களுக்குப் பின்னாலிருந்த பார்பரா, ''எனக்கு ஒரு கதை சொல்லு. ஒரு கதை சொல்லு!'' என்று கூவியவாறு உயரமான நாற்காலியிலிருந்து கீழே இறங்க முயன்றாள்.

ஜான் திரும்பி வந்தான். ''இங்கே வா பால். நாம் மீண்டும் ஒரு கிளாஸ் பானம் அருந்துவோம். நீ கோப்பைகளில் பானத்தை ஊற்று, அதற்குள் நான் பெக்கியை அழைக்கிறேன். அக் கதைக்கு ஒரு முடிவையும் கற்பனை செய்; இல்லையெனில் இவளைப் படுக்கையில் போட முடியாது.'' நாற்காலியிலிருந்து கீழே விழுமுன் அவன் பார்பராவைத் தூக்கிக் கொண்டு டெலிபோனை நோக்கி நடந்தான்.

''ரோஜர் பிரௌன்லி என்ன சொன்னார்?'' என்று வினவியவாறு ரோனா மேஜையைப் பார்த்தாள். பார்பராவின் உணவுத் தட்டை எடுத்து, பிறகு மறுபடியும் அதைக் கீழேயே வைத்தாள். ''நீங்கள் மறுபடியும் வெளிநாடு போகப் போகிறீர்கள் என்பதற்காகவா அவர் அப்படிச் சொன்னார்?''

'யுத்தம்' என்ற சொல்லை அவளால் உபயோகிக்க முடியவில்லை. அதற்குப் பதில், ''அவர் ஏதாவது கெடுதல் - சங்கடம் நேரப்போகிறதென்று நினைக்கிறாரா?'' என்று கேட்டாள்.

''அவர் கெடுதல் மூலம் நல்லதை நினைப்பவர்'' என்றான் பால்.

ஆனால் அவர் ஒன்றும் முட்டாளில்லை என்று எண்ணியரோனு, பால் ஹேடனை நிமிர்ந்து நோக்கினாள். ''ஓ, பால். அது வேண்டாம்; வேண்டாம், பால்!''

''அந்த நிலைமை வரும்போது, அதைப்பற்றிக் கவலைப்படுவோம்—ஆமாம், அந்த நிலை வரும்போது'' என்றான் அவன் மெதுவாக.

''ஆமாம்'' என்ற அவள், அவனைக் கண்ணொடு கண் நோக்கிப் புன்முறுவல் பூத்தாள். அவளுடைய கண்களில் துளும்பிய விழிநீரும் அவனுக்காகத்தான். பிறகு அவள் ''ஓ பால்!'' என்று தன் இரு கைகளையும் அவனை நோக்கி நீட்டினாள்.

முற்றும்.

முத்துப் பதிப்பகத்தின் முத்தன்ன நூற்கள்

''புத்தம் புதிய கலைகள்—பஞ்சப்
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.
சொல்லவும் கூடுவதில்லை—அவைச்
சொல்லும் திறமை தமிழ்மொழிக் கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும்—அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்
என்றந்தப் பேதை உரைத்தான்—ஹா!
இந்த வசையெனக் கெய்திட லாமோ
சென்றிடுவீ ரெட்டுத் திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்.''

என்று மகா கவி பாரதியார் மூலம் தமிழன்னை நம்மைக் கேட்கிருள். இத் தமிழன்னையின் வேண்டுகோளுக்கிணங்கத் தமிழ் வளர்ந்து வளம்பெறப் பாரதியாரும்

''பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்''

என உத்தரவிட்டுள்ளார். இவ்வுத்தரவைத் தலைமேற் கொண்டு முத்துப் பதிப்பகத்தார் (Pearl Publications) உலக நூல்களைத் தமிழாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். தமிழர்கள் யாவரும் இம்முயற்சியை வரவேற்பார்களென்பதில் சந்தேகமில்லை.

அடுத்தபடி பாரதியாரே,

''இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்''

என்று கூறுகிருர். இவ்வாருன புது நூல்களை வெளியிடுவதற்கு முன்னணியாக இப்பதிப்பகத்தார் இப்போது மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்டு வருகின்றனர். இவைகளிலிருந்து உலக மேதைகளின் உயர்ந்த கருத்துக்களையெல்லாம் தமிழ் மொழியில் ஒருங்கே காணலாம்.

முத்து முத்தான கருத்துக்கள்,
முத்து முத்தான கற்பனைகள்,
முத்து முத்தான வார்த்தைகள்,
முத்து முத்தான வளமைகள்.

எமது நூல்கள்

P.T.26 **குழந்தை வளர்ப்பு**—டாக்டர் பெஞ்சமின் ஸ்போக்—மொழிபெயர்ப்பு: டாக்டர் ஆர். விசாலாக்ஷி நெடுஞ்செழியன், எம். பி. பி. எஸ்., டி. எம். ஸி. எச்., எம். பி. எச். (ஜான் ஹாப்கின்ஸ்) குழந்தைப் பராமரிப்பைப் பற்றிய எல்லா விஷயங்களும் அடங்கிய உலகத்திலேயே மிக உயர்ந்ததான ஒரு நூல் சுமார் 560 பக்கங்கள்—விலை ஒரு ரூபாய்.

P.T. 28 **மாடிப்படி மர்மம்**—மேரி ராபர்ட்ஸ் ரைன் ஹார்ட்—மொழிபெயர்ப்பு: ''இளங்கோவன்''—கையிலெடுத்தால் படித்து முடிக்கும்வரை மனத்தை வசிகரிக்கும், மயிர்க்கூச்செறியும் மர்மங்கள் நிறைந்த துப்பறியும் ஒரு நவினம்.
212 பக்கங்கள்—விலை 50 நயே பைசே.

P.T. 29. **அமெரிக்க ஐக்ய நாட்டுச் சரித்திரம்**—ஆலன் நெவின்ஸ், ஹென்றி ஸ்டீல் கம்மாஜர் எழுதியது—மொழி பெயர்ப்பு: எம். எஸ். கல்யாணசுந்தரம், பி. ஏ. நான்கு நூற்றுண்டுகளே வயதான அமெரிக்க ஐக்ய நாட்டு அபிவிருத்தி அடிச்சுவடுகளை புதுமையாகச் சித்தரிக்கும் ஒரு வரலாற்று நூல். 512 பக்கங்கள்—விலை ஒரு ரூபாய்.

P. T. 30. **புகழ் பெற்ற ஏழைகள்**-சாரா. கே. போல்டன்-மொழி பெயர்ப்பு—குண்டூசி கோபால்—ஏழைகளாயிருந்து புகழ் பெற்ற மேதைகளின் வாழ்க்கைச் சரிதங்கள்—திலகர், ஆஸாத், பட்டேல் முதலியோரின் வரலாறுகளுடன் கூடியது.
240 பக்கங்கள்—விலை 75 நயே பைசே.

முன்பே வெளிவந்துள்ள நூல்கள்

P.T.1.**சந்நியாஸியும் சர்வாதிகாரியும்**—ஆர்தர் கோய்ஸ்லர்—மொழி பெயர்ப்பு: எஸ். டி. எஸ். யோகி. கம்யூனிஸ்ட் தத்துவங்களை அலசி ஆராய்ந்த சிந்தனைக் கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். 251 பக்கங்கள்—விலை 50 நயே பைசே.

P.T. 2. **அரசியல் கட்டுரைகள்**—தாமஸ் பெய்ன்—மொழி பெயர்ப்பு: ரா. நாராயணன், பி. ஏ., பி. எல். உலக அரசியல் மேதைகளில் ஒருவரான தாமஸ் பெய்ன் அவர்களது அருமையான அறிவுரைகள். 272 பக்கங்கள்—விலை 50 நயே பைசே.

P.T. 3. **மகத்தான மாறுதல்**—ஃபிரெடெரிக் லீவிஸ் ஆலன்—மொழிபெயர்ப்பு: வி. பாலசுப்ரமண்யம், பி.ஏ., பி.எல். 1900 முதல் 1950 வரையிலான அமெரிக்கப் பொருளாதார, சமூக வாழ்க்கை வளங்களை நன்கு சித்தரிக்கும் ஒரு நூல்.
360 பக்கங்கள்—விலை 75 நயே பைசே.

P.T. 4. **இந்தியா என் வீடே**—ஸிந்தியா பௌல்ஸ்—மொழிபெயர்ப்பு: எம். எஸ். சிவஸ்வாமி. இந்தியாவைச் சொந்த வீடாக நேசித்த அமெரிக்க ஸ்தானிகராய் இந்தியாவிலிருந்த செஸ்டர் பௌல்ஸின் மகளது அன்புமயமான பாராட்டு நூல். 280 பக்கங்கள்—விலை 75 நயே பைசே.

P.T. 5. போரே நீ போ—எர்னெஸ்ட் ஹெமிங்வே—மொழிபெயர்ப்பு: எம். எஸ். சிவஸ்வாமி. பிரசித்தி பெற்ற அமெரிக்க எழுத்தாளர் எர்னெஸ்ட் ஹெமிங்வே, முதல் யுத்த அரங்கத்தையே பின்னணியாகக் கொண்டு எழுதிய ருசிகரமான நாவல். 336 பக்கங்கள்—விலை ஒரு ரூபாய்.

P.T. 6. சுதந்திரப் பாலம்—ஜேம்ஸ் ஏ. மிச்சினர்—மொழிபெயர்ப்பு: ரா. நாராயணன் பி. ஏ., பி. எல். ரஷ்யக் கம்யூனிஸ்டுகளால் ஹங்கேரிக் கம்யூனிஸ்டுகள் பட்டபாடுகளை இந்நூல் ஆதாரபூர்வமாக விளக்குகிறது.

302 பக்கங்கள்—விலை 75 நயே பைசே.

P.T. 7. பிலிப்பைன்ஸ் தேசத்து நிலச் சீர்திருத்தங்கள்—ஆல்வின் எச். ஸ்காப்—மொழிபெயர்ப்பு: "தாரகன்." 1946-ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸில் கம்யூனிஸ்டு பயங்கரத்தை ஜனநாயக முறையில் அரசாங்கம் சமாளித்த உண்மை வரலாறுகளை விவரிக்கிறது இந்நூல்.

192 பக்கங்கள்—விலை 50 நயே பைசே.

P.T. 8. மணமகள் வருகிறாள்—ஸ்டீபன் கிரேன்—அமெரிக்க சிறந்த சிறு கதை எழுத்தாளர் ஸ்டீபன் கிரேன் எழுதிய ஒன்பது சிறு கதைகள்.

272 பக்கங்கள்—விலை 75 நயே பைசே.

P.T. 9. வீதியில் ஒரு விடுதி—காட்ப்ரே ப்ளண்டன்—மொழிபெயர்ப்பு: "மாயாவி". 1942-43 ஆண்டுகளின் மாஸ்கோ வாழ்க்கையைப் பற்றிய மகத்தான கற்பனைச் சித்திரம்.

472 பக்கங்கள்—விலை 75 நயே பைசே.

P.T. 10. பிரபஞ்சமும் டாக்டர் ஐன்ஸ்டீனும்—லிங்கன் பார்னெட்—மொழிபெயர்ப்பு: என். சுப்ரமணியம், எம். ஏ., பி. டி. டாக்டர் ஐன்ஸ்டீனுடைய ஒப்புமை விஞ்ஞானத்தைப் பண்டிதர்கள் மட்டுமின்றிப் பாமரர்களும் படித்துணரத் தக்க எளிய வகையில் தெளிவாக்கும் ஒரு அவசியமான நூல்.

160 பக்கங்கள்—விலை 75 நயே பைசே.

P.T. 11. இரும்புப் பெட்டி—ஹோவர்ட் ஸ்விக்கெட்—மொழிபெயர்ப்பு: ஸி. ஸ்ரீநிவாஸன். இது ஒரு மர்மப் பெட்டியைப் பற்றிய ஒரு மர்ம நவீனம்.

368 பக்கங்கள்—விலை 75 நயே பைசே.

P.T. 12. சமாதானத்தின் புதிய பரிமாணங்கள்—மொழிபெயர்ப்பு: ரா. நாராயணன். முன்னாள் அமெரிக்க ஸ்தானிகராக இந்தியாவில் பணியாற்றிய செஸ்டர் பௌல்ஸ் எழுதியுள்ள மகத்தான புத்தகம். 430 பக்கங்கள்—விலை ஒரு ரூபாய்.

P.T. 13. என் கதை — ஹெலன் கெல்லர் — மொழிபெயர்ப்பு: க. நா. சுப்ரமண்யம். கண்ணும் காதும் அற்றும் விடா முயற்சியால் பெருமைபெற்ற ஒரு மாதரசியின் சுயசரிதை.

150 பக்கங்கள்—விலை 75 நயே பைசே.